

ர.சு. நல்லபெருமாள்
மருக்கொழுந்து மங்கை
திருவரங்க புத்தக நிலையம்



மருக்கொழுந்து மங்கை

ர.சு. நல்லபெருமாள்



13, தீனதயாளு தெரு,

முதற் பதிப்பு : மே, 1995
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 2001

உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 100.00

- *Title* : MARUKKOZHUNDU MANGAI
- *Author* : Ra. Su. NALLAPERUMAL
- *Language* : Tamil
- *Subject* : Historical Novel
- *Edition* : Second Edition, December, 2001
- *Pages* : 480
- *Published by* : THIRUVARASU PUTHAKA NILAYAM
  13 Deenadayalu Street,
  T. Nagar, Chennai-17.
- *Price* : Rs. 100.00

Laser Typeset by : Tricom Computers, Chennai - 47.

Printed at : Bagavendra Agencies, Chennai - 5. ✆ 8446166, 8446891

மருக்கொழுந்து மங்கை

கதையைப் படிக்குமுன்...

தமிழக வரலாற்றில் மாபெரும் சாம்ராஜ்யங்கள் என மதிக்கத்தக்கவையாக இருந்தவை இரண்டே இரண்டு தாம். ஒன்று பல்லவ சாம்ராஜ்யம்; மற்றொன்று சோழ சாம் ராஜ்யம். இவற்றில், பல்லவ சாம்ராஜ்யம், காலத்தால் முந்தியது. பல்லவ ஆட்சி கிட்டத்தட்ட 650 ஆண்டுகள் நடைபெற்றது.

இன்றைக்கு 1270 ஆண்டுகளுக்கு முன், காஞ்சி மாநகரில் பல்லவ ஆட்சி, மிக உன்னத நிலையிலிருந்த கால கட்டத்தில் ஆட்சியில் பெரும் சிக்கல் தோன்றியது. காஞ்சி மாநகரில் அப்போது ஒரு புரட்சியே ஏற்பட்டது!

சக்கரவர்த்தி ஆண்ட ஒரு சாம்ராஜ்யத்தில், கிட்டத் தட்ட 1270 ஆண்டுகளுக்கு முன்பு, மக்கள் கிளர்ந்தெழுந்து புரட்சி செய்தார்கள் என்பது வியப்பிற்குரியது. அது பற்றிய கதை இது.

"கடந்த கால வரலாற்றைத் தெரிந்து கொள்ள முனை வது அவசியந்தானா? இறந்து போன காலங்களைப் பற்றித் தெரிந்து ஆக வேண்டியது தான் என்ன? இது வெறும் கால விரயந்தானே?" என்று ரசனையற்ற சில சிந்தனைச் சோம் பேறிகள் அடிக்கடிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வரலாற்று நிகழ்ச்சிகளின் திருப்பங்களுக்கும் முடிவு களுக்கும் எந்தச் சக்திகள் காரணமாயிருந்தன, என்பதைத் தேடிக் கண்டுபிடிப்பதுதான் வரலாற்றைத் தெரிந்து கொள்வ தன் நோக்கம். பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்தவைகளைத் தற்போதைய சூழ்நிலை யோடு ஒப்பிட்டுக் காணும் போது ஒருவித ஒற்றுமையைப்

புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லாதவர்களுக்குத்தாம் வரலாறு உயிரற்றது.

கடந்த கால நிகழ்ச்சிகளுக்கு நிகழ் காலத்திலிருந்து உதாரணம் கொடுக்கலாம். நிகழ் காலத்திற்கான எச்சரிக்கையைக் கடந்த கால வரலாற்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்—இதுதான் காலத்தின் தத்துவம்.

மனித இனத்தின் நாகரிகம் என்பது ஒரு மகாநதி. அந்த நதியின் ஓட்டத்தைப் பற்றிக் கூறுவது மட்டுமே வரலாறு ஆகிவிடாது. அதன் நீரோட்டத்தில் மனிதர்களின் இரத்த மும், சதையும் எலும்புகளும் மிதந்து வருவதுண்டு. ஆனால், அதன் இரு கரைகளிலும் மனிதர்கள் வாழ்ந்த விதத்தையும் சிந்தித்த பாங்கையும், அவர்களின் ஆசா பாசங்களையும் வர்ணிப்பதுதான் உண்மையான வரலாறு. அதுதான் ரசனை மிகுந்தது.

இக்கதையைப் படிக்கும் அன்பர்களுக்குப் போகப் போக வியப்பும் திகைப்பும் ஏற்படலாம். சில நிகழ்ச்சிகள், உங்களுடைய கால கட்டத்தில் நிகழ்ந்தவைகளைப் போலத் தோன்றலாம்.

இதில் வரும் கதாபாத்திரங்களும், சம்பவங்களும் இன்றையத் தலைவர்கள் சிலரை நினைவுபடுத்தும்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இந்நாட்டில் அடக்குமுறையைக் (Emergency) கொண்டு வந்த காலத்தை ஒட்டி இக்கதை எழுதப்பட்டது. ஆகவே, இந்தக் காலக் கட்டத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் கதையோடு ஒத்துப் போகும் விந்தையை உணரலாம்.

கிட்டத்தட்ட ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு பல்லவர்களின் ஆட்சிக் காலச் சம்பவங்கள் சில

இக்காலச் சம்பவங்களோடு ஒத்துவருவதைப் பல்லவ வரலாற்றைப் படித்த போது நான் உணர்ந்ததால் இந் நாவலை எழுதத் துணிந்தேன். எழுதி முடித்த பிறகுதான் பிரச்சினையே தோன்றியது. இந்நாவலைத் தொடர் கதை யாக வெளியிட இரண்டு பிரபல வாரப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பயந்தார்கள். ஓர் ஆசிரியர், நாவலை வெளியிட விரும்புவதாகவும், ஆனால், நாவலில் சில மாறுதல்களைச் செய்தால் வெளியிடுவதாகவும், நாவலின் பாத்திரங்களும், சம்பவங்களும் இன்றைய அரசியல் தலைவர்களைச் சுட்டிக் காட்டுவதாக இருப்பதால் மாறுதல்கள் தேவை என்றும் எழுதியிருந்தார். எமர்ஜென்ஸி சமயத்தில் பெரும் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்ட போது மாபெரும் தியாகியும் தலைவருமான ஜெயபிரகாஷ் நாராயணன், "விநாசகாலே விபரீத புத்தி" என்று இந்திரா காந்தியைப் பற்றிச் சொன்னது கூட இந்நாவலில் ஓர் அத்தியாயத்தின் தலைப்பாகவே எழுதப்பட்டுள்ளது என்றும், நாவல் மிக அருமையாக இருப்பதாகவும், ஆசிரியர் குழுவினர் நாவல் முழுவதையும் ஊன்றிப் படித்ததாகவும் முடிவில், குழுவினர் இந்நாவலில் சில மாற்றங்களை எதிர்பார்ப்பதாகவும் கடிதம் எழுதியிருந்தார். நான் அதற்கு உடன்படவில்லை.

கடைசியில், 'தினமணி கதிர்' வாரப் பத்திரிகையின் பொறுப்பாசிரியர், திரு. கி. கஸ்தூரிரெங்கன் அவர்கள் நாவலை வெளியிடத் துணிந்தார்கள். நாவல் சிறப்புடன் அமைந்திருப்பதாகவும், இன்றைய அரசியல் சம்பவங் களோடு ஒத்துப்போகும் அபூர்வ ஒற்றுமை வியப்பளிப் பதாகவும், அதுவே இந்நாவலின் சிறப்பு என்றும் நாவலை ஏற்றுத் தொடர்கதையாக 'தினமணி கதிர்' பத்திரிகையில் வெளியிட்டார்.

நாவல் வெளிவந்துகொண்டிருந்த காலத்தில் இதற்கு எதிர்ப்பும், கண்டனங்களும் கடிதங்கள் மூலம் எனக்கு வந்துகொண்டிருந்தன.

இக்கால நிகழ்ச்சிகளும், அரசியல் நடவடிக்கைகளும் பல்லவர் வரலாற்றோடு ஒத்துப்போனதற்கு நான் பொறுப்பாளி அல்லன்.

ஓ...! அந்தக் காலத்திலும் மனிதர்கள் நம்மைப்போல் தாம் நடந்திருக்கிறார்கள். கண்ணியத்தில், காதலில், காமத்தில், கயமையில், சிந்தனையில், மடமையில்—எல்லாத் துறைகளிலுமே.

எந்த யுகத்திலும் மனிதனின் ஆதார குணங்களும், ஆசைகளும் ஒன்று போல்தாமிருந்திருக்கின்றன. ஆகையால், அவனுடைய நடவடிக்கைகளைப் புரட்டிப் பார்த்தால் எல்லாமே ஒன்றுபோல்தாமிருக்கும். நடைபெற்ற பாணியில்தான் வித்தியாசமிருக்கும். ஆதியில் வில்லும், அம்பும், கோடரியும் கொண்டு போரிட்டார்கள். இன்று துப்பாக்கியும், குண்டும் பயன்படுத்தப்படுகின்றன. அன்று, ஆட்சியைக் கைப்பற்ற மன்னர்கள் சதி செய்தார்கள். இன்று அரசியல்வாதிகள் சதி செய்கிறார்கள். சதியில் சிக்குண்டு உழன்றவர்கள் அன்றும் மக்கள்தாம்; இன்று உழல்பவர்களும் மக்கள்தாம்.

ஆகவே, வரலாற்றில் சம்பவங்கள் மீண்டும் வருவதில் வியப்பில்லை—History repeats—இதனாலேயே சிந்தனையாளர்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகள் எக்காலத்திலும் ரசனை உள்ளவைகளாக, உயிரோட்டம் உள்ளவைகளாக இருக்கின்றன.

இக்கதையில் தோன்றும் கதை மாந்தர்களில் பெரும்

பாலோர் வரலாற்று மாந்தர்கள்தாம். ஒருசிலரே கற்பனைப் பாத்திரங்கள்.

இக்கதைக்கு ஆதாரமாக உதவிய நூல்கள் :–

1) History Of the Pallavas Of Kanchi–By R. Gopalan
2) Administrative and Social Life under the Pallavas– By Dr. Minakshi
3) Kanchipuram in Early Indian History–By Mahalingam
4) பல்லவர் வரலாறு–By Dr. M. இராசமாணிக்கம்

பழங்கால ஆதாரங்கள்:–

1. காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயில் சுவற்றில் காணப்படும் சிற்பங்களும், விளக்கங்களும்.
2. பல்லவ ஆட்சியில் வெளியிடப்பட்ட 'உதயேந்திரப் பட்டயம்.'

இந்நாவலைச் சிறந்த முறையில் புத்தகமாக வெளியிடும் திருவரசு புத்தக நிலையத்தாருக்கும் வானதி திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் என் நன்றி.

ர.சு. நல்லபெருமாள்
போலீஸ் ஸ்டேஷன் தெரு
பாளையங்கோட்டை – 627 002

1. சுகந்தம்

கீழ்த்திசையில் நிலவு, அடிவானத்தை விட்டு உயரே வந்துகொண்டிருந்தது. பௌர்ணமிக்கு இன்னும் இரண்டு நாட்களிருந்தன. நிலவின் வட்டத்தின் குறுக்கே கருமேகம் ஒன்று எழுந்துமறைத்தது. அந்த மேகத்தின் அமைப்பு, புத்தர் பிரான் அமர்ந்து நிஷ்டையில் இருப்பது போல் தோற்றமளித்தது. புத்தபிரானின் தலைக்குப் பின்னே ஒளி வட்டம் போன்ற நிலவு. அதே வேளையில், பல கடற்பற வைகள், சங்கிலித் தொடர் போல் வரிசையாக நிலவின் குறுக்கே கடந்து பறந்து சென்றபோது, புத்தர் பிரானின் கழுத்தை அலங்கரிக்கும் மாலை போல் காட்சி தந்தது. ஒரே ஒரு கணந்தான். பிறகு அந்தப் பறவைச் சங்கிலி, தூரத்தில் போய் மறைந்து விட்டது. அதையடுத்து, நிலவின் குறுக்கே புத்தரின் உருவம் போல் காட்சியளித்த மேகமும் கலைந்து விட்டது.

ஓ...! எவ்வளவு அற்புதமான காட்சி! கப்பலின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்த உதயசந்திரன், அந்தக் காட்சியைக் கண்டு மெய்சிலிர்த்து நின்றான். இனி அப்படி ஒரு காட்சி கிடைக்கவா போகிறது? ஒரே ஒரு சந்தர்ப்பம் தான்! எவ்வளவு அபூர்வமான காட்சி!

உதயசந்திரன் சுற்று முற்றும் பார்த்தான். மேல் தளத்தில் கூட்டம் இல்லை. கப்பலைச் சார்ந்த பணியாட்கள் சிலர் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

தன்னைத் தவிர அந்த அற்புதமான காட்சி வேறு யாருக்கும் கிட்டியிராது என்று எண்ணிப் பெருமை கொண் டான். தன்னுடைய கண்கள் செய்த பாக்கியம் என்று எண்ணினான். திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது— புத்தர் பெருமானே ஆசி கூறி வழியனுப்பி வைக்கிறாரோ....?

கண்களை மூடியவாறு அந்தக் காட்சியை மனதில் இருத்தி ரசித்தான். உயரே ஏதோ சலசலப்புக் கேட்கவே கண்களைத் திறந்தான். வடதிசையிலிருந்து கடற் பறவை ஒன்று பறந்து வந்தது. அதனுடைய அலகில் பருத்த மீன் ஒன்றிருந்தது. பாய் மரத்தின் கிளைக் கம்பத்தில் அமர்ந்த பறவை சுற்று முற்றும் பார்த்தது. அதனுடைய பார்வை, கீழே கப்பல் தளத்தின் மீது நின்றுகொண்டிருந்த உதயசந்திரன் மீது விழுந்தது. பிறகு, அலட்சியமாகத் தென் திசையைப் பார்த்தது. ஒரு முறை இறகுகளை விரித்துப் படபடவென்று அடித்துக்கொண்டது. அலகில் கவ்வியிருந்த மீனை ஒரு காலால் பிடித்துக் கொண்டு, அலகினால் இடப் பக்கத்து இறகினுள் வருடியது. ஒருகணம் மீனின் கனம் தாங்காமல் பறவை தடுமாறியது. ஆனால் சமாளித்துக் கொண்டு மீனை அலகில் கவ்விக் கொண்டது.

தளத்தின் மீது மாலுமிகள் சுறு சுறுப்பாயிருந்தனர். கப்பலின் விளிம்பில் கைப்பிடியைப் பற்றியவாறு நின்று கொண்டிருந்த உதயசந்திரன், பறவையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். மீனின் கனத்தைத் தாங்க முடியாமல் பறவை மீனைக் கீழே போட்டு விடுமோ என்று ஐயுற்றான்.

"நல்ல வேட்டைதான். எவ்வளவு பெரிய மீன்!" என்று வியந்து கூறினான். மீனை அவன் பிடுங்கிக் கொள்ளுவான் என்று பறவை பயந்ததோ என்னவோ? மிகுந்த அவசரத்துடன் மீனைக் கவ்வியவாறு தென் திசை நோக்கிப் பாய்ந்தது. ஓர் அம்பைப் போல் பாய்ந்து சென்ற பறவை, வெண் மேகத்தினூடே கரும் புள்ளியாகத் தெரியும்வரை உதயசந்திரன் பார்த்துக்கொண்டு நின்றான். களை பொருந்திய அவனுடைய முகத்தில் சிறிது வாட்டம் இருந்தது. கடல் கடந்து

போகும் பயணத்தைப் பற்றிய எண்ணங்கள் அவன் மனத்தை அழுத்திக் கொண்டிருந்தன.

அந்தப் பறவை தூரத்தில் மிகச் சிறிய புள்ளியாகத் தேய்ந்து மறைந்து விட்டது. அவனுடைய பார்வை அத் திசையில் வெகு தூரத்திற்குச் சென்றது. நிலவொளியில் கடலின் விளிம்பு, வானத்தோடு இணைந்துதான் தெரிந்தது. பார்வை அத்திசையிலேயே பதிந்திருந்தது.

மனக் கண்ணில் ஒரு வயோதிகப் பௌத்த பிக்ஷு, கடற்கரையில் நின்ற வண்ணம் அவனை நோக்கிக் கையை அசைப்பது தெரிந்தது – அவரை விட்டுப் பிரிந்த போது அவன் மிகவும் நெகிழ்ந்து விட்டான். எவ்வளவோ முயன்றும் அவனால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. பிக்ஷு முகத்தில் புன்முறுவலுடன் அவனை அன்புடன் அணைத்து வழியனுப்பிய போது அவனுடைய கண்ணீர் பிரவாகமாகப் பெருகி அவருடைய பாதங்களில் விழுந்து சிதறியது. அவருடைய இனிமையான சாந்தம் தவழும் குரல் இன்னும் அவனுடைய செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

"போய் வா மகனே. உலகத்தில் நீ எங்கு இருந்தாலும் இங்கு கற்றவைகளும் பெற்ற அனுபவங்களும் உனக்குத் துணையாக இருக்கும். புத்தர் பிரானின் அருள் உன்னைக் காக்கும். போய் வா...."

திடீரென்று அவனுடைய சிந்தனை கலைந்தது. எங்கி ருந்தோ இனிமையான புது வாசனை வீசியது. மனதைக் கவர்ந்த அந்த நறுமணம் எத்திசையிலிருந்து வந்தது என்று கவனிக்கத் தொடங்கினான். அது, நிச்சயம் கடல் அலைகளி லிருந்து வந்திருக்க முடியாது. கப்பலின் மேல் தளத்தில் கடல் நீரின் ஈரத்தில் ஊறிப் போன பாய்மரங்களின் நெடியையும்

மீறி அப்படி ஓர் அருமையான சுகந்தம் எங்கிருந்து வந்திருக்க முடியும்...?

ஈழத் தீவின் சிகிரியாக் காடுகளில் அவன் அலைந்து திரிந்தபோது பல அபூர்வ மலர்களின் வாசனைகளை அனுபவித்திருக்கிறான். ஆனால் இந்த மாதிரி ஒரு புதுமையான மணத்தை அவன் நுகர்ந்ததில்லை. கண்களை மூடியபடி மூக்கை நன்கு உறிஞ்சி வாசனையை உள்ளுக்கு இழுத்தான்.

பெரிய அலை ஒன்று, கப்பலின் மீது மோதியது. நீர்த் துளிகள், தளத்தின் மீது சிதறி விழுந்தன. தூவானம் அவன் மீது பட்டது. உப்புக் காற்றின் நெடி ஆட்கொண்டது. கீழே குனிந்து அலைகளைக் கவனித்தான். கடலில் கடற் கன்னிகள் இருப்பார்கள் என்றும், கப்பலின் மேல்தளத்தில் அவனைப் போன்று அழகான இளைஞன் தனித்திருந்தால் அவனைக் கவர்ந்து சென்று விடுவார்கள் என்றும் கேள்விப் பட்டிருந்தான்.

சட்டென்று திரும்பி, தளத்தைக் கவனித்தான். தான் மேல்தளத்தில் தனியாக இல்லை, தன்னோடு சில மாலுமிகளும் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். தனக்கு ஏற்பட்ட பயத்தை எண்ணி உள்ளுரச் சிரித்தான்.

கடற்கன்னிகள் அப்படியே தன்னை கவர்ந்து சென்றால்தான் என்ன? கடலுக்கடியில் ஓர் அற்புத உலகம் இருக்கலாம். அங்கு என்னென்ன இன்பங்கள் கிடைக்குமோ. ஒரு வேளை, கடற் கன்னி எவளாவது கப்பலின் அருகே நீந்தி வருகிறாளோ? அவளிடமிருந்துதான் அந்த நறுமணம் வீசியதோ....

உதயசந்திரன் குனிந்து கடலை உற்றுப் பார்த்தான். தன்னுடைய கற்பனையை எண்ணிச் சிரித்தவாறே தலை நிமிர்ந்தான்.

"என்ன தம்பி சிரிக்கிறாய்?"

மூக்கடைத்த கரகரப்பான குரலைக் கேட்டு திகைப் புற்றவனாய்த் திரும்பினான். அவனருகே ஒருவன் நின்று கொண்டிருந்தான். முப்பது அல்லது முப்பத்திரண்டு வயதி ருக்கும். ஒல்லியாக இருந்தாலும் வலுவுள்ளவனாக இருந் தான். அவனுடைய முறுக்கேறிய கொடுக்கு மீசையும், சிவந் திருந்த கண்களும், அவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று எச்சரித்தன. தமிழை அவன் உச்சரித்த விதத்திலிருந்து அவன் தமிழனல்லன், ஈழத் தீவைச் சேர்ந்த வன் என்பதைப் புரிந்து கொண்டான், உதயசந்திரன்.

"கீழே கடலில் எதைப் பார்த்துச் சிரித்தாய்?" என்று கொடுக்கு மீசைக்காரன் மீண்டும் கேட்டான்.

"கடற் கன்னியைப் பற்றிய நினைவு வந்தது. என் நினைவை எண்ணிச் சிரித்தேன்" என்றான் உதயசந்திரன்.

"ஓ, கன்னியின் நினைவா? இருட்டுகிற சமயமாச்சே. அதோ நிலவும் எழுந்துவிட்டது, உன் காதல் நினைவு களைத் தூண்டிவிட."

முன்பின் தெரியாதவன் இப்படிப் பேசியது, உதய சந்திரனுக்குச் சகிக்கவில்லை. உள்ளூரக் கோபம் எழுந்தது. பதில் சொல்லாமல் பார்வையைக் கடல் அலைகளின் மீது செலுத்தினான்.

"நீயும் திரிகோண மலையில் கப்பலில் ஏறியபோது பார்த்தேன். உன்னை ஒரு பிக்ஷு, வழியனுப்பினாரே" என்றான் கொடுக்கு மீசைக்காரன்.

இதற்கும் பதில் கூறாமல் சமுத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான், உதயசந்திரன். கொடுக்கு மீசைக்காரன் விடுவதாயில்லை.

"நீ பௌத்த மடத்தைச் சேர்ந்தவனா?" என்று கேட்டான். இதற்கு 'ஆமாம்' என்று கூறுவதுபோல் தலையை ஆட்டினான் உதயசந்திரன்.

"எங்கே பயணம்? நாகப்பட்டினத்திற்கா, மாமல்ல புரத்திற்கா?" கொடுக்கு மீசைக்காரன் கேட்டான்.

நான் எங்கே போனால் உனக்கென்ன என்று கேட்கும் அலட்சிய பாவனையில் உதயசந்திரன் மௌனமாயிருந்தான்.

"பௌத்தர்களுக்கு அங்கெல்லாம் இப்போது எதிர்ப்பு அதிகம் இருக்கிறதாம். ஆபத்துக்கூட உண்டு என்று கேள்வி."

இதைக் கேட்டதும் உதயசந்திரன் வியப்புடன் திரும்பினான்.

"பௌத்த மடங்களுக்கு ஆபத்து ஒன்றுமில்லையே?" என்று பரபரப்புடன் கேட்டான்.

"மடங்களுக்கும் ஆபத்து இருக்கலாம்" என்றான், மீசைக்காரன்.

"பல்லவ நாட்டில் ஆட்சி நடைபெறுகிறதா இல்லையா?"

"ஆட்சி நடந்து என்ன? மக்களே எதிர்க்கும் போது...."

"நீ யார்? உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? தமிழ் நன்றாகப் பேசுகிறாயே இலங்கையைச் சேர்ந்தவனில்லையா, நீ?" –படபடவென்று கேள்விகளை அடுக்கினான் உதயசந்திரன்.

"காஞ்சியிலே வேலை இருக்கிறது. நீ எங்கே? காஞ்சிக்குத்தானா?"

"மாமல்லபுரத்திற்கு."

"என்ன வேலையாக? வாணிபமா?"

இதற்கு உதயசந்திரன் பதில் கூறாமலிருந்தான். இதைப் பற்றியெல்லாம் இவனுக்கு என்ன கேள்வி என்பது போல் எரிச்சலுடன் கடற்பக்கமாகத் திரும்பினான். வெகு தூரத்தில் மினுக் மினுக்கென்று ஒளி தெரிந்தது. கூர்ந்து பார்த்தான். அவனால் அனுமானிக்க முடியவில்லை. திரும்பி, கொடுக்கு மீசைக்காரனிடம், "கரை நெருங்கி விட்டதா? தூரத்தில் ஏதோ ஒளி தெரிகிறதே" என்று கேட்டான்.

மீசைக்காரன் தூரத்தில் தெரிந்த ஒளியைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "ஏதோ வெளிச்சம் தெரிகிறது. நாளை நண்பகலில் அல்லவா கரை சேரும். அது ஒரு கப்பலாக இருக்கும். இதோ ஒருவன் பாய்மரத்தில் ஏறுகிறானே. அது என்னவென்று பார்க்கத்தான் ஏறுகிறான்" என்றான்.

கம்பத்தின் மீது வேகமாக ஏறிக்கொண்டிருந்தவனை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் உதயசந்திரன். கம்பத்தின் அடியில் நின்று கொண்டிருந்த கப்பல் தலைவன், அண்ணாந்து கம்பத்தின் உச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். உச்சியில் ஏறியவன், ஒளி தெரிந்த திசையில் உற்று நோக்கிவிட்டு, "கப்பல், கப்பல்! இந்தத் திசையில் தான் வருகிறது" என்று இரைந்து கத்தினான். அலைகளின் இரைச்சலும், பாய்மரங்களின் படபடத்த ஒலியும் அவனுடைய குரலை அமுக்கின. கப்பல் தலவன், காதுகளை மேல் நோக்கிக் குவித்தபடி கம்பத்தின் உச்சியை நோக்கினான். அங்கிருந்தவன், "கப்பல், கப்பல்" என்று கூவியவாறு கைகளினால் பாய்மரம் போல் அபிநயம் பிடித்துக் காட்டினான். பிறகு, கீழே இறங்கத் தொடங்கினான்.

உதயசந்திரன் பார்வையைத் திருப்பியபோது, அந்தக் கொடுக்கு மீசைக்காரனைக் காணவில்லை.

"மரியாதை தெரியாதவன் போலிருக்கிறது. சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டானே" என்று முணுமுணுத்தான். அவனருகே வந்த கப்பல் தலைவனிடம் "வேறொரு கப்பல் வருகிறதோ?" என்று கேட்டான்.

"ஆமாம். அப்படித்தான் தெரிகிறது" என்று கூறி விட்டுச் சென்றான், கப்பல் தலைவன்.

ஈரக் காற்றினால் உதயசந்திரனுக்கு முக்கு அடைப்பது போலிருந்தது. திடீரென்று சற்று முன்பு வீசிய நறுமணம் மறுபடி வீசியது. கண்களை மூடியவாறு ரசித்தான். மீண்டும் கண்களைத் திறந்தபோது வியப்புற்றான்.

எதிரே அவனுக்கு மிக அருகாமையில் நிலவு இருந்ததைக் கண்டு துணுக்குற்றான்.

வானத்து நிலவு எப்படிக் கப்பலுக்கு வந்தது...

விழி மூடாமல் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

'களுக்'கென்று சிரிப்பொலி கேட்டது. திகைத்தான். கண்ணெதிரே தெரிந்தது ஒரு பெண்ணின் முகம் என்று புரிந்துகொண்டபோது, அவனுக்கு வியப்பு மேலிட்டது. அவள் மீண்டும் சிரித்தாள்.

சிகிரியா மலைக் காடுகளில் அவன் திரிந்து கொண்டிருந்த காலங்களில் பறவைகளின் இனிய கூவல்களைக் கேட்டிருக்கிறான். ஆனால், இப்போது மட்டும் அந்தப் பெண்ணின் சிரிப்பொலி அவனுள்ளே இனிமை படர்ந்த புதுமையான உற்சாகத்தை எழுப்புவானேன்?

அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே எதிரே தோன்றிய பெண் ஓடி மறைந்துவிட்டாள். அவளைத் தொடர்ந்து ஓடுவதற்காக ஒரு காலையும் எடுத்து முன் வைத்தான். வைத்த நிலையிலேயே நின்றான். தன்னுடைய செயலை எண்ணி தனக்குள்ளேயே நகைத்துக் கொண்டான். சற்று நேரத்திற்கு முன் கடற் கன்னியைப் பற்றி எண்ணியதை நினைத்தான். தன்னைக் கவர்ந்து செல்லத் தான் கடற்கன்னி கப்பலுக்கு வந்தாளோ....?

கப்பலில் பயணம் செய்யும் பயணிகளில் அவளும் ஒருத்தி என்பதைப் புரிந்துகொண்டதும், அவளை மீண்டும் காண வேண்டும் என்னும் ஆவல் எழுந்தது.

கப்பலின் மேல் தளத்தில் ஆட்களின் நடமாட்டம் குறையத் தொடங்கியது. நிலவு வானத்தில் ஏற ஏற, கடல் அலைகளும் உயரத் தொடங்கின. உதயசந்திரன் அங்கிருந்து விலகி, கப்பலின் நடுத்தளத்திற்குச் சென்றான். ஆங்காங்கே தீவட்டிகள் எரிந்துகொண்டிருந்தன. அந்தப் பகுதியிலிருந்தவர்கள் அனைவருமே செல்வமிக்க வணிகர்கள் என்பதைப் புரிந்துகொண்டான். அந்தப் பகுதியில் சீனர்கள், தமிழர்கள், யவனர்கள், ஈழத்தார்கள் எல்லோருமிருந்தனர்.

நடுத்தளத்தில் சற்று நேரம் நின்று கவனித்தான். அந்த நறுமணம் அந்தப் பகுதியில் அதிகமாக வீசியது. சற்று முன்னால் அவனுடைய பார்வையில் தென்பட்டவள் அந்தப்பகுதியில் தான் இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டான். பலகைகளினால் பல தடுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்த அந்தத் தளத்தில் அவள் எப்பகுதியில் இருக்கிறாளோ....

சற்று நேரம் அங்கு நின்று, அங்கு வீசிய நறுமணத்தை ரசித்து விட்டு, கீழ்த்தளத்திற்குச் சென்று தன்னுடைய

இருப்பிடத்தில் அமர்ந்தான். கீழ்தளத்தின் நெடி, மூக்கை அரித்தது. பலவித வியாபாரச் சரக்குகள் கீழ்தளத்தின் பெரும் பகுதியை அடைத்துக் கொண்டிருந்தன. கீழ் தளப் பயணிகள், அந்தச் சரக்குகளுக்கு இடையேதாம் தங்கிப் பயணம் செய்ய வேண்டும்.

உதயசந்திரனுக்குப் பசியெடுத்தது. கட்டுச் சோற்றை அவிழ்த்து உண்டு விட்டு, தன்னுடைய பயணச் சுமையைத் தலையணையாக வைத்துப் படுத்துக் கொண்டான். கீழ்த் தளத்தில் பயணம் செய்த மற்றவர்களும் படுத்து விட்டார்கள். இரண்டு மூன்று தீவட்டிகள் மட்டும் எரிந்து கொண்டிருந்தன. உதயசந்திரன் கண்களை மூடி உறங்க முயன்று கொண்டிருந்தான்.

2. சீனத்துச் சிட்டு

உதயசந்திரனுக்கு உறக்கம் வரவில்லை. பல நினைவுகள் அலைக்கழித்தன. வாழ்க்கையை இலங்கையிலேயே கழித்துவிடலாம் என்றுதான் எண்ணியிருந்தான். ஆனால் தாய்நாட்டின் நினைவு அவனை விடுவதாயில்லை.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, இதே போல்தான் கப்பலில் பயணம் செய்தான். அப்போது அவன் பத்து வயதுச் சிறுவன். மாமல்லபுரத்தில் யாருக்குமே அடங்காத துஷ்டப் பையன் என்று பெயரெடுத்துத் திரிந்தவனை, அவனுடைய பாட்டனார், கப்பலேற்றி இலங்கைத் தீவிற்கு அனுப்பி வைத்தார்.

அவனுடைய மூன்றாவது வயதிலேயே தாயார் இறந்து விட்டாள். தந்தை, பல்லவப் படையில் பணியாற்றினார். ஒரு போர்க்களத்தில் அவரும் உயிர் துறக்கவே, அவனுடைய தாயைப்பெற்ற பாட்டனார் தாம் ஆதரவாயிருந்தார்.

அவனுடைய குறும்புத்தனம் சகிக்க முடியாமலிருந்தது. பாட்டனார் செய்வதறியாது திகைத்தார். பௌத்த கடிகையில் கல்வி கற்க அனுப்பினார். அங்கு முரட்டுத்தனமான காரியங்களை சாமர்த்தியமாகச் செய்தானே தவிர, கல்வியில் ஆர்வம் இல்லை. அப்போது மாமல்லபுரத்து பௌத்த கடிகைக்கு சாந்தி தேவர் என்ற பிக்ஷு, இலங்கையிலிருந்து வந்திருந்தார்.

ஒருநாள் கடிகையில் ஓர் இளம் பிக்ஷு அவனுக்குக் கல்வி புகட்டிக் கொண்டிருந்தபோது, "இந்தத் தத்துவங்களைக் கற்றுக் கொள்வதால் என்ன பயன்? தத்துவங்கள் சோறு போடுமா?" என்று கேட்டான்.

பிக்ஷு திகைத்தார். வலுவான கேள்வி. பதிலைச் சிந்தித்தார். பக்கத்து அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த மகா ஞானியான பிக்ஷு சாந்தி தேவர், வெளியே வந்தார். கல்வி போதித்துக் கொண்டிருந்த இளம் பிக்ஷு, உதயசந்திரனின் கேள்விக்குப்பதில் கூற இயலாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

சாந்தி தேவர், புன்முறுவலுடன் சிறுவன் உதயசந்திரனை உற்று நோக்கினார். அவனுடைய சாமுத்திரிகா லக்ஷணம் அவருடைய கவனத்தை ஈர்த்தது. சற்று நேரம் அவனுடைய துறுதுறுப்பான கண்களைக் கூர்ந்து கவனித்தார்.

"எது சோறு போடும் என்று எண்ணுகிறாய்?" என்று கேட்டார்.

"எது சோறு போடும் என்பது தெரியாது. ஆனால் இந்தத் தத்துவங்கள் எனக்குச் சோறு போடாது என்பது மட்டும் தெரியும்" என்றான் உதயசந்திரன்.

"எதனால் அப்படிச் சொல்கிறாய்?"

"நான் பிக்ஷுவாக ஆகப் போவதில்லை."

சாந்தி தேவர் மெல்லச் சிரித்தார். கனிவுடன் அவனது தோளைத் தட்டிக் கொடுத்தார். அருகிலிருந்த இளம் பிக்ஷுவை நோக்கி, "இவனை சிகிரியா மலைக்கு அழைத்துச் செல்லட்டுமா?" என்று கேட்டார்.

"இவனை மேய்ப்பது கடினம். மகா துஷ்டன்" என்றார் இளம் பிக்ஷு.

"சிறுவன் தானே! இந்த வயதில் இப்படித்தானிருப்பான். சிகிரியா மலைக்கு வந்துவிட்டானென்றால், அந்தச் சூழ்நிலையே இவனைப் பக்குவப் படுத்திவிடும்" என்றார் சாந்திதேவர். பிறகு, உதயசந்திரனிடம், "என்னோடு மலைக்கு வருகிறாயா?" என்று கேட்டார்.

"அது எங்கே இருக்கிறது?" என்று மிக்க ஆவலுடன் கேட்டான், உதயசந்திரன்.

"இலங்கைத் தீவில்."

"அந்தத் தீவைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். கப்பலில்தானே போக வேண்டும்? எனக்கு கடலில் செல்ல வேண்டும் என்று ஆசை" என்றான் உதயசந்திரன்.

சாந்தி தேவரின் கண்காணிப்பில் அவன் திருந்துவான் என்று எண்ணி அவனுடைய பாட்டனார் அவனை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

சிகிரியா மலைக் குகைகளிலிருந்த புத்தபிக்ஷுக்களுடன் அவன் வாழ்ந்த பத்து ஆண்டுகளில் பலவற்றைக் கற்றான். பௌத்த தத்துவங்களையும், நடைமுறைகளையும் பயின்றான். பிக்ஷுக்களின் வாழ்க்கை நியதிகளை அறிந்து

கொண்டான். மிக நுட்பமான ஓர் அபூர்வப் போர்க்கலை யைக் கூட பிக்ஷுக்களிடமிருந்து கற்றுத் தேர்ந்தான். பாசம் மிகுந்த தந்தையைப் போல் அவனைக் கண்காணித்த சாந்தி தேவரின் அன்பும், முயற்சியும் அவனைப் பக்குவப்படுத்தி யிருந்தன. பௌத்த மடத்தின் கட்டுப்பாடான வாழ்க்கை நெறியும், சிகிரியா மலைக் காடுகளின் பயங்கரச் சூழ்நிலை யும், அவனுடைய உள்ளத்தையும், உடலையும் வலுப்படுத் தின. பௌத்த மடம், கல்வியைப் புகட்டியது. சிகிரியா மலைக்காடுகள், துணிவையும், வலுவையும் உண்டாக்கின.

பத்து ஆண்டுகள் பௌத்த மடத்தில் வாழ்ந்த பிறகு ஒருநாள் சாந்தி தேவர் அவனிடம் கேட்டார்:

"உதயசந்திரா, பௌத்த தத்துவங்களும், மடத்துப்பணி களும் உன்னை நன்கு பக்குவப்படுத்தியிருக்கின்றன. புத்தர் பிரானின் கருணை நிழலில் நிரந்தரமாக ஒதுங்கித் தொண்டு செய்ய உனக்கு விருப்பமா?"

பிக்ஷுவின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு உதயசந்திரன் சொன்னான்:

"தத்துவம் சோறு போடுமா என்று பத்து ஆண்டு களுக்கு முன்பு நான் கேட்டது இன்னும் நினைவிலிருக்கிறது. இந்த வாழ்க்கை, கேவலம் வெறும் சோற்றை மட்டும் பிரதானமாகக் கொண்டதில்லை என்பதை இப்போது உணர்ந்து கொண்டேன். தங்களிடம் நான் கற்றவைகளும், பெற்ற பயிற்சிகளும் என்னிடம் வீணாகி விடப் போவ தில்லை. ஆனால், என் மனம் துறவு வாழ்க்கையில் ஈடுப டவில்லை."

சாந்தி தேவர் மிக்க பரிவுடன் அவனுடைய தோளை ஒரு கையால் அணைத்துக்கொண்டு "அவனவனுடைய பாதையை அவனவன்தான் வகுத்துக்கொள்ள வேண்டும்.

கற்றகல்வி துணை நிற்குமே தவிர, கல்வியே வாழ்க்கை யாகி விடாது, உன்னுடைய வழியே நீ செல்" என்று சொன்னார்.

சாந்தி தேவரின் நினைவு உதயசந்திரனைக் கண்கலங்க வைத்தது. தாய்நாட்டிலும் அவனுக்கு ஆதரவாக யாரு மில்லை. பாட்டனார் இருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா என்பது தெரியவில்லை. இப்போது மாமல்ல புரத்துக் கப்பல் துறையில் அவனை எதிர்பார்த்து யாரும் இருக்கப்போவதில்லை. ஆனாலும், எதிர்காலத்தில் அவனு டைய வாழ்க்கை தாய்நாட்டில்தான் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கைதான் அவனை இழுத்துக் கொண்டு சென்றது.

கப்பலில் அடித்தளத்தின் நெடியினால் அவன் உறங்க முடியாமல் சங்கடப்பட்டான். உறக்கம் வரவில்லை யாதலால் மீண்டும் எழுந்து கப்பலின் நடுத்தளத்திற்குச் சென்றான். அங்கு கமழ்ந்து கொண்டிருந்த நறுமணத்தை யாவது ரசித்துக் கொண்டிருக்கலாமே. நடுத்தளத்திலிருந்து மேல் தளத்திற்குச் செல்லும் ஏணிப்படியில் அமர்ந்தான். அருகில் ஒரு தீவட்டி எரிந்து கொண்டிருந்தது.

நடுத்தளத்தில் இன்னும் யாரும் உறங்கவில்லை. சிலர் வம்பளந்து கொண்டிருந்தனர். சிலர் மது அருந்திக் கும்மாள மடித்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தனர். மகிழ்ச்சியின் ஆரவாரம் அந்தப் பகுதி முழுவதும் பரவியிருந்தது.

மதுவை ரசித்தவாறு அளவளாவிக் கொண்டிருந்த ஒரு சீனக் கனவானின் கவனம் உதயசந்திரன் மீது திரும்பியது. அந்த வேளையில் ஒருவன் அந்த இடத்தில் ஏணிப்படியின் மீது அமர்ந்திருந்தது அவருக்கு வியப்பை அளித்தது. மதுக் கிண்ணத்தைக் கையில் ஏந்தியபடியே அவனை நெருங்கி னார்.

அவருக்கு ஐம்பது வயது இருக்கும். மெலிந்த உடல் தான் என்றாலும், வைரம் பாய்ந்த உடல். இடுங்கிய கண்களில் அனுபவத்தின் கூர்மை, உதடுகளில் குறுநகை. சிறு மீசை, வாயின் இரு பக்கங்களிலும் தொங்கியது. தலை மயிரைப் பின்னித் தொங்கவிட்டிருந்தார். அவரைக் கண்டதும் உதயசந்திரன் எழுந்து நின்றான்.

"தம்பி, எந்த நாட்டிற்குப் பயணம்?" என்று கேட்டார்.

அவர் தமிழில் பேசியதைக் கேட்டு வியப்புற்று அவரை வெறிக்கப் பார்த்தான்.

"நீ எந்த மொழிக்காரன்? பார்த்தால், தமிழ்ப் பகுதியைச் சேர்ந்தவனைப் போலிருக்கிறாய்" என்றார் அவர்.

"நான் தமிழன்தான். மாமல்லபுரம் போகிறேன். நீங்கள் தமிழ் பேசுகிறீர்களே. உங்களுக்கு சீனதேசமல்லவா?" என்றான் உதயசந்திரன்.

"தமிழும் தெரியும். காஞ்சிபுரம், மாமல்லபுரத்திலும் எனக்கு வாணிபம் உண்டு. நாகப்பட்டினத்திலும் சிலகாலம் இருந்திருக்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது காஞ்சிக்கு வந்து போவேன். நீ, இலங்கைத் தீவில் ஏறியதைப் பார்த்தேன்" என்றார் சீன வாணிபர்.

"ஆமாம். பத்து ஆண்டுகள் கல்வி கற்பதற்காகச் சென்றிருந்தேன். இப்போது தாய்நாடு திரும்புகிறேன்."

"ஓ....! கல்வி கற்க இலங்கைக்குச் சென்றாயா? வேடிக்கைதான். உலகத்தில் பல திசைகளிலிருந்தும் கல்வி கற்பதற்காக காஞ்சியை நோக்கி செல்கிறார்கள்! நீ, காஞ்சியிலிருந்து இலங்கையைத் தேடிச் சென்றிருக்கிறாய்!" என்று கூறிச் சிரித்தார்.

"நான், சிறுவயதில் அடங்காத துஷ்டனாக இருந்தேன்.

கடல் கடந்து சென்றால், என் குணம் மாறும் என்று என் பாட்டனார் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்."

"இப்போது உன் குணம் மாறிவிட்டதா?" என்று கேட்டுச்சிரித்தார் சீன வணிகர். பிறகு, "இங்கே இந்நேரத்தில் நடைபாதையில் அமர்ந்து என்ன செய்கிறாய்?" என்றார்.

"கீழ்தளத்தில் புழுக்கம் நெடி வேறு தாங்க முடிய வில்லை. இங்கு உங்கள் பகுதியிலிருந்து புதுமையான நறு மணம் வீசுகிறது. ரசித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறேன்."

"இங்கிருந்து நறுமணமா?"

"ஆமாம், உங்களுக்குத் தெரியவில்லையா? புதுமை யான ஒருவித வாசனைதான் வருகிறதே."

"இப்போது இங்கே அருமையான இந்த மதுவின் வாசனைதான் வீசுகிறது" என்று கூறிச் சிரித்தபடியே மதுக் கிண்ணத்தை உயர்த்திக் காட்டினார் சீன வணிகர். பிறகு ஏதோ நினைவிற்கு வந்தவராய், "ஓ... இருக்கும். என் மகள் கொஞ்சம் செடிகள் கொண்டு வந்திருக்கிறாள். அவற்றின் சுகந்தமாகத்தானிருக்கும்" என்றார்.

"என்ன செடி?"

சீனர் சீன மொழியில் ஏதோ ஒரு பெயரைச் சொன்னார். உதயசந்திரன் புரிந்து கொள்ளாமல் விழித்தான்.

"இதற்கு தோனாச்செடி என்று பெயர். தமனகம் என்றும் சொல்வார்கள். தெற்கே இதற்கு மருக்கொழுந்து என்று பெயர்" என்றார் சீன வணிகர்.

"அப்படி ஒரு செடியைப் பற்றி நான் கேள்விப்பட்ட தில்லையே."

"சில ஆண்டுகளாகத்தானே இந்தச் செடி உங்கள் நாட்டிற்கு இறக்குமதியாகிறது. இது சீனத்துச் செடி. காஞ்சியில் கைலாசநாதர் கோவிலை அடுத்த நந்தவனத்தில் இது வளர்கிறதே."

"நான் அதைப் பார்க்கலாமா?"

"ஓ, காட்டுகிறேன் வா" என்று கூறி உட்பக்கம் நடந்தார்.

உதயசந்திரன் அவரைத் தொடர்ந்து சென்றான். அந்தப் பகுதியில் இருந்தவர்கள் அவனைச் சந்தேகத்துடனும், வியப்புடனும் பார்த்ததைக் கவனித்துக் கொண்டான். உள்ளூர ஓர் ஆசையும் இருந்தது. மேல்தளத்தில் தோன்றிய அழகி அந்தப் பகுதியில் எங்காவது இருப்பாள் என்று எதிர்பார்த்தான்.

உட்புறத்தில் மூன்று பகுதிகளைக் கடந்து நான்காவது பகுதிக்கு வந்ததும் ஓர் அறையின் வாசலில் நின்றார் சீன வணிகர். நறுமணம் அங்கு மிகுதியாக வீசியது.

"லீனா....." என்று கூப்பிட்டார்.

உள்ளேயிருந்து அந்த சுகந்தத்தைவிட இனிமையான ஒரு குரல் கேட்டது. சீனமொழி உதயசந்திரனுக்குத் தெரியாவிட்டாலும், அந்த மொழியைத் தாங்கி வந்த குரலின் இனிமையில் லயித்தான். மறுகணம் வாசலில் முழு நிலவு தோன்றியது.

ஓ...! மேல்தளத்தில் தோன்றி மறைந்த அதே அழகி தான்!

சட்டையில்லாமல் வெறும் கச்சையை மட்டும் மார்பில் கட்டியிருந்த பெண்களை மட்டுமே பார்த்துப்

பழகிப்போன உதயசந்திரன், சட்டையணிந்த சீனப் பெண்ணைக் கண்டு வியந்து நின்றான். மேல் தளத்தில் அவளைக் கண்டபோது அவளுடைய முக விலாசத்தில் மயங்கியவன் அப்போது அவளுடைய உடையைப்பற்றிக் கவனிக்கவில்லை. இப்போது அவள் இடுப்பிற்கு மேல் சட்டையும், இடையில் ஆடையணிந்திருந்த விதமும் அவன் கவனத்தை ஈர்த்தன. அவள் ஆடையணிந்த விதமே அவளுடைய கவர்ச்சியை மிகைப்படுத்தியது.

"இவள்தான் என் மகள்" என்றார், சீன வணிகர்.

அந்தப் பெண் உதயசந்திரனைப் பார்த்ததும் தன் தந்தையிடம் சீனமொழியில் ஏதோ கூறினாள். அவர், ஓஹோ வென்று உரக்கச் சிரித்தபடியே, உதயசந்திரனிடம், "மேல் தளத்தில் நின்றவாறே தூங்கிக் கொண்டிருந்தாயாமே?" என்றார்.

"இந்தச் செடியின் மணம் அங்குவரை வீசியது. கண்களை மூடியவாறு ரசித்தபடியே நிலவொளியில் நின்று கொண்டிருந்தேன். அப்போதுதான் இவள் என் எதிரே திடீரென்று வந்து நின்றாள். கண்களை விழித்தபோது வானத்து நிலவு என் எதிரே எப்படி வந்தது என்று திகைத்து விட்டேன்" என்றான், உதயசந்திரன்.

சீன வணிகர் இதைக் கேட்டு கலகலவெனச் சிரித்தார். "தமிழ்நாட்டாருக்கு மிக்க ரசனை உண்டு" என்று கூறி விட்டுத் தம் மகளைப் பார்த்து முறுவலித்தார். அவள் நாணமடைந்தவளாய் தந்தையின் பின்னே மறைந்து கொண்டு உதயசந்திரனை நோக்கினாள்.

தனக்கும் வக்கணையாகப் பேசத் தெரிகிறதே என்று தனக்குள்ளேயே வியந்து கொண்டான், உதயசந்திரன்.

அழகான பெண்ணைக் கண்டவுடன் ஆணுக்குக் கற்பனை தோன்றிவிடுமோ....?

"இவளுக்கும் தமிழ் தெரியும். நீ கூறுவதை நன்கு புரிந்துகொள்வாள்" என்றார், சீனர். பிறகு, தம் மகளிடம், "நீ கொண்டு வந்திருக்கும் செடிகளைப் பார்க்க வேண்டுமாம்" என்று கூறியதும், அந்தப் பெண், "உள்ளே அழைத்து வாருங்கள்" என்றாள்.

அறையினுள்ளே மூலையில் இருபது மண் பானைகளில் செடிகள் வளர்ந்திருந்ததைக் கண்ட உதயசந்திரன், குனிந்து செடிகளை முகர்ந்து பார்த்தான். "அருமையான வாசனை" என்று கூறிக் கொண்டே மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து முகர்ந்தான்.

அந்தப் பெண் ஒரு செடியிலிருந்து சில கொழுந்துகளைப் பறித்து அவனிடம் நீட்டினாள். மிகுந்த மகிழ்ச்சியோடும், பரபரப்புடனும் அவன் அவைகளை வாங்கிக் கொண்டபோது, ஒருகணம் அவனுடைய கண்களை அவளுடைய பார்வை வருடிவிட்டுப் பிரிந்தது.

"இப்போது இந்தச் செடிகளைப் பல்லவ நாட்டில் வளர்க்க வேண்டுமானால் அரசின் அனுமதி வேண்டும். இதற்கு வரி செலுத்தவும் வேண்டும். மாமல்லபுரத்தில் இறங்கும்போது இத்தனை செடிகளுக்கும் நான் சுங்கம் செலுத்த வேண்டியிருக்கும்" என்றார், சீன வணிகர்.

தன் கையிலிருந்த கொழுந்துகளை உதயசந்திரன் ஆழ்ந்து முகர்ந்து பார்த்தான். அந்தப் பெண்ணையே நறுமணமாக்கி, நெஞ்சுக்குள் செலுத்திவிடுவது போன்ற பிரமை. "மிக்க நன்றி" என்று கூறியவாறே வாசலை நோக்கி நடந்தான். அந்த இடத்திலிருந்து வெளியேறியபோது

அவளை மீண்டும் ஒருமுறை பார்க்க விழைந்தான். அவளுடைய உடை அழகையாவது ஒருமுறை பார்த்துவிட மனம் ஏங்கியது. ஆனால் கண்ணியம் தடுக்கவே அவளைத் திரும்பிப்பாராமலேயே சீன வணிகருடன் வெளியே வந்தான்.

"தம்பி, இன்று நீ என்னுடைய விருந்தாளி. மது அருந்தி விட்டே செல்லவேண்டும்" என்றார், சீன வணிகர்.

"மதுப் பழக்கம் இல்லை" என்று மறுத்தான், உதய சந்திரன்.

"இதைப் பழக வேண்டிய அவசியம் இல்லை. நண்பர்களோடு மகிழ்ச்சியாக இருக்கும்போது பருகலாமே. எங்கள் சீனத்து மது, சிறப்பு வாய்ந்தது. உடலைக் கெடுக்காது."

"மனதைக் கெடுக்குமே."

"அது அருந்துபவர்களின் தன்மையைப் பொறுத்தது. அருந்துபவன், கண்ணியமானவனாயிருந்தால், அவனுடைய செயலை அது பாதிக்கப் போவதில்லை. நீ கண்ணியமானவன் தான். தைரியமாக அருந்தலாம். என்னோடு வா" என்று அழைத்தார்.

"மது, சூது இரண்டையும் பழகுவதில்லை என்று என் குருவிடம் வாக்களித்திருக்கிறேன்"

"ஓ..... வாக்கை மீறக்கூடாது. நான் உன்னை வற்புறுத்தவில்லை. உன்னுடைய பெயரைத் தெரிந்து கொள்ளவில்லையே."

"என் பெயர் உதயசந்திர பூசான்"

"உன்னைப் போலவே உன்னுடைய பெயரும் அழகாயிருக்கிறது." இதைக் கேட்டு உதயசந்திரன் நாணினான். "என் பெயர் கியோ சங்" என்றார் வணிகர்.

அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்ததும் கீழ்த்தளத்திற்குச் செல்ல மனமின்றி மேல் தளத்திற்குச் சென்றான். கையிலிருந்த மருக்கொழுந்தை மடியில் முடிந்து பத்திரப்படுத்தினான். சீனப் பெண்ணின் பெயரை நினைவுபடுத்திப் பார்த்தான்.

லீனா !.... பெயரும் அழகாயிருக்கிறது. வீணா என்றிருந்தால் இன்னும் பொருத்தமாயிருக்கும். குரல், வீணையை விட இனிமையாயிருக்கிறதே ! குரல் மட்டுந்தானா.... ?

கண்கள் மட்டும் இடுங்கிப் போயிருக்கின்றன. ஆனால் அந்தக் கண்களில் தெரியும் குழந்தைத்தனம் எவ்வளவு கவர்ச்சியாயிருக்கிறது ! அவளுடைய பார்வையில்தான் எத்தனை உணர்ச்சி பாவனைகள் ! மருக்கொழுந்து மாதிரி அவளும் மனதைக் கிறங்கத்தான் வைக்கிறாள். சீனத்துச் சிட்டு....

சீச்சி, முன்பின் தெரியாத ஒரு பெண்ணைப் பற்றி இதென்ன கற்பனை ? பண்பாடு அவனை எச்சரித்தது.

தன்னைக் கடிந்துகொண்டே மேல்தளத்திற்குச் சென்ற உதயசந்திரன், கப்பல் தலைவனும், சில மாலுமிகளும் கடற்பரப்பில் தூரத்தில் எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்தான். பாய்மரக் கம்பத்திலிருந்து இறங்கிய ஒரு பணியாள், தலைவனிடம், "அது ஒரு கப்பல் தான். மேல் தளத்தில் தீவட்டிகளுடன் சிலர் நடமாடுவது தெரிகிறது. நாமிருக்கும் திசையை நோக்கித்தான் வருகிறது. சேர நாட்டிலிருந்து வருகிறதோ என்னவோ ?" என்றான்.

"சேர நாட்டுக் கப்பலாயிருந்தால் இந்தத் திசையில் வர வேண்டியதில்லையே. நாகப்பட்டினத்திற்கோ அல்லது மாமல்லபுரத்திற்கோ அது போவதாகத் தெரியவில்லையே" என்றான், கப்பல் தலைவன்.

"கடாரத்திற்குப் போவதாயிருக்கலாம்" என்றான் ஒருவன்.

"அதற்கு இந்த வழி வர வேண்டியதில்லை. இலங்கைத் தீவிற்குத் தெற்கே அல்லவா அதற்கு வழி. இப்படிச் சுற்றி வளைத்துக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லையே. அதைக் கண்காணித்து வாருங்கள்" என்று கட்டளையிட்டு விட்டு, கீழ் தளத்திற்குப் போகத் திரும்பிய தலைவனிடம் "போர்க் கலம் ஏதாவது இருக்குமோ?" என்று கேட்டான், உதயசந்திரன்.

"நிலவொளியில் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. விடிந்தால் தெரியும். போர்க் கலமாயிருந்தால் பயமில்லை" என்றான், தலைவன்.

"ஏன் அப்படி?"

"கொள்ளைக் கப்பலாக இருந்தால் தான் சங்கடம்."

"ஓ.... கடலிலும் கொள்ளைக்காரர்கள் உண்டா?"

"அவர்கள் இல்லாத இடம் ஏது? தேவர் லோகத்தில் கூட இருப்பார்கள்."

"ஒரு வேளை அது கொள்ளைக் கப்பலாயிருந்தால்?"

"இந்தக் கப்பலில் ஏற்றப்பட்டிருக்கும் சரக்குகள் அனைத்தையும் அவர்களிடம் கொடுத்துவிட வேண்டியது தான். வணிகர்கள் வயிறு எரிவார்கள்."

"கொள்ளையடிக்க அனுமதிக்கலாமா? நாம் எதிர்க்கலாம்."

"எதிர்த்தால் உயிர்களுக்கு மட்டுமா ஆபத்து; இந்தக் கப்பலையே முழ்கடித்து விட்டுப் போய் விடுவார்கள். இப்போதே அதைப் பற்றிக் கவலைப்படுவானேன். ஒரு

வேளை அதுவும் ஒரு வாணிபக் கப்பலாக இருக்கலாம். வழி தவறி வருகிறதோ என்னவோ, பொறுத்திருந்து காலையில் பார்க்கலாம்" என்று கூறிவிட்டுக் கப்பல் தலைவன் விரைந்து படிகளில் இறங்கிக் கீழே போய்விட்டான்.

உதயசந்திரன் சற்று நேரம் அங்கேயே நின்று தூரத்தில் தெரிந்த வெளிச்சத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

3. பாலைவனத்து மிலேச்சர்கள்

கப்பலின் மேல்தளத்தில் விளிம்புக் கைப்பிடியைப் பற்றியவாறு உலவிக் கொண்டிருந்த உதயசந்திரன், சற்று தூரத்தில் மூன்று பேர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்ததைக் கண்டான். திரும்பி நடக்க முனைந்தபோது, "என்ன தம்பி, உறக்கம் வரவில்லையா?" என்ற குரலைக் கேட்டு நின்றான். முக்கடைத்த கரகரப்பான ஒலியிலிருந்து, கேள்வி கேட்டவன், சற்று நேரத்திற்கு முன்பு அவனிடம் பேசிய கொடுக்கு மீசைக்காரன் என்பதைத் தெரிந்து கொண்டான்.

"இப்படி உட்காரேன், தம்பி," என்றான் மீசைக்காரன்.

உதயசந்திரன் சற்றுத் தயங்கினான். கொஞ்சநேரம் பேசிப் பொழுதைக் கழிக்கலாம் என்று எண்ணி, அவர்களுக்கு அருகே அமர்ந்தான்.

"மருக்கொழுந்து வைத்திருக்கிறாயா? மணம் நாசியைத் துளைக்கிறதே" என்றான் மீசைக்காரன்.

"ஒரு சீன நண்பர் கொடுத்தார்" என்றான், உதயசந்திரன்.

"இந்தச் செடி சீனத்திலிருந்து எங்கள் இலங்கைத் தீவிற்கும் வந்துவிட்டது. இரவில் இந்த மணம் ரம்மியமாயிருக்கும்" என்றான், மீசைக்காரன். பிறகு, உதயசந்திர

னுக்குத் தன் அருகிலிருந்த மற்ற இருவரையும் அறிமுகம் செய்துவைத்தான்.

ஒருவனைச் சுட்டிக்காட்டி, "இவன் பெயர் சுகததாசா. இலங்கைத் தீவிலேயே இவன்தான் சிறந்த வில்லாளி. நாங்கள் மூவரும் காஞ்சியில் நடைபெறப்போகும் வீரப் போட்டியில் கலந்து கொள்வதற்காகப் போகிறோம்" என்றான்.

வில்லாளியை உற்றுப் பார்த்தான், உதயசந்திரன். சுகததாசாவின் உருவம் மனதைக் கவர்வதாயில்லை. ஒல்லியாக இருந்தான். கன்னங்களில் குழி விழுந்திருந்தன. கண்களில் மட்டும் நல்ல ஒளி இருந்தது. பார்வையே நெஞ்சை ஊடுருவுவது போலிருந்தது.

மீசைக்காரன், மற்றொருவனைச் சுட்டிக்காட்டி, "இவன் பெயர், களுபந்தா. மற்போரில் வல்லவன்" என்றான்.

உதயசந்திரனின் கவனம் களுபந்தாவின் மீது நிலைத்தது. களுபந்தாவின் உருவம் வாட்டசாட்டமாயிருந்தது. புஜங்கள் உருண்டு, திரண்டு பருத்திருந்தன. மீசையைக் குறுகலாக அரிந்திருந்தான். அது உதட்டிற்கு மேல் ஏதோ கரியை அப்பியது போலிருந்தது.

உதயசந்திரன், மீசைக்காரனிடம் திரும்பி, "நீ, எதில் திறமைசாலி?" என்று கேட்டான்.

அப்போது சுகததாசா குறுக்கிட்டு, "இவன் வாள் வீச்சில் மகாசூரன்" என்றான்.

"உன் பெயரைச் சொல்லவில்லையே" என்றான் உதயசந்திரன்.

"என் பெயர் தேவசோமா. உன் பெயர்?" என்று கேட்டான், மீசைக்காரன்.

"என் பெயர் உதயசந்திர பூசான்" என்றான், உதயசந்திரன். பிறகு, "ஈழத்துக்காரர்களாயிருந்தும் தமிழ் நன்றாகப் பேசுகிறார்களே" என்று வியந்தான்.

"தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டிருக்கும் பல வணிகர்களுடன் எங்களுக்குத் தொடர்பு உண்டு. அவர்கள் மூலமாகத் தெரிந்து கொண்டமொழிதான்" என்றான், தேவசோமா.

"மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை காஞ்சியில் நடைபெறுமே, அந்தப் போட்டிக்கா போகிறீர்கள்?"

"அதே தான். நீ காஞ்சிக்கு வந்தால் பார்க்கலாமே."

"ஆசைதான். சந்தர்ப்பம் கிட்டினால் போய்ப் பார்ப்பேன்."

"ஒரு வீரனுக்கு ஏற்ற உடலமைப்பும், கம்பீரமும் உனக்கு இருக்கின்றன. பௌத்த மடத்தில் சேர்ந்து மொட்டையடித்து, பிக்ஷுவாக வாழ்வதைவிட, வீரனாக வாழ்க்கையை நடத்தலாமே."

"பௌத்த மடத்தில் சேரப் போவதாக நான் கூறவில்லையே" என்றான் உதயசந்திரன்.

"கப்பலில் உன்னை வழியனுப்ப ஒரு பிக்ஷு வந்தாரே, அதனால், நீ மடத்தைச் சார்ந்தவன் என்று நினைத்தேன். காஞ்சியில் போர்ப்படைப் பயிற்சிக்கு என்று ஒரு கடிகை உண்டே, அதில் நீ சேரலாமே" என்றான், தேவசோமா.

"அரசின் மேற்பார்வையில் போர்ப் பயிற்சிக்கென்று ஒரு கடிகை உண்டு. என்னுடைய முப்பாட்டனார் அதன் தலைவராக இருந்திருக்கிறார்" என்றான், உதயசந்திரன் பெருமையுடன்.

"ஓ! நீயும் ஒரு வீரக் குடும்பத்தைச் சேர்ந்தவன் தானா? தம்பி. வீர வாழ்க்கையை விட்டுவிட்டு அஹிம்சையைப் போதித்து வீரத்தையும், துணிவையும் மழுங்க வைத்து விடும் பௌத்தமடங்களில் போய் முடங்கிவிடாதே."

"ஏன்? பௌத்தமடத்தில் சேர்ந்தால்தான் என்ன கேடு வந்துவிடப்போகிறது?"

"தம்பி, பௌத்தசமயத்தின் அஹிம்சாக் கொள்கையினால் தனிப்பட்டவனின் வீரம் மட்டுந்தான் மழுங்கும் என்பதில்லை; ஒரு நாடே வீரத்தை இழந்து சோம்பிவிடும். ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கும், சுதந்திரத்திற்கும் தேவை வீரமும், வேகமும்தாம். அஹிம்சைக் கொள்கையின் ஆதிக்கத்தில் ஒருநாடு இவற்றை இழக்குமானால், வெறிபிடித்த வெளிநாட்டவர்கள் சுலபமாகப் படையெடுத்து வர ஏதுவாகிவிடும். புத்தரின் கொள்கைகளைத் தீவிரமாக வடக்கே இருந்த அசோக மன்னர் கையாண்டதன் விளைவாகப் பாரதம், தன்னுடைய வீரத்தையும் வேகத்தையும் இழந்து சங்கடப்படப் போகிறது என்று அஞ்சுகிறேன்" என்றான் தேவசோமா.

உதயசந்திரன் பதிலேதும் கூறாமல் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். பௌத்த பிக்ஷுக்களின் தொடர்பால் தன்னுடைய துஷ்டத்தனம் மட்டுப்பட்டு விட்டதை எண்ணிப் பார்த்தான். தன்னுள்ளிருந்த வெறியும் வேகமும் குறைந்திருந்தமை நல்லதா கெடுதலா என்பதைச் சிந்தித்தான்.

ஒரு நாடு, தன்னுடைய சுதந்திரத்தையும், கலாச்சாரத்தையும் இழந்துவிடாமலிருக்க வேண்டுமானால் அந்த நாட்டு மக்களுக்குக் கொஞ்சமாவது வெறித்தனமும், வேகமும் இருக்க வேண்டியது அவசியந்தானே.... ஓ!

பௌத்த தத்துவங்களும், நெறிமுறைகளும் உதயசந்திரனை ஓரளவிற்குச் சாந்தமாக்கிவிட்டனவே. மடத்தை விட்டு விலகி காஞ்சிக்குத் திரும்புவது கூட நன்மைக்குத் தானோ...

சுகததாசா குறுக்கிட்டுச் சொன்னான்.

"இவனுடைய மனப்போக்கு எப்படி இருக்கிறதோ. உடல் மட்டும் வீரத்திற்குத் தகுதியாக இருந்துவிட்டால் போதுமா? தம்பிக்குக் காவியுடையில்தான் விருப்பம் என்றால், கையில் வாளேந்தி என்ன பயன்?"

இதைக் கேட்டு உதயசந்திரன் மெல்லச் சிரித்தான்.

"பௌத்த மடத்திலிருந்து விலகித்தானே தாய்நாடு திரும்புகிறேன். என் நாடு என்னை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறதோ!" என்றான்.

"நாம் புறப்பட்டு வந்துவிட்டோம். காஞ்சியில் போட்டி நிச்சயமாக நடைபெறுமா?" என்று கேட்டான், களுபந்தா.

"நடைபெறும் என்றுதானே ஜெயவிக்கிரமா சொன்னார். அவர் வணிபத்திற்காக காஞ்சிக்குப் போய்விட்டு நம் மன்னரைச் சந்தித்தபோது போட்டிக்கு வேண்டிய ஆயத்தங்கள் காஞ்சியில் நடைபெறுவதாகக் கூறினாரே?" என்றான் தேவ சோமா.

"போட்டி நடைபெறுவதில் என்ன பிரச்சினை?" உதயசந்திரன் கேட்டான்.

"பல்லவச் சக்ரவர்த்தி கங்க நாட்டரசனை எதிர்த்துப் போருக்குப் போயிருக்கிறார். பல்லவ நாட்டில் இப்போது மகாராணியாரின் ஆட்சி நடைபெறுகிறதாம். மக்களுக்கு அவளுடைய ஆட்சியில் திருப்தி இல்லையாம்."

"போட்டி இல்லாவிட்டால்தான் என்ன? காஞ்சியிலும் மாமல்லத்திலும் நாம் பார்த்து ரசிக்கவேண்டிய இடங்கள் எத்தனையோ உண்டே. எனக்கு ஒரு ஆசை உண்டு; காஞ்சியிலேயே வாழ்ந்து, அங்கேயே உயிரை விட வேண்டும் என்று" என்றான், சுகததாசா.

"ஆசைப்பட்டு என்ன செய்ய? கொடுத்துவைக்க வேண்டாமா. நாம் பிறக்கும்போதே காஞ்சியில் பிறந்திருக்கக் கூடாதா? இலங்கை தீவில் பிறந்துவிட்டோமே" என்றான் களுபந்தா.

"எனக்கு இந்தத் தம்பியைப் பார்த்துப் பொறாமையாயிருக்கிறது. பல்லவ நாட்டில் வாழப்போகிறான்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டான் சுகததாசா.

"வேண்டுமானால் ஒன்று செய், காஞ்சிமாநகரில் உயிரை விட்டுவிடு. நாங்கள் உன்னை அங்கேயே புதைத்து விடுகிறோம். ஒருவேளை அடுத்த ஜென்மத்தில் காஞ்சியில் பிறக்க வாய்ப்புக் கிட்டும்" என்றான் தேவசோமா.

இதைக் கேட்டு எல்லாரும் உரக்கச் சிரித்தார்கள். அப்போது பெரிய அலை ஒன்று உயரே எழும்பி, கப்பலில் மோதியது. அலையின் தூவானம், இவர்கள் மீது விழுந்தது.

"கீழே போய்விடுவோம். நடுஜாமம் இருக்கும். ஈரக் காற்றில் வெகு நேரமிருந்தால் உடலைப் பாதிக்கும்" என்று கூறியவாறே தேவசோமா எழுந்தான். மற்றவர்களும் அவனைத் தொடர்ந்து கீழ்த்தளத்திற்குச் சென்றனர்.

கீழ்த்தளத்தில் படுத்த பிறகும் உதயசந்திரன் வெகு நேரம் உறங்கவில்லை. பலநினைவுகள். இடை இடையே, சீனத்து அழகியின் உருவமும் தோன்றிக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட விடியப்போகும் நேரத்தில் சற்றுக் கண்ணயர்ந்

தான். திடீரென்று ஏதோ சலசலப்புத் தோன்றவே கண் விழித்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். கீழ்த்தளத்தில் யாருமே இல்லை. பரபரப்புடன் எழுந்து மேல் தளத்திற்குச் சென்றான். நன்கு விடிந்திருந்தது. மேல்தளத்தில் பலர் கூடியிருந்தனர். எல்லாருடைய முகங்களிலும் பயமும், கவலையும் குடி கொண்டிருந்தன. அவர்களுடைய பார்வை நோக்கியிருந்த திக்கில் ஒரு பாய்மரக் கப்பல் மிக நெருங்கி நின்று கொண்டிருந்தது. அதன் தளத்தில் பாரதத்தின் வடமேற்கிலுள்ள பாலைவனத்தைச் சார்ந்த பல அராபிய இனத்தவர்கள் வாளேந்தி நின்றுகொண்டிருந்தனர். அவர்களிடையே ஓர் அழகிய இளைஞனும் நின்றுகொண்டிருந்தான். தலை முடியை மழுங்கச் சிரைத்து மொட்டைத் தலையுடனிருந்தான். அராபிய இனத்தைச் சார்ந்தவனாகத் தெரியவில்லை.

அராபியர்களில் ஒரு தடியன், அந்த இளைஞனிடம் ஏதோ கூறினான். உடனே அந்த இளைஞன், இந்தக் கப்பலை நோக்கி உரக்கக் கத்தினான். அலைகளின் இரைச்சலையும் மீறி அவன் குரல் ஒலித்தது.

"உங்கள் கப்பலில் முத்து, பவளம், தங்கம் ஏதாவது இருக்கிறதா?"

"இல்லை, பொதிகளில் அடைத்த வாணிபச் சரக்குகள் தாமிருக்கின்றன" என்று பதில் கொடுத்தான், கப்பல் தலைவன்.

"நாங்கள் வந்து பார்க்கப் போகிறோம். தடுத்தீர்களானால், உங்கள் கப்பலையே தீ வைத்து மூழ்கடித்து விடுவோம்" என்றான் அந்த இளைஞன்.

அப்போது அந்தக் கொள்ளைக் கப்பலிலிருந்து மூன்று மரப் பாலங்கள் இந்த வணிகக் கப்பலின் தளத்தின் மீது இறக்கப்பட்டன. மரப் பாலங்களிலிருந்த பெரிய இரும்புக்

கொக்கிகள், வணிகக் கப்பலின் விளிம்பை வலுவாகப் பற்றிக் கொண்டன. எல்லாரும் திகைப்புடன் பார்த்தவாறு சிலைகளாக நின்றனர்.

பாலத்தின் வழியே முன்று அராபியர்கள், வாளேந்தி வந்தார்கள். கூட்டமே மொட்டைத் தலை இளைஞனையும் அழைத்து வந்தனர். அவன் மொழி பெயர்ப்பாளனாக இருந்தான். வணிகக் கப்பலின் தலைவன், அவர்களை அழைத்துச் சென்று, கப்பலின் எல்லாப் பகுதிகளையும் காட்டினான். வாணிபச் சரக்குகளிருந்த பொதிகளில் அராபியர்கள், வாட்களினால் குத்திப் பார்த்தார்கள். கப்பலில் எல்லாப் பகுதிகளையும் பார்த்துவிட்டுத் தங்கள் கப்பலுக்குத் திரும்பினார்கள். சற்று நேரத்தில் மொட்டைத் தலை இளைஞனின் குரல் உரக்க ஒலித்தது–

"உங்கள் கப்பலைப் போக அனுமதிக்கிறோம். ஆனால் ஒரு நிபந்தனை, தங்கத்தைவிட மதிப்புவாய்ந்த ஒரு பொருள் உங்கள் கப்பலில் இருக்கிறது. அதை மட்டும் எங்களிடம் ஒப்படைத்துவிட்டால், நீங்கள் போகலாம்."

யாருக்கும் ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அந்த இளைஞன் எதைக் குறிப்பிடுகிறான் என்பதே புரியவில்லை. அந்த இளைஞன் மீண்டும் பேசினான்.

"இந்தக் காட்டுமிராண்டிகள் எந்தக் கொடுமையையும் செய்வார்கள். இவர்கள் இப்போது கேட்பது உங்கள் கப்பலில் பயணம் செய்யும் சீனத்துப் பெண்ணைத்தான்."

இதைக் கேட்டதும் திடுக்கிட்டனர். கியோசங், "ஐயோ" என்று அலறியவாறு நடுத்தளத்திற்கு ஓடினார். தமிழ்மொழி புரியாத சில வணிகர்களுக்குக் கப்பல் தலை

வன் நிலைமையை விளக்கினான். "பாலைவனத்தைச் சார்ந்த இனத்தவர்களோ என்னவோ, இவர்களை எதிர்த்துப் பயனில்லை" என்றான். கொள்ளைக் கப்பலிலிருந்து அந்த இளைஞன் மீண்டும் பேசினான்.

"உங்களுக்கு வேறு வழியில்லை. இவர்களுக்கு நாகரிகம் கிடையாது. வெறியர்கள். நானும் இவர்களிடம் அடிமை போல் அகப்பட்டுவிட்டேன். உங்களையும் காப்பாற்றி என்னையும் காப்பாற்ற உங்களால் முடியுமா? இங்கே அறுபது பேர் இருக்கிறார்கள்."

வணிகக் கப்பலின் தலைவன், செய்வதறியாது திகைத்தான். அருகில் நின்ற ஒரு சீன வணிகரிடம் சீன மொழியில் "என்ன செய்வது?" என்று கேட்டான். அந்த வணிகர் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தார். "கியோசங் எங்கே?" என்று கேட்டார்.

"கீழே மகளிடம் போய்விட்டார். இதற்கு என்ன வழி?"

"பலருடைய உயிர்களுக்காக ஒரு உயிரைப் பலி கொடுப்பதில் தவறில்லை. கொள்ளைக்காரர்கள் கேட்பதைக் கொடுத்துவிட வேண்டியதுதான்" என்றார் சீன வணிகர்.

கப்பல் தலைவன், அருகில் நின்ற ஒரு யவன வணிகரிடம், "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? சீனப் பெண்ணைக் கேட்கிறார்களே" என்று யவன மொழியில் கேட்டான்.

அந்த யவன வணிகர், பீதியினால் முகம் வெளுத்து நின்றார்.

"கொள்ளைக்காரர்கள் கேட்பதைக் கொடுத்துவிட வேண்டியதுதான். வேறு வழி என்ன? ஒரு பெண்ணிற்காக அத்தனை பேரும் சாக முடியுமா?" என்றார்.

கியோசங்கைச் சந்திப்பதற்காகக் கப்பல் தலைவன் நடுத்தளத்திற்குப் போகத் திரும்பிய உடன் அவனுடைய கையைப் பற்றி நிறுத்தினான், உதயசந்திரன். "என்ன முடிவு செய்தீர்கள்? எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

சீன வணிகரும், யவன வணிகரும் கூறிய யோசனையைக் கப்பல் தலைவன் சொன்னதும் உதயசந்திரன், எரிமலையாக வெடித்தான்.

"வெட்கமில்லை? உயிரைக் காத்துக் கொள்ள இவ்வளவு ஈனத்தனமாகவா நடந்துகொள்ள வேண்டும்? இந்த யோசனையைச் சொன்னவர்களின் மகளையோ, மனைவியையோ கேட்டிருந்தால் அவர்களுடைய மனம் எப்படித் துடித்திருக்கும்? நம் உடலில் இரத்தம்தானே ஓடுகிறது. மானமுள்ளவர்கள் என் பக்கம் நில்லுங்கள். இந்தக் கொள்ளையர்களைப் பந்தாடி விடலாம். சம்மதமா?" என்று அங்கே குழுமி நின்ற மாலுமிகளைப் பார்த்துக் கேட்டான்.

அவர்களில் சிலர் பயத்தினால் தலையைக் குனிந்து கொண்டனர். சிலர் தயார் என்று சம்மதம் தெரிவித்தனர்.

"அவர்கள் பாலைவனத்தைச் சார்ந்த முட்டாள் நாடோடிகள். பயங்கரமானவர்கள்" என்று கப்பல் தலைவன் எச்சரித்தான்.

உதயசந்திரன் உரத்த குரலில் கொள்ளைக் கப்பலில் இருந்த இளைஞனைப் பார்த்து, "நாங்கள் மறுத்தால் என்ன செய்வார்கள்?" என்று கேட்டான்.

"கப்பலோடு நீங்கள் அனைவரும் அழிந்து விடுவீர்கள்" என்றான் இளைஞன்.

"நாங்கள் பணியப் போவதில்லை என்று சொல்."

"நன்றாக யோசித்து விட்டுச் சொல்லுங்கள். இந்த மிலேச்சர்கள் பண்பற்ற ஈனர்கள். மகாமூடர்கள்."

உதயசந்திரன், தேவசோமாவைப் பார்த்தான். அவன் "பணிய வேண்டாம். எதிர்த்து நிற்கலாம்" என்றான்.

இதற்குள் கப்பலின் தளத்திலிருந்து சிலருடைய அழு குரல் கேட்டது. உதயசந்திரன் கப்பல் தலைவனிடம், "நீங்கள் முதலில் கீழே போய் அவர்களைத் தைரியமாக இருக்கச் சொல்லுங்கள். முக்கியமாக அந்தப் பெண்ணிற்கு ஆறுதல் கூறுங்கள், சீக்கிரம் போங்கள்" என்றான்.

கொள்ளைக் கப்பலிலிருந்து அந்த இளைஞனின் குரல் மீண்டும் கேட்டது.

"இந்தக் காட்டுமிராண்டிகளிடம் என்ன சொல்ல? நீ சொன்னதைச் சொல்லட்டுமா?"

"நீ எங்களுக்கு உதவியாக நிற்பாயா?" என்று உதய சந்திரன் கேட்டான்.

"எனக்கு ஆயுதம் தாங்கிப் பழக்கமில்லை. நான் எப்படி உதவ முடியும்?"

"ஒரு உதவி செய். எங்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடு."

"எப்படி?"

"நாங்கள் எங்கள் ஆயுதங்களுடன் தயாராகிக் கொள் கிறோம். கொள்ளைக்காரர்களிடம், அந்தப் பெண்ணைச் சம்மதிக்க வைக்க முயற்சி நடைபெறுவதாகச் சொல்லிக் கொஞ்சம் காலத்தைக் கடத்து."

"சீக்கிரம் தயாராகுங்கள்" என்று கூறிவிட்டு அந்த இளைஞன் கொள்ளையர்களிடம் திரும்பி ஏதோ கூறினான்.

உதயசந்திரன் தன்னருகில் கூடி நின்றவர்களிடம், "பயப்படுகிறவர்கள் கீழே போய்விடுங்கள். போர் செய்யும் துணிவுள்ளவர்கள் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தயாராகுங்கள். சீக்கிரம்" என்றான்.

தேவசோமாவும் மற்றவர்களும் கீழ்த் தளத்திற்கு விரைந்து சென்று தங்கள் பயணச் சுமைக்குள் வைத்திருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு மேல் தளத்திற்கு வந்தனர்.

வில்லேந்தி வந்த சுகததாசாவிடம் "உன்னுடைய திறமை இப்போதுதான் உண்மையிலேயே பயன்பட்டப் போகிறது. பாய்மரக் கம்பத்தின் மீது ஏறிக்கொள். கொள்ளையர்கள் பாலத்தின் மீது வரும்போதே உன்னுடைய அம்புகள் பாயவேண்டும்" என்றான் உதயசந்திரன்.

சுகததாசா, பாய்மரக் கம்பத்தின் மீது ஏறத் தொடங்கினான். தேவசோமாவிடம், "மூன்று பாலங்களின் வழியாகவும் வருவார்கள். நாம் மூன்று பிரிவாக நின்று மூன்று இடங்களிலும் தாக்க வேண்டும்" என்றான் உதயசந்திரன்.

களுபந்தா, ஓர் இரும்பு உலக்கையைக் கையில் ஏந்தியபடி நின்றான். துணிவு மிக்க சில மாலுமிகள், அரிவாள்களையும், மரக்கட்டைகளையும் இரும்புத் தடிகளையும் ஏந்தியிருந்தார்கள். கப்பல் தலைவன், ஒரு வாளுடன் உதயசந்திரனை நெருங்கி நின்றான். உதயசந்திரன் ஒருமுறை தன்னைச் சுற்றி நோட்டம்விட்டான். பிறகு கொள்ளைக் கப்பலை நோக்கி உரத்த குரலில், "கொள்ளைக்காரர்களை வரச்சொல்" என்று கூவினான்.

"தயாராகிவிட்டீர்களா?" என்று கேட்டான் மொட்டைத்தலை இளைஞன்.

"தயார்தான்" என்றான், உதயசந்திரன்.

இளைஞன், கொள்ளைக்கார அராபியர்களிடம் எதோ கூறவே, அராபியர்கள் பேய்க் கூச்சலிட்டவாறே வாட்களை ஓங்கியபடி மூன்று பாலங்கள் வழியாகவும் பாய்ந்து வந்தனர்.

அப்போதுதான், உதயசந்திரன் ஆயுதம் ஏதும் இல்லாமல் நின்று கொண்டிருந்ததை உணர்ந்தான், தேவசோமா.

"ஐயோ, உன்னிடம் ஆயுதம் இல்லையே" என்று பதற்றத்துடன் கூவினான்.

"என் கைகளே எனக்கு ஆயுதங்கள்" என்று உதயசந்திரன் கூறிக்கொண்டிருந்தபோது, பாலத்தின் நடுவே பெரும் குழப்பம் தோன்றியது.

பாலங்களின் மீது கொள்ளையர்கள் ஓடிவந்தபோது சுகததாசாவின் அம்புகள் பாயத் தொடங்கின. ஓர் அம்பு கூட வீணாகாமல் மிகக் கச்சிதமாகத் தாக்கின. அம்புகள் மூன்று பாலங்களின் மீதும் சரமாரியாகப் பொழிந்தன. சுகததாசாவின் வில் திறமையைக் கண்டு உதயசந்திரன் பிரமித்துநின்றான். அராபியர்கள் பாலத்தைக் கடப்பதற்குள் அவர்களில் பதினெட்டு பேர் பாலத்திலேயே அம்படிபட்டுச் சாய்ந்தனர். பாலத்தின் நடுவே குழப்பம் தோன்றியது. பாலங்களில் செத்து விழுந்தவர்களை மிதித்துக் கொண்டு பின்னால் வந்த அராபியர்கள் ஓடிவந்தனர். சற்று நேரத்தில் உதயசந்திரன் நின்று கொண்டிருந்த தளம் ஒரு போர்க்களம் போல் ஆகிவிட்டது.

பீதியடைந்த பயணிகள் வீறிட்டலறினார்கள். தேவசோமா, இரு கைகளிலும் வாட்களை ஏந்திப் பாய்ந்தான். கணநேரத்தில் ஆறு அராபியர்களின் தலைகளைத் துண்

டித்து விட்டான். வணிகக் கப்பலின் மாலுமிகளில் மூவர் அராபியரின் தாக்குதலுக்கு இரையாகிக் கடலுக்குள் வீழ்ந்தனர். தன்னை ஒரே சமயத்தில் தாக்க வந்த அராபியர்களை வெட்டிச் சாய்த்து விட்டுத் திரும்பிய தேவசோமா, ஓர் அதிசயக் காட்சியைக் கண்டு பிரமித்தான்—

கையில் ஆயுதம் ஏதுமின்றி உதயசந்திரன் மூன்று முரட்டு அராபியர்களை ஒரே சமயத்தில் வீழ்த்திய அதிசயத்தைக் கண்டு பிரமிப்படைந்தான். இன்னும் இரண்டு அராபியர்கள் வெறிக்கூச்சலிட்டபடி உதயசந்திரன் மீது பாய்ந்த போது, உதயசந்திரன், அவர்களுடைய வாள் வீச்சின் கதியிலிருந்து மின்னல் வேகத்தில் விலகித் தப்பினான். மறுகணம், ஓர் அராபியனிடமிருந்த வாள், தெறித்துத் தூரப் போய் விழுந்தது. என்ன நடந்தது என்று அந்த அராபியன் உணர்ந்து கொள்வதற்குள் உதயசந்திரனின் கால் மேலே எழும்பி மற்றொரு அராபியனின் மண்டையைத் தாக்கியது. அடிபட்ட அராபியன் மண்டை பிளந்து கீழே விழுந்து துடித்தான். மறுகணம் உதயசந்திரனின் கை, வாளை இழந்து நின்ற அராபியனின் கழுத்தில் பதிந்தது.

ஓ...! மிகுந்த வேகத்துடன் ஒரு கூரிய வாள் இறங்குவது போலல்லவா உதயசந்திரனின் மணிக்கட்டு, அராபியனின் கழுத்தில் இறங்கிவிட்டது.

தேவசோமா தன் கண்களையே நம்ப முடியாமல் உதயசந்திரனின் திறமையைக் கண்டு வியப்பிலாழ்ந்தான்.

திடீரென்று கப்பலின் நடுத்தளத்தில் மரண ஓலம் கேட்கவே, உதயசந்திரன் திடுக்கிட்டான். "தேவசோமா, இங்கேயே பார்த்துக் கொள். நான் கீழே போய்க் கவனிக்கிறேன்" என்று கூறிவிட்டு, படிகளில் பாய்ந்து இறங்கினான்.

கப்பலின் நடுத்தளத்திற்குள் புகுந்து விட்ட இரண்டு அராபியர்கள், எதிர்ப்பட்ட இரண்டு சீன வணிகர்களையும், மூன்று யவன வணிகர்களையும் குத்திக் கொன்று விட்டு மற்ற பயணிகளையும் தாக்கப் பாய்ந்தார்கள். உதயசந்திரன் பயங்கரமாகக் கூவிக்கொண்டு அவர்கள் மீது பாய்ந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் ஓர் அராபியன் துடிதுடித்துக் கீழே சாய்ந்தான். மற்றொருவன் வாளை ஓங்கிய போது உதயசந்திரன், ஆள் உயரத்திற்கு மேலே எழும்பி, ஒரு காலினால் அராபியனுடைய தொண்டையைத் தாக்கினான். அராபியன் கதறியபடியே கீழே மல்லாந்து சாய்ந்தான். அவனுடைய உடலை மிதித்துத் தாண்டிக் கொண்டு உட்பக்கம் பாய்ந்தான், உதயசந்திரன்.

லீனா இருந்த பகுதியிலிருந்து அவள் அலறியதைக் கேட்டு அங்கே விரைந்தான். உள்ளே ஒரு கொழுத்த அராபியன், லீனாவைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே வரமுயன்று கொண்டிருந்தான். அவனுடைய காலடியில் கியோசங் வெட்டுண்டு கிடந்தார். அந்த அராபிய வெறியனை உதயசந்திரன் மறித்துக் கொண்டான்.

அராபியன் ஒரு கையினால் லீனாவைப் பற்றியவாறே வாளை ஓங்கியபடி உதயசந்திரன் மீது பாய்ந்தான். உதயசந்திரன் லாவகமாக விலகினான். அராபியனின் வாள், ஒரு மரத்தடுக்கில் பாய்ந்து புதிந்தது. அதை அவன் உருவி எடுப்பதற்குள் அவனுடைய கழுத்தில் உதயசந்திரனின் கை இறங்கியது. ஒரு மிருகத்தைப் போல அலறிக்கொண்டு அராபியன் ஒரு மரத்தூண் மீது சாய்ந்தான். அவனிடமிருந்து விடுபட்ட லீனா, கீழே கிடந்த தந்தையை நோக்கி ஓடினாள். தூணில் மோதிச் சாய்ந்த அராபியன் மீண்டும் எழுவதற்குள் உதயசந்திரன் ஒரு கையினால் அவனுடைய முகத்தைத் தாக்கவே மண்டை ஓடு சிதறி, முகம்

கூழாகிவிட்டது. மண்டைக்குள்ளிருந்து வெளியே சிதறிய மூளை, நாலாபுறமும் சிதறியது.

லீனா, தந்தையின் உடல் மீது விழுந்து கதறினாள். உதயசந்திரன் மனம் நெகிழ்ந்து நின்றான். அவனுடைய கண்களும் கலங்கின. ஆனால் கண் கலங்கி நிற்கும் நேரமா அது!

உதயசந்திரன் மேல் தளத்திற்கு விரைந்தான். அராபியர்கள் பின் வாங்கித் தங்களுடைய கப்பலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர். பாலங்களின் வழியாக அவர்களைத் துரத்திக் கொண்டு தேவசோமாவும், களுபந்தாவும் சில மாலுமிகளும் ஓடிக் கொண்டு இருந்தார்கள்.

கொள்ளையர்களின் கப்பல் தளத்தின் மீதே அராபியர்கள் தாக்கப்பட்டு கடலில் எறியப்படுவதைக் கண்ட உதயசந்திரன், ஆபத்து விலகி விட்டதை உணர்ந்தான். லீனாவைத் தேற்றும் பொருட்டு நடுத் தளத்திற்கு விரைந்தான்.

லீனா அழுது கொண்டிருந்தாள். உதயசந்திரனைக் கண்டதும் அவளுடைய துக்கம் பெருகியது. அவளுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று புரியாமல் அவனும் கண் கலங்கி நின்றான்.

4. ராஜன் நம்பூதிரியின் கலக்கம்

மலையில் மாமல்லபுரம் போய்ச்சேர வேண்டிய கப்பல் மறுநாள் நண்பகலில்தான் போய்ச் சேர்ந்தது. ஒரு கப்பல் கரை சேரும்போது வழக்கமாக இருக்கும் உற்சாகமும் ஆரவாரமும் அந்தக் கப்பலில் இல்லை. கப்பலிலிருந்து இறங்கிய எல்லாருடைய முகங்களிலும் சோகமும், சோர்வும் மண்டியிருந்தன.

மாமல்லபுரத்து துறைமுகம் எப்போதும்போல் கல கலப்பாயிருந்தது. துறைமுகத்துக்கு ஒரு கப்பல் வந்து சேரும் போது வணிகர்களும், அவர்களைச் சார்ந்த சிப்பந் திகளும் கரையில் கூடிவிடுவார்கள். அவர்களைத் தவிர ஊராரும் வேடிக்கைப் பார்க்க வருவார்கள்.

அன்றும் அப்படித்தான் கடற்கரையில் திருவிழாப் போல மக்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர். சுங்க அதிகாரி களும், துறைமுகப் பாதுகாவலாளர்களும் சுறுசுறுப்பா யிருந்தனர். அன்று சுங்க அதிகாரிகள் தங்களுடைய வழக்க மான கெடுபிடிகளைத் தளர்த்தியிருந்தனர். கொள்ளையர் களால் தாக்குண்டு மிகுந்த துயரத்தைத் தாங்கிவந்த பயணி களைக் கண்டு அதிகாரிகளின் நெஞ்சங்களில் கூட ஈரம் கசிந்துவிட்டது. சரக்குகளுக்கு சுங்க வரியில் பாதியை மட்டும் வசூலித்தால் போதுமென்று சுங்கத் தலைவர் ஆணையிட்டுவிட்டார். தனி நபர்களை சுங்கச் சாவடியில் சோதனை போட வேண்டாமென்றும், பயணிகள் தாமத மின்றி நகரத்திற்குள் போவதற்கான உதவிகளைச் செய்து கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

சுங்கச் சாவடியைக் கடந்து உதயசந்திரனும், லீனாவும் வெளியே வந்தார்கள். "ஏதாவது சாப்பிடேன். மிகவும் களைத்திருக்கிறாய்" என்றான் உதயசந்திரன்.

லீனா மறுத்துத் தலையை அசைத்தாள். அளவு மீறிய சோகத்தால், பொன்னிறமாயிருந்த அவளுடைய வதனம், களை இழந்து சாம்பியிருந்தது. அவளுடைய கண்களில் தென்பட்ட துயரத்தின் சாயல் உதயசந்திரனை மிகவும் நெகிழ வைத்து விட்டது. மிகுந்த சங்கடத்துடன் தன் கண்ணீரை மறைத்துக்கொண்டான்.

சுற்றும் முற்றும் பார்த்தான். தன்னுடன் கப்பலிலிருந்து இறங்கியவர்களைத் தேடினான். சற்று தூரத்தில் தேவ

சோமாவும் மற்றவர்களும் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் கொள்ளைக் கப்பலில் இருந்த மொட்டைத் தலை இளைஞனும் வந்து கொண்டிருந்தான். அவர்கள் பிரிந்து செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. உதயசந்திரன் விடைபெற்றான்.

"நண்பர்களை நாம் பிரியும் நேரம் வந்து விட்டது. கடவுளருளால் நாம் மீண்டும் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம்" என்றான் உதயசந்திரன். பிறகு சொன்னான் :

"கப்பலில் நாம் பேசி முடிவு செய்தபடியே இந்தப் பெண்ணை இங்குள்ள சீனச்சேரியில் இவர்களுடைய உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்கிறேன்."

அருகில் நின்ற மொட்டைத் தலை இளைஞனைச் சுட்டிக்காட்டி தேவசோமா, "இந்த இளைஞன் ஸ்ரீராஜன் நம்பூதிரி என்ன செய்யப்போகிறான்?" என்று கேட்டான்.

"இவன் என்னோடு வருவதாக முடிவு செய்திருக்கிறான். இவனையும் என்னோடு அழைத்துச் செல்கிறேன். நண்பர்களே! நாங்கள் போய்வருகிறோம். தக்க சமயத்தில் நீங்கள் காட்டிய துணிவிற்கும், செய்த உதவிக்கும் நன்றி" என்றான் உதயசந்திரன்.

அவனுடைய கையைப் பரிவுடன் தேவசோமா பற்றிக் கொண்டு, "தம்பி, உன்னுடைய வீரத்திற்கும், சாகசத்திற்கும் முன்னால் எங்கள் செயல் எம்மாத்திரம். ஓ...! ஆயுதமின்றியே நீ நிகழ்த்திய புதுமையான போரை என் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன். இந்தப் பெண்ணின் மானத்தைக் காக்க நீ ஆற்றிய தீரச் செயலுக்காக சீன நாடே தமிழகத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. தம்பி, தமிழ் மண்ணின் பண்பும், பெருமையும் உன்னால் மிகவும் உயர்ந்துவிட்டன. இந்தப் பெண்ணிற்குத் தான் எப்படி

ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் தவிக்கிறேன்" என்றான். பிறகு, "முடிந்தால் நாம் மீண்டும் காஞ்சியில் சந்திக்கலாம்" என்றான்.

இலங்கை வீரர்கள் மூவரும் விடைபெற்றுச் சென்றனர். ஒரு வண்டியில் லீனாவையும், ஸ்ரீராஜன் நம்பூதிரி என்ற இளைஞனையும் அழைத்துக்கொண்டு சீனச் சேரியை நோக்கிப் புறப்பட்டான், உதயசந்திரன்.

"சீனச்சேரியில் யாருடைய வீட்டிற்குப் போக வேண்டும்?" என்று வண்டிக்காரன் கேட்டான்.

"டெங்லீ என்று ஒரு வணிகர் இருக்கிறார். அவர் வீடு எங்கே என்று தேட வேண்டும்" என்றான் உதயசந்திரன்.

"அந்தக் கிழவரா? தெரியும். அவர் வீடே எனக்குத் தெரியும்" என்று கூறியவாறே மாடுகளை முடுக்கி விரட்டினான் வண்டிக்காரன்.

சீனச்சேரியை நெருங்கியபோதே, அது செல்வமிக்கவர்களின் குடியிருப்புப் பகுதி என்பது தெரிந்து விட்டது. செல்வச் செழிப்பின் அறிகுறி, பார்த்த இடமெல்லாம் தெரிந்தது. தெருக்களின் சுத்தமும், வீடுகளின் ஒழுங்கான அமைப்பும், தெருவில் விளையாடிக் கொண்டிருந்த கொழுகொழுத்த குழந்தைகளின் மலர்ச்சியும் மனத்திற்குத் தெம்பூட்டின. லீனா ஒரு பத்திரமான இடத்தில்தான் இருக்கப்போகிறாள் என்ற நம்பிக்கையில் உதயசந்திரன் திருப்தியடைந்தான்.

ஒரு விசாலமான தெருவிற்குள் வண்டி சென்றபோது, வீட்டு வாசல்களில் நின்று கொண்டிருந்த சீனர்கள் வியப்புடன் வண்டியை நோக்கினார்கள். சீனச் சிறுவர்கள், வண்டியின் பின்னால் வண்டியைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தனர். மாளிகை போன்ற ஒரு பெரிய வீட்டின் எதிரே

வண்டி நின்றது. வாசல் திண்ணையில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்த வயோதிகர் ஒருவர் பரபரப்புடன் எழுந்தார். அவர் வண்டியை நெருங்கி வருவதற்குள் வண்டியிலிருந்து மூவரும் இறங்கி விட்டனர்.

லீனாவிடம், "எனக்குச் சீனமொழி தெரியாது. நீயே பேசு" என்றான் உதயசந்திரன்.

"தாத்தாவிற்கு தமிழ் தெரியும்" என்றாள் லீனா.

ஒரு சீனப் பெண்ணுடன், வேற்று இனத்து இளைஞர் கள் இருவர் நின்று கொண்டிருந்ததைக் கண்ட சீனக் கிழவர், வியப்புடன் அவர்களைக் கூர்ந்து பார்த்தார்.

"டெங்லீ இருக்கிறாரா?" என்று உதயசந்திரன் கேட் டான்.

சீனக் கிழவர், தம்முடைய வெற்றிலைக் காவி ஏறிய பற்கள் தெரியும்படியாகச் சிரித்தவண்ணம், "நான்தான் டெங்லீ. நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றதைக் கண்டு, வீட்டுக்குள்ளிருந்த பெண்கள் ஆவலுடன் வாசலுக்கு வந்தனர்.

"உங்களுக்கு கியோசங் தெரியுமல்லவா?" என்று கேட்டான் உதயசந்திரன்.

கிழவர் உற்சாகமடைந்தவராய், "ஓ.... தெரியுமே, எனக்குத் தூரத்து உறவு. அவனுடைய தந்தையும் நானும் நண்பர்கள். வாணிபம் நிமித்தமாக அவன் இங்கே வரும் போதெல்லாம் என்னைப் பார்க்காமல் போகமாட்டான். அவனிடமிருந்து ஏதாவது செய்தி உண்டா?" என்று மிக்க ஆவலுடன் கேட்டார்.

உதயசந்திரன் லீனாவைச் சுட்டிக் காட்டி, "இவள் கியோசங்கின் மகள்" என்றான்.

கிழவர் திகைப்புற்று லீனாவை வெறிக்கப் பார்த்தார். பிறகு பெருமகிழ்ச்சியுடன் கீச்சுக்குரலில், "ஓ.... ! கியோசங் கின் மகளா. வாருங்கள், உள்ளே வாருங்கள்" என்று அழைத்தார்.

டெங்லியின் மனைவி, வண்டியின் அருகே சோகமே உருவாக நின்ற லீனாவின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

கிழவர் சட்டென்று திரும்பி, "கியோசங் எங்கே?" என்று கேட்டார்.

"உள்ளே போய் விவரமாகச் சொல்கிறேன்" என்றான் உதயசந்திரன். அருகே நின்ற ஸ்ரீராஜன் நம்பூதிரியிடம், "ராஜன், வண்டியில் உள்ள சாமான்களை எல்லாம் இறக்கு. மருக்கொழுந்து செடி இருக்கும் பானைகளைப் பத்திரமாக இறக்க வேண்டும்" என்று கூறிவிட்டுக் கிழவரைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றான்.

கியோசங்கிற்கு நேர்ந்த முடிவைக் கேட்டதும், கிழவர் டெங்லி அதிர்ந்து போனார். சற்று நேரம் அவரால் எதுவும் பேச முடியவில்லை. அவருடைய மனைவி, லீனாவை ஆதரவாக அணைத்துக் கொண்டாள்.

"கியோசங் இங்கு வந்து நிரந்தரமாகத் தங்கி விடுவதற் காகத்தான் புறப்பட்டு வந்தார். இவளுடைய தாயார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டாள். இங்கு வரும் வழியில் இப்படி ஒரு துன்பம் நேர்ந்துவிட்டது. இனி இவளுக்கு நீங்கள்தாம் ஆதரவு" என்றான் உதயசந்திரன்.

"இவள் என் பேத்தி....என் பேத்தி" என்றார் கிழவர், உணர்ச்சி பொங்க.

டெங்லீயின் மனைவி, "எங்களுக்குப் பேரன்கள் தானிருக்கிறார்கள். பேத்தி இல்லை. அந்தக் குறையை இவள் தீர்த்து விட்டாள்" என்று கூறியபடியே லீனாவின் தலை யைப் பரிவுடன் வருடினாள். லீனா, கிழவியின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

உதயசந்திரன் எழுந்தான். "ஐயா, என் கடமை முடிந்தது. இவளை இவள் விரும்பியபடியே உங்களிடம் கொண்டு வந்து ஒப்படைத்து விட்டேன். எனக்கு விடைகொடுங்கள்" என்றான்.

டெங்லீ அவனுடைய கைகளைப் பற்றிக்கொண்டு, "உனக்கு மிக்க நன்றி. என்னுடைய வேண்டுகோளைத் தட்டாதே. நீயும் உன் நண்பனும் இன்று எங்கள் விருந்தினராக இருந்துவிட்டுச் செல்லவேண்டும்" என்றார்.

உதயசந்திரன் திரும்பி லீனாவைப் பார்த்தான். அவளுடைய பார்வை, அவனிடம் கெஞ்சுவது போலிருந்தது. அன்று இரவு அங்கு தங்கிச் செல்ல சம்மதித்தான்.

மறுநாள் டெங்லீயின் வீட்டிலிருந்து அவன் புறப்படுவதற்கு முன் லீனாவிடம் விடைபெறச் சென்றான். அவள் துயரம் தாங்காமல் அழத் தொடங்கினாள். உதயசந்திரன் ஆறுதல் சொன்னான்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்னை மீண்டும் பார்க்க வருவீர்களா?" – லீனா கேட்டாள்.

"பௌத்த மடத்தில் தங்குவேன். நான் இனி என்ன செய்ய வேண்டும் என்றே இன்னும் முடிவு செய்யவில்லை. இப்போதைக்குப் பௌத்த மடம். நான் இங்கிருந்து காஞ்சிக்குப் போவதற்குள் உன்னை நிச்சயமாக வந்து பார்ப்பேன். கடந்து போனவைகளை மறக்க முயற்சி செய். காலம்தான்

உன் மனப்புண்ணை ஆற்றும்" என்றான், உதயசந்திரன்.

"நீங்கள் செய்த உதவிகளுக்கு நன்றி" என்றாள் லீனா.

உதயசந்திரன் அவளை இரக்கத்தோடு பார்த்தான். "எனக்கு நீ நன்றி சொல்ல வேண்டுமா? இந்த மாதிரியான நாகரிகம் வாய்ந்த சம்பிரதாய வார்த்தைகள் நமக்குள் எதற்கு?" என்றான்.

அவள் கண் கலங்கியபடி அவனை வழியனுப்பினாள். ராஜன் நம்பூதிரியையும் அழைத்துக்கொண்டு மாமல்ல புரத்துக் கல் இரதங்களுக்கு அருகில் இருந்த பௌத்த மடத்தை உதயசந்திரன் அடைந்தான். பிக்ஷு சாந்தி தேவர் கொடுத்து அனுப்பியிருந்த அறிமுக ஓலையைப் பௌத்த மடத் தலைவரிடம் கொடுத்தான். தலைவர் அவனையும் ராஜன் நம்பூதிரியையும் வரவேற்று, அவர்கள் தங்குவதற்கு ஓர் அறையையும் கொடுத்தார்.

அன்று இரவு, உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் பௌத்த மடத்தின் மேல் மாடத்தில் படுத்திருந்தபோது உதய சந்திரன் கேட்டான் : "ராஜன், உன்னோடு மனம் விட்டுப் பேச இப்போது தான் சந்தர்ப்பமே கிடைத்திருக்கிறது. நீ எப்படி அந்த மிலேச்சர்களிடம் அகப்பட்டுக் கொண்டாய்? உன்னுடைய பூர்வீகம் என்ன?"

ஸ்ரீராஜன் நம்பூதிரி எழுந்து உட்கார்ந்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். "நீ மட்டும் இல்லையென்றால், நான் அந்த வெறி பிடித்த மிலேச்சர்களிடம் என்ன பாடுபட்டிருப் பேனோ" என்று கூறியபோது, அவனுடைய உடல் பயத்தி னால் நடுங்கியது. தொடர்ந்து சொன்னான் : "சேர நாட்டுக் கடற்கரையை ஒட்டிய சிறு கிராமம் என்னுடைய ஊர். பிராமணக் குலத்தைச் சார்ந்தவன். நான்கு வேதங்களையும், ஆகமங்களையும் கற்றேன். புராணங்கள் பலவற்றை

ஆராய்ந்தேன். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் முழுவதும் எனக்கு மனப்பாடம் உண்டு. என்ன படித்து ஞானம் பெற்று என்ன செய்ய. கடைசியில் நாகரிகமற்ற, வெறிபிடித்த மூடர்களின் பிடியில் சிக்கிச் சீரழிந்தேன். என் ஆசாரம் சிதைந்து விட்டது. நானும் இப்போது அந்த மிலேச்சர்களைப் போல் ஒருவன் நண்பனே..."

ராஜன் நம்பூதிரி திடீரென்று அழுததைக் கண்டதும் பதறி எழுந்த உதயசந்திரன், அவனுடைய தோளை அணைத்துக் கொண்டான். "எல்லா ஆபத்துக்களையும் கடந்து வந்தாகி விட்டது. இவ்வளவு கல்விமானான நீ, இப்படிக் கண் கலங்கலாமா?" என்றான்.

"எந்தத் துயரத்தையும் ஒருவன் தாங்கிக்கொள்ளலாம், அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியுமா? என் பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள். பிராமணக்குடிகையின் ஆதரவில் தான் வளர்ந்தேன். கல்வி கற்றேன். நான் அநாதை தான். எனக்கு ஏற்பட்டுவிட்ட அவமானத்தை இனி எப்படித் துடைக்க முடியும்?" என்று கூறிப் பொறுமினான், ராஜன் நம்பூதிரி.

உதயசந்திரன் பரிவுடன் அவனுடைய தோளை வருடினான், "உனக்கு என்ன அவமானம்—நேர்ந்துவிட்டது? உன்னுடைய துயரத்தை என்னால் போக்க முடியுமானால்...."

"இது யாராலும் தீர்த்து வைக்கக்கூடியதல்ல. நானே பொறுமிப் பொறுமி என்னைச் சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்" என்று கூறிவிட்டுச் சற்று நேரம் மௌனமாக நிலையைப் பார்த்துக் கொண்டிருந்தான், ராஜன் நம்பூதிரி. பிறகு சொன்னான், "வடமேல் திசையில் பாலைவனப் பிரதேசத்தில் ஏதோ ஒரு மதம் தோன்றிப் பரவி வருகிறதாம்.

அந்த மதத்தை மற்ற நாடுகளில் போரிட்டும் பலாத்கார மாகவும் பரப்புகிறார்களாம். தோல்வியடைந்த நாட்டு மக்களைக் கத்திமுனையில் பயமுறுத்தி மதம் மாற்றுகிறார் களாம். அவர்களுடைய போரைப் புனிதப்போர் என்று கூறிக்கொள்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கைகளைப் பரப்புவதற்காக, கடவுளின் பெயரால் நடைபெறும் போராட்டமாம். அந்தப் போரில் மரணமடைந்தால் சொர்க்க லோகம் கிடைக்குமாம். அப்படி நம்பிக்கொண்டிருக் கிறார்கள்."

"இவ்வளவும் உனக்கு யார் சொன்னார்கள்?"

"கொள்ளைக் கூட்டத்தார் பேசிக்கொண்டதிலிருந்து தெரிந்துகொண்டதுதான்."

"நீ எப்படி அவர்களிடம் அகப்பட்டாய்?"

"ஒரு நாள் மாலையில் நானும் என் நண்பனும் கடற் கரை ஓரமாக நடந்து கொண்டிருந்தபோது ஓர் இடத்தில் மூன்று மிலேச்சர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். கண்ணிய மான சில மிலேச்ச வணிகர்களோடு நான் பேசிப் பழகியிருந் ததால் எனக்கு அவர்களுடைய மொழி கொஞ்சம் தெரியும். அவர்களைக் கண்டதும் நான் மிலேச்ச மொழியில் அவர் களைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினேன். அவர்களும் முதலில் நல்ல முறையில்தான் பேசினார்கள். அவர்களில் ஒருவன், அவர்களோடு கப்பலுக்கு வந்தால் அவர்களு டைய நாட்டில் உள்ள பேரீச்சம்பழம் தருவதாக அழைத் தான். பழத்துக்குத் தீட்டில்லை என்பதால் நானும் என் நண்பனும் அவர்களைத் தொடர்ந்து கப்பலுக்குச் சென் றோம். வசமாகமாட்டிக்கொண்டோம். எங்கள் தலைகளை மொட்டையடித்தார்கள். ஆண்குறியின் நுனித்தோலை வெட்டினார்கள், பாலைவனப் புது மதத்தின் ஆசாரப்படி போலும்." அவனை எப்படி சமாதானப்படுத்துவது என்று

புரியாமல் மௌனமாக இருந்தான், உதயசந்திரன். பிறகு கேட்டான்: "அது என்ன மதம்?"

"அந்த மதத்தின் பெயர் என்னவென்றுகூடத் தெரியவில்லை. அந்த மதத்தவர்கள் இப்போது வடக்கே சிந்து நதிக்கரையை அடுத்த நாட்டின் மீது படையெடுத்துப் பிடித்து விட்டார்களாம். முகம்மது காசிம் என்ற மிலேச்சனின் தலைமையில் படையெடுத்து வந்தார்களாம். தாஹிர் என்ற சிந்து நதிக்கரை மன்னன் தீவிரமாக எதிர்த்தானாம். பாலைவனத்து வெறியர்களை சிந்து நதியைத் தாண்டி வரவிடாமல் தடுத்து நிறுத்தியிருந்தானாம். ஆனால், அந்த மன்னனுக்கு எதிராகச் சில துரோகிகள் மிலேச்சர்களுக்கு உதவினார்கள். அதனால் மிலேச்சர்கள், சிந்து நதியைக் கடந்து விட்டார்களாம். மன்னன் தாஹிர், போர்க்களத்தில் மாண்டுபோனானாம். அவனுடைய ராணியும் தீரத்துடன் போரிட்டு மடிந்தாளாம். மிலேச்சர்களின் மதம் அந்தப் பகுதியில் பலாத்காரமாகப் புகுத்தப்பட்டு விட்டதாம்."

"பிறந்த மண்ணுக்கே துரோகமா? அதுவும் அந்நிய நாட்டானுக்கு உதவியாகவா? சீச்சீ, கேட்கவே மனம் கொதிக்கிறதே" என்றான் உதயசந்திரன்.

"துரோகம் செய்தவர்கள் யாரென்று தெரிந்தால் உன் மனம் இன்னும் கொதிக்கும், உதயசந்திரா."

"யார் அந்த ஈனர்கள்?"—வெறுப்புடன் கேட்டான், உதயசந்திரன். அவனுடைய காதருகேகுனிந்து இரகசியமாக "பௌத்த பிக்ஷுக்கள்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"ஆ...!" என்று தாளாத வியப்புடன் கூவினான் உதயசந்திரன். "சீ, இதை நம்பமாட்டேன்" என்றான்.

"கொள்ளைக் கூட்டத்தாரின் பேச்சிலிருந்து அறிந்த செய்தி இது. இந்தக் கொள்ளையர்களின் கப்பல் முகம்மது

காசிமுக்கு உதவியாகத்தான் வந்ததாம். சிந்து நதிப்பகுதியில் வெற்றி கிட்டியதும், காசிமின் அனுமதி பெற்று கொள்ளை யடிக்க இந்தப்பக்கமாக வந்தார்களாம்."

"என்னால் நம்ப முடியவில்லையே. பிக்ஷுக்கள் கூடவா இப்படி நடந்துகொண்டார்கள்?" என்று முனகினான், உதயசந்திரன். அவனுடையநினைவில் பிக்ஷு சாந்திதேவர் தோன்றினார். "கடவுளே, இப்படியும் நடக்குமா?" என்று அரற்றினான்.

"காவி உடை அணிந்தவர்கள் எல்லாரும் மகான்கள் என்று எண்ணுகிறாயா?" என்றான், ராஜன் நம்பூதிரி. "காவி உடைக்குள்ளும் கயமைத்தனம் இருக்கும்," என்றான்.

உதயசந்திரன் பெருமூச்சு விட்டான். வெறுப்பினால் முகம் சுருங்கியது. அந்த நினைவை அகற்ற எண்ணிய வனாய், "சரி, உன்னைப்பற்றிச் சொல். உன் நண்பனும் உன்னோடு வந்தான் என்றாயே; இப்போது அவன் எங்கே?" என்று கேட்டான்.

ராஜன் நம்பூதிரியின் கண்கள் கலங்கின. குரல் தழு தழுத்தது. "அவன் மடிந்து விட்டான். அந்த மிலேச்சர்கள் அவனைக் கொடுமைப்படுத்திக் கொன்று விட்டார்கள்" என்று கூறிக் கண்ணீர் சிந்தினான்.

"உன் நண்பன் அவர்களை எதிர்த்தானா?"

"அது ஒரு வெட்கக்கேடான சம்பவம். நினைத்துக் கூடப் பார்க்க இயலவில்லை. ஓ.... எவ்வளவு ஈனத்தனமான காட்டுமிராண்டிகள் அந்த மிலேச்சர்கள். அழகான ஆண்களையும் பெண்களாகப் பாவித்துத் தங்கள் காமத்தைத் தணித்துக் கொள்கிறார்கள்! என் நண்பன் நல்ல அழகன். என்னையும் அவனையும் சிறைப்படுத்தியதே அந்த ஈனச் செயலுக்காகத் தான் என்று நினைக்கிறேன்.

அவர்களுடைய காமவெறிக்கு அவன் பலியாகிவிட்டான். அத்தனை பேரும் அவனைப் பயன்படுத்த முனைந்தார்கள். ஐயோ, அவன் வேதனையால் துடித்த கதறல் இன்னும் என் காதில் ஒலிக்கிறதே...."—ராஜன் நம்பூதிரி குலுங்கிக் குலுங்கி அழுதான்.

உதயசந்திரன் அவனை ஆதரவாக அணைத்துக் கொண்டான். "மிருகங்கள்" என்று கோபத்தினால் பற்களைக் கடித்தான்.

அழுகை சற்று நின்றதும் ராஜன் நம்பூதிரி சொன்னான். "நானும் அவனைப்போல் சாகவேண்டியவன்தான். நேற்று வரை நான் ஜுரத்தினால் வருந்தினேன். என் உடல்மட்டும் ஆரோக்கியமாயிருந்திருந்தால், அந்தக் கயவர்கள் என் உடலையும் பயன்படுத்திவிட்டுக் கடலில் தூக்கி எறிந்திருப்பார்கள்!"—ராஜன் நம்பூதிரியின் உடல் சிலிர்த்தது.

சற்று நேரம் இருவரும் பேசாமல் நிலைவை வெறித்தபடி இருந்தார்கள். ராஜன் நம்பூதிரியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. திடீரென்று உதயசந்திரனின் கால்களைப் பற்றியவாறு, "நானும் அப்படி ஓர் இழிந்த அவமானத்துக்குள்ளாகிக் கடலில் எறியப்படுவதற்குள் நீதான் தெய்வம்போல் வந்து காப்பாற்றினாய்" என்றான்.

உதயசந்திரன் பதறிப்போய் கால்களை இழுத்துக் கொண்டு, ராஜன் நம்பூதிரியின் தோள்களை அணைத்தவாறு, "ராஜன், அதையெல்லாம் ஒரு கனவுமாதிரி எண்ணி மறந்துவிடு. அதற்குப்பரிவாங்குவதுபோல் கொள்ளையர்களின் கப்பலுக்குத் தீ வைத்துக் கொளுத்தினார்களே தேவசோமாவும், அவனுடைய கூட்டாளிகளும்" என்று ஆறுதல் சொன்னான்.

"அந்தக் கப்பல் எரிந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கடலுக்குள் மூழ்கியதைப் பார்த்துத்தான் என் மனம் சற்று சாந்தியடைந்தது. கப்பலில் நடைபெற்ற சண்டையில் தோற்றிருந்தால் உங்கள் எல்லாரையும் மொட்டையடித்து ஆண் குறியையும் வெட்டி மதம் மாற்றியிருப்பார்கள். கடவுள்தான் காப்பாற்றினார்" என்றான் ராஜன் நம்பூதிரி.

நிலவு உச்சியைத் தாண்டி மேல் திசையில் சற்று சரியும் வரை பேசிக் கொண்டிருந்தனர். இருவரும் காஞ்சிக்குச் செல்வதென்றும், ராஜன் நம்பூதிரி, காஞ்சியில் உள்ள வடமொழிக் கடிகையில் சேர்வதென்றும், உதயசந்திரன் காஞ்சி பௌத்த கடிகையில் பணிபுரிவதென்றும் முடிவு செய்தனர்.

அப்போது ராஜன் நம்பூதிரி, உதயசந்திரனிடம், "உன்னுடைய லட்சியந்தான் என்ன? எதை உத்தேசித்துப் பல்லவ நாட்டிற்கு வந்தாய்?" என்று கேட்டான்.

"நானும் உன்னைப்போல் அநாதைதான். என் பாட்டனார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டாராம். என்னை இங்கு எதிர்பார்த்து யாரும் காத்திருக்கவில்லை. உறவினர் சிலர் உண்டு. அவர்களைப் போய்க் காண எனக்கு விருப்பம் இல்லை. தாய் நாட்டிற்குப் போய்விட வேண்டும் என்னும் தவிப்பால் இங்கே திரும்பி வந்து விட்டேன். காஞ்சியில் பௌத்த கடிகையில் இருந்து கொண்டுதான் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். உனக்கு நீ கற்ற வேதங்களும், ஆகமங்களும் பயன்படும். என்னைப் பொறுத்தவரை தாய்நாடு என்னைக் கைவிடாது என்னும் நம்பிக்கை மட்டும் இருக்கிறது. சரி, இந்த நம்பிக்கையிலேயே தூங்குவோம். வெகு நேரமாகி விட்டது" என்றான் உதயசந்திரன்.

5. காஞ்சிப் பயணம்

கிட்டத்தட்ட ஆயிரத்து இருநூற்று எழுபது ஆண்டு களுக்கு முன்பு *இக்கதையில் வரும் சம்பவங்கள் நடை பெற்ற காலத்தில், பல்லவ சாம்ராஜ்யம் மிக உன்னத நிலை யில் இருந்தது. மகாபலிபுரத்தில் கற்பாறைகளில் இரதங் களை அமைத்த நரசிம்ம வர்மன் என்ற பல்லவ அரசன் காலத்திலிருந்து, காஞ்சியில் கைலாசநாதர் கோயிலைக் கட்டிய இராச சிம்ம பல்லவன் காலம் வரை கொஞ்சம் கொஞ்சமாகப் பலம் பெற்று, ஒரு மாபெரும் சாம்ராஜ்யமாக வளர்ந்திருந்தது, பல்லவப் பேரரசு.

பல்லவ நாட்டின் தலைநகரமான காஞ்சிபுரம், உலகப் புகழ் பெற்றிருந்தது. சகல கலைகளுக்கும் அந்நகரம் இருப்பிடமாயிருந்தது. பலநாடுகளிலிருந்து பலர் கல்வி கற்க அங்கு வந்து கொண்டிருந்தனர். பல கல்லூரிகள் அங்கு இயங்கி வந்தன. அந்தக் கல்லூரிகள் கடிகைகள் என்று அழைக்கப்பட்டன. காஞ்சிமாநகர், அந்தக் காலத்தில் ஓர் அறிவுப்பட்டறையாக விளங்கியது. திருநாவுக்கரசர், "கல்வி யிற் கரையிலாக் காஞ்சிமாநகர்" என்று புகழ்ந்தார்.

காஞ்சியின் மீது காதல் கொண்டு படையெடுத்த மன்னர்கள் பலர் உண்டு. சாளுக்கியர்களும், கடம்பர்களும், கங்க நாட்டவரும் காஞ்சியின் மீது காதல் கொண்டு அதைத் தங்களுக்கு உடமையாக்கிக் கொள்ள பல்லவப் படை யோடு பல முறை மோதித் தோல்வியடைந்தனர். எல்லா எதிர்ப்புகளையும் சமாளித்துக்கொண்டு பல்லவ சாம்ராஜ் யம், தலை நிமிர்ந்து நின்றது.

---

* இக்கதை 1982இல் எழுதப்பட்டது.

இக்கதையில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் நடை பெற்ற காலத்தில் பல்லவ நாட்டை இரண்டாம் பரமேஸ்வர வர்மன் என்பவர் ஆண்டு வந்தார். இவர், காஞ்சியில் கைலாசநாதர் கோயிலைக் கட்டிய இராசசிம்ம பல்லவனின் மைந்தன். அப்போது கங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்றிருந்தார்.

போர்க்களத்திற்குப் புறப்பட்டபோது, தம்முடைய இளையராணி பிரேமவர்த்தினி என்பவளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துச் சென்றார். அவருடைய முதல் ராணி மூலம் அவருக்கு சித்திர மாயன் என்று ஒரு மகன் இருந்தான். அவன்தான் பல்லவநாட்டின் இளவரசன். அப்போது அவனுக்கு இருபது வயது இருக்கும். அவன் ஒழுக்கமற்றிருந்ததால் ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்க மன்னர் விரும்பவில்லை. பட்டமகிஷியான மூத்த ராணி இறந்து விட்டதால், இளைய ராணி பிரேமவர்த் தினியிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்திருந்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் உதயசந்திரன், கப்பலில் மாமல்லபுரத்திற்கு வந்து சேர்ந்தான். அவனும் ஸ்ரீராஜன் நம்பூதிரியும் மாமல்லபுரத்து பௌத்த மடத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். காஞ்சிக்குப் புறப்படுவதற்கு முந்தின நாள் மாலையில் லீனாவைக் காண்பதற்காக உதயசந்திரன் சென்றான். டெங்லீயின் வீட்டை நெருங்கிய போது, வீட்டுத்திண்ணையில் மண்பானைகளிலிருந்த மருக்கொழுந்து செடிகளுக்கு லீனா தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

துக்கத்தை ஓரளவு மறந்திருக்கிறாள் என்பதை அறிந்து உதயசந்திரன் மன அமைதியடைந்தான். வாசலில் அவனைக் கண்டதும் லீனா பரபரப்புடன் ஓடி வந்தாள். அவளுடைய கண்களில் இன்னும் சோகம் படர்ந்திருந்தது.

"உங்களை நேற்றே எதிர்பார்த்தேன்" என்றாள்.

"காஞ்சிப் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது" என்றான் உதயசந்திரன்.

"நானும் காஞ்சி நகருக்கு வரவேண்டியிருக்கும்."

"நீயும் வருகிறாயா?" என்று மிக்க ஆவலுடன் கேட்டான்.

"ஆமாம். தாத்தாவிற்கு வாணிபம் நிமித்தமாகச் சில மாதங்கள் காஞ்சியில் தங்க வேண்டியிருக்கிறதாம். குடும்பத்துடன் போகப்போகிறார். காஞ்சியில் தாத்தாவிற்கு ஒரு பெரிய தோட்டமும் வீடும் இருக்கின்றன."

"எப்போது புறப்படப் போகிறீர்கள்?"

"இன்னும் முடிவாகவில்லை. காஞ்சியில் வீரப்போட்டி நடைபெறப் போகிறதாமே. அதையொட்டிப் புறப்படலாம்" என்றாள், லீனா. பிறகு, "காஞ்சியில் நீங்கள் எங்கே இருப்பீர்கள்?" என்று கேட்டாள்.

"புத்தர் தெருவில் பௌத்த கடிகை ஒன்றிருக்கிறது. அங்கே நான் தங்குவேன்."

"கடிகையிலா? இன்னும் கல்வி கற்கப் போகிறீர்களா?"

"அங்கே என் குருவிற்குத் தெரிந்த பிக்ஷு இருக்கிறார். ஆகையால் அவருடன் தங்கி கடிகையில் பணிபுரியலாம் என்று நினைக்கிறேன். எனக்கும் உணவிற்கு வழி வேண்டுமே?"

இதைக் கேட்டு அவனை மிகுந்த ஆதங்கத்துடன் பார்த்தாள், லீனா. "உணவிற்குத்தானா வழி கிடையாது...."

என்று கூறியவள் மேற்கொண்டு சொல்ல நினைத்ததைச் சொல்லாமல் நிறுத்தினாள்.

"ஏதோ சொல்ல நினைக்கிறாயே. சும்மா சொல்" என்று தூண்டினான் உதயசந்திரன்.

"நீங்களும் எங்களோடு தங்கி விடலாமே. இங்கே செல்வத்திற்குக் குறைவில்லை" என்றாள் லீனா.

"முன் பின் தெரியாத இடத்திலா? டெங்லீயை எனக்குப் பழக்கமில்லை."

"நானில்லையா?" என்று கேட்டுவிட்டுத் தரையை நோக்கினாள்.

அந்த உரிமைச் சொல்லில் உதயசந்திரன் நெகிழ்ந்து போனான். "நீ இருப்பதோ இன்னொருவர் வீட்டில்" என்றான்.

"என்னிடம் நிறையச் செல்வம் இருக்கிறது. என் தந்தை கொண்டு வந்த தங்கங்கள் அனைத்தும் என்னுடையவைதானே. நீங்கள் உங்கள் தேவைக்கு அவைகளை எடுத்துக்கொள்ளுங்கள்."

"எனக்கு அதெல்லாம் தேவை இல்லை."

"நீங்கள் எனக்கு செய்திருக்கும் உதவிக்கு நான் ஏதாவது கைமாறு செய்ய வேண்டாமா?" என்று லீனா கேட்டதும் உதயசந்திரனின் முகம் வாடிவிட்டது. அதைக் கண்ட லீனா துணுக்குற்றாள்.

"உன்னுடைய செல்வத்தை எதிர்பார்த்தா உதவி செய்தேன்? என்னுடைய செயலுக்கு நீ விலை போடுவதாயிருந்தால் நான் உன்னைப் பார்க்கவே வந்திருக்கமாட்டேன்."

உதயசந்திரனின் பேச்சில் வருத்தமும் கோபமும் தொனித்தன. லீனா, பதறிப் போனாள்.

"நான் தவறாக ஏதும் கூறிவிட்டேனா?" என்று பயத்துடன் கேட்டாள். அவளுடைய கண்களில் தென்பட்ட சோகம் கலந்த பயத்தைக் கண்டு உதயசந்திரன் இரக்கம் கொண்டான்–

மனத்தில் களங்கம் இல்லாமல் ஒரு குழந்தையைப் போல் பேசியவளிடம் கோபம் கொண்டேனே. அவளுக்குச் செய்திருக்கும் உதவியை எண்ணி அவள் மருகுகிறாள். பதிலுக்கு ஏதாவது கைமாறு செய்யவேண்டும் என்று நினைக்கிறாள். உணவிற்கு வழிதேட வேண்டிய வனிடம் தன் செல்வங்களைத் தருவதாக அவள் கூறியதில் தான் என்ன தவறு...?

அவளைக் கனிவோடு பார்த்தவாறு சொன்னான்.

"லீனா! பதிலுக்கு நீ ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை."

"மன்னியுங்கள். இனி நான் அதுபற்றிப் பேசமாட்டேன். உள்ளே வாருங்கள். தாத்தா இருக்கிறார்" என்று அழைத்தாள்.

அன்று டெங்லீயின் வீட்டிலிருந்து விடைபெற்றுக் கிளம்பிய போது உதயசந்திரன் உற்சாகமாயிருந்தான். லீனாவும் சில நாட்களில் காஞ்சிக்கு வந்துவிடுவாள் என்ற செய்தி அவனை உற்சாகப்படுத்தி இருந்தது.

சீனச் சேரியிலிருந்து வட திசையில் திரும்பி, பார்ப்பனர்கள் வசித்த அக்கிரகாரத்திற்குப் பக்கத்தில் வந்தபோது சில பார்ப்பனச் சிறுவர்கள் தூரத்தில் சென்று கொண்டிருந்த ஒரு சமணத்துறவியின் மீது கற்களை வீசியதைக் கண்டான்.

"தம்பி, துறவிகளைத் துன்புறுத்தலாமா?" என்றான்.

"அதோ போகிறாரே அவர் சமண முண்டராக்கும்" என்றான், ஒரு சிறுவன்.

"யாராயிருந்தாலும் துன்புறுத்தக் கூடாது" என்றான், உதயசந்திரன்.

"கொலையே செய்யலாம்" என்றான் இன்னொரு சிறுவன், உரத்த குரலில்.

உதயசந்திரன் திகைப்புற்றான். "கொலை செய்தால் என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?" என்று மிரட்டினான்.

"ஒரு தண்டனையும் கிடைக்காது. பல்லவ நாட்டில் சமணர்களுக்கு என்ன வேலை? இவர்களைத் துரத்தினால் அரசு ஒன்றும் செய்யாது" என்றான் ஒரு சிறுவன்.

அந்தச் சிறுவரிடம் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்த உதயசந்திரன் அவ்விடம் விட்டகன்றான். கப்பலில் தேவ சோமா, பௌத்தர்களுக்கும் தமிழகத்தில் எதிர்ப்பு இருக்கிறது என்று சொன்னது நினைவில் வந்தது.

மறுநாள் அதிகாலையில் உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் காஞ்சிக்குப் பயணமானார்கள். உதயசந்திரனுக்கு குதிரை ஏறத் தெரியும். ஒரு நல்ல குதிரை கிடைத்தால் அதில் ராஜன் நம்பூதிரியையும் ஏற்றிக்கொண்டு செல்லலாம் என்ற எண்ணத்தில் குதிரைக்காக அலைந்தபோது, மாமல்லபுரத்து துறைமுகத்திலிருந்து காஞ்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த ஒரு பாரவண்டியில் இருவருக்கும் இடம் கிடைத்தது.

வண்டிக்காரன் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான். "என்ன வண்டிக்

காரரே, வெகு நேரமாக முணுமுணுக்கிறீரே? என்ன விஷயம்? உமக்கு ஏதாவது சங்கடமா?" என்று உதய சந்திரன் கேட்டான்.

"மகாராசா எப்போது போர்க்களம் போனாரோ அப்போதே சங்கடம் தோன்றிவிட்டதே" என்றான், வண்டிக்காரன்.

"இப்போதுதான் மகாராணி ஆள்கிறாளே."

"மகாராணி.... பெரிய மகாராணி...." என்று வண்டிக் காரன் கோபத்துடன் கைகளை விரித்துக் காட்டினான்.

"உமக்கு என்ன சங்கடம்?"

"ராணி ஆளத் தொடங்கிய பிறகு இந்த நாட்டில் கெடுபிடிதான் அதிகமாயிருக்கிறது. ஒரு நாளைக்கு ஒரு சட்டம். அதிகாரிகளின் உபத்திரவம் தாங்கமுடியவில்லை. எந்தக் காரியத்திற்கும் கையூட்டாகக் காசு கொடுக்க வேண்டியிருக்கிறது. பேசினால் கூடச் சிறையில் தள்ளி விடுவார்கள் போலிருக்கிறது."

"உமக்கு என்ன கஷ்டம்? உம்முடைய பாடு கழிகிற தல்லவா?"

"ராணி ஆட்சிக்கு வரப்போய் எல்லாவற்றிற்கும் வரி உயர்ந்துவிட்டது. விலைவாசி உயர்ந்துவிட்டது. மருந்துச் செடிகளுக்குக்கூட வரி போடுகிறார்கள். அதனால் வைத்தியம் பார்க்க எங்கள் ஊர் வைத்தியர் காசு கேட்கிறார். வைத்தியத்திற்குக் காசு பெறுவது மகாபாவம். அந்த பாவத் திற்கு வைத்தியர்களை ஆளாக்கிவிட்டாள், மகாராணி. இந்தப் பாவம் அவளைச் சும்மாவிடாது."

"போர்க் காலத்தில் பணம் தேவைப்படும். வரி போட்டுத்தானே பணம் சேர்க்க முடியும்."

"போருக்கு யார் போகச் சொன்னார்கள்? திமிர் பிடித்துப் போய் போர் செய்தால் அதற்கு மக்களா பழி? என்னத்துக்கய்யா போர் செய்ய வேண்டும்? ஆள்கிறவர் கள் மடத்தனமாக வெறிபிடித்துப் போர் செய்கிறார்கள்; மக்கள் அவதிப்படுகிறார்கள். போர் வெறி கொண்டவர் களை நடுச் சந்தியில் கழுவேற்ற வேண்டும்" என்று வண்டிக்காரன் கோபத்துடன் பேசினான். உடனே பதறிப் போய் வாயைப் பொத்திக்கொண்டு, பாதையில் யாராவது வருகிறார்களா என்று பார்த்தான்.

"ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். எதையாவது பேசினால் சிறையில் தள்ளி விடுவார்கள்" என்று முணு முணுத்தான்.

அவ்வளவு தூரம் பயந்து நடுங்கும்படியாகச் சுதந் திரம் பாதிக்கப்பட்டிருந்ததை அறிந்து உதயசந்திரன் வியப் படைந்தான்.

"காஞ்சியில் கெடுபிடி அதிகமாயிருக்கும் போலிருக் கிறது" என்றான்.

"இவர் கூறுவதைப் பார்த்தால் அப்படித்தான் தெரி கிறது" என்றான், ராஜன் நம்பூதிரி.

"வண்டிக்காரரே, குறைகளை மகாராணியிடம் போய் மக்கள் முறையிடுவதுதானே?" என்றான் உதயசந்திரன்.

"மகாராசா இருந்தபோது ஒவ்வொரு பௌர்ணமி யிலும் ராச சபையில் மக்களுடைய குறைகளை நேரடியா கவே விசாரித்து வந்தார். இப்போது ராணியம்மாவை யாரும் பார்க்க முடியாது. பெரிய மந்திரி தரணிகொண்ட போசரிடம் முறையிட நாலைந்து நாட்களுக்கு முன்பு ஊர் மன்றத்திலிருந்து ஆளும்கணத்தார் போனாராம். என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. பெண் பிள்ளை நாட்டை

ஆண்டால் உருப்படுமா ? எந்தெந்த வேலைக்கு யார் யார் தான் தகுதி என்பதில்லையா" என்றான், வண்டிக்காரன்.

உதயசந்திரன் சிரித்தான். "வீட்டைப் பெண் பிள்ளை தானே ஆள்கிறாள்" என்றான்.

"வீட்டுக்குத்தான் அவர்கள் ராணியாக இருக்க முடியும். கடவுள் பெண்களைப் படைத்ததே பிள்ளை களைப் பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்க்கவும், குடும்பத் தைப் பேணவும்தாம். பெண்கள், வீட்டுக்குத் தான் ராணி கள். நாட்டை ஆள வந்தால் குழப்பந்தான்" என்றான் வண்டிக்காரன்.

உதயசந்திரன் வண்டிக்காரனிடம் திரும்பி, "இளவரசன் ஒருவன் உண்டே. அவனுக்கு முடி சூடியிருக்கலாமே" என்றான்.

"நல்ல வேளையாக மகாராசா இளவரசனை சிம்மா சனத்தில் ஏற்றவில்லை. அவன் ஆள வந்துவிட்டால், பல்லவ நாட்டுப் பெண் ஒருத்தி கூடக் கற்புடனிருக்க முடியாது. அவனுக்கு வாய்த்திருக்கும் பெண்டாட்டி ஒரு ராட்சசி. பார்க்க ரதி மாதிரி இருப்பாள். ஆனால் குணம் பாம்பு மாதிரி" என்றான் வண்டிக்காரன்.

"அவளால் என்ன சங்கடம் ? எந்த நாட்டு ராஜகுமாரி ?" என்று கேட்டான், ராஜன் நம்பூதிரி.

"நாடாவது மண்ணாவது. நல்ல இனத்தைச் சேர்ந்தவளாயிருந்தால் பண்பாடு இருக்குமே. இது எந்தச் சாக்கடையில் ஊறிய மட்டையோ ?"

"இனம் தெரியாதவளா ?"

"நாட்டியக்காரி. பூர்வீகம் தெரியவில்லை. தான் தான் ராணி என்ற நினைப்பு. அவளே உத்தரவிடுவதும் உண்டு.

இளவரசன் அவளுக்குத் தலையாட்டுவான். இங்கே ஆட்சியா நடக்கிறது? தூ....த்தூ" என்று காரித் துப்பினான், வண்டிக்காரன். கோபத்தில் மாடுகளைச் சாட்டையால் அடித்தான். வண்டி விரைந்தது.

வண்டி ஒரு கல் தூரம் போயிருக்கும். வழியில் இரண்டு பிக்ஷுக்கள் நின்று கொண்டிருந்தனர். வண்டிக் காரன் மாடுகளை முடுக்கி விரட்டினான். "புத்த துறவிகள் என்று தான் ஒழிவார்களோ" என்று முணுமுணுத்தான்.

உதயசந்திரன் சிரித்தான். "பிக்ஷுக்கள் வண்டியில் ஏறி விடுவார்களோ என்று பயந்து வண்டியை விரட்டு கிறீரோ?" என்றான்.

"ஆமாம்; அவர்களைப் பார்த்தால் காஞ்சிக்குப் போகிற வர்களாகத்தான் தோன்றுகிறது. நான் சம்மதித்தாலும் என் மாடுகள் சம்மதிக்காது."

"ஏன்?"

"என் மாடுகள் சைவ மாடுகள். நந்தி சிவபெருமானின் வாகனமாயிற்றே" என்று கூறிச் சிரித்தபடியே மாடுகளை முடுக்கினான்.

பிக்ஷுக்களின் அருகே வண்டி சென்றபோது, இரு பிக்ஷுக்களும் கைகளை நீட்டி வண்டியை மறித்தார்கள். வண்டிக்காரன் முணுமுணுத்தபடியே வண்டியை நிறுத்தினான்.

"இருவருக்கு இடம் இருக்குமா?" என்று ஒரு பிக்ஷு கேட்டார்.

"ஏற்கனவே வண்டியில் இருவர் இருக்கிறார்கள். அவர் களுக்கு இடைஞ்சலாய் இருக்குமே" என்றான் வண்டிக் காரன்.

பிக்ஷுக்களில் இளைஞராயிருந்தவர் வண்டியின் பின் பக்கம் வந்து, "எங்கள் இருவருக்கும் இடமளிக்க முடியுமா? காஞ்சி வரை போகிறோம்" என்று கேட்டார்.

உதயசந்திரன் உடனே சமாளித்துக் கொண்டு, "வாருங்கள். சமாளித்துக் கொள்ளலாம்" என்றான். வண்டிக்காரன் முணுமுணுத்ததைக் கேட்டு, சிரித்துக் கொண்டான்.

பிக்ஷுக்கள் வண்டிக்குள் ஏறி அமர்ந்ததும் வண்டிக்காரன் மாடுகளை ஓங்கி அடித்து முடுக்கினான். பிக்ஷுக்களின் மொட்டைத் தலைகளில் ஓங்கி அடிப்பதாக அவனுடைய கற்பனை. ராஜன் நம்பூதிரிக்கு சிரிப்பு வந்தது. சற்று தூரம் சென்றதும் பிக்ஷுக்களைச் சீண்டுவதற்காக வண்டிக்காரன் பேசத் தொடங்கினான்.

"சாமிகளுக்கு விவரம் தெரியுமா? நாகப்பட்டினத்து மடத்தில் ஏதோ விசேஷமாமே?" என்றான்.

பிக்ஷுக்கள் விவரம் புரியாமல் வண்டிக்காரனைப் பார்த்தார்கள். வண்டிக்காரன் குறும்பாகச் சிரித்தான். "சாமிகளுக்கு இன்னும் செய்தி எட்டவில்லையா? நாகப்பட்டினத்திலிருந்து கப்பல் வந்ததே, விசாரிக்கவில்லையா?" என்றான்.

"நாகப்பட்டினத்து மகாவிஹாரத்திலிருந்து செய்தியா?" என்று வயோதிகப் பிக்ஷு ஆவலுடன் கேட்டார்.

"ஆமாம். நீங்கள் நாகப்பட்டினத்து மடத்திலிருந்துதான் இங்கு ஓடி வந்திருக்கிறீர்கள் என்று நினைத்தேன். அப்படியானால் உங்களுக்கு விவரமே தெரியாதா?"

பிக்ஷுக்கள் பதறியபடி வண்டிக்காரனைப் பார்த்தனர். அவனோ பரபரப்பின்றி வெற்றிலையைச் சுவைத்தபடி அலட்சியமாக மாடுகளைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"நீ என்ன சொல்கிறாய்? விவரமாகச் சொல்லேன்" என்றார் இளம் பிக்ஷு, பொறுமை இழந்தவராய்.

"நாகப்பட்டினத்து பௌத்தமடத்தைக் கொள்ளை யடித்து விட்டார்கள்....ஹை....ஹை...." என்று மாடுகளை விரட்டினான்.

"ஆ...!" என்று இரண்டு பிக்ஷுக்களும் கூவினார்கள்.

உதயசந்திரன் பதற்றமடைந்தவனாய், "சூறையாடி விட்டார்களா? பௌத்த விஹாரத்தையா?" என்று கேட்டான்.

"ஆமாம். அங்கே பொன்னால் ஆன பெரிய புத்தர் சிலை இருந்ததாமே; அதையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்களாம்" என்றான் வண்டிக்காரன்.

"ஐயோ, சிலையும் கொள்ளை போய்விட்டதா?"– பிக்ஷுக்கள் பதறினார்கள்.

"ஆனால் பிக்ஷுக்களை யாரும் கொலை செய்ய வில்லை" என்று கூறிச் சிரித்தான் வண்டிக்காரன். அவனு டைய சிரிப்பில் கேலியும் குறும்பும் கலந்திருந்தன. பிக்ஷுக் கள், முகம் வாடித் தலையைக் குனிந்தவண்ணம் பிரார்த் தனையில் இருந்தனர்.

"யார் திருடர்களா?" என்று ராஜன் நம்பூதிரி கேட்டான்.

"யாரோ ஆலி நாட்டு ராசாவாம்."*

"ஆலி நாடு ஒரு சிற்றரசு. சோழ நாட்டிலிருக்கிறது" என்றான் உதயசந்திரன். "ஒரு குறுநில மன்னனா கொள்ளை யடித்தான்?" என்று வியந்தான்.

---

* இவர்தாம் திருமங்கையாழ்வார் என்று பிற்காலத்தில் அழைக்கப் படுகிறார்.

"அந்த ராசா தீவிரமான வைணவராம். வைணவக் கோயில்களைப் புதுப்பிப்பதற்குப் பணம் தேவையாம். அதற்காக அந்த மடத்தைக் கொள்ளையடித்தாராம். சிலையிலிருக்கிற தங்கத்தைக் கொண்டு பத்துக் கோயில்களைக் கட்டலாம்!" என்றான் வண்டிக்காரன்; திரும்பிப் பிக்ஷுக்களைப் பார்த்துச் சிரித்தான்.

பிக்ஷுக்களைப் பார்த்து உதயசந்திரனும், நம்பூதிரியும் பரிதாபப்பட்டனர். வண்டிக்காரனின் கேலிச் சிரிப்பு மனவேதனையைக் கொடுத்தது. வண்டிக்குள் யாரும் பேசவில்லை. வண்டிக்காரன் உற்சாகம் மேலிட்டுப் பாடத் தொடங்கினான்.

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா...." என்று அவன் போக்கில் முழங்கினான். அவ்வேளையில் அவனுடைய பாட்டு, இழவு வீட்டில் சிரிப்பொலி கேட்பது போலிருந்தது. பாட்டை இடையில் நிறுத்திவிட்டு வண்டிக்காரன் திரும்பி வண்டிக்குள்ளே பார்த்துப் பேசினான்.

"அந்தச் சிலையில் கால்வாசி கிடைத்தாலும் காஞ்சி கைலாசநாதர் கோயிலை இன்னும் பெரிதாகக் கட்டி விடலாம். இருந்திருந்து அவ்வளவு தங்கமும் ஒரு வைணவனிடம் போய்ச் சிக்கி விட்டதே" என்று ஆற்றாமை கொண்டான்.

"மதச் சண்டைகளுக்கு முடிவே கிடையாது போலிருக்கிறது" என்றான் உதயசந்திரன்.

மாலையில், இருட்டுகிற நேரத்தில் வழியில் வல்லம் என்ற கிராமத்திலிருந்த சத்திரத்தின் வாசலில் வண்டி நின்றது. தெருக்களில் மக்கள் கும்பல் கும்பலாக நின்றவாறு விவாதித்துக் கொண்டிருந்தனர். உதயசந்திரன் வண்டியிலிருந்து இறங்கி விசாரித்தான்.

அந்த ஊர் மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்க மகாராணி ஆணை பிறப்பித்திருப்பதாக ஒருவர் கூறினார். "தலைவர் ஏதாவது தவறு இழைத்து விட்டாரா?" என்று உதயசந்திரன் கேட்டான்.

"அவர் ஒரு தவறும் செய்யாமலிருந்ததுதான் காரணம்" என்று வயிற்றெரிச்சலுடன் பதில் வந்தது. பிறகு அவர் சொன்னார்: "ராணியம்மாள் தான்தோன்றித்தனமாக நடக்க ஆரம்பித்து விட்டாள். அவளிஷ்டம் போல் ஒருவரைத் தலைவராக நியமித்து இங்கே அனுப்பி வைக்கப்போவ தாகத் தகவல் வந்திருக்கிறது."

"ஊர் மக்கள்தாமே தலைவரைத் தேர்ந்தெடுப்பது வழக்கம்?"

"ஆமாம், கோயிலில் சந்நிதிக்கு எதிரே கடவுள் சாட்சி யாக ஊர்த் தலைவரைத் தேர்ந்தெடுத்தோம்."

"இப்போதுள்ள உங்கள் தலைவர் மீது ராணிக்கு என்ன கோபம்?"

"இந்த முறை மழையில்லை. காடு கழனிகளில் அரை விளைச்சல் கூட இல்லை. ஆனால் மகாராணி, என்ன காரணமாயிருந்தாலும் வரியைக் குறைக்கக் கூடாது என்று நாடு முழுவதும் கட்டளை பிறப்பித்திருக்கிறாளாம். எங்கள் ஊர்த் தலைவர் அதற்கு மாறாக, விளைந்த அளவிற்குத் தகுந்தபடி வரி வசூலித்தார். இதுதான் காரணம்."

"நியாயந்தானே? தலைவர் குற்றம் ஏதும் புரியவில் லையே."

"இந்த நியாயம் ராணியம்மாளுக்குத் தெரியவில் லையே! முழு வரியையும் முப்பது நாட்களுக்குள் செலுத்தி விட வேண்டுமாம்" என்று அங்கலாய்ப்புடன் கூறினார்.

வாசலில் வண்டி நின்றதைக் கண்டதும், சத்திரத்து முற்றத்துத் திண்ணையில் அமர்ந்திருந்த ஒரு கிழவர், எழுந்து வண்டியை நோக்கி வந்தார்.

"பெரியவரே, ஐந்து பேர் இருக்கிறோம். இன்று இரவு மட்டும் தங்க வேண்டும்" என்றான் வண்டிக்காரன்.

கிழவர் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார். "தங்கலாம்... ஆனால்..." என்று தயங்கினார்.

"காசு கொடுத்து விடுகிறோம்" என்றான் உதயசந்திரன்.

"அதற்கில்லை. காஞ்சியிலிருந்து ஒரு அதிகாரியும், இரண்டு காவல் வீரர்களும் வந்திருக்கிறார்கள்." சத்திரத்து கிழவர் சொன்னார்.

"அதனால் என்ன?"

"அவர்களுக்கு உள்ளே அறைகள் கொடுத்திருக்கிறேன்; மற்றவர்கள் தங்குவதை ஆட்சேபிப்பார்களோ என்று தான்...."

"சத்திரம் முழுவதிலுமா தங்கப் போகிறார்கள்? நாங்கள் வெளியே உள்ள அறைகளில் தங்கிவிட்டுக் காலையில் போய்விடுகிறோம்" என்றான் வண்டிக்காரன்.

"சரி, அவர்கள் நதிக்கரைக்குப் போயிருக்கிறார்கள். நீங்கள் எல்லாரும் இந்த முன் பக்கத்து அறைகளில் தங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுக் கிழவர், பயணிகளுக்கு உணவு தயாரிக்க அடுக்களைப் பக்கம் சென்றார்.

"ஊர் மன்றத் தலைவரை நீக்கிய கட்டளையை அறிவிக்க வந்த அதிகாரிதாம் இங்கே தங்கியிருக்கிறார் போலிருக்கிறது" என்றான் ராஜன் நம்பூதிரி.

"யாராக இருந்தால் நமக்கென்ன," என்று உதயசந்திரன்

முனகியவாறே அறைக்குள் சென்று பயணச் சுமையைக் கீழே இறக்கினான். அறைக்குள் புழுக்கமாயிருக்கவே, மண்டபம் போல் அமைந்திருந்த முன் பகுதிக்கு வந்தான்.

வாசலில் குதிரைகளின் குளம்பொலி கேட்டது. உதய சந்திரன் எட்டிப் பார்த்தான். மூன்று பேர் குதிரைகளிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தனர். சத்திரத்துக் கிழவர் குறிப்பிட்ட அதிகாரியும், காவல் வீரர்களும் அவர்களாகத்தானிருக்கும் என்று எண்ணியபடி திண்ணையில் சாய்ந்தான், உதய சந்திரன்.

6. காஞ்சியில் கிடைத்த வரவேற்பு

சத்திரத்தினுள் வந்தவன் ஓர் அதிகாரிதான் என்பது அவன் நடந்து வந்த தோரணையிலேயே தெரிந்தது. உதயசந்திரன் அவனைப் பற்றி அக்கறை ஏதுமின்றிக் கண்களை மூடியபடி திண்ணையில் சாய்ந்திருந்தான். ராஜன் நம்பூதிரியும், பிக்ஷுக்களும் சற்று தள்ளியிருந்த ஒரு கல் திண்டின் மீது அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். வண்டிக்காரன், வாசலில் மாடுகளுக்குத் தீனி போடுவதில் முனைந்திருந்தான்.

உள்ளே நுழைந்த அதிகாரி, தான் அமர்வதற்கு இடம் பார்த்தான். திண்ணையிலிருந்த உதயசந்திரனைக் கண்டதும் காவல் வீரனிடம், "அவனைக் கிளப்பு" என்றான்.

காவல் வீரன், உதயசந்திரனை நெருங்கி, அவன் தோளைப் பலமாகத் தட்டினான். "இந்தாப்பா, எழுந்திரு" என்றான்.

கண்களை விழித்த உதயசந்திரன், நிமிர்ந்து உட்கார்ந்தான். "என்ன வேண்டும்?" என்று காவல் வீரனிடம் கேட்டான்.

"வேறு எங்காவது போய் உட்கார். சீக்கிரம் எழுந்திரு."

"ஏன்?"

"அதிகாரி உட்கார வேண்டும்."

"அவரை வேறு எங்காவது போய் உட்காரச் சொல்" என்று கூறிவிட்டு மீண்டும் சாய்ந்து கொண்டான், உதயசந்திரன்.

"அவனை இழுத்து வெளியே தள்ளு" என்று இரைந்தான், அதிகாரி. அவன் வாயிலிருந்து மதுவின் நெடி வீசியது.

அதிகாரியின் இரைச்சலைக் கேட்டு ஓடிவந்தான், ராஜன் நம்பூதிரி. "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"நீ யாரடா கேட்பதற்கு, மொட்டைத் தலையா?" என்றான் அதிகாரி.

"மரியாதை தவறிப் பேச வேண்டியதில்லையே" என்றான், ராஜன் நம்பூதிரி.

"யாருக்கடா நான் மரியாதை கொடுக்க வேண்டும்? நீ என்ன ஜாதி? பிராமணனா? மூஞ்சியைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது" என்று கூறிவிட்டு உரக்கச் சிரித்தான், அதிகாரி. அவன் வாயிலிருந்து வீசிய மதுவின் நெடியைப் பொறுக்காமல் ராஜன் நம்பூதிரி, அருவருப்புடன் மூக்கைப் பொத்திக் கொண்டான்.

உதயசந்திரன் கோபத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். "இதென்ன உம்முடைய சொந்த வீடா? அரசாங்கத்தின் சத்திரத்தில் வந்து கலாட்டாவா செய்கிறீர்" என்றான்.

"நான் அரசாங்க அதிகாரி."

"அதிகாரி என்றால், அரசாங்கத்தின் கூலியாள். அவ்வளவுதானே? அதற்கு ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம்?"

"திமிராகவா பேசுகிறாய்?"

"அரசாங்கத்தில் கூலி வாங்கிப் பிழைக்கும் உமக்கே திமிர் இருக்கும்போது, யாரிடமும் கூலி வாங்கிப் பிழைக்காத எனக்குத் திமிர் இருக்காதா?"

"மரியாதையாக எழுந்து; அப்பால் போ" என்று இரைந்தான் அதிகாரி.

"காசு கொடுத்துத்தான் சத்திரத்தில் தங்குகிறோம்."

"ஏய், இந்தத் திமிர் பிடித்தவனை இழுத்துத் தெருவிலே தள்ளு" என்று காவல் வீரனைப் பார்த்து இரைந்தான் அதிகாரி.

சத்திரத்திலிருந்து எழுந்த இரைச்சலைக் கேட்டுத் தெருவில் நின்று கொண்டிருந்த சிலர், உள்ளே வந்து வேடிக்கை பார்த்தனர். கூட்டத்தில் ஒருவன், "என்ன சிக்கல்?" என்று கேட்டான்.

"இவர் அதிகாரியாம். ஆதலால், நாங்கள் இங்கே அமரக்கூடாதாம். வம்பு செய்கிறார்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"சத்திரம் எல்லாருக்கும் பொதுதானே" என்றான் கூட்டத்தில் ஒருவன்.

"அதிகாரி என்றால் கொம்பா முளைத்திருக்கிறது?" என்றான், இன்னொருவன்.

"அதிகாரியும் மனிதன்தானே?" என்று ஒரு குரல் கேட்டது.

"சோறுதானே சாப்பிடுகிறார்?" என்ற மற்றொரு குரல், இரைந்து கேட்டது.

அதிகாரியின் கண்கள் கோபத்தினால் பிதுங்கிக் கொண்டிருந்தன. "இதென்ன இங்கே கூட்டம்? எல்லாரும் வெளியே போங்கள்" என்று இரைந்தான். உடனே காவல் வீரர்கள் இருவரும் உள்ளே நுழைந்த கூட்டத்தைக் கலைக்க முனைந்தனர். ஆனால், கூட்டம், உள்ளே பெருகிக் கொண்டே இருந்தது. இதற்குள் ராஜன் நம்பூதிரி, வாசலுக்குச் சென்று தெருவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தினரிடம், "உங்கள் ஊர் மன்றத் தலைவரின் பதவி நீக்கத்தை அறிவிக்க வந்த அதிகாரி, குடித்துவிட்டு உள்ளே வம்பு செய்கிறார்" என்றான். உடனே, தெருவில் குழுமியிருந்த கூட்டமும் சத்திரத்துக்குள் புகுந்தது. காவல் வீரர்களால் சமாளிக்க முடியவில்லை. அதிகாரி, கூட்டத்தினரைப் பார்த்துக் கூச்சலிட்டான்.

"உள்ளே என்ன கூட்டம்? வெளியே போங்கள். உங்களுக்கு இதில் சம்பந்தம் ஒன்றுமில்லை. போங்கள் வெளியே."

கூட்டம் கலையவில்லை. கூட்டத்திலிருந்த ஒருவன், "மது அருந்தி வம்பு செய்யும்படியும் உத்தரவு அனுப்பியிருக்கிறாரோ, மகாராணியார்" என்றான்.

அதிகாரி கோபத்துடன் திரும்பி, அவனை முறைத்துப் பார்த்தார்.

"அடே, முறைக்கிறாரே. ராணியம்மா முறைக்கவும் உத்தரவு கொடுத்தாளோ?" என்றான் ஒருவன். அதே சமயம், கூட்டத்தின் நடுவிலிருந்து யாரோ ஒருவன் "அவன் தலையில் ஒரு போடு போடுங்களடா" என்றான்.

"அவன் திமிரை அடக்க வேண்டும்" என்று ஒரு குரல்

வீறிட்டது. திடீரென்று கூட்டத்தில் சலசலப்புத் தோன்றியது. நெரிசல் ஏற்பட்டு, கூட்டம் அதிகாரியைச் சூழ்ந்து கொண்டது. காவல் வீரர்கள் செய்வதறியாது திகைத்தனர். கூட்டத்தில் அதிகாரியின் பின்னாலிருந்த ஒருவன், அதிகாரியின் பிடறியில் தட்டினான். அதிகாரி அதிர்ச்சியடைந்த வனாய்த் திரும்பியபோது, இன்னொரு கை அதிகாரியின் வயிற்றில் குத்தியது. மறுகணம், படபடவென்று அதிகாரியின் உடல்மீது அடிகளும், குத்துக்களும் விழத்தொடங்கின. அவன் வலி பொறுக்காமல் அலறினான். கூட்டம் அவனையும், இரு காவல் வீரர்களையும் நெட்டித் தள்ளிக் கொண்டு சத்திரத்துக்கு வெளியே சென்றது. சத்திரத்து வாசலில் அதிகாரிக்குப் பலத்த அடிகள் விழத் தொடங்கின.

"ஊர்த் தலைவரை விலக்கிய கட்டளையா கொண்டு வந்தாய்? எங்களுடைய பதில் கட்டளையை வாங்கிக் கொள்; ராணியாரிடம் போய்ச் சொல்" என்று இரைந்து கொண்டே யாரோ ஒருவன் அதிகாரியின் முகத்தில் குத்தினான்.

"இந்தா வாங்கிக்கொள் நாங்கள் கொடுக்கும் வரியை" என்று கூறிக்கொண்டே ஒருவன் முதுகில் படபடவென்று அறைந்தான்.

கூட்டம் அதிகாரியையும் காவல் வீரர்களையும் அடித்து இழுத்துக் கொண்டு ஊர் எல்லையை நோக்கி நகர்ந்தது. உதயசந்திரனும் மற்றவர்களும் சத்திரத்தின் வாசலில் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

"ஐயோ, கூட்டம் அவர்களை அடித்தே கொன்று விடும் போலிருக்கிறதே" என்றான், ராஜன் நம்பூதிரி.

பிக்ஷுக்கள் இருவரும் பதற்றமடைந்திருந்தார்கள். கூட்டத்துடன் சற்று தூரம் போய் தன் பங்குக்கு அதிகா

ரியை இரண்டு முறை அடித்துவிட்டுத் திருப்தியுடன் திரும்பிய வண்டிக்காரன், "செம்மையாக உதைத்துவிட்டார்கள். நானும் இரண்டு போட்டேன். வேண்டியதுதான், இந்த அடி. திமிர் பிடித்த அதிகாரி" என்றான்.

"எங்கே கொண்டு போகிறார்கள்?" என்று இளம் பிக்ஷு கேட்டார்.

"இரவு, ஊருக்கு வெளியே உள்ள காளி கோயிலில் கட்டிப் போடப் போகிறார்களாம். காலையில் முகத்தில் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, காஞ்சிக்கு அனுப்பப் போகிறார்களாம்."

"ஆத்திரத்தில் மக்கள் இப்படிச் செய்கிறார்கள். இதற்குப் பழி வாங்குவதற்காக நாளை இந்த அதிகாரி படை வீரர்களோடு வந்து இந்த ஊர் மக்களை வேட்டையாடினால் என்னவாகும்? மகாராணியே இந்த ஊரைத் தண்டிக்க ஒரு சிறு படையை அனுப்பி வைக்கலாம்" என்றார், சத்திரத்துக் கிழவர்.

"மக்கள் கொதித்தெழுந்தால் இப்படித்தான் கண் மூடித்தனமாக ஏதாவது நடக்கும். கூட்டத்துக்கு முன் யோசனை ஏது?" என்றான் ராஜன் நம்பூதிரி.

மறுநாள் அதிகாலையில், வல்லத்து சத்திரத்திலிருந்து வண்டி, காஞ்சியை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியது. பிக்ஷுக்கள் இருவரும் முகம் வாடிப் போயிருந்தனர். இரவு நடந்த கலவரம் அவர்களுடைய உள்ளத்தில் வேதனையைக் கொடுத்திருந்தது. வண்டிக்காரன் மட்டும் உற்சாகமாயிருந்தான். அவனுக்கு ஒரு அதிகாரியை அடித்துவிட்ட பெருமை. ஊருக்குப் போன உடன் இந்தப் பெருமையை மனைவியிடம் சொல்லவேண்டுமென்ற ஆசையில் மாடுகளை முடுக்கி விரட்டினான்.

மாலையில், காஞ்சியிலிருந்து மூன்று கல் தொலைவில் இருந்த ஒரு சிற்றூரில் வண்டியை நிறுத்தினான். "இது தான் என்னுடைய ஊர். காஞ்சி, இன்னும் மூன்று கல் தொலைவு தான். கொஞ்சம் விரைவாக நடந்தால் அஸ்தமனத்துக்குள் போய்ச் சேர்ந்துவிடலாம்" என்றான்.

அவனுக்கு நன்றி கூறிவிட்டு மற்ற நால்வரும் காஞ்சிப் பாதையில் நடக்கத் தொடங்கினர். அந்தப் பாதை, காஞ்சிக்குச் செல்லும் முக்கியமான பாதையாதலால், வண்டிகளும் அதிகம் தென்பட்டன. பாதசாரிகளும் அதிகமாயிருந்தனர்.

"சுவாமிகளே, நீங்கள் வேண்டுமானால் ஏதாவது ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு செல்லலாமே?" என்றான் உதய சந்திரன்.

வயோதிகப் பிக்ஷு மறுத்து, "கொஞ்சந் தொலைவு தானே? நடந்துவிடலாம். வண்டிக்குள் கால்களை மடக்கி அமர்ந்து மரத்துவிட்டன" என்றார்.

காஞ்சிக் கோட்டையின் மதில், தூரத்தில் ஒரு கல் தொலைவிலேயே தெரிந்தது. உதயசந்திரன், சிறுவனாயிருந்தபோது ஒரு முறை பாட்டனாருடன் காஞ்சிக்குச் சென்றிருக்கிறான். இப்போது தன்னுடைய எதிர்காலத்துக்கு அவன் நம்பி வந்திருந்த காஞ்சிநகர் நெருங்கிவிட்டதை அறிந்து பரபரப்படைந்தான்.

'கஞ்சிக்கு இல்லையென்றால் காஞ்சிக்குப் போ' என்று ஒரு பழமொழி அந்தக் காலத்தில் கூறப்பட்டு வந்தது.

'வந்தவனை வாழ வைக்கும் வற்றாத காஞ்சி' என்று ஒரு புலவர் பாடியிருந்ததும் அவன் நினைவுக்கு வந்தது. காஞ்சியை நெருங்க நெருங்க அவன் மனத்தில் ஒருவிதப் பயம்கூடத் தோன்றியது.

"அடேயப்பா! எவ்வளவு பெரிய கோட்டை! ஒரு கல் தொலைவிலேயே தெரிகிறதே!" என்று வியந்தான், ராஜன் நம்பூதிரி.

"கோட்டைக்குள் போய்விட்டால் இன்னும் பிரமித்துப் போய் விடுவாய். வீதிகளின் அழகும் கட்டடங்களின் அமைப்பும், தோப்பும் துரவும் பிரமாதமாயிருக்கும்" என்றார் இளம் பிக்ஷு.

ராஜன் நம்பூதிரி மிகுந்த உற்சாகமடைந்தவனாய், "எனக்கு நேர்ந்த துன்பத்தினால் கடைசியில் நன்மையும் கிட்டியிருக்கிறது. முந்திய ஜென்மப் பயன்தான். இல்லையென்றால், விதி என்னை இப்படி இந்தமாபெரும் நகரத்துக்கு இழுத்து வந்திருக்குமா?" என்றான்.

அப்போது வயோதிகப் பிக்ஷு சொன்னார் : "தம்பி, காஞ்சி நகர் எவ்வளவு அழகாகவும், பெரிதாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கு ஆபத்தும் நிறைந்தது. ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இப்போது நகரில் மன்னரும் இல்லை. ராணி தான் ஆள்கிறாள். ஏதாவது அநியாயம் நடந்தால் கூட முறையிட மன்னர் இல்லை."

"ஓ...!"—ராஜன் நம்பூதிரிக்கு உள்ளூரப் பயம் தோன்றியது.

"அரசன் இல்லை என்ற தைரியத்தில்தானே நாகப்பட்டினத்துப் பௌத்த விஹாரத்தில் கொள்ளையடித்திருக்கிறார்கள். நகரங்களில்தான் விழிப்பாக இருக்கவேண்டும். செல்வமும், நாகரிகமும் சூழ்ந்திருக்கும் இடங்களில்தான் தீமைகள் அதிகம் நடைபெறும்" என்றார் பிக்ஷு.

சூரிய அஸ்தமன சமயத்தில் கோட்டை வாயிலை நெருங்கினார்கள். கோட்டையைச் சுற்றிப் பெரிய அகழி இருந்தது. அகழியைக் கடந்து கோட்டை வாயிலை அடை

வதற்கான பிருமாண்டமான மரப்பாலம், பெரிய சங்கிலி களால் உயரே தூக்கப்பட்டிருந்தது. அப்போது போர்க்கால மாதலால் கோட்டையை இணைக்கும் பாலத்தை உயரே தூக்கியிருந்தார்கள். தினமும் நான்கு முறை, ஒரு நாழிகை நேரத்துக்குப் பாலத்தைக் கீழே இறக்கிப் போக்குவரத்துக்கு வகை செய்தார்கள்.

கோட்டைக்குள் செல்லவேண்டியவர்கள், அகழியின் மறுகரையை ஒட்டியிருந்த பெரிய மைதானத்தில் காத்திருந் தனர். மைதானத்தில், பல வண்டிகளும், குதிரை மீதிருந்தவர் களும், பாதசாரிகளுமாகப் பெருங்கூட்டம், பாலம் இறக்கப் படுவதை எதிர்பார்த்துக் காத்திருந்தது. உதயசந்திரனும் மற்றவர்களும் கூட்டத்தோடு நின்றவாறு ஆவலுடன் கோட்டை வாயிலைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில் கோட்டை மதிலின் மீது ஒருவன் தோன்றினான். தோளில் தொங்கிய கொம்பை எடுத்து ஊதினான். பிறகு மைதானத்தில் காத்து நின்ற மக்களை நோக்கி இரைந்து பேசினான் : "பாலம் ஒரு நாழிகைக்கு இறக் கப்படும். நகரத்துக்குள் வரவேண்டியவர்கள் வரலாம். வீரப் போட்டிக்கு வீரர்கள் யாராவது வந்திருந்தால், உள்ளே கோட்டை வாயில் சதுக்கத்தில் பெயரைப் பதிந்து கொள்ள லாம். போட்டி வீரர்களுக்கு அரசாங்கச் சத்திரத்தில் தங்குவ தற்கு வசதியளிக்கப்படும்."

அறிவித்து முடிந்ததும், உட்பக்கமாகத் திரும்பிக் கையை அசைக்கவே மறுகணம் பாலம், கடகட வென்று பேரிரைச்சலுடன் உயரே இருந்து அகழிக்குக் குறுக்காகக் கீழே இறங்கியது. காத்திருந்தவர்கள் முண்டியடித்துக் கொண்டு ஓடினார்கள். பாலம் தடதட வென அதிர்ந்தது. "விலகு, விலகு, ஓரம் போ..." என்று இரைந்துகொண்டே குதிரை வீரர்கள் சிலர், பாலத்தின் மீது குதிரைகளை விரைந்து

செலுத்தினர். கூட்டம் பயந்து போய், பாலத்தின் இரு விளிம்புகளுக்கும் ஒதுங்கி விலகியது. ஒரு கிழவி, அகழிக் குள் விழ இருந்தாள். நல்லவேளையாகப் பக்கத்திலிருந்த வன் அவளைப் பிடித்துக் கொண்டான்.

"என்ன, கொள்ளையா போகிறது? மெதுவாகப் போ னால் என்ன? குதிரையில் போகிற திமிர்" என்றாள் கிழவி.

ஒரு குதிரை வீரன், "ஏய், கிழவி, நீ அகழிக்குள் விழுந் தால் முதலைகளுக்கு லாபந்தான்" என்றான்.

பின்னால் வந்த ஒரு குதிரை வீரன், "கிழவியின் உடலில் சதைப்பற்றே இல்லையே. பாவம், முதலைகளுக்கு வெறும் எலும்புதானே கிடைக்கும்" என்றான். சிலர் சிரித்தனர். கிழவி முணுமுணுத்தவாறே ஏதோ ஏசிக் கொண்டே நடந்தாள்.

கோட்டை மதில் வாயிலைத் தாண்டி உட்பக்கம் சென்றதும், பிக்ஷுக்கள் இருவரும் விடைபெற்றனர். "நாங்கள் போதிதர்ம மடத்துக்குப் போகிறோம். நீ போக வேண்டிய பௌத்த கடிகை, புத்தர் சேரித் தெருவிலிருக்கிறது. இப்படியே இடது பக்கமாகப் போனால் கைலாச நாதர் கோயில் தென்படும். அதைக் கடந்து ஒரு பெரிய தெரு வரும். அதில் போய் இடது பக்கத்திலுள்ள முதல் முடுக்குத் தெரு வழியாகச் சென்றால் புத்தர் சேரித் தெருவுக்குப் போய்ச் சேரலாம்" என்று வழி சொல்லிவிட்டுப் பிக்ஷுக்கள் இருவரும் சென்றனர்.

உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் சற்று நேரம் அங்கேயே நின்று வருவோரையும் போவோரையும் பார்த்துக் கொண்டிருந்தனர். சூரியன் அஸ்தமனமாகி விட்ட போதிலும், நல்ல வெளிச்சம் இருந்தது. வீதியில் ஆங் காங்கே மக்கள் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்ததை

குதிரை வீரன் ஒருவன், விலகிச் செல்லும்படி அறிவித்துக் கலைத்துக் கொண்டிருந்தான். உதயசந்திரனைப் பார்த்து ஒரு குதிரை வீரன், "ஏய், நீ எங்கே போகவேண்டும்? வீதியில் இப்படி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. போ, போ" என்றான்.

உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் பிக்ஷுக்கள் சொன்ன திசையில் நடக்கத் தொடங்கினர். கைலாசநாதர் கோயிலை அடுத்திருந்த நந்தவனத்தின் அருகில் சென்று கொண்டிருந்தபோது, உதயசந்திரன் திடீரென்று பரபரப் படைந்தான். நடையின் வேகம் குறைந்தது.

ஓ.... ! அந்த நறுமணம் ! மருக்கொழுந்தின் மணம் !

உதயசந்திரன் பேச்செடுக்கு முன்பே ராஜன் நம்பூதிரி, "சீனப் பெண்ணின் செடி இங்கே நந்தவனத்திலிருக்கிறதே?" என்றான். மூச்சை இழுத்து வாசனையை ரசித்தான். உதயசந்திரனின் நினைவு, மாமல்லபுரத்துக்கு ஓடிவிட்டது....

லீனா, செடிகளுக்கு இப்போது தண்ணீர் ஊற்றிக் கொண்டிருப்பாள். என்னை நினைப்பாளா....? பாவம், எவ்வளவு துன்பம் அவளுக்கு நேர்ந்துவிட்டது. சில வினாடிகள் நான் முந்தியிருந்தால் அவள் தந்தையையும் காப்பாற்றியிருந்திருக்கலாம். அந்தத் துன்பம் அவளை வெகுவாகப் பாதித்துவிட்டதே....

ஒரு தும்மல் வந்தது. தன்னை லீனா நினைப்பதாக எண்ணினான்.

அவள்தான் நினைக்கிறாள். இந்த உலகத்தில் என்னை வேறு யார் நினைக்கப் போகிறார்கள்....

கைலாசநாதர் கோயில் வாசலில் கூட்டத்தின் நெருக்கடி அதிகம் இருந்தது. வசதியாக நடந்து செல்ல இயலாதபடி

வீதியின் இருபுறமும் பல கடைகளிருந்தன. கடைகளில் பொருட்களை வாங்கிய கூட்டம், பாதையை மறித்தவாறு அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தது. கோயிலுக்குச் செல்பவர்கள் நெருக்கியடித்துக் கொண்டு நடக்க வேண்டியிருந்தது. உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் கோயில் வாசல் கடைகளை வேடிக்கை பார்த்தவாறே கூட்டத்தில் இடிபட்டபடி நடந்து கொண்டிருந்தனர். அந்த வீதியின் திருப்பத்தில் அவர்கள் வந்ததும் எதிரே ஏழெட்டுக் குதிரை வீரர்கள் வேகமாக வரவே, அவர்கள், பதறியபடி விலகி ஒதுங்கி நின்றார்கள். அப்போது எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

வேகமாக வந்த வீரர்கள், தங்கள் கைகளிலிருந்த இரும்புத் தடிகளால் கோயில் வாசலில் இருந்த எல்லாக் கடைகளையும் இடித்து நொறுக்கத் தொடங்கினர். மக்கள், பீதியடைந்து நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். கடைக் காரர்கள் பரிதாபமாக அலறினார்கள். கடைக்குள்ளிருந்த பொருட்கள் அனைத்தும் தெருவில் வீசப்பட்டன. தெருவில் விழுந்த பொருட்களைப் பலர் அள்ளிக்கொண்டு ஓடினார்கள். கோயில் சந்நிதிக்கு எதிரே இருந்த அந்த வீதி முழுவதும் ஒரே குழப்பம்.

கொஞ்ச நேரத்துக்குள் அந்த வீதி வெறிச்சோடி விட்டது. கடைக்காரர்கள் மட்டும் வீதியில் நின்றுகொண்டு வாயிலும் வயிற்றிலும் அடித்து அழுதுகொண்டு நின்றனர். வீரர்கள், கோயில் வாசலிலிருந்த கடைகள் அனைத்தையும் தரைமட்டமாக்கிவிட்டார்கள். சிறுவர்கள், தெருவில் சிதறிக் கிடந்த பொருட்களைப் பொறுக்குவதில் மும்முரமாயிருந்தனர்.

"இதென்ன? கேட்பார் கிடையாதா? இப்படியா கடை

களை நாசமாக்குவார்கள் ?" என்று முணுமுணுத்தான் உதய சந்திரன்.

ராஜன் நம்பூதிரி பயத்துடன் பார்த்துக்கொண்டு நின்றான். சற்று தள்ளி நின்றபடி பலர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ஓர் அழகிய வெள்ளைக் குதிரையும், கறுப்புக் குதிரையும் விரைந்து வந்து அவர் களைக் கடந்து சென்றன. கூட்டத்தினிடையே, "இளவரசர், இளவரசர்...." என்று முணுமுணுப்புக் கேட்டது.

உதயசந்திரன், பக்கத்தில் நின்று கொண்டிருந்த வனிடம், "யார் இவர்கள் ?" என்று விசாரித்தான்.

வெண்புரவி மீதிருந்தவன் இளவரசன் சித்திரமாயன் என்றும், உடன் வந்தவன் அவனுடைய மெய்க்காப்பாளன் வாணராயன் என்றும் தகவல் கிடைத்தது.

உதயசந்திரன், இளவரசனைக் கூர்ந்து பார்த்தான். இளவரசனுக்கு வயது இருபத்தைந்து இருக்கும். முகத்தில் ராஜகளை இருந்தது. ஆனால் கண்களில் கனிவில்லை. ஒரு கொடிய நாகத்தின் பார்வையைப் போலிருந்தது. அவனு டைய அடர்ந்த புருவங்களும், தடித்த உதடுகளும் பிறரை அச்சுறுத்துவது போலிருந்தன. அவனுடைய குதிரையும், பின்னே சென்ற கறுப்புக் குதிரையும் கடைகள் இடிக்கப் பட்ட இடத்தில் போய் நின்றன. இடித்துக் கொண்டிருந்தவர் களுக்கு இளவரசன் ஏதோ கட்டளை இட்டான். பிறகு தெருவில் அழுது கொண்டிருந்த கடைக்காரர்களை அலட்சி யமாகப் பார்த்தான். "மீண்டும் கோயில் வாசலை அசுத்தம் செய்தீர்களானால், சிறைச்சாலைக்குப் போக வேண்டி வரும்" என்று எச்சரித்துவிட்டுக் குதிரையில் விரைந்தான்.

உதயசந்திரன் நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்ததும், குதிரையை நிறுத்தினான். அவன் பின்னே வந்த

கறுப்புக் குதிரையும் நின்றது. அந்த இடத்தில் கூடி நின்றவர்களை இளவரசன் முறைத்துப் பார்த்தான். "அஸ்தமனத்துக்குப் பிறகு தெருவில் கூடி நிற்கக்கூடாது என்று கட்டளை இருப்பது தெரியுமல்லவா? போங்கள், சீக்கிரம் விலகிப் போங்கள்" என்றான்.

மக்கள் பரபரப்புடன் கலையத் தொடங்கினர். உதயசந்திரன் சற்றுத் தயங்கியபடி நின்றான். "ஏய் ஓடு. ஏன் நிற்கிறாய்?" என்று இரைந்து கொண்டே இளவரசன், தன் கையிலிருந்த குதிரைச் சவுக்கால் சுளீரென்று உதயசந்திரனை அடித்தான்.

"ஆ..." – உதயசந்திரன், இடது தோளைப் பற்றியபடி அலறினான். வலி பொறுக்க முடியாமல் ஒருகணம் கண்களை மூடினான். கண்களைத் திறந்தபோது இளவரசன், சிரித்தபடியே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான். உதயசந்திரனின் தோளில் இரத்தம் கசிந்தது. கோபத்தினால் பற்களைக் கடித்தான். அவனுடைய இரு கரங்களும் இறுகின. தோள்கள் புடைத்தன. கால்களைச் சற்று அகற்றி நின்றவாறு, இளவரசனை உற்று நோக்கினான். கறுப்புக் குதிரையின் மீதிருந்த மெய்க்காப்பாளன் வாணராயன் விரைந்து உதயசந்திரனை நெருங்கினான். நிலைமையைப் புரிந்துகொண்ட ராஜன் நம்பூதிரி, சட்டென்று உதயசந்திரனின் கையைப் பற்றி மெல்ல இழுத்தான். இளவரசனைப் பார்த்து, "இளவரசே, நாங்கள் நகரத்துக்குப் புதிது. இப்போதுதான் உள்ளே வருகிறோம். அதனால் விவரம் தெரியாமல் நின்று விட்டோம்" என்றான். பிறகு, உதயசந்திரனைப் பலமாகப் பற்றி இழுத்தவாறு விரைந்து விலகிச் சென்றான்.

ராஜன் நம்பூதிரியின் இழுப்புக்கு ஆட்பட்டு விலகிச்

சென்றுகொண்டிருந்த உதயசந்திரன், திரும்பி இளவரசனைப் பார்த்து, "காஞ்சி நகருக்குள் நான் வந்ததுமே எனக்கு வீர வரவேற்பு கிடைத்திருக்கிறது" என்று கூறினான். சில வினாடிகள் உதயசந்திரனின் கூரிய பார்வை, இளவரசனின் கண்களோடு மோதிவிட்டு மீண்டது. பிறகு ராஜன் நம்பூதிரியைத் தொடர்ந்து சென்றான்.

பின்னால் இளவரசன் உரக்கச் சிரித்தது கேட்டது. பிறகு, குதிரைகள் இரண்டும் உதயசந்திரனைக் கடந்து பாய்ந்து சென்று மறைந்தன.

7. தலைநகரில் கொலை

காஞ்சிமா நகரில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வீரத்திருவிழா நடைபெற்றுவந்தது. அப்போது நடைபெறும் வீரப்போட்டிக்குப் பல நாடுகளிலிருந்து வீரர்கள் பங்கு கொள்ள வருவதுண்டு. போட்டி நடைபெறுவதற்கு நாலைந்து நாட்களுக்கு முந்தியே வீரர்களும் பார்வையாளர்களும் வரத் தொடங்கிவிடுவார்கள். பல்லவச் சக்கரவர்த்தி, இதற்கென்றே பல குழுக்களை அமைத்து, ஒவ்வொரு பொறுப்பை அளிப்பது வழக்கம். போட்டியை முன்னிட்டுப் பல்லவ சாம்ராஜ்யத்தின் குறுநில மன்னர்களும், முக்கியத் தலைவர்களும் ஒரே சமயத்தில் காஞ்சியில் கூடும் போது காவலர்களின் கெடுபிடி அதிகமாயிருக்கும்.

அந்தக் காலத்தில் பல்லவ சாம்ராஜ்யம், இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு தலைவரின் பொறுப்பில் விடப்பட்டு ஆளப்பட்டு வந்தது. கோட்டத் தலைவர்கள், அரச குலத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். பல கோட்டங்கள் ஒரு மண்டல ஆட்சிக்குட்பட்டவை. மண்டலங்களை

ஆட்சி செய்த தலைவர்கள், குறுநிலமன்னர்கள் என்றழைக் கப்பட்டனர். அவர்கள் மிகுந்த அதிகாரம் பெற்றிருந்தனர். அரச குலத்தில் மிக நெருங்கிய இரத்த சம்பந்தம் உள்ளவர் கள்தான் குறுநில மன்னர்களாக ஆட்சி செய்து வந்தனர். குறுநில மன்னர்களுக்குத் தனிக்கொடியும், போர்ப்படையும் இருந்தன. காஞ்சியில் நடைபெறும் முக்கியமான விழாக் களின் போது குறுநிலமன்னர்களும், கோட்டத் தலைவர் களும் தலைநகரில் கூடும்போது அவர்களுடைய பரிவாரங் களின் சலசலப்பு நகரையே அதிர வைத்துவிடும்.

இப்போது பல்லவச் சக்கரவர்த்தி போர்க்களம் போயி ருந்ததால் காஞ்சிநகர் ஒளி இழந்திருந்தது. மன்னர் போர்க் களம் போயிருந்த வேளையில் ஒரு விழாவை ஆடம்பர மாகக் கொண்டாடுவது கூடாது என்பதால், குறுநில மன்னர் களும், பல கோட்டத் தலைவர்களும் வீர விழாவுக்கு வர வில்லை. இருபத்துநான்கு கோட்டத் தலைவர்களுள் ஆறு தலைவர்கள் மட்டுமே வந்திருந்தனர்.

அவர்கள் வந்ததற்கு வேறு காரணமும் இருந்தது. அப்போது சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக ஆண்டுகொண்டி ருந்த மகாராணியின் போக்கு அவர்களுக்குப் பிடிக்க வில்லை. அது பற்றிப் பல்லவ நாட்டின் முதன் மந்திரியிடம் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்து, யோசனை கேட்பதற் காக வீரப்போட்டியைக் காரணமாக வைத்து வந்திருந்தனர். வழக்கமாக உள்ள ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இல்லாமல், இருபது மெய்க்காவலர்களை மட்டும் அழைத்துக்கொண்டு காஞ்சிக்கு வந்திருந்தனர்.

வீரப்போட்டியை முன்னிட்டு நகரத்துக்கு வந்திருந்த கோட்டத் தலைவர்கள், வீரர்கள் ஆகிய எல்லாருடைய சௌகரியங்களும் எப்படிக் கவனிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மேற்பார்வையிட, பல்லவ சாம்ராஜ்யத்தின் முதன்

மந்திரி, பிரம்மஸ்ரீ தரணிகொண்ட போசர், தம்முடைய மெய்க்காவல் வீரர்கள் புடை சூழ, வீதியில் வந்து கொண்டிருந்தார்.

அவருக்கு வயது எழுபதைத் தாண்டி விட்டது. அந்த வயதிலும் வலுவுடனிருந்தார். முகத்தில் நல்ல தேஜஸ். பார்வையிலேயே ஒருவருடைய இதயத்தை ஆராய்ந்து விடும் தீட்சண்யம். அவரைக் கண்டதும் மக்கள், மிக்க மரியாதையுடன் விலகி நின்று வணங்கினார்கள்.

முதன்மந்திரியிடம் எல்லாரும் பக்தியும் பயமும் கொண்டிருந்தனர். தரணி கொண்ட போசரின் கல்வியறிவும், ஆட்சித் திறமையும் வெளி நாட்டினரைக் கூட பிரமிக்க வைத்தன. பல்லவ சக்கரவர்த்தியே தரணி கொண்ட போசர் மீதுமிகுந்த அபிமானமும், மரியாதையும் வைத்திருந்ததால், மற்ற தலைவர்கள் அவரைக் கண்டு அஞ்சினர். பல்லவ சாம்ராஜ்யத்தில் எந்தக் கோட்டத்தில் எது நடைபெற்றாலும், அவருக்குத் தெரியாமல் மறைக்க முடியாது. அவருடைய கண்காணிப்பில் இயங்கிய ஒற்றர் படை, மிகத் திறமையுடன் செயலாற்றியது.

முதன் மந்திரியின் பல்லக்கு, கைலாசநாதர் கோயிலை நெருங்கியபோது, ஆண்களும், பெண்களுமாகப் பலர் ஓடிவந்து பல்லக்கின் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து கதறி அழுதார்கள். பல்லக்கிலிருந்து இறங்கிய தரணி கொண்ட போசர், சுற்றும் முற்றும் பார்த்தார். கோயில் சந்நிதிக்கு எதிரே இருந்த வீதியின் இருமருங்கிலும் கடைகள் இடிந்து கிடந்தமையைக் கண்டார். கடைக்காரர்கள் அழுது கொண்டே விவரத்தைக் கூறினார்கள்.

"இளவரசர் செய்ததில் என்ன தவறு? கோயில் வாசலில் கடைகளைப் பரப்பி கோயிலின் வீதியழகையும்

கெடுத்து, மக்கள் நடமாட முடியாமலும் இடைஞ்சல் செய்தீர்களே. இரண்டு நாட்களுக்கு முன்பே கடைகளை அகற்றி விட வேண்டும் என்று இளவரசர் எச்சரித்துவிட்டாரே" என்றார், முதன் மந்திரி.

"எங்கள் கடைகளும் இடிந்துவிட்டன. பொருட்களையும் சூறையாடி விட்டனர். நாங்கள் இனி எங்கே போவோம்? இவ்வளவு நஷ்டத்தை நாங்கள் தாங்க முடியுமா?" என்று ஒரு கடைக்காரர் விம்மி அழுதார்.

"கோயில் வாசலை அசுத்தப்படுத்தியது உங்கள் குற்றம். குற்றம் உங்கள் மீதிருக்கும்போது, நான் என்ன செய்யமுடியும்?"

"காக்க வேண்டிய இளவரசரே எங்களை கொடூரமாகத் தண்டித்தால் நாங்கள் எப்படி வாழ்வது?" என்று ஒரு கடைக்காரரின் மனைவி அழுதாள். அவள் இடுப்பிலிருந்த குழந்தையும் அழுதுகொண்டிருந்தது.

"உங்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு ஈடாக நாளை அரசாங்க பண்டாரத்தில்* பொற்காசுகள் பெற்றுக்கொள்ளுங்கள். ஒரு நிபந்தனை. இனி, கோயிலைச் சுற்றிக் கடைகள் போட்டுக் கோயிலின் புனிதத்தைக் கெடுக்கக் கூடாது" என்று கூறிவிட்டுப் பல்லக்கில் ஏறினார், பிரம்மஹரீ தரணிகொண்ட போசர். அவருடைய பல்லக்குப் புறப்பட்டபோது, மக்கள் உரத்த குரலில் வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

அந்தச் சமயத்தில், அவருடைய பல்லக்கை நோக்கி மூன்று குதிரைகள் விரைந்து வந்தன. நடுவில் வந்த குதிரை மீது ஐம்பது வயது மதிக்கத்தக்க, ஆஜானுபாகுவான ஒருவர் அமர்ந்திருந்தார். மீசை நரைத்திருந்தாலும் கம்பீரம் இருந்தது. அவர் காஞ்சி நகரின் பாதுகாவல் படையின் தலைவர்.

---

* அரசாங்கப் பொக்கிஷ அலுவலகம்.

பல்லக்கை நெருங்கியதும் குதிரைகளில் இருந்தவர்கள் பரபரப்புடன் கீழே குதித்தார்கள். பாதுகாவல் படைத் தலைவர் மட்டும் பல்லக்கை நோக்கி விரைந்தார். முதன் மந்திரிக்கு வணக்கம் செலுத்திவிட்டு நின்றார்.

"ஜெயவர்மரே, தற்செயலாக இந்தப் பக்கம் வந்தேன். இந்த இடிபாடுகளைப் பார்த்துக் கொண்டு நிற்கிறேன்" என்றார், முதன் மந்திரி. பிறகு கேட்டார், "தாங்களும் இப்போதுதான் வருகிறீர்களா?"

இதைக் கேட்ட ஜெயவர்மர் துணுக்குற்றார்—கோயில் வாசலில் நடைபெற்ற காரியம் இவருக்குத் தெரிந்துதான் வந்து பார்க்கிறாரோ...? இப்போதுதான் வருகிறீர்களா என்ற கேள்விக்கு என்ன அர்த்தம்?... உமக்கு முந்தியே நான் வந்து பார்க்கிறேனே; நகரத்தின் பாதுகாவல் பொறுப்பிலிருக்கும் நீர் வந்து பார்க்க இவ்வளவு காலதாமதமாயிருக்கிறதே என்று குத்திக் காட்டுகிறாரோ...? பழுத்த கிழமானாலும் வலுத்த கிழம்...

"இப்போதுதான் செய்தி வந்தது...." என்று கூறி விட்டுப் பல்லக்கை மிக நெருங்கி நின்று முதன் மந்திரியிடம், "இளவரசர் இப்படிச் செய்யலாமா? எல்லா விஷயங்களிலும் தலையிட்டுக் குழப்புகிறார்" என்று மெல்லச் சொன்னார்.

"இன்று இரவு, கோட்டத் தலைவர்கள் என்னைக் காண வருகிறார்கள். நீங்களும் வாருங்கள். பல விஷயங்கள் பற்றி யோசிக்கலாம். நீங்கள் வரும்போது, தனியாக வாருங்கள். ஆரவாரம் வேண்டாம்" என்று கூறிவிட்டுச் சென்றார், முதன்மந்திரி. பல்லக்கு மறைந்தவுடன், சற்று தள்ளி நின்ற மக்கள், ஜெயவர்மரைச் சூழ்ந்துகொண்டு, கடைகள் இடிக்கப்பட்ட விவரத்தைக் கூறினார்கள்.

* * *

அன்று இரவு முதன் மந்திரியின் மாளிகைக்கு ஜெயவர்மர் சென்றபோது, ஏற்கனவே சில பல்லக்குகள், மாளிகையைச் சுற்றி அமைந்திருந்த தோட்டத்தில் இறக்கி வைக்கப்பட்டிருந்தன. மாளிகையினுள் அவர் சென்றபோது, அங்கே சில கோட்டத் தலைவர்கள் கூடியிருந்தார்கள். கோட்டத் தலைவர்களிடையே நடுநாயகமாக அமர்ந்திருந்த முதன் மந்திரி தரணி கொண்ட போசரின் முகத்தில் கவலை படர்ந்திருந்தது. கோட்டத் தலைவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

குன்றக் கோட்டத் தலைவர் கோபத்தில், "இந்த அடங்காப் பிடாரியின் கெடுபிடிக்கு என்று முடிவு வருமோ?" என்றதும், முதன்மந்திரியின் கோபக்குரல் கணீரென்று ஒலித்தது.

"குன்றக் கோட்டத் தலைவரே, வார்த்தைகள் வரம்பு மீறக் கூடாது. நீங்கள் இப்போது குறிப்பிட்டது, பல்லவ நாட்டு மகாராணியை."

குன்றக் கோட்டத் தலைவர், பதறிப்போய் வாய் குழறியபடி, "மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும்... எனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தாளமுடியாமல் பேசிவிட்டேன்... முதன்மந்திரி அவர்கள் மன்னிக்க வேண்டும்" என்றார்.

"உங்களுக்கு என்ன அவமானம் நேர்ந்துவிட்டது? அரசாங்கத்தின் கட்டளை எந்த விதமாக வந்தாலும் அதை நிறைவேற்றி வைக்க வேண்டியதுதானே உங்களது கடமை" என்றார், முதன்மந்திரி.

"கட்டளை வழக்கப்படி வரவில்லையே. எனக்குத் தகவல் இன்றியே கட்டளைகளை என்னுடைய கோட்டத்தில் அறிவிப்பது, இதுநாள் வரை இல்லாத வழக்கமல்லவா?

தலைநகரிலிருந்து வரும் கட்டளைகள் அனைத்தும், என் மூலமாக அல்லவா என்னுடைய கோட்டத்து மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டும்."

"அது ஒரு சம்பிரதாயமே தவிர வேறென்ன?"

"ஆட்சியில் சம்பிரதாயங்களுக்கு வலுவுண்டே. வழக்கத்தை மீறினால், மக்களுக்கு எங்கள் மீது என்ன மதிப்பு இருக்கும்? நேரடியாகவே காஞ்சி தலையிடுமானால், கோட்டங்களுக்கு நாங்கள் தலைவர்களாக இருப்பதில் அர்த்தமே இல்லையே" என்று குறுக்கிட்டுக் கூறினார் களத்தூர்க் கோட்டத் தலைவர்.

அவர் மேலும் சொன்னார்: "வல்லம் கிராமம் என்னுடைய கோட்டத்தைச் சேர்ந்தது. ஊர்மன்றத் தலைவரை மகாராணியே பதவி நீக்கம் செய்து உத்தரவு அனுப்பியிருக்கிறார். ஊர்த் தலைவரை மக்கள், என் முன்னிலையில்தான் கோயில் சந்நிதியில் தேர்ந்தெடுத்தார்கள். அவரை நீக்குவது என்றால் என்னைக் கலந்து ஆலோசித்துத்தான் நீக்க வேண்டும். அதுதான் சம்பிரதாயம். வல்லம் கிராமத்தில் இது விஷயமாக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக இப்போதுதான் செய்தி கிடைத்தது."

தரணிகொண்ட போசர், சற்று நேரம் மௌனமாயிருந்தார். செங்கரைக் கோட்டத் தலைவர், மெல்லச் சொன்னார்: "மகாராணியாரின் நடவடிக்கைகள் நியாயந்தானென்று முதன்மந்திரி அவர்கள் முடிவு கட்டினால், கோட்டங்களின் பொறுப்புக்களை மந்திரி அவர்களே ஏற்றுக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை."

"கோட்டத் தலைவர்களே, உங்களுடைய பிரச்சினை எனக்குப் புரிகிறது. உங்களுடைய மனக் கசப்பின் காரணங்களையும் நான் உணர்ந்து கொண்டேன். கோட்டத் தலை

மையை காஞ்சியே ஏற்றுக் கொள்வது, நிர்வாக நடை முறைக்கு ஒவ்வாத காரியம். நீங்கள் செய்திருக்கும் உதவியை சக்கரவர்த்தி என்றும் மறக்க மாட்டார். நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து அளித்திருக்கும் படைபலம்தானே இன்று மன்னருக்குத் துணையாகப் போர்க்களம் போயிருக் கிறது" என்றார், தரணிகொண்ட போசர்.

"மன்னர் இருந்தால்தான் இந்தப் பிரச்சனையே எழுந் திருக்காதே" என்றார், புலியூர் கோட்டத் தலைவர்.

"முதன்மந்திரியார் தவறாக எடுத்துக் கொள்ளமாட் டார் என்றால், ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன்" என்றார் செங்காட்டுக் கோட்டத் தலைவர்.

முதன்மந்திரி, புன்முறுவலுடன் அவரைப் பார்த்தார்.

"மகாராணியாரை விட இளவரசர் சித்திரமாயனின் தொந்தரவுதான் சகிக்க முடியவில்லை. மக்களுக்கு அவரால் மிகுந்த தொந்தரவு ஏற்படுகிறது" என்றார், செங்காட்டுக் கோட்டத் தலைவர்; பிறகு சொன்னார்: "காஞ்சியில் பெண்கள் வெளியில் வரவே பயப்படுகிறார்களாமே?"

இதைக் கேட்டதும் காஞ்சியின் பாதுகாவல் தலைவர், ஜெயவர்மர் படபடப்புடன் பேசத் தொடங்கினார். "இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும், முதன்மந்திரி அவர்களே, இன்று இரவு ஒரு கொடிய சம்பவம் நிகழ்ந்து விட்டது. கோயிலுக்குச் சென்ற ஒரு பெண்ணைச் சில குதிரை வீரர்கள் கடத்திக் கொண்டுபோய் விட்டார்கள்." இதைக் கூறியபோது, ஜெயவர்மனின் மீசை, கோபத்தால் துடித்தது.

அந்தச் செய்தியைக் கேட்ட கோட்டத் தலைவர்கள் வியப்பினால் கூவினார்கள். முதன்மந்திரி கேட்டார்: "மேற்கொண்டு அது பற்றிய விவரம் தெரியுமா?"

"கடத்திக் கொண்டு சென்றவர்கள் எங்கு போனார்கள் என்று தெரியவில்லை. பெண்ணின் பெற்றோர்கள் என்னிடம் வந்து முறையிட்டு அழுதார்கள். நான் சில வீரர்களை இது பற்றி ஆராயும்படி அனுப்பியிருக்கிறேன். காளிக்குப் பலியிடும் கூட்டம் நம் நாட்டில் இன்னும் உலவுகிறது" என்றார், ஜெயவர்மர்.

"உங்கள் வீரர்கள் போய்ப்பயனில்லை. அந்தப்பெண்ணின் உடலை கோட்டை அகழியிலிருந்து எடுத்து, இதற்குள் பெற்றோர்களிடம் சேர்த்திருப்பார்கள்" என்றார், தரணி கொண்ட போசர்.

"ஓ...! பெண்ணைக் கொன்றுவிட்டார்களா?" பதற்றத்துடன் கேட்டார் ஜெயவர்மர்.

"கொலை மட்டுமா?... கற்பழிப்பும் நடைபெற்றிருக்கிறது."

"ஐயோ..." உடல் பதறக் கூவினார், ஜெயவர்மர். பிறகு, நாத்தழுதழுக்கச் சொன்னார்: "முதன்மந்திரி அவர்களே, காஞ்சி நகரின் பாதுகாவல் தலைவனாக இருக்க நான் அருகதையற்றவன். ஒரு பெண்ணுக்கு இந்நகரில் இப்படி ஓர் அநீதி இழைக்கப்பட்ட பிறகு, நான் இந்நகருக்குத் தலைவனாக இருக்கவே கூடாது."

இப்படிக் கூறிவிட்டு தம்முடைய உடைவாளை இடுப்பிலிருந்து அவிழ்த்து, முதன்மந்திரியிடம் நீட்டினார். முதன்மந்திரி, வாளைப் பெற்றுக்கொள்ளாமல், ஜெயவர்மரைப் பார்த்துச் சொன்னார்: "ஜெயவர்மரே, இனிதான் உங்களுடைய பணி மிகவும் தேவை. உங்களுடைய கடமை உணர்வையும், உங்கள் மீது இந்நகர மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நான் நன்கு அறிவேன். மன்னர் இல்லாத இந்தச் சமயத்தில் தாங்கள் பதவியிலிருந்து விலகுவது

சரியல்ல. நீங்கள் விலகிவிட்டால், தீயவர்களின் துணிச்சல் அதிகமாகிவிடும். மக்கள் நம்பிக்கையை இழந்துவிடுவார்கள். வாளை இடுப்பில் அணியுங்கள்"

ஜெயவர்மர் சற்று தயங்கினார். வாளை நீட்டியபடியே இருந்தார், முதன் மந்திரி. அவருடைய தோளைத் தொட்டு, "ஜெயவர்மரே, இதை என்னுடைய ஆணையாக ஏற்று, வாளை இடையில் அணியுங்கள்" என்றார்.

ஜெயவர்மனின் படபடப்பு இன்னும் தணியவில்லை. முதன்மந்திரியின் ஆணையை ஏற்று, உடைவாளை அணிந்து கொண்டார். "இந்தக் கொடுமைக்குப் பழிவாங்கியே தீரவேண்டும். குற்றவாளிகளை மக்கள் முன்னிலையில் கழுவேற்றினால்தான் என் மனக்கொதிப்பு அடங்கும்" என்றார். பிறகு, "உங்களுக்கு எப்படி இந்த விவரம் தெரிந்தது? பெண்ணின் உடலை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று வியப்புடன் கேட்டார்.

"என்னுடைய ஒற்றர்படையின் திறனை இன்னும் நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை" என்று கூறிச் சிரித்தார் முதன்மந்திரி. பிறகு சொன்னார்: "என் வீரர்களை விரைவில் அனுப்பிவைத்தேன். ஆனால் அதற்குள் காரியம் முடிந்துவிட்டது. அகழியை அடுத்தாற் போலிருக்கும் காளி கோயிலை ஒட்டிய தோட்டத்திலுள்ள மண்டபத்தில் கொடுமை நிகழ்ந்துள்ளது. அவளுடைய உடலை அகழியில் வீசியபோதுதான் என் வீரர்கள் போய்ச்சேர்ந்தார்கள். இதற்குக் காரணமானவன் தப்பிவிட்டான். துணை இருந்தவன் மட்டும் அகப்பட்டிருக்கிறான்."

"அவன் மூலமாகக் குற்றவாளி யார் என்பது தெரிந்திருக்கலாமே" – ஆவலுடன் கேட்டார் ஜெயவர்மர்.

"இன்னும் முழு உண்மையும் தெரியவில்லை. இன்று

இரவுக்குள் பிடிபட்டவனிடமிருந்து உண்மை தெரிந்து விடும். இவனை அறங்கூர் அவையத்தில்* விசாரிக்கும் போது மக்களுக்கும் உண்மை தெரியவரும்" என்றார் முதன் மந்திரி. பிறகு, "என்னுடைய வீரர்கள் இன்னும் தாமதித்திருந் தால், பெண்ணின் உடல்கூடக் கிடைத்திருக்காது. அகழியில் உள்ள முதலைகளுக்கு இரையாகியிருக்கும். இப்போது அகப்பட்டவனும் தப்பிப்போயிருந்திருப்பான். நமக்குத் துப்பே கிடைத்திருக்காது" என்றார்.

"பிடிபட்டவனைக் காராகிரகத்துக்கு அனுப்பிவிட்டீர் களா?"

"என் கண்காணிப்பில்தான் சிறைவைத்திருக்கிறேன். நாளை அறங்கூர் அவையத்தாரிடம் ஒப்படைத்து விடு வேன். அறங்கூர் அவையத்தில் நாளை விசாரணை நடை பெறும்போது நீங்களும் உடனிருந்து கவனியுங்கள்" என்று முதன் மந்திரி கூறிவிட்டுக் கோட்டத் தலைவர்களிடம் தம் கவனத்தைச் செலுத்தினார்.

"உங்கள் ஆலோசனையைக் கேட்கத்தான் நாங்கள் வந்தோம்." என்றார் புலியூர் கோட்டத் தலைவர்.

"தற்போது நீங்கள் எல்லாரும் கொஞ்சம் பொறுமை யாக இருங்கள். நான் விரைவில் மகாராணியைச் சந்திப் பேன். இதுபற்றிப் பேசிப் பார்க்கிறேன்" என்றார் முதன் மந்திரி.

"நான் ஒன்று சொல்லலாமா?" என்று குறுக்கிட்டார் ஜெயவர்மர். முதன் மந்திரி தலையை அசைத்தார்.

"ஆசிரமத்தின் மீது எனக்குக் கொஞ்சம் சந்தேகம்."

---

* நகர நீதிமன்றம்

"எதுபற்றி? யோகி பரமாச்சாரியின் தியானமுறை பற்றியா?" என்று கேட்டுச் சிரித்தார் முதன்மந்திரி.

"அவருடைய ஆசிரமம் இருக்கும் தோட்டம் முழுவதையும் அவருக்கு மான்யமாக ராணியார் கொடுத்து விட்டார்....."

"அதனால் என்ன? மந்திரிசபையிடம் ஆலோசனை கேட்டுத்தான் கொடுத்திருக்கிறார்."

"அதற்குச் சொல்ல வரவில்லை. ராணியார் அடிக்கடி ருத்ர பரமாச்சாரியை அரண்மனைக்கு வரவழைத்து, மரியாதை செய்வது பற்றி.... " என்று சந்தேகத்தோடு பேசினார் ஜெயவர்மர்.

"குருவுக்கு மரியாதை செலுத்துவதில் என்ன தவறு? மகாராணியாருக்கு அவருடைய போதனைகளில் ஈடுபாடு."

"மக்களிடையே அந்த ஆசிரமம் பற்றி நல்ல எண்ணம் இல்லை. எதிர்ப்பு இருக்கிறது. தாங்கள் ஒரு முறை அங்கு விஜயம் செய்து பார்ப்பது நல்லது என்று எண்ணுகிறேன்."

இதைக் கேட்டு முதன்மந்திரி கலகலவெனச் சிரித்தார். "ஏன்? நானும் அவருடைய யோகமுறையைப் பயிலவா?" என்று கேட்டு மீண்டும் சிரித்தார்.

"மகாராணியாரின் சர்வாதிகாரப் போக்குக்கு யோகியின் போதனையும் காரணமாக இருக்கலாமோ?" என்று கேட்டார் களத்தூர் கோட்டத் தலைவர்.

"யோகி பரமாச்சாரிக்கு அரசியலில் ஈடுபாடு கிடையாது. ஏதோ ஒருவிதத் தியானமுறையைப் பயிற்றுவிக்கிறார். அதற்காக ஆசிரமம் அமைத்திருக்கிறார். ஆசிரமத்தின் வளர்ச்சிக்காக அரண்மனையின் சலுகைகளைப் பெற

முயல்வதில் என்ன தவறு? பொறாமை கொண்டவர்கள் ஊரில் எதையாவது சொல்லித் திரிவார்கள்" என்றார் முதன் மந்திரி. பிறகு "மகாராணியாரின் சர்வாதிகாரப் போக்குக்கு இளவரசர் தாம் காரணம்" என்றார்.

அப்போது ஜெயவர்மர் குறுக்கிட்டுச் சொன்னார்:

"சித்திரமாயனின் நடவடிக்கைகளை மகாராணியார் கண்டிப்பதாகவும் தெரியவில்லை. சித்திரமாயனை அவனுடைய மனைவி ஆட்டிப்படைக்கிறாள். உண்மையில் நாட்டை ஆள்பவர் மகாராணியா அல்லது ராணியாரின் மருமகளா என்பதே புரியவில்லை" என்றார். பிறகு, "நகரத்தின் எல்லையில் நகரசுத்திப் பணியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த குடியிருப்பு நிலம் முழுவதும் இரண்டாவது மந்திரி அச்சுதப்பட்டரின் மைத்துனருக்கு மான்யமாக வழங்கப்பட்டிருக்கிறது. இது ராணியாரின் மருமகளின் ஏற்பாடு என்று தகவல் கிட்டியிருக்கிறது" என்றார்.

"அதை நான் முன்பே மறுத்துவிட்டேனே" என்றார் முதன்மந்திரி.

"இன்று மாலைதான் அங்கு பறையடித்து அறிவித்தார்கள். என் வீரர்கள் கேட்டதற்கு இளவரசரின் உத்தரவு என்றார்களாம்."

"ஓ...."—முதன்மந்திரி சிந்தனையில் ஆழ்ந்தார். தமக்குள்ளேயே, "அச்சுதப்பட்டர் இதை தடுத்திருக்கலாமே" என்று முனகினார்.

"இது மாதிரியான விஷயங்களெல்லாம் மந்திரிசபையின் முன் விவாதிக்கப்பட்ட பின்தான் முடிவாகும். ஆனால் இப்போது அந்த நடைமுறைகளை நிறுத்திவிட்டு, இளவரசரே உத்தரவு பிறப்பிப்பதென்றால்... அச்சுதப்பட்டர், சின்ன ராணி மேகலாவைத் தூண்டிவிட்டுத் தம்

முடைய காரியங்களைச் சாதித்துக் கொள்வதாகத் தெரிகிறது." – செங்கரைக் கோட்டத் தலைவர் பொருமினார்.

"நாட்டின் முக்கியமான விஷயங்களில் முடிவெடுக்கும் போது, கோட்டத் தலைவர்களுக்கும் அறிவித்து விட்டுத் தான் செய்யப்படுவது வழக்கம், எந்த விதிமுறைகளைப்புகுத்துவதாக இருந்தாலும், மந்திரிசபையைக் கூட்டி, சபையின் ஆலோசனைகளைப் பெற்றபிறகே செயலுக்குக் கொண்டு வரப்படும். இப்போது, கட்டளைகள் நேரடியாக அரண்மனையிலிருந்து செயல்படுத்தப்படுவது கவலையை அளிக்கிறது" என்றார் களத்தூர் கோட்டத்தலைவர்.

"நீங்கள் எல்லாரும் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நானும் இதுபற்றிச் சிந்திக்காமல் இல்லை. நீங்கள் வீரப்போட்டியைப் பார்த்துவிட்டு, நிம்மதியாக உங்கள் கோட்டங்களுக்குச் செல்லுங்கள்" என்றார் முதன் மந்திரி. அவருடைய குரலில் கவலை தொனித்தது.

கூட்டம் முடிந்து கோட்டத் தலைவர்கள் விடைபெற்றுச் சென்றபோது, அவர்களிடம் உற்சாகமில்லை. முதன்மந்திரியின் வாக்கில் நம்பிக்கை வைத்து ஓரளவு மனச் சமாதானத்துடன் சென்றனர். கடைசியாக, காஞ்சிநகர் பாதுகாவல் தலைவர் விடைபெற்றபோது, "வீரப்போட்டி நடைபெறும் சமயத்தில் உங்கள் உளர்க்காவல் படையினரை ஜாக்கிரதையாகக் கண்காணிக்கும்படி செய்யுங்கள். வீரத்திருவிழாவின் ஆரவாரத்தைப் பயன்படுத்தி வேறு ஏதாவது தீமைகள் நேரலாம். விழிப்புடனிருங்கள்" என்றார் முதன் மந்திரி.

"அப்படி ஏதாவது நடைபெறலாம் என்று எதிர்பார்க்கிறீர்களா?" என்று ஜெயவர்மர் கவலையுடன் கேட்டார்.

"முன் ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னேன். அவ்வளவுதான்" என்றார் முதன்மந்திரி.

ஜெயவர்மர், தம்முடைய மாளிகைக்குத் திரும்பிய போது, மனம் குழம்பிப்போயிருந்தார். தலைநகரிலேயே கொடுமையான குற்றங்கள் நடைபெற்றதை அறிந்து, மனம் கலங்கியிருந்தார்.

8. பிரேமவர்த்தினி

பல்லவநாட்டுப் பெரிய நகரங்களில் அறங்கூர் அவையங்கள் இருந்தன. அவற்றில்தாம் வழக்குகள் விசாரணை செய்யப்படும். அதில் தலைவராக அமர்ந்து விசாரித்துத் தீர்ப்பு வழங்குபவரை, மந்திரிசபையின் ஆலோசனையைக் கேட்டே மன்னர் நியமிப்பது வழக்கம்.

அந்த அவைத் தலைவரின் தீர்ப்பை எதிர்த்து முறையிட, தலைநகரான காஞ்சியில், தர்மாசனம் என்ற மன்றம் ஒன்றிருந்தது. அந்த மன்றத்தில் மன்னரே அமர்ந்து மேல் முறையீட்டைக் கேட்டுத் தீர்ப்பு வழங்கி வந்தார். இக்காலத்தில் மாவட்ட நீதிமன்றம், உயர்நீதிமன்றம் என்று இருப்பது போன்ற ஓர் அமைப்பு, அக்காலத்திலும் இருந்தது.

அந்த அறங்கூர் மன்றங்களில் அக்காலத்திலேயே லஞ்சம் இடம் பெற்றிருந்தது என்று பல்லவ மன்னரான மகேந்திரவர்மனே குறிப்பிட்டுள்ளார்.*

காஞ்சிமாநகரின் அறங்கூர் அவைத் தலைவரின் வீட்டுக் கதவு நள்ளிரவில் தட்டப்பட்டது. அந்நேரத்தில் வீடு தேடி வந்தவரைக் கண்ட அறங்கூர் அவைத் தலைவர் திகைப்புற்றார். தம்மைத் தேடி வந்திருப்பவர், பல்லவ

---

* இக்கால நீதிமன்றங்களைப் பற்றிய செய்திகளைப் படித்துப் பொருமிக் கொண்டிருக்கும் வாசகர்கள், 'பழங்காலத்தில்கூட நீதிமன்றங்களில் ஊழல் இருந்ததே!' என்று மனச்சாந்தி அடைந்துகொள்ளலாம்.

சாம்ராஜ்யத்தின் இரண்டாவது மந்திரி அச்சுதப்பட்டர் என்பதை அறிந்த தலைவருக்குக் கையும் காலும் ஓட வில்லை.

"உம்மிடம் ஒரு முக்கியமான காரியமாக வந்திருக் கிறேன்" என்றார் அச்சுதப்பட்டர்.

"மந்திரி அவர்கள் சொன்னதைச் செய்யக் காத்திருக் கிறேன்" என்றார் தலைவர், குழைந்தபடி.

"உம்முடைய பதவிக்காலம் முடிய இன்னும் இரு திங்களே இருக்கின்றன. மேற்கொண்டு ஓராண்டிற்கு உம்மையே தலைவராக நியமிக்க நான் முயற்சி செய்யலாம் என்று எண்ணுகிறேன்" என்றார் அச்சுதப்பட்டர்.

இதைக் கேட்டதும் தலைவர் இன்னும் குழைந்தபடி, "மிக்க மகிழ்ச்சி. தங்கள் உதவியை ஒருநாளும் மறக்க மாட்டேன்" என்றார்.

"எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும்."

"தாங்கள் கட்டளையிட்டாலே செய்யக் காத்திருக் கிறேன்."

"நாளை அறங்கூர் அவைக்கு ஒரு குற்றவாளி கொண்டு வரப்படுவான். முதன்மந்திரியின் சார்பில் அவனைக் கொண்டு வருவார்கள்."

"நான் என்ன செய்யவேண்டும்?" என்று தலைவர் சந்தேகத்துடன் கேட்டார்.

"அவனை விடுதலை செய்து தீர்ப்புக் கூறவேண்டும்."

"ஆ.... !" தலைவர் பயத்தினால் அலறிவிட்டார். "விசாரிக்காமல் எப்படித் தீர்ப்புக் கூறமுடியும்?" என்று பதற்றத்துடன் கேட்டார்.

"நடந்தது இதுதான். ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு மரணமடைந்திருக்கிறாள். அவைக்குக் கொண்டுவரப்படும் குற்றவாளி, குற்றத்துக்கு உடந்தையே தவிர, அந்தக் குற்றத்தைப் புரியவில்லை. பெண்ணின் சடலத்தை அகழியில் வீசியபோது அகப்பட்டுக் கொண்டான்."

"இது மாபெரும் குற்றமல்லவா? எப்படி விடுதலை செய்ய முடியும்? அதுவும், அறங்கூர் அவையத்தில் நகரத்து மக்களும் வந்திருப்பார்களே."

"இதற்குத் தகுந்த சாட்சி ஏதும் கிடையாது. குற்றவாளி தப்பிவிட்டான்."

"முதன்மந்திரியிடமிருந்து வரும் வழக்காயிற்றே" என்று பயந்து நடுங்கி நின்றார் தலைவர்.

"இதில் மிகமுக்கியமான நபர் தலையிட்டிருப்பதால் தான் நான் வந்திருக்கிறேன். நீர் அவனுக்குக் கொலை தண்டனை வழங்கிவிட்டால் பிறகு, அவன் குற்றவாளியைக் காட்டிக் கொடுத்துவிடுவான்."

அறங்கூர் அவைத்தலைவர் தயங்கினார். அச்சுதப் பட்டர் சொன்னார், "நீர் தயங்க வேண்டியதே இல்லை. உம்முடைய தீர்ப்பைப் பொறுத்துத்தான் உம்முடைய பதவி காலத்தை ஓராண்டுக்கு நீட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும். இதை மனத்தில் கொண்டு நாளை நீர் தீர்ப்புக் கூற வேண்டும்."

"உண்மையான குற்றவாளி யார்?"

"அது ராஜாங்க இரகசியம். அதை நான் சொல்வதற்கில்லை. இளவரசருக்கு வேண்டிய ஒரு நபர். அவரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, இளவரசருக்கு. நீர் செய்யும் இந்த உதவி, இந்த சாம்ராஜ்யத்துக்கே செய்யும்

உதவி மாதிரி. இதற்குமேல் நான் ஏதும் சொல்வதற்கில்லை" என்று கூறிவிட்டு, தலைவரின் பதிலை எதிர்பாராமலே எழுந்து வாசலை நோக்கி நடந்தார் அச்சுதப்பட்டர்.

அங்கிருந்து புறப்பட்ட அவருடைய பல்லக்கு, அரண்மனையின் தோட்டத்தில் போய் இறங்கியது. அரண்மனையில் இளவரசன் சித்திரமாயன், அவருக்காக ஆவலுடன் காத்திருந்தான்.

* * *

மறுநாள் காலையில் முதன்மந்திரி தரணி கொண்ட போசர், அரண்மனைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது அவருடைய மெய்க்காவல் வீரன் ஒருவன், அவருக்கு எதிரே பணிவுடன் நின்றான்.

"அறங்கூர் அவையத்துக்குக் குற்றவாளியை அழைத்துச் செல்ல வேண்டாம். நம்முடைய கண்காணிப்பிலேயே இருக்கட்டும். அவனை விடுவிக்கவோ, கொலை செய்யவோ முயற்சி நடக்கலாம். எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று கட்டளை இட்டுவிட்டுப் பல்லக்கில் ஏறினார், முதன்மந்திரி.

அரண்மனையின் பிரதான மண்டபத்தினுள் முதன்மந்திரி சென்றதுமே, மகாராணியின் மெய்க்காவலர் இருவர் அவரை எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். உள் மண்டபத்தில் நுழைந்ததுமே, மகாராணி பிரேமவர்த்தினியின் கவர்ச்சி, அந்த மண்டபம் முழுவதும் பரவி நிறைந்திருப்பது போல் உணர்ந்தார், முதன் மந்திரி. மகாராணியின் அருகில் இளவரசன் சித்திரமாயன் இருந்ததைக் கண்டதும் சற்றுத் தயங்கி நின்றார்.

"முதன் மந்திரியாரே, வாருங்கள். இங்கே இளவரசன்

தானிருக்கிறான். சும்மா வாருங்கள்" என்று வரவேற்றாள் பிரேமவர்த்தினி.

முதன் மந்திரி, வலிய புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, சம்பிரதாயமாக மகாராணிக்கும், இளவரசனுக்கும் வணக்கம் செலுத்திவிட்டுத் தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்தார்.

மகாராணியின் அழகும், கம்பீரமும் உலகப் பிரசித்தம். தரணி கொண்ட போசர், அவளைச் சந்திக்கும்போதெல்லாம் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார். அவளுடைய கம்பீரம், எதிராளியின் சிந்தனையைப் பாதித்துவிடக்கூடிய அளவுக்கு அதீதமானது.

"வீரப் போட்டிக்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்தாகிவிட்டதா?" – மகாராணி கேட்டாள்.

"எல்லாம் நல்லபடியாக நடைபெறுகின்றன. ஆனால், மக்களிடந்தான் உற்சாகமில்லை."

"ஏன்...."

"மன்னர் இல்லாதது ஒன்று. இடைஇடையே அவர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்கள் வேறு" என்று கூறிவிட்டுப் பக்கத்திலிருந்த இளவரசனைப் பார்த்தார்.

"என்ன சங்கடங்கள்?" – மகாராணி கேட்டாள்.

"கைலாசநாதர் கோயிலின் முன்னாலிருந்த அங்காடிகள் இடிக்கப்பட்டன..."

முதன் மந்திரி கூறி முடிப்பதற்குள் சித்திரமாயன் குறுக்கிட்டு, "அதற்குத்தான் நீங்கள் ஈடுகட்ட உத்தரவு கொடுத்துவிட்டீர்களே" என்றான்.

"பொருள் நஷ்டந்தானே? இடிக்கப்பட்டபோது அவர்களுக்கு ஏற்பட்ட மனக் கஷ்டத்தை எந்த நஷ்டஈடும் தணிக்காதே."

"கோயில் வீதியைச் சுத்தப்படுத்தி அழகு படுத்தியது தவறு என்கிறீர்களா, மந்திரி அவர்களே?" என்று கேட்டான்.

"இளவரசரின் நோக்கத்தில் நான் தவறு கூறவில்லையே. அப்படி அவர்கள், புனிதமான இடத்தில் கடை பரப்பியதும் தவறுதான்."

"பின்னே...."

"நிறைவேற்றிய விதந்தான் மக்களுக்கு வருத்தத்தைக் கொடுத்திருக்கிறது, தேவியார் அவர்களே" என்று மகாராணியைப் பார்த்துப் பதில் சொன்னார் மந்திரி.

தன்னைப் பார்த்து பதில் கூறாமல் ராணியிடம் கூறியது சித்திரமாயனுக்குக் கோபத்தை மூட்டியது.

"நீங்கள் நஷ்டஈடு கொடுக்க உத்தரவிட்டதுதான் தவறு" என்றான் கோபத்துடன்.

"இளவரசர் முதலில் நஷ்டஈட்டை அறிவித்துவிட்டுப் பிறகு இடித்திருக்க வேண்டும். அதுதான் முறை. ஆட்சியின் பண்பும் அதுதான்."

"ஓ... எனக்குப் பண்பாட்டைக் கற்றுத் தர முயல்கிறீர்களா" என்று சீறினான், சித்திரமாயன்.

"நான் கற்றுத் தரவில்லை இளவரசே, எடுத்துச் சொல்கிறேன்" என்று கூறி, மெல்லச் சிரித்தார், முதன் மந்திரி. அந்தச் சிரிப்பில் உள்ளடங்கியிருந்த கோபத்தையும், ஏளனத்தையும் புரிந்து கொண்ட மகாராணி, குறுக்கிட்டுக் கூறினாள்: "இளவரசன் சிறுவன் தானே. போகப்போகத் தெரிந்து

கொள்வான். இளம் இரத்தம். நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு."

"கூடுமானவரை இளவரசர், அவசரப்பட்டு ஆட்சிப் பொறுப்பில் தலையிடாமலிருந்தால் நல்லது" என்றார், மந்திரி.

"ஏன்? ஆட்சியில் எனக்கு அக்கறை இருக்கக் கூடாதா?" கோபத்துடன் கேட்டான் சித்திரமாயன்.

முதன் மந்திரி புன்முறுவல் மாறாமலே பதில் சொன்னார். "இளவரசருக்குக் கோபம் வருகிறது. அக்கறை இருக்க வேண்டியதுதான். இந்த நாட்டை வருங்காலத்தில் ஆள வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. ஆனால், இப்போது ஆட்சியின் நடைமுறைகளில் அவசரப்பட்டுத் தலையிடும்போது, நிர்வாகக் குழப்பங்கள் ஏற்படும் என்றுதான் சொல்கிறேன்."

அந்தச் சமயத்தில் இளவரசனைக் காண யாரோ காத்திருப்பதாக ஒரு காவல் வீரன் வந்து அறிவிக்கவே, இளவரசன் அந்த மண்டபத்தை விட்டு அவசரமாக வெளியேறினான். சித்திரமாயன் சென்றதும், மந்திரி, மகாராணியிடம், "தேவியார் இளவரசரைக் கண்டித்து அடக்கினால் நல்லது என்று எண்ணுகிறேன்" என்றார்.

"கண்டித்து அடக்கும் அளவுக்கு அவனால் என்ன கேடு விளைகிறது, முதன்மந்திரியாரே?" என்று பிரேமவர்த்தினி கேட்டபோது, அவளுடைய குரலில் தொனித்த கோபத்தை மந்திரி புரிந்து கொண்டார். மகாராணி தொடர்ந்து பேசினாள். "காஞ்சி நகரை அழகுபடுத்த அவன் விரும்பியது தவறா? கோயிலைச் சுற்றி அசுத்தப்படுத்திக் கொண்டிருந்த அங்காடிக்காரர்களை அப்புறப்படுத்தியது தவறு

என்கிறீர்களா ? நான்தான் அவனுடைய முயற்சிக்கு உளக்க மளித்தேன்."

தரணி கொண்ட போசர் முகம் கோணாமல் புன்முறு வலுடனேயே பதில் சொன்னார். "மக்களின் மனப்போக்கை தேவியாருக்குத் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை."

"அதற்காக மக்கள் எப்படி நடந்து கொண்டாலும் நாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிறீர்களா ?"

"தண்டிக்க வேண்டிய தருணம் வரும்போது தாட் சண்யம் காட்ட வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால் புறக்கத்திலுள்ள நடைமுறைகளை மாற்றியமைக்க நாம் விரும்பும்போது, நிதானமாகத்தான் செயல்பட வேண் டும். மன்னர் போர்க்களம் சென்ற பிறகு, காஞ்சிநகரில் மக்களின் பாதுகாப்புக்குக் கூடக் குந்தகம் நேரிடுகிறது."

இதைக் கேட்டதும் மகாராணி கோபத்துடன், "மந்திரியாரே ! மன்னர் இல்லாததால் இப்போது என்ன தீமை நடந்துவிட்டது ? சக்கரவர்த்தி இல்லாத வேளையில் நான் நல்ல முறையில் ஆளவில்லை என்று குறை கூறுகிறீர் களா ?" என்று கேட்டாள்.

"மன்னிக்க வேண்டும் மகாராணியாரே. அந்த எண்ணத்தில் நான் சொல்லவில்லை. மன்னர் இல்லாத சமயத்தில் ஆட்சியில் கொடுமை எதுவும் நடைபெற்றதாக அவச்சொல் மக்களிடமிருந்து வந்துவிடக்கூடாது என்று தான்.... தங்களை நம்பித்தான் ஆட்சிப் பொறுப்பை மன்னர் ஒப்படைத்திருக்கிறார். தாங்கள் ஆட்சித் திறனில் குறைந்த வரல்லர். பொதுவாக மக்களின் மனத்தில் திருப்தி இல்லை என்பதைத்தான் தெரிவிக்கிறேன். தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை."

மகாராணி, கோபம் தணிந்தவளாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"மந்திரி அச்சுதபட்டருடைய உறவினருக்கு இளவரசரே நிலமான்யம் வழங்கிவிட்டார்" என்றார், முதன் மந்திரி.

"ஏன், நாட்டின் இளவரசனுக்குத் தனக்கு வேண்டியவர்களுக்கு மான்யம் வழங்கும் உரிமை இல்லை என்கிறீர்களா?"

"அந்த இடம் நகரசுத்திப் பணியாளர்களின் குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்டு, மக்களிடையே அறிவிப்பும் மன்னர் இருக்கும்போதே செய்தாகிவிட்டது. இப்போது, அதை மறுத்து ஒருவருக்கு மான்யமாக வழங்குவது நியாயமில்லையே. மேலும் இந்த மாதிரி மான்யங்கள் பற்றிய விஷயங்களை முன்கூட்டியே மந்திரிசபையில் விவாதித்து, ஆலோசனை பெற்ற பிறகுதான் முடிவு செய்யவேண்டும்."

"ஓ... ஒவ்வொரு விஷயத்துக்கும் மந்திரிசபையைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமோ? அப்படியானால் மன்னர் எதற்கு? படைகள் எதற்கு?" – மகாராணி படபடப்புடன் கேட்டாள்.

முதன் மந்திரி அமைதியாக, "மந்திரி சபையின் ஆலோசனைப்படி நடப்பதற்கு" என்றார்.

"நான் அதற்குத் தயாரில்லை."

"தேவியாரின் முடிவு இதுதானென்றால் இந்நாட்டிற்கு மந்திரிகளே தேவையில்லை. நான் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன்" என்று கூறியவாறே முதன்மந்திரி, தம்முடைய கைவிரலில் கிடந்த மோதிரத்தைக் கழற்றினார்.

மகாராணி திடுக்கிட்டாள். "நான் பொதுவாக மந்திரி

சபையைக் குறிப்பிட்டேனே தவிர, முதன் மந்திரியைக் குறிப்பிடவில்லையே. நீங்கள் முத்திரை மோதிரத்தை கழற்ற வேண்டிய அவசியமில்லை. அணிந்து கொள்ளுங்கள்" என்றாள்.

"மந்திரி சபைக்கு நான்தான் தலைவன். சபையின் கௌரவம் குறையாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு என்னுடையது" என்றார், முதன்மந்திரி, திடமாக.

மகாராணி சற்று நேரம் தரையைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். பிறகு மந்திரியைப் பார்த்து, "உங்களுடைய கடமையை நான் உணர்கிறேன். வேறு எதாவது சொல்லவேண்டுமா?" என்று அலுப்புடன் கேட்டாள்.

"கோட்டத் தலைவர்களிடம் கொஞ்சம் அதிருப்தி நிலவுகிறது" என்றார் மந்திரி.

"என்ன?"

"அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்காமல், அவர்களுடைய கோட்டங்களில் நம்முடைய ஆணைகளை மக்களுக்கு அறிவிப்பதை அவர்கள் விரும்பவில்லை."

"அரசின் கட்டளையை ஒவ்வொரு கோட்டத் தாரிடமும் அனுமதி பெற்றுத்தான் நிறைவேற்ற வேண்டுமோ?" என்று கோபத்துடன் கேட்டாள் மகாராணி.

"வேண்டும் என்று விதிமுறை இல்லை. ஆனால் அதுதான் சம்பிரதாயம். நாம் அவர்களை மதிக்கிறோம் என்று அர்த்தம்."

"கோட்டத் தலைவர்கள் நம் அதிகாரத்துக்கு உட்பட்டவர்கள்தானே?

"இருந்தாலும், அவர்கள் சாதாரண பிரஜைகளைப்

போலல்லவே. அவர்கள் கோட்டங்களின் தலைவர்கள், ராஜப்பிரதிநிதிகள்."

"ஓ...."—மகாராணி ஏளனமாக முகத்தைச் சுளித்தாள். "யாராயிருந்தாலும், அரசின் ஆணைக்கு உட்பட்டவர் கள்தாம். அவர்களிடம் கேட்டுக்கொண்டுதான் கட்டளை களைச் செயல்படுத்துவதென்பது வழக்கத்திலிருந்தால், அது மோசமான வழக்கமே. அதை மாற்றியமைக்க வேண்டியதுதான்" என்றாள். பிறகு, "வேறு ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமா?" என்று கேட்டாள்.

"நேற்று ஒரு கொடுமை காஞ்சியில் நடைபெற்று விட்டது" என்றார் தரணிகொண்டபோசர்.

"கடைகளை இடித்ததைத்தானே சொல்லவருகிறீர் கள்?" என்று எரிச்சலுடன் கேட்டாள் மகாராணி.

"அங்காடிகள் இடிக்கப்பட்டது மிகவும் அற்பமான விஷயம், தேவியாரே; நேற்று நடைபெற்ற கொடுமை பல்லவ ஆட்சிக்கே அவமானமானது. ஒரு பெண் கற்பழிக் கப்பட்டு மரணமடைந்தாள்."

"ஆ..."— மகாராணி திடுக்கிட்டாள். "காஞ்சியிலா? மந்திரியாரே யார் அந்தக் கொடுமையைச் செய்தவன்? அந்த அபலை யார்?" — படபடப்புடன் வினவினாள்.

"குற்றவாளி தப்பிவிட்டான். கோயிலுக்குச் சென்ற பெண்ணைக் கடத்திச் சென்று கொடுமை புரிந்திருக்கிறான். பெண்ணின் சடலம்தான் அகழியில் அகப்பட்டது."

மகாராணியின் முகம் பயத்தினால் வெளுத்துவிட்டது. தலையைக் குனிந்து சிந்தித்தவாறு அமர்ந்திருந்தாள். "குற்றவாளியை எப்படியும் கண்டுபிடித்துத் தண்டித்தே ஆகவேண்டும்" என்றாள் ஆவேசத்துடன்.

அப்போது உள்ளே வந்த சித்திரமாயன், "எந்தக் குற்றவாளியை?" என்று கேட்டவாறு, மகாராணியின் அருகேயிருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

"நேற்று ஒரு பெண்ணைக் கொலை செய்த குற்ற வாளியை" என்று கூறிய முதன் மந்திரி, இளவரசனைக் கூர்ந்து பார்த்தார்.

"ஓ.... கொலையா? குற்றவாளி அகப்பட்டானா?" என்று கேட்டான் இளவரசன்.

"தப்பிவிட்டானாம்" என்று கூறிவிட்டு, மகாராணி யைப் பார்த்து, "நான் விடைபெறுகிறேன், தேவியாரே" என்றார், முதன்மந்திரி.

அவருடன் அரண்மனை வாயில்வரை சென்ற இளவ ரசன், பல்லக்கில் மந்திரி ஏறப்போகும் தருணத்தில், "நேற்று யாரோ ஒரு குற்றவாளியைப் பிடித்திருப்பதாகத் தகவல் வந்ததே" என்றான்.

மந்திரி ஒன்றும் புரியாதவர்போல் அவனைத் திரும்பிப் பார்த்தார். "அப்படியா...? என்ன குற்றமாம்?" என்று கேட் டார்.

"அது முதன் மந்திரிக்கல்லவா தெரிந்திருக்கும்."

தரணிகொண்டபோசர் மெல்லச் சிரித்தார். "நகரில் நடைபெறும் குற்றங்கள் அனைத்தையும் நான் தெரிந்து வைத்துக் கொள்ள முடியுமா? குற்றவாளியைக் காவல் படையினர் சிறைப்படுத்தியிருப்பார்கள்" என்றார்.

"இன்று அறங்கூர் அவையத்தில் அவனை ஒப்படைப் பதாகக் கூடச் செய்தி கிடைத்ததே."

"இளவரசர் யாரோ ஒரு குற்றவாளியின்மீது இவ்

வளவு அக்கறை கொண்டு கேட்கிறீர்களே, குற்றவாளி தங்களுக்குத் தெரிந்தவனா?" என்று கேட்ட முதன்மந்திரி, சித்திரமாயனை உற்றுப் பார்த்தார்.

சித்திரமாயன் துணுக்குற்றான். "இல்லை, ஏதோ தகவல் வந்தது. அவ்வளவுதான்" என்று கடுகடுப்புடன் கூறினான். பிறகு மெல்ல, "முதன் மந்திரி, இரவு பகலென்று பாராது பணியாற்றுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறிவிட்டுக் குறும்பாகச் சிரித்தான்.

"தாங்கள் எதை மனத்தில் கொண்டு இதைச் சொல்கிறீர்கள் என்று புரியவில்லையே."

"நேற்று இரவு, நடு ஜாமத்துக்கு மேலும் உங்கள் மாளிகையில் கோட்டத் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றதைத்தான் சொல்கிறேன்."

"ஓ... அதைக் குறிப்பிடுகிறீர்களா?"

"கோட்டத் தலைவர்களுக்குப் பகலில் நேரம் வாய்க்கவில்லை போலிருக்கிறது."

முதன் மந்திரி சிரித்துக் கொண்டே, "அப்படித்தான் நினைக்கிறேன். அரசாங்கப் பணியென்றால், இரவு பகல் பார்க்க முடியுமா? எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போது கவனிக்க வேண்டியதுதானே" என்றார்.

"ஆமாம், ஆமாம், முதல் மந்திரியாயிற்றே. பல்லவ சாம்ராஜ்யத்தின் மந்திரி சபைத் தலைவருக்கு எந்நேரமும் பணியாற்ற வேண்டிய கடமை இருக்கிறதே" என்று கூறி மெல்ல நகைத்தான், சித்திரமாயன்.

"இளவரசருக்கு என்னுடைய மந்திரிசபை பற்றி நல்ல அபிப்பிராயம் இருக்கிறது என்பதை அறிய மிக்க மகிழ்ச்சி

யடைகிறேன்" என்று கூறியவாறே பல்லக்கில் ஏறப்போன முதன் மந்திரி, சட்டென்று திரும்பி, "நான் மட்டுமென்ன, என் மந்திரிசபையில் உள்ள மற்றவர்களும் இப்படியே நேரம் காலம் பாராமல் பணியாற்றுகிறார்கள், இளவரசே! நேற்று கூட இரவு நடு ஜாமத்துக்கு மேல் இரண்டாவது மந்திரி, அச்சுதப்பட்டர், அறங்கூர் அவைத் தலைவரின் இல்லத்துக்குச் சென்று வந்தார்!" என்று கூறிவிட்டுப் பல்லக்கில் ஏறினார். கடைக்கண்ணால் சித்திரமாயனைக் கவனித்தார். அவனுடைய முகம் இறுகிப் போயிருந்தது. கண்களில் குரோதம் நிரம்பியிருந்தது.

தரணிகொண்ட போசர், தம்முடைய மாளிகையை அடைந்தபோது, அவருக்காகக் காத்திருந்த ஜெயவர்மர், பரபரப்புடன் விரைந்து பல்லக்கை நெருங்கி வந்தார்.

"குற்றவாளியை அறங்கூர் அவையத்துக்கு அனுப்ப வேண்டாம் என்று கட்டளை இட்டீர்களாமே?" என்று கேட்டார்.

"அனுப்பி என்ன பயன்? அவைத் தலைவர் அவனை விடுதலை செய்யக் காத்திருக்கிறார்."

"ஆ....!" வியப்புத் தாளாமல் கூவினார், ஜெயவர்மர்.

"ஆமாம். விசாரணையெல்லாம் பெயருக்குத்தான் நடைபெறும்."

"அவைத் தலைவர் நேர்மையானவராயிற்றே."

"நேற்றுவரை" என்று கூறிச் சிரித்தார் முதன் மந்திரி.

"நம்பவே முடியவில்லையே" என்று மிகுந்த மனச் சோர்வுடன் கூறினார், ஜெயவர்மர்.

"அரசியல் காரியங்களில் சிலர் எப்படியெல்லாமோ

மாறி, ஈனத்தனமாக நடந்து கொள்வார்கள். பதவி ஆசை, ஒருவனை எவ்வளவு இழிந்த செயலையும் செய்ய வைத்துவிடும். ஜெயவர்மரே, எல்லாரும் உங்களைப் போல் நேர்மைக்காக ஒரு நொடியில் பதவியைத் துறக்கமுன் வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது" என்றார் முதன் மந்திரி.

ஜெயவர்மர் பெருமூச்சு விட்டார். "யார்தான் ஈனர் களாக மாறுவார்கள் என்றில்லையா? நீதி வழங்கும் அறங்கூர் அவைத் தலைவர் கூடவா...?" என்று வெறுப்பு டன் தலையில் அடித்துக்கொண்டார். பிறகு, மிகுந்த ஆவலு டன் "குற்றவாளிதான் யார்? அதாவது தெரிந்ததா?" என்று கேட்டார்.

"சற்றுப் பொறுங்கள். சீக்கிரமே உங்களுக்கு உண்மை தெரியவரும்" என்றார் முதன்மந்திரி.

"இந்தக் குற்றவாளியைச் சிறைக்கு அழைத்துச் செல் லட்டுமா?"

"இப்போது இவன் என் பொறுப்பிலேயே இருக் கட்டும்" என்றார், முதன்மந்திரி.

9. தியானப் பயிற்சி

அரண்மனைத் தோட்டத்தில் குதிரை பூட்டிய இரதம் ஒன்று வந்து நின்றது. அது அரண்மனையை சேர்ந்த அலங்கார இரதம். மிக முக்கியமான நபரை அரண்மனைக்கு அழைத்து வரவேண்டுமென்றால், அந்த இரதந்தான் அனுப்பப்படும்.

அந்தக் காலத்தில், இரதங்கள், போர்ப்படையில் பயன் படுத்தப்படவில்லை. பெரிய நகரங்களில் ராஜகுடும்பத்தி

னரும், பிரபுக்களும் செல்வதற்காக, குதிரை பூட்டிய சிறு இரதங்களிருந்தன. செல்வச் செழிப்புக்குத் தக்கபடி இரதங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மன்னர்களும், மகாராணிகளும் செல்லும் இரதங்கள் மட்டும் இரு குதிரைகள் பூட்டப்பட்டவனவாயிருந்தன. அப்படி ஓர் அலங்கார இரதந்தான் அரண்மனைத் தோட்டத்தில் வந்து நின்றது.

யோகி ருத்திர பரமாச்சாரி, அதிலிருந்து இறங்கினார். ஐம்பது வயதிருக்கும். அடர்ந்த குட்டையான தாடியும், மீசையும் முகத்துக்கு வசீகரத்தையும், கண்ணியமான தோற்றத்தையும் கொடுத்தன. அடர்த்தியான தலைமுடி தோளில் புரண்டு கொண்டிருந்தது. கண்களில் தோன்றிய ஒளி, சுற்றுப்புறம் முழுவதும் பரவி, ஆக்கிரமிப்பது போலிருந்தது.

இரண்டு ஆண்டுகளாக காஞ்சி மக்களின் கவனம் அவர் மீது திரும்பியிருந்தது. அவருடைய சக்தியைப் பற்றிப் பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். நீர் மேல் நடப்பார். நெருப்பில் படுப்பார் என்றெல்லாம் வதந்தி பரவியிருந்தது. சித்துசக்திகள் கைவரப் பெற்றவர் என்று மக்கள் நம்பியதால், அவர் மீது மக்களுக்குப் பயம் தோன்றியிருந்தது, வைதிகர்கள் அவருக்கு எதிரிகளாயிருந்தனர். பேரின்ப உணர்வைப் பெற அவர் பயிற்றுவித்த தியான முறையைப் பற்றிப் பலர், பலவிதமாக விமர்சித்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய ஆசிரமத்தையே காஞ்சி நகரத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

சிற்றின்பத்தின் அடிப்படையில் கூட பேரின்பத்தை அடையலாம் என்ற அவருடைய போதனை, வைதிகர்களைத் திகைக்க வைத்தது. ஆண்–பெண் உறவிலேயே குண்டலினி சக்தியை மலரவைத்துப் பேரொளியைக்

காணமுடியும் என்ற அவருடைய எளிமையான சித்தாந்தம், அவருடைய ஆசிரமத்தினுள் ஒரு பயிற்சியாகவே போதிக்கப்பெற்று வந்ததை அறிந்து வைதிகர்கள் திகைத்தனர். எதிர்த்துப் பிரச்சாரம் கூடச் செய்தனர்.

சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கு ஒழிக்கப் பட்டு சைவ, வைணவ சமயங்கள் செல்வாக்கிலிருந்த காலம் அது. நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் சைவ சமயத்தை நன்கு வேரூன்ற வைத்திருந்தார்கள். ஆழ்வார்கள், வைணவத்தைப் பலப்படுத்தியிருந்தார்கள். அந்த வேளையில், ருத்திரப் பரமாச்சாரியின் சித்தாந்தம் வைதிகர்களிடையே கோபத்தை மூட்டியதில் வியப்பில்லை. அரண்மனையின் ஆதரவு அவருக்கு இருந்ததால், வைதிகர்களால் அவருக்குத் தீங்கிழைக்க முடியவில்லை.

இரதத்திலிருந்து இறங்கி அரண்மனை அந்தப்புரத்தின் வாயிலை நெருங்கியபோது, மகாராணியின் தாதியர் இருவர் எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். மகாராணியின் பேட்டி மண்டபத்துக்குச் சென்றதும் தாதியர் இருவரும் வெளியே நின்றுவிட்டனர். ஒருத்தி மற்றவரிடம், "இந்த வயதிலும் எப்படி இருக்கிறார் பார்த்தாயா? எவ்வளவு கம்பீரம்! முகத்தில் தான் எவ்வளவு களை! அவருடைய கண்களைப் பார்த்தாயா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"ஐயோ, அவருடைய கண்களை என்னால், ஏறிட்டே பார்க்க முடியாது. அவருடைய பார்வைக்குத் தான் எவ்வளவு சக்தி. பார்த்தவர்களை அப்படியே மயக்கிவிடும் போலிருக்கிறது!" என்றாள், மற்றொருத்தி.

"பெரிய மகான் என்கிறார்களே."

"சித்துசக்தி உள்ளவராம். இல்லையென்றால், மகாராணி இவருக்கு இவ்வளவு மரியாதை செலுத்துவார்களா."

"அவருடைய ஆசிரமத்திலே ஏதோ நடக்கிறதாமே" என்று கூறியவள், மெல்ல இரகசியக் குரலில், "காதல் லீலைகளைச் சொல்லிக் கொடுக்கிறாராமே, அப்படியா?" என்று கேட்டாள்.

மற்றொருத்தி இரகசியமாகச் சொன்னாள். "நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். அவருடைய யோக முறையில் அதுவும் ஒன்றாம். யார் வேண்டுமானாலும் தீட்சை பெறலாமாம். நாமும் ஒரு நாள் அங்கே போய்ப் பார்க்கலாமா?"

தாதிகள் இருவரும் இவ்வாறு பேசிக் கொண்டிருந்த போது, தலைமைத் தாதி அந்தப் பக்கம் வரவே, தாதிகள் இருவரும் மெல்ல அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

ருத்திர பரமாச்சாரியைப் பேட்டி மண்டபத்தின் வாயிலில் கண்டதுமே மகாராணி பிரேமவர்த்தினி பக்தியோடு எதிரே சென்று வரவேற்றாள். மான்தோல் ஆசனத்தில் அமரச் செய்தாள். குனிந்து அவரை வணங்கி நின்ற அவளுடைய நெற்றிப் பொட்டில் தம்முடைய வலது நடுவிரலின் நுனியினால் தொட்டு அழுத்தினார். அப்போது மகாராணியின் முதுகுத் தண்டில் ஒருவித உணர்வு பரவி நடுங்க வைத்தது.

"உணர்வுகளை நன்றாகக் கவனிக்கிறாயா?" என்று கேட்டார் யோகி.

எதிரே இருந்த ஆசனத்தில் மகாராணி அமர்ந்தவாறே

"தொடர்ந்து முடியவில்லையே, சுவாமி. தியானிக்கும் போது எண்ணங்கள் இடையே வந்துவிடுகின்றன" என்றாள்.

ருத்திரபரமாச்சாரி புன்முறுவலுடன் கனிவோடு அவளைப் பார்த்தார்.

"எண்ணங்களைப் பற்றிய கவலை எதற்கு? அவை வரும் போகும். மனம், எண்ணங்களுடைய பாதை. எண்ணங்கள் அங்கு உலவத்தான் செய்யும். அவைகளுக்கு இடையே போய் நீயும் சிக்கிக் கொள்ளாமல், விலகி நின்று எண்ணங்களைக் கவனி."

"ஒரு எண்ணம் மனத்தில் தோன்றி மறைந்ததும், அடுத்த எண்ணம் வந்துவிடுகிறதே, சுவாமி."

பரமாச்சாரி சிரித்தார்.

"இரண்டு எண்ணங்களுக்கு இடையே கவனி."

"இடைவெளியே இல்லையே, சுவாமி."

"இருக்கிறது. அந்த இடைவெளியில் தான் கடவுள் இருக்கிறார். இடைவெளியைக் கவனி."

"முடியவில்லையே. பிரச்சினைகள் அதிகமாகும் போது மனம் அதுபற்றித்தான் சிந்திக்கிறது" என்று அலுத்துக் கொண்டாள் பிரேமவர்த்தினி.

"நாட்டை ஆளும் பொறுப்பிலிருப்பவர்களுக்குப் பிரச்சினைகள் தோன்றிக்கொண்டேதானிருக்கும்."

"நாட்டுக்காக சில காரியங்களைச் செய்யும்போது மக்களிடமிருந்து எதிர்ப்பு வருகிறது. நாட்டுக்காக கொஞ்சம் தியாகம் செய்யக்கூடத் தயங்குகிறார்கள்."

"சாதாரண மனிதனைப் பொறுத்தவரை அவனுக்கு அவனும், அவனைச் சுற்றியிருப்பவைகளும் தாம் முக்கியம். நாடு, தியாகம் என்பவற்றைப் பற்றியெல்லாம் அவனுக்கு அக்கறை இருக்காது. ஒரு பிரஜை எதிர் பார்ப்பவையெல்லாம் நிம்மதியான வாழ்க்கையையும் அதற்குத் தகுந்த பாதுகாப்பை ஆட்சி கொடுக்கிறதா என்பதைப் பற்றியும் மட்டுந்

தான். அவனுடைய சொத்து சுதந்திரங்களைப் பாதிக்கும் படியான எந்த விதி முறைகளையும் ஏற்றுக்கொள்ள முன் வரமாட்டான்" என்றார், யோகி.

"அதனால்தான் பிரச்சினை அதிகமாகிறது. நிம்மதி யாக இருந்து தியானம் செய்ய முடியவில்லை. எண்ணங் களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. நிறுத்த முயன்றால், அதிகமாகத்தான் வந்து சூழ்கின்றன."

இதைக் கேட்டு யோகி சிரித்தார்.

"நான்தான் தியானம் என்னும் ஓடத்தை உனக்குக் கொடுத்திருக்கிறேனே. ஓடத்தைச் செலுத்தவேண்டியது தான் உன் வேலை. ஓடத்தைச் சுற்றித் தண்ணீரில் தொடர்ந்து வரும் குப்பைகளையும் அழுக்குகளையும் பற்றி நீ கவலைகொள்ள வேண்டியதில்லை. எண்ணங்களோடு போராடவே வேண்டாம். ஒரு எண்ணத்தைத் தடுக்க முனைந்தால், ஓராயிரம் எண்ணங்கள் படையெடுக்கும். அவற்றை எதிர்த்து எதிர்த்து அலுத்துவிடுவாய். எண்ணங் களை அவற்றின் போக்கில் வரவிட்டுக் கவனித்துக் கொண் டிரு. அலைகளாக வரும், வந்தபடியே போய்விடும். பழகப் பழக எண்ணங்களே இல்லாத நிலையை எட்டிவிடலாம்" என்றார்.

"அந்த நிலையை என்னால் அடைய முடியுமா, சுவாமி?"

"பயிற்சியினால் அடையலாம். அந்தப் பேரானந்த நிலையை அடையவேண்டும் என்று எண்ணி எண்ணி ஏங்கவும்கூடாது. அது தானாக வந்தடையும். இந்த எளிமை யான தியான முறையைப் பழகிவா" என்றார், ருத்ர பரமாச் சாரி.

சிறிது நேரம் அவளுக்குத் தியானப் பயிற்சியளித்து விட்டுச் சென்றார். அவர் அரண்மனைக்கு வந்துவிட்டுப் போனதினால் மகாராணியின் மனத்தில் நிம்மதியும், புத்துணர்வும் ஏற்பட்டன. ஆட்சிப் பிரச்சினையில் அவள் சோர்வுற்றபோதெல்லாம் ருத்திர பரமாச்சாரியின் அறிவுரைகள் தெம்பூட்டின.

அன்று யோகி வருவதற்கு முன் பிரேமவர்த்தினி மிகுந்த சஞ்சலத்துக்குள்ளாகியிருந்தாள். போர்ச் செலவை முன்னிட்டு வரி விஷயமாக அவள் இட்ட கட்டளைகளுக்குப் பல ஊர்களில் எதிர்ப்புத் தோன்றியிருந்ததாக வந்த செய்திகள், அவள் மனத்தில் கவலையை ஏற்படுத்தியிருந்தன. கட்டளைகளை அறிவிக்கச் சென்ற அதிகாரியை வல்லம் என்ற ஊரில் அடித்துக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அனுப்பிய செய்தியைக் கேட்டதும் மகாராணியின் கோபம் கொந்தளித்தது. அந்த ஊர் முழுவதையும் சூறையாடித் தீக்கிரையாக்கி விடவேண்டுமென்ற வெறி தோன்றியது. அதே சமயத்தில் முதன்மந்திரி அவளுடைய மனத்தை இன்னும் கல்லாக்கிவிட்டுப் போயிருந்தார். ருத்திர பரமாச்சாரியின் வருகைதான் அவளுடைய மனத்தில் சாந்தியை ஏற்படுத்தியது. அவர் சென்ற பிறகும் தியானத்தைத் தொடர்ந்தாள்.

தியானத்தில் அமர்ந்திருந்த பிரேமவர்த்தினிக்கு மனம் ஒடுங்கவில்லை. எண்ணங்கள் சுற்றிச் சூழ்ந்தன. அவற்றை விட்டு விலகியிருந்து கவனிப்பதைவிட்டு, எண்ணங்களுக்குள் சிக்கிப் போயிருந்தாள்.

சேச்சே, தியானம் பண்ணும்போது இதென்ன எண்ணங்கள் குறுக்கே வருகின்றன...இரண்டு எண்ணங்களுக்கு இடையே கவனிக்கச் சொன்னாரே... வாசலில்

யாரோ எட்டிப் பார்ப்பது போலிருக்கிறதே. காலடி ஓசை கேட்டதே... கண்களைத் திறக்கவா....

மகாராணி கண்களைத் திறந்தாள். வாசலில் இளவரசன் சித்திரமாயன் சிரித்தவாறு நின்று கொண்டிருந்தான்.

"சின்னம்மாவின் தியானம் கலைந்துவிட்டதோ" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான்.

"தியானம் சரியாகவே செய்ய முடியவில்லை" என்றாள், பிரேமவர்த்தினி.

"தியானம் பூஜை எல்லாம் வயதானவர்களுக்குத்தான். உங்களுக்கு எதற்கு இதெல்லாம்? துறவியாகப் போகிறீர்களா?" என்று கேட்டுச் சிரித்தான் இளவரசன்.

"தியானத்தில் மனநிம்மதி கிடைக்கும்" என்றாள் மகாராணி.

"சின்னம்மா, நம்முடைய எதிரிகளை ஒழிக்காதவரை நிம்மதியாக இருக்கவே முடியாது. நாம் எது செய்தாலும் மக்களிடையே எதிர்ப்பைத் தூண்டிவிடும் சதிவேலை நடைபெறுகிறது."

"நீ யாரைச் சந்தேகிக்கிறாய்?"

"நம்முடைய முதல் எதிரி, தரணிகொண்டபோசர் தான். நேற்று இரவு நடு ஜாமத்தில் அவருடைய மாளிகையில் கோட்டத் தலைவர்கள் இரகசியமாகக் கூடிப் பேசியிருக்கிறார்கள்."

"கோட்டத் தலைவர்களின் ஒப்புதல் இல்லாமல் நாம் கட்டளைகளை அனுப்புகிறோம் என்று அவர்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்களாம்."

"அரசகட்டளைக்கு யாருடைய ஒப்புதல் வேண்டும்? உண்மை என்ன தெரியுமா? தந்தையார் ஆட்சிப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துவிட்டுப் போனதில் சிலருக்குப் பொறாமை."

"நீ சிறுவன் என்பதால் என்னிடம் பொறுப்பை அளித்தார்."

"அந்தப் பொறுப்பை ஒரு பெண்ணை நம்பிக் கொடுத்தாரே, தங்களை நம்பவில்லையே என்ற பொறாமைதான்."

"ஓ....."–பிரேமவர்த்தினியின் புருவங்கள் சினத்தால் நிமிர்ந்தன. "யாருக்கு நம்மீது வெறுப்பு"

"இரணியவர்மர் நம்முடைய தாயாதி வழியில் உள்ளவர். ஏற்கனவே பாட்டனார் இராசசிம்மவர்மர் காலத்திலிருந்து அவருக்கு அதிகச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. கைலாசநாதர் கோயிலைக் கட்டும் பொறுப்பு முழுவதையும் பாட்டனார் அவரிடந்தானே விட்டிருந்தார்."

"இப்போது கூடப் போருக்குப் பெரும் படையைத் திரட்டி உதவியவரே அவர்தானே."

"வழக்கமாகப் போர்க்களங்களில் அவரே முன்னின்று ஒரு பகுதிக்குத் தலைமை தாங்கிப் போரிடச் செல்பவர், இந்த முறை, தாம் போர்க்களம் போகாமல், வீரர்களை மட்டும் அனுப்பி வைப்பானேன்? அவருடைய மனத்தில் ஏதோ சதித்திட்டம் இருக்கலாம்" என்றான் சித்திரமாயன்.

"இரணியவர்மருடைய நடத்தையிலிருந்து ஏதாவது தெரியவருகிறதா?"

"நேற்று கோயில் வாசலில் அங்காடிக்காரர்கள் கூடி ஊர்வலமாக அவருடைய மாளிகைக்குச் சென்று முறையிட்டிருக்கிறார்கள். குறைகளை நேரே இங்கே அரண்மனைக்கு

வந்து மகாராணியிடம் முறையிடுவது தானே. அங்காடிக் காரர்களை விசாரிப்பதற்கு அவர்தாம் கூப்பிட்டனுப் பினாராம். காஞ்சிநகரில் நடப்பவைகளைப் பற்றி விசாரிப் பதற்கு அவருக்கு என்ன அவ்வளவு அக்கறை?"

மகாராணி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஒரு பெண் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பதைக் கண்டு பொருமுகிறார்களோ என்று எண்ணிச் சீற்றம் கொண்டாள்.

"கோட்டைக் காவலுக்கு மட்டுந்தானே அவர் தளபதி. அவர் இதில் தலையிட வேண்டிய அவசியம் என்ன?" என்றான், சித்திரமாயன். பிறகு, "தரணிகொண்ட போசர் அடிக்கடி இரணியவர்மரின் மாளிகைக்குப் போய்வருகிறார். இப்போது கூட அங்குதான் போயிருக்கிறார்" என்றான்.

அந்தச் சமயத்தில் பணியாள் வந்து வாசலில் காவல் வீரன் ஒருவன் காத்திருப்பதாக அறிவித்தான். காவல் வீரனை உள்ளே அனுப்பும்படி உத்தரவிட்டான், சித்திர மாயன். சற்று நேரத்தில் உடலில் இரத்தக் காயங்களுடன் ஒரு வீரன் உள்ளே வந்தான்.

"கோட்டை வாசலுக்கு அருகில் மக்கள் கும்பலாகக் கூடி அங்கு சென்றிருந்த காவல் வீரர்களைத் தாக்கி விரட்டி னார்கள்" என்றான்.

"கும்பலுக்கு என்ன காரணம்?" – மகாராணி கேட் டாள்.

"நகர சுத்திப் பணியாளர்கள் கோட்டைத் தளபதி இரணியவர்மரைப் பார்த்துவிட்டு அந்த வழியாகத் திரும்பி யபோது, கோட்டைவாசல் பக்கத்திலிருந்த ஒரு காவல் வீரனைக் கேலி செய்து துன்புறுத்தினார்கள். சற்று தள்ளி நின்று கொண்டிருந்த நானும் இன்னும் இரண்டு வீரர்களும்

அவனுடைய உதவிக்காக விரைந்தோம். கூட்டத்தினர் திடீரென்று எங்களைத் தாக்கத் தொடங்கிவிட்டனர்...”

சித்திரமாயன் குறுக்கிட்டு, “நீ சுத்த வீரன், உடனே இங்கே ஓடிவந்துவிட்டாய். மடையா! தாக்கியவர்களில் நாலைந்து பேர்களையாவது வெட்டிச் சாய்த்துவிட்டு வந்து நின்றால் பெருமையாக இருந்திருக்கும். நீ அடிபட்டு ஓடி வந்த கதையைச் சொல்ல வந்தாயாக்கும். சீ, போ வெளியே” என்று இரைந்தான்.

அந்த காவல் வீரன் நடுநடுங்கிப் பின்வாங்கி வெளியேறினான்.

“அவர்களுக்கு என்று ஒதுக்கியிருந்த குடியிருப்பு நிலத்தை அச்சுதப்பட்டரின் மைத்துனருக்கு மான்யம் வழங்கியதன் விளைவு. எல்லாம் உன்னுடைய மனைவி மேகலாவினால் வந்தவினை இது” என்றாள் பிரேமவர்த்தினி.

“அரசு எதையும் யாருக்கும் மான்யமாக வழங்கும். அதை யார் கேட்க முடியும்? இரணியவர்மரின் மாளிகையிலிருந்தல்லவா கூட்டம் வந்ததாம். அவர்தாம் கலகத்தைத் தூண்டிவிட்டிருப்பார். அவருடைய பக்கபலம் இல்லையென்றால் பாமர மக்கள் இவ்வளவு துணிவார்களா?” என்றான் சித்திரமாயன்.

“அச்சுதப்பட்டருக்கு உதவ வேண்டுமென்று உன் மனைவி விரும்பினால் பொன்னை வழங்கட்டுமே. இப்படி ஆட்சிப் பொறுப்பில் தலையிட்டுக் குழப்ப வேண்டாம். அவளை நீ கண்டித்து வைப்பது நல்லது. அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்க நீ ஆணையிட்டதால் வந்த சங்கடந்தானே இது” என்றாள் மகாராணி.

"நமக்கு வேண்டியவர்களுக்கு நாம் சலுகை காட்டித் தானே ஆகவேண்டும். இதைக் கேட்க மக்களுக்கு என்ன திமிர்" என்று இரைந்தான் சித்திரமாயன்.

"முதன் மந்திரிகூட இப்போது அங்கே போயிருப்ப தாகத்தானே சொன்னாய்?"

"ஆமாம், அவரும் சேர்ந்துதான் தூண்டிவிட்டிருப்பார். இதையெல்லாம் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்."

"கேவலம், கீழ் நிலையில் உள்ள பணியாட்களின் கூட்டம் காவல் வீரர்களையே அடித்து விரட்டுவ தென்றால்... சித்திரமாயா, இதுபோல் இனியாரும் செய்யத் துணியாத அளவுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்" என்று மிகுந்த கோபத்தோடு கூறினாள், மகாராணி.

"சின்னம்மா, உங்கள் பெயரைச் சொன்னாலே காஞ்சி நகர் முழுவதும் நடுங்கும்படி செய்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு கோபத்துடன் வெளியேறினான் சித்திரமாயன்.

அதே சமயம், இரணியவர்மருடைய மாளிகையில், முதன் மந்திரி பேசிக் கொண்டிருந்தார். இருவருடைய முகங்களிலும் கவலை படர்ந்திருந்தது. கோட்டை வாசல் அருகே நடைபெற்ற கலவரம் பற்றிய செய்தி, அவர் களுக்கும் எட்டியிருந்தது.

"காவல் வீரர்களை மக்கள் எதிர்த்துத் தாக்குவது என்பது எவ்வளவு மோசமான நடவடிக்கை. இதை முளை யிலேயே கிள்ளிவிட வேண்டும். என் வீரர்களை அனுப் பட்டுமா, கலவரம் செய்தவர்களைத் தண்டிக்க?" என்று கேட்டார், இரணியவர்மர். அவருடைய குரலில் கோபம் தொனித்தது.

"இனி உங்களுடைய வீரர்கள் அந்த அப்பாவி மக்களின் பாதுகாப்புக்குத்தான் தேவைப்படுவார்கள்" என்றார் முதன் மந்திரி.

"பாதுகாவலுக்கா? தண்டனை கொடுக்க வேண்டும் முதன் மந்திரி அவர்களே. இதை இப்படியே விட்டுவிட்டால் நாளை இந்நகரத்தில் ஒரு எறும்புகூட அரசை எதிர்க்கத் தொடங்கிவிடும்."

"தண்டனையைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அதைப் பற்றி இதற்குள் இளவரசரும் மகாராணியும் முடிவு செய்திருப்பார்கள். பாவம் அப்பாவி மக்கள். தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த குடியிருப்பு நிலம் பறிபோய்விட்டதே என்ற தவிப்பில் எழுந்த கோபந்தான் கோட்டைவாயிலில் கொந்தளித்திருக்கிறது. மக்களின் நியாயமான உணர்வுகளையும் அரசு மதிக்கவேண்டும். இது சித்திரமாயனின் மனைவி மேகலாவினால் வந்த வினை. மந்திரி அச்சுதப்பட்டர் அவள் மூலமாக இதை சாதித்துக் கொண்டார். இந்த முட்டாள் சித்திரமாயனும் மனைவி சொல்லுக்குத் தலையாட்டி உத்தரவு பிறப்பிக்க ஏற்பாடு செய்துவிட்டான்" என்றார், முதன்மந்திரி.

"இளவரசன் சிறுபிள்ளைத் தனமாக ஏதோ செய்யப் போய்..."

முதன் மந்திரி குறுக்கிட்டார்; "அரசாட்சியில் சிறு பிள்ளைகள் தலையிடக்கூடாது" என்றார்.

அப்போது அருகில் அமர்ந்து அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவன் பல்லவ மல்லன், "ஏன் தலையிடக்கூடாது? நல்ல காரியத்துக்காக யார் வேண்டுமானாலும் தலையிடலாமே?" என்று வெடுக்கெனச் சொன்னான்.

தரணி கொண்ட போசரின் முகத்தில் முறுவல் தோன்றியது. சிறுவன் பல்லவமல்லனின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினார். "ஓ... நீ அருகில் இருப்பதை மறந்துபோய் விட்டேன். நல்ல காரியமாக இருந்தாலும் சிறுவர்கள் பெரியவர்கள் மூலம் தாம் தலையிடவேண்டும. நீ இந்த வீட்டில் உன் தந்தையைக் கேட்காமல் எதாவது செய்வாயா?"

"முக்கியமான விஷயமாக இருந்தால் கேட்பேன்."

"அரசாட்சியில் ஒவ்வொரு விஷயமும் முக்கியமானதுதான்" என்றார், இரணியவர்மர். பல்லவமல்லனின் முதுகைத் தட்டிக் கொடுத்தார். பிறகு, "பெரியவர்கள் பேசும்போது குறுக்கே பேசுவது மரியாதை இல்லை என்று சொல்லியிருக்கிறேனே" என்றார்.

பல்லவமல்லன் தன் தந்தையைப் பார்த்து முத்துப் பற்கள் தெரியச் சிரித்துவிட்டு மௌனமானான்.

"இன்றோ நாளையோ, அநேகமாக இன்று இரவு கூட அரண்மனை வீரர்கள் நகரசுத்திப் பணியாளர்களைத் தண்டிக்க முற்படலாம்" என்றார், முதன் மந்திரி. "அதை நீங்கள் தான் தடுத்து நிறுத்த வேண்டும்" என்றார்.

"மகாராணியிடம் சொல்லித் தடுத்துவிட முடியாதா?"

"மகாராணியார் சம்மதித்தாலும், இளவரசர் சம்மதிக்க வேண்டுமே. அவன் சம்மதித்தாலும் அவன் மனைவி சம்மதிக்க வேண்டுமே!"

"இளவரசரா நாட்டை ஆள்கிறார்? மகாராணி தானே" என்று குறுக்கிட்டுச் சொன்னான், பல்லவமல்லன்.

"நன்றாகக் கேட்டாய்" என்றார், முதன் மந்திரி.

"குறுக்கே பேசுகிறாயே" என்றார் இரணியவர்மர், தம் மகனைப் பார்த்து. பல்லவமல்லன், சிரித்தபடியே ஒரு கையால் தன் வாயைப் பொத்திக் கொண்டான்.

"சித்திரமாயனின் போக்கு சரியில்லை. என்னை அவன் மதிப்பதே இல்லை. அவனை முன்னிட்டுத்தான் சக்கரவர்த்தி என்னைப் போர்க்களம் போகவிடாமல் தடுத்துவிட்டார். நகரத்தில் நானிருந்து, அவனால் ஏதாவது பெரிய விபரீதம் ஏற்பட்டுவிடாமல் மறைமுகமாகக் கண்காணிக்கும்படி மன்னர், போருக்குப் போகும்போது வேண்டிக்கொண்டார். அதனால்தான் நான் என்னுடைய மண்டலத்துக்குப் போகாமல் காஞ்சியில் தங்கியிருக்கிறேன். இது உங்களுக்குத் தெரியாததல்ல. சித்திரமாயனின் அலட்சியத்தைப் பொறுத்துக் கொண்டு இங்கிருக்க எனக்குப் பிடிக்கவில்லை" என்றார், இரணியவர்மர்.

"சக்கரவர்த்தி விரைவில் போரை முடித்துக் கொண்டு திரும்பி வந்தால் நல்லது. சக்கரவர்த்திக்குப் பிறகு இளவரசர் அரியணை ஏறினால் நாட்டின் நிலை என்னவாகுமோ? எண்ணிப் பார்க்கவே பயமாயிருக்கிறது" என்றார் முதன் மந்திரி மிகுந்த கவலையுடன்.

"அவன் பட்டத்துக்கு வருவதற்குள் நம் காலம் முடிந்து விடும்" என்று கூறிச் சிரித்தார், இரணியவர்மர்.

"என்ன நிச்சயம்? சக்கரவர்த்திக்கு வயது ஐம்பதை நெருங்கிவிட்டது" என்றார், மந்திரி. பிறகு, "இரண்டாவது மந்திரி அச்சுதப்பட்டர் மகாராணியின் போக்குக்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறார். அவருக்கு உள்ளூர முதன் மந்திரிப் பதவியைப் பெறவேண்டும் என்ற ஆசை" என்றார்.

"அச்சுதப்பட்டர் பேராசை பிடித்தவராயிற்றே. அவருடைய உறவினருக்கு மான்யம் வழங்கியதால் தானே இந்தக் குழப்பம். யவன வணிகர்களுக்கு ஏதோ சலுகைகள் காட்டி இவரும் ஆதாயம் பெறுவதாக வதந்தி."

"ஆட்சியில் இருப்பவர்களின் கைகள் சுத்தமாக இருக்க வேண்டும். இப்படிச் சிலர் வந்து வாய்த்து விடுகிறார்கள். முகஸ்துதியிலேயே முன்னேறுகிறார்கள். சரி, இப்போது இந்தப் பாமர ஜனங்களை எப்படிக் காப்பாற்றுவது?" என்று கேட்டார், முதன் மந்திரி.

"அரண்மனையிலிருந்து உத்தரவைப் பெற்றுக் கொண்டு வரும் வீரர்களைத் தடுத்து நிறுத்த இந்த சாம்ராஜ்யத்தில் யாருக்கும் அதிகாரம் கிடையாதே" என்றார், இரணியவர்மர். பிறகு, "நீங்களும் இது பற்றிச் சிந்தியுங்கள். நானும் யோசிக்கிறேன். ஏதாவது வழிதோன்றுகிறதா பார்க்கலாம். மகாராணியை இன்று சந்தித்துப் பேசிப் பார்க்கிறேன்" என்றார்.

இரணியவர்மரின் மாளிகையிலிருந்து முதன் மந்திரி வெளியேறிய போது, உற்சாகமிழந்து சோர்வுற்றிருந்தார்.

10. அதிகாரத் திமிர்

பண்டைக்காலக் கல்விமுறைக்கும் இக்காலக் கல்வி முறைக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. வங்கிகளுக்கும், கம்பெனிகளுக்கும் குமாஸ்தாக்களை உருவாக்கும் இக்காலக் கல்வி முறையிலிருந்து முற்றும் மாறுபாடானது அக்காலத்தியக் கல்விமுறை. பழங்காலக் கல்விமுறையினால் பண்பாடும், கலாச்சாரமும் வளர்ந்தன. வீரமும் தன்னம்பிக்கையும் பெருகின. அறிவு, மேம்பட்ட நிலையில் உயர்ந்

தது. அறம், பொருள், இன்பம் நுகரவும், நன்னெறிக்கு ஏற்ற முறையில் பயிலவுமே பண்டைக்காலக் கல்வி உதவியது.

இந்திய வரலாற்றிலேயே–உலக வரலாற்றில்கூட – பல்லவ ஆட்சியில்தான் சகல கலைகளும் ஒரே சமயத்தில் மேம்பட்டுத் திகழ்ந்தன. எல்லாக் கலைகளுக்கும் ஏற்ற சிறந்த கலைக்கூடங்களும், கல்லூரிகளும் காஞ்சி நகரில் பல இருந்தன. இன்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பே காஞ்சி நகரின் கல்விச் சிறப்பு மேலோங்கி இருந்தது.

சமந்தபத்திரர், பூஜ்யபாதர் முதலிய புகழ்பெற்ற சமண ஆசிரியர்கள், காஞ்சிக் கடிகைகளுக்கு விஜயம் செய்தார் களாம். மாபெரும் பௌத்த ஞானியான அரவண அடிகள், காஞ்சி பௌத்த கடிகையில்தான் தத்துவங்களைப் போதித் தார். காஞ்சிமா நகரிலிருந்துதான் தர்ம பாலர் என்ற ஞானி, நாலந்தா பல்கலைக் கழகத்துக்குப் பேராசிரியராகச் சென் றார். சீனாவிலும், ஜப்பானிலும் பௌத்தமடத் தலைவராக இருந்த போதி தர்மர், காஞ்சிபுரத் தமிழர்தாம்.

தமிழும், வடமொழியும் அந்நாளில் காஞ்சியில் கொழுத்து வளர்ந்தன. காஞ்சி நகரின் வடமொழிக் கடிகை, பாரதம் முழுவதும் மிகுந்த புகழையும், செல்வாக்கையும் பெற்றிருந்தது. இக்கதையின் காலகட்டத்திற்குக் கிட்டத் தட்ட எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே அந்தக் கல்வி நிலையம் தோன்றிவிட்டது. 'நியாயப் பிரவேசம்' என்னும் தர்க்க சாஸ்திரத்தை எழுதிய திண்ணாகர், அந்த சமஸ்கிருதக் கடிகையில் பணியாற்றினார். மகாகவி தண்டி, அலங்கரித்த கடிகை அது. அங்கு பதினான்கு கலைகள் கற்பிக்கப் பட்டன ! அவற்றுடன் நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், புராணம், மீமாம்சம், நியாயம், தர்ம சாஸ்திரம், மருத்துவம், இசை, பொருள் நூல், வில்வித்தை ஆகிய பதினெட்டு வித்தைகளும் அங்கு கற்பிக்கப்பட்டன.

அவ்வளவு புகழ்வாய்ந்த சமஸ்கிருத கடிகையைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஸ்ரீராஜன் நம்பூதிரி, தானும் அந்தக் கடிகையில் தங்கிக் கல்வி பயிலப் போவதை எண்ணிப் பரபரப்படைந்திருந்தான்.

அவன் கடிகையில் போய்ச் சேர்வதற்கு முந்தினநாள் இரவு, நடுஜாமத்துக்குப்பின்னும் அவனும் உதயசந்திரனும் பௌத்த கடிகையின் மாடி வராந்தாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

ராஜன் நம்பூதிரி சொன்னான்:

"உதயசந்திரா, உன்னை விட்டுப் பிரிந்திருக்கவே பயமாயிருக்கிறது. நானும் உன்னோடு இந்தப் பௌத்த கடிகையிலேயே ஏதாவது பணி புரிந்து கொண்டு இருந்து விடுகிறேனே?"

"நீ ஒரு சைவன். வேதங்களையும் ஆகமங்களையும் கற்றவன். உனக்குப் பொருத்தமான துறையில்தான் உன் அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். இடையில் விட்டுப்போன கல்வியை இங்கே நீ தொடரலாம். என்னைப் போல் உடல் உழைப்புக்கு நீ தகுந்தவனல்லன். நீ அறிவு ஜீவி. உன்னுடைய மேதாவிலாசம், இந்நாட்டுக்குக் கூட உதவலாம். நானும் காஞ்சியில்தானே இருக்கிறேன். தினமும் நாம் சந்தித்துக் கொள்ளலாம்" என்று உதயசந்திரன் ஆறுதல் சொன்னான்.

"காஞ்சி நகரைப் பற்றிக் கேள்விப்பட்ட காலத்தில் இங்கு வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இப்போது, சந்தர்ப்பம் என்னை இங்கே இழுத்துக் கொண்டு வந்திருக்கும்போது, என்னுள்ளே பயம் சூழ்கிறது, நண்பா. நகரத்துக்குள் வந்தபோது உனக்கு விழுந்த சவுக்கடியை நினைக்கும் போதெல்லாம், மனத்தில் உற்சாகம் மறைந்துவிடுகிறது."

"நீ மட்டும் அப்போது என்னைத் தடுத்து இழுத்துக் கொண்டு வந்திராவிட்டால் நான், அவன்மீது பாய்ந்திருப் பேன்" என்றான் உதயசந்திரன். கோபத்தில் பற்கள் நெறி பட்டன.

"இந்நாட்டின் இளவரசன் அவன். வருங்காலச் சக்கர வர்த்தி. அவனை தாக்குவதென்றால்..."

"ஒரு சக்கரவர்த்திக்கு இருக்க வேண்டிய பெருங் குணம் அவனிடம் இல்லையே. ஒரு சாதாரண ஊர்க்காவல் வீரனைப் போலல்லவா அன்று என்னை விரட்டியடித் தான்" என்று கூறியவாறே, சவுக்கடியினால் இன்னும் ஆறாமலிருந்த புண்ணைத் தடவினான், உதயசந்திரன்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, திடீரென்று தெருவில், பல கூக்குரல்கள் கேட்டன. இருவரும் திடுக் கிட்டு எழுந்து, மாடியிலிருந்தவாறு தெருவை நோக்கி னார்கள். தெருவில் ஆண்களும், பெண்களும் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். நாலாபுறமும் சிதறி ஓடி வந்தவர்களில் பலர், பௌத்த கடிகைக்குள்ளும் நுழைந் தார்கள். கூட்டத்துக்குப் பின்னால் ஐந்தாறு குதிரை வீரர் கள், ஓடியவர்களை சவுக்கால் அடித்து விரட்டிக் கொண்டு வந்தார்கள். பௌத்த கடிகையினுள் நுழைந்தவர்கள் போக, தெருவில் தொடர்ந்து ஓடிய மற்றவர்கள், அலறிக்கொண்டே அடுத்த தெருவில் மறைந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து துரத்திக்கொண்டு குதிரை வீரர்கள் பாய்ந்து சென்றார்கள்.

பௌத்த கடிகைக்குள் கூடிவிட்ட மக்கள், பயத்தினால் பிரமை பிடித்தவர்கள் போலிருந்தார்கள். குழந்தைகள், பயத் தினால் வீறிட்டலறிக் கொண்டிருந்தனர். கடிகைத் தலை வரிடம் ஒரு பெண், "குதிரை வீரர்கள் எங்கள் குடிசைகளை யெல்லாம் தீ வைத்துத் தெருவிலே விரட்டியடித்து விட்டார் கள்" என்று கூறி அழுதாள்.

"எங்கள் சேரி முழுவதையுமே எரித்து விட்டார்களே, பாவிகள்" என்று ஒருவன் வடதிசையைச் சுட்டிக் காட்டிய படி விம்மியழுதான். அவன் காட்டிய திசையில் சற்று தூரத்தில், பெரும்புகை எழுந்து வானோக்கி உயர்ந்து கொண்டிருந்தது, நிலவொளியில் நன்கு தெரிந்தது.

கடிகையின் பிரதான கட்டடத்திலும், சுற்றியிருந்த தோட்டங்களிலும், அதனுள் ஆங்காங்கே அமைந்திருந்த சிறு கட்டடங்களிலும் அந்த அப்பாவி மக்கள் தங்குவதற் கான ஏற்பாட்டைச் செய்வதில் முனைந்தார், கடிகைத் தலைவர். கடிகையில் உறங்கிக் கொண்டிருந்த மற்ற மாண வர்கள் அனைவரும் எழுந்துவிட்டனர். எல்லாரும் அகதி களுக்கான உதவிகளைச் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இரவு முழுவதும் உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் உறங்காமல் அந்த அகதிகளுக்கு உதவி செய்வதில் முனைந் திருந்தனர்.

"நாம் இந்நகருக்குள் வந்த நேரம் சரியில்லை போலிருக் கிறது, ராஜன்" என்றான், உதயசந்திரன். அப்போது அவர்கள் இருவரும் அகதிகளுக்காகப் படுக்கைகளை விரித்துக் கொண்டிருந்தார்கள்.

"பாவம் எப்படிப் பரிதவித்து நிற்கிறார்கள் பெண்கள், பீதியினால் பேசும் சக்தியைக்கூட இழந்து, பைத்தியங் களைப் போல் விழிக்கிறார்கள். ஒரு நாட்டின் தலைநகரில் அந்நாட்டின் மக்களே அகதிகளாக மாறுவது போன்ற கொடுமை சகிக்க முடியாதது" என்றான் ராஜன் நம்பூதிரி.

"சக்கரவர்த்தி, போர்க்களத்தில் இருக்கிறார். மகாராணி ஆள்கிறாள். நீ சொன்னது போல், அவளுக்கு இப்போது தீட்டு நேரம் போலிருக்கிறது. புத்தி, சமநிலையில் இல்லாமல் தான் இப்படித் தன்னுடைய பிரஜைகளையே துன்புறுத்து

கிறாளோ என்னவோ" என்றான், உதயசந்திரன். பிறகு, "இங்கே ஒவ்வொரு திங்களும், மூன்று நாட்களுக்கு இப்படித் தான் ஏதாவது சங்கடங்கள் வந்து சேருமோ என்னவோ?" என்று கூறி சிரித்தபோது, அந்தப் பக்கம் வந்த கடிகைத் தலைவர், அவனுடைய சிரிப்புக்குக் காரணம் கேட்டார். அவன் சொன்னதும், அவர் "ராஜன் சொன்ன தத்துவத் திலும் உண்மை இருக்கிறது. இதைப் பற்றி நம்முடைய கடிகையின் வைத்தியப் பகுதி மகா பண்டிதர் ஞானபாலர், அடிக்கடி கூறுவார்" என்று சொல்லிவிட்டு கட்டடத்தின் வேறு பகுதியை நோக்கி விரைந்தார்.

மறுநாட் காலையில் ராஜன் நம்பூதிரி, வடமொழிக் கடிகைக்குப் புறப்பட்டபோது உற்சாகமாயிருந்தான். பௌத்த கடிகையின் தலைவர் கொடுத்த அறிமுக ஓலை யைப் பெற்றுக்கொண்டு உதயசந்திரனுடன் வடமொழிக் கடிகைக்குப் புறப்பட்டான். கடிகையை நெருங்கியதும் அவனுக்கு உள்ளூர பயம் எழுந்தது.

கடிகையில் சேர்ப்பார்களா? மொட்டைத் தலையில் இன்னும் மயிர் நன்றாக வளரவில்லை. உடல் உறுப்பில் அராபியர்கள் உண்டாக்கிவிட்ட ஊனம்...

என்னை முதலில் பிராமணனாக ஏற்பார்களா...? ஓ... கடவுளே....

ராஜன் நம்பூதிரியின் உடல் பயத்தினால் சிலிர்த்தது. நடை தளர்ந்தது. அதைக் கவனித்த உதயசந்திரன், "என்ன ராஜன், கடிகையை நெருங்கும்போது தளர்வடைகிறாய்?" என்று கேட்டவாறு அவனுடைய தோளை அணைத்தவாறு நடந்தான்.

"உதயசந்திரா, என்னை முதலில் பிராமணனாகவாவது ஏற்பார்களா?"– ராஜன் நம்பூதிரி கேட்டான்.

"ஓ... இதற்கா இவ்வளவு சோர்ந்து போனாய்? பிராமணன் என்பவன் உள்ளத்தால்தான் பிராமணனாகிறான். உடலால் அல்ல. அந்தக் கடிகையில் உள்ளோர் குறுகிய மனத்தினராக இருக்க மாட்டார்கள். தைரியமாக வா."

புகழ்பெற்ற அந்த மாபெரும் கடிகையை நெருங்கியதும் அதன் கட்டடங்களின் அமைப்பையும், விசாலத்தையும் கண்டு பிரமித்து நின்றனர். கடிககையின் தலைவர், ஜேஷ்ட பத சோமயாஜி, அவர்களை வரவேற்றுப் பேசிக்கொண்டிருந்தார். ராஜன் நம்பூதிரியின் வரலாற்றைக் கேட்டு மனம் நெகிழ்ந்தார். அவனை அங்கு மாணவனாக ஏற்றுக் கொண்டு, அவன் இழந்திருந்த முப்பிரி நூலையும், சாஸ்திர முறைப்படி அவனுக்கு அணிவிக்க நல்ல நாள் கணித்தார்.

வடமொழிக் கடிகையில் ஸ்ரீராஜன் நம்பூதிரியை விட்டுவிட்டு உதயசந்திரன் பிரிந்தபோது, இருவரும் தினமும் மாலையில் கைலாசநாதர் கோயில் வாசலில் சந்திப்பது என்று முடிவு செய்து கொண்டனர்.

கடிகையை விட்டுப் புறப்பட்டு, கைலாசநாதர் கோயிலின் வடக்கு மாடவீதி வழியாக உதயசந்திரன் சென்று கொண்டிருந்தபோது, எதிரே இரு புரவிகள் கடும் வேகத்தில் வந்ததைக் கண்டு வீதியை விட்டு விலகி ஒதுங்கி நின்றான். குதிரைகள் அவனைக் கடந்து சென்றபோது, வெள்ளைக் குதிரையிலிருந்த சித்திரமாயனின் பார்வை, உதயசந்திரன் மீது விழவே, சட்டென்று குதிரையை நிறுத்தினான். கடிவாளத்தின் வலி பொறுக்காமல் குதிரை கனைத்தவாறே முன்னங் கால்களைத் தூக்கியவாறு சில விநாடிகள் நின்றது. உதயசந்திரனும் வியப்புடன் இளவரசனை ஏறிட்டுப் பார்த்தான். மறுகணம் குதிரை பாய்ந்து சென்று மறைந்தது.

தன்னை அடையாளம் தெரிந்து கொண்டுதான் இளவரசன், குதிரையை நிறுத்தினான் என்பதைப் புரிந்து கொண்ட உதயசந்திரன், தன்னை அவன் துன்புறுத்தியதற் காக இரக்கம் கொண்டு, ஏதாவது சமாதானமாக ஆறுதல் வார்த்தைகள் சொல்வான் என்று எதிர்பார்த்து ஏமாந்தான்.

திமிர்... அதிகாரத் திமிர்... சந்தர்ப்பம் கிடைத்தால் உன்னைப் பந்தாடி விடுவேன்... ஐயோ பாவம், பல்லவ சாம்ராஜ்யம், இவனைச் சக்கரவர்த்தியாக ஏற்க வேண்டிய தலைவிதி...

உதயசந்திரன், கிழக்கு மாடவீதிக்கு வந்தபோது, கோயி லுக்குள் செல்லலாமா என்று நினைத்தான். "ராஜன் வரும் போது அவனுடன் போய்க் கொள்ளலாம்" என்று முனகிய வாறு, சந்நிதிக்கு எதிரே இருந்த தெருவில் நுழைந்தான். அப்போது எதிரே ஒரு இரதம், உதயசந்திரனைக் கடந்த போது, அதில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் கம்பீர மாக அமர்ந்திருந்ததையும், அருகே பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் இருந்ததையும் கண்டான். வீதியில் சென்று கொண்டிருந்த மக்கள் மிக்க மரியாதையுடன் விலகி நின்றதைக் கவனித்தான். அருகே நின்றுகொண்டிருந்த ஒரு வயோதிகரை நெருங்கி, "இரதத்தில் போகிறவர் யார்?" என்று கேட்டான்.

அந்த வயோதிகர், அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "இவர்தாம் இரணியவர்மர். பக்கத்திலிருப்பவன் அவருடைய மகன் பல்லவமல்லன். ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர். தென் மண்டலத்து ராஜா இவர்தாம். இப்போது, இங்கே கோட்டைத் தளபதியாக இருக்கிறார்" என்றார்.

இரணியவர்மரின் தோற்றம் அவனைக் கவர்ந்தது. அவருடைய பரந்த முகமும், முறுக்கேறிய மீசையும், ஆஜானுபாகுவான உடலமைப்பும், கண்களில் தெரிந்த வீரக்களையும் அவனை ஆட்கொண்டன. அவருக்கு அருகே அமர்ந்து, துறுதுறுவென்று நாலாபுறமும் பார்த்துக் கொண்டிருந்த சிறுவனின் அழகிய உருவம், அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

திமிர் பிடித்த இளவரசனும் ராஜ மரியாதைதான்; இவர்களும் ராஜமரியாதை தான்...அவன் முஞ்சியும், பார்வையும் கொடிய பாம்பு மாதிரி. எங்கோ காட்டுமிராண்டியின் குகைக்குள் பிறக்க வேண்டியவன், அரண்மனையில் வந்து பிறந்து தொலைத்துவிட்டான். கடவுளும் சமயத்தில் இப்படி மறதியாக உயிர்களை இடம் மாற்றி வைத்து விடுவார் போலிருக்கிறது...

கடவுளின் படைப்புத் தொழிலை ஆராய்ந்தவாறே பௌத்த கடிகையை நோக்கி நடக்கத் தொடங்கினான். கடிகையை அடைந்தபோது, அவனுக்காக ஒரு செய்தி காத்திருந்தது. டெங்லீ என்ற ஒரு வயோதிகச் சீனர், அவனைத் தேடி வந்ததாகவும், தம்முடைய இருப்பிடத்தைத் தெரிவித்திருப்பதாகவும் கடிகையின் காவலாளி கூறியதைக் கேட்டு மிகுந்த உற்சாகமடைந்தான்.

* * *

இரணியவர்மரின் இரதம், முதன் மந்திரியின் மாளிகையின் முன் நின்றதும், முதன் மந்திரி, அவரை எதிர்கொண்டு வரவேற்று, மாளிகையினுள் அழைத்துச் சென்றார். இரணியவர்மர் கோபத்தால் குமுறிக் கொண்டிருந்தார்.

"எல்லாம் கேள்விப்பட்டேன்" என்றார் முதன் மந்திரி.

"நல்ல தந்திரம் செய்திருக்கிறார்கள். நேற்று மகாராணியைச் சந்தித்தபோது எவ்வளவு திமிராகப் பேசினாள் தெரியுமா?" என்று கூறி, பற்களைக் கடித்தார்.

"பல்லவ நாட்டின் மகாராணியல்லவா!" என்றார் தரணிகொண்ட போசர்.

"மகாராணி... பெரிய மகாராணி" என்று கைகள் இரண்டையும் விரித்துக் காட்டி இரைந்தார், இரணியவர்மர். கோபமும் வெறுப்பும் அவருடைய குரலில் நிரம்பியிருந்தன. பிறகு சொன்னார்: "அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'என்னுடைய கட்டளைகள் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் நீங்கள் கோட்டைத் தளபதி பதவியிலிருந்து விலகிக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை' என்றாள். நான் விலகிக் கொள்ளவேண்டுமாம். சக்கரவர்த்தியல்லவா என்னைக் கோட்டைத் தளபதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டார்."

"கடைசியில் பாவம் நகரசுத்திப் பணியாளர்களைக் காப்பாற்ற முடியவில்லையே?" என்றார் முதன் மந்திரி.

"கோட்டைத் தளபதி என்ற முறையில் நகரத்தின் பிரஜைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு என்னுடையது. ஆகையால் காஞ்சியில் எந்தச் சமூகத்தினருக்காவது கேடு விளையும்போது நான் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடியாது என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்" என்றார், இரணியவர்மர்.

"ஓ.... அதனால்தான் உங்களைக் கோட்டைத் தளபதி பொறுப்பிலிருந்து விடுவித்து விட்டார்களோ?" என்றார், முதன் மந்திரி.

"உங்களுக்கும் செய்தி எட்டிவிட்டதா?"

"அரண்மனை உத்தரவை நேற்று இரவு உங்களிடம் கொண்டுவந்து கொடுத்த அதிகாரிதான் அந்த உத்தரவைப் பற்றிய செய்தியை எனக்கும் தெரிவித்துவிட்டுச் சென்றான்."

"இப்போது கோட்டைத் தளபதியாக யார் நியமிக்கப் பட்டிருக்கிறார்?"

"சுந்தரவர்மர்"

"ஹீம்..." என்று உறுமினார், இரணியவர்மர். "சக்கர வர்த்தி நியமித்த என்னை நீக்க இவளுக்கு என்ன துணிச் சல்?" என்றார்.

"நேற்று நடு ஜாமத்துக்குப் பிறகு, கோட்டை வீரர் களைக் கொண்டே நகரசுத்திப்பணியாளர்களின் சேரியைத் தீக்கிரையாக்கியிருக்கிறார்கள்" என்றார் முதன் மந்திரி.

அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த பல்லவ மல்லன், "கொஞ்சப் பேர் எங்கள் மாளிகையில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்" என்றான்.

"இன்று அதிகாலையிலேயே அவர்கள் அனைவரை யும் குடியேற்ற ஏரிக்கரைக்குப் பக்கத்திலுள்ள நிலத்தில் ஏற்பாடு செய்துவிட்டேன்" என்றார் முதன்மந்திரி.

"நான் என் படையை அழைத்துக் கொண்டு என்னு டைய மண்டலத்துக்குப் போய்விடலாம் என்றிருக்கிறேன். இந்தத் தான்தோன்றி ராணியின் கட்டளைகளுக்குப் பணிந்துகொண்டு என்னால் இங்கு இருக்கமுடியாது. இவளுக்கு இவ்வளவு திமிரா?"—கோபத்தில் குமுறினார் இரணியவர்மர். "இளவரசனுமல்லவா திமிர் பிடித்து அலைகிறான்" என்றார்.

"கொஞ்சம் பொறுமையாக இருங்கள். இப்போது நாட்டில் ஆங்காங்கே சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. வல்லம் கிராமத்தில் மகாராணியின் உத்தரவை அறிவிக்கச் சென்ற அதிகாரியை அடித்து, முகத்தில் கரும்புள்ளி குத்தி அனுப்பியிருக்கிறார்கள். இதெல்லாம் நல்லதற்கல்ல. நாட்டின் ஆட்சியைப் பலவீனப்படுத்திவிடும்" என்றார் மந்திரி.

"இந்த ராணியின் முஞ்சியிலும் கரும்புள்ளிகளை, காஞ்சி மக்கள் குத்தினால் நன்றாயிருக்கும்."

"மக்களே தண்டல்காரராக மாறுவது ஆபத்து. சக்கரவர்த்தி இல்லை என்ற தைரியத்தில்தானே சோழ நாட்டைச் சேர்ந்த ஆலிநாட்டுக் குறுநில மன்னன், நம்முடைய நாகப்பட்டினத்துப் புத்த விஹாரத்தைக் கொள்ளையடித்திருக்கிறான்."

"பௌத்த விஹாரந்தானே? போகட்டும்" என்றார் இரணியவர்மர், அலட்சியமாக.

"இன்று பௌத்த விஹாரத்துக்கு ஒரு வைணவனால் நேர்ந்த கதி, நாளை நம்முடைய கைலாசநாதர் கோயிலுக்கும், வடமொழிக் கடிகைக்கும் வேறு ஒரு முடவெறியனால் நேரலாமே?" என்றார் முதன்மந்திரி.

இரணியவர்மர் மௌனமாயிருந்தார். முதன்மந்திரி தொடர்ந்து சொன்னார்: "சக்கரவர்த்தி இல்லாதவேளையில் நீங்கள் தலைநகரைவிட்டுச் செல்வது நல்லதல்ல. சக்கரவர்த்தி உங்களைப் போர்க்களத்துக்கு அழைத்துச் செல்லாததற்கு காரணமே நீங்கள் காஞ்சியில் இருக்க வேண்டும் என்பதால்தான். இவர்கள் ஏதோ சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறார்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். இப்போதுதான் நாம் விழிப்புடனிருக்க வேண்டும்.

கோபத்தில் நிதானம் இழந்துவிடக் கூடாது. நீங்களும் போய் விட்டால், மகாராணிக்குத் தெம்பு ஏற்பட்டுவிடும்" என்றார்.

இரணியவர்மரும் பல்லவ ராஜவம்சத்தைச் சேர்ந்தவர் தாம். ஆதியில், சிம்ம விஷ்ணு என்ற பல்லவ மன்னர் காலத்திலிருந்துதான் பல்லவநாடு, ஒரு சாம்ராஜ்யமாக மாறுவதற்கான முயற்சியில் இறங்கியது. சிம்ம விஷ்ணு வின் மகன்தாம் புகழ்பெற்ற மகேந்திரவர்மன். அந்த சிம்ம விஷ்ணுவுக்கு பீமவர்மன் என்று ஒரு சகோதரர் இருந்தார். அவருடைய பேரனுடைய பேரன்தாம் இந்த இரணிய வர்மர்.

இவர் பல்லவ சாம்ராஜ்யத்தின் தென்மண்டலத்தில் குறுநில மன்னராயிருந்தார். குறுநில மன்னர்கள், பல்லவச் சக்ரவர்த்தியைத் தவிர வேறு யாருக்கும் பணியமாட்டார் கள். அதனால்தான் மகாராணியின் கட்டளைகள், இரணிய வர்மருக்குக் கோபத்தை மூட்டின.

கடைசியில், இரணியவர்மர் ஓரளவு மன அமைதி யடைந்து, முதன்மந்திரியின் யோசனையை ஏற்றுக் கொண்டார். உள்ளுரக் கோபம் புகைந்து கொண்டிருந்தது.

11. ராஜ நாகம்

இளவரசன் சித்திரமாயன், தீவிரச் சிந்தனையில் ஆழ்ந் திருந்தான். அருகில் அவனுடைய அந்தரங்க மெய்க்காப் பாளனான வாணராயன் நின்று கொண்டிருந்தான். அவனு டைய முகத்திலும் கவலை குடிகொண்டிருந்தது.

"தரணி கொண்டாருடைய மாளிகைக்குள் போகக் கூடவா உன்னால் முடியவில்லை?" என்று சித்திரமாயன், கோபத்தில் இரைந்தான்.

"அவருடைய மாளிகையில் இப்போது பாதுகாப்பு அதிகமாகி விட்டது. மாளிகைத் தோட்டத்துக்குள்ளிருக்கும் சிறையில்தான் அவனை வைத்திருக்கிறார்கள்" என்றான், வாணராயன்.

"அறங்கூர் அவையத்துக்கு அவனை அனுப்புவதாக இருந்தாரே, ஏன் அனுப்பவில்லையாம்?"

"முதன் மந்திரி என்ன தந்திரம் பண்ணுகிறார் என்று தெரியவில்லை, இளவரசே."

"அவனிடமிருந்து இதற்குள் மந்திரி, உண்மையைக் கறந்திருப்பாரே. அவன் ஒருவன்தான் சாட்சி. உனக்கு அது புரிகிறதல்லவா?"– சித்திரமாயனின் கேள்வியில் தொனித்த கோபம், வாணராயனை நடுங்க வைத்தது.

"முதன்மந்திரியிடமல்லவா அகப்பட்டுக் கொண்டான்" என்றான் வாணராயன், கவலையுடன்.

"எல்லாம் உன்னுடைய முட்டாள்தனத்தினால் விளைந்ததுதான். அந்தப் பெண்ணின் உடலை அந்த மடையனிடம் ஒப்படைத்ததுதான் தவறு. அவன் பிடிபட்டபோது குறுவாளை எறிந்து அவனையும் கொன்றுவிட்டு நீ தப்பி வந்திருக்கலாம். நீயும் ஒரு கோழை மாதிரி அவன் பிடிபட்டதும், ஓடி வந்திருக்கிறாய்" என்று எரிந்து விழுந்தான், சித்திரமாயன்.

வாணராயன், தலையைக் குனிந்தபடி நின்றான். "இலங்கைத் தீவிலிருந்து வந்திருக்கும் வீரனைக் கூட்டிவரச் சொன்னேனே?" என்றான், சித்திரமாயன்.

"அவன் வருகிற நேரந்தான். அதோ அவனை அழைத்து வரச் சென்றவனே வந்துவிட்டான்."

அப்போது உள்ளே வந்த ஒரு வீரன், இலங்கை வீரனை அழைத்து வந்திருப்பதாகக் கூறினான். இலங்கை வீரனை உள்ளே அழைத்து வருமாறு உத்தரவிட்டான், சித்திரமாயன். பிறகு, வாணராயனிடம், "அவனோடு பேசும்போது நீ வெளியே இரு. நீயும் உடனிருந்தால், அவன் மனம்விட்டுப் பேசக் கூசுவான். நான் கூப்பிட்ட பிறகு நீ உள்ளேவா" என்றான்.

வாணராயன் விரைந்து வெளியேறி, வாசலில் நின்று கொண்டான். சற்றுநேரத்தில் இலங்கை வீரனை அழைத்துக் கொண்டு வந்த காவல்வீரன், அவனை இளவரசனிடம் விட்டுவிட்டு வெளியேறினான்.

அந்த இலங்கை வீரன், உதயசந்திரனுடன் கப்பலில் வந்தானே கொடுக்கு மீசைக்காரன்; அதே தேவசோமா தான். அவனுக்கு ஆசனம் கொடுத்து உபசரித்தான், சித்திர மாயன். தேவசோமா, சுற்று முற்றும் வியப்புடன் பார்த்தான். பல்லவ இளவரசன் தன்னை ஒரு பொருட்டாக மதித்து அரண்மனைக்கு அழைத்தது, அவனுக்குப் பிரமிப்பா யிருந்தது.

"தேவசோமா, இன்று அந்நிய நாட்டுப் போட்டி வீரர்கள் தங்கியிருக்கும் விடுதிக்கு வந்திருந்தேன். போட்டிக் காக நீங்கள் ஒத்திகை பழகுவதைப் பார்க்கத்தான் வந்திருந் தேன்" என்று பேச்சை ஆரம்பித்தான் சித்திரமாயன்.

"தங்களைப் பார்த்தேன், இளவரசே. தாங்கள் வெகு நேரம் இலங்கை வில்லாளியின் திறத்தைக் கண்டு வியந்து நின்றதையும் கவனித்தேன்" என்றான், தேவசோமா.

"ஓ....ஆமாம். அந்த வில்லாளி மகா சூரனாயிருக் கிறானே ! அவனுடைய வில் திறமையைக் கண்டு பிரமித் துப் போனேன். அவன் பெயர் என்ன ?"

"சுகததாசா. இலங்கைத் தீவிலேயே, ஏன் உலகத்திலேயே, இவனை மிஞ்சிய வில்லாளி கிடையாது, இளவரசே" என்று பெருமையாகக் கூறினான் தேவசோமா.

"நான் கண்டேனே ! அற்புதம். தூரத்தில் முன்று மரங்களுக்கப்பால், அம்மரங்களின் கிளைகளினூடே தெரிந்த இலக்கைக் குறி வைத்து அவன் அம்பெய்ததைப் பார்த்தேன், ஓ....! முன்று மரங்களிலிருந்தும் ஒரு இலையைக் கூடச் சேதப்படுத்தாமல் அம்பு, கிளைகளினூடே புகுந்து, முன்று மரங்களையும் கடந்து, இலக்கைத் தாக்கியதே ! அற்புதமான திறமை" என்று புகழ்ந்தான், சித்திரமாயன். பிறகு சொன்னான் : "பல்லவ சாம்ராஜ்யமும், இலங்கை அரசும் நெருங்கிய நட்புறவு கொண்டவை. என்னுடைய பாட்டனாருக்கு முப்பாட்டனாரான நரசிம்மவர்மபல்லவர் காலத்திலிருந்தே நட்பும், உதவியும் தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கின்றன. நரசிம்மவர்மர் காலத்தில் இலங்கை அரசின் உதவிக்காக எங்கள் கடற்படையே சென்றது."

"நானும் இதுபற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன், இளவரசே. இலங்கைத் தீவு, இந்தத் தமிழகத்திற்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது."

"இப்போது எனக்கு ஓர் உதவி தேவைப்படுகிறது. அதாவது, பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஒரு பெரிய உதவியை உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன்" என்று சித்திரமாயன் கூறியதும், தேவசோமா உணர்ச்சி வசப்பட்டவனாய், "இளவரசே, தங்களுக்காக என் உயிரை வேண்டுமானாலும் பணயம் வைக்கிறேன்" என்றான்.

"நான் கேட்கும் இந்த உதவியை மட்டும் நீ நிறைவேற்றி வைத்தால், இந்த நாடு உன்னுடைய உதவியை ஒரு நாளும் மறக்காது, தேவசோமா. இலங்கையிலிருந்து வந்திருக்கும் வீரர்களுக்கு நீதானே தலைவன் ?"

"மூன்று பேர்கள் மட்டுமே வந்திருக்கிறோம். இலங்கை மன்னர் என் தலைமையில்தான் அனுப்பியிருக்கிறார்."

"சுகததாசா முலமாகத்தான் இந்த உதவியை நிறை வேற்றி வைக்க முடியும். தலைவன் என்பதால் நீதான் அவனை இதற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும்."

"தங்கள் கடமையை நிறைவேற்றி வைக்க வேண் டியது எங்கள் கடமை. இளவரசே" என்றான், தேவசோமா.

"என்னுடைய விருப்பம் நிறைவேறினால் உங்கள் எல்லாருக்கும் என்னுடைய உதவி கிட்டும். நீங்கள் இலங்கைக்குத் திரும்பும்போது, மிகுந்த செல்வங்களோடு செல்ல வாய்ப்பு உண்டு."

"இளவரசே, தங்களுடைய வெகுமதிகளை விடத் தங்களுடைய அன்பைத்தான் நான் பெரிதென மதிக்கிறேன்."

"நீ கொஞ்சம் வெளியே போய் இரு. என்னுடைய மெய்க்காப்பாளன் மற்ற விஷயங்களை உனக்குத் தெரியப் படுத்துவான்" என்று கூறிய சித்திரமாயன், கையைத் தட்டினான். வெளியே காத்து நின்ற வாணராயன், உள்ளே வந்ததும் தேவசோமா வெளியே சென்றான்.

* * *

மாலையில் பௌத்த கடிகையிலிருந்து வெளியே புறப்பட்ட உதயசந்திரன் மிகுந்த உற்சாகத்தோடிருந்தான். அந்த நேரத்தில் ராஜன் நம்பூதிரியைச் சந்திப்பதாகச் சொன்னதை மறந்தே போனான். அவர்கள் இருவரும் முதன் முதலாக கைலாசநாதர் கோயிலுக்குள் சென்று வருவது என்று முடிவு செய்திருந்தார்கள். எல்லாவற்றையும் மறந்துவிட்டு, டெங்லீ தங்கியிருந்த சீனத் தோப்பை விசாரித் துக் கொண்டு சென்றான்.

காஞ்சிக் கோட்டைக்கு வெளியே தெற்கு மதிலை அடுத்துப் பல மரங்கள் அடர்ந்த ஒரு பெரிய தோப்பு இருந்தது. அதில் சீனக் குடியிருப்பு ஒன்று அமைந்திருந்தது. வாணிபத்துக்காகக் காஞ்சிக்கு அடிக்கடி வரும் சீன வணிகர்கள் சிலர், அந்தத் தோப்பில் ஒரு சிறு குடியிருப்பை அமைத்திருந்தார்கள். மொத்தம் இருபது வீடுகளிருந்தன. அவற்றில் டெங்லீயின் வீடும் ஒன்று. இதைப் போல வேறு சில குடியிருப்புக்களும் கோட்டைக்கு வெளியே அமைந் திருந்தன. காஞ்சியின் நெருக்கடியையும், கூட்டத்தையும் இரைச்சலையும் விரும்பாத செல்வந்தர்கள், கோட்டைக்கு வெளியே தோப்புகளில் மாளிகைகளைக் கட்டியிருந்தனர்.

காஞ்சிக் கோட்டைக்குள்ளிருந்து வெளியே வந்த உதயசந்திரன், சற்று தயங்கி நின்றான். இனி அவன் கோட்டைக்குள் மறுநாள் காலையில்தான் போக முடியும். அஸ்தமனத்துக்குப் பிறகு கோட்டை வாயிலையும் மூடி விடுவார்கள். அகழிப் பாலத்தையும் உயரே தூக்கி விடு வார்கள். அன்று இரவு, கோட்டைக்கு வெளியே இருந்த பௌத்த விஹாரத்தில் தங்குவது என்று முடிவு செய்தவாறு சீனத் தோப்பை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

வழியில் ஒரு பெரிய தென்னந்தோப்பு குறுக்கிட்டது. அதன் வழியாகச் சென்றபோது, தோப்பை அடுத்திருந்த நந்தவனத்தினுள் ஒரு சிறு கோயில் இருந்ததைப் பார்த்தான்.

இந்த இடத்தில் ஏன் கோயில்? காடு மாதிரி இருக்கும் இந்த இடத்தில் யார் வந்து தரிசனம் செய்யப் போகிறார்கள்... என்று சிந்தித்தவாறே நடந்தான்.

டெங்லீயின் வீட்டை அடைந்த போது உதயசந்திரனை முதலில் வரவேற்றது, மருக்கொழுந்தின் வாசனைதான். வீட்டுத் திண்ணையில் மருக்கொழுந்துச் செடிகள் வளர்ந்

திருந்த மண் பானைகளிருந்தன. செடிகளின் அடிமண்ணில் தெரிந்த ஈரத்திலிருந்து லீனா சற்று நேரத்துக்கு முன்புதான் அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றியிருக்கிறாள் என்று நினைத்த படியே வாசற்படியைக் கடந்து உட்பக்கம் எட்டிப் பார்த்தான். உள் அறையில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து ஏதோ ஓர் ஓலையைப் படித்துக் கொண்டிருந்த டெங்லீ, திரும்பினார். உதயசந்திரனைக் கண்டதும் உற்சாகத்தில் உரத்த குரலில் வரவேற்றார். அவருடைய குரலைக் கேட்டு வீட்டினுள்ளிருந்து லீனா ஓடி வந்தாள். அவளைத் தொடர்ந்து மற்றப் பெண்களும் முன் அறைக்கு விரைந்து வந்தனர்.

லீனா கவலையிலிருந்து சற்று தெளிவடைந்திருந்தாள். உதயசந்திரனைக் கண்டதும் அவள் முகத்தில் தோன்றிய மலர்ச்சி அவனுக்கு உற்சாகமூட்டியது. சற்று நேரம் டெங்லீயுடனும், வீட்டிலுள்ளவர்களுடனும் பேசிக் கொண்டிருந்தான். பிறகு வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிக் காட்டுவதாக அவனை அழைத்துக் கொண்டு லீனா தோட்டத்துக்குள் சென்றாள். போகும்போதே அவனுக்காக மருக்கொழுந்தைச் சரமாகக் கட்டிப்பந்துபோல் சுருட்டி வைத்திருந்ததைக் கொடுத்தாள். அதை வாங்கி முகர்ந்து ரசித்துக் கொண்டே அவளைத் தொடர்ந்து தோட்டத்துக்குள் நடந்தான்.

இப்போது லீனாவிடம் கவர்ச்சி சற்று கூடியிருப்பதாக உணர்ந்தான். கண்வலி வியாதியுள்ள கண்களைப் போல் இடுங்கியிருந்த அவளுடைய கண்கள்கூட அவனுக்கு அப்போது அழகாகத் தோன்றின. அவள் கண்களிலிருந்த குழந்தைத்தனம், அவன் மனத்துக்கு இதமாயிருந்தது.

அவள் முன்னே உற்சாகமாக நடந்து சென்றபோது, அவளுடைய நடையழகும், பின்னழகும் அவன் மனத்தில் குறுகுறுப்பை உண்டுபண்ணின. தோட்டத்தின் எல்லாப்

பகுதிகளையும் காட்டினாள். அங்கிருந்த பழமரங்கள், தென்னந்தோப்பு, மலர் செடிகள் எல்லாவற்றையும் காட்டி அவள் வர்ணித்துக் கொண்டிருந்தபோது, 'அத்தனை அழகும் லீனாவிடந்தானிருக்கிறதே' என்று அவனுடைய மனம் சொல்லிற்று. அவனுடைய பார்வை தன்மீது ஆழப் பதிந்ததை உணர்ந்த லீனாவின் முகம் சட்டென்று நாணத்தால் சிவந்தது.

வெட்கப்பட்டபோது அவளுடைய கண்கள் இன்னும் சுருங்கியது வேடிக்கையாகவும் இருந்தது, கவர்ச்சியாகவும் இருந்தது. கப்பலிலோ, மாமல்லபுரத்திலோ அவளை அவன் நன்கு கவனிக்கவில்லை. அப்போதிருந்த சூழ்நிலையும், அவளை அவன் கூர்ந்து கவனிக்கும்படியாகவும் இல்லை. ஆனால் இப்போது சாவதானமாகக் காண நேர்ந்தபோதுதான் அவளுடைய அழகின் தன்மை முழுவதையும் உணரத்தொடங்கினான்.

தினமும் அவனுடைய பார்வையில் பட்டுக் கொண்டிருந்த தமிழ் நாட்டுப் பெண்களுக்கு இல்லாத ஒருவிதக் கவர்ச்சி, சீன நாட்டு லீனாவுக்கு இருப்பதாக எண்ணினான். தினமும் பார்த்து அலுத்துப்போன தமிழ்ப் பெண்களின் சாடைகளிலிருந்து வேறுபட்டு அமைந்திருந்த லீனாவின் அழகு, அவனை மிகவும் கவர்ந்தது. அவள் இடுப்புக்கு மேல் சட்டை அணிந்திருந்ததே கவர்ச்சியாயிருந்தது.

அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் ஆண்களும் பெண்களும் சட்டை அணிவதில்லை. ஒரு துண்டைத்தான் மார்பில் போர்த்தியிருந்தார்கள். செல்வந்தர்கள், மார்பில் ஆபரணங்கள் அணிந்திருந்தார்கள். பெண்கள் மார்பைக் கச்சையால் கட்டியிருந்தார்கள். பாமரப் பெண்கள், கச்சை கூட அணியாமல் திறந்த மார்புடனிருந்தனர். தமிழ் நாட்டில்

குடிபுகுந்திருந்த யவனர்களும், சீனர்களும் மட்டுமே சட்டை அணிந்திருந்தார்கள். அந்தப் பெண்கள் சட்டையணிந்து திரிந்ததைக் கண்டு தமிழர்கள் வியந்தார்கள். 'மெய்ப்பை புக்கும் யவனர்' என்றும், 'மெய் மூடும் சீனர்' என்றும் அவர்களை அழைத்தனர். பிற்காலத்தில் வெளிநாட்டு முகமதியப் பெண்களும் ஆண்களும் சட்டையணிந்திருந்தார்கள். அவர்களை, 'படம்புகு மிலேச்சர்' என்று தமிழர் கூறி வந்தனர்.

லீனாவின் சிரிப்பும், சிரித்தபோது கண்கள் இடுங்கி ஒரு குழந்தையைப் போல் மலர்ந்த முகமும், உயரத்துக்கேற்ற எடுப்பான கவர்ச்சிமிக்க அங்கங்களும், தமிழைக் கிளி கொஞ்சுவதுபோல் விசித்திரமாக உச்சரித்த விதமும் உதய சந்திரனின் மனத்தை ஆட்கொண்டன.

"இந்த தோட்டத்தில், ஒரு குழி அளவுக்கு மருக்கொழுந்தைப் பயிரிடப் போகிறேன்" என்றாள் லீனா.

"மருக்கொழுந்து வாணிபத்தில் இறங்கிவிடப் போகிறாயா?"

"இங்கே மருக்கொழுந்துக்கு நல்ல விலை இருக்கிறதாமே!"

"செல்வம் சேர்க்க வேண்டும் என்று ஆசை வந்துவிட்டதோ?"

"எனக்கும் பொழுது போக வேண்டாமா? தந்தையை இழந்த துக்கத்தை இந்தச் செடிகளோடும், கொடிகளோடும் பழகித்தான் மறக்க வேண்டும்" என்றாள், லீனா. அவளுடைய கண்கள் கலங்கின.

அவளுக்கு நேர்ந்த துன்பத்தைப் பற்றிய நினைவு,

அப்போதையச் சூழ்நிலையைப் பாதித்துக் கொண்டிருந்தது. உதயசந்திரன் சிந்தையைத் திருப்ப முயன்றான்.

"நான் பௌத்த கடிகையில் பணியாற்றச் சேர்ந்து விட்டேன்" என்றான்.

"ஓ... உங்களுக்கு அந்தப் பணி பிடித்திருக்கிறதா?"

"ஆமாம். கடிகையில் தங்கியிருக்கும் மாணவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு என்னுடையது. மாணவர்களோடு பழகுவது உற்சாகமாயிருக்கிறது."

"உங்கள் கடிகையிலிருந்து தினமும் நீங்கள் வெளியே வர முடியுமா? அனுமதி தருவார்களா?"

"ஏன்?"

"சும்மா கேட்டேன்" என்றாள் லீனா. அருகிலிருந்த ஒரு செடியை அவளுடைய விரல்கள் வருடிக் கொண்டிருந்தன.

"கடிகையில் என்னுடைய பணிக்குக் குறிப்பிட்ட நேரம் என்று எதுவும் கிடையாது. எப்போது வேண்டுமானாலும் நான் வெளியே வரலாம் போகலாம்" என்று கூறி அவளை உற்றுப் பார்த்தான். அவனுடைய பதிலில் அவள் மகிழ்ச்சியடைந்ததைப் புரிந்து கொண்டான்.

"போட்டி நடைபெறப் போகிறதே. பார்க்க வருவீர்களா?" லீனா ஆவலுடன் கேட்டாள்.

"கட்டாயம் வருவேன்."

"நாங்களும் வருவோம்" என்று உவகையுடன் கூறியவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அப்போது அருகே இருந்த செடிகளுக்கிடையில் சல சலப்புக் கேட்டதைக் கவனித்த லீனா, தலையைத் திருப்பிப்

பார்த்தாள். சட்டென்று உதயசந்திரனை அப்பால் தள்ளினாள். பின்னால் நகர்ந்த உதயசந்திரன் திகைப்புற்றான். லீனா இடப்புறத்தில் சுட்டிக் காட்டினாள். சற்றுத் தள்ளி ஒரு பெரிய நாகம் ஆள் உயரத்திற்கு எழும்பிப் படமெடுத்து நின்றதைக் கண்ட உதயசந்திரன் திடுக்கிட்டான். நாகம், சற்றும் சலனமில்லாமல் கம்பீரமாக அவர்களை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

உதயசந்திரன் தலையைத் திருப்பிச் சுற்றுமுற்றும் தரையை நோக்கினான். பிச்சிப் பூச் செடியினருகில் கிடந்த கல் ஒன்றைச் சட்டென்று குனிந்து எடுத்தான். அவனது எண்ணத்தைப் புரிந்து கொண்ட லீனா அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

"ஐயோ, வேண்டாம். அசையாமல் அப்படியே இருங்கள். அது தானாகப் போய்விடும். நாகத்தைக் கொல்லக் கூடாது என்பார்கள்" என்றாள் லீனா.

"இது சாதாரண நாகமல்ல. ராஜநாகம். கையை விடு. ஒரே எறியில் அதனுடைய தலையைச் சிதறடித்து விடுகிறேன்" என்றான் உதயசந்திரன்.

"குறி தவறிவிட்டால் நம்மீது பாய்ந்துவிடும். நாம் தப்ப முடியாது. அசையாமலிருங்கள்."

"குறி தவறாது. ஒரே எறி. கையை விடு."

"வேண்டாம் பயமாயிருக்கிறது. அதோ, தலையைக் கீழே போடுகிறது. போய்விடும்."

எழும்பி நின்ற நாகம், தலையைச் சுருக்கியவாறே மெல்லக் கீழே சரிந்து, தரையில் ஊர்ந்து புதருக்குள் மறைந்துவிட்டது. லீனா பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தாள். அவனுடைய கையை இறுகப் பற்றிக்கொண்டாள்.

"போக விட்டுவிட்டாயே. கொன்றிருக்கலாம். இது ராஜ நாகம். பொல்லாதது" என்றான் உதயசந்திரன். பிறகு, "பயந்துவிட்டாயா?" என்றான்.

"இவ்வளவு பெரிய நாகத்தைப் பார்த்ததே இல்லை. ராஜநாகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"மலைகள், காடுகளில் தாம் இது இருக்கும். மனித சஞ்சாரம் உள்ள இந்த இடத்திற்கு எப்படியோ வழி தவறி வந்திருக்கிறது. இந்த ராஜநாகம் ஒரு நேரத்தில் வெளியிடும் விஷம், ஏழு யானைகளைக் கொன்றுவிடுமாம். இது, நல்ல பாம்புகளையும் மற்றப் பாம்புகளையும் மட்டுமே ஆகார மாகக் கொள்வதால் தான் இதற்கு ராஜநாகம் என்ற பெயர் வந்தது. மிகவும் கொடியது."

"ஓ...! அது படமெடுத்து ஒரு ஆள் உயரத்திற்கு நின்ற போது எவ்வளவு அழகாயிருந்தது! என்ன கம்பீரம். அது நம்மை உறுத்துப் பார்த்தது தான் பயங்கரமாயிருந்தது" என்றாள் லீனா.

"நாகத்திற்கு இமைகள் இல்லை. அதனால்தான் அதனு டைய பார்வை கொடூரமாயிருக்கிறது. பாம்பு, முயல் போன்ற பிராணிகள் அந்தப் பார்வையின் கொடூரத்தைத் தாங்க முடியாமல் மயங்கிச் செயலிழந்து விடும். இந்த ராஜ நாகத்தின் கண்களைக் கண்டதும் எனக்கு இந்நாட்டின் இளவரசனின் நினைவுதான் வந்தது. இதைத் தப்பவிட்டு விட்டாயே. திமிர் பிடித்த ராஜகுமாரன் மீது எறிவதாக நினைத்து இந்த ராஜநாகத்தையாவது கொன்று போட்டிருப் பேன்" என்றான் உதயசந்திரன்.

"இளவரசன் மீது இவ்வளவு கோபமா?"

"இந்த மாதிரிக் கொடிய பாம்பாகப் பிறந்து காடுகளில்

திரிய வேண்டியவன், தவறிப்போய் அரண்மனையில் பிறந்து விட்டான்."

"இவர்தாம் இந்நாட்டின் சக்கரவர்த்தியாக முடிசூடப் போகிறவர். மகாவிஷ்ணுதான் மன்னராகப் பிறப்பார்கள்."

"மகாவிஷ்ணு தனக்குப் பதிலாக நரமாமிசம் தின்னும் கொடிய ஒரு ராட்சசனை இந்நாட்டில் இளவரசனாகப் பிறக்கும்படி அனுப்பிவிட்டார். இந்த நாட்டின் மீது விஷ்ணுவுக்கு என்ன கோபமோ."

இதைக் கேட்டு லீனா சிரித்தாள். புதருக்குள் ராஜநாகம் ஊர்ந்து சென்ற சலசலப்புக் கேட்டது.

"தோட்டத்துக்குள் வரும்போது ஜாக்கிரதையாக வரவேண்டும். இது கொடிய நாகம். சாதாரண நல்ல பாம்பு மனிதனைக் கண்ட உடன் பயந்து ஓடும். ராஜநாகம், எதிர்க்கும். இருட்டுகிறது. வீட்டுக்குப் போய்விடலாம்" என்றான், உதயசந்திரன்.

லீனா, இன்னும் அவனுடைய கையைப் பற்றிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஸ்பரிசம் அவனுள்ளே இன்பக் கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

"இன்னும் பயம் போகவில்லையா? கை நடுங்குகிறதே" என்று கனிவோடு கேட்டவாறு அவளுடைய கையை மெல்ல வருடினான்.

நாணத்தால் அவளுடைய பார்வை, தரையை நோக்கியது.

தூரத்தில், காஞ்சிக் கோட்டையில் அந்தி நேரத்தை அறிவிக்கும் கொம்பொலி கேட்டது.

12. சுரங்கப்பாதை

டெங்லீயின் வீட்டில் அன்றிரவு உதயசந்திரனுக்கு நல்ல விருந்து. டெங்லீ, அருகிலிருந்து அவனை உபசரித்தார்.

"நன்றாகச் சாப்பிடு. இந்த வாலிப வயதில் நன்றாகச் சாப்பிடவேண்டும். நான் உன்னைப் போலிருந்தபோது, இதைப் போல் இரண்டு மடங்கு சாப்பிடுவேன். வெட்கப் படாமல் சாப்பிடு" என்று டெங்லீ உபசரித்தார். லீனா, பரிவோடு பரிமாறினாள்.

அன்று வயிறும், மனமும் நிரம்பியவனாய் டெங்லீ யின் வீட்டிலிருந்து உதயசந்திரன் புறப்பட்டபோது, இரவு எட்டு நாழிகைக்கு மேல் ஆகிவிட்டது. அவனை இரவு அங்கு தங்கிவிட்டுக் காலையில் போகுமாறு டெங்லீ வேண்டினார். ஆனால், உதயசந்திரன் கோட்டைக்கு வெளியே இருந்த பௌத்த விஹாரத்தில் தங்கப் போவதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டான்.

தெருவிலிருந்த தீப்பந்த விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டன. நிலவின் ஒளி மட்டுமே மேகங்களினூடே மங்க லாகப் பரவியிருந்தது. வழியிலிருந்த தென்னந்தோப்பை உதயசந்திரன் நெருங்கியதும் தயங்கி நின்றான். அடர்ந்த தோப்பாதலால் இருள் மண்டிக்கிடந்தது. தோப்பினூடே ஒரு சிறு பாதை இருந்ததால், நேரே அது வழியாக நடந்தால், தோப்பைக் கடந்து விடலாம். உதயசந்திரனுக்கு உள்ளூர பயம். நாகப் பாம்பின் நினைவு, அவனை அச்சுறுத்தியது. ஓலைகளின் சலசலப்பு அவனை மிரள வைத்தது. எப்படி யும் போய்த்தான் ஆகவேண்டும். மனதைத் திடப்படுத்திக் கொண்டு பாதையில் நடக்கத் தொடங்கினான்.

கொஞ்ச தூரம் சென்றதும் பாதை சரியாகத் தெரிய வில்லை. தென்னை மரங்களினூடே எழுந்த நிலவொளி

போதவில்லை. தயங்கியபடி நின்றான். தோப்புக்குள் சற்று தள்ளி ஒளி தெரிந்தது. ஏதோ ஒரு கட்டடத்துக்குள் தீப்பந்தம் எரியும் ஒளி என்பதைப் புரிந்து கொண்டான். அங்கு சென்றால், அங்கிருப்பவர்களைத் தனக்குப் பாதையைக் காட்டும்படித் துணைக்கு அழைக்கலாம் என்ற எண்ணத்தில் அந்த ஒளியை இலக்கு வைத்து நடந்தான்.

அந்த ஒளி வந்த இடம், மாலையில் அவன் கண்ட சிறு கோயிலாக இருக்கும் என்று யூகித்துக் கொண்டான். தோப்பிலிருந்து நந்தவனத்தை நெருங்கியதும், கோயிலினுள் ஓர் ஆள் இருப்பது தெரிந்தது. நந்தவனத்திலும் ஆங்காங்கே மரங்களிருந்ததால் அவற்றின் மீது மோதிவிடாமல் ஒளியை நோக்கி மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்தான். கோயிலை நெருங்கியதும் கோயில் சாளரத்தின் வழியாக எட்டி உள்ளே பார்த்தான். உள்ளே எரிந்து கொண்டிருந்த தீவட்டியின் ஒளியில் ஒரு பெரிய சிவலிங்கம் தெரிந்தது.

"அடேயப்பா, எவ்வளவு பெரிய சிவலிங்கம்" என்று முணுமுணுத்தபடியே கைகூப்பி வணங்கினான். உள்ளே யாரும் இல்லை. அப்போது ஓர் அதிசயக் காட்சியைக் கண்டான்.

சிவலிங்கம் இருந்த கர்ப்பக் கிருஹத்தில் திடீரென்று வெளிச்சம் அதிகமாகியது. வெளிச்சம் எங்கிருந்து வருகிறது என்று புரியவில்லை. கர்ப்பக் கிருஹத்தைச் சுற்றிலும் சுற்சுவர்கள். அதிலிருந்த சாளரமும் கல்லினால் கட்டப்பட்டதுதான். ஒரே ஒரு வாசல் மட்டுந்தானிருந்தது. வெளிச்சம் வாசல் வழியாகவும் வரவில்லை. உதயசந்திரன் திகைப்புடன், வெளிச்சம் கூடிக்கொண்டு வந்ததைக் கவனித்தான். யாரோ தீவட்டியை ஏந்தியபடி கர்ப்பக் கிருஹத்துக்குள் வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால்,

கர்ப்பக் கிருஹத்துக்கு வேறு வாசல் இல்லையே என்று எண்ணிக் குழம்பினான்.

சற்று நேரத்தில், ஒருவன் தீவட்டியைப் பிடித்துக் கொண்டு லிங்கத்தின் பின்னாலிருந்து வெளிப்பட்டான். அவனுடைய கோலத்திலிருந்து அவன் அந்தக் கோயிலின் பூசாரி என்பதை உதயசந்திரன் புரிந்துகொண்டான். பூசாரி, தீவட்டியை சுவரிலிருந்த ஒரு கொக்கியில் செருகி விட்டு, மீண்டும் சிவலிங்கத்தின் பின்னால் மறைந்தான்.

உதயசந்திரன் பரபரப்படைந்தான். மெல்ல நகர்ந்து கர்ப்பக் கிருஹத்தின் பின்பக்கச் சுவர் அருகே சென்று சாளரத்தின் வழியே கவனித்தான்.

ஓ... சிவலிங்கத்தின் பின்னே சுரங்கப்பாதை! லிங்கத்தைச் சுற்றியுள்ள தளம், பெரிய சதுரக் கற்களால் பரப்பப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு பெரிய சதுரக்கல் மட்டும் தரையிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டு, சுவர்மீது சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. பூசாரி, அந்தக் கல்லை எடுத்து, சுரங்க வாயிலை அடைத்துவிட்டுத் தீவட்டியை அணைத்தான். கர்ப்பக் கிருஹத்தில் ஏற்கனவே எரிந்து கொண்டிருந்த தீவட்டி மட்டும் ஒளியைப்பரப்பிக்கொண்டிருந்தது. பூசாரி, கர்ப்பக் கிருஹத்தை விட்டு வெளியேறி வாசலுக்குச் சென்றான்.

உதயசந்திரன் ஓசைப்படுத்தாமல் நடந்து கோயிலின் முன் பக்கம் சென்று எட்டிப்பார்த்தான். வெளியே, வாசலில் இருந்த கல் திண்ணையில் பூசாரி அமர்ந்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். உதயசந்திரனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. மெல்ல, பூசாரியின் பின் பக்கமாய்ப் போய் நின்றான். பூசாரி, அப்பர் பாடல் ஒன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தான். தென்னை ஓலைகள் காற்றில்

எழுப்பிய சலசலப்பில் அவன் பாடியது சரியாகக் கேட்க வில்லை. பூசாரியின் பிடரியில் பட்டென்று ஓர் அடி அடித் தான், உதயசந்திரன். மறுகணம் முச்சுப் பேச்சின்றி பூசாரி மயங்கிச் சாய்ந்தான்.

உதயசந்திரன் தெரிந்து வைத்திருந்த தற்காப்புப் போர் முறையில் இதுவும் ஒன்று. மனித உடலில் எந்தெந்த இடத் தில் தட்டினால் உணர்வை இழக்கச் செய்யலாம் என்ற வித் தையை நன்கு அறிந்திருந்தான். கீழே சாய்ந்த பூசாரியைத் தாங்கித் திண்ணையில் படுக்கவைத்தான். இனி பூசாரி விழிப்பதற்கு ஆறு அல்லது ஏழு நாழிகைகளாவது ஆகும்.

பரபரப்புடன் கோயிலுக்குள் சென்ற உதயசந்திரன், சுரங்கப்பாதையை மூடியிருந்த கல்லைப் பெயர்த்தெடுத்துச் சுவரில் சாய்த்து வைத்தான். பூசாரி அணைத்து வைத்திருந்த தீவட்டியைப் பற்ற வைத்துக்கொண்டு சுரங்கப் பாதையில் இறங்கினான். பல படிகளில் இறங்கி சமதளத்துக்குச் சென்ற தும் எதிரே நீண்டு ஒரு பாதை போவது தெரிந்தது. நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டிருந்தது. பாதையில் நடக்கத் தொடங்கினான். ஆங்காங்கே பெரிய தூண்கள் அமைந்திருந்தன. தீவட்டியின் வெளிச்சத்தில் அவைகளின் நிழல்கள் பயமுறுத்தின. வெகுநேரம் நடப்பது போல் உணர்ந்தான். தீவட்டியின் நெடி எங்கும் பரவியது.

திடீரென்று உதயசந்திரன் நின்றான். அவனுள்ளே போராட்டம் நிகழத் தொடங்கிவிட்டது.—

இதென்ன வீண்வேலை? எதற்காக இப்படி நடந்து கொண்டிருக்கிறேன்? இது எங்கே கொண்டுபோய்ச் சேர்க்குமோ? இதில் ஏதேனும் இரகசியம் இருக்கும். ஏதோ பெயருக்கு கோவிலுக்குள் நந்தவனம் போல் அமைத்து, உள்ளே சுரங்க வாயிலை இணைத்திருக்கிறார்கள். பூசாரி

இந்தச் சுரங்கப்பாதையின் காவல் வீரனாகத்தானிருப்பான்... இதில் ஆபத்து ஏதேனும் இருக்குமோ? வலியப் போய் ஆபத்தில் சிக்குவானேன்? திரும்பிவிடுவோமா?....

உதயசந்திரன் தீவட்டியைப் பிடித்தபடி அசையாமல் நின்றான். எதிரே தெரிந்த தூண் ஒன்று பூதாகாரமாய் நின்று கொண்டிருந்தது. உள்ளூரப் பயமிருந்தாலும், மேலும் தொடர்ந்து சென்று பார்க்கவேண்டும் என்ற ஆசை அதிகரித்தது. முன்னோக்கி நடக்கத் தொடங்கினான். ஒரு இடத்தில் பாதை வலது பக்கமாய் பிரிவதற்கான அறிகுறி தெரிந்தது. ஆனால் வலது பக்கம் வழியேதுமில்லை, சுவர்தானிருந்தது.

அந்தச் சுவரில் பாதைக்கான இரகசிய ஏற்பாடு ஏதாவது இருக்கலாம் என்று எண்ணியவனாய் வலதுபுறச் சுவரைத் தொட்டுப் பார்த்தான். கற்களால் சுவர் கட்டப்பட்டிருந்தது. அதை அப்போது ஆராய்வதை விட்டுவிட்டு தொடர்ந்து பாதையில் நடந்தான். சற்று நேரம் நடந்த பிறகு, படிக்கட்டுகள் தெரிந்தன. அவனுடைய இருதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. படிகளில் இறங்கினான். படிகள், வளைந்து, வளைந்து மேலே ஏறியது. ஒரு இடத்துக்கு வந்ததும், உயரே வட்ட வடிவத்தில் ஒரு பெரிய துவாரம் தெரிந்தது. தீவட்டியை சுரங்கத்தினுள்ளேயே மேற்படியினருகே இருந்த தூணில் சாய்த்து வைத்துவிட்டு, துவாரத்தின் வழியாக எட்டிப் பார்த்தான். அங்கே ஒரு மண்டபம் தெரிந்தது.

துவாரத்தின் வழியாக மண்டபத்தினுள்ளே சென்ற உதயசந்திரன், இருளில் மறைந்து நின்றவாறு, சாளரத்தின் வழியே அடுத்த அறையைக் கவனித்தான். வியப்புத் தாளாமல் கல்லாகச் சமைந்து நின்றான். அவனால் நம்பவே முடியவில்லை. கப்பலில் சந்தித்த தேவசோமாவும், சுகததா

சாவும் அங்கிருந்தனர் ! அவர்களுடன் இளவரசனும் இருந்தான். அவர்களோடிருந்த வேறொருவனை எங்கோ பார்த்த நினைவு இருந்தது. யோசித்தான்–

ஓ...இவன் இளவரசனோடு குதிரையில் துணைக்கு வந்தானே, அவனல்லவா... ! இந்நேரத்தில் கூடி என்ன பேசுகிறார்கள் ? இலங்கைத் தேவசோமாவுக்கும், பல்லவ இளவரசனுக்கும் என்ன தொடர்பு ?....

உதயசந்திரன் உன்னிப்பாகக் கவனித்தான்.

"எங்கே போய்விட்டாய் ?"– சித்திரமாயன் கேட்டான்.

"கோட்டைக்கு வெளியே போட்டி மைதானத்துக்குப் போயிருந்தேன். திரும்புவதற்குள் கோட்டையை அடைத்து விட்டார்கள். லிங்கப்பாதையில் வந்தேன்" என்றான் வாணராயன்.

அவன் கூறிய லிங்கப்பாதை என்பது, சிவலிங்கத்துக்குப் பின்னால் உள்ள சுரங்கப் பாதைதான் என்பதை உதயசந்திரன் புரிந்து கொண்டான்.

"இவர்களும் இப்போதுதான் வந்தார்கள். உன்னால்தான் சுணக்கம். எல்லாவற்றையும் இவர்களிடம் விவரமாகச் சொல்" என்று கூறிவிட்டு, சித்திரமாயன் அந்த அறையைவிட்டு வெளியேறினான். பிறகு, அறையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை உதயசந்திரன் உன்னிப்பாகக் கேட்டான்.

"இடத்தை நன்றாகப் பார்த்துக் கொண்டாயல்லவா ?" என்று வாணராயன் கேட்டான்.

சுகததாசா, தலையை ஆட்டினான். வாணராயன் தொடர்ந்து பேசினான். "போட்டி மைதானத்தில் பார்வையாளர் பகுதியில் உனக்கு நான் காட்டிய ஆசனத்துக்கு

எதிரே இருக்கின்றனவே இரண்டு மரங்கள்; நன்றாக கவனித்துக் கொண்டாயா ?"

"உம்..." – தலையை அலட்சியமாக அசைத்தான் சுகதாசா.

"மைதானத்துக்கு வெளியே அடுத்திருப்பது, கல்லால மரம். அதன் பின்னே இருப்பது புளியமரம். நீ புளிய மரத்தின் மீது ஏறி இருந்துதான் குறி வைக்க வேண்டும். முன்னே இருக்கும் கல்லாலமரம்; உன்னையும், நீ ஏறியிருக்கும் புளிய மரத்தையும் நன்றாக மறைத்துக் கொண்டிருக்கும். நாளை நீ புளியமரத்தில் ஏறி, மைதானத்திலுள்ள பார்வையாளர் பகுதியில் நான் காட்டிய ஆசனம் நன்கு தெரிகிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள். போட்டி வீரர்கள் நுழையும் வாசலையடுத்து மேல் புறமாக உள்ள மேடையில் முன்றாவது ஆசனம். நன்றாக ஞாபகம் வைத்துக் கொள். இலக்கு நன்கு தெரிவதற்கு மரக்கிளைகளை வெட்ட வேண்டுமானால், நாளை வெட்டிக் கொள்" என்றான் வாணராயன்.

"போட்டியின் முதல்நாளே வேலையை முடித்து விட்டால் என்ன ?" என்று கேட்டான், தேவசோமா.

"வேண்டாம். முதல் நாள் காவல் பலமாயிருக்கும். இரண்டாம் நாள் தான் சற்று அயர்வார்கள். இரண்டாம் நாள் தான் மகாராணியின் பரிசளிப்பு நடைபெறும். நான் கூறுவதைக் கவனமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். இரண்டாம் நாள், பரிசளிப்புக்கு முன்பாக, கடவுள் வணக்கம் நடைபெறும். அதன்பின், போருக்குச் சென்றிருக்கும் சக்கரவர்த்தியின் வெற்றிக்காகப் பிரார்த்தனை நடைபெறும். முதலில் கடவுள் பிரார்த்தனை முடிந்ததும், மூன்று முறை கொம்பு ஊதுவார்கள். பிறகுதான் போர் வெற்றிக்கான பிரார்த்தனை நடைபெறும். கடவுள் பிரார்த்தனை முடிந்து, மூன்றாவது முறை கொம்பு ஊதி முடிக்கும்போது உன் வேலையை

முடித்து விடு. அந்தச் சமயத்தில் எல்லாரும் எழுந்து நின்று கொண்டிருப்பார்கள். நான் காட்டிய ஆசனத்துக்குக் குரியவரும் எழுந்துதான் நிற்பார். நான் சொன்னவற்றை யெல்லாம் மனத்தில் வாங்கிக் கொண்டாயா?" என்று கேட்டான், வாணராயன்.

"ஓ..." என்று தலையை ஆட்டினான், சுகததாசா.

"நான் சொன்னவற்றையெல்லாம் திரும்பச் சொல்."

சுகததாசா, ஒன்று விடாமல் திரும்பக் கூறினான்.

வாணராயன் திருப்தியடைந்து, சுகததாசாவின் தோளில் தட்டினான்.

"அந்த நபர் யார்?"– தேவசோமா கேட்டான்.

"உங்களுக்கு அந்த இரகசியம் இப்போதே தெரிய வேண்டிய அவசியம் இல்லை" என்றான் வாணராயன்.

"ஒருவேளை அந்த நபர் வேறு ஆசனத்தில் அமர்ந்து விட்டால்?" என்று சந்தேகத்தோடு கேட்டான், தேவசோமா.

"அமரமாட்டார். ஒவ்வொருவருடைய அந்தஸ்தையும் அனுசரித்து ஆசனம் போடப்பட்டிருக்கிறது. அவரவர் களுக்குரிய ஆசனங்களில்தாம் அமர்வார்கள். அதில் சந்தேகப்பட வேண்டியதே இல்லை."

"உங்கள் விருப்பம் நிறைவேறும்" என்று உறுதியுடன் சொன்னான், சுகததாசா.

வாணராயன் மகிழ்ச்சியுடன், சுகததாசாவின் தோளில் தட்டினான். "நாம் இப்போது பிரிவோம். இனி நான் உங் களைச் சந்திக்க மாட்டேன். நீங்களும் என்னைச் சந்திக்க முயல வேண்டாம். காரியம் முடிந்ததும் நீங்கள் நேரே உங் கள் விடுதிக்குப் போய் விடுங்கள். நீங்கள் கப்பல் ஏறும் நாளன்று, உங்களுடைய வெகுமதிகள், மாமல்லபுரத் துறை

முகத்துக்கே வந்து சேரும். நான் இனி உங்களை மாமல்ல புரத் துறைமுகத்தில்தான் சந்திப்பேன். பல்லவ நாட்டின் ஆசியையும், பெரும் செல்வத்தையும் நீங்கள் போகும் போது கொண்டு செல்லலாம். உங்கள் மீது மிகுந்த நம் பிக்கை வைத்திருக்கிறோம்" என்றான்.

"நம்பிக்கை வீண் போகாது" என்றான் சுகததாசா.

வாணராயன், வாசலை நோக்கிக் கையைத் தட்டி னான். வேல்பிடித்த ஒரு காவல் வீரன் உள்ளே விரைந்து வந்தான்.

"இவர்களை விடுதியில் கொண்டு போய் விட்டுவிடு" என்றான் வாணராயன். எல்லாரும் அந்த அறையை விட்டு வெளியே சென்றார்கள்.

உதயசந்திரன் சாளரத்தை விட்டு விரைந்து விலகிச் சென்று, சுரங்கத்தினுள் நுழைந்து மறைந்தவாறு எட்டிப் பார்த்தான். மண்டபம் இருண்டு கிடந்தது. அங்கு யாரும் வரவில்லை. அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தூணில் சாத்தி யிருந்த தீவட்டியை எடுத்துக் கொண்டு படிகளில் விரைந்து இறங்கத் தொடங்கினான்.

பெரிய சதி நடக்கிறது. வீரப்போட்டி நடைபெறும் போது யாரையோ கொலை செய்யப் போகிறார்கள்... மூன்றா வது ஆசனம்.... புளியமரம்... இரண்டாம் நாள் பரிசளிப்புக்கு முன்... கடவுள் பிரார்த்தனை நடக்கும் போது... புளியமரத் தின் மீதிருந்து எப்படி...?

ஓ... சுகததாசா பெரிய வில்லாளி அல்லவா? அடே யப்பா கப்பலில் கொள்ளைக்காரர்களை அவனுடைய அம்புகள் எவ்வளவு கச்சிதமாகத் தாக்கின! பாய்மரக் கம்பத்திலிருந்து அவ்வளவு தூரத்தில் குறி வைத்து அடித்து

வீழ்த்தினானே ! நல்ல ஆளாகத்தான் பார்த்து சதிகாரர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். சுகததாசா, குறி தவறமாட்டான். ஒரே அம்பு போதும். அந்தப் பரிதாபத்துக்குரிய நபர் யார் ? பல்லவ நாட்டின் முக்கிய நபராகத்தானிருக்க வேண்டும். இல்லையென்றால், இளவரசனே தலையிடுவானா ? ராஜ்யம், ஆட்சி எல்லாம், இதெல்லாம் நடந்து கொண்டுதானிருக்கும் போலிருக்கிறது... அந்த நபர் யாராயிருக்கும் ?.... யாராயிருந்தால் எனக்கென்ன ? ஏதோ ஒரு ராஜீய காரியம். எனக்கென்ன இதில் அக்கறை ? இரண்டாம் நாள், போட்டி மைதானத்திலிருந்து கொலையைப் பார்க்கலாம்....ஓ ! நான் ஒருவன்தான் சாட்சி ! இந்த உலகத்தில், அது பற்றிய உண்மையைக் கூறக் கூடியவன் தேவைப்பட்டால், நான் ஒருவன்தான் சாட்சி... !

ஒரு இடத்தில் வந்ததும் நின்று கவனித்தான். அந்த இடத்தில்தான் சுரங்கப்பாதை பிரிவதுபோல் சில அறிகுறிகள் தோன்றின. இடது பக்கத்துச் சுவரை ஆராய்ந்தான். தீவட்டியை சுவர் அருகே பிடித்தான். சதுரமான கற்களால் சுவர் கட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு கல்லையும் கையினால் அழுத்திப் பார்த்தான். ஒரே ஒரு கல் மட்டும் இலேசாக அசைவது போலிருந்தது. உதயசந்திரன் உற்சாகமடைந்தான். தீவட்டியை அருகிலிருந்த தூணில் சாய்த்து வைத்துவிட்டு, அசைந்த கல்லை இருகரங்களாலும் மேலும் அசைத்துப் பார்த்தான். கல் நன்றாக அசைந்து கொடுத்தது. இடைவெளியும் தோன்றியது. இடைவெளிக்குள் விரல்களை நுழைத்துக் கல்லை இழுத்தான். கல் நகர்ந்தது. முழு பலத்தையும் கொடுத்து அதை வெளியே இழுத்தான். சுவரிலிருந்து கல் விடுபட்டு வெளிய வந்தது. கல்லைக் கீழே சுவற்றில் சாத்திவிட்டுக் கல் பெயர்த்துவந்த பொந்து வழியாக எட்டிப் பார்த்தான். உள்ளே இருள். ஒன்றும் தெரிய

வில்லை. தீவட்டியை எடுத்துத் துவாரத்தின் வழியாகக் காட்டினான். அங்கும் ஒரு சுரங்கப் பாதை நீண்டு சென்றது.

ஆவல், அவனை உந்தியது. பொந்து வழியாக உள்ளே புகுந்து நடக்கத் தொடங்கினான். பாதை போன விதத்திலிருந்து அது மீண்டும் அரண்மனையின் வேறொரு பகுதிக்குச் செல்கிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

அவனுக்கு உள்ளூரப் பயம் எழுந்தது. இரகசியப் பாதை ஒன்றில் தானிருந்ததை உணர்ந்து உடல் சிலிர்த்தான். அரண்மனை இரகசியத்தில் வலியப் போய் மாட்டிக் கொண்டதாக எண்ணி, மனம் உளைந்தான். ஆனால் அவன் கால்கள் அவனை இழுத்துக் கொண்டு சென்றன. அந்தப் பாதையின் முடிவிலும் படிக்கட்டுகள் தோன்றின. அவற்றில் ஏறிச் சென்றபோது படிகள் ஓரிடத்தில் முடிந்து விட்டன. அதற்குப் பிறகு பாதை ஏதும் இல்லை.

அந்த இடத்தில் கட்டாயம் ஒரு வாசல் இருக்க வேண்டும். வாசல் எப்படி அடைபட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்தான் அங்கும் சுவற்றில் ஒரு கல்லினால்தான் வாசல் அடைபட்டிருந்தது. கல்லை நகர்த்திவிட்டு பொந்து வழியாக எட்டிப் பார்த்தான். மறுபக்கம் ஒரு சிறு அறை இருந்தது. வெளிச்சம் ஏதும் இல்லை. அதை அடுத்த அறையில் மிக மெல்லியதாக விளக்கொளி தெரிந்தது.

உதயசந்திரன் சுரங்கத்தினுள்ளிருந்து வெளிப்பட்டு அறைக்குள் சில வினாடிகள் நின்று கவனித்தான்.

அங்கிருந்த அலங்காரச் சின்னங்கள், அவனைப் பிரமிக்க வைத்தன. அரண்மனையைச் சேர்ந்த அந்தப்புரம் என்று யூகித்துக் கொண்டான்.

அந்தப்புரம் என்றால், ராஜகுமாரியும் இருக்க வேண்டுமே. அவள் எங்கே ஒய்யாரமாகத் தூங்குகிறாளோ...?

உதயசந்திரன், தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். அறைக்குள் ஒவ்வொரு இடமாக உற்றுப் பார்த்தான். அவனுடைய பார்வை, சாளரத்தை அடுத்தாற் போல் கீழே தாழ்ந்தபோது...

ஓ...! உதயசந்திரனின் கண்கள், நிலை குத்தின. சாளரத்துக்கு அடுத்துப் போடப்பட்டிருந்த ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருந்த பெண்மீது பார்வை விழுந்ததும் இதயத் துடிப்பு, ஒரு கணம் நின்றுவிட்டது போலிருந்தது.

புராணக் கதைகளில் தேவலோக அப்ஸரஸ்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். இந்திர சபையைச் சேர்ந்த தாசிகளான ஊர்வசி, மேனகை, திலோத்தமை போன்றவர்களின் அழகைப் பற்றிக் கதைகளில் கேட்டிருந்தான். அப்படி ஒரு பிரமிப்பூட்டும் பேரழகு, மஞ்சத்தில் கண்மூடிக் கிடந்ததைக் கண் இமைக்காமல் பார்த்து நின்றான்.

அந்த அழகியின் தலைமாட்டில் எரிந்துகொண்டிருந்த அகல் விளக்கின் ஒளி, அவளுடைய மேனியில் மிருதுவாகப் படர்ந்திருந்தது. தனிமையில் ஆடை நெகிழ்ந்து நிச்சிந்தையாகத் தூங்கிக் கொண்டிருந்த ஓர் அழகியின் அருகில் தான் நின்று கொண்டிருந்ததை எண்ணியதும், அவனுள் பரபரப்பு அதிகமாகியது. சாளரத்தின் வழியாகக் கையை நீட்டினால் அவளைத் தொட்டுவிடலாம். அவ்வளவு அருகில் நின்று கொண்டிருந்தவனின் மனம் தத்தளித்தது.

அவளுடைய இதழ்களில் புன்முறுவல் தோன்றி மறைந்ததிலிருந்து அவள் ஏதோ ஓர் இனிமையான கனவிலிருக்கிறாள் என்று நினைத்தான். அவனுடைய பார்வை, கட்டில் நெடுகிலும் பரவியது.

மல்லாந்து படுத்திருந்தவளின் மேலாக்கு விலகி, மார்க்கச்சை மட்டும் தெரிந்தது. அந்தக் கச்சையின் முடிச்சும்

அவிழ்ந்து, கச்சையும் தளர்ந்து விலகியிருந்தது. மூச்சு விட்டபோது மார்பகங்கள் உயர்ந்தும், தாழ்ந்தும் அசைந்த அழகும், முழங்கால்களுக்குமேல் ஆடை விலகிக் கிடந்த தால் ஒளிவிட்ட தொடைகளின் அழகும், அவள் படுத்துக் கிடந்த கோலமும் உதயசந்திரனை சில வினாடிகள் நிலை குலைய வைத்துவிட்டன.

ஒரு பெண்ணை அப்படி ஒரு கோலத்தில் அவன் கண்டதில்லை. பெண்ணின் அங்கங்களுக்கு மனத்தைக் கிறங்க வைக்கும் காந்த சக்தி உண்டென்பதை அப்போது முதன் முறையாக உணர்ந்தபோது அவன் உடலில் விவரிக்க இயலாத கிளர்ச்சி தோன்றியது.

நிலைமறந்து உறங்கும் ஒரு பெண்ணின் உடலை அருகே நின்று அப்படிப் பார்ப்பது சரியல்ல என்று அவனுடைய கண்ணியமான உள்ளம் தடுக்கவே, அவ்விடத்தை விட்டு உடனே விலகிச் செல்ல நினைத்தான். அவனுடைய பார்வை மீண்டும் அவள் முகத்தில் பதிந்தது.

ஓ...எவ்வளவு அழகு... !

அவள், கண்களை விழித்து அவனைப் பார்ப்பது போலிருந்தது. அவன் அதிர்ந்து போனான். மறுகணம் பாய்ந்து சென்று சுரங்கப் பாதையில் நுழைந்து, கல்லைத் தூக்கி வாசல் பொந்தை அடைத்துவிட்டு, தீவட்டியை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக விழுந்தடித்துக் கொண்டு விரைந்தான்.

பயம், அவனை உந்தித் தள்ளியது. மூச்சு இரைத்தது. வியர்வையில் குளித்தபடி சிவலிங்கத்தின் பின்னே போய்ச் சேர்ந்தான். சுரங்க வாயிலைக் கல்லினால் அடைத்து விட்டுக் கர்ப்பக் கிருஹத்திலிருந்து வெளியே வந்தான். பூசாரி இன்னும் கல் திண்ணையில் மயங்கியே கிடந்தான்.

உதயசந்திரன் தீவட்டியைப் பிடித்துக் கொண்டு தென்னந்தோப்பை நோக்கி விரைந்தான். தோப்பைக் கடந்து வீதியை அடைந்ததும், தீவட்டியை அணைத்து எறிந்து விட்டு பௌத்த விஹாரத்தை நோக்கி நடந்தான். பௌத்த விஹாரத்தை அடைந்த பிறகுதான் அவனுக்கு ஏற்பட்டிருந்த படபடப்பு குறைந்தது. மடத்தில் படுத்திருந்த போது உறக்கம் வராமல் தவித்தான். அந்தப் பெண் யாராயிருக்கும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டான்.

13. சலனம்

அந்தப்புரத்தில் மேகலா மிகுந்த மனச் சஞ்சலத்துக் குள்ளாகியிருந்தாள்.

அச்சுதப்பட்டரின் உறவினருக்கு நிலமளிக்க அவள் ஏற்பாடு செய்தது பெரும் குழப்பத்தை உண்டாக்கி விட்ட தாகக் கிடைத்த செய்தி அவள் கோபுத்தைக் கிளறியது.

இவையெல்லாவற்றிற்கும் மேல் அவளுடைய மனதை மிகவும் அலைக்கழித்தது, இரவு அவள் கண்ட காட்சிதான். இரவு தூங்கிக் கொண்டிருந்த வேளையில் ஏதோ ஓர் இனிமையான கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டி ருந்த போது, சாளரத்தின் வழியே ஓர் அழகனின் முகம் தெரிந் ததை எண்ணி யெண்ணிக் குழம்பினாள். தான் கண்ட காட்சி கனவிலா அல்லது நனவிலா என்பதை முடிவு செய்ய முடியவில்லை. அந்த அழகான முகம், சாளரத்தின் வழியே அவளை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்ததாக உணர்ந்தாள். அவள் தூக்கக் கலக்கத்திலிருந்து முற்றும் விடுபட்டு எழுவ தற்குள் அந்த முகம் மறைந்துவிட்டது. எழுந்து விளக்கை ஏந்தியவாறு பக்கத்து அறைக்குச் சென்று பார்த்தாள். அங்கு யாரும் இல்லை. சுரங்கப் பாதையின் வாசலை சோதித்துப்

பார்த்தாள். வாசலை அடைத்திருந்த கல், அடைத்தபடியே இருந்தது. தாதிகளை எழுப்பி விசாரித்தாள். அந்தப்புரம் முழுவதையும் சோதிக்கச் சொன்னாள். ஒரு தடயமும் இல்லை. எல்லாம் கனவின் கோளாறு தான் என்று முடிவு செய்தாள். ஆனாலும், அந்த அழகனின் முகத்தை அவளால் மறக்க முடியவில்லை, நினைவில் குறுகுறுத்துக் கொண்டேயிருந்தது.

நிஜமான மனித முகம் போலல்லவா தெரிந்தது! எவ்வளவு அழகு! கண்களில் தாம் எவ்வளவு காந்தம்...

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். கொஞ்ச நாட்களாகவே ஹம்ஸத்வனிகா மஞ்சம் கூட அவளைத் துன்புறுத்தியது. அவளுடைய இளமையும் தெம்பும் மனத்தில் குறுகுறுப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தன. அவள் மாபெரும் பல்லவசாம்ராஜ்யத்தின் இளவரசனின் மனைவி. வருங்கால மகாராணி. அவளுடைய கண் அசைப்பிற்கு சாம்ராஜ்யமே நடுங்கும்.

பூர்விகத்தில், அவள் ஒரு சாதாரண நாட்டியக்காரி. அரண்மனை வாழ்வு கிட்டிய பிறகு அவளுக்கு ஏற்பட்டுவிட்ட ஆணவமும் திமிரும்... ஓ! பல்லவ சாம்ராஜ்யமே அவளுடைய சொல்லுக்குக் கட்டுண்டு கிடக்க வேண்டும் என்ற பேராசை, ஏழைக் குடும்பத்தில் பிறந்து வறுமையே துணையாக வளர்ந்தவள்தான். அதிர்ஷ்டம், அவளை அரண்மனைக்கு இழுத்து வந்தது.

கடந்த காலத்தை எவ்வளவு இலகுவில் மறந்து விட்டாள்! தன்னுடைய வாழ்க்கையை அவள் வகுத்துக் கொண்ட சாமர்த்தியத்தில்தான் அவளுக்கு எவ்வளவு நம்பிக்கை!

நான்கு ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டிலிருந்து ஒரு

குறிக்கோளுடன்தான் அவளைப் பல்லவ நாட்டிற்கு அழைத்து வந்தாள் அவளுடைய தாயார், கோமளவல்லி.

காஞ்சிநகர், கலைகளுக்குப் புகழ்பெற்றிருந்ததால் அங்கு வளமான வாழ்வு கிட்டும் என்ற நம்பிக்கையில் வந்தார்கள். நம்பிக்கை வீண்போகவில்லை. மேகலாவின் நாட்டியத்திற்குக் காஞ்சிநகரில் நல்ல வரவேற்பும் கிடைத்தது.

ஒரு நாள், கைலாசநாதர் கோயில் உற்சவத்தின்போது முன் மண்டபத்தில், சந்நிதிக்கு எதிரே மேகலா நடன மாடிக்கொண்டிருந்தாள். அன்று பல்லவ சக்கரவர்த்தி திடீரென்று கோயிலுக்கு விஜயம் செய்தார். கூடவே இளவரசன் சித்திரமாயனும் சென்றிருந்தான்.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தைத்தான் மேகலாவின் தாயார் கோமளவல்லி எதிர்பார்த்திருந்தாள். மன்னரும் இளவரசரும் ஆசனங்களில் அமர்ந்தபோது, மகளின் கையைக்கிள்ளி, "சாமர்த்தியமாக நடந்துகொள்" என்று அறிவுரை கூறினாள்.

மேகலா, சக்கரவர்த்தியைப் பணிந்து வணங்கிவிட்டு இளவரசனை வணங்கக் குனிந்தபோது பார்வையால் அவனை மெல்ல வருடினாள். மண்டபத்தினுள் வந்ததிலிருந்தே மேகலாவின் ஒய்யாரத்தையும், கட்டுடலையும் கண்டு கிறங்கிப் போயிருந்தான், சித்திரமாயன். வணங்கும் பாவனையில் மேலாக்கை மெல்ல நழுவ விட்டு, கண்களால் அவனை வளைத்தபோது, சித்திரமாயன் குழைந்தான்.

அவளுடைய தந்தக் கடைசல் மேனியழகும், பூசியிருந்த வாசனையின் சுகந்தமும் அவனை மயக்கின. அவனுடைய பாதங்களைத் தொட்டு வணங்குவதற்குக் குனிந்த மேகலா, நிமிர்ந்தபோது, வேண்டுமென்றே தோள்கள் இரண்டையும் குறுக்கினாள்.

ஓ...! அப்போது, கச்சையில் சிக்குண்டு இறுகியிருந்த கலசங்கள் இரண்டும் கழுத்துக்குக் கீழே திமிறியவாறு வெளியே புடைத்தன. அந்தக் காட்சியில் சிக்குண்ட சித்திர மாயனின் கண்களில் போதை ஏறத் தொடங்கியது.

ஒரு கணந்தான். மறு கணம், மேகலா எழுந்து, மண்டபத்தின் நடுவே நடனமாடும் சதுக்கத்தில் போய் நின்றாள். சற்று நேரத்தில் சக்கரவர்த்தி எழுந்துவிடவே, சித்திர மாயனும் கூடவே எழுந்து செல்ல வேண்டி வந்து விட்டது.

அன்று இரவே சித்திரமாயனுக்காக மேகலாவிடம் வாணராயன் தூது சென்றான். இந்தமாதிரிக் காரியங்களில் எல்லாம் மேகலாவின் தாயாருக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரியும். வாணராயனைக் கடிந்து பேசி அனுப்பி விட்டாள். அவளுடைய எண்ணமெல்லாம் இளவரசனைக் கொஞ்சம் அலைக்கழித்துப்பின் சம்மதிக்க வேண்டும் என்பதுதான். சித்திரமாயனைத் தங்கள் வலைக்குள் நிரந்தரமாகச் சிக்குண்டு கிடக்கும்படிச் செய்துவிட வேண்டும் என்ற பேராசை அவளுக்கு.

"ஓ...! ஒரு நாட்டியக்காரிக்கு அவ்வளவு திமிரா!" என்று சீறினான், சித்திரமாயன்.

"கலைக்காகவே வாழ்கிறவளாம்" என்றான், வாணராயன்.

"ஆ...கலை...இதுவும் ஒரு கலைதான் என்று சொல்ல வேண்டியதுதானே?"

"நான் எவ்வளவோ சொன்னேன். தாய்க்காரியிடம் பல்லவ ராஜகுலத்தின் அபிமானம் கிடைத்தால் ராஜபோகத்தில் வாழலாம் என்றேன்."

"அதற்கு அவள் என்ன சொன்னாள்?"

"கலைதான் வாழ்க்கையாம். நாட்டியக் கலைக்காக அவளுடைய குடும்பம் வாழ்க்கையை அர்ப்பணித்திருக் கிறதாம்."

"சீச்சீ...உனக்கு வெட்கமாயில்லை. இதைச் சொல்ல. கேவலம் ஒரு நாட்டியக்காரி என்னை அவமதித்திருக் கிறாளே" என்று கோபத்தில் இரைந்தான் சித்திரமாயன்.

"இளவரசே, இன்று மட்டும் பொறுத்திருங்கள். நாளை இரவு, மேகலா உங்கள் அந்தரங்க மண்டபத்தில் வந்து சேர்வாள். எப்படியும் அவளைக் கொண்டுவந்து சேர்க் கிறேன்" என்று உறுதி கூறிவிட்டுச் சென்றான், வாணராயன்.

இந்த விஷயத்தில் சித்திரமாயன் அவசரப்பட்டு விட்டான். கொஞ்சம் பொறுத்திருந்தால் மேகலா தானாகவே அவனை நாடி வந்திருப்பாள். அவனுடைய அவசரப் புத்தியும், ஆத்திரமும் பல்லவ நாட்டு வரலாற்றையே திசை திருப்பிவிடும் என்று அப்போது அவன் உணரவில்லை. மேகலாவின் சௌந்தர்யம் அவனுடைய அறிவை மழுங்க வைத்துவிட்டது.

மறுநாள் இரவு, வாணராயன் தன் சொல்லை நிறை வேற்றிவிட்டான். மேகலாவைப் பலாத்காரமாகக் கடத்திக் கொண்டு போய் சித்திரமாயனிடம் ஒப்படைத்துவிட்டான்.

தன்னுடைய அந்தரங்க மண்டபத்தில் மேகலாவிடம் வெறியைத் தணித்துக் கொண்ட சித்திரமாயன், அந்த விஷயம் வழக்கம்போல் யாருக்கும் தெரியாமலே போய் விடும் என்றுதான் எண்ணினான். ஆனால், கோமளவல்லி, தன் மகளுடன் பல்லவ மன்னரிடம் நீதி கேட்டு வந்தபோது சித்திரமாயன் திடுக்கிட்டான். அந்தச் சம்பவம் இப்படித் திசை திரும்பும் என்று தெரிந்திருந்தால் மேகலாவின் உடலை அரண்மனை அகழியில் வீசியெறிந்து முதலைகளுக்கு

இரையாக்கியிருந்திருப்பான். அதற்கு முன் எத்தனையோ பெண்கள் கற்பழிக்கப்பட்டு அப்படித்தான் யாருக்கும் தெரியாமல் மறைந்து போனார்கள்.

உண்மையை அறிந்த பல்லவ சக்கரவர்த்தி திகைத்தார். அரண்மனையில் மன்னரின் முன்னிலையில் அந்தரங்கமாக விசாரணை நடைபெற்றது. முதன் மந்திரி தரணிகொண்ட போசர் மட்டுமே உடனிருந்தார். மேகலா தலைவிரி கோலமாக நின்றாள். கோமளவல்லி மிகுந்த பிரயாசைப்பட்டுக் கண்ணீரை வரவழைத்துக் கொண்டிருந்தாள். இந்தச் சம்பவத்தைக் காரணமாக வைத்துப் பெரும்பொருளை மன்னரிடமிருந்து பெற்றுவிட வேண்டும் என்பது தான் அவளுடைய திட்டம்.

மன்னர், மேகலாவைப் பார்த்துச் சொன்னார் : "பெண்ணே, உனக்குப் பெரும் அநீதி நேர்ந்துவிட்டது. இதற்குப் பிராயச்சித்தமாக நீ என்ன வேண்டுகிறாயோ அதைச் செய்கிறேன்."

இதைக் கேட்டதும் கோமளவல்லி பரபரப்படைந்தாள். என்ன கேட்பது, எவ்வளவு கேட்பது என்று புரியாமல் தவித்தாள். யானை அளவுக்குப் பொன் கேட்கலாமா? ஒரு சிறு ராஜ்யத்தையே கேட்கலாமா?...

தன் மகள் என்ன கேட்கப் போகிறாளோ என்பதை அறியமிகுந்த ஆவலுடனும் பரபரப்புடனும் மேகலாவைக் கூர்ந்து பார்த்தாள்.

மேகலா ஏதும் சொல்லாமல் மௌனமாக நின்றாள். மன்னர், மீண்டும் சொன்னார். "சொல் பெண்ணே, உனக்கு வேண்டியதைக் கேள். இதற்கு நான் எப்படிப் பிராயச்சித்தம் செய்யட்டும்? பல்லவ நாட்டில் நீ இழக்கக் கூடாததை இழந்து நிற்கிறாய். இதற்கு என்ன செய்து நான் ஈடு செய்ய

முடியும்? பல்லவ நாட்டுப் பொக்கிஷம் பூராவும் வேண்டுமா, கேள். நிலம் வேண்டுமா, கேள் பெண்ணே..."

மன்னரை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள், மேகலா.

"அரசே, நான் இழந்ததை மீட்டுத் தாருங்கள் போதும்" என்றாள்.

பல்லவ மன்னர் புரியாமல் விழித்தார். கோமளவல்லி திடுக்கிட்டாள். மகளின் காதருகே குனிந்து இரகசியமாக, "அட முட்டாள் பெண்ணே, புத்தி கெட்டுப் போய் எதையோ கேட்கிறாயே, மலையளவு பொன் கேள், மாட மாளிகை கேள்" என்றாள்.

மேகலா தாயாரின் சொல்லை லட்சியம் செய்யாமல், மன்னரையே கூர்ந்து நோக்கினாள்.

மன்னர், குழம்பினார். "பெண்ணே! நடக்க முடியாததைப் பற்றிப் பேசுகிறாயே. உடலை விட்டுப் போன உயிரை மீண்டும் தர முடியுமா? அதுபோல் தானே கற்பும். உனக்கு நேர்ந்து விட்ட இழப்பு, கொடுமையானது. ஆனால் இழந்து போனதை எப்படி அம்மா...?" என்றார்.

மேகலாவின் பார்வையில் தீவிரம் தோன்றியது. "அரசே, போன உயிரை மீள வைக்க முடியும். சாவித்திரி சாதித்திருக்கிறாளே. அரசே, நான் இழந்ததையும் மீட்க முடியும்" என்றாள்.

அவளுடைய பேச்சின் அர்த்தம் புரியாமல் மன்னர் குழம்பினார். ஆனால், முதன் மந்திரி தரணிகொண்ட போசர் புரிந்து கொண்டு திகைப்படைந்தார். மன்னரின் காதருகே குனிந்து, "அரசே! அவசரப்பட்டு எதையும் வாக்களித்து விட வேண்டாம்" என்றார்.

"மந்திரியாரே, இந்தப் பெண்ணுக்கு நீதி வழங்க வேண்டிய கட்டத்திலிருக்கிறேன். இவள் எது கேட்டாலும் நாம் கொடுத்துத் தீர வேண்டிய நிலையில் நம்மை வைத்துவிட்டான், சித்திரமாயன்" என்று மன்னர் கூறிவிட்டு, மேகலாவிடம் திரும்பி, "பெண்ணே நீ இழந்ததை மீட்டுத் தரும் சக்தி கடவுளுக்கே இல்லை" என்றார்.

"அரசே, அந்தச் சக்தி தங்களுக்கு இருக்கிறது" என்றாள் மேகலா.

"ஓ! அப்படி நீ நம்பினால், என்னால் முடியுமானால் நான் இந்தப் பல்லவச் சாம்ராஜ்யத்தையே பணயமாக வைத்தேனும் உன் எண்ணத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நன்றாகச் சிந்தித்துப் பேசு பெண்ணே. இழந்த கற்பை மீண்டும் பெறுவதாவது?"

"பெற முடியும்" என்றாள் மேகலா உறுதியுடன்.

"வழி சொல்" என்றார், மன்னர்.

தரணி கொண்ட போசர் இடைமறித்தார். "பெண்ணே, நீ என்ன கேட்பதாயிருந்தாலும் அது, பல்லவ குலத்திற்கோ, சாம்ராஜ்யத்திற்கோ கேடு விளைவிப்பதாக இருக்கக் கூடாது" என்றார்.

மேகலா கோபத்துடன் அவரை உறுத்துப் பார்த்தாள்.

"மந்திரி அவர்களே, உயிரினும் மேலான மானத்தை இழந்து நீதி கேட்டு நிற்கிறேன். இந்த வேளையில் உங்களுக்குக் குலப் பெருமையும் ஆட்சியும்தாம் முக்கியமாகத் தோன்றுகிறது. பல்லவ குலத்தின் பெருமை, எனக் கிழைத்திருக்கும் கொடுமையிலேயே தெரிகிறதே!" என்று கூறி அலட்சியமாகச் சிரித்தாள்.

பல்லவ மன்னர், கூசிக் குறுகித் தலை கவிழ்ந்தார். தரணி கொண்ட போசர், அவளுடைய ஆவேசத்தைக் கண்டு துணுக்குற்றார். தன்னுடைய குலத்தைப் பற்றி ஒரு நாட்டியக்காரி பேசும்படி ஆகிவிட்டதே என்ற எண்ணத்தில் மன்னர் மனம் வெதும்பினார்.

"பெண்ணே, மந்திரி அவருடைய கடமையைச் செய்கிறார். அவருக்கு இந்நாடும், பல்லவ குலமும்தான் முக்கியம். கோபம் கொள்ளாதே. என்ன பிராயச்சித்தம் என்பதை மட்டும் சொல்" என்றார்.

"மன்னர் பிரானே, கற்பிழந்தவள் என்னும் பழியிலிருந்து என்னை விடுவியுங்கள். இதுதான் நான் கேட்கும் பிராயச்சித்தம்" என்றாள், மேகலா.

அப்போது தரணி கொண்ட போசர் குறுக்கிட்டு ஏதோ சொல்ல முனைந்தார். மன்னர் கையமர்த்தி அவரைத் தடுத்து விட்டு, மேகலாவைப் பார்த்து, "எப்படி என்று இன்னும் சொல்லவில்லையே" என்றார்.

"யாரிடம் நான் கற்பை இழந்தேனோ அவரை எனக்குக் கணவராக்கி விடுங்கள்" என்றாள், மேகலா.

இதைக்கேட்டு மன்னர் திகைத்துப் போய் அவளை வெறிக்கப் பார்த்தார். அவருடைய உடல் சிறிது நடுங்கியது. பேச்சு எழவில்லை. பெரும் அதிர்ச்சியினால் தாக்குண்டவர் போல் ஓய்ந்து விட்டார்.

கோமளவல்லிக்கு வியப்புத் தாளவில்லை. தன் மகளின் சாதுர்யத்தை எண்ணி உள்ளூரப் பெரு மகிழ்ச்சியடைந்தாள். தரணி கொண்ட போசர் கோபத்துடன் மேகலாவை நெருங்கிச் சென்று, "பெண்ணே நீ என்ன கேட்கிறாய்

என்பதைப் புரிந்து கொண்டுதானே கேட்கிறாய்?" என்று கேட்டார்.

"மந்திரி அவர்களே! இதைவிட வேறு வழி இருக்கிறதா? என்மீதுள்ள கறையைத் துடைக்க இதைவிட வேறு நல்ல வழி இருந்தால் தாங்களே மன்னர்பிரானிடம் கூறுங்களேன்" என்றாள் மேகலா.

அவளுடைய சாதுரியத்தை எண்ணி முதன் மந்திரி மலைத்தார். அவரால் பதில் கூற இயலவில்லை. சற்று நேரம் மௌனம் நிலவியது. மன்னனின் மனம் மிகுந்த குழப்பத்தில் சிக்கியிருந்தது. தரையைப் பார்த்தவாறே அமர்ந்திருந்தார். யாருக்கும் அங்கு நிலவிய அமைதியைக் குலைக்கும் தைரியமில்லை.

மன்னர் மெல்லத் தலை நிமிர்ந்தார். அவருடைய முகம் களையிழந்து சோம்பியிருந்தது. மேகலாவைப் பார்த்து, "பெண்ணே, உன் எண்ணத்தை நிறைவேற்றி வைக்கிறேன்" என்றார்.

மேகலா பாய்ந்து சென்று தரையில் வீழ்ந்து மன்னரின் பாதங்களை வணங்கி எழுந்தாள். மன்னர் அவள் தலை மீது கையை வைத்து ஆசீர்வதித்தார்.

அந்த திருமணத்திற்கு அரச சபையிலும், அரண்மனையிலும் மிகுந்த எதிர்ப்பு எழுந்தது. ஆனால் மன்னரின் ஆணையை யாரும் மீற முடியாதே. தரணி கொண்ட போசர் மட்டும் மன்னரைத் தனியே சந்தித்துப் பேசினார்.

"அரசே, எந்த ஸ்தானத்திற்கும் ஒரு தகுதி வேண்டும். அந்தப் பெண் தங்களுடைய மருமகளாக மட்டும் வரவில்லை; இந்நாட்டின் வருங்கால மகாராணியாகவும் ஆகப்

போகிறவள். ஒரு கூத்தாடியை மகாராணியின் அந்தஸ்தில் வைப்பது நாட்டுக்கும் நல்லதல்ல. அவளுடைய தகுதிக் கேற்ற புத்திதான் அவளுக்கு இருக்கும்" என்றார்.

மன்னர் சிரித்தார். "மந்திரி அவர்களே, நம்மையெல் லாம் ஒரு இக்கட்டான நிலையில் கொண்டு வந்து நிறுத்தி, தனக்கு வேண்டியதைச் சாதித்துக் கொண்டாளே ! இதி லிருந்தே அவளுடைய சாதுர்யம் தெரியவில்லையா" என்றார்.

"வெறும் சாதுர்யம் ஆபத்தானது அரசே. அவளு டைய மனம் பேராசை கொண்டது. நல்ல மனமும், குண மும் குலத்தோடு வளர்பவை. இவள், சேரநாட்டிலிருந்து பிழைப்பைத் தேடி இங்கு வந்தவள். சாதாரண நாட்டியக் காரி."

"மந்திரியவர்களே, இனி நாம் செய்வதற்கு ஒன்று மில்லை. ஒரு கூத்தாடிதான் அரியணையில் அமர வேண் டும் என்று இந்த நாட்டின் தலைவிதி இருக்குமானால், யாரால் மாற்றியமைக்க முடியும்?" என்றார், மன்னர்.

மேகலாவின் அதிர்ஷ்டமும், சாமர்த்தியமும் அவளுக்கு உயர்ந்த அந்தஸ்தை அளித்தன. இளவரசனின் மனைவி, வருங்கால மகாராணி என்பதால், ஆட்சியில் பலர் அவளுடைய அபிமானத்தைப் பெற முயன்றனர். மெள்ள மெள்ள அவளும் ஆட்சியில் தலையிட முனைந்தாள். அவளுடைய கவர்ச்சியிலும், பேச்சு சாதுர்யத்திலும் கட் டுண்டு கிடந்த சித்திரமாயன், அவளுடைய சொல்லுக்குத் தடையேதும் கூறவில்லை.

சக்ரவர்த்தி, போர்க்களம் புறப்பட்டபோது, ஆட்சிப் பொறுப்பை மகாராணி பிரேமவர்த்தினியிடம் ஒப்படைத் ததைக் கண்டு மேகலா உள்ளூரப் பொருமினாள்.

"கிழட்டு வயதில் இளைய ராணியின் மோகம் மன்னருக்கு இன்னும் தணியவில்லை. இளவரசர் நீங்கள் இருக்கும் போது ஆட்சிப் பொறுப்பை உங்கள் சின்னம்மாவிடம் ஒப்படைப்பானேன்? உங்கள் தந்தைக்கு உங்கள் மீது அவ்வளவு நம்பிக்கை" என்றாள்.

சித்திரமாயனின் தன்மானம் கிளர்ந்தெழுந்தாலும், சக்ரவர்த்தியின் ஆணையை மீற முடியாதே. "எல்லாம் எவ்வளவு காலத்திற்கு? கொஞ்சம் பொறு. நான் பட்டம் சூட்டியதும் நீதானே மகாராணி" என்று சமாதானப்படுத்தினான். பிறகு சொன்னான், "இப்போதே நீ மகாராணி மாதிரிதானே ஆணைகளைப் பிறப்பிக்கிறாய்."

"நான் என்ன கட்டளையிட்டாலும் சின்னம்மாவின் அனுமதி இருந்தால்தானே இந்நாட்டில் நிறைவேறும்" என்று அலுத்துக் கொண்டாள், மேகலா.

அவளுக்கு அப்போதே தான் மகாராணியாகி விட வேண்டும் என்னும் பேராசை கொழுந்துவிட்டு எரிந்தது. பல்லவ நாட்டு மக்கள் அவளை விரும்பவில்லை என்பதையும் உணர்ந்திருந்தாள். சேர நாட்டிலிருந்து பிழைக்க வந்த ஒரு கூத்தாடி, தங்களுக்கு மகாராணியாக வரப்போவதை மக்கள் விரும்பவில்லை. வீதியில் அவள் பல்லக்கில் செல்லும் போது மக்களின் முகங்களில் தோன்றிய வெறுப்பும், அலட்சியமும் அவளுக்குக் கோபத்தை மூட்டின. மகாராணி பிரேமவர்த்தினியோடு அவள் நகருக்குள் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில், மக்கள் அவளை அலட்சியப்படுத்திவிட்டு மகாராணியிடம் காட்டும் மரியாதையைக் கண்டு மனம் புழுங்குவாள்.

மேலும், அவளுக்கு மகாராணியின் அழகிலும், கம்பீரத்திலும் பொறாமை எழுந்தது. மேகலாவிற்கு ஒரு

நாட்டியக்காரிக்கு வேண்டிய நளினமும், உடற்கட்டும் இருந்தனவே தவிர, ஒரு சாம்ராஜ்யத்தின் மகாராணிக்கு இருக்க வேண்டிய ஒய்யாரமும், கம்பீரமும் அவளுக்கு இல்லை. ஒரு அழகுப் பொம்மையைப் போலிருந்தாள். சித்திரமாயன் விளையாடுவதற்கு ஏற்ற பொம்மைதான். ஆனால் நாட்டின் மகாராணிக்குள்ள தகுதி இல்லையே. மகாராணி பிரேமவர்த்தினியின் கம்பீரம் அவளை அச்சுறுத்தும்.

"உம்...நான் இந்நாட்டின் மகாராணியாக முடி சூட வெகு காலம் ஆகாது. அப்போது இந்தப் பிரேமவர்த்தினியை வைக்கும் இடத்தில் வைக்கிறேன். என் காலில் விழுந்து கெஞ்ச வைக்கிறேன்" என்று கறுவினாள்–

பல எண்ணங்களால் அலைக்கப்பட்டு கண்ணயர்ந்த மேகலா, கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோதுதான் உதயசந்திரனின் முகம் சாளரத்தின் ஊடே தெரிந்தது.

ஓ ! அந்த முகத்தைக் கண்டதுமே மனம் ஏன் அப்படித் துள்ளியது ? பரவசமான உணர்வு உடல் முழுவதும் பரவியிருந்ததான் என்ன ? அந்த முக தரிசனம் கூட ஒரு கணம் தானே கிடைத்தது.

அன்று இரவு, அதன் பின் அவளால் உறங்க முடியவில்லை. அந்த முகத்தை எண்ணி எண்ணி உள்ளூர ஓர் ஆனந்த நிலையில் லயித்தாள். காலையில் மஞ்சத்திலிருந்து எழுந்தபோது சோர்வு அவளைப் பீடித்திருந்தது.

14. குழப்பங்கள்

மகாராணி பிரேமவர்த்தினி, மனச் சோர்வையும் போதெல்லாம் யோகி பரமாச்சாரியின் உரையாடலில் ஈடுபடுவாள். காஞ்சியில் ஆங்காங்கே மக்கள், தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கும் வண்ணம் சிறுசிறு குழப்பங்களை உண்டாக்கியதாகச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. புது வரிகளை எதிர்த்து கால்நடை ஊர்வலம் நடத்தி, அரசாங்கப் பண்டார அதிகாரியிடம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். சில இடங்களில் காவல் வீரர்களை மக்கள் தாக்கியதாகவும் தகவல் வந்திருந்தது. மகாராணி மனம் குழம்பியிருந்தாள். பரமாச்சாரியிடம் சற்று நேரம் உரையாடிக் கொண்டிருந்தால் மனம் சாந்தியடையும் என்று எண்ணினாள்.

யோகியிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த ஈடுபாடு அபரிமிதமானது. எதையும் யதார்த்தபூர்வமாக ஏற்று, சூழ் நிலைக்குத் தகுந்தபடி வாழுமாறு போதிக்கும் அவருடைய அடிப்படைத் தத்துவம் அவளை மிகவும் கவர்ந்திருந்தது.

ஒருநாள் அவர் கூறியது அவள் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது—"நம்முடைய உணர்வுகளை நாம் எதிர்க்க வேண்டியதில்லை. இன்று தோன்றியுள்ள மதங்கள் அத்தனையுமே எதிர்ப்பின் விளைவுகள். அதைச் செய்யாதே, இப்படி நடக்காதே, இதை விரும்பாதே என்று, இயல்பான மனித அடிப்படை உணர்வுகளைக் கட்டுப்படுத்தியே வளர்ந்திருக்கின்றன. மனிதன் தன் சுதர்மப்படியேதான் இயற்கையோடு ஒட்டி வாழ வேண்டும். சுதர்மத்துக்கு எதிராக வாழ வேண்டியதில்லை" என்று சொன்னார்.

அப்போது பிரேமவர்த்தினி கேட்டாள்.

"சுவாமி, எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கிறீர்களே, கொலைகாரனாகவும், காமுகனாகவும்கூட வாழலாம் என்கிறீர்களா?"

"கொலைகாரன், காமுகன் என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளே. பிரபஞ்சத்தில் அப்படி யாருமே இல்லை. கொலை நடைபெறும்போது, தன்வசம் இழந்துவிடுகிறான். உணர்ச்சிகள், நம்மை ஆளும்படி விட்டுவிடக் கூடாது. நம்மைப் பற்றிய நினைவை மறந்துவிடக் கூடாது. தன்னுணர்வோடிருந்தால், கோபம் நெருங்காது. ஒரு சிறு உயிருக்குக்கூடத் தீங்கிழைக்க நேராது. என்னுடைய தியான முறையைப் பின்பற்றினால், கொலைக்கும், காம வக்கிரங்களுக்கும் இடமேது?"

ருத்திர பரமாச்சாரி சொன்னவற்றில் சில புரிந்தன; சில குழப்பின. அவர் சொன்னவற்றில் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது, வாழ்க்கை அனுபவிப்பதற்கே என்ற தத்துவந்தான்.

காம நுகர்ச்சியை மற்ற மதங்கள் ஒதுக்கும்படிக் கூறி அலறிக் கொண்டிருக்கும் வேளையில், அந்த உணர்வை அனுபவித்து, அதன் மூலமாகவே கடவுளை உணரலாம் என்கிறாரே.... ! ஓ, மனித உணர்வுகளோடு ஒட்டிப் பேசும் இவருடைய தத்துவங்கள், எவ்வளவு இயற்கையாக இருக்கின்றன ! யோகமும் போகமும் ஒன்றுதான் என்றாரே !

ஒரு நாள் பிரேமவர்த்தினி கேட்டாள்:

"காதல் உணர்வு, இந்த உடலைச் சேர்ந்ததாயிற்றே; வெறும் உடல் உணர்வைக் கொண்டு கடவுளை அறிய முடியுமா, சுவாமி?"

"உணர்வு என்பதே உடலின் ஓர் அம்சம்தானே. கடவு

ளை உணர்வது என்பதும் இந்த உடல் மூலமாகத்தான் முடியுமே தவிர, உணர்வை இழந்துவிட்ட பிரேதத்தால் முடியாது. கடவுள் என்பதே ஓர் பேரானந்த உணர்வுதான். உணர்வு என்றாலே அது உடலோடு ஒட்டியதுதான். இந்த உடலோடு கடவுளை உணர்ந்தவர்கள்தாம் அருட்பூதிகள். உடல் இல்லையென்றால் எந்த உணர்வும் இல்லை" என்றார், யோகி.

ஓ! இந்த உலகத்தை முழுமையாக அனுபவித்து இன்புற வழிவகுக்கும் இந்த நெறி எவ்வளவு எளிமையானது! யதார்த்தப்பூர்வமானது...!

பிரேமவர்த்தினி காலைவேளையில் பல எண்ணங்களால் சூழப்பட்டு படுக்கையில் இருந்தபோது, அரண்மனை வாயிலில் மக்கள் பெருங்கூட்டமாகக் கூடி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார்கள். விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்று கோரி மகாராணியைக் காண வந்திருந்த கூட்டத்தை அரண்மனை வீரர்கள் சமாளிக்க முடியாமல் திணறினார்கள்.

மக்களின் இரைச்சலைக் கேட்டு வெளியே வந்த மேகலா, கையை உயர்த்தி மக்களை அமைதியாக இருக்குமாறு கூறினாள்.

"மகாராணியைக் காண வேண்டும். மகாராணியிடம் முறையிட வேண்டும்" என்று கூட்டத்தில், ஒருவன் இரைந்து கூறினான்.

"உங்கள் குறையை என்னிடம் கூறுங்கள். வேண்டியதைச் செய்கிறேன்" என்றாள், மேகலா.

"மகாராணியிடம்தான் கூற வேண்டும்" என்று பலர் ஒரே சமயத்தில் இரைந்தனர்.

கோபத்தினால் மேகலாவின் முகம் சிவந்தது. "உங்கள் குறை என்ன?" என்று கேட்டாள்.

"இவளிடம் என்ன பேச்சு, இவளா மகாராணி" என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது.

மேகலாவின் உடல் கோபத்தால் நடுங்கியது. "கூற இஷ்டமில்லையென்றால் விலகிச் செல்லுங்கள்" என்று சீறினாள்.

"மகாராணியைக் காணாமல் போகமாட்டோம்" என்று ஒருவன் இரைந்து கூறினான்.

அப்போது மேகலாவின் அருகே பாதுகாவலாக நின்று கொண்டிருந்த அரண்மனைக் காவல் படைத் தலைவன், கூட்டத்தினரை நோக்கி, "சின்ன ராணியாரிடம் உங்கள் குறையைக் கூறலாம். வருங்காலத்தில் இவர்தாம் மகாராணி" என்றான்.

"உள்ளே போ... உள்ளே போ.... மகாராணியைக் கூப்பிடு" என்று கூட்டம் இரைந்தது.

கூட்டத்திலிருந்து ஒரு குரல், "நாட்டியக்காரியை உள்ளே போகச் சொல்" என்று தெளிவாகக் கேட்டது.

மேகலாவின் கோபம் கொந்தளித்தது. படைத் தலைவனை நோக்கி, "இந்த முட்டாள் கூட்டத்தை அடித்து விரட்டு" என்று ஆணையிட்டாள். படைத் தலைவன் ஆணையை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமானபோது, தரணி கொண்ட போசரின் இரதம் அங்கு வரவே மக்கள் வழி விட்டு விலகி நின்றனர்.

முதன் மந்திரியைக் கண்டதும் கூட்டத்தில் பரபரப்புத் தோன்றியது. மக்களைத் துரத்துவதற்காகக் குதிரை வீரர்

களை ஆயத்தப்படுத்த முனைந்த படைத் தலைவனை மந்திரி தடுத்து நிறுத்தினார். மேகலாவிடம், "தாங்கள் அரண்மனைக்குச் சென்று விடுங்கள். நான் இவர்களைக் கவனித்துக் கொள்கிறேன்" என்றார்.

"ஒழுங்கில்லாமல் இப்படி அரண்மனை வாயிலில் வந்து கூச்சலிடும் இந்த முரடர்களைக் குதிரைகளைக் கொண்டு தான் விரட்டியடிக்க வேண்டும்" என்று கோபத்தில் குமுறினாள், மேகலா.

"இளவரசியாரே, தயவுசெய்து தாங்கள் இப்போது உள்ளே செல்லுங்கள். இவர்களை நான் கலைந்து போகும் படிச் செய்கிறேன். தாங்கள் இங்கிருந்தால் குழப்பம் வரும். தயவு செய்து அரண்மனைக்குள் சென்றுவிடுங்கள்" என்று தரணி கொண்ட போசர் உறுதியுடன் கூறினார்.

மேகலாவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தன்னை அலட்சியப்படுத்தும் மக்கள் கூட்டத்தைச் சிதறி ஓடும்படி அடித்து விரட்ட வேண்டும் என்னும் வெறி அவளை ஆட்கொண்டிருந்தது. ஆனால், தரணி கொண்ட போசர் உறுதியாக இருக்கவே, கோபத்துடன் திரும்பி அரண்மனைக்குள் சென்று மறைந்தாள்.

சற்று நேரத்தில் இளவரசன் சித்திரமாயன் அங்கு வரவே கூட்டத்தில் மீண்டும் சலசலப்புத் தோன்றியது. மகாராணியை அழைத்துவர ஒரு தாதி அந்தப்புரத்திற்கு ஓடினாள்.

படுக்கையில் சோர்வுடன் பல எண்ணங்களால் குழம்பிக் கிடந்த மகாராணி பிரேமவர்த்தினியின் சிந்தனையைக் கலைத்தாள், தாதி.

"அரண்மனை வாசலில் உங்களைக் காணப் பெருங் கூட்டம் கூடியிருக்கிறது" என்றாள்.

"ஏன் ?"

"மகாராணியாரைக் காணவேண்டுமென்று பிடிவாத மாயிருக்கிறார்கள். வரி விதிப்பு விஷயமாகத் தங்களிடம் முறையிட வேண்டுமாம்."

"கூட்டத்தை விரட்டி ஓட்டச் சொல்" என்றாள் மகாராணி கோபத்துடன்.

"இளவரசர் கூட்டத்தைக் கலைக்க முயன்று கொண்டிருக்கிறார். முதன்மந்திரியும் வந்து விட்டார். கூட்டம் கலையமறுக்கிறது," என்றாள் தாதி.

அப்போது இன்னொரு தாதி வந்து, "முதன்மந்திரியார் தங்களைக் காண வந்திருக்கிறார்" என்றாள்.

மகாராணி, தன் அறையைவிட்டு வெளியே வந்து மந்திரியைச் சந்தித்தாள்.

"தாங்கள் ஒருமுறை மக்களுக்குத் தரிசனம் கொடுத்தால் சமாதானமடைந்து விடுவார்கள்" என்றார், தரணி கொண்ட போசர்.

"வரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களை நான் சந்திக்கத் தயாராக இல்லை. குதிரை வீரர்களைக் கொண்டு கூட்டத்தைக் கலையுங்கள்."

"அதற்கே அவசியம் இல்லை, தேவி. தாங்கள் மக்களுக்குத் தரிசனம் கொடுத்தாலே அடங்கி விடுவார்கள்."

"என்னுடைய கட்டளைகளை மதிக்காதவர்களை நான் சந்திக்கமாட்டேன்" என்றாள், மகாராணி பிடிவாதமாக.

"மக்கள் தங்கள் குறைகளைக் கூற மகாராணியைச் சந்திக்க வந்திருப்பதில் தவறு ஏதும் இல்லை."

"வரி விதிப்பது ஒரு குறையா, மந்திரியாரே ?"

"வரி விதிப்பு மக்களைப் பெரிதும் பாதித்திருப்பதால் தான் உங்களையே நேரில் காண வந்து விட்டார்கள். இப் போது விதித்திருக்கும் வரிகள் நியாயமற்றவை என்று முன்பே தங்களிடம் கூறியிருந்தேன்" என்றார், முதன் மந்திரி.

"வருமானத்தில் தானே வரி விதித்திருக்கிறேன்."

"தொழிலாளரின் தொழில் மீது வரி போடப்பட்டிருக் கிறது. உடலால் உழைத்து அன்றாடம் ஈட்டும் பணத்தை நாம் பெறுவது நியாயமில்லையல்லவா ?"

"நியாயமோ நியாயமில்லையோ; அரசின் கட்ட ளையை முதலில் மதிக்கத் தெரியவேண்டும். மதிக்கத் தெரி யாதவர்களை நான் சந்திக்க மாட்டேன்" என்ற மகாராணி, பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

முதன்மந்திரி, மகாராணியைச் சந்தித்துவிட்டு அரண் மனை வாசலை அடைந்தபோது, பெருங்குழப்பம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியிருந்தது. குதிரை வீரர்கள், மக்களை விரட்டத் தயாராக அணிவகுத்திருந்தனர். முதன்மந்திரியைக் கண்டதும் கூட்டத்தின் ஆரவாரம் அதிகரித்தது.

"அமைதியாகக் கலைந்து செல்லுங்கள், மகாராணி யாருக்கு உடல் நலமில்லை. இன்னொரு சமயம் உங்களைச் சந்திப்பார். இப்போது கலைந்து செல்லுங்கள்" என்றார், முதன்மந்திரி.

கூட்டத்தில் சிறிது நேரம் சலசலப்புக் கேட்டது. சிலர் அவநம்பிக்கையுடன் முணுமுணுத்தனர்.

"வரிகளைக் குறைக்க வேண்டும். தொழிலுக்கு வரி போடக் கூடாது" என்று கூட்டத்திலிருந்து உரத்த குரல் ஒன்று கேட்டது.

"மகாராணியாரிடம் கூறியிருக்கிறேன். போர்க்கால மாதலால் நீங்களும் அரசுக்கு உதவ வேண்டும். விரைவில் வரிகளைக் குறைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும். இப்போது கலைந்து செல்லுங்கள்" என்று முதன்மந்திரி கூறியதும், அவர் சொல்லுக்கு இணங்கி கூட்டம் மெல்லக் கலையத் தொடங்கியது.

மந்திரியின் அருகில் நின்று கொண்டிருந்த இளவரசன், "இவர்களிடம் என்ன வேண்டுவது? குதிரை வீரர்களைக் கொண்டு விரட்டியிருக்கலாம்" என்றான்.

"தானாகக் கலைந்து செல்பவர்களை வீணாகத் தாக்குவானேன்" என்று கூறிவிட்டுத் தம்முடைய பல்லக்கை நோக்கி நடந்தார், முதன்மந்திரி.

15. போட்டி அரங்கம்

காஞ்சி நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகளெல்லாம் நீர் தெளிக்கப்பட்டு சுத்தமாயிருந்தன. தோரணங்கள் எல்லா வீதிகளையும் அலங்கரித்தன. மக்கள் மிகுந்த களிப்புடன் போட்டி மைதானத்தை நோக்கி அதிகாலையிலேயே செல்லத் தொடங்கிவிட்டனர். வரிச்சுமையினாலும், மகாராணியின் சர்வாதிகாரக் கெடுபிடியினாலும் வதங்கிப் போயிருந்த மக்களுக்கு வீரப்போட்டி சிறிது உற்சாகமளித்திருந்தது.

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வந்த வீரப்போட்டி அன்று ஆரம்பமாக இருந்தது. போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்கு உயர்ந்த பரிசுகள் வழங்கப்படுவதாலும் அந்தப் போட்டிகளில் வெற்றி பெறுவதை உலகம் பெருமையாகக் கருதியதாலும் பல நாடுகளிலிருந்து வீரர்கள் போட்டியில் பங்குபெற வந்திருந்தனர்.

பல்லவச் சக்ரவர்த்தி, போர்க்களத்தில் இருந்ததால் மகாராணி பிரேமவர்த்தினியின் தலைமையில் போட்டி நடைபெற இருந்தது. போட்டி மைதானத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதிகாரிகளுக்கும், பிரமுகர்களுக்கும் அந்தஸ்துக்குத் தகுந்தவாறு இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பல கடிகைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கென்று தனி மேடையில் இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், மிக உயர் பதவிகளை வகித்தவர்களுக்கும் தனி மேடை அமைக்கப்பட்டிருந்தது. மகாராணிக்கும், இளவரசனுக்கும் தனியாக ஒரு அலங்கார மேடை அமைக்கப்பட்டு, அலங்கார ஆசனங்கள் போடப்பட்டிருந்தன.

உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் மைதானத்துக்குள் வந்ததுமே உதயசந்திரன், மைதானத்தின் அமைப்பை ஆராயத் தொடங்கினான். போட்டி வீரர்கள் மைதானத்துக்குள் வருவதற்காக அமைக்கப்பட்டிருந்த வாசலை ஒட்டிய மேல்புறத்து மேடையைப் பார்த்தான். அந்த மேடை நன்கு அலங்கரிக்கப்பட்டு, உயர்ந்த ஆசனங்கள் போடப்பட்டிருந்தன.

மூன்றாவது ஆசனத்தில் அமரப்போகிறவர் யார்?... அந்த ஆசனத்துக்கு எதிர்த்திசையில் கவனித்தான். மைதானத்துக்கு வெளியே, ஒரு பெரிய கல்லால மரமும், அதற்குப் பின்னே இருந்த புளிய மரமும் தெரிந்தன. கல்லால மரம், புளிய மரத்தை நன்கு மறைத்துக்கொண்டிருந்தது. உதயசந்திரன் உற்றுப் பார்த்தான்.

ஒரு சிறு இடைவெளி கிடைத்தால்கூடப் போதும் சுகததாசாவுக்கு. நிச்சயம் அந்த ஆசனத்துக்கு நேரே

கிளைகளினூடே சிறு இடைவெளி இருக்கும். இல்லாமலிருந்தால் இதற்குள் உண்டுபண்ணியிருந்திருப்பான்...

"என்ன அந்த மரத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? அதன் மீது ஏறி இருந்து வேடிக்கை பார்க்கலாம் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டான், ராஜன் நம்பூதிரி.

"உஹூம்... அங்கும் ஜனங்கள் ஏறியிருக்கிறார்களோ என்று பார்த்தேன்" என்றான், உதயசந்திரன்.

"அங்கிருந்து போட்டி நடைபெறும் அரங்கு நன்கு தெரியாது. அங்கிருந்து பார்த்தால், மேடையில் அமர்ந்திருப்பவர்கள்தாம் தெரியும்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"ஆமாம்" என்று தலையை ஆட்டிவிட்டு உதயசந்திரன் பார்வையைச் சுழலவிட்டான்.

பிரமுகர்களிருந்த மேடையிலிருந்து டெங்லீ, அவனைப் பார்த்து கையை அசைத்தது தெரிந்தது. அவருக்கு அருகே லீனாவும், டெங்லீயின் குடும்பத்தினரும் அமர்ந்திருந்தனர். உதய சந்திரனை மேடைக்கு வருமாறு கையை அசைத்துக் கூப்பிட்டார். மேடையில் அவருக்கு அருகில் அமர வருமாறு சைகை செய்து அழைத்தார். ராஜன் நம்பூதிரியையும் அழைத்துக் கொண்டு உதயசந்திரன் மேடையை நோக்கிச் சென்றான். மேடையை நெருங்கியதும் அங்கு நின்ற ஒரு காவல் வீரன், அவர்களை மறித்து வேறு பக்கம் போகும்படிச் சொன்னான். டெங்லீ அங்கு விரைந்து சென்று, அவர்கள் இருவரையும் வரவேற்று அழைத்துக் கொண்டு மேடைக்குச் சென்றார். அவருக்கு அருகே இருந்த ஆசனங்களில் இருவரையும் அமரச் செய்தார்.

டெங்லீயின் மனைவிக்கு அருகே இருந்த லீனா,

உதயசந்திரனிடம், "உங்களை வெகுநேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறோம்" என்றாள்.

"இப்போதுதான் உள்ளே வந்தோம். கூட்டத்தில் ஒரே நெருக்கடி" என்றான், உதயசந்திரன்.

அந்த இடத்திலிருந்து அலங்கார மேடையிலிருந்த மூன்றாவது ஆசனம் தெரிகிறதா என்று கவனித்தான். நன்கு தெரிந்தது.

திடீரென்று கொம்பு ஊதிய ஒலி கேட்டது. தொடர்ந்து பல மங்கள வாத்தியங்களின் ஒலிகளும் கேட்கத் தொடங்கின. "ராஜவம்சத்தினரும் உயர் அதிகாரிகளும் வரப் போகிறார்கள்" என்றார், டெங்லீ.

மைதானத்தில் அமைதி நிலவியது. சற்று நேரத்தில் மேடை அமைந்திருந்த வாயில் வழியாக ஒவ்வொருவராக வரத்தொடங்கினர். ஒவ்வொருவரையும் அவருடைய மெய்க்காப்பாளர்கள் அழைத்து வந்து, ஆசனங்களில் அமரச் செய்துவிட்டுப் பின்னால் நின்று கொண்டார்கள். டெங்லீ, அங்கே வந்தவர்களைப் பற்றிய விவரங்களைச் சொன்னார்.

அப்போது மேடையில் சிறுவன் பல்லவமல்லன் முன்னே வர, அவனைத் தொடர்ந்து இரணியவர்மர் கம்பீரமாக வந்ததைப் பார்த்த உதயசந்திரன், "அவர் கோட்டைத் தளபதிதானே? இரதத்தில் அவர் போனதைப் பார்த்தேன்" என்றான்.

"ஆமாம், ஆனால் இப்போது அவர் கோட்டைத் தளபதியாக இல்லை என்று கேள்வி. அவருக்கு அருகே இருப்பவன், அவருடைய கடைசி மகன் பல்லவமல்லன். காஞ்சி நகரத்தின் செல்லப்பிள்ளை. ராஜ வம்சத்தைச்

சேர்ந்தவனானாலும் கர்வமின்றி எல்லோரிடமும் பழகுவான். சீனச் சேரிக்கு அடிக்கடி விஜயம் செய்து, சீனச் சிறுவர்களோடு அளவளாவுவான். புத்திசாலியான பையன்" என்றார் டெங்லீ.

"சுறுசுறுப்பாயிருக்கிறான். அவன் வந்ததும் அந்த மேடையே கலகலப்பாய் விட்டதே!" என்றான் உதயசந்திரன். பிறகு அவன் கவனம், அவன் கண்காணித்த அந்த முன்றாவது ஆசனத்தின் மீது நிலைத்தது.

அந்த ஆசனம் இன்னும் காலியாகவே இருந்தது. அந்த நபர் வராமலேயே இருந்துவிட்டால் நல்லது என்று எண்ணினான். அந்த குறிப்பிட்ட அலங்கார மேடை, அனேகமாக நிரம்பிவிட்டது. உதயசந்திரனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"அதோ! மகாராணியின் மேடைக்கு அருகேயுள்ள அந்த அலங்கார மேடையில், முன் வரிசையில் இன்னும் யாரும் வரவில்லையே" என்றான்.

"ஆமாம். அது யாருக்கென்று தெரியவில்லை. மந்திரிகளுக்காக இருக்கலாம். அதோ, மந்திரிசபைக் குழுவே வருகிறதே" என்றார், டெங்லீ.

உதயசந்திரன் பரபரப்படைந்தவனாய் உன்னிப்பாகக் கவனித்தான். மெய்க்காவலர்கள் வழி காட்ட, மந்திரிகள் மேடையில் வந்து ஆசனங்களில் அமர்ந்தனர்.

ஓ...! முன்றாவது ஆசனத்தில் கம்பீரமாக ஒரு வயோதிகர் அமர்கிறாரே...

உதயசந்திரன் திரும்பி டெங்லியைப் பார்த்து, "அந்த ஐந்து ஆசனங்களில் நடுவில் உள்ள ஆசனத்திலிருக்கிறாரே, அவர் யார்?" என்று கேட்டான்.

"அவர் தாம் பல்லவ நாட்டின் முதன் மந்திரி தரணி கொண்ட போசர். கேள்விப்பட்டிருப்பாயே. பக்கத்தில் இருபுறமும் இருப்பவர்கள் அவருடைய சகமந்திரிகள்."

"அவர் மிகவும் பொல்லாதவரோ ?"

"இந்த சாம்ராஜ்யமே தரணி கொண்ட போசருடைய விரலசைவுக்கு ஆடும். மிகுந்த சாமர்த்தியசாலி, சக்ரவர்த்தியே இவரிடம் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார். இப்போதிருக்கும் சக்ரவர்த்தியின் தந்தை இராச சிம்ம பல்லவர் காலத்திலிருந்தே இவர் தாம் முதன் மந்திரி. இவர் போட்ட கோட்டை சக்கரவர்த்தி தாண்ட மாட்டார். அவ்வளவு மரியாதை இவருக்கு" என்றார், டெங்லீ.

உதயசந்திரன் கூர்ந்து முதன் மந்திரியைப் பார்த்தான். உள்ளூர அவனுடைய மனதில் வலி எடுத்தது. நாளை தானே சதித்திட்டத்தின்படி முயற்சி நடக்கும். அதற்குள் எப்படியும் அவரை எச்சரித்து விடலாம். இன்று இரவே அவருடைய மாளிகைக்குச் சென்று எச்சரித்து விடவேண்டும் என்று முடிவு செய்தான்.

திடீரென்று போட்டி மைதானத்தில் பரபரப்பு ஏற்பட்டது. ஒரே சமயத்தில் பல கொம்புகளும் வாத்தியங்களும் முழங்கின. மைதானத்தில் கூடியிருந்த அனைவரும் மரியாதையுடன் எழுந்து நின்றனர்.

"மகாராணி வருகிறார்" என்றார், டெங்லீ.

உதயசந்திரனுக்குத் திடீரென்று சுரங்கப்பாதையின் நினைவு வந்தது. மஞ்சத்திலே சயனித்திருந்த அழகியும் அங்கே வரலாம் என்று எதிர்பார்த்தான்.

அலங்கார மேடையின் வாயிலில் மகாராணி தோன்றியதுமே உதயசந்திரன் பிரமித்துப் போனான். ஓ...! மகாராணி ! எவ்வளவு ஒய்யாரம் ! என்ன கம்பீரம் !

மகாராணியைத் தொடர்ந்து பின்னே வந்த பெண்ணைக் கண்டு உதயசந்திரன் திடுக்கிட்டான்.

ஓ...சுரங்கப் பாதையில் அவன் சென்றபோது அன்று மஞ்சத்தில் அவன் கண்ட பெண்ணல்லவா அவள்!

வைத்தபார்வையை விலக்காமல், தாளாத வியப்புடன் அவளை வெறிக்கப் பார்த்தவாறு இருந்தான். சில வினாடிகளுக்கு அவனுடையநினைவில் அவள் மஞ்சத்தில் கிடந்த கோலம் தோன்றியது.

ஒரு பெண்ணுக்கு இவ்வளவு வசீகரம் தேவைதானா? தேவலோகத்திற்கு வேண்டுமானால் இந்த அழகு, இந்திர சபைக்குத் தேவைப்படலாம். மனித உலகில் இவ்வளவு அழகும் வசீகரமும் எதற்கு? மனிதனைப் பைத்தியமாக்குவதற்கா? யார் இவள்?...

டெங்லீ அவன் காதருகே குனிந்து, "மகாராணிக்குப் பின்னே வருகிறாளே, அவள் தான் சின்ன ராணி. இளவரசனின் மனைவி" என்றார்.

இதைக் கேட்டதும் உதயசந்திரனின் முகம் சட்டென்று வாடியது. அவன் மனம் முணுமுணுத்தது. 'அட கடவுளே, இவ்வளவு அழகிய பெண்ணுக்கு அந்த இளவரசன் கொஞ்சங்கூட அருகதை இல்லையே. கெடுமதியாளர்களிடம் கடவுள் செல்வத்தை அள்ளிக் கொடுப்பதுபோல், அந்தக் கயவனிடம், கடவுள் இந்த அழகியைச் சிக்க வைத்திருக்கிறாரே...'

உதயசந்திரனின் மனம் மேகலாவிற்காக இரங்கியது. மேகலாவின் பின்னே இளவரசன் சித்திரமாயன் வந்தான்.

அரச குடும்பத்தினர், ஆசனங்களில் அமர்ந்ததும்

மற்றவர்களும் அமர்ந்தார்கள். போட்டி அறிவிப்பாளர், மகாராணியின் அருகே வந்து வணங்கிவிட்டுப் போட்டியின் விதிமுறைகளையும், என்னென்ன போட்டிகள் அன்று நடைபெறும் என்பதையும் உரத்த குரலில் அறிவித்தார்.

வில்லாளிகளுக்கான போட்டியும், குதிரை வீரர்களுக்கான போட்டியும், வேல் வீச்சுப் போட்டியும் மறுநாள் நடைபெறும் என்று அறிவிப்பிலிருந்து அறிந்ததும், உதய சந்திரனின் நினைவு சுகததாசாவிடம் சென்றது.

நாளை அவன் இங்கே வந்து போட்டியில் கலந்து கொள்ளவா போகிறான்? புளிய மரத்தின் மீதல்லவா அமர்ந்திருப்பான்...

உதயசந்திரன் சட்டென்று திரும்பி முதன் மந்திரியை பார்த்தான். அவருடைய பரந்த முகமும் கூரிய பார்வையும், புன்முறுவலும் அவரிடம் அவனுக்கு மரியாதையை உண்டாக்கின. அன்று இரவே அவருடைய மாளிகைக்குப் போய் எச்சரித்துவிட வேண்டும் என்னும் எண்ணம் உறுதிப்பட்டுவிட்டது.

பார்வையாளர்களின் மேடைகளுக்கு நடுவே, போட்டி நடைபெறும் அரங்கு, வட்டமாக அமைந்திருந்தது. போட்டியில் கலந்துகொள்ள வந்திருந்த வீரர்கள், தங்கள் நாட்டுக் கொடிகளை ஏந்தியவாறு அரங்கில் தோன்றிய போது, பார்வையாளர்களிடமிருந்து பெருத்த ஆரவாரம் எழுந்தது. வீரர்கள் வரிசையாக மகாராணியின் முன்பாக வந்து வணங்கி சென்றபோது, அறிவிப்பாளர், அந்த வீரர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிவித்தார். இலங்கை வீரர்களை அறிமுகம் செய்தபோது, உதய சந்திரன் உரத்த குரலில் ஆரவாரம் செய்தான். அவனுடைய குரலை அடையாளம் கண்டுகொண்ட இலங்கை வீரர்கள்

அவனிருந்த திசையில் திரும்பி அவனை நோக்கி உற்சாகத்துடன் கைகளை அசைத்தனர். வீரர்கள் அனைவரும் மைதானத்தின் உள்ளே இருந்த ஆசனங்களில் அமர்ந்த பிறகு ஒவ்வொரு போட்டியாக நடைபெறத் தொடங்கியது.

ஆரம்பத்தில் சிலம்பப் போட்டி நடைபெற்றது. போட்டி, ஆரம்பத்திலேயே நல்ல விறுவிறுப்படைந்து விட்டது. பாண்டிய நாட்டுச் சிலம்படி வீரன், தன்னை எதிர்த்த அனைவரையும் வெற்றி கொண்டான். அவனுடைய தாக்குதலால் சோழநாட்டுச் சிலம்படி வீரன் ஒருவனும் பல்லவ நாட்டு வீரன் ஒருவனும் கையொடிந்து சாய்ந்தனர்.

சிலம்படிக்குப் பிறகு, மற்போர் ஆரம்பமாயிற்று. வீரர்கள் ஆவேசத்துடன் போரிட்டனர். நான்கு வீரர்களை ஒருவர் பின் ஒருவராக மற்போரில் வெற்றிகொண்ட இலங்கை வீரன் களுபந்தா, ஐந்தாவது ஆட்டத்தில் சாளுக்கிய நாட்டு வீரனிடம் தோல்வியுற்றான். அவனுடைய தோல்வி, உதயசந்திரனுக்கும், ராஜன் நம்பூதிரிக்கும் வருத்தத்தைக் கொடுத்தது. தன்னுடைய சகா தோல்வியுற்றதைக் கண்ட தேவசோமா, கோபத்துடனிருந்தான்.

அடுத்து வாட்போர். அந்தப் போட்டியில் மிகுந்த ஆவேசத்துடன் பாய்ந்தான், தேவசோமா. அவனுடைய வாள் வீச்சின் உக்கிரம் தாங்காமல் சேரநாட்டு வீரன் பின்வாங்கியே சென்று, வாசலை நெருங்கியதும் வெளியே ஓடி விட்டான். பார்வையாளர்கள், கரகோஷம் எழுப்பினார்கள். பாண்டிய நாட்டு வீரனின் வாள், தேவசோமாவின் வீச்சில் எகிறிப்போய் தூர விழுந்தது. கடைசியில் சாளுக்கிய வாள் வீரனைச் சந்தித்தபோது, களுபந்தாவைத் தோற்கடித்த சாளுக்கிய வீரனைச் சார்ந்தவன் அவன்

என்பதை அறிந்து, தேவசோமா மிகவும் உக்கிரத்தோடு தாக்கினான். பார்வையாளர்கள் திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். போர் மிகப் பயங்கரமாயிருந்தது. ஒவ்வொரு வீச்சின்போதும் வாளிலிருந்து எழுந்த ஒலி, எல்லோருக்கும் திகிலைக் கொடுத்தது. சாளுக்கிய வீரன் தன் முழு பலத்தையும் திரட்டி தேவசோமாவின் மீது பாய்ந்தான். தேவசோமா தொலைந்தான் என்று மக்கள் நினைத்தபோது, அவன் மிக சாமர்த்தியமாகச் சாளுக்கியனின் தாக்குதலைத் தவிர்த்து, அதே வேகத்தில் இமைக்கும் நேரத்துக்குள் தன் வாளை அவனுடைய கழுத்தில் வீசினான். மறுகணம், சாளுக்கிய வீரனின் தலை வெட்டுண்டு தரையில் விழுந்து துள்ளியது. மக்களிடமிருந்து பெருத்த ஆரவாரமும், பீதியின் அலறலும் கலந்து வந்தன.

"ஆ...பிரமாதம்!" என்றான், இளவரசன்.

லீனா, அருவருப்பினாலும், பயத்தாலும் கண்களை மூடிக்கொண்டாள். "என்ன கொடுமை" என்று முனகினாள்.

"பயமாயிருக்கிறதா?" என்று கேட்டான், உதய சந்திரன்.

கண்களைத் திறந்தாள் லீனா. "ஊம்...ஏன் கொல்ல வேண்டும். பாவம்" என்றாள்.

"இதெல்லாம் போட்டியில் தவிர்க்க முடியாதது. தேவ சோமா அவனைக் கொல்லவில்லை என்றால், அவன் தேவ சோமாவைக் கொன்றிருப்பான்" என்றான் உதயசந்திரன்.

வெற்றி பெற்ற தேவசோமா, இரத்தம் கொட்டிக் கொண்டிருந்த வாளை ஏந்தியபடி மகாராணியின் எதிரே வந்து தலை குனிந்து வணக்கம் செலுத்திவிட்டுச் சென்றான்.

அறிவிப்பாளரின் குரல் கேட்டது, "இனி வலிந்த மைக்கும்போர் நடைபெறும். வீரர்கள் இந்தப் போரில் இஷ்ட பாணியில் போரிடலாம். ஆனால், பின்பக்கமிருந்து மட்டும் தாக்கக்கூடாது."

அறிவிப்பைத் தொடர்ந்து ஒரு முரட்டுப் பல்லவவீரன் அரங்கில் தோன்றினான். போட்டி மைதானத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அரங்கில் வந்து நின்ற பல்லவ வீரன் சவால் விட்டான். அவனுடைய கையில் சிறு குத்துவாள் மட்டும் இருந்தது. அவனுடைய உருவமும் முகத்தோற்றமும் மிகப் பயங்கரமாய் இருந்தன. மைதானம் முழுவதும் திடீரென்று அமைதி நிலவியது. எல்லோரும் வியப்புடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். கீழே அரங்கில் ஆணவத் தோடு நின்று கொண்டிருந்த பல்லவ வீரன், போட்டிக்கு வந்திருந்த மற்ற வீரர்களைப் போருக்கு வலிந்தழைத்துக் கொண்டிருந்தான்.

"என்னை எதிர்க்க யார் வருகிறீர்கள்? கையில் குத்து வாள் மட்டும் கொண்டு இஷ்ட பாணியில் போரிடலாம். மீசையுள்ள வீரன் யாராவது வருகிறீர்களா?" என்று கூவியழைத்தான்.

வீரர்கள் மத்தியிலிருந்து யாரும் எழுந்திருக்கவில்லை. இஷ்ட பாணி போர் என்பது பயங்கரமான ஒரு போர் முறை. இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் தாக்கலாம். கட்டுத் திட்டம் கிடையாது. மிகுந்த துணிவும் திறமையும் உள்ளவர் கள் மட்டுமே அந்த வகைப் போட்டியில் ஈடுபடத் துணிவர். பல்லவ வீரனின் சவாலை ஏற்க யாரும் முன் வரவில்லை.

அப்போது மேடையிலிருந்த இளவரசன் எழுந்து நின்றான். "இந்த வீரனை எதிர்க்க இங்கு யாரும் இல் லையா?" என்று கேட்டான். ஒருவரிடமிருந்தும் பதில் வர

வில்லை. "ஏன் நீயே, எதிர்க்க வேண்டியதுதானே. உன் வீரத்தைக் காட்டேன்" என்று முனகினான் உதயசந்திரன்.

சித்திரமாயன் மைதானம் முழுவதும் தன் பார்வையை சுழலவிட்டான். பிறகு மகாராணியிடம் குனிந்து மெல்லப் பேசினான். அவள் தலையசைத்தாள். சித்திரமாயன், பின்னால் திரும்பி, வாணராயனிடம் ஏதோ கூறினான். வாணராயன் மேடையின் விளிம்பில் சென்று நின்றுகொண்டு உரத்த குரலில், "இந்த வீரனை வெல்பவருக்கு ஆயிரம் பொற்காசுகளைப் பரிசாக பல்லவ மகாராணியார் வழங்குவார்கள்" என்று அறிவித்தான்.

கூட்டத்திலிருந்து வியப்பொலிகள் எழுந்தன. அரங்கில் நின்று கொண்டிருந்த பல்லவ வீரன், குத்துவாளை ஏந்திய வண்ணம் அரங்கினுள் சுற்றி நடந்தான். அவனை எதிர்க்க யாரும் முன்வரவில்லை. ஒரு சுற்று நடந்துவிட்டு நின்றான். "யாருமே தயாரில்லையா? உங்கள் உயிர் என்ன அவ்வளவு உயர்வானதா? ஆண் பிள்ளை யாருமே இல்லையா?" என்று கூவினான்.

பார்வையாளர்களில் மாணவர்களின் மேடையிலிருந்து எக்காளச் சிரிப்பொலி எழுந்தது. மக்களின் ஆரவார ஒலி, வானை எட்டியது.

திடீரென்று உதயசந்திரன் எழுந்தான். அவன் எழுந்து நின்றதைக் கண்ட லீனா துணுக்குற்றாள். ராஜன் நம்பூதிரி திகைத்தபடி இருந்தான்.

"யார் வேண்டுமானாலும் எதிர்க்கலாமா?" என்று உதயசந்திரன் இரைந்து கேட்டான். மைதானத்தில் திடீரென்று அமைதி நிலவியது. எல்லாருடைய பார்வையும் வியப்புடன் உதயசந்திரன் மீது விழுந்தது.

"எதிர்க்க வரலாம்...ஓ...! நீ ஒரு முயல் குட்டி. அழகான முயல் குட்டி" என்று ஏளனமாகச் சிரித்தான் பல்லவ வீரன்.

"யானையைத் தாக்க வருகிறேன்" என்று கூவிய படியே மேடையிலிருந்து அரங்கில் குதித்தான், உதய சந்திரன்.

"ஐயோ" என்று வீறிட்டாள் லீனா.

ராஜன் நம்பூதிரி திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந் தான். டெங்லீ, பதறிப் போனார். ராஜன் நம்பூதிரியிடம், "உன் நண்பனைக் கூப்பிடு" என்றார் படபடப்புடன்.

மக்கள் உதயசந்திரன் மீது பரிதாபப்பட்டனர். அவனு டைய அழகும் கட்டுடலும், கண்களில் வீசிய ஒளியும் அத்தனை பேரையும் கவர்ந்தன. "ஐயோ, இந்த இளைஞன் முரடனோடு மோதப் போகிறானே" என்று எல்லோரும் பதைபதைத்தனர்.

16. அற்புதப் போர் முறை

போட்டி அரங்கத்தில் குதித்த உதயசந்திரன், புன்முறு வலுடன் மகாராணியின் மேடையை நோக்கி நடந்தான். மகாராணி பிரேமவர்த்தினியின் அருகிலிருந்த மேகலாவிற்கு வியப்புத் தாளவில்லை.

சாளரத்தில் தோன்றிய ஆணழகன், அவளுக்கு எதிரே வருவதைக் கண்டு திகைப்புற்றாள். கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

"ஓ...! இவனையா கனவில் கண்டேன்...இவனை இங்கே சந்திக்கப் போவதைத்தான் கடவுள் அப்படிக் கனவில் காட்டி உணர்த்தினாரோ...? ஆ...! எவ்வளவு கம்பீர மாக வருகிறான்...!" – மேகலா பரபரப்படைந்தாள்.

கண் இமைக்காமல் பார்த்தாள். அவன் நெருங்க நெருங்க அவள் பரபரப்படைந்தாள். அவனுடைய முகத்தை மிக்க ஆர்வத்துடன் பார்த்தாள். மகாராணிக்கு எதிரே போய் நின்றதும் தலை குனிந்து வணங்கினான். வணங்கிவிட்டு நிமிர்ந்த அவனுடைய பார்வை, மேகலாவின் பக்கம் திரும்பியது. அவனுடைய கண்களைச் சந்தித்த போது, அவளுடைய மனத்துள் இனிமையான உணர்வு மலர்ந்ததை உணர்ந்தாள். உடல், சிலிர்த்து அடங்கியது.

அவளுடைய பார்வை தன்னையே வெறித்ததை உணர்ந்த உதயசந்திரன் தன் பார்வையைத் திசை திருப்பினான். மேகலா தன்னைப் பார்த்து முறுவலித்ததாக நினைத்தான். மீண்டும் அவனுடைய பார்வை அவளிடம் திரும்பிய போது அவளிடம் சித்திரமாயன் ஏதோ கூறிக் கொண்டிருந்தான்.

தன்னைக் கோட்டைவாயிலில் சவுக்கால் அடித்ததைத் தான் கூறுகிறானோ என்ற சந்தேகம் உதயசந்திரனிடம் எழவே அவனுள் கோபம் கிளர்ந்தெழுந்தது. சட்டென்று திரும்பி நடக்க முனைந்தான். அப்போது சித்திரமாயனின் குரல் கேட்டது.

"வீரனே, உன் பெயர் என்ன?" என்று கேட்டான், சித்திரமாயன்.

உதயசந்திரன் திரும்பி சித்திரமாயனைப் பார்த்து, "உதயசந்திரன்" என்றான்.

மேகலாவின் உதடுகள் அந்தப் பெயரை முணு முணுத்தன.

"வீரனே, உனக்கு வேண்டிய குத்துவாளைப் பெற்றுக் கொள்ளலாம்" என்றான், சித்திரமாயன்.

"எனக்கு ஆயுதம் தேவை இல்லை என்றான்" உதய சந்திரன்.

"ஆ...! ஆயுதம் இல்லாமலா? எப்படித் தாக்க முடியும்? இதோ இதைப் பெற்றுக் கொள்" என்று கூறிய இளவரசன் அருகில் நின்ற வாணராயனைப் பார்த்துக் கையை அசைத்தான். உடனே வாணராயன், தன் இடையிலிருந்து குத்துவாளை எடுத்து, உதயசந்திரனிடம் வீசினான். தன்னை நோக்கிப் பறந்து வந்த வாளை லாகவமாகப் பற்றிக் கொண்ட உதயசந்திரன், "நன்றி, இளவரசே, எனக்கு ஆயுதம் தேவை இல்லை. இந்த யானையைச் சாய்க்க என் கைகளே போதும்" என்று கூறிவிட்டு, குத்துவாளை வாணராயனை நோக்கித் திருப்பி வீசி எறிந்தான்.

மாணவர்கள் இருந்த மேடையிலிருந்து உற்சாக ஆரவாரம் எழுந்தது.

"திமிர் பிடித்தவன். வீணாக சாகப் போகிறான்" என்று இளவரசன் முனகினான்.

மேகலா கலக்கமடைந்தாள்– 'ஐயோ, அந்தக் கொடிய முரடனிடம் நீ ஆயுதமின்றியே போரிடுவதா? உன்னுடைய அழகியமேனி, அந்த முரடனிடம் சிக்கி சின்னாபின்னமாகி விடுமே. வேண்டாம் வீரனே, விஷப்பரீட்சை வேண்டாம்.'

அவள் மனம் ஓலமிட்டது. மக்கள் திகைத்தனர். கூட்டத்திலிருந்து பலர் அவனை ஆயுதம் பெற்றுக் கொள்ளும்படி கூவினர். உதயசந்திரன், வேறு எதையும் கவனியாமல், அரங்கின் நடுவே நின்று கொண்டிருந்த பல்லவ வீரனை நோக்கி நடந்தான். இலங்கை வீரர்கள், அவனை உற்சாகப்படுத்த ஆரவாரம் செய்தார்கள்.

பார்வையாளர் பகுதியிலிருந்த பெண்கள், அவனுக்

காக இரங்கி வருந்தினர். "ஐயோ பாவம்" என்று சில பெண்கள் வாய்விட்டே அரற்றினர்.

உதயசந்திரனும் பல்லவ வீரனும் எதிர்க்க ஆயத்தமாகி விட்டனர். போட்டி மைதானமே மூச்சுவிட மறந்து போய் திகைத்திருந்தது. ஊசி விழுந்தால் கூட ஒலி கேட்கும். எல்லாருடைய மனத்திலும் படபடப்பு.

அரங்கத்தில் இருவரும் சில வினாடிகள் பதி போட்டனர். பல்லவ வீரன் குறுவாளைக் கையில் ஏந்தியபடி இரையை நோக்கும் புலியைப் போல் உறுமினான். உதயசந்திரன், எச்சலனமும் இல்லாமல், கால்களைச் சற்று அகற்றி நின்றவாறு, இரு கைகளையும் சற்று முன்னே நீட்டி, தயாராக நின்றான்.

திடீரென்று பல்லவ வீரன், குத்துவாளால் தாக்கினான். உதயசந்திரன், சாமர்த்தியமாக விலகவே, இலக்குத் தவறிய வேகத்தில் பல்லவ வீரன், சற்றுத் தடுமாறினான். மறுகணம், உறுமிக்கொண்டே பாயத் தயாராக நின்றான். உதயசந்திரன், பல்லவ வீரனின் கண்களை உற்றுப் பார்த்தான். திடீரென்று உதயசந்திரனின் வலதுகரம் மட்டும் இயங்கியது. மறுகணம், பல்லவ வீரன், "ஓ..." என்று பயங்கரமாக ஒரு மிருகத்தைப் போல் அலறியபடிப் பின்னால் சாய்ந்து, இரண்டு எட்டுகள் தள்ளாடினான். பிறகு, கீழே விழுந்து அலறித் துடித்தான். அவனுடைய ஒரு கண்ணிலிருந்து இரத்தம் கொட்டி, அவன் முகத்தை விகாரப்படுத்திக் கொண்டிருந்தது. அவன் கையிலிருந்த குத்துவாள், தூரப் போய் விழுந்து கிடந்தது. உதயசந்திரன், பாய்ந்து சென்று, கீழே கதறிக் கொண்டிருந்த பல்லவ வீரனின் ஒரு காலைப் பற்றி முறுக்கி, முதுகில் மிதித்தபடித் திருகினான். பல்லவ வீரன் துடித்துக் கதறினான்.

"வீரனே, தோல்வியை ஒப்புக் கொள்கிறாயா?" என்று கேட்டான், உதயசந்திரன்.

பல்லவ வீரன், "தோற்றேன், தோற்றேன். என்னை விட்டுவிடு" என்று கதறினான்.

அவனை உதறிவிட்டு உதயசந்திரன், வெற்றிப் பெருமையுடன் மகாராணியை நோக்கி நடந்தான்.

எல்லாம் சில கண நேரங்களுக்குள் நடைபெற்று முடிந்துவிட்டன. அரங்கில் என்ன நேர்ந்ததென்றே பார்வையாளர்களுக்குப் புரியவில்லை. ஒரு மின்வெட்டும் நேரத்தில் உதயசந்திரன் அசைந்தது தெரிந்தது; உடனே, பல்லவ வீரன் சாய்ந்தது தெரிந்தது! ஒரு முரட்டு வீரனை சில வினாடிகளுக்குள் ஆயுதமின்றியே வீழ்த்திவிட்ட அதிசயத்தை மக்களால் நம்பவே முடியவில்லை. ஒரு பெரிய போராட்டத்தை எதிர் பார்த்திருந்த மக்களுக்கு, சில வினாடிகளுக்குள் சண்டை முடிந்துவிட்டது, ஏமாற்றத்தைக் கொடுத்தது.

உதயசந்திரன், மகாராணியை நோக்கி நடந்தபோது மக்கள் உற்சாகத்தினால் ஆரவாரம் செய்தார்கள். பெண்கள், பெருமகிழ்ச்சியால் கைகொட்டினார்கள். மாணவர்கள், துள்ளிக் குதித்தார்கள்.

லீனா, மகிழ்ச்சி தாளாமல் டெங்லீயின் மனைவியை இறுகக் கட்டிக் கொண்டாள்.

"நிச்சயம் வெற்றிபெறுவான் என்று எனக்குத் தெரியும்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"நான் ரொம்பப் பயந்து போய்விட்டேன்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டார், டெங்லீ. "மகாசூரன்தான்" என்றார்.

தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த உதயசந்திரனை

வியப்போடும், ஆர்வத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தாள், மகாராணி. அவன் அவளுக்கு எதிரே வந்து வணங்கி நின்றபோது, "வீரனே, நீ ஏமாற்றி அவனை வீழ்த்தி விட்டாய்" என்றான், இளவரசன்.

இதைக் கேட்டுத் திகைப்புடன் நிமிர்ந்து இளவரசனைப் பார்த்தான், உதயசந்திரன்.

"அவனுடைய கண்களைத் தந்திரமாகக் குத்திக் குருடாக்கி விட்டாய். குருடனை வெல்வது வீரத்தனமா?" என்றான், இளவரசன்.

உதயசந்திரனுக்குக் கோபம் மூண்டது. "இப்போது நடைபெற்றது, இஷ்டபாணிப்போர். அந்த வீரன், இந்தப் பாணியில் போரிடத்தான் அழைத்தான். இந்தப் பாணியில் பின்பக்கமிருந்துதான் தாக்கக்கூடாதே தவிர, உடலின் எந்தப் பகுதியையும் தாக்கலாம். இளவரசர் போட்டியின் விதிகளை மறந்துவிட்டார் போலும்" என்றான் உதய சந்திரன்.

"போட்டியின் விதிமுறைகளைப் பற்றி நீ எனக்கு நினைவூட்ட வேண்டியதில்லை. ஒரு குருடனை வீழ்த்தியவனை வீரன் என்று ஏற்க முடியாது. உன்னுடைய வீரத்தைக் காட்ட வேண்டுமானால், இன்னொரு சந்தர்ப்பம் அளிக்கிறேன்" என்றான், இளவரசன்.

உதயசந்திரன், கோபத்துடன் சித்திரமாயனை ஏறிட்டு நோக்கினான். "இளவரசே, போட்டியின் விதிமுறை வழுவாமல்தான் போரிட்டேன். வெற்றிபெற்று வந்த பிறகு, ஒப்புக்கொள்ள மறுப்பது விந்தைதான். தாங்கள் கூறிய படியே என் திறமையை இந்த அரங்கத்திலேயே காண்பிக்கிறேன். சந்தர்ப்பம் கொடுக்கிறீர்களா?" என்றான்.

"ஓ... இப்போதே உன் திறமையைக் காண்பிக்கலாம். இங்குள்ள எந்த வீரனோடும் நீ போரிடலாம்" என்றான், இளவரசன், அலட்சியமாக.

"வீரனை நானே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டான், உதயசந்திரன்.

"உன் இஷ்டம்."

"இளவரசே, இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் இளவரசர், தாங்கள். தாங்களும் ஒரு வீரர்தாம். உங்களுக்கு இஷ்டமான எந்த ஆயுதத்தையும் ஏந்தி வாருங்கள். எத்தனை ஆயுதங்களையும் ஏந்தி வாருங்கள். தேவையானால், உங்கள் மெய்க்காப்பாளனையும் உடன் அழைத்து வாருங்கள். நான் ஆயுதமின்றியே உங்களை வெல்கிறேன். நான் போட்டிக்குத் தயார்" என்று கூறி, சித்திரமாயனை உறுத்துப் பார்த்தான், உதயசந்திரன்.

இளவரசன் துணுக்குற்றான். மக்களிடமிருந்து சல சலப்புத் தோன்றியது. கூட்டத்தில் மாணவன் ஒருவன், "அழைப்பை ஏற்க வேண்டும்" என்று உரக்கக் கூவியது கேட்டது.

இளவரசனின் கண்கள் சிவந்தன. கீழே அரங்கில் நின்று கொண்டிருந்த உதயசந்திரனை வெறிக்கப் பார்த்தவாறு, "எனக்கே அழைப்பு விடுகிறாயா?" என்று உறுமினான்.

"தாங்கள் ஒரு வீரர் என்று நினைத்தேன்" என்றான், உதயசந்திரன், சிரித்தபடி.

மக்கள் ஆர்ப்பரித்தனர். உதயசந்திரனைப் பலர் உற்சாகப்படுத்தி எழுப்பிய குரல் கேட்டது.

இளவரசன் கோபத்தோடு திரும்பி, வாணராயனின் உடைவாளை உருவி எடுத்தான்.

'வா, வா... அந்த ராஜநாகத்தைத் தப்பவிட்டுவிட்டேன். இப்போது உன்னை ஒரு பாம்பை அடித்து நசுக்குவதுபோல் நசுக்கிவிடுகிறேன். வா...' உதயசந்திரன் உள்ளூரக் குமுறினான்.

அப்போது, முதன் மந்திரி தரணிகொண்ட போசர் எழுந்து இடைமறித்தார்.

"பொறுங்கள் இளவரசே. தாங்கள் போட்டியில் ஈடுபடலாகாது. பொறுமையாக அமருங்கள்" என்று கூறிவிட்டு, உதயசந்திரனிடம் திரும்பி, "வீரனே, ராஜ குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு கொள்ளக்கூடாது. ஆகவே, உன்னுடைய வலிந்த அழைப்பை இளவரசர் ஏற்கத் தயாராயிருந்தாலும், அவர் இந்தப் போட்டியில் பங்கேற்க முடியாது. உன்னுடைய திறமையை வேறு வீரர்களிடம் தான் காட்ட வேண்டும்" என்று கூறியதும், உதயசந்திரனின் முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது.

சித்திரமாயன் வாளை வாணராயனிடம் எறிந்துவிட்டு ஆசனத்தில் அமர்ந்தபடியே சொன்னான்.

"வீரனே, ராஜ குடும்பச் சம்பிரதாயம் என்னைப் போரிட விடாமல் தடுத்துவிட்டது. இல்லையென்றால் திமிர் பிடித்த உன்னை இப்போதே அடக்கியிருப்பேன். நீ வீரன் தான் என்பதை நான் அனுப்பும் வீரர்களிடம் காட்ட முடியுமா பார்."

தன்னைத் திமிர் பிடித்தவன் என்று சித்திரமாயன் கூறியதைக் கேட்டுக் கொதித்தான், உதயசந்திரன். அந்தக் கோபத்தில் இரைந்து கத்தினான்.

"யாரை வேண்டுமானாலும் அனுப்புங்கள். எத்தனை பேர் வேண்டுமானாலும் வரட்டும்."

"இரண்டு பேர் போதும் உன் திமிரை அடக்க" என்று சித்திரமாயன் கூறிவிட்டு வாணராயனிடம் ஏதோ கூறினான். வாணராயன் போட்டி அறிவிப்பாளரிடம் ஏதோ கூற, போட்டி அறிவிப்பாளர் மேடையிலிருந்து இறங்கி, பல்லவ வீரர்கள் இருந்த இடத்தை நோக்கி விரைந்தார்.

என்ன நடைபெறுமோ என்று எல்லோரும் திகைப்புடன் இருந்தனர். சற்று நேரத்தில், இரண்டு வாள் வீரர்கள் அரங்கில் தோன்றினார்கள்.

"வீரனே, உன் திறமையை இந்த இரண்டு வீரர்களிடம் காண்பி. உனக்கும் வாள் தேவையானால் தரச் சொல்லுகிறேன். இவர்களை ஒரே சமயத்தில் போரிட்டு வென்று விட்டால், ஆயிரம் பொற்காசுகள் உனக்கே கிடைக்கும்" என்றான், இளவரசன்.

உதயசந்திரன் அலட்சியமாக இளவரசனைப் பார்த்தான். "கேவலம் பொற்காசுகளுக்காக நான் இந்த அரங்கில் இறங்கவில்லை. நான் வெற்றி பெற்ற பிறகு, அந்தப் பொற்காசுகளை என்னுடைய கடிகைக்கு வழங்கி விடுவேன்" என்று கூறிவிட்டு, அரங்கின் நடுவில் நின்று கொண்டிருந்த வாள் வீரர்களை நோக்கி விரைந்தான்.

மேகலாவின் மனம், மிகுந்த வேதனைக்குள்ளாகி இருந்தது. இறந்துவிடுவானே என்று மனம் பதைபதைத்தது.

லீனா, பதற்றமடைந்திருந்தாள். ராஜன் நம்பூதிரி இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். டெங்லீ, பயத்தினால் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

உதயசந்திரன், அரங்கின் நடுப்பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, மேடையிலிருந்து ஒரு கீச்சுக் குரல் உரக்க ஒலித்தது. "வீரனே, வாளை ஏந்திக்கொள். நிராயுதபாணியாகப் போரிடாதே."

உதயசந்திரன் சிரித்தபடியே திரும்பிப் பார்த்தான். மேடையில் சிறுவன் பல்லவமல்லன் நின்றுகொண்டு, மீண்டும் கையை ஆட்டி, அதையே சொன்னான். உதயசந்திரன் சிரித்தபடியே, "எனக்கு ஆயுதம் தேவையில்லை. என்னுடைய கைகளும் கால்களுமே எனக்கு ஆயுதங்கள்" என்று கூறிவிட்டு, அரங்கின் மையத்தை நோக்கி நடந்தான்.

மக்கள் பதை பதைத்தனர். "அந்த இளைஞனை தீர்த்துக் கட்டி விடுவார்கள் போலிருக்கிறதே" என்று சிலர் ஆற்றாமைப் பட்டனர்.

"தீர்த்துக் கட்ட வேண்டியதுதான். இளவரசரையே வலிய அழைத்தானே. எவ்வளவு அகம்பாவம்" என்று கூடச் சிலர் கறுவினர். "இளவரசர் நியாயமாகவா நடந்தார்? அவனடைந்த வெற்றியை ஒப்புக் கொள்ள மறுத்தது அநியாயந்தானே. அவரை அவன் வலிய அழைத்ததில் என்ன தவறு? வீரப் போட்டியில் ராஜவம்சம் என்ன, சாதாரண வம்சம் என்ன? வீரத்தில் ராஜ வீரம் பிரஜை வீரம் என்றா இருக்கிறது?" என்று யாரோ ஒருவன் கூறினான்.

சற்று நேரத்தில் கூட்டத்தினிடையே தோன்றியிருந்த சலசலப்பு நின்று விட்டது. எல்லோருடைய கவனமும் அரங்கத்தில் நிலைத்து நின்றது.

வாளேந்தி நின்ற வீரர்கள் இருவரும் உதயசந்திரனைத் தாக்க ஆயத்தமானார்கள். உதயசந்திரன் அவர்களுக்கு முன்னே நிராயுதபாணியாக நின்றான். இரண்டு ஓநாய்களுக்கிடையே அழகான ஒரு முயல் குட்டி நிற்பது போலிருந்தது. ஆனால் இந்த முயல் குட்டி எவ்வளவு கம்பீரமாக நிற்கிறது! தாக்குதலை எதிர்நோக்கித் தயாராயிருந்தான் உதயசந்திரன். இரு பல்லவ வீரர்களும் ஒரே சமயத்தில் அவன் மீது வாட்களை வீசியபோது, உதயசந்திரன்

சட்டெனக் குனிந்து விலகவே, இரு வாட்களின் வீச்சும் வெற்று வீச்சாகி, ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. வாள் வீரர்கள் சினம் கொண்டு மீண்டும் தாக்கத் தொடங்கினர்.

மக்கள் மிகுந்த வியப்போடும், பீதியோடும் கவனித்துக் கொண்டிருந்தனர். எந்தக் கணத்திலும் உதயசந்திரனின் உடல் வெட்டுண்டு கீழே சாயலாம் என்று எதிர்பார்த்தனர். ஆனால், அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு எதிராகப் போர் நீண்டுகொண்டிருந்தது.

"ஓ.... அந்த இளைஞன் மந்திர சக்தி நிறைந்தவனாயிருக்க வேண்டும். இல்லையென்றால், இரண்டு வாட்களின் வீச்சையும் எப்படி சமாளிக்கமுடியும்?" என்று கூட்டத்தில் யாரோ ஒருவன் வியந்தான்.

நேரம் ஆக ஆக, போரின் தன்மை பயங்கரமாக மாறியது. வாள் வீரர்கள் மிகுந்த ஆக்ரோஷத்தோடு தாக்கினார்கள். ஆனால் அவர்களுடைய பாய்ச்சல்கள் அனைத்தும் வீணாகிக்கொண்டிருந்தன. வாள் வீரர்கள் இருவரும் களைப்படையத் தொடங்கினர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. வாளை ஓங்கும்போது ஓர் இடத்தில் தென்படும் உதயசந்திரன், வாளை வீசும்போது வேறு இடத்தில் போய் நிற்கும் விந்தையை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மக்களுக்கு வியப்புத் தாளவில்லை. அவர்களால் நம்பக் கூட முடியவில்லை. ஏதோ ஜாலவித்தை நடைபெறுவதைப் போல் விழி பிதுங்கப் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்படி ஒரு போர் முறையை அவர்கள் பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை.

உதயசந்திரனின் கைகளும் கால்களும் எப்படியெல்

லாமோ இயங்கின. சில சமயம் உயரத் துள்ளினான். சில சமயம் ஒரு காலை ஊன்றி மறுகாலைத் தூக்கியபோது, எதிரி எகிறிப் போய் விழுந்ததைக் கண்டு பிரமிப்பாயிருந்தது.

பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தான், உதயசந்திரன். சற்று நேரம் தற்காப்புப் பாணியில் இயங்கிக் கொண்டிருந்தவன், சட்டென்று போரின் பாணியை மாற்றினான். திடீரென்று அந்தரத்தில் துள்ளினான். மறுகணம், வாள் வீரர்களின் கைகளிலிருந்த வாட்கள் எகிறிப் போய்த் தூர விழுந்தன.

மைதானம் முழுவதும் கரகோஷம் எழுந்தது. உணர்ச்சிப் பெருக்கால் பலர் துள்ளிக் குதித்தனர். பெண்களுக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

வாள் வீரர்கள் இருவரும் பாய்ந்து சென்று வாட்களை எடுப்பதற்குள் உதயசந்திரன், அவர்கள் மீது பாய்ந்தான். இரு வீரர்களும் துடித்துத் துள்ளித் தூர விழுந்தனர். ஒரு வீரன், விழுந்த வேகத்தோடு எழுந்து விட்டான். இன்னொருவன் குப்புற விழுந்து சற்றுநேரம் அப்படியே கிடந்தான். எழுந்த வீரனைத் தாக்கத் தயாரானான், உதயசந்திரன். அந்த வீரன், சற்று தூரத்தில் விழுந்து கிடந்த வாளினை எடுக்க முயன்றான். உதயசந்திரன் அவனை மறித்துக் கொண்டு அவன் மீது பாயப் பதிபோட்டான்.

குப்புற விழுந்து கிடந்த வீரன், மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்தான். உதயசந்திரன் மறுபக்கமாகத் திரும்பி மற்றவனை எதிர்க்கத் தயாராக நின்றதைக் கண்டதும், எட்டிய தூரத்தில் கிடந்த வாளினைப் பற்றியவாறு துள்ளி எழுந்து உதயசந்திரனின் பின்புறத்தில் பாய்ந்தான்.

மக்கள், "ஐயோ, ஐயோ" என்று அலறினார்கள். "பின்

னால் பார், பின்னால் பார்" என்று மாணவர்கள் கூச்சலிட்டனர்.

உதயசந்திரன் நிலைமையைப் புரிந்துக் கொண்டு, பின் பக்கம் வந்தவனைத் தன் காலால் எவ்வித் தாக்குவதற்குள், அவனுடைய இடது தோளில் பின்னாலிருந்து பாய்ந்த வாள், ஆழப் பதிந்துவிட்டது.

மக்கள், "ஆஹா...ஹா..." என்று கூக்குரலிட்டனர்.

உதயசந்திரன் தோளை வலது கையால் பற்றியபடியே சட்டெனத் திரும்பித் துள்ளிக் குதித்து, பின்னால் தாக்கிய வனின் முகத்தில் காலால் உதைத்தான். இடி மாதிரி விழுந்த உதையினால் அந்த வீரன் மண்டை உடைந்து, மூளை அந்த ரத்தில் சிதறியது. மறுகணம், உதயசந்திரனும் மயங்கிக்கீழே விழுந்தான். தோளிலிருந்து இரத்தம் பொங்கி வழிந்து தரையை நனைத்தது. எஞ்சியிருந்த வீரன் பாய்ந்து கீழே கிடந்த வாளினை எடுத்துக் கொண்டு குருதிக்குள் மயங்கிக் கிடந்த உதயசந்திரனை நெருங்கினான். ஒரு கணம் நிமிர்ந்து மேடையிலிருந்த இளவரசனைப் பார்த்தான். இளவரசன், தலையை அசைத்தான். மறுகணம், அந்த வீரன் உதயசந்திரனைக் கொல்ல வாளினை ஓங்கினான்.

திகைப்பினால் மைதானமே ஊமையாகக் கிடந்தது. அப்போது, "நிறுத்து..." என்று மேடையிலிருந்து ஓர் உரத்த குரல் கேட்டது. சிறுவன் பல்லவ மல்லன் எழுந்து நின்ற வாறு கோபத்துடன் கூறினான். "நிறுத்து. பின்னாலிருந்து தாக்கியது அநியாயம். கீழே மயங்கி விழுந்தவனைத் தொடாதே. வெளியே போ..."

வாளை ஓங்கி நின்ற வீரன், திகைத்தபடி நின்றான். மாணவர்கள் பக்கமிருந்து, "போ வெளியே... விலகிப் போ" என்று கூச்சல் கிளம்பியது.

"அநியாயம்... பின்னாலிருந்து தாக்கியது அநியாயம்" என்று மக்கள் கூக்குரலிட்டனர்.

மாணவர்கள் பலர், தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து அரங்கத்துக்குள் செல்ல முயன்றார்கள். காவலர்கள் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார்கள்.

மைதானத்தில் பெரும் கலகம் விளைந்துவிடும் போலிருந்தது. நிலைமையைப் புரிந்து கொண்ட முதன் மந்திரி, அரங்கில் வாளேந்தி நின்றுகொண்டிருந்த வீரனை நோக்கி, "அப்பால் போ சீக்கிரம்" என்று உத்தரவிட்டார்.

இளவரசன், கோபத்துடன் திரும்பி, முதன் மந்திரியை வெறிக்கப் பார்த்தான். அரங்கத்தில் நின்ற வாள் வீரன், சற்றுத் தயங்கவே, முதன் மந்திரி கோபத்தில் கர்ஜித்தார்: "வீரனே, உடனே வெளியே போ. உம், போ சீக்கிரம்."

வாள் வீரன் தலைகுனிந்தபடியே அரங்கத்தை விட்டு விலகிச் சென்றான்.

பார்வையாளர்களிடையே பரபரப்பும், குழப்பமும் தோன்றிவிட்டன. லீனா, மயங்கி டெங்லீயின் மனைவி மீது சாய்ந்துவிட்டாள். ராஜன் நம்பூதிரி, பதற்றமடைந்தவனாய் டெங்லீயைப் பார்த்தான்.

"வா, அவனை வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிடலாம். விரைவில் மருந்திட வேண்டும். வா, போகலாம்" என்று அவனிடம் கூறி எழுந்த டெங்லீ, தம் மனைவியைப் பார்த்து லீனாவைப் பத்திரமாகக் கூட்டிக்கொண்டு இரதத்துக்கு வருமாறு கூறிவிட்டு, போட்டி அரங்கை நோக்கி விரைந்தார். அவருக்குப் பின்னே பதற்றத்துடன் ராஜன் நம்பூதிரி ஓடினான்.

17. முதன் மந்திரிக்கு ஆபத்து

போட்டி அரங்கில் விழுந்து கிடந்த உதயசந்திரனை டெங்லீ தம் வீட்டுக்கு விரைந்து எடுத்துச் சென்றார். வைத்தியரைத் தேடி அவர் சென்றிருந்தபோது, முதன் மந்திரி அனுப்பி வைத்த ஒரு வைத்தியர், பல்லக்கில் வந்து இறங்கினார். உதயசந்திரனைச் சோதித்துப் பார்த்துவிட்டு, தோளில் ஏற்பட்டிருந்த வெட்டுக் காயத்துக்கு மருந்திட்டுக் கட்டினார். "காயம் பலமாயிருந்தாலும், ஆபத்தில்லை. விஷம் தோய்ந்த வாள். அதனால்தான் மயக்கம்" என்றார்.

"மயக்கம் தெளிய நேரமாகுமோ?" என்று லீனா, கேட்டாள்.

"ஆகலாம். இரத்தம் அதிகமாகக் கொட்டியிருக்கிறது. நாடி பலவீனமாயிருக்கிறது. ஒரு பச்சிலை தருகிறேன். ஒரு நாழிகைக்கு ஒரு முறை இலையைக் கசக்கி மூக்கினுள் இரண்டு சொட்டு விடுங்கள். பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை" என்றார் வைத்தியர்.

அப்போது புத்தகடிகை மாணவர்கள் சிலரும், கடிகையின் வைத்தியப் பிரிவைச் சேர்ந்த மகாபண்டிதர் ஞானபாலரும் வந்தனர். ஞானபாலரைக் கண்டதும், மந்திரியின் வைத்தியர் பணிவுடன் வணங்கி, உதயசந்திரனுக்குத் தாம் பிரயோகித்திருந்த மருந்தைப் பற்றிக் கூறினார். பிறகு தோளில் கட்டியிருந்த கட்டை அவிழ்த்துக் காட்டினார். உதயசந்திரனின் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு ஞானபாலர் திருப்தியடைந்தார். பிறகு, மந்திரியின் வைத்தியரிடம், "இவனைக் கடிகைக்கு எடுத்துக் செல்கிறோம்" என்றார்.

"இங்கேயே இருக்கட்டும். நாங்கள் நன்றாக கவனித்துக்கொள்வோம்" என்றாள், லீனா.

"இவர் எங்கள் கடிகையைச் சேர்ந்தவர். எங்கள் வைத்திய நிலையத்துக்குக் கொண்டு போய் நாங்கள் நன்றாகக் கவனிப்போம்" என்றான் ஒரு மாணவன்.

"இங்கு இவருக்கு எவ்வித அசௌகரியமும் இராது" என்றாள் லீனா.

அப்போது டெங்லீ, ஒரு வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்தார். ஏற்கெனவே, காஞ்சி நகரில் சிறந்த வைத்தியர்கள் இருவர் அங்கிருந்ததைக் கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டார்.

உதயசந்திரனைக் கடிகைக்கு எடுத்துச் செல்வது பற்றி ஞானபாலர் கூறியதும், டெங்லீ சற்று யோசித்தார். லீனா சட்டென்று, "நாங்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வோம்" என்றாள். டெங்லீ, அவள் கூறியதை ஆமோதித்தார். ஞானபாலர் புன்முறுவலுடன் லீனாவைப் பார்த்து, "நோயாளிக்கு ஒரு பெண்ணைப்போல் வேறு யாரும் சிறந்த பணிவிடை செய்துவிட முடியாது" என்று கூறி விடைபெற்றார்.

கடிகையைச் சேர்ந்தவர்கள் சென்ற பிறகு, முதன் மந்திரியின் வைத்தியர் சற்று நேரம் அங்கிருந்து கவனித்து விட்டு, மாலையில் வந்து பார்ப்பதாகக் கூறிவிட்டுச் சென்றார். போகும்போது, அருகிலிருந்த ராஜன் நம்பூதிரியிடம், "இவனைப் படுக்கையை விட்டு எழுந்திராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எழுந்தால் மீண்டும் மயக்கம் வரும். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்" என்றார்.

மூன்று நாழிகைகளுக்குப் பிறகு ஓர் அலங்காரப்

பல்லக்கு டெங்லீயின் வீட்டு முன்பு இறங்கியது. டெங்லீ, பல்லக்கை நெருங்கியதும், அதிலிருந்து இறங்கிய ஒரு பருத்த மனிதர், பல்லக்கின் அருகிலேயே நின்றார். பல்லக்கு தூக்கிகளில் ஒருவன் டெங்லீயை நெருங்கி, "அரண்மனை வைத்தியர் வந்திருக்கிறார்" என்றான்.

அதன் பிறகு, வைத்தியர், பல்லக்கை விட்டு விலகி டெங்லீயின் அருகே சென்றார். ஏற்கனவே, முதன் மந்திரியின் வைத்தியர் வந்துவிட்டுப் போனதை அறிந்ததும், அரண்மனை வைத்தியரின் முகம் சுருங்கியது. பிறகு அலட்சியமாக, "சின்ன ராணியார் அனுப்பி வைத்ததால் வந்தேன்" என்று கூறிவிட்டுப் பல்லக்கை நோக்கி நடந்தார்.

"உள்ளே வந்து நோயாளியைப் பார்த்துவிட்டுச் சொன்றால் என்ன குறைந்து விடும்? அரண்மனை வைத்தியர் என்னும் திமிர்" என்றான், அருகே நின்ற ராஜன் நம்பூதிரி.

"அரண்மனை வைத்தியரல்லவா, அப்படித்தானிருப்பார்" என்றார், டெங்லீ. "இந்த மாதிரி ஆசாமிகள் வைத்தியம் செய்வதைவிட அதிகாரம்தான் அதிகம் செய்வார்கள். இவர்களிடம் வைத்தியம் செய்யாமலிருப்பதே மேல். இவர்களால் நோயாளிக்குத் தான் இடைஞ்சல்" என்றார்.

உதயசந்திரனுக்கு மறுநாட் காலையில்தான் மயக்கம் தெளியத் தொடங்கியது. மிகவும் சோர்ந்து போயிருந்தான். தனக்கு நேர்ந்ததைப் பற்றிய நினைவு வந்ததும், பரபரப்புடன் எழுந்திருக்க முயன்றான். அருகிலிருந்த லீனா, அவனைத் தடுத்து மீண்டும் படுக்க வைத்தாள்.

"என்னை இங்கேயா எடுத்து வந்தீர்கள். கடிகையில் சேர்த்திருக்கலாமே" என்றான்.

"ஏன், நான் கவனித்துக் கொள்ள மாட்டேனா?"

என்றாள், லீனா. அவளுடைய அன்பு அவனை நெகிழ வைத்தது.

"என்னால் உங்கள் எல்லாருக்கும் சங்கடம்."

"சங்கடம் ஏதுமில்லை. முதன் மந்திரியின் வைத்தியர் வந்து பார்த்துக் கொள்கிறார்."

திடீரென்று உதயசந்திரன் பதற்றமடைந்தான். "இப்போது என்ன நேரம்? மாலை தானே?" என்று கேட்டுக் கொண்டே எழுந்திருக்க முயன்றான்.

"பலவீனமாயிருக்கிறீர்கள். எழுந்திருக்கக் கூடாது" என்று தடுத்தாள், லீனா.

"நான் நன்றாகத்தானிருக்கிறேன். இப்போது நேரம் என்ன?"

"நேரம் தெரிந்து என்ன செய்யப் போகிறீர்கள்? இப் போது காலை நேரம்."

"ஐயோ, காலை நேரமா? எத்தனை நாளாக மயங்கி யிருந்தேன்?"

"பதற்றமடையாதீர்கள். உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. நேற்று நண்பகலில் காயமடைந்து விழுந்தீர்கள்."

"நான் உடனே வெளியே போக வேண்டும். முக்கிய மான வேலை இருக்கிறது" என்று கூறியவாறே உதய சந்திரன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான். லீனா, தடுக்க முனைந்தாள். அவன் கட்டிலிலிருந்து இறங்கவும் முயன் றான்.

"எழுந்திருக்கக் கூடாது என்று வைத்தியர் சொல்லி யிருக்கிறார்" என்றாள், லீனா.

"வைத்தியருக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறிக் கொண்டே, எழுந்து நின்றான். நின்றதுமே மயக்கம் வருவது போன்ற உணர்வு தோன்றியது. கண்கள் இருண்டன. மீண்டும் கட்டிலில் அமர்ந்தான். கண்களை மூடிக்கொண் டான். லீனா பயத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந் தாள். அப்போது அங்கு வந்த டெங்லீயின் மனைவி, பதற்றமடைந்தவளாய், "ஐயோ எழுந்து உட்கார்ந்திருக் கிறானே, எழுந்தால் மயக்கம் வரும் என்று வைத்தியர் எச்சரித்தாரே" என்று சீன மொழியில் சொன்னாள்.

"கேட்காமல் எழுந்திருக்கிறார்" என்றாள் லீனா.

அப்போது ராஜன் நம்பூதிரி உள்ளே வரவே, லீனா, தைரியமடைந்தாள். "உங்கள் நண்பர் சொன்னால் கேட்ப தில்லை. எழுந்திருக்கிறார்" என்றாள்.

ராஜன் நம்பூதிரி விரைந்து சென்று, உதயசந்திரனின் தோளை அணைத்தவாறு மெல்லப் படுக்கவைத்தான். உதயசந்திரனின் பட படப்பு அடங்கவில்லை.

"ராஜன், நான் உடனே முதல் மந்திரியைப் பார்க்க வேண்டும்" என்றான்.

ராஜன் நம்பூதிரி சிரித்தான்.

"எதற்கு? போட்டியில் அறிவித்த ஆயிரம் பொற்காசு களை வாங்கவா?"

"பெரிய இரகசியம். நீயாவது முதன் மந்திரியைப் போய் உடனே சந்திக்க வேண்டும்."

"நினைத்த நேரத்தில் முதன்மந்திரியைச் சந்திக்க முடியுமா? இப்போது முதன்மந்திரி போட்டி மைதானத்தில் போட்டிகளை ரசித்துக் கொண்டிருப்பார்" என்றான், ராஜன் நம்பூதிரி.

உதயசந்திரன் மீண்டும் எழுந்திருக்க முயன்றான். ராஜன் நம்பூதிரி, அவனை அழுத்திப் பிடித்துக்கொண்டான். அப்போது உள்ளே வந்த வைத்தியர், "என்ன எழுந்து ஓட வேண்டும் என்கிறானா? இன்று படுக்கையை விட்டு நகரவே கூடாது" என்றார், கண்டிப்புடன்.

"இவர் முதன் மந்திரியின் வைத்தியர். முதன்மந்திரியே உனக்காக நேற்று இவரை உடனே அனுப்பி வைத்தார்" என்றான், ராஜன் நம்பூதிரி.

இதைக் கேட்டதும் உதயசந்திரனின் பரபரப்பு அதிகமாகியது. "வைத்தியரே, எனக்கு வைத்தியம் பிறகு செய்து கொள்ளலாம். தாங்கள் உடனே முதன் மந்திரியைச் சந்திக்க வேண்டும்" என்றான்.

வைத்தியர், புரியாமல் அவனைப் பார்த்து விழித்தார்.

"முதன் மந்திரிக்கு ஆபத்து. போட்டி மைதானத்தில் தான் அவருக்கு ஆபத்து காத்திருக்கிறது. நீங்கள் உடனே அவரைச் சந்திக்க வேண்டும்."

வைத்தியர் அவனைச் சந்தேகத்தோடு பார்த்தார். அருகில் அமர்ந்து நாடித் துடிப்பைச் சோதிக்க அவன் கையைப் பற்றினார். உதயசந்திரன், வெடுக்கென்று கையை விடுவித்துக் கொண்டு, "நான் ஜன்னி கண்டு பிதற்றுகிறேனா என்று நினைக்க வேண்டாம். உண்மையிலேயே ஒரு பெரிய சதி பற்றிய இரகசியம் எனக்குத் தெரியும். உங்களுடைய மந்திரியைக் காப்பாற்ற நினைத்தால், உடனே ஓடிப்போய் அவரை எச்சரியுங்கள்" என்றான்.

வைத்தியர் திகைத்தார். "இந்தச் சமயத்தில், முதன் மந்திரியைச் சந்திக்க முடியாதே" என்றார்.

"சந்தித்தே ஆக வேண்டும்."

"அவருடைய மெய்க்காவலர்களில் யாரையாவது சந்திக்க முடியும்."

"அதுபோதும். வைத்தியரே, நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள், இது பரம இரகசியம். உடனே, போய், மெய்க்காப்பாளனிடம் சொல்லி முதன் மந்திரியைக் காப்பாற்றச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு, சதித் திட்டம் முழுவதையும் விவரித்தான். பிறகு, "ஐயோ, இது பரம இரகசியம். ஜாக்கிரதை. இது உங்களுக்குத் தெரியும் என்று வெளியே தெரிந்தாலே உங்கள் உயிருக்கு ஆபத்து. சீக்கிரம் செல்லுங்கள்" என்றான்.

சில நொடிகளில் வைத்தியரின் பல்லக்கு, போட்டி மைதானத்தை நோக்கி விரைந்தது. வைத்தியர் சென்ற பிறகுதான் உதயசந்திரன் அமைதியடைந்தான். ராஜன் நம்பூதிரி திகைப்புடன், "இவ்வளவு இரகசியம் உனக்கு எப்படித் தெரிந்தது? இதை நேற்றே நீ, மைதானத்தில் முதன்மந்திரிக்குத் தெரியும்படியாகச் செய்திருக்கலாமே" என்றான்.

"நேற்றுவரை இந்தச் சதி பற்றி நான் அக்கறையே கொள்ளவில்லை. ஏதோ ராஜாங்க விஷயம் என்று இருந்து விட்டேன். நேற்று மைதானத்தில் முதன் மந்திரியை நேரில் கண்ட பிறகு தான் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று தோன்றியது" என்றான் உதயசந்திரன். பிறகு சொன்னான் "முதன் மந்திரிக்கு எவ்வளவு உயர்ந்த மனசு. எனக்காகத் தம்முடைய வைத்தியரையே அனுப்பி வைத்திருக்கிறாரே! ஓ, எவ்வளவு பரந்த மனம்! என்னுடைய நன்றிக் கடனைச் செலுத்தி விட்டேன் என்று நினைக்கிறேன்."

ராஜன் நம்பூதிரியின் கையைப் பற்றிக் கொண்டு, "எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று கேட்டான்.

ராஜன் நம்பூதிரி அவனை வியப்புடன் பார்த்தான்.

"மைதானத்துக்குப் போய் என்ன நடக்கிறது என்று பார்த்து வந்து சொல்லேன். முதன்மந்திரிக்கு என்னாகுமோ என்று மனம் பதறுகிறது" என்றான், உதயசந்திரன்.

"சரி, நான் போய் பார்த்து வருகிறேன். வைத்தியர் போய் எச்சரித்துவிடுவார். மந்திரிக்கு ஒன்றும் நேராது. நான் உனக்கு நல்ல செய்தி கொண்டு வருகிறேன். நிம்மதியாக இரு" என்று கூறிவிட்டு வெளியே போக எழுந்தான், ராஜன் நம்பூதிரி. லீனாவைப் பார்த்து, "போய்விட்டு வந்துவிடுகிறேன். அவன் எழுந்து நடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டு வெளியே விரைந்தான்.

மாலையில் முதன்மந்திரி தரணி கொண்ட போசரின் மாளிகையைச் சுற்றி இரதங்களும், பல்லக்குகளும் காணப்பட்டன. மாளிகையின் உள்ளே, நகரப் பிரமுகர்களும், கோட்டத் தலைவர்களும் கூடியிருந்தார்கள். எல்லாருடைய முகங்களிலும் கவலை படிந்திருந்தது. முதன்மந்திரி, எவ்விதச் சஞ்சலமும் இன்றி, புன்முறுவலோடிருந்தார்.

"இதை இப்படியே விட்டுவிடக் கூடாது" என்றார் ஜெயவர்மர்.

முதன் மந்திரி, சிரித்தார். "இதை ஆராய வேண்டிய அவசியமே இல்லை. சதியின் மூலகர்த்தா யார் என்பதை நானே யூகித்து விட்டேன்" என்றார்.

"அப்படியானால், உடனே சிறைப்பிடித்துத் தண்டித்து விடவேண்டியது தானே. இதில் தாமதம் ஏன்? யாரென்று கூறுங்கள். இப்போதே சிறைப்பிடித்து விடுகிறேன்."

"இப்போது அதற்கு அவசரம் இல்லை. அதற்கான

காலம் நெருங்கவில்லை. நீங்கள் யாரும் இதுபற்றிப் பயம் கொள்ள வேண்டாம்" என்றார், முதன்மந்திரி.

"நல்ல வேளை, உங்கள் அந்தரங்க மெய்க்காப்பாளன், தக்க சமயத்தில் உங்களைத் தூரத் தள்ளியிருக்காவிட்டால், என்ன ஆகியிருக்கும். ஓ... உங்களை நோக்கிப் பாய்ந்து வந்த அம்பு, உங்களுக்குப் பின்னாலிருந்த மரத்தூணில் எவ்வளவு ஆழமாகப் பதிந்து நின்றது!" என்றார், இரணியவர்மர், கவலையுடன்.

"அந்தச் சம்பவத்துக்குச் சில வினாடிகளுக்கு முன்பு தான் சதியின் விவரம் என் மெய்க்காப்பாளனுக்குத் தெரிய வந்தது. என்னிடம் கூட அவன் அது பற்றிச் சொல்ல அவகாசம் இல்லை. சதிகாரர்கள், மிகக் கச்சிதமாகத்தான் திட்டமிட்டிருக்கிறார்கள். கடவுள் பிரார்த்தனை முடிந்து, முன்றாவது முறையாகக் கொம்பு ஊதி முடிக்கும்போது அம்பு எய்வதாக ஏற்பாடு. அம்பு எய்தவனையும் அவன் மரத்திலிருந்து இறங்குவதற்குள் சிறைப்பிடிக்க ஏற்பாடு செய்துவிட்டான், மெய்க்காப்பாளன்" என்றார், முதன் மந்திரி. எல்லாரும் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந் தார்கள்.

"எய்தவனைப் பிடித்தாகிவிட்டதா? அவனிடமிருந்து உண்மையைக் கறந்து விடலாமே" என்றார், ஜெயவர்மர்.

"அவன் உயிரோடில்லையே. அவனைச் சிறைப் பிடித்துக்கொண்டு சென்றபோது, குளக்கரைத் தோப்பின் அருகே எங்கிருந்தோ ஒரு அம்பு வந்து அவன் மீது பாய்ந்து விட்டது. அவன் தான் ஒரே சாட்சி. சதிகாரர்கள், கெட்டிக் காரர்கள்" என்று கூறிச் சிரித்தார், முதன் மந்திரி. பிறகு, "மகாராணி என்னைக் கூப்பிட்டனுப்பியிருக்கிறார். இப்போது அங்குதான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

எல்லாரும் விடைபெற்றுச் சென்றதும், கடைசியாக விடைபெற்ற இரணியவர்மரிடம், "இன்று இரவு இரண்டு குற்றவாளிகளை உங்கள் மாளிகைக்கு அனுப்பி வைக்கிறேன். உங்கள் பாதுகாப்பில் இருக்கட்டும்" என்றார் முதன் மந்திரி.

"யார் அவர்கள்?"

"இந்தச் சதியில் சம்பந்தப்பட்டவர்கள் தாம். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு, முதன் மந்திரி, அரண்மனைக்குச் செல்வதற்காகப் பல்லக்கில் ஏறினார்.

முதன் மந்திரியைக் கண்டதும் மகாராணி, "கடவுள் கிருபையால் உங்களுக்கு ஒன்றும் நேரவில்லை. மைதானத்தில் நடந்ததைக் கண்டதிலிருந்து என் மனமே சரியில்லை" என்றாள்.

"கடவுளுடைய கிருபையும், தங்களுடைய அபிமானமும் தாம் என்னைக் காப்பாற்றின" என்றார், முதன் மந்திரி.

"குற்றவாளியை உடனே பிடித்துத் தண்டிக்க வேண்டும்" என்றாள், மகாராணி, கோபத்துடன்.

"ஆகட்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்."

"காஞ்சியிலேயே இப்படிச் சதி நடப்பதென்றால், எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும். இனி, தாங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்றாள் மகாராணி.

முதன் மந்திரி சிரித்தார். "தேவி, ராஜ்ய காரியங்களில் இருப்பவர்கள் இதையெல்லாம் எதிர்பார்த்துத்தானிருக்க வேண்டும். இதற்கெல்லாம் அஞ்சி ஒளிந்தால், ஆட்சி நடைபெற முடியாது" என்றார்.

"அரங்கத்தில் நேற்று ஒரு வீரன் விழுந்தானே, நலமாயிருக்கிறானா ? உங்கள் வைத்தியர் தாம் கவனித்துக் கொள்கிறார் போலிருக்கிறது"

"ஆபத்து ஒன்றுமில்லை. ஆனாலும் எழுந்து நடமாட நாலைந்து நாட்களாகும்."

"போட்டி நல்ல முறையில் நிறைவு பெறாமல், குழப்பத்தில் முடிந்தது தான் வருத்தமாயிருக்கிறது. காஞ்சி நகரில் முதன் மந்திரிக்கு எதிராக இப்படி ஒரு நடவடிக்கையை நான் சகிக்க முடியாது. நாட்டில் இந்த மாதிரி நடப்பதை மன்னிக்க முடியாது. மக்களிடையே பயமும், மரியாதையும் குறைந்து வருகின்றன. ஊர்த்தலைவர்களும், கோட்டத்தலைவர்களும் கூட ராஜாங்க உத்தரவுகளை சரிவர மதிக்கவில்லை. பல இடங்களிலிருந்து தகவல்கள் வருகின்றனவே" என்றார் மகாராணி கவலையுடன்.

"எனக்கும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில வணிகர்களின் போக்கு சரியாக இல்லை. அவர்களுடைய பேராசையினால் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. விலைவாசி ஏறும்போது மக்கள் அதிருப்தியடைகின்றனர்."

"வணிகர்கள் நஷ்டத்தில் விற்கவேண்டும் என்கிறீர்களா ?" என்றார் ராணி.

"கொள்ளை லாபம் வைக்கிறார்கள். கொள்முதல் விலையில் அரைக்கால் பாகம் தான் கூடுதல் லாபம் பெறலாம் என்ற விதியைத் திடீரென்று எடுத்துவிட்டீர்கள். அது தீமையை விளைவிக்கும் என்று மந்திரிசபையில் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். தாங்கள் கேட்க மறுத்துவிட்டீர்கள்" என்றார் மந்திரி.

"வணிகர்களால் அரசுக்கு ஆதாயம் இருக்கும்போது

அவர்களுடைய விருப்பத்தை நாம் கொஞ்சம் கவனிக்க வேண்டாமா?"

"அதற்காகக் கொள்ளை லாபமடிக்க அனுமதிக்கக் கூடாது, தேவி. இளவரசர் ஒரு குறிப்பிட்ட வணிகருக்கு சுங்க வரியிலிருந்து விலக்களித்திருக்கிறார்."

"அவனுக்கு வேண்டியவர்களுக்கு சலுகை காட்டியிருப்பான்" என்றாள் மகாராணி.

"தேவி, எந்த வரி பற்றியும் மந்திரி சபையின் ஆலோசனையின் பேரில் தான் முடிவு எடுக்கப்பட வேண்டும். வரி விஷயத்தில் பாரபட்சம் கூடாது. ஒரு வணிகருக்கு மட்டும் சலுகை என்றால் அது, மற்ற வணிகர்களையும் பாதிக்கும். நாட்டுப் பொருளாதாரம் சீர்கெட்டுவிடும்."

"மந்திரிசபை, என்னுடைய யோசனைக்காகத்தானே தவிர, வேறென்ன? எனக்கும் யோசிக்கும் திறன் உண்டு, முதன்மந்திரியாரே. என் மனசாட்சிப்படி தான் நான் நடப்பேன்" என்றாள், பிரேமவர்த்தினி, கோபத்துடன். பிறகு,

"எல்லா ஊர்த் தலைவர்களையும், நாட்டார்களையும் பதவி நீக்கம் செய்யலாம் என்றிருக்கிறேன்" என்றாள்.

"ஆ...!" முதன் மந்திரி பதறிப்போனார்.

"தேவி, அப்படி ஏதாவது கட்டளை அனுப்பி விடாதீர்கள். காலம் காலமாக இருந்து வரும் ஆட்சி அமைப்பு இது. இதனுடைய கட்டுக்கோப்பை உடைத்து விட்டோமென்றால், ஆட்சியின் சீரே கெட்டுவிடும்" என்று பதற்றத்துடன் கூறினார், முதன்மந்திரி.

"அரசின் கட்டளைகளை மதியாதவர்களை நான்

மன்னிக்கத் தயாரில்லை. ஊர்த்தலைவர்களும், நாட்டார் களும் ஆட்சியின் கட்டளைகளை அந்தந்த இடங்களில் ஒழுங்காக நிறைவேற்றுகின்றனரா என்று கண்காணிப் பதற்குத்தானே இருக்கிறார்கள்."

"தேவி, அந்தத் தலைவர்கள் அனைவரும் ஊர் மக்களா லும் நகரத்து மக்களாலும் கோயில் சந்நிதியில் தெய்வ சாட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அந்தத் தலைவர் கள் அனைவரும் ஒழுக்கசீலர்கள். மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள். திடீரென்று அவர்களை நீக்கினால், மக்கள் கிளர்ந்தெழுவார்கள்."

"மக்கள், மக்கள், மக்கள். மக்களை ஆளத்தான் நானி ருக்கிறேனே தவிர, மக்கள் என்னை ஆள்வதற்காக அல்ல. நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மந்திரியாரே, தாங்கள் வரவரக் கோழையாகிவிட்டீர்கள். வயதாகி விட்டது. மனத் தெம்பில்லை" என்று கோபத்தில் இரைந்தாள் பிரேம வர்த்தினி.

"தேவி, நாட்டை ஆள்வதற்கு உடல் பலத்தைவிட மூளை பலந்தான் தேவை" என்றார், முதன் மந்திரி.

"எனக்கு மூளை இல்லை என்கிறீர்களா?" கோபம் தணியாமலே கேட்டாள்.

"தேவி தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. எனக்கு உடலில் தெம்பில்லை என்றாலும், அறிவு தளர்ந்து விடவில்லை என்று கூற வந்தேன்" என்றார், புன்முறுவ லுடன். பிறகு,

"அந்தத் தலைவர்களுக்கான பதவிக்காலம் முடிய இன்னும் சில மாதங்கள் இருக்கின்றன. அதன் பிறகு,

மக்களே தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க விட்டு விடுவதுதான் நல்லது" என்றார்.

"என்னுடைய கட்டளைகளை மதிக்காதவர்கள் பதவியில் இருக்கக் கூடாது."

"அவர்களை நீக்கிவிட்டால், பதிலுக்கு வேறு தலைவர்கள் உடனே வேண்டுமே?"

"நாமே தலைவர்களை நியமித்து அனுப்பிவிட்டால் போகிறது" என்றாள், பிரேமவர்த்தினி.

"தேவி, இதுவரை தங்களால் மாற்றப்பட்ட விதி முறைகள் அனைத்தும் சக்ரவர்த்தி அமுலாக்கிக் கொண்டு வந்தவைகள்தாம். சக்ரவர்த்தியின் அனுமதியின்றி, பழக்கத்திலுள்ள சட்டதிட்டங்களை அனுசரிக்காமலிருப்பது உசித மாக எனக்குப்படவில்லை."

"மாற்ற வேண்டிய சூழ்நிலை வரும்போது மாற்றித் தான் ஆகவேண்டும். ஒரே விதமான சட்டதிட்டங்கள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தாது. காலம் மாறும்போது, விதி முறைகளையும் நாம் மாற்றியமைக்கத்தானே வேண்டும். மேலும், போர்க்களத்திலிருக்கும் சக்கரவர்த்தியிடம் போய் இப்போது யோசனை கேட்க முடியுமா?"

"அப்படி ஏதும் அவசரச் சூழ்நிலை ஏற்பட வில்லையே. மக்களுக்கு மன்னர் அளித்திருக்கும் சுதந்திரங் களைப் பறிக்கும்படியாக நாம் நடந்து கொள்வதே உசிதம் இல்லை என்பது என் கருத்து. மன்னர் திரும்பி வந்ததும் மந்திரிசபைமீது குற்றம் காணக் கூடாது தேவி."

"மக்களுக்கு இவ்வளவு சுதந்திரம் கொடுத்திருப்பதே தவறு. சுதந்திரத்தைப் பேணத் தெரியாத மக்களிடம் அதை

அளிப்பதே ஆபத்து. மந்திரியாரே, ஏதாவது குறை இருக்குமானால், எல்லாவற்றுக்கும் நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன். மன்னருக்கு நான் பதில் சொல்லிக் கொள்கிறேன்" என்றாள், பிரேமவர்த்தினி.

முதன் மந்திரி புன்னகைத்தவாறே, "மன்னருக்குத் தங்கள் மீதுள்ள அபிமானத்தை நானறிவேன் தேவி. ஆனால் இப்போது நாம் உண்டாக்கும் மாறுபாடுகளால் பின்னால் மன்னருக்குத் தாம் தர்மசங்கடம் ஏற்படும். நாம் செய்துவிட்ட தவறுகள் அனைத்தையும் திருத்த நீண்ட காலமாகும்" என்றார். பிறகு, மிகுந்த மனச்சோர்வுடன், "தேவி, தாங்கள் எடுக்க உத்தேசித்திருக்கும் இந்த முடிவு, நாடு முழுவதையும் பாதிக்கும். நாம் ஒரு போரில் ஈடுபட்டிருக்கும்போது, உள் நாட்டில் கலகம் ஏற்பட்டுவிடக் கூடாது. அப்படி ஏதாவது ஏற்பட்டால், நம்மால் சமாளிக்க முடியாது. சக்கரவர்த்தி இல்லாத இந்த நேரத்தில், நமக்குத் தேவையானது அமைதி. அதற்குக் குந்தகம் விளையும் படியான கட்டளைகளை நாம் தவிர்ப்பது நல்லது. முதன் மந்திரி என்னும் முறையில் நான் தங்களுக்குச் சொல்லும் யோசனை இது" என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு எழுந்தார்.

அரண்மனையிலிருந்து அவர் வெளியேறியபோது, நன்றாக இருட்டிவிட்டது. மனத்தில் உற்சாகமில்லை. பல்லக்கு சற்று தூரம் சென்றதும், அருகில் குதிரைகளில் வந்துகொண்டிருந்த மெய்க்காப்பாளர்களிடம் பல்லக்கை, சீனத் தோட்டத்துக்குக் கொண்டு செல்லும்படிப் பணித்தார்.

18. மகாராணியின் மனக்கலக்கம்

வாசலில் குதிரைகளின் குளம்படி ஒலியும், ஆள் அரவமும் கேட்கவே, டெங்லீ ஒரு தீவட்டியை ஏந்தியவாறு வீட்டினுள்ளிருந்து வாசலுக்கு வந்தார். சற்று தூரத்தில் சிலர் தீவட்டி ஏந்தி நின்றதையும், ஒரு பல்லக்கு இறங்கி நின்ற தையும் அதைச் சுற்றி சில குதிரை வீரர்களிருந்ததையும் கண்டு திகைத்தபடி நின்றார். ஒரு வீரன் டெங்லீயை நெருங்கி, "முதன் மந்திரி வருகிறார்" என்றான்.

டெங்லீ பரபரப்புடன் பல்லக்கை நெருங்கி, முதன் மந்திரியை வரவேற்றார். டெங்லீக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. முதன்மந்திரியைக் கண்ட பதற்றத்தில் வாய் குழறியது. "தாங்கள் என் இல்லம் தேடி வந்தது என் பாக்கியம்" என்றார்.

"தாங்கள் தானே சீன வணிக சபையின் தலைவர் டெங்லீ?" என்று கேட்டார், முதன்மந்திரி.

"ஆமாம்" என்று கூறிவிட்டு மௌனமாக நின்றார். டெங்லீ. மந்திரியை வீட்டினுள்ளே கூப்பிடக்கூடத் தோன் றாமல் நின்றார்.

"தங்கள் வீட்டில்தானே அந்த வீரன்...?" என்று முதன் மந்திரி கேட்டார்.

"ஆமாம், வாருங்கள், வாருங்கள்" என்று அழைத்த வாறு தீவட்டியைப் பிடித்துக் கொண்டு முன்னே நடந்தார், டெங்லீ.

வீட்டினுள் பெரிய அறை ஒன்றில் உதயசந்திரன் படுத் திருந்தான். லீனா அருகிலிருந்து வறுத்த தவிட்டினால் சூடு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். அருகில் அகல்

விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அறையினுள்ளே டெங்லீயும், முதன்மந்திரியும் சென்றதும் லீனா திடுக்கிட்டு எழுந்தாள். தலையைத் தூக்கிப் பார்த்த உதயசந்திரன், முதன் மந்திரியைக் கண்டதும் பரபரப்படைந்து எழுந்திருக்க முயன்றான். முதன்மந்திரி பாய்ந்து சென்று அவன் தோளைப் பற்றி, "வேண்டாம், படுத்திரு" என்றார்.

உதயசந்திரன் உட்கார்ந்தபடியே முதன்மந்திரியைப் பார்த்து, "தங்களை வணங்கக்கூட முடியாதபடி தோளில் காயம்" என்றான்.

"உன் வணக்கத்தை உன் கண்களிலேயே பெற்று விட்டேன்" என்று கூறியபடியே அவனுடைய வலக்கரத் தைப் பற்றிக் கொண்டார்.

டெங்லீ, அவருக்காக ஓர் ஆசனத்தை எடுத்துப் போட்டார். முதன்மந்திரி அதில் அமராமல் உதயசந்திரனுக்கு அருகில் கட்டிலில் அமர்ந்து விட்டார். உதயசந்திரன் கூசினான். பல்லவ சாம்ராஜ்யத்தின் முதன்மந்திரி, தன் அருகில் அமர்ந்திருக்கிறாரே என்ற கூச்சம்.

"தம்பி, உனக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை" என்றார் முதன்மந்திரி.

"நான்தான் தங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன், ஐயா. தாங்கள் அரங்கத்தில் அந்த வீரனை விலகிச்செல்லும் படி உத்தரவிட்டிருக்கவில்லையென்றால், என்னை இரண்டு துண்டுகளாக்கி இருப்பான்" என்றான் உதய சந்திரன்.

"நீ காயம்பட்டு விழுந்த பிறகும் நினைவு வந்தவுடனே என்னைக் காப்பாற்ற வைத்தியரை அனுப்பி வைத்த உனக்கு நான் தான் நன்றி செலுத்த வேண்டும். உண்மை

யிலேயே உன்னைக் காப்பாற்றியவன் பல்லவமல்லன் தான். அந்தச் சிறுவன்தான் முதலில் எழுந்து, உன் எதிரியைத் தடுத்தவன்" என்று கூறிய முதன்மந்திரி, திரும்பிப் பார்த்து "இவனை நான் அழைத்துச் சென்று கவனித்துக் கொள்கிறேன்" என்று டெங்லீயிடம் கூறினார்.

சட்டென்று லீனா, "நாங்கள் இங்கே நன்றாகத்தான் கவனித்துக் கொள்கிறோம்" என்றாள்.

முதன்மந்திரி திகைப்புற்றுத் திரும்பி அவளைப் பார்த்தார். பயத்தினால் அவளுடைய இமைகள் படபடத்தன. முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள். முதன்மந்திரியின் முகத்தில் புன்முறுவல் தோன்றியது.

"உங்கள் மகளா?" என்று டெங்லீயிடம் கேட்டார்.

"பெற்ற மகள் அல்ல. என் வளர்ப்பு மகள்" என்றார் டெங்லீ. பிறகு அவளுடைய வரலாற்றைக் கூறினார். அதைக் கேட்ட முதன்மந்திரியின் கண்களில் இரக்கம் சுரந்தது. மிகுந்த அன்புடன் அவளைத் திரும்பிப் பார்த்தார். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

"அழாதே அம்மா. டெங்லீ உன்னைக் கவனித்துக் கொள்வார். நானும் உன்னை என் மகள் போல் கவனித்துக் கொள்வேன். பல்லவநாடு, உனக்கு சுபிட்சமளிக்கும்" என்றார். பிறகு உதயசந்திரனிடம் திரும்பி, "உன்மீது அக்கறை உள்ளவர்கள் இங்கு இருக்கிறார்கள், உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்ள. என்னுடைய வைத்தியர் தினமும் இருமுறை வந்து கவனித்துக் கொள்வார்" என்றார். "உன் பெயர் என்ன சொன்னாய்?" என்று கேட்டார்.

"உதயசந்திர பூசான்."

"ஓ...நீ பூசான் வமிசத்தைச் சேர்ந்தவனா? மாமல்ல புரத்து தேவேந்திர பூசானின் வமிசமா நீ?"– மிகுந்த வியப் போடு கேட்டார், முதன் மந்திரி.

"ஆமாம், ஐயா."

"தம்பி உன்னுடைய வமிசத்தின் பெருமைக்குத் தகுந்த படிதான் நடந்திருக்கிறாய், ஆதியில் நரசிம்மவர்ம பல்ல வரின் படை, சேனாபதி பரஞ்சோதியின் தலைமையில் வாதாபியை நோக்கிப் படையெடுத்துச் சென்றபோது, தேவேந்திர பூசான் தான் குதிரைப் படைக்குத் தலைமை தாங்கிச் சென்றார். உங்களுடைய வமிசம், பரம்பரையாகப் பல்லவ நாட்டுக்கு வீரத்தொண்டு செய்துவந்திருக்கிறது. பூசான் வமிசத்து வீரத்தையும் துணிச்சலையும் நேற்று போட்டி அரங்கில் கண்டேன்!" என்று கூறியபடி மிகுந்த வாஞ்சையுடன் உதயசந்திரன் கையைப் பற்றிக்கொண்டார். "நான் இதுவரை பார்த்தும் கேட்டும் இராத புது மாதிரியான போர் முறையைக் கையாண்டாயே! இதை எங்கே கற்றாய்?" என்று கேட்டார்.

"இலங்கைத் தீவில், சிகிரியா மலைக்குகைகளில் உள்ள சில பௌத்த பிக்ஷுக்களுக்கு இந்தப் போர் முறை தெரியும். அவர்களிடம் நான் பத்து ஆண்டுகளாகப் பயின்றேன். சீன தேசத்துக்குச் சென்றிருக்கும் சில பௌத்த பிக்ஷுக்களுக்கும் இந்தப் போர் முறை தெரியும்" என்றான் உதயசந்திரன்.

"அற்புதமான போர் முறை! எவ்வளவு வேகம் எவ் வளவு நுணுக்கம்! நினைக்கவே பிரமிப்பாயிருக்கிறது... நீ இதை பல்லவநாட்டுப் படை வீரர்களுக்குப் பயிற்சியளிக் கலாமே."

"ஐயா, இந்தப் போர் முறை, தற்காப்புக்காகத்தானே தவிர, யாரையும் வலியச் சென்று தாக்குவதற்காக அல்ல.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மட்டுமே, அதுவும் நம் முடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய தருணத்தில் மட்டுமே, எதிரியை இந்த முறையில் கொல்ல லாம். எனக்கு இதைப் பயிற்றுவிக்க ஆரம்பித்தபோதே பிரமாணம் வாங்கினார்கள்."

"பௌத்தர்களுடைய தத்துவங்களும், நெறிகளும் மிகவும் உயர்ந்தவை. சிறந்த ஒரு போர் முறையைக் கண்டு பிடித்து, அதைத் தற்காப்புக்கு மட்டுமே பயன்படுத்தலாம் என்ற கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியிருக்கும் அவர் களுடைய உயர்ந்த மனதுக்கு ஈடு சொல்ல இந்த உலகத்தில் வேறென்ன இருக்கிறது" என்று வியந்தார், முதன் மந்திரி.

"பௌத்த ஞானிகள், கொல்லும் ஆயுதத்தைத் தீண்டக் கூடாது என்னும் கொள்கை இருப்பதால், ஆயுதமின்றியே தன்னைக் காத்துக் கொள்ள பயன்படுத்தும் ஒரு தற்காப்புப் பயிற்சி இது. இதைத் தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே, அவர்களுடைய குணங்களைச் சோதித்த பிறகுதான் கற்றுக் கொடுக்கவேண்டும் என்னும் நியதியும் உண்டு."

"உனக்கு வேறு என்ன பயிற்சி உண்டு?"

"குதிரை ஏற்றம் மட்டும் தெரியும்."

நீ பௌத்த மதத்தைச் சேர்ந்தவனா?""

"பத்து வயதுவரை என் பாட்டனாரால் சைவனாக வளர்க்கப்பட்டேன். பிக்ஷுக்களின் பொறுப்பில் இலங்கை யிலிருந்த பத்து ஆண்டுகளும் பௌத்த நெறிகளின்படி வளர்க்கப்பட்டேன்" என்றான், உதயசந்திரன்.

"தம்பி உன்னை நினைக்க நினைக்க எனக்குப் பெருமை யாக இருக்கிறது. பல்லவநாடு உன்னை நன்கு பயன்படுத் திக் கொள்ளவேண்டும். வருங்காலம் உனக்குப் பிரகாசமா

யிருக்கும். பூசான் வமிசத்துத் தொண்டும், தியாகமும் இந் நாட்டுப் பெருமையை இன்னும் உன் மூலமாக உயர்த்த லாம்" என்றார் முதன்மந்திரி உற்சாகத்துடன்.

அவருடைய புகழ்ச்சி, உதயசந்திரனுக்கு நாணத்தை உண்டு பண்ணியது. பேச்சை திசை திருப்பினான்.

"ஐயா, அம்பெய்தவனைப் பிடித்து விட்டீர்களல் லவா?"

"உடனேயே பிடித்து விட்டார்கள். ஆனால் அவனைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றபோது, சதி காரர்கள் மறைந்திருந்து அம்பெய்து அவனைக் கொன்று விட்டார்கள். அவன் இலங்கையிலிருந்து வந்தவன்."

"அவனோடு இலங்கையிலிருந்து வந்திருக்கும் மற்றவர்களைப் பிடித்து விசாரிக்கலாமே?"

"அவன் பிடிபட்டான் என்று தெரிந்ததுமே அவனு டைய மற்ற இரு கூட்டாளிகளும் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டார்கள்."

"ஐயோ, அவர்கள் அகப்பட்டால் அவர்களையும் கொன்றுவிடுவார்களே. ஐயா, இந்தச் சதியே அரண்மனை யில் உருவானதுதான். தயவு செய்து, இதைப் பற்றி எப்படி நானறிந்தேன் என்பதை மட்டும் கேட்காதீர்கள்" என்றான் உதயசந்திரன்.

"அரண்மனையில் உருவான சதிதான் என்று நானும் யூகித்தேன். உன்னை இது பற்றி நான் விசாரிக்கப் போவ தில்லை. தப்பிய இலங்கை வீரர்கள் ஏரியை அடுத்த காட்டுக் குள் ஒளிந்திருந்ததாகவும், என்னுடைய ஒற்றர்கள் பிடித்தி ருப்பதாகவும் சற்று முன்பு செய்தி கிடைத்தது. அவர்கள் என் பொறுப்பில் தாமிருப்பார்கள். சதி பற்றிய விசாரணை வரும்போது அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீயும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சதி பற்றிய விவரம் உனக்குத் தெரியும் என்பது வெளியே தெரிந்தால், உன் உயிருக்கும் ஆபத்து" என்று முதன்மந்திரி எச்சரித்தார்.

அங்கிருந்து முதன்மந்திரி விடை பெற்றபோது, லீனாவிடம், "இவனை உன் பொறுப்பில் விட்டுச் செல்கிறேன். உன்னுடைய கவனிப்பால்தான் இவன் விரைவில் குணமடைய வேண்டும்" என்றார்.

* * *

மேகலா மிகவும் கலக்கமுற்றிருந்தாள். பலவித எண்ணங்கள் மனத்தில் குமைந்து கொண்டிருந்தன.

வீரப்போட்டி அரங்கில் உதயசந்திரனைக் கண்டதிலிருந்தே அவளுடைய மனத்தில் அமைதியில்லை. அரங்கில் அவன் நடத்திய அற்புதமான போர், அவள் நினைவில் தோன்றிக்கொண்டே இருந்தது. அவனுடைய அழகிய மேனியில் வாள் பதிந்து இரத்தம் கொட்டி, அவன் கீழே விழுந்தபோது, அவள் மனம் படபடத்தது. அவன் காப்பாற்றப்பட்டு விட்டான் என்பதை அறிந்த பிறகுதான் அவளுக்கு ஏற்பட்டிருந்த படபடப்பு அடங்கியது.

அரண்மனை வைத்தியரை அனுப்பி வைத்தாள். ஆனால் அதற்குள் முதன்மந்திரியின் வைத்தியர் முந்தி விட்டார் என்பதை அறிந்தபோது அவளுக்கு ஏமாற்றமாயிருந்தது. உதயசந்திரனை அரண்மனைக்கு அழைத்து வந்து தன்னுடைய அந்தரங்க மெய்க்காப்பாளனாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தாள். இரவு முழுவதும் கனவில் உதயசந்திரன் தோன்றிக் கொண்டிருந்தான். அவனை உடனே சந்திக்க வேண்டும் என்னும் துடிப்பு அதிகரித்தது. ஆனால் அவன் எழுந்து நடமாடவே நாலைந்து நாட்களுக்கு மேலாகும் என்பதை அறிந்து தன் ஆவலை அடக்கிக் கொண்டாள். அரங்கில் அவளை அவன்

பார்த்தபோது அவன் முகத்திலிருந்த முறுவல், அவள் இதயத்தைக் கிளறிவிட்டுக் கொண்டேயிருந்தது.

அதே வேளையில் மகாராணி பிரேமவர்த்தினியும் பல எண்ணங்களினால் குழம்பியிருந்தாள். அப்போதுதான் முதன்மந்திரி வந்து சேர்ந்தார். நாட்டின் பிரச்சினைகளும், சொந்த உணர்வுகளும் அவளைப் பாடாய்ப் படுத்தின. முதன்மந்திரி வந்துபோன பிறகு அவளுடைய மனக் கலக்கம் அதிகமாகியது.

இளவரசனுடைய நடவடிக்கைகள், காஞ்சி நகரில் மக்களிடையே அதிருப்தியை விளைவித்து வருவதாக அவளுக்குச் செய்திகள் எட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அவனைக் கண்டிக்கவும் அவள் விரும்பவில்லை. சக்ரவர்த்தியின் முதலாவது பட்டமகிஷியின் மகன், சித்திரமாயன். அவனைக் கண்டித்தால், மாற்றாந்தாய்ப் பொறாமையால் அவனைக் கண்டிப்பதாக அவன் எண்ணி விடுவானோ என்று பயந்தாள். மேலும், சித்திரமாயன்தான் வருங்காலச் சக்கரவர்த்தி. இப்போதையச் சக்கரவர்த்திக்கு வயதாகி விட்டது. விரைவிலேயே சித்திரமாயன் அரியணை ஏறலாம். அவனுடைய அபிமானத்தைப் பெற்றால்தான் வருங்காலத்தில் அவள் செல்வாக்குடன் வாழமுடியும். சித்திரமாயனும் தன் மீது சிற்றன்னை என்ற முறையில் அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறான் என்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

அப்போது சித்திரமாயனை எதிர்பார்த்துத்தான் காத்திருந்தாள். சித்திரமாயன் வந்ததும், முதன் மந்திரி வந்து போனதை அவனிடம் விவரித்தாள். அப்போது சித்திரமாயன் சொன்னான்:

"சின்னம்மா, இந்தக் கிழவர் சாணக்கிய தந்திரம் உள்ளவர். சக்ரவர்த்தி இல்லாத சமயத்தில் உங்களைப் பொம்மை

ராணியாக ஆக்கிவிடப் பார்க்கிறார். அதிகாரம் முழுவதையும் தம் கையில் வைத்துக் கொள்ளத் திட்டம் போடுகிறார்."

"உன்னுடைய நடவடிக்கையால் பல கேடுகள் விளைந்திருப்பதாகச் சொல்கிறார்" என்றார் பிரேமவர்த்தினி.

"நான் என்ன அப்படிச் செய்துவிட்டேன்?"

"ஒரு யவன வணிகருக்குச் சுங்கச் சலுகை கொடுத்திருக்கிறாயாம்."

"கொடுத்தால் என்னவாம்? வீரப் போட்டி நடைபெறுவதற்காகப் பெரும் தொகை கொடுத்தாரே. இல்லையென்றால் நம் அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்தல்லவா செலவு செய்யவேண்டி வந்திருக்கும். அந்த வணிகரின் சலுகைக்காகத்தான் உத்தரவில் அன்று உங்கள் முத்திரையை வாங்கினேன். சின்னம்மா, முதன்மந்திரி தான் ஊர்த் தலைவர்கள் எல்லாரையும் தூண்டிவிட்டிருக்கிறார். சக்ரவர்த்தி இல்லாத சமயத்தில், மக்களைத் தூண்டி கிளர்ச்சி செய்ய வைத்து நம்மைச் சங்கடத்துக்குள்ளாக்க நினைக்கிறார். இதற்கு இரணியவர்மரும் துணையாக இருக்கிறார். கோட்டைத் தளபதி பதவியிலிருந்து அவரை விடுவித்துவிட்டால், அவர் தம்முடைய படையுடன் அவருடைய மண்டலத்துக்குத் திரும்பிவிடுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர், சக்ரவர்த்தி போர்க்களத்திலிருந்து திரும்பி வரும்வரை காஞ்சியில்தான் தங்கியிருக்கப் போகிறாராம். அவர் இங்கிருக்கும் வரை நமக்குத் தொந்திரவுதான். நாம் எச்சரிக்கையாக இல்லையென்றால் நமக்குத்தான் ஆபத்து" என்றான் சித்திரமாயன்.

இதைக் கேட்டதும் பிரேமவர்த்தினி பயந்துபோனாள். "இது உண்மையானால், இப்போதே மந்திரி சபையைக் கலைத்துவிட்டு, வேறு மந்திரி சபையை அமைத்துக் கொள்வோமே" என்றாள்.

"நாமாகக் கலைத்ததாக இருக்கக் கூடாது. அதுவாகவே கலைந்துவிட வேண்டும். இரண்டாவது மந்திரி அச்சுதபட்டர் நம்முடையபக்கம். அவர் முதன் மந்திரியாக வேண்டும் என்று விரும்புகிறார். நேற்றே மந்திரி சபை கலைந்திருக்க வேண்டியது. தப்பிவிட்டது" என்றான், சித்திரமாயன்.

பிரேமவர்த்தினி புரியாமல் விழித்தாள். "நேற்றே கலைந்திருக்க வேண்டுமா?"

சித்திரமாயன் சிரித்தான். "சின்னம்மா, உங்கள் மன அமைதியைக் கெடுத்துக் கொண்டிருக்கும் பேயை நேற்றே ஒழித்து விடத் திட்டம் போட்டேன். தப்பி விட்டாரே" என்றான்.

"ஓ...!" வியப்புடன் கூவினாள், பிரேமவர்த்தினி. "நான் நினைத்தேன், நீதான் ஏதாவது ஏற்பாடு செய்திருப்பாய் என்று" என்றாள். பிறகு, "உன் திட்டம் தோல்வியடைந்துவிட்டதே" என்றாள், வருத்தத்துடன்.

"கொஞ்சம் பொறுங்கள். இவரையெல்லாம் சீக்கிரம் அடக்கி உங்கள் காலில் வந்து விழ வைக்கிறேன்" என்றான், சித்திரமாயன். பிறகு, "உள்துத்தலைவர்களையும், நகரத்தலைவர்களையும் நீக்கவேண்டியது பற்றிய கட்டளையை நம் வாயில் கேட்பாரைக்* கொண்டு வரையச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

"இந்த விஷயத்தில் நாம் அவசரப்பட வேண்டாம். ஒரே சமயத்தில் எல்லாத் தலைவர்களையும் நீக்குவதை விட ஒவ்வொரு தலைவராக மெள்ள மெள்ள நீக்குவது நல்லது" என்றாள், பிரேமவர்த்தினி.

---

* அரண்மனைக் காரியதரிசி

"அதுவும் நல்லதுதான்" என்ற சித்திரமாயன், "நம் முடைய யோகி ருத்திர பரமாச்சாரிக்கும் காஞ்சியில் எதிர்ப்பு இருக்கிறது. சைவர்களும், வைணவர்களும் நேற்று இரவு, கைலாசநாதர் கோயில் திடலில் கூடி எதிர்ப்புத் தெரிவித்துப் பேசியிருக்கிறார்கள்" என்றான்.

"இவர்களுக்கு வேறு வேலை இல்லை. சமணர்களை எதிர்த்து விரட்டினார்கள். பௌத்தர்களை விரட்டினார்கள். இப்போது ருத்திர பரமாச்சாரி அகப்பட்டிருக்கிறார். இதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. மேலும், பரமாச்சாரி வெளியே வந்து பிரசாரம் செய்வது கூடக்கிடையாது. எல்லாம் அவருடைய ஆசிரமத்துக்குள்தாம் பிறகென்ன?"

"ஆசிரமத்துக்கு அவ்வளவு பெரிய தோப்பை மான்ய மாகக் கொடுத்ததையும் எதிர்க்கிறார்கள்."

"நீ அதைப் பற்றி அக்கறை எடுக்க வேண்டாம். கோயில்களுக்கும் நாம் கூடுதலான மான்யங்கள் கொடுத்து விட்டால் அடங்கி விடுவார்கள்" என்றாள்.

சித்திரமாயன் சென்ற பிறகும் பிரேமவர்த்தினியின் மனக்கலக்கம் தீரவில்லை. தான் மகாராணியாக இருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் போது, மக்கள் பயமின்றி எதிர்க்கிறார்களே என்ற எண்ணந்தான் அவளுக்கு மிகுந்த கோபத்தை உண்டு பண்ணியது. தன்னைப் பெண் தானே என்று எல்லாரும் அலட்சியப் படுத்துகிறார்களோ என்ற சந்தேகம் அவள் கோபத்தைக் கிளறியது. தன்னுடைய ஆட்சியில் அவள் எவ்வித நடவடிக்கை எடுத்தாலும், சக்ரவர்த்தி குறைகூற மாட்டார் என்ற தைரியம் அவளுக்கு இருந்தது. அவளை எதிர்த்துக் கண்டிக்கும் துணிவு, சக்கரவர்த்திக்கு கிடையாது. அவளுடைய கண் வீச்சுக்கு நொடிப்பொழுதில் அவர் தோற்றுப் போவார். அவருடைய பலவீனம் எத்தகையது என்று அவளுக்கு நன்கு தெரியும்.

இப்போது அவளுடைய கவலையெல்லாம், வருங் காலத்தில் தன்னுடைய செல்வாக்கை எப்படி நிலை நிறுத்துவது என்பதைப் பற்றித்தாம். சில மாதங்களாக ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தவளுக்கு, அதனுடைய போதை நன்கு ஏறியிருந்தது.

19. அந்தப்புர விருந்தாளி

உதயசந்திரனின் காயம் குணமடைந்து நடமாடும் தெம்பைப் பெற்று விட்டான். ஆனால் சற்று சோர்வுடனிருந்தான். இரண்டு நாட்களில் பௌத்த கடிகைக்குப் போவதாக முடிவு செய்தான். அவன் போகப் போவது லீனாவுக்கு மனவேதனையைக் கொடுத்தது.

"நீங்கள் இங்கிருந்தபடியே கடிகையில் பணிபுரிய முடியாதா?" என்று கேட்டாள்.

"இங்கேயே இருப்பதா?" என்று கேட்டுச் சிரித்தான் உதயசந்திரன். "அதெப்படி? நான் அந்நியன், பெங்லீக்கும் எனக்கும் என்ன உறவு?" என்றான்.

லீனாவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. கண்கள் கலங்கின. அவள் என்ன சொல்ல நினைக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட உதயசந்திரனின் மனம் மிகவும் நெகிழ்ந்து விட்டது.

குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்தவன். அந்நியோன்யமான பாசத்தை அவன் அனுபவித்ததில்லை. அவன் காயமடைந்து படுத்திருந்தபோது, லீனா காட்டிய பரிவும் பாசமும் அவனுள்ளே புத்துணர்வை ஏற்படுத்தியிருந்தன. அவளுடைய பணிவிடையின்போது அவளிடம் தென்பட்ட அக்கறையும், கனிவும் அவன் மீது அவள் எவ்வளவு தூரம் அன்பு கொண்டுவிட்டாள் என்பதை

உணர்த்தின. அவனுடைய பிரிவை அவள் தாளமாட்டாள் என்பதை அவன் புரிந்துகொண்ட போது, அந்தரங்கமான அன்பின் சக்தியை உணர்ந்துகொண்டான். அவன் கேட்டான்: "இது உன்னுடைய வீடா, நான் எப்போதும் தங்குவதற்கு?"

"நமக்கென்று ஒரு வீடு கட்டிக்கொள்வோம்" என்றாள் லீனா.

அவள், அவனையும் இணைத்து, பன்மையில் சொன்னதும், அந்தச் சொல்லில் தொனித்த உரிமையின் அழுத்தத்தை உணர்ந்து உள்ளம் சிலிர்த்தான். அவன் சொன்னான்: "இன்னும் எனக்கென்று நிரந்தரமாக ஒரு பணியை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போதைக்கு பெளத்த கடிகையில் இருப்பேன். அடிக்கடி இங்கே வருவேன். தைரியமாக இரு."

"மருக்கொழுத்துத் தோட்டம் போட வேண்டியதற்கான ஏற்பாடு நடக்கிறது. டெங்லீ தாத்தா, எனக்காக ஒரு பெரிய தோட்டம் போட்டுத் தர சம்மதித்திருக்கிறார். நான் கொண்டு வந்திருக்கும் செடிகளும், விதைகளும் பெரிய தோட்டத்துக்குப் போதும். நீங்கள் அதைக் கண்காணிக்கலாமே" என்றாள் லீனா.

"எனக்கு அத்துறையில் ஒன்றும் தெரியாதே?"

"நான் கற்றுத் தருகிறேன்" என்றாள், உற்சாகத்துடன்.

"கடைசியில் என்னை ஒரு வணிகனாக மாற்றி விடுவது என்று தீர்மானித்து விட்டாயா?" என்று கூறிச் சிரித்தான். அவளும் சிரித்தாள். மந்தகாசமான சிரிப்பு அவனைப் பரவசப்படுத்தியது. அவளுடைய கையைப் பற்றி தன் மார்பின் மீது வைத்து அழுத்திக்கொண்டான். ஆழ்ந்த அன்பின் ஸ்பரிசம், இனிமையைப் பொழிந்து கொண்டிருந்தது.

அப்போது வாசலில் ஆள் அரவம் கேட்கவே, உதயசந்திரன் எழுந்து வெளியே எட்டிப் பார்த்தான். வாசலிலிருந்த மரத்தின் நிழலில் ஓர் அலங்காரப் பல்லக்கு இறங்கியிருந்தது. ஒரு வீரன் குதிரையிலிருந்து இறங்கி, வீட்டை நோக்கி, வந்தான். மேகலாவின் திருமுகத்தை உதயசந்திரனிடம் கொடுத்தான். அந்த ஓலையில் உதய சந்திரனை அரண்மனைக்கு வந்து போகுமாறு பணித்து, மேகலாவின் முத்திரை இடப் பெற்றிருந்தது.

"தேவியார் தங்களை அழைத்து வர பல்லக்கு அனுப்பியிருக்கிறார்கள்" என்றான் குதிரை வீரன்.

உதயசந்திரன் பரபரப்படைந்தவனாய், "ஏன்?" என்று கேட்டான்.

"தெரியாதய்யா. சின்னராணியார் தங்களைத் தக்க மரியாதையுடன் அழைத்து வர வேண்டும் என்று கட்டளை யிட்டிருக்கிறார்கள்" என்றான் வீரன்.

உதயசந்திரன் லீனாவிடம், "நான் போய்விட்டு உடனே திரும்பிவிடுகிறேன். ராஜன் நம்பூதிரி வருவான். இருக்கச் சொல். விரைவில் வந்துவிடுவேன்" எனறு கூறி விட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான்.

உதயசந்திரனின் பல்லக்கு அரண்மனையின் அந்தப் புரத் தோட்டத்தில் இறங்கியது. பல்லக்கிலிருந்து அவன் இறங்கியதுமே இரு தாதிகள் அவனை வரவேற்று, அந்தப் புரத்தினுள் அழைத்துச் சென்றனர்.

அந்தப்புரத்தின் அமைப்பும், அலங்காரங்களும், அவனுக்கு திகைப்பை ஊட்டின. வியந்தவாறே தாதிகளைத் தொடர்ந்து சென்றான். அவனை மேகலாவின் அறைக்குள் அனுப்பிவிட்டு தாதியர்கள் இருவரும் வெளியே நின்றனர்.

உள்ளே சென்ற உதயசந்திரன், அலங்கார ஆசனம்

ஒன்றில் மேகலா ஒய்யாரமாகச் சாய்ந்திருந்ததைக் கண்டு சற்றுத் தயங்கி நின்றான்.

"வீரனே, உள்ளே வா" என்ற அழைப்பு அவனுடைய கூச்சத்தைத் தணித்தது.

அவளை அணுகி தலை குனிந்து வணங்கினான். அவனுக்கு ஓர் ஆசனத்தைக் காட்டி அமரச் சொன்னாள். எதிரே அமரக் கூசியவனாய் மௌனமாக நின்றான்.

"வீரனே, நீ இப்போது என்னுடைய விருந்தாளி. கூசாமல் இப்படி உட்கார்" என்றாள் மேகலா.

"இப்படியே நிற்கிறேன், சின்னராணி அவர்களே" என்றான். சொற்கள் தடுமாறின.

"வீரனே, விருந்தாளியை உபசரிக்க வேண்டியது என் கடமை. கூசாமல் இப்படி அமரலாம்" என்றாள் மேகலா. அவள் முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது. உதயசந்திரன் கூச்சத்துடன் ஆசனத்தின் விளிம்பில் அமர்ந்து கொண்டான்.

"உடல் நலமாகிவிட்டதா? அன்று அரங்கத்தில் நீ விழுந்த போது நான் மிகவும் பதறிப்போனேன்" என்றாள் மேகலா.

"நலம்தான், சின்னராணி அவர்களே" என்று கூறியவனின் பார்வை, அவளுடைய கண்களைச் சந்தித்தது. ஒரு கணம் அவன் உடல் சிலிர்த்து அடங்கியது. அவளுடைய பார்வை அவனுள் நுழைந்து, துழாவுவதுபோல் உணர்ந்தான்.

ஓ...! சின்ன ராணியின் கண்களில் தாம் எவ்வளவு காந்தம்! ஒரு பார்வைக்கு இவ்வளவு ஆகர்ஷண சக்தி இருக்குமா...?

"நீ அன்று காட்டிய திறமை, என் நினைவில் நிற்கின்றது. என்னால் மறக்கவே முடியாது" என்றாள் மேகலா.

"நன்றி, தேவியாரே" என்றான் உதயசந்திரன். அவளுடைய புகழ்ச்சி, கூச்சத்தை உண்டாக்கியது.

அவனைப் பற்றி விசாரித்தாள். அவனுடைய வரலாற்றைக் கேட்டாள். அவன் கூறியவைகளை மிக்க ஆவலோடு கேட்டாள். அந்தச் சமயத்தில் அவள் காட்டிய ஆர்வமும், பேச்சின் குழைவும் உதயசந்திரனுக்கு உள்ளூர ஏதோ ஒருவிதச் சலனத்தை உண்டுபண்ணின. அவளுடைய கண்களில் தெரிந்த ஆர்வத்தின் துடிப்பு, அவனைத் திணறவைத்தது. அவனுடைய உள் மனம், அவனை எச்சரிப்பது போல் உணர்ந்தான்.

திடீரென்று அவள் சொன்னாள்: "வீரனே! கடிகைப் பணியைவிட உயர்ந்த பதவியை வகிக்கத் தகுந்தவன் நீ. விருப்பம் இருக்குமானால் உனக்குத் தகுந்த பதவி தருகிறேன்."

உதயசந்திரன் உள்ளுணர்வு எச்சரித்தது. "கடிகையில் பணிபுரிவது எனக்குத் திருப்தியாகவும் இருக்கிறது, மனதுக்கு அமைதியாகவும் இருக்கிறது" என்றான்.

"உன்னுடைய திறமையைக் கண்ட பிறகு, உனக்குத் தகுந்த பதவியை அளித்து, உன்னைக் கௌரவிக்க வேண்டும் என்று எண்ணினேன். வீரனே! உன்னை என் அருகிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய அந்தரங்க மெய்க்காப்பாளனாக நீ பணிபுரியலாமே" என்று கூறிவிட்டு மேகலா அவனை ஆவலுடன் பார்த்தாள். பார்வையின் காந்தம், அவனைச் சூழ்ந்து பரவி அழுத்துவது போலிருந்தது.

"சின்ன ராணி அவர்களே, நான் அவ்வளவு பொறுப்

புள்ள பதவிக்கு அருகதையுள்ளவனல்லன்" என்றான் உதயசந்திரன் பதற்றத்துடன்.

மேகலா கலகலவெனச் சிரித்தாள்.

"வீரனே, ஏன் இப்படிப் பதறுகிறாய்? என்னருகில் எனக்குக் காவலாக இருப்பது அவ்வளவு பயங்கரமானதா?

"தங்களுடைய பாதுகாவலனாகப் பணி புரிய பாக்கியம் செய்திருக்கவேண்டும். ஆனால், அதற்கு நான் தகுதியுள்ளவனல்லன்."

"உன்னுடைய தகுதி எனக்குத் தெரியும். நீ என்னருகில் இருந்தால் எனக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்."

"தேவியாரே, மன்னித்தருளவேண்டும். என்னுடைய மனம் இந்த மாதிரியான பணியில் ஈடுபடாது. கடிகையின் பணியில் நான் அமைதியுடன் வாழ்கிறேன்."

"அரண்மனையில் உன் அமைதி கெட்டுவிடும் என்று எண்ணுகிறாயா?"

"நான் காடுகளிலும் குகைகளிலும் துறவிகளுக்கிடையில் வாழ்ந்து பழக்கப்பட்டவன். அரண்மனையின் சூழ் நிலைக்கு என் மனம் இசைந்துவராது."

"வீரனே! அவசரப்பட்டு நீ முடிவுக்கு வரவேண்டாம். என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து விட்டேன். நீ ஏற்றுக்கொண்டால், என் மனம் மிகவும் மகிழ்ச்சி அடையும். உனக்கும் நல்ல வருங்காலம் அமையும்" என்று கூறிய வாறே மேகலா கைகளைத் தட்டினாள்.

ஒரு தாதி பெரிய தாம்பாளத்தில் மலர்களும், பழங்களும் வைத்து ஏந்தியபடி உள்ளே வந்தாள்.

"வீரனே! உன் பெயர் உதயசந்திரன்தானே? உன்

பெயரைப் போல அழகாகப் பேசுகிறாய். போட்டியில் அறிவித்த பரிசை அளிக்கவே உன்னை இங்கே வரவழைத்தேன்" என்றாள் மேகலா.

"போட்டியில் நான் காயம்பட்டு வீழ்ந்துவிட்டேனே" என்றான் உதயசந்திரன்.

"விதிமுறைகளுக்கு மாறாக, உன்னைப் பின்புறமிருந்து தாக்கிவிட்டான். இல்லையென்றால், அவர்களை நொடிப் பொழுதில் வீழ்த்தியிருப்பாயே. இப்போது தரும் பரிசு, என் அன்புப் பரிசு. பெற்றுக் கொள்" என்று கூறிய மேகலா, தாதியின் கையிலிருந்த தாம்பாளத்திலிருந்து பட்டுப்பீதாம்பரம் ஒன்றை எடுத்துப் பிரித்து, அவனுடைய தோளைச் சுற்றிப் போர்த்தினாள்.

அவளை மிக நெருங்கி நின்று, பீதாம்பரத்தைப் போர்த்தியபோது, அவளுடைய பெருமூச்சின் சூட்டையும், மேனியின் சுகந்தத்தையும் உணர்ந்தான். அவளுடைய வாயிலிருந்து வீசிய தாம்பூல வாசனையைக் கூட நுகர முடிந்தது. அவனுடைய உடல் சற்று நடுங்கியது. அவ்வளவு உயர்ந்த மரியாதையைத் தாள முடியாமல் நடுங்கினான்.

பீதாம்பரத்தை அவனுடைய தோள்களைச் சுற்றிப் போர்த்திவிட்டு, தாம்பாளத்திலிருந்த ஆயிரம் பொற்காசுகள் அடங்கிய பட்டுப் பையை எடுத்துக் கொள்ளும் படிக் கூறினாள். நடுங்கிய கரங்களால் பண முடிப்பை ஏற்றுக்கொண்டான்.

"வீரனே, உன்னுடைய திறமைக்கு இவையெல்லாம் அற்பமே" என்றாள் மேகலா.

"இந்தப் பொருட்களை விடத் தாங்கள் என் மீது காட்டும் அன்பே எனக்குப் பெரிது" என்றான் உதயசந்திரன்.

மேகலாவின் முகம் மலர்ந்தது. மந்தகாசமாகச்

சிரித்தாள். "இனிமையாகப் பேசுகிறாய்" என்றாள். பிறகு, "நீ இந்த அரண்மனைக்கு இதற்கு முன் வந்திருக்கிறாயா?" என்று கேட்டாள்.

உதயசந்திரன் திடுக்கிட்டான். சுரங்கப்பாதையில் வந்து பார்த்ததை அறிந்திருப்பாளோ என்ற எண்ணம் தோன்றியதும், பயத்தால் அவன் உடல் சிலிர்த்தது. "இல்லை" என்றான்.

"உதயசந்திரன், உன்னை இதற்கு முன் எங்கோ பார்த்தது போலிருக்கிறது. ஒரு வேளை போன ஜென்மத்தில்கூட இருக்கலாமோ என்னவோ" என்று கூறிக் கலகலவெனச் சிரித்தாள்.

அவனுடைய பெயரை அவள் உச்சரித்ததும், உதயசந்திரன் துணுக்குற்றான். அவள் உச்சரித்த விதத்திலிருந்து அவனுடைய பெயரின் இனிமையில் அவள் லயிப்பதாக உணர்ந்தான்.

"உதயசந்திரன், நீ இங்கே பணி புரிவதைப் பற்றி நன்கு சிந்தித்து இரண்டு நாளில் முடிவு சொல். அவசரம் இல்லை" என்று கூறிவிட்டு, அவனிடம் முத்திரையிட்ட வெள்ளி மோதிரம் ஒன்றைக் கொடுத்தாள். "இங்கே நீ வரும்போது இதைக் காட்டினால், உன்னைச் சோதிக்காமலே உள்ளே வர அனுமதிப்பார்கள். பத்திரமாக வைத்துக்கொள்" என்றாள்.

உதயசந்திரன், மோதிரத்தை வாங்கியபோது அவன் கரங்கள் சிறிது நடுங்கின. மேகலா, ஒரு காவல்வீரனை அழைத்து, "இவனை அழைத்துப்போய் விட்டுவிட்டு வா" என்று பணித்தாள். பிறகு, உதயசந்திரனிடம் திரும்பி "சென்று வா, வீரனே" என்றாள்.

அவன் அவளை வணங்கிவிட்டுக் காவல் வீரனைத் தொடர்ந்து வெளியே நடந்தான். அரண்மனையை விட்டு

வெளியே வந்த பிறகுதான் அவனுடைய மனம் நிதானத்துக்கு வந்தது. பெருவெள்ளத்தின் சூழலில் அகப்பட்டு மூச்சுத் திணறித் தத்தளித்தவனைப் போல் திணறிவிட்டான்.

மேகலாவைப் பற்றிய நினைவு, அவனைத் தொடர்ந்து வந்தது– "சென்றுவா, வீரனே..."

நீ எப்போது திரும்ப வருவாய் என்று கேட்பது போலிருந்ததே. அப்போது அவளுடைய கண்களில் ஒருவிதத் தவிப்புத் தெரிந்ததே. அவளுடைய பார்வையின் இயல்பான தன்மையே அப்படித்தானா...?

ஓ! எவ்வளவு உயர்ந்த மரியாதை அவனுக்கு அரண்மனையில் கிடைத்துவிட்டது! ஒரு சாதாரண பிரஜை, கனவிலும் எதிர்பார்க்க முடியுமா, ஒரு ராணி தன் கையாலேயே பட்டுப் பீதாம்பரத்தைப் போர்த்துவாளென்று... தாராளமாக அந்தப்புரத்தினுள் சென்று வருவதற்கு முத்திரை மோதிரம் தந்தாளே...

இவ்வளவு மரியாதை எனக்கு ஏன்? இது வெறும் மரியாதையாகத் தெரியவில்லையே. என்னிடம் ஏதோ எதிர்பார்த்துச் செய்யும் பணிவிடை மாதிரியல்லவா தோன்றுகிறது. ஒரு ராணிக்கு நான் எந்தவிதத்தில் உதவ முடியும்...? அவளுடைய பார்வை... அதில் தெரிந்த தாபம்... பேச்சின் குழைவு...

அப்படியும் இருக்குமோ...? உதயசந்திரா, ஜாக்கிரதை.

ராஜநாகத்தின் வழுவழுப்பான அழகிய உடல், நினைவில் தோன்றியது. கண்களைப் பயத்தால் மூடிக் கொண்டான்.

உதயசந்திரன், புரிந்தும் புரியாமலும் குழம்பினான். திரும்பிச் சென்று லீனாவை கண்ட பிறகு, அவனுடைய மனம் அமைதியடைந்தது.

20. மகா சுகம்

முதன் மந்திரி தரணிகொண்ட போசரின் மாளிகையில், இரவு கோட்டத் தலைவர்கள் கூடியிருந்தார்கள். வீரப்போட்டியை முன்னிட்டு வந்த தலைவர்கள், மறுநாள் தங்கள் கோட்டங்களுக்குச் செல்வதாக இருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் இரணியவர்மரும் இருந்தார்.

காஞ்சி நகரில் பல பிரச்சினைகள் தோன்றியிருந்தன. ஆங்காங்கே பலர், இரகசியமாகக் கைதுசெய்யப்பட்டு பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். மகாராணியின் உத்தரவுகளுக்கு அதிருப்தி தெரிவிப்பவர்கள் என்று யார் மீதெல்லாம் சந்தேகம் தோன்றியதோ அவர்கள் எல்லாரும் சிறை பிடிக்கப்பட்டிருந்தனர். ஏரிவாரியத் தலைவர் ஒருவரும், தோட்டவாரியத் தலைவர் ஒருவரும் கைதானவர்களில் முக்கியமானவர்கள். ஆங்காங்கே மக்கள் சிறுசிறு கலகங்களை உண்டுபண்ணியதற்கு அந்தத் தலைவர்கள் ஆதரவு கொடுத்தார்கள் என்ற சந்தேகத்தின் மீது சிறைபடுத்தப்பட்டிருந்தனர். அதனால் மக்களிடையே பீதி குடிகொண்டிருந்தது. எந்தச் சமயத்திலும் யாரும் சிறைக்கு அனுப்பப்படலாம் என்ற பயம், நகர் முழுவதும் பரவியிருந்தது. பல ஊர்களின் தலைவர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

இவையெல்லாவற்றையும் பற்றி முதன் மந்திரியும், மற்றவர்களும் ஆலோசனை நடத்தினர். மகாராணியின் சர்வாதிகாரமும், சித்திரமாயனின் தலையீடும் நாட்டின் நலனைக் கெடுத்துக்கொண்டிருந்ததைப் பற்றி மிகுந்த கவலைகொண்டனர்.

"விரைவில் மகாராணி ஆட்சியில் பெரும் மாறுதலை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறார் என்றே அஞ்சுகிறேன், ஊர்த் தலைவர்களையும், நகரத் தலைவர்களையும் நீக்கி

விட்டு, அரசே அந்தத் தலைவர்களை நியமிப்பதாக ஒரு திட்டம், மகாராணி வகுத்திருக்கிறார்" என்றார், முதன் மந்திரி.

"அப்படியா...?" எல்லோரும் பதறியபடி கூவினர். "தலைவர்களை நீக்குவதா? ஆட்சியின் அமைப்பும், அமைதியுமே சீர்குலைந்துவிடுமே" என்றார், குன்றக் கோட்டத் தலைவர்.

"அதைப்பற்றி மகாராணி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. தம்முடைய மனசாட்சிப்படி நடப்பதாகக் கூறுகிறார்."

"மகாராணியின் மனசாட்சி, மக்களின் சுதந்திரத்தை பறிக்கும்படியா கூறுகிறது?" என்று கோபத்தில் இரைந்தார், இரணியவர்மர்.

"மகாராணியின் மனசாட்சி என்னவென்றே புரிந்து கொள்ளமுடியவில்லையே. இப்போது அவளுடைய மனச்சாட்சியின் வாகனம் அச்சுதபட்டர்தாம்" என்று கூறிச் சிரித்தார், முதன் மந்திரி. பிறகு சொன்னார். "போரைக் காரணம் காட்டி, மேலும் சில வரிகளை விதிக்க முடிவு செய்திருக்கிறார். அரசாங்கப் பண்டாரத்தில் போதிய செல்வம் இருக்கிறது. அரண்மனையின் ஊதாரிச் செலவுக்கு ஒரு வழியைக் கையாள உத்தேசித்திருக்கிறார்கள். இதற்கு அச்சுதப் பட்டரும் துணையிருக்கிறார். திருமணத்துக்குக் கூட வரிவிதிக்க முடிவாகியிருக்கிறது."

"திருமணத்துக்கு வரியா? என்ன விந்தையாக இருக்கிறது! காதலிக்கக் கூட பல்லவ நாட்டில் வரி செலுத்த வேண்டும் போலிருக்கிறது" என்று இரைந்தார், களத்தூர் கோட்டத் தலைவர்.

"மகாராணியாருக்கு திருமணத்தின் மீது ஏன் இவ்வளவு கோபமோ?" என்று குன்றக் கோட்டத் தலைவர் கேட்டார்.

"ஜனப்பெருக்கம் ஏறுவதால் நாட்டின் பிரச்னைகள் கூடுகிறதாம். திருமணத்துக்கு வரிவித்தால், திருமணம் நடை பெறுவது குறையலாம்; அதனால் குழந்தை பெறுவதும் குறையும் என்று நினைக்கிறார்கள்" என்றார் முதன் மந்திரி.

"திருமணம் நடைபெறுவதற்கு இடைஞ்சல் ஏற்பட் டால், திருட்டுத்தனமாக குழந்தைகள் பெறுவது அதிகமாகி விடுமே. பல்லவ நாடு முழுவதும் திருட்டுக் குழந்தைகளாக நிரம்பட்டும் என்று விரும்புகிறார்களா மகாராணி?" என்று கேட்டார், இரணியவர்மர். பிறகு, "மக்கள் திருமண வரியை ஏற்பார்களா? ஏற்கெனவே பொருமிக்கொண்டிருக்கிறார் கள். புனிதமான திருமணத்துக்கும் வரி என்றால் கொதித் தெழுவார்கள்" என்றார்.

"கடிகைகளுக்கும் வரிவிதிக்க அச்சுதபட்டர் யோசனை கூறியிருக்கிறார். கடிகையில் கல்வி கற்கும் ஒவ் வொரு சீடனுக்கும் தலைக்கு இரண்டு கழஞ்சு காசுகள் வரி செலுத்த வேண்டும் என்று வடமொழிக் கடிகைக்கு மட்டும் நேற்று உத்தரவு போயிருக்கிறது" என்றார், முதன் மந்திரி.

"எதற்காக வடமொழிக் கடிகைக்கு மட்டும் வரி?" என்று ஒரு கோட்டத் தலைவர் கேட்டார்.

"அச்சுதபட்டரின் மகன் வடமொழிக் கடிகையில் மாணவனாக இருந்தான். அங்கே அவன் ஏதோ ஒழுக்கக் கேடாக நடக்கவே, கடிகையைவிட்டு அவனை நீக்கி விட்டார்கள். அந்தக் கோபந்தான், அச்சுதப்பட்டருக்கு" என்றார், முதன்மந்திரி. பிறகு சொன்னார்: "கடிகைத் தலைவர் கோபம் கொண்டிருக்கிறார். கடிகை மாணவர்கள் இன்று காலையில் அரண்மனையின் முன்பு கூடி, ஆர்ப் பாட்டம் செய்திருக்கிறார்கள். காவல் வீரர்கள், குதிரையில் வந்து கலைத்ததில் ஒரு மாணவனுக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. இரண்டு மாணவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்திருக்கிறார்கள்."

"முதன் மந்திரி சம்மதித்தால் இப்போதே என் படையை ஏவிச் சிறைப்பட்டிருப்பவர்களை விடுவித்து விடுகிறேன்" என்றார், இரணியவர்மர் கோபத்துடன்.

"பொறுங்கள். அப்படி ஏதும் அசம்பாவிதம் தலை நகரில் நேர்ந்துவிடக் கூடாது. உங்களுடைய படை மோதுமேயானால், உள்நாட்டுக் கலகமே தோன்றிவிடும்" என்றார், மந்திரி.

"நாம் இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு சும்மாயிருந்தால், நாளை சக்ரவர்த்தி திரும்பியதும் நம்மீதுதான் குறை கூறுவார். போர்க்களத்துக்கு ஒரு தூதுவனை அனுப்பி, சக்ரவர்த்திக்கு இங்குள்ள நிலைமையை எடுத்துச் சொன்னால் நல்லது. முதன் மந்திரியார் அதற்கு ஏற்பாடு செய்யலாம்" என்றார், இரணியவர்மர்.

இந்த யோசனையை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். கூட்டம் முடிந்து எல்லாரும் விடைபெற்றபோது முதன் மந்திரி சொன்னார்: "தலைநகரில் நிலைமை சரியில்லை. ஏதாவது குழப்பம் நேரலாமோ என்று ஐயுறுகிறேன். உங்களுடைய உதவி தலைநகருக்கு எந்தச் சமயத்திலும் தேவைப்படலாம். எப்போதும் தயாராகவே இருங்கள்."

"முதன் மந்திரி அவர்களுக்கு எங்கள் துணை எப்போதும் இருக்கும்" என்று உறுதி கூறி, எல்லாரும் விடைபெற்றனர். இரணியவர்மர் கடைசியில் விடைபெற்றபோது, "நீங்கள் பிடித்து அனுப்பிவைத்த இலங்கைச் சதிகாரர்களை என்ன செய்வது?" என்று கேட்டார்.

"உங்கள் வசமே பத்திரமாக இருக்கட்டும். இவர்களை வெளியில் விட்டால் இவர்களுடைய உயிருக்கு ஆபத்து. இவர்கள் நம் வசமிருக்கிறார்கள் என்பது அரண்மனைக்குத் தெரியாது. அரண்மனை வீரர்கள் இன்னும் இவர்களைப் பல்லவ நாடு முழுவதும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இது

பற்றிய விசாரணைக்கு, மன்னர் வந்ததும் ஏற்பாடுகளை விரைவில் செய்வேன். அப்போது இவர்கள் பயன்படுவார்கள்" என்றார், முதன் மந்திரி.

* * *

உதயசந்திரன் பூரணமாகக் குணமடைந்து பௌத்த கடிகைக்குச் சென்று விட்டான். டெங்லீகூடச் சொன்னார். "தம்பீ, நீ இங்கேயே தங்கியிருந்து, கடிகைக்குப் போய் வாயேன். நீ எங்களோடிருந்தால் எங்களுக்கும் மகிழ்ச்சியாயிருக்கும், லீனாவின் துக்கம் கொஞ்சம் குறையும்" என்றார்.

"சில காலம் நான் கடிகையிலேயே இருக்கிறேன். அடிக்கடி நான் இங்கே வந்துபோவேன்" என்றான், உதயசந்திரன்.

"தம்பீ, லீனா மனத்தில் என்ன நினைக்கிறாள் என்பதை நான் ஓரளவு புரிந்து கொண்டேன். உன் மனசு தான் தெரியவேண்டும்" என்றார், டெங்லீ.

உதயசந்திரன், நாணத்துடன் சிரித்தான். டெங்லீ சொன்னார்: "எதையும் என்னிடம் சொல்லக் கூச்சப்படாதே. உன்னை என் மகனைப் போல எண்ணியிருக்கிறேன். நீ சம்மதித்தால் இந்தச் சீனத் தோட்டுக் குள்ளேயே உங்கள் இருவருக்கும் அழகான வீடு கட்டித் தருகிறேன்."

"ஐயா, உங்களுடைய அன்புக்கு எப்படி நான் நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. நானும் லீனாவும் சந்தித்த விதமே கடவுளுடைய செயல்தான். நான் நல்ல பதவியில் அமர்ந்ததும் மற்ற விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கலாம் என்றிருக்கிறேன்" என்றான், உதயசந்திரன்.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை உதசயந்திரன் லீனாவைக் காணவந்தான். அவனுடைய வரவு ஒன்றுதான் அவளுக்குத் தெம்பளித்துக் கொண்டிருந்தது.

பௌத்த கடிகையில் பணிபுரிந்ததில், உதயசந்திரனின் பொழுது கழிந்தது. மாலை வேளையில், ராஜன் நம்பூதிரி, தவறாமல் அவனைக் காணச் சென்றான். ஒரு நாள், மாலை, உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது, உதயசந்திரன், "வடமொழிக் கடிகைக்கு மட்டும் வரி விதித்திருக்கிறார்களாமே, ஏன்?" என்று கேட்டான்.

"தமிழ்க் கடிகைகள் வளர வேண்டுமாம், அதற்காக வடமொழிக் கடிகைக்கு வரியாம்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"வடமொழிக் கடிகையை ஒடுக்கித்தான் தமிழ்க் கடிகையைக் காப்பாற்ற வேண்டுமா? என்னமுடத்தனம்."

"உலகப் புகழ்பெற்ற கடிகை இது. இந்தக் கடிகை தோன்றி கிட்டத்தட்ட எண்ணூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்தக் கடிகை, காஞ்சியிலிருப்பது, காஞ்சிக்கே பெருமை. எங்கள் கடிகைத் தலைவர் எதிர்ப்புத் தெரிவித்தபோது, கடிகையை மூடி விடும்படி செய்து விடுவதாக இளவரசன் மிரட்டினானாம். இரண்டு மாணவர்களை சிறையிலிட்டிருக்கிறார்கள். ஒருவனுக்கு மண்டையில் காயம்."

"கடிகையின் பெருமையை உணராத மகா மூடர்களாயிருக்கிறார்களே" என்றான், உதயசந்திரன்.

"எங்கள் மாணவர்கள் சிறைப்பட்டதை அறிந்ததும் எங்கள் தலைவர், கடிகையை வேறு நாட்டுக்கு மாற்றி விடப் போவதாக எச்சரித்தார். அதற்கு அச்சுதப்பட்டர் என்ற மந்திரி, 'இன்னொரு நாட்டுக்கு, கடிகை மாறுவது பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. இந்தக் கடிகை போய் விடுவதால் ஒன்றும் குடி முழ்கிப் போய்விடாது' என்றாராம்."

"ஒரு மந்திரியா இப்படி முடத்தனமாக பேசியிருக்கிறார்?"

"எங்கள் கடிகைக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை அறிந்த பாண்டிய மன்னரும், சோழ மன்னரும் கடிகையைத் தங்கள் நாட்டில் வரவேற்பதாகக் கூறி, தூதர்களை அனுப்பியிருக்கிறார்கள்."

"ஐயோ, உங்கள் தலைவர் சம்மதித்து விட்டாரா?"

"நல்ல வேளையாக சம்மதிக்கவில்லை. முதன்மந்திரி தரணிகொண்ட போசர், இன்று எங்கள் கடிகைக்கு வந்து தலைவரைச் சமாதானப்படுத்தியிருக்கிறார். வந்த தூதர்களை உடனே நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டிருக்கிறார். நல்ல வேளை, முதன்மந்திரி தக்க சமயத்தில் காப்பாற்றினார். இல்லையென்றால், கடிகை பாண்டிய நாட்டுக்கோ, சோழ நாட்டுக்கோ போய்விடும்" என்றான் ராஜன் நம்பூதிரி. "மாணவர்களையும் விரைவில் சிறையிலிருந்து விடுவிக்க ஆவன செய்வதாக முதன்மந்திரி வாக்குறுதி கொடுத்திருக்கிறார்" என்றான்.

"பதவியில் மூடர்களும், வெறியர்களும் இருந்தால் இப்படித்தான் அருமை பெருமை தெரியாமல் நடந்து கொள்வார்கள்" என்றான் உதயசந்திரன். பிறகு, "முட்டாள் ராஜகுமாரனுக்கு அதி முட்டாள் மந்திரி யோசனை கூறினால் எப்படியிருக்கும்" என்றான்.

"அரசாட்சியின் மூல தத்துவங்களையே புரிந்து கொள்ளாதவர்கள் ஆளவந்தால், இப்படித்தான் குழப்பத்தை ஏற்படுத்தி விடுவார்கள். ஆட்சியில் இருப்பவருக்கு மக்களுடைய ஆதரவுதான் மிகவும் முக்கியம். எவ்வளவு சங்கடப் பட்டாவது அதைப் பெற முயல வேண்டும். மகாராணி அதைச் செய்வதை விட்டுவிட்டு, ஒரேயடியாக மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறாள்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"ஆனால், நாட்டில் புதிதாக ஏதாவது சட்ட திட்டங்களைப் புகுத்தும் போது, மக்கள் எதிர்ப்பார்களே. ஒரே

சமயத்தில் சட்டங்களையும் புகுத்தி, மக்களின் அபிமானத்தையும் பெறமுடியாதல்லவா?" என்றான், உதயசந்திரன்.

"அதில் சங்கடம் ஒன்றுமில்லை. மக்களை ஏமாற்றுவது எளிது. சுதந்திரத்தின் நிழலை மட்டும் கொஞ்சம் காட்டி, மக்களை ஏமாற்றிவிடலாம்."

"எல்லாருமா ஏமாறுவார்கள்?"

"அறிவாளிகள் ஏமாறமாட்டார்கள். ஆனால், அப்படிச் சிந்திப்பவர்கள், கொஞ்சப் பேர்கள்தாமே. அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அவர்களை ஒழித்து விட்டால் போதும்."

"ஓ...அதற்கு மனசாட்சி இடம் கொடுக்காதே. ஈவிரக்கமின்றி, நல்லவர்களை அழிக்க மனம் இடம் தருமா?"

"ஆட்சியிலிருப்பவர்கள் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி தங்கள் குணங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான். ஒரு காரியத்தில் வெற்றி பெறுவதற்காகச் சிறந்ததாகத் தான் மதிக்கும் லட்சியங்களைக் கூடக் கைவிட நேரலாம். மனிதனுடைய கொள்கைகளைவிட, சந்தர்ப்பங்கள்தாம் வலுவுள்ளவை. வெற்றி வேண்டுமானால், மகாராணி, தன்னுடைய சொந்த லட்சியங்களையும், மனசாட்சியையும் கைவிடத் துணிய வேண்டும். முடிவு நல்லதாயிருந்தால், வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. வெற்றி பெற்ற பிறகு, யாரும் மகாராணியைக் குறைகூறமாட்டார்கள்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"அரியணையிலிருப்பவள் கடுமையாக நடந்து கொண்டால், மக்களுக்கு அவள் மீது அன்பு இருக்காதே, அச்சந்தானே தோன்றும்" என்றான், உதயசந்திரன்.

"அன்பும் அச்சமும் இருக்க வேண்டியதுதான். ஆனால் அந்த இரண்டில் ஒன்றைத்தான் பெற முடியும் என்றால், மகாராணி, மக்களிடமிருந்து அன்பைப் பெறுவதைவிட அச்சத்தைப் பெறுவதுதான் நல்லது. இன்று அன்பு

காட்டும் மக்கள் நாளை எதிர்க்கலாம். ஆனால், அச்சந்தான் அடக்கி ஆளும். புகழ்பெற்ற வலிமைமிக்க பல வல்லரசுகள் அச்சத்தின் மீதுதான் வளர்ந்தனவே தவிர, அன்பின் அடிப் படையில் அல்ல."

"உன்னை இந்நாட்டின் முதல் மந்திரியாக நியமித்தால், நாட்டைக் கிடுகிடுவென நடுங்க வைத்துவிடுவாய் போலி ருக்கிறதே" என்றான், உதயசந்திரன். "சின்ன ராணிக்குத்தான் உன்மீது அபிமானம் இருக்கிறதே. உன்னை அரண்ம னைக்கே அழைத்து மரியாதை செய்திருக்கிறார்! உன்னைக் குருவாகவும் ஏற்றுக் கொண்டுவிட்டாள். என்னை ஒரு மந்திரியாக நியமிக்கச் சொல்லேன்" என்று கூறிச் சிரித்தான், ராஜன் நம்பூதிரி.

"நான் இப்போது ஏதாவது சலுகை கேட்டால், உடனே கொடுத்துவிடுவாள். அவளுக்கு அந்தரங்க மெய்க்காப் பாளனாக இருக்கும்படி வேண்டினாள். மறுத்துவிட்டேன். எனக்குத் தெரிந்த தற்காப்புப் போர்முறையைக் கற்றுத்த வேண்டும் என்றாள். அதற்கும் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவள் வற்புறுத்தி வேண் டவே, அவளுக்குக் கற்றுக்கொடுக்கிறேன்" என்றான் உதய சந்திரன். பிறகு சொன்னான்:

"ராஜன் எனக்கு அவளைச் சந்திக்கவே நடுக்கமா யிருக்கிறது. அவளுடைய அழகு ஆபத்தானது. என்னை அடிக்கடி சந்திக்கத்தான் போர்முறையைப் பழகுகிறாளே தவிர, உண்மையில் இந்தப் பயிற்சியில் அவளுக்கு நாட்ட மில்லை. அவளுடைய அழகும், இளமையும், பார்வையின் அதீதமான சக்தியும் என்னை வென்றுவிடுமோ என்று பயமாயிருக்கிறது."

"நீ தோற்றுப் போனால்தான் என்ன? தோல்வியில் ஆதாயம் இருக்குமானால், வெற்றியைவிடத் தோல்வியே மேல். அரசாங்கத்தில் மிக உயர்ந்த நிலையில் நீ இருக்க

லாமே. ராணியின் அந்தரங்கமான அபிமானம் உன் மீதிருக்கும்போது, உனக்கு நிகர் யார் இருக்க முடியும்?"

"ஒழுக்கத்தை ஒதுக்கிவிட்டுப் பதவிதான் சிறந்தது என்கிறாயா?" ராஜன் நம்பூதிரி சிரித்தான்.

"சிறந்தது என்று சொல்லவில்லை. யதார்த்தத்தைச் சொன்னேன். ஒழுக்கம், நெறிமுறைகள் என்று சொல்லிக் கொண்டு, வாழ்க்கையின் மேம்பாட்டுக்கு உதவும் ஓர் அரிய சந்தர்ப்பத்தைக் கைவிடுவானேன். காமநுகர்ச்சியில் ஒழுக்கம் என்பதெல்லாம் நாமாக ஏற்படுத்திக் கொண்டதுதானே?" என்றான்.

"எனக்கு உயர்பதவி மீதெல்லாம் மோகம் இல்லை. எங்கிருந்தாலும், அமைதியாக வாழவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். அதனால்தான் அரண்மனைக்குச் செல்லவே பயப்படுகிறேன்."

"எங்கள் கடிகையின் ஜோதிட மகாபண்டிதர் உன்னுடைய ஜாதகத்தைப் பற்றிச் சொன்னாரே, மறந்துவிட்டாயா? நீ அமைதியான வாழ்வையே பெறமுடியாது. எப்போதும் பரபரப்பு அடையும் படியான வாழ்க்கைதான் அமையும் என்றாரே. இன்னொன்றும் கூறினாரே; வருங்காலத்தில் உன்னுடைய புகழும் செல்வாக்கும் மிகுந்து இருக்கும்; ராஜசேவகம் தான் உன்னுடைய தொழில் என்று உறுதியாகக் கூறினாரே!"

"அதுதான் எனக்குப் பயமாயிருக்கிறது. ராஜன், ஒரு பெண்ணுக்கு அந்தரங்க மெய்க்காப்பாளனாக இருப்பதைத் தான் ராஜசேவகம் என்றாரோ?" என்று கேட்டுச் சிரித்தான், உதயசந்திரன்.

இருவரும் பேசிக்கொண்டே ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத் தோட்டத்தினுள் சென்றபோது, ஆசிரமத்துச் சீடன் ஒருவன் அவர்களை மறித்தான். "நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"கடிகையைச் சேர்ந்தவர்கள். நாங்கள் உள்ளே போகத் தடை ஏதும் உண்டோ?" என்று கேட்டான் ராஜன் நம்பூதிரி.

"சாதாரண மக்கள் இங்கே வர அனுமதி இல்லை. தத்துவ ரீதியாகத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் மட்டுமே இங்கே வரலாம். வேடிக்கை பார்க்க நினைப்பவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. நீங்கள் உள்ளே போகலாம்" என்று சீடன் அவர்களை உள்ளே செல்ல அனுமதித்தான்.

அடர்த்தியாகப் பல மரங்கள் நிறைந்து காடு போலிருந்த பெரிய தோட்டத்தினுள் யோகி ருத்ர பரமாச்சாரியின் ஆசிரமம் அமைந்திருந்தது. தோட்டத்தில் ஆங்காங்கே பல்லக்குகளும், இரதங்களும் காணப்பட்டன. பரமாச்சாரியின் உபந்நியாசத்தைக் கேட்க மண்டபம் போல் அமைந்திருந்த பெரிய கட்டடத்தில் பலர் கூடியிருந்தனர். ஒரு சிறு மேடையில் யோகி ருத்ர பரமாச்சாரி அமர்ந்து போதித்துக் கொண்டிருந்தார். அவர் கூறியவற்றை எல்லாரும் மிகுந்த கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர் சொன்னார்: "உலகத்தை அது எப்படி இருக்கிறதோ அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளுங்கள். ஒதுக்கவேண்டியது ஒன்றுமே இல்லை. இன்பம், துன்பம், கோபம், தாபம், ஆசை, பொறாமை, மோகம், வஞ்சகம், காமம், அன்பு எல்லாமே இந்த உலகத்தைச் சார்ந்தவைதாம். எல்லாக் குணங்களும் உங்களிடம் உள்ளவையே. உங்களை நீங்களே விலகியிருந்து கவனியுங்கள். அப்போது, எந்தக் குணமும் உங்களைப் பாதிக்காமலிருப்பதை உணர்வீர்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்களை நீங்களே மறந்து போகும் போதுதான் குணங்கள், உங்களை ஆளத்தொடங்கி விடுகின்றன" என்றார்.

ஒருவர் குறுக்கிட்டு, "உணர்வுகளை அடக்கி எப்படி வாழ்வது?" என்று கேட்டார்.

யோகி புன்முறுவலுடன் சொன்னார். "அடக்க வேண்டாம். எப்படி வாழவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படியே வாழுங்கள். முழுமையாக வாழுங்கள். வாழ்க்கையில் கிடைக்கும் எந்த அனுபவத்தையும் நீங்கள் இழக்க வேண்டியதில்லை. எந்த சுகத்தையும் ஒதுக்க வேண்டியதில்லை. ஆனால் எப்படி வாழ்ந்தாலும், எப்படி வாழ்கிறோம் என்ற நினைவை மட்டும் விட்டுவிடாதீர்கள். முழுமையான உலக அனுபவமே, பேரானந்த உணர்வைக் கொடுக்க முடியும். உலகத்தைத் துறந்து விலகி நிற்பவன், கடவுளை எட்டிவிட முடியாது. வைதீக மதங்கள் கடவுளை ஏற்கின்றன. ஆனால், கடவுளால் படைக்கப்பட்ட உலகத்தையும், உலக அனுபவங்களையும் அவை ஏற்க மறுப்பது எவ்வளவு அறிவீனமானது. பிரபஞ்சம் முழுவதையும் காதலியுங்கள். மகாசுகத்தைப் பெறுவீர்கள். ஆணும் பெண்ணுமாக அனுபவிக்கும் மோக மயக்கத்தில் கிடைப்பது இன்பம். இதே மயக்கம் பிரபஞ்சத்தோடு ஏற்படும் போது கிடைப்பது பேரின்பம். உலகம் முழுவதையும் ஒட்டு மொத்தமாகக் காதலியுங்கள். இதுதான் கடவுளை உணர இலகுவான மார்க்கம், எளிமையான மார்க்கம்."

யோகியின் பேச்சில் எல்லாரும் லயித்திருந்தார்கள். அவருடைய கோட்பாடுகளை வைதீகர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றாலும், மறுக்கவும் முடியவில்லை. உலகானுபவத்தோடு ஒட்டிவரும் ஒரு கோட்பாட்டை, குறைத்து மதிப்பிட முடியவில்லை. காம சுகத்தைப் பற்றி யோகி கூறியபோது, வைதீகர்கள் முகங்களைச் சுளித்தார்கள், திகைத்தார்கள்.

யோகி சொன்னார்: "சாதனையின் லட்சியமே மகாசுகத்தைப் பெறுவது, அதுதான் பேரின்ப நிலை. எங்கும் நிறைந்த பேரொளியோடு இரண்டறக் கலந்து உணரும் மகாசுகத்தை அனுபவிக்கும் நிலை. இந்த மகாசுகத்தின் ஆரம்பநிலைதான், ஆணும் பெண்ணுமாக அனுபவிக்கும்

காமசுகம். காம உணர்வின் உச்ச நிலையில், ஆணும் பெண்ணும் தன்னுணர்வு அழிந்து, இரண்டறக் கலந்து விடும் போது கிடைக்கும் சுகம்தான், மகாசுகத்தின் அடிப்படை. காம உணர்வில், சித்தம், உடலில் கீழ் நோக்கிப் பாய்கின்றது. சித்தத்தை மேல் நோக்கிச் செலுத்தும் சாதனையைப் பயின்றால், குண்டலினி சக்தி படிப்படியாக எழும். சித்தம், பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் சக்தியோடு மயங்கி, இரண்டறக் கலக்கும் பேரானந்த உணர்வைப்பெற முடியும்." பேசி முடித்துவிட்டு பரமாச்சாரி எழுந்தார். கூட்டம் கலையத் தொடங்கியது. போகம் என்றாலே விலக்கப்பட வேண்டிய ஒன்று என்ற எண்ணத்தில் ஊறிவிட்ட வைதீகர்கள் தங்களுக்குள் சர்ச்சை செய்து கொண்டே சென்றனர். உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் ஆசிரமத்தினுள் சென்று பார்க்க விரும்பினர். இருவரும் ருத்ர பரமாச்சாரியின் அனுமதி பெற்று ஆசிரமத்தினுள் சென்றனர்.

ஒரு பகுதியில், சில ஆண்களும் பெண்களும் சம்மணம் போட்டு அமர்ந்தவாறு தியானத்தில் ஆழ்ந்திருந்தனர். மற்றொரு பகுதியில் சிலர் நின்றவாறு தங்களை மறந்த நிலையில் கண்களை மூடி ஆடிக்கொண்டிருந்தனர். வியப்போடு பார்த்துக்கொண்டு சென்ற இருவரும், ஒரு பெரிய அறையின் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றபோது, திகைத்து நின்றனர். அறைக்குள் ஒரு சிறிய அகல்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆணும் பெண்ணுமாகப் பலர் காதலில் ஈடுபட்டு மெய்மறந்திருந்த காட்சியைக் கண்டனர். அறை முழுவதும் நிசப்தம் நிலவியது. சுற்றிலும் ஏதோ சக்தி வாய்ந்த உணர்வு அலைகள் மட்டும் அழுத்தமாகப் பரவி வியாபித்திருப்பது போல் உணர்ந்தார்கள்.

பேரமைதி கொண்ட அந்தச் சூழ்நிலையில், இயக்கம் எல்லாம் ஸ்தம்பித்துப் போய், ஆனந்த மயமான உணர்வு மட்டுமே பூரண ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது.

அங்கிருந்த ஒவ்வோர் ஆணும் பெண்ணும் பின்னிப் பிணைந்துகொண்டு, 'தான்' என்னும் உணர்வை இழந்து, பிரபஞ்சத்தின் மூலத் தத்துவத்தோடு கலந்து விட்டவர்களைப் போலிருந்தார்கள். அங்கு தோன்றிய ஒவ்வொருவர் நிலையையும் கண்ட இருவருக்கும் வியப்பு மேலிட்டது.

இருவரும் ஆசிரமத்தைவிட்டு வெளியே வந்தபோது, உதயசந்திரன், "அங்கே நாம் பார்த்தோமே, அந்தக் காட்சிகள் உனக்கு என்ன உணர்வை ஏற்படுத்தின?" என்று கேட்டான்.

"இரண்டிரண்டு யோகிகளாக மோன நிலையில் இணைந்து, ஏதோ ஒரு தெய்வ சந்நிதியில் தியானத்திலிருப்பதாக உணர்ந்தேன்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"எனக்கும் அப்படித்தான் தோன்றியது" என்றான் உதயசந்திரன்.

"அவர்கள் இணைந்து காதலில் மயங்கி ஒன்றி இருந்த நிலை ஒரு சித்திரம் போல் காட்சி தந்தது. மாமல்லபுரம் பாறைகளில் இந்தக் காட்சிகளை சிற்பங்களாகச் செதுக்கினால்கூட நன்றாயிருக்கும். சாதகர்கள், எப்படிக் காதல் லீலையையும் ஒரு யோக சாதனையாக அனுபவிக்கிறார்கள் என்பது மக்களுக்குப் புரியும்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"வைதீகர்களும், சிந்தனையற்றவர்களும் இந்தக் காட்சிகளை விரசம் என்று எதிர்ப்பார்கள்."

"பரமாச்சாரி ஒன்று சொன்னாரே, கவனித்தாயா? ரசம் என்றோ, விரசம் என்றோ எதுவும் இல்லை. பக்குவப்பட்ட மனம் வித்தியாசம் காணாது, என்றாரே! எவ்வளவு உண்மை!"

"நான் இலங்கையிலிருந்தபோது, பௌத்த பிக்ஷுக்களில் பலர், இந்த நெறியைப் பின்பற்றியதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால், போதிதர்மர் என்ற பௌத்த ஞானி, இலங்கைக்கும் சென்றா

ராம். அவர் இந்தக் கோட்பாடுகளை பௌத்த நெறிகளில் புகுத்தினாராம். பௌத்தர்களில் ஹீனயான பௌத்தர்கள் இதை ஏற்காமல், கடும் துறவற வாழ்க்கையையே நெறியாகக் கொண்டுவிட்டார்கள். மஹாயான பௌத்தர்கள் தாம், இந்த தத்துவங்களைக் கடைப்பிடிக்கிறார்கள். நான் இலங்கையிலிருந்தது மஹாயான மடம் தான். ஆனால், அவர்கள் இந்த நெறியை எல்லாருக்கும் போதிப்பதில்லை. உண்மையிலேயே இந்த நெறிகளைப் பயிலவேண்டும் என்னும் விருப்பமும், மனப்பக்குவமும் உள்ளவர்கள் யாராவது அவர்களை அண்டினால், அவர்களுக்கு மட்டும் இரகசியமாகப் போதிக்கிறார்கள்" என்றான், உதயசந்திரன்.

"நீயும் இந்த நெறியைப் பற்றி அறிந்திருக்கலாமே" என்றான், ராஜன் நம்பூதிரி.

"எனக்கு இன்னும் பக்குவம் இல்லையே. ஒரு பெண்ணைக் கண்டதும் பேதலிக்கும் மனம்தானே எனக்கிருக்கிறது. பரமாச்சாரி சொன்னாரே, 'ஆண், பெண் உறவை வெறி கொண்ட ஒரு இச்சையாகப் பாவியாமல், புனிதமான ஒரு யோக சாதனையாகப் பயின்றால்தான், போக இன்பத்தின் பூரணத்துவத்தை உணரமுடியும்; அப்படி உணரும் பக்குவத்தைப் பெறும்போதுதான் ஒரு சாதகன், மகாசுகத்தின் முதல்படியிலேயே காலடி வைக்கமுடியும், இல்லையென்றால், அனுபவித்த போகம், வெறும் இச்சைத் தணிப்பாகவே முடிந்துவிடும்' என்று, அது எவ்வளவு உண்மை!"

"இன்றைய மதங்களினாலும், சமுக நாகரிகப் போக்காலும் காம சுகத்தை அணுகும் முறையே பாதிக்கப்பட்டுவிட்டது. உலக இயற்கையோடு ஒட்டி உறவாடி, மனித இயல்போடு இசைந்து ஒழுகும் இந்த மாபெரும் தத்துவத்தை வைதீகர்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள். வாழ்க்கையின் பரஸ்பர ஈர்ப்புச் சக்தியின் இனிமையான போக்கையும் வலிமையையும் புரிந்து கொள்ளாமல், இந்த

வைதீகர்கள், காதல் அனுபவத்தை ஒதுக்கி வைத்தது எவ்வளவு கொடுமை. இயற்கையைப் புரிந்து கொள்ளாமல், போலித்தனமான வாழ்க்கை முறையை வகுத்துவிட்டார்களே! பிற்காலத்தில் இந்தப் போலித்தனத்தை உடைத்தெறிந்து கொண்டு இளைஞர்கள் வெளியேறத்தான் போகிறார்கள். ஆனால், அப்போது பரமாச்சாரியார் போன்ற ஒரு வழிகாட்டி இல்லாமற் போனால், காம விரசங்களும், வக்கிரங்களும் சமூகத்தைச் சூழ்ந்து கொள்ளும்" என்றான், ராஜன் நம்பூதிரி. பிறகு சொன்னான்:

"சக்தி வழிபாடும் காபாலிகர்களின் நெறியும் கிட்டத்தட்ட இந்தப் பாதையில்தானே இருக்கின்றன. திருமூலர் கூட காமசுகத்தின் மேன்மையைப் பற்றி பரியங்க யோகம் என்னும் தலைப்பில், முன்றாம் தந்திரத்தில், இருபது பாட்டுக்களில் விளக்கியிருக்கிறார். போகத்தை எவ்வளவு நேரம் அனுபவிக்கவேண்டும் என்றுகூட விளக்குகிறார்! போகம், யோகமாக மாறும் அனுபவம் அது."

"பின்னே ஏன் இந்த வைதீகர்கள் இதை எதிர்க்கிறார்கள்?" என்று கேட்டான் உதயசந்திரன்.

"தத்துவங்களில் அவர்கள் தெளிவடையாததால்தான். தாங்கள் கூறும் தத்துவங்கள் மட்டும்தாம் சிறந்தவை என்னும் முடவெறியும் காரணம். தங்களுடைய செல்வாக்கை சமூகத்தில் வளர்ப்பதற்காகப் பலர் போலி வேஷம் போடுகிறார்கள். பரமாச்சாரியாரின் கோட்பாடுகளைச் சரிவர புரிந்து கொள்ளாததால்தான், அதை ஒரு காமக் களியாட்ட இயக்கம் என்று தவறாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். உபநிஷத்தில் கூட இந்த தாத்பர்யங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. சிவசக்தி என்ற தத்துவமே இதுதான்" என்றான் ராஜன் நம்பூதிரி.

இருவரும் பேசிக்கொண்டே ஐராவதேச்சுரர் கோயில்

பக்கம் வந்தபோது, அங்கே மக்கள் கும்பல் கும்பலாகக் கூடி நின்றார்கள். ராஜன் நம்பூதிரி, கூட்டத்தை அணுகி விசாரித்தான். மகாராணி விதித்திருந்த திருமண வரியை குறைகூறிப் பேசிவிட்டதால் கோயில் அமிர்தகணத்தார்(தர்மகர்த்தா) ஒருவர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியை அறிந்தான். "பேசக்கூட சுதந்திரம் இல்லாமற் போய்விட்டதே" என்று முணுமுணுத்தான்.

உதயசந்திரன் பௌத்த கடிகைக்குத் திரும்பியபோது அவனுக்காக அரண்மனைப் பல்லக்கு காத்திருந்தது.

21. உணர்வுகளின் ஆதிக்கம்

அரண்மனையில் மகாராணி பிரேமவர்த்தினியின் அறைக்குள் பரபரப்புடன் சென்றான், சித்திரமாயன்.

"சின்னம்மா, கொள்ளை சம்பந்தமாக விசாரிக்க ஏன் அவசரமாக உத்தரவு கொடுத்தீர்கள்? அதுவும் நம் ஒற்றர் படையின் துணைத்தலைவரிடம் பொறுப்பை விடலாமா?" என்று கோபத்துடன் கேட்டான்.

"ஏன், துணைத்தலைவன் திறமையானவனாயிற்றே? இரண்டு நாட்களில் குற்றவாளிகளைப் பிடித்து விடுவான்" என்றாள், மகராணி.

"என்னிடம் கேட்காமல், நீங்கள் அவசரப்பட்டு உத்தரவிடலாமா?"

"முதன் மந்திரிதாம் கொள்ளை பற்றித் தீவிர விசாரணை நடைபெறவேண்டும் என்றார். இந்தக் கொள்ளையால் நகர மக்களே பீதியடைந்திருக்கிறார்கள் என்றார். ஆறு லட்சம் பொற்காசுகளைக் கொள்ளையடித்தார்களாமே?"

"நீங்கள் விவரம் தெரியாமல் உத்தரவிட்டுவிட்டீர்கள். அந்த யவனன் தான் யவன வணிகசபையின் தலைவன்.

ஒரு வணிகருக்கு நான் சுங்கச் சலுகை கொடுத்ததை அவன்தான் தீவிரமாக ஆட்சேபித்தான். சலுகை பெற்ற வணிகனைச் சபையிலிருந்து நீக்கி, அவனுடைய வாணிபமே நசித்துப் போகும்படியாகச் செய்து கொண்டிருக்கிறான், அவனைச் சபையிலிருந்து நீக்கும்படி முதன் மந்திரிதாம் யோசனை கூறியிருக்கிறார்."

"ஓ, அதற்காகநீ செய்த வேலையா இது. இதை முன்பே என்னிடம் தெரிவித்து விட்டுச் செய்வதுதானே. இப்போதென்ன ஒற்றர்படைத்துணைத்தலைவனை மேற்கொண்டு அதுபற்றி விசாரிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டுவிட்டால் போகிறது" என்றாள், பிரேமவர்த்தினி.

"இனி முடியாது. அவனைத்தான் முதன் மந்திரியின் பொறுப்பில் விட்டுவிட்டீர்களே. இதற்குள் அவன் என்னுடைய ஆட்கள் கொள்ளையடித்த இடத்தில் விட்டு வந்த தடயங்களைக் கைப்பற்றியிருப்பான்."

"என்ன தடயங்கள்?"

"யவனக் காவலாளிகள் எதிர்த்துத் தாக்கியதில் நம் வீரர்களின் குதிரைகளில் ஒன்று பலத்த காயமடைந்து அங்கேயே விழுந்துவிட்டது. நம்முடைய வீரன் ஒருவனின் குத்துவாளும் அங்கே விழுந்துவிட்டது. குத்துவாளில், அரண்மனையின் முத்திரை இருக்கிறது. கிடைத்த தடயங்களைக் கொண்டு ஆராய்ந்தால் உண்மை தெரிந்துவிடும். அதற்குள் நாம் ஏதாவது செய்தாக வேண்டும்."

"எல்லாம் உன்னுடைய தவறுதான். என்னிடம் முன்பே இதுபற்றிச் சொல்லியிருந்தால் இவ்வளவு சிக்கல் வந்திருக்காது."

"கொள்ளையடிக்கத் தூண்டியவன் யாரென்றும் தெரிந்துவிடப் போகிறது" என்று கூறியவாறே ஆசனத்தில் சாய்ந்தான், சித்திரமாயன்.

"சரி, இனி என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிப் போம்" என்றாள் பிரேமவர்த்தினி.

"ஏவி விட்டவன் நான்தான் என்று நிச்சயமாக அனுமா னிக்க முடியாவிட்டாலும், தடயங்களிலிருந்து கொள்ளை யில் அரண்மனைக்குச் சம்பந்தம் உண்டு என்று தெரிய வரும். நீங்களும் இதற்கு உடந்தை என்றாகிவிடும். இன்று இரவுக்குள் ஏதாவது செய்தாக வேண்டும்" என்று கூறி விட்டு, சித்திரமாயன் வேகமாக எழுந்து வெளியேறினான்.

மகாராணிக்கு சித்திரமாயனின் நடவடிக்கை அச்சத் தையும், வெறுப்பையும் அளித்தது. அவனைப் பகைக்க அவளால் முடியாது. அவன்தான் வருங்காலச் சக்ரவர்த்தி. அவன் எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

* * *

அந்தப்புரத்தில், மேகலா, படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். மனமும் உடலும் பரபரத்துக் கெண்டி ருந்தன. உதயசந்திரனை எதிர்நோக்கியிருந்தாள். அவன் அன்று போர்ப் பயிற்சி அளிக்கவேண்டிய நாள். உதய சந்திரன் சற்றுக் காலதாமதமாகவே வந்து சேர்ந்தான்.

அவனைக் கண்டதும் அகமும் முகமும் மலர வரவேற் றாள், மேகலா.

"ஏன், இன்று நேரமாகிவிட்டது?" என்று கேட்டாள்.

"ருத்ர பரமாச்சாரியின் பிரசங்கம் கேட்கச் சென்றிருந் தேன்" என்றான், உதயசந்திரன்.

"ஓ...! அவருடைய நெறிகளைப் பழகுகிறாயா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"இல்லை சின்னராணியாரே, அவ்வளவுக்கு நான் பக்குவமடையவில்லை"

"என்னை ராணி என்றழைக்க வேண்டாம் என்று அன்றே கூறிவிட்டேனே. தேவி என்றாலே போதும்" என்றாள், பிறகு, "பரமாச்சாரியின் தத்துவங்கள் எனக்கும் மிகவும் பிடிக்கும்" என்றாள்.

உதயசந்திரன் மௌனமாயிருந்தான். அவனுடைய நினைவில், ஆசிரமத்தில் கண்ட காதல் காட்சிகள் நிழலாடின. மேகலா தொடர்ந்து பேசினாள்; "நீ கற்றுக் கொடுத்த பயிற்சியைச் செய்து பார்த்தேன். கையும் காலும் சரியாகவே இயங்கவில்லை."

"தேவி, இது சாதாரணப் பயிற்சி போன்றதல்ல. இதற்கு மிகுந்த கவனம் வேண்டும். பயிற்சியில் சிந்தை ஒடுங்க வேண்டும்" என்றான் உதயசந்திரன்.

மேகலா, அழகாகச் சிரித்தாள். "சிந்தை தான் எங்கோ சிதறுகிறதே" என்று கூறியவாறே அவன் கண்களை உற்றுப் பார்த்தாள். குறுநகை தோன்றியது.

"முயற்சி செய்தால் வெற்றி கிட்டும்" என்றான்.

"வெற்றி கிடைக்கும் என்றுதான் நம்பிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினாள். அவளுடைய கண்களில் தெரிந்த தாபம், அவனை நெகிழ வைத்தது. மலரச் சிரித்தாள். அவன், தரையை நோக்கினான்.

சற்று நேரத்தில் பயிற்சிக்குத் தயாராக வந்து அவனுக்கு எதிரே நின்றாள். பயிற்சிக்குத் தகுந்தவாறு உடையணிந்திருந்தாள். அவளை அந்தக் கோலத்தில் கண்டபோதெல்லாம் அவனுடைய மனம் படபடத்தது. அவளுடைய கச்சையணிந்த எழுச்சியும், பார்வையின் கவர்ச்சியும் அவனை மிகவும் சோதித்தன.

உதயசந்திரன், பயிற்சியைத் தொடங்கினான். பயிற்சியின் போது அவளுடைய அங்கங்களின் அசைவுகளில் அவனுடைய பார்வை பதிந்தபோதெல்லாம், மனக்குரங்

கைத் தூர விரட்ட எண்ணினான். ஆனால் மனம், பார்வை யின் திசையிலேயே செல்ல முரண்டு பண்ணியது.

சற்று நேரம் பயிற்சி செய்ததும் மேகலா களைப்புற்று ஆசனத்தில் சாய்ந்தாள். முகத்தில் வியர்வை முத்து முத்தாக அரும்பியிருந்தது. மூச்சு வாங்கியதால் கச்சையை மீறிய மார்பகம் விம்மித் தணிந்து கொண்டிருந்தது.

ஓ...சோர்வும் இவளுடைய முகத்துக்கு அழகாக இருக் கிறதே! முகத்தில் வியர்வை அரும்பியிருப்பதுதான் எவ் வளவு கவர்ச்சியாக இருக்கிறது! கோயில் குளத்தின் செந்தா மரை இதழ்களில் காலை வேளையில், நீர் முத்துக்கள் பள பளக்கும்போது கூட இவ்வளவு அழகாயிராது... ஓ, இந்த வியர்வையில் கூட சுகந்தம் இருக்கிறதே...!

உதயசந்திரன் தன்னுடையரசனையை எண்ணி, தனக் குள்ளேயே சிரித்துக் கொண்டான். மேகலா, ஒரு சிறு துண்டினால் முகத்தை ஒற்றிக் கொண்டே கேட்டாள்; "ருத்திர பரமாச்சாரியின் பிரசங்கம் கேட்டாயே, காதலைப் பற்றி அவர் கூறியதைக் கேட்டிருப்பாயே?"

உதயசந்திரன் பதில் ஏதும் கூறாமல் அவளை உற்றுப் பார்த்தான்.

"மகா சுகத்தைப்பற்றிச் சொல்லியிருப்பாரே" என்றாள்.

"ஆமாம்" என்றான் உதயசந்திரன்.

"காதல் இன்பந்தான் மகா சுகத்தின் அடிப்படை என்கிறாரே, நீ என்ன நினைக்கிறாய்?" இந்தக் கேள்வி, உதயசந்திரனைத் திகைக்க வைத்தது.

நான் என்ன நினைத்தால் இவளுக்கென்ன...?

"எனக்கு அவர் கூறுவது சரியென்றே தோன்றுகிறது. வாழ்க்கையில் மிகுந்த சக்தி வாய்ந்த உணர்வு, காதல் தானே? பேரானந்தத்தை உணர்வதற்கு, அவ்வளவு சக்தி

வாய்ந்த இனிமையான காதல் உணர்வுதான் அடிப்படை என்று அவர் சொல்வது, உண்மையாகத்தானிருக்க வேண்டும். நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டாள்.

மீண்டும் உதயசந்திரன், சங்கடத்துக்குள்ளானான். பதில் கூற முடியாமல் திணறினான்.

மேகலா, மெல்ல சிரித்தபடி கேட்டாள்: "என்ன பதிலே இல்லை? காதல் உணர்வுகளுக்கு நீ இன்னும் வசப்பட்டதில்லையா?"

அவளுடைய சிரிப்பின் அலைகள், அவனை மெல்ல வருடிச் சென்றன. அதனுடைய கதகதப்பில், அவனுடைய இரத்தம், விரைந்தோடத் தொடங்கியது. ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

"திருமணத்தைப் பற்றி அவர் கூறியது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. திருமணம், வெறும் சடங்கு. ஒரு சம்பிரதாயம். ஓர் ஆணும் பெண்ணும், கணவன் மனைவி என்ற கடமைக்குள் பணிபுரியும் சாரமற்ற ஒரு கட்டுக்கோப்பு என்றாரே, எவ்வளவு உண்மை!" என்றாள், மேகலா. பிறகு, கையிலிருந்த துண்டை, ஆசனத்தில் வீசிவிட்டு மீண்டும் பயிற்சிக்காக எழுந்தாள் உதயசந்திரனும் எழுந்தான். இருவரும் எதிர் எதிரே நின்றனர். அவன் புதுப் பயிற்சியின் முத்திரைகளை விவரித்தான். அந்த முத்திரைகளை அவள் சரிவரச் செய்துகாட்ட முடியாமல் தவறிழைத்தாள். அவளுடைய கைகளைத் தீண்டி அவளுக்குப் பயிற்சியளிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டதும், உதயசந்திரனின் மனம், சற்று நடுங்கியது.

"முத்திரைகள் சரியாக வரவில்லையே. கையைப் பற்றி, எப்படி என்று காட்டேன்" என்றாள், மேகலா.

அவளுடைய புஜங்களைப் பற்றி, முத்திரைகளைச்

சொல்லிக் கொடுத்தபோது, அவனுடைய உடலில் சிலிர்ப்பு ஏற்பட்டது. அதே சமயம், அவளுடைய உடலும் மெல்ல அதிர்ந்ததை அவனுடைய கைகள் உணர்ந்தன.

எவ்வளவு குளிர்ந்த தோள்கள்...! பட்டுப் போன்ற மேனிதான் எவ்வளவு மிருதுவாக இருக்கிறது.

அவனுடைய பார்வை, அவளுடைய தோளிலிருந்து இறங்கி, வியர்வையில் நனைந்து பளபளத்த மார்பகங்களில் பதிந்தது. அவனை மிக நெருங்கியிருந்த அவளுடைய மார்பகங்கள், அவனுடைய பார்வையை விலக விடாமல் மறித்தன. பெருமூச்சோடு அவனுடைய பார்வை உயர்ந்த போது, அவளுடைய கண்களைச் சந்தித்தது. அப்போது, அவள் சொன்னாள் : "காதல் இன்பத்தின் பூரணமான உச்சநிலையைக் கணவன்–மனைவி என்ற பந்தத்தில் பெற முடியாது; காதலர்களால் மட்டுமேதான் பெறமுடியும் என்றல்லவா ருத்ரபரமாச்சாரி சொன்னார்! உலகத்தில் கணவன் மனைவி என்ற நிர்பந்தமான உறவுக்குள் அடங்கியவர்களிடம் காதல் எங்கே இருக்கிறது? ஆணும் பெண்ணும் கணவன், மனைவி என்ற பாத்திரங்களை ஏற்று நடிக்கிறார்கள். இதயம் ஒன்றிய காதலுணர்வு, தாம்பத்தியத்தில் இல்லையே. ஒருவரை ஒருவர் நெருங்கும்போது, இச்சையை தீர்க்கிறார்களே தவிர, அந்த நெருக்கத்தில் இதயம் இணையவில்லையே. உயிர் ஒன்று சேரவில்லையே. மணவாழ்க்கை இந்தச் சமுதாயச் சடங்கே தவிர வேறென்ன? ஓ...! வாழ்க்கையை எவ்வளவு ஆழ்ந்து ஆராய்ந்திருக்கிறார், பரமாச்சாரி! நீயும் கேட்டிருப்பாயே?"

அவள் ஏதோ ஒன்றைச் சொல்வதற்கு, சுற்றி வளைத்துத் தவிக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டான் உதய சந்திரன். "ஆமாம் தேவி, கேட்டேன்" என்றான். அப்போது அவனுடைய குரல் குழைந்தது.

"இதயங்கள் ஒன்றுபட்டு, ஒருவருக்காக ஒருவர் ஏங்கி,

காதலின் இன்பத்தை நிலை மறந்து நுகரும்போதுதான், சுகானுபவத்தின் பூரணமான நிலையை எட்ட முடியும் என்று அவர் சொன்னது எவ்வளவு உண்மை!" என்று மெல்லிய குரலில் அவன் காதருகே சொல்லிப் பெருமூச்சு விட்டாள், மேகலா.

அவனுக்கு மிக அண்மையில் அவள் இருந்ததால், அவளுடைய பெருமூச்சு அவன் முகத்தைச் சூடாக்கியது. மிக நெருங்கியிருந்த கண்கள், பசைபோல் அவனுடைய பார்வையோடு ஒட்டிக்கொண்டன. பயிற்சிக்காக அவளுடைய தோளைப் பற்றியவன், பற்றியவாறே நின்றான். இருவருக்கும் இடையே இருந்த இடைவெளி, எப்படிச் சுருங்கியதென்றே அவன் உணரவில்லை. அவளுடைய கனத்த மார்பகங்கள், எந்தக் கணமும் அவனுடைய மார்பைத் தீண்டிவிடும் நிலையில் மிக நெருங்கி, விம்மித் தணிந்துகொண்டிருந்தன. அவனைச் சுற்றி ஒருவித சுகந்தம் பரவி இருந்தது. அவனை அங்கும் இங்கும் நகர விடாமல் உணர்ச்சிகளின் அலைகள் சுற்றிச் சூழ்ந்து கொண்டன. அவளுடைய வியர்வையின் நெடியில் கிறங்கினான்.

"உதயசந்திரா, அப்படி ஒரு சுகானுபவத்தை உணரத் துடிக்கும் இதயத்தை உன்னால் உணர முடியவில்லையா?" என்று அவனுடைய காதில் மேகலாவின் மெல்லிய குரல் விழுந்தது. மறுகணம், அப்படி ஓர் அனுபவத்துக்காக ஏங்கும் அவளுடைய இருதயத்தின் துடிப்பை, உதயசந்திரன் தன் மார்பின் மீது உணர்ந்தான்! அவனது மார்பில் நன்கு அழுந்தி உணர்த்திய அந்த துடிப்பின் உணர்வுகள், அவன் உடலையும் உளுருவிப் பரவி, ஆட்கொண்டு மயக்கின. ஆடைகள், மெல்ல மெல்ல நெகிழ்ந்தன.

உணர்ச்சிகளின் கோரப்பசிக்கு, பூரித்த அங்கங்கள், இரை தேடிக் கொண்டிருந்தன. உதயசந்திரனின் கரங்கள், மெல்ல மெல்லப் பரவியபோது மேகலா முனகினாள்.

அவனுடைய உடலுக்குள் தன்னையே மறைத்து, ஒருமையாகி விடும் துடிப்பில் பற்றிப் படர்ந்தாள். பரவசமானாள்.

அப்போது சில விநாடிகளுக்கு அந்த அறையில் நிசப்தம் நிலவியது. வெளி உலகம் முழுவதும் மறைந்து விட்டது. இருந்தவை, ஆனந்த மயமான உணர்வுகள்! உணர்வுகள்! உணர்வுகள்!...

உணர்வுகளின் அலையில், இரு உயிர்கள் உல்லாசமாக மிதக்கத் துடித்தன.

திடீரென்று உதயசந்திரனின் அறிவில் ஓர் அதிர்ச்சி. உணர்ச்சிகள் பட்டென்று அறுந்தன. கண்களை மெல்ல விழித்தான்–

'இரண்டு யோகிகள், மோன நிலையில் இணைந்து, ஏதோ ஒரு தெய்வ சந்நிதியில், தியானத்தில் இருப்பதாக உணர்ந்தேன்...'–

ராஜன் நம்பூதிரியின் குரல், எங்கிருந்தோ மிக மெல்லியதாகக் கேட்டது.

உதயசந்திரனின் அறிவில் ஏதோ உறுத்தியது. கண்களை நன்கு விரித்துப் பார்த்தான்.

மேகலாவின் கண்கள் தாமரை மொட்டுக்களைப் போல் மெல்லத் திறந்தன. பெருமூச்சு, சீறிச் சீறி வெளியேறிக் கொண்டிருந்தது. உடல் முழுவதும் வியர்த்து அந்த ஈரத்தின் பளபளப்பில் அவளுடைய தங்கநிற அங்கங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. கண்களில் தாபம்.

உதயசந்திரனுக்கு ராஜநாகம் தெரிந்தது–அழகும், மென்மையும், பளபளப்பும் பொருந்திய ராஜநாகம், ஆள் உயரத்துக்கு படமெடுத்து அவனை அணைத்து நின்றது...

ஆஹா, எவ்வளவு அழகு...! எவ்வளவு கவர்ச்சி...! ஐயோ, என்ன சீற்றம் இது...? சீறும் ஒலி கேட்கிறதே!

சட்டென்று அணைத்திருந்த தன்னுடைய கரங்களை எடுத்தான். தன்னை அணைத்துப் பின்னியிருந்த மேகலாவின் கரங்களையும் விலக்கினான். தன் மீது ஒட்டிக் கிடந்த வளைத் தன் உடலிலிருந்து உரித்துப் பிரித்து விலக்கி நிறுத்தினான்.

"மகாராணி... மகாராணி..." – உதயசந்திரன் பதறினான். நாக்குழறியது. உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

மேகலா, ஆழ்ந்த மயக்கத்திலிருந்து விடுபட்டவளாய் அவனை வெறிக்கப் பார்த்தவாறு நின்றாள்.

"மன்னியுங்கள், தேவி" என்று பதற்றத்தோடு கூறி விட்டு, அந்த அறையிலிருந்து வேகமாக வெளியேறினான். அந்தப்புரத் தோட்டத்திலிருந்த பல்லக்கை அடைந்தபோது தான் சற்று நிதானமடைந்தான். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ஒரு பெரிய விபத்திலிருந்து தெய்வாதீனமாகத் தப்பி வந்து விட்டதாக எண்ணியவாறே பல்லக்கில் ஏறினான்.

* * *

உதயசந்திரன் இரவு முழுவதும் உறங்காமல் தவித்துக் கொண்டிருந்தான். அரண்மனையில் ஏற்பட்ட அனுபவம் அவன் மனத்தில் நடுக்கத்தை உண்டுபண்ணியிருந்தது. லீனாவை உடனே காணவேண்டுமென்ற தவிப்பு ஏற்பட்டது. மறுநாட் காலையில் லீனாவைக் காணப் புறப்பட்டான். யவனச் சேரிக்குச் செல்லும் சிறு வீதி வழியாக அவன் சென்ற போது பெரும் கூட்டம் அங்கு கூடியிருந்தது. ஒரு இரதம், ஒரு வீட்டின் முன் பகுதியில் மோதிச் சரிந்து கிடந்தது. ஏதோ விபத்து என்பதைப் புரிந்துகொண்டு கூட்டத்தை நெருங்கினான். இரதத்தின் சக்கரத்தில் அடிபட்டு ஒருவன்,

உடல் நைந்து போய் இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந் தான். இரதசாரதியைக் கூட்டத்தினர் பிடித்து வைத்திருந் தனர். சாரதி புலம்பிக் கொண்டிருந்தான்.

"குதிரை திடீரென்று மிரண்டு போய்விட்டது. கட்டுப் படுத்த முடியவில்லை" என்றான், "ஐயோ, இன்று யார் முகத்தில் விழித்தேனோ" என்று புலம்பினான்.

"அடிபட்டவன் யார்?" – உதயசந்திரன் விசாரித்தான்.

"தெரியவில்லை. யவனச் சேரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். பின்னால் வேகமாக வந்த இரதம், அவனை நெருங்கியதும், திடீரென்று வீதியைவிட்டு விலகி, அவன் மீது ஏறி, இந்த வீட்டையும் இடித்துவிட்டு நின்றது. குதிரை திமிறிக் கொண்டு ஓடிவிட்டது" என்றான் ஒருவன்.

மற்றொருவன், "ஊஹூம், அப்படியில்லை. நான் தான் பார்த்தேனே, குதிரைதான் முதலில் அவனை மோதித் தள்ளியது. பிறகு தான் சக்கரம் அவன் மீது ஏறியது" என்றான்.

"யார் சொன்னது? நான்தான் வரும்போதே பார்த் தேனே. அவன் தான் திடீரென்று வீதியின் குறுக்கே வந்து விட்டான். சாரதி, இரதத்தை விலக்கப் பார்த்தான். முடிய வில்லை. அதனால் தான் இரதம் வீட்டுச் சுவரில் போய் முட்டியது" என்றான் இன்னொருவன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. சாரதி, மது அருந்தி யிருக்கிறான். போதையில் வேகமாக ஓட்டி வந்தான். ஆள் மீது ஏற்றி விட்டான். நான் அவன் பக்கத்தில் நின்றேனே. மதுவின் நெடி அடிக்கிறது" என்றான், ஒருவன்.

அப்போது குதிரையில் சில வீரர்கள் வரவே கூட்டம் விலகி வழிவிட்டது. வந்தவர்கள் இரத சாரதியைப் பிடித்துச் சென்றார்கள். கீழே கிடந்த பிரேதத்தை ஒரு வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு போய்விட்டார்கள்.

உதயசந்திரனின் மனம் விபத்தைக் கண்டதினால் இன்னும் கலக்கமடைந்திருந்தது. லீனாவைக் காணவேண்டும் என்ற தவிப்பில் சீனத் தோப்பை நோக்கி விரைந்து நடந்தான்.

22. சித்திரமாயனின் திட்டங்கள்

இளவரசன் சித்திரமாயன் மிகுந்த உற்சாகத்துடனிருந்தான். காலையில் யவனச் சேரியின் அருகே, கொள்ளை பற்றிய புலன் விசாரணைக்காகச் சென்று கொண்டிருந்த ஒற்றர் படையின் துணைத் தலைவன் இரதத்தினால் மோதுண்டு மாண்டுவிட்டான் என்ற செய்திதான் அவனுடைய உற்சாகத்துக்குக் காரணம்.

யவன வணிகரின் வீட்டில் அவனுடைய ஏவலினால் நடத்தப்பட்ட கொள்ளை பற்றிய சில முக்கியமான தடயங்கள், ஒற்றர் தலைவனின் வசம்தானிருந்தன. சாதாரணத் தெரு விபத்து என்று மற்றவர்கள் நம்பும்படி அவனைக் கொலை செய்தாகிவிட்டது. கொள்ளை பற்றிய துப்பு இனி யாருக்கும் கிடைக்காது.

இருந்தாலும், சித்திரமாயனுக்கு மனத்தில் அமைதியில்லை. பெண் கொலை சம்பந்தமாகப் பிடிபட்ட அவனுடைய அந்தரங்கக் காவல் வீரன் இன்னும் முதன்மந்திரியின் வசம்தானிருந்தான். அவனை வைத்துக்கொண்டு முதன் மந்திரி என்ன செய்யப் போகிறார் என்பதைப் பற்றி அவனால் அனுமானிக்க முடியவில்லை. சக்கரவர்த்தி வந்தும் அவரிடம் அந்த வீரனை ஒப்படைத்து, தன் மீது குற்றம் சாட்டுவாரோ என்ற அச்சம் அவனை மிகவும் வாட்டியது.

சக்கரவர்த்தி, நீதி தர்மத்தில் மிகுந்த அக்கறை உள்ளவர். தன் மகன் என்று கூடப் பாராமல் கடும் தண்டனை வழங்கினால்கூட அதிசயமல்ல. அப்படி ஓர் இக்கட்டான நிலையில், தான் சிக்கிக் கொண்டிருந்ததை உணர்ந்தபோது,

முதன் மந்திரியின் மீது அளவுமீறிய கோபமும், வெறுப்பும் தோன்றின.

அவரைக் கொல்லத் திட்டமிட்ட சதியும் வெற்றி பெறாதது அவனுடைய மன அமைதியை மேலும் குலைத்தது. இன்னும் அரண்மனை வீரர்கள், இலங்கை வீரர்களைத் தேடிக்கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் இரணியவர்மரின் வசம் இருக்கிறார்கள் என்ற உண்மை சித்திரமாயனுக்குத் தெரியாது. சக்கரவர்த்தி திரும்பி வருவதற்குள் தன்மீது எவ்விதக் குற்றத்தையும் நிருபிக்க முடியாதபடிச் செய்துவிட வேண்டும் என்ற தவிப்பிலிருந்தான்.

இதற்கிடையில், ஆட்சியில் அவனுடைய நடவடிக்கைகளுக்குத் தோன்றிய எதிர்ப்புக்கள் அவனுக்குக் கோபத்தை மூட்டின. வருங்காலத்தில் சக்கரவர்த்தியாய் அரியணை ஏறப்போகும் தன்னுடைய கட்டளைகளுக்கு மக்கள் பணியமறுத்தது அவனுக்கு ஆத்திரத்தை மூட்டியது. ஆட்சி அலுவல்களில் யாருடைய யோசனையையும் அவன் கேட்கத் தயாராயில்லை.

சக்கரவர்த்தி போருக்குப் புறப்பட்டபோது, இளவரசனான தன்னைத்தான் ஆட்சியில் இருத்திவிட்டுச் செல்வார் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவர், ஆட்சிப் பொறுப்பை பிரேமவர்த்தினியிடம் கொடுத்தது அவனுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

மன்னர் அவ்விதம் முடிவெடுத்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, சித்திரமாயனின் ஒழுக்கமற்ற நடத்தை. அவனிடம் அப்போதே ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தால் நாட்டில் குழப்பத்தை உண்டாக்கி விடுவான் என்று பயந்தார். மேலும் தரணி கொண்ட போசர், அவனிடம் ஆட்சிப் பொறுப்பை விடச் சம்மதிக்கவில்லை.

மற்றொரு காரணம் பிரேமவர்த்தினி மீது அவருக்கு

இருந்த மோகம். முதன் மந்திரியிடம் ஆலோசனை கேட்ட போது, மன்னருக்கு அவள் மீதிருந்த மோகத்தை உணர்ந்த மந்திரி அவளிடமே ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்கும்படி கூறினார். மகாராணி, தம்முடைய ஆலோசனையைக் கேட்டு நடப்பாள் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டார் முதன் மந்திரி. அவள், தான் தோன்றித்தனமாக நடந்து கொள்வாள் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை.

சித்திரமாயனுக்குப் பக்கபலமாக, மந்திரி சபையின் இரண்டாவது மந்திரி, அச்சுதப் பட்டர் இருந்தார். சித்திர மாயனின் போக்குக்கெல்லாம் அவர் வளைந்து கொடுத் தார். அச்சுதபட்டரின் ஒரே குறிக்கோள், முதன் மந்திரிப் பதவியைப் பெற்றுவிடவேண்டும் என்பதுதான். பதவிக் காக எவ்வளவு ஈனத்தனமாக நடக்கவும் தயாராயிருந்தார். அன்று காலையில் ஒற்றர் படைத்தலைவனைக் கொலை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட இரதம் அவருடை யதுதான்.

அச்சுதபட்டரின் துணைகொண்டு சித்திரமாயன், தன்னுடைய அதிகார வெறியை வளர்த்துக் கொண்டிருந் தான். சில கோட்டத் தலைவர்கள் அவன் மீது வெறுப்புக் கொண்டிருந்ததையும், குறுநில மன்னர்களில் ஒருவரான இரணியவர்மருக்கு அவன்மீது அபிமானம் கிடையாது என்பதையும் அவன் அறிந்திருந்தான். வருங்காலத்தில் அவனை அரியணை ஏறவிடாமல் தடுக்க அவர்கள் எல்லாரும் முயல்வார்களோ என்ற சந்தேகம் அவனுக்குத் தோன்றியிருந்தது. அவனுடைய அச்சத்தைப் போக்க அச்சுதபட்டர் ஒரு யோசனை கூறியிருந்தார்.

ஒரு கோட்டத்தைச் சேர்ந்த ஊர்த் தலைவர்களும், நகரத் தலைவர்களும் சேர்ந்துதாம் ராஜ வமிசத்தைச் சேர்ந்த ஒருவரை, அந்தக் கோட்டத்துக்குத் தலைவராகத் தேர்ந் தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு

வரைத்தான் சக்ரவர்த்தி கோட்டத்துத் தலைவராக நியமிப் பார். இது பல்லவ ஆட்சியில் நெடுங்காலமாக இருந்துவரும் ஆட்சிமுறை. இப்போதுள்ள ஊர்த்தலைவர்களையும், நகரத் தலைவர்களையும் நீக்கிவிட்டு, சித்திரமாயனுக்கு அடங்கிய நபர்களை, தலைவர்களாக நியமித்து விட்டால், பிறகு, இளவரசனுக்கு வேண்டிய ராஜவமிசத்தினர்களில் சிலரைக் கோட்டத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்க வாய்ப்பாக இருக்கும்.

இந்த அருமையான திட்டத்தின் பேரில்தான் மகா ராணி, ஊர்த்தலைவர்களையும், நகரத்தலைவர்களையும், மெள்ள, மெள்ள ஒவ்வொருவராக நீக்கிக் கொண்டிருந்தாள். சக்கரவர்த்தி திரும்பி வருவதற்குள் சில கோட்டங்களில் தனக்கு வேண்டியவர்களைத் தலைவர்களாகத் தேர்ந் தெடுக்க வைத்துவிடவேண்டும் என்ற முடிவிலிருந்தான், சித்திரமாயன்.

இந்தத் திட்டத்தின் உள் நோக்கத்தையும், விளைவை யும் எண்ணித்தான் முதன்மந்திரி மிக்க கவலை கொண்டி ருந்தார்.

பதவிகளை விரும்பி சித்திரமாயனின் அபிமானத்தைப் பெற ராஜ வமிசத்தைச் சேர்ந்த பலர் முயன்று கொண்டி ருந்தனர். ஆகையால், சித்திரமாயனுக்கு ஆதரவாகப் பலர் இருந்தனர். சில வணிகர்களும், சித்திரமாயனிடம் அபி மானம் கொண்டிருந்தனர். அவன் மூலமாக, சில வரிச்சலு கைகள் பெற்று, கொள்ளை லாபமடிப்பதில் ஈடுபட்டி ருந்தனர். தனக்கு ஆதரவாயுள்ளவர்களுக்குப் பல பதவி களைக் கொடுக்க சித்திரமாயன் திட்டமிட்டிருந்தான். சித்திர மாயனின் அந்தரங்கத்தில் இதற்கெல்லாம் மேலாக ஒரு பயங்கரத் திட்டமிருந்தது—

சக்கரவர்த்தியையே எவ்விதத்திலும் நீக்கிவிட்டு, அரியணையில் தான் அமரவேண்டும் என்ற திட்டம்தான்.

சக்கரவர்த்தி இருக்கும்வரை தன்னுடைய விருப்பம் போல் திரிய முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்தான்.

ஒருமுறை சக்கரவர்த்தி அவனிடமே கோபத்தோடு கூறியது, அவன் மனதில் ஆழப்பதிந்திருந்தது. அவர் சொன்னார்: "ஒரு நாட்டை ஆள்வதற்குள்ள தகுதி ஒருவனுக்கில்லையென்றால், அவன் அரியணையைத் துறந்து விட்டுக் காட்டுக்குச் செல்வதுதான் மேல். மக்களின் மகிழ்ச்சிதான் மன்னனின் லட்சியம். இந்த லட்சியத்தை ஏற்காதவன், அரியணை ஏறவே தகுதி இல்லாதவன்."

சித்திரமாயனுக்கு அண்டை நாட்டு மன்னர்களின் ஆதரவு கிட்டுமானால், மிகவும் உதவியாக இருக்கும் என்று யோசனை கூறினார் அச்சுத பட்டர். பாண்டிய நாட்டின் அபிமானத்தைப் பெற, பாண்டிய இளவரசனை காஞ்சிக்கு விஜயம் செய்யும்படி ஒரு தூதுவன் மூலமாக அழைப்பு அனுப்பியிருந்தான்.

சித்திரமாயனின் திட்டங்கள் சரிவர நிறைவேறுமானால், நாட்டிலுள்ள அதிகாரிகளும், தலைவர்களும் அவனை ஆதரிப்பவர்களாகவே அமைந்து விடமுடியும். அதன் பிறகு, அவன் மக்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவனுடைய விருப்பம் போல் ஆட்சி செலுத்தமுடியும்.

ஆனால், அவனுடைய திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆரம்பத்திலேயே எதிர்ப்புத் தோன்றத் தொடங்கியது மட்டுமல்லாமல், முதன் மந்திரி அவனுக்கு இடைஞ்சலாக இருந்தது அவனுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது.

முதன்மந்திரியின் மீது ஏதாவது ஒரு குற்றச்சாட்டைக் கூறி, அவரை நீக்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். ஆனால் அவருக்கு ஆதரவாக இரணிய வர்மர் இருந்தது அவனுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

தலைநகரில் இரணியவர்மர் தம்முடைய படையுடன் தங்கியிருந்தது அவனுக்கு இடைஞ்சலாகவும் இருந்தது. தாம் திரும்பி வரும் வரை இரணியவர்மரைக் காஞ்சியில் இருக்கும்படி சக்கரவர்த்தி ஆணையிட்டிருந்ததால் சித்திரமாயன் அவருக்கு எதிராக ஏதும் செய்ய இயலாதவனாயிருந்தான். கோட்டைத் தளபதி பொறுப்பிலிருந்து மகாராணி அவரை விடுவித்து விட்டதும், அவர் கோபம் கொண்டு, தம்முடைய மண்டலத்துக்குச் சென்று விடுவார் என்று அவன் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. காஞ்சி மக்களின் நலனுக்கான பணிகளில் இரணியவர்மர், தம் முடைய படைகளை ஈடுபடுத்தியிருந்ததும் அவனுடைய கோபத்தைக் கிளறியது. மக்கள், இரணியவர்மரைப் புகழ்ந்து, அவனுக்கு எதிரேயே வாழ்த்தொலிகள் எழுப்பத் தொடங்கியிருந்தார்கள்.

இவற்றைப் பற்றிச் சிந்தித்து சித்திரமாயனின் மனம் உளைந்து கொண்டிருந்த அதே வேளையில் அச்சுதபட்டர், அரண்மனையின் அந்தப்புரத்தை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தார். சில சந்தர்ப்பங்களில், அவர் தமக்கு வேண்டிய சலுகைகளை மேகலாவின் உதவியினால் பெற்றுக் கொள்வார். மகாராணியோ, சித்திரமாயனோ தம் முடைய திட்டத்திற்கு ஒத்துவரமாட்டார்கள் என்று கருதினால், மேகலாவின் உதவியை நாடுவார்.

மேகலாவின் பேராசையை அவர் நன்கு அறிந்திருந்தார். அவளை வருங்கால மகாராணி என்றும், இப்போது கூட ஆட்சியில் அவளுக்கும் உரிமை உண்டென்றும் அடிக்கடிக் கூறி அவளைத் தூண்டி விட்டிருந்தார்.

அச்சுதபட்டர் அவளைச் சந்திக்கக் காத்திருப்பதாக தாதி ஒருத்தி அறிவித்ததும் மேகலா, அவரை உள்ளே அழைத்துவர ஆணையிட்டாள்.

"சின்ன மகாராணியாருக்கு அடியேன் வணங்குகிறேன்" என்று தலைதாழ்த்தி வணங்கினார். பிறகு, "வடமொழிக்கடிகை பற்றி முன்பு தங்களிடம் கூறியிருந்தேன். இப்போது..." என்று தயங்கியவாறே கூறினார்.

"இதுபற்றி இளவரசரிடம் கூறுவதுதானே?" என்றாள், மேகலா.

"வடமொழிக் கடிகை மக்களின் அபிமானத்தைப் பெற்றது. புகழ்பெற்ற கடிகை. அதனால் இளவரசர் தயங்குவார். ஆனால், நம்முடைய ஆணைகளை மீறுபவர்களைக் கண்டிப்பது நம்முடைய கடமையல்லவா?" என்றார், அச்சுதபட்டர். பிறகு, "கடிகை நிர்வாகிகள் பயப்பட வேண்டும் என்பதற்காக உங்களுடைய உத்தரவு என்று கூறினேன். சேச்சே எவ்வளவு அலட்சியமாகப் பேசி விட்டார்கள். என் மனம் கொதிக்கிறது சின்ன மகாராணியாரே" என்று படபடத்தார்.

"என்ன சொன்னார்கள்?" என்று பரபரப்புடன் கேட்டாள், மேகலா.

"ஐயோ, அதை என் வாயால் திரும்பக் கூறக்கூடாது."

"ஒளியாமல் கூறும் மந்திரியாரே" என்று சீறினாள், மேகலா.

"நாட்டியக்காரிக்கெல்லாம் பயப்பட முடியாதாம்" என்று வாய் பொத்தியபடி மெல்லக் கூறினார், அச்சுதபட்டர்.

"ஓஹோ..." மேகலா கோபத்தினால் கொதித்தெழுந்தாள். அச்சுதப்பட்டர் தொடர்ந்து தூபம் போட்டார்: "அரசு விதித்திருந்த வரியைச் செலுத்த மாட்டார்களாம் இதில் சின்ன ராணியார் தலையிட வேண்டிய அவசியம் இல்லையாம். வரி கேட்கச் சென்ற நம்முடைய அதிகாரியைச் சில மாணவர்

கள் அடித்து மாடியிலிருந்து உருட்டி விட்டார்கள்" என்றார்.

"மந்திரியாரே, இப்போதே வீரர்களை அழைத்துச் செல்லுங்கள். படைத் தலைவனுக்கு என் முத்திரை மோதிரத்தைக் காண்பியுங்கள்" என்று தன் முத்திரை மோதிரத்தை மந்திரியிடம் கொடுத்தாள். "என்னைக் கேவலமாகப் பேசிய கடிகைக்காரர்களை நாய்களைப் போல் அடித்துக்கொல்லுங்கள். கடிகையை இடித்துச் சூறையாடுங்கள். போங்கள் சீக்கிரம்" என்று இரைந்தாள்.

மேகலாவின் கோபத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட மகிழ்ச்சியில் அச்சுதபட்டர் அங்கிருந்து விரைந்து சென்றார்.

* * *

லீனாவைக் கண்ட பிறகுதான் உதயசந்திரனுக்கு ஏற்பட்டிருந்த மனக்கலக்கம் மறையத் தொடங்கியது. லீனாவும் அவனும் தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது, அவனுடைய நினைவில் மேகலாவின் நினைவு குறுக்கே வந்து கொண்டிருந்தது.

சின்னராணியின் அழகுக்கும், லீனாவின் அழகுக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்! ராணியின் அதீதமான கவர்ச்சியினுள்ளே மூழ்கி, எப்படி மூச்சுத்திணறி விட்டான். காட்டாற்று வெள்ளம், நுங்கும் நுரையுமாகச் சீறிப் பாயும் போது, எவ்வளவு அழகும் கம்பீரமுமாக இருக்கிறது. ஆனால், அதில் சிக்கிக் கொண்டால் எப்படிச் சுற்றிச் சுழன்று, மூச்சுத் திணறி தண்ணீரின் ஆழத்துக்குள் அமிழ்ந்து விட வேண்டியிருக்கும். அப்படித்தானே, மேகலாவின் அணைப்புக்குள் சிக்கியிருந்தபோது, தத்தளித்துவிட்டான்.

'ஓ... என்ன உணர்ச்சி அது...! அந்த உணர்ச்சியின் ஆதிக்கத்தில் நம்மை இழந்து, பரவசத்தில் கிடப்பதையா ருத்திரபரமாச்சாரி, மகா சுகத்தின் முதல்படி என்றார்?

அப்படியானால், முதல்படியிலேயே அவ்வளவு அதிர்ச்சியிருந்தால் மகா சுகத்தை உணரும்போது, இந்த உடலால் அதைத் தாங்கிக் கொள்ளத்தான் முடியுமா....? இதோ, தெளிந்த ஓடை நீராக, இனிமையாகச் சலசலக்கும் லீனாவின் அழகில் வெறி இல்லை, கொந்தளிப்பு இல்லை, வேகம் இல்லை. உள்ளார்ந்த ஓர் இனிமை இருக்கிறதே....!'

லீனாவின் அமைதியான அழகு, உதயசந்திரனின் மனத்தில் இனிமையைப் பொழிந்து கொண்டிருந்தது. முந்தின நாள் இரவில் அரண்மனையில் பெற்ற அனுபவத்தால் அவனுள்ளே கிளர்ந்திருந்த உணர்ச்சிகள் மெல்ல மெல்ல மேலெழுந்தன. லீனாவின் சிவந்த அதரங்கள், இரண்டு நாட்களுக்கு முன் நடந்த சம்பவத்தை நினைவூட்டின—

இரண்டு நாட்களுக்கு முன் அவளைச் சந்தித்துவிட்டுப் பிரிந்தபோது, மிகுந்த வேட்கையுடன் அவளை மார்போடு அணைத்து அதரங்களில் முத்தமிட்டான். அப்போது லீனாவின் பூவுடல் நடுங்கியதை உணர்ந்தான். அவனுடைய அணைப்பிலிருந்து முதலில் திமிறினாள். பிறகு சரணடைந்துவிட்டாள். நீண்ட முத்தத்தின் பின் விடுபட்ட லீனாவின் கண்களில் நீர் முட்டியிருந்ததைக் கண்டதும் உதயசந்திரன் பதறிப்போனான். அவளுடைய மனத்தைப் புரிந்து கொள்ளாமல் வலிந்து தவறிழைத்துவிட்டோமோ என்று எண்ணி, மனம் உளைந்தான். லீனா, புது அனுபவத்தின் அதிர்ச்சியிலிருந்தாள். முதல் முத்தத்தின் புதுமையும், பரபரப்பும் எதிர்பாராமல் கிடைத்துவிட்ட வாய்ப்பினால் ஏற்பட்ட அளவு மீறிய மகிழ்ச்சியும் அவள் கண்களில் கண்ணீரைச் சுரக்க வைத்து விட்டன. அதைப் புரிந்து கொள்ளாத உதயசந்திரன், "லீனா, உன் மனதைப் புரிந்து கொள்ளாமல் நான் இப்படி..." என்று சொல்லி முடிப்பதற்குள் லீனா, அவன் கையைப் பற்றிக் கொண்டாள். அவனை

ஏறிட்டுப் பார்க்கத் தெம்பில்லை. வெட்கம் ஒருபுறம் பாடாய்ப்படுத்தியது.

"ஏதோ பயந்துவிட்டேன்" என்றாள் தரையை நோக்கியபடியே. பிறகு மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தெரிந்த மிரட்சி, அவனுக்கு அவள் மீது இரக்கத்தை உண்டு பண்ணியது. சிறு உணர்ச்சியைக் கூட, அது இன்ப உணர்ச்சியாயிருந்தாலும், தாங்க முடியாத அளவுக்கு அவள் உடல் அவ்வளவு மென்மை வாய்ந்தது என்பதைப் புரிந்து கொண்டான். அனிச்ச மலர், முகர்ந்து பார்த்தால் குழைந்துவிடுமாம். லீனாவின் உடல், பார்வையிலேயே குழைந்துவிடும்.

ஓ.... இந்த மலரை எவ்வளவு ஜாக்கிரதையாக அணுக வேண்டும்....

"என்ன, வந்ததிலிருந்தே ஒரே சிந்தனை?" என்று லீனாவின் குரல்தான் அவனைச் சுயநினைவுக்குக் கொண்டு வந்தது. அவளை வெறியோடு பார்த்தான். அவனுடைய கண்களில் தெரிந்த உணர்ச்சிகளின் சாயல்கள், அவளைச் சிலிர்க்க வைத்தன.

"நேற்று எங்கே போய்விட்டீர்கள்? நீங்கள் வருவீர்கள் என்று மாலையில் வெகுநேரம் எதிர்பார்த்தேன்" என்றாள் லீனா.

"நேற்று ஒரு யோகியின் ஆசிரமத்துக்கு நானும் ராஜனும் போயிருந்ததோம். அந்த யோகி, என்ன சொன்னார் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு அவளை வேட்கையுடன் பார்த்தான்.

"என்ன சொன்னார்?"—லீனா குழைந்தபடி கேட்டாள்.

அவளுடைய கையைப் பற்றி வருடியபடியே உதயசந்திரன் சொன்னான் : "உலக சுகங்களை நன்றாக அனுபவி

யுங்கள் என்றார். உலக அனுபவந்தான் கடவுளைக் காணும் வழியாம்."

"உலக அனுபவமென்றால்...?"

"உலக அனுபவமென்றால்.... இப்படி அருகில் வாயேன் சொல்கிறேன்" என்று கூறியபடியே சட்டென்று அவளை இழுத்து அணைத்தான். அப்போது அவன் மார்பில் கிடந்த மருக்கொழுந்து மாலை, உறுத்தியது.

"ஓ...இதுதான் உலகமோ?" என்று லீனா, அவனுடைய காதருகே முனகினாள். பிறகு, அவன் மார்பில் கிடந்து உறுத்திக் கொண்டிருந்த மாலையைக் கழற்றிக் கீழே போட்டாள்.

"எனக்கு நீதான் உலகம். உன் அருகில் இருப்பதுதான் இனிமையான அனுபவம்" என்றான், உதயசந்திரன்.

"யோகி இப்படியா போதனை செய்தார்?" என்று கேட்டுக்கொண்டே அவனைப் பார்வையால் வருடினாள். அந்த இனிமை அவன் உடல் முழுவதும் பரவிப் பரவச மூட்டியது.

"இப்படித்தான்" என்று முனகியவாறே அவளை இன்னும் இறுக அணைத்தான். இறுக்கத்தின் உணர்ச்சியில் லீனா உருகத் தொடங்கினாள். அவளுடைய கட்டுடல் அவனுடைய ஆதிக்கத்தில் நெளிந்தது, படர்ந்தது.

சற்றுத் தூரத்தில் சலசலப்புக் கேட்டது. உதயசந்திரன் திரும்பிப் பார்த்தான். ஒரு புதருக்கடியில் ராஜநாகம் நெளிந்து ஊர்ந்தபடி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

உதயசந்திரன் சட்டென்று லீனாவை விலக்கிவிட்டுக் கீழே கிடந்த ஒரு பெரிய கல்லை எடுத்தான்.

"ஐயோ, எறிந்துவிடாதீர்கள், பாவம்" என்று கூறிய வாறு அவனுடைய கையைப் பற்றிக் கொண்டாள், லீனா.

"பாவமா? ராஜநாகம், கொடிய விஷம். இந்தத் தோட்டத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கிறது ஆபத்து."

"இது என்னோடு நட்புக்கொண்டுவிட்டது. தினமும் இதை இந்தப் போதிமரத்தடியில் பார்க்கிறேன். பழகி விட்டது. நம்மை இது ஒன்றும் செய்யாது" என்றாள் லீனா.

"ஓ...! ராஜநாகம் கூட உனக்கு அடங்கிவிட்டதா லீனா, உன் அழகைப் பார்த்துத்தான் அது மயங்கி உன்னோடு சிநேகமாகிவிட்டது" என்று கூறிய உதயசந்திரன், கையிலிருந்த கல்லைக் கீழே போட்டுவிட்டு, அவள் முகத்தை ஏந்தினான்.

தோப்பில் ஏதோ ஒரு மரத்திலிருந்து குயில் கூவியது. இன்னொரு மரத்திலிருந்து ஓர் அணில், தன் துணையை அழைத்தது கேட்டது.

லீனாவின் கண்கள் மூடிக்கிடந்தன. உடலில் பரவிக் கொண்டிருந்த உணர்ச்சிகள், ஒவ்வோர் அங்கத்திலும் தேங்கி, பரவசப்படுத்தின. உதயசந்திரனின் கரங்கள் பரவிய இடங்களிலெல்லாம் உணர்ச்சிகள் பொங்கின. ஆனந்தப் பெருக்கால் பொங்கிப் பூரித்த அவளுடைய அங்கங்களின் அந்தரங்கமான ஸ்பரிசமொழி அவனுக்குப் புரிந்தது.

சற்று சுய உணர்வை எட்டிய லீனா, மெல்ல இறுக்கத்திலிருந்து திமிறினாள். அப்போது இரண்டு சிட்டுக் குருவிகள் மரக்கிளையில் வந்து அமர்ந்து கொண்டு கொஞ்சத் தொடங்கின. இடையிடையே அவர்களையும் கவனித்தன. "ஓ... புது அனுபவமா? இதோ, எங்களைப்போல் கொஞ்ச வேண்டும்" என்று கூறியது போலிருந்தது அவற்றின் பார்வை.

அணைப்பை நெகிழ்த்தாமலே, லீனாவின் காதில் மெல்லிய குரலில், "அந்தக் குருவிகள் பேரானந்த தியானத்தில் இருக்கின்றன" என்றான், உதயசந்திரன். அவளைப் பார்வையால் அள்ளினான். அந்தப் பார்வையின் தீவிரத்

தைத் தாளாமல் லீனா, துவண்டாள். இருவருடைய பார்வையும் கிளையிலிருந்த சிட்டுக்களின் சிங்காரச் சேட்டைகளில் பதிந்தது.

அந்தக் காலை நேரக் குளுமையும், தோப்பின் இயற்கை அழகும், பறவைகளின் காதல் கூவல்களும், தோப்பினூடே இசைபாடிக் கொண்டிருந்த தென்றலும், மருக்கொழுந்தின் மணமும், இளமையும் அங்கு ஒரு நாடகத்தையே நடத்திக் கொண்டிருந்தன.

பெரிய போதிமரத்தின் வேரில் சாய்ந்திருந்த உதய சந்திரனின் மார்பில் மாலையாகப் பின்னிக் கிடந்த லீனா, வேட்கைத் தீயில் கற்பூரமாகக் கரைந்து கொண்டிருந்தாள். அவளுடைய முச்சின் உஷ்ணத்தில், உதயசந்திரன் வெந்து கொண்டிருந்தான்.

உணர்ச்சியின் ஆணைகளுக்கு இரண்டு அடிமைகள் பணிந்து கொண்டிருந்தார்கள். சூழ்நிலை மறந்துவிட்டது. செடிகளும், கொடிகளும் காற்றில் தலைகளை அசைத்து, அவர்களை ஆமோதித்தன. பெரிய மரங்கள் அவர்களை வெளியுலகத்திலிருந்து மட்டுமல்லாமல் சூரியனிடமிருந்தும் மறைத்துக் காவலிருந்தன. தென்றல் அவர்கள் இருவருக்கும் ஊடே இடைவெளியைத் தேடித் தோற்றுக் கொண்டிருந்தது. மரக்கிளையிலிருந்து வேடிக்கை பார்க்க வேகமாகக் கீழே இறங்கிய ஒரு பெண் அணில், சற்று தள்ளி இரண்டு கால்களில் நின்றவாறு அவர்களைப் பார்த்தது. பிறகு, அதற்கு வெட்கம் வந்துவிட்டது போலும். திரும்ப மரத்தின் மீதே ஏறிக்கொண்டது. பறவைகள் சாட்சிகளாயிருந்தன.

இரு உயிர்கள், மகாசுகத்தின் முதற்படியில் ஏறிக் கொண்டிருந்தன.

23. தவறாகக் கையாண்ட தத்துவம்

வடமொழிக் கடிகையின் முன்னால் படைவீரர்கள் அணிவகுத்து நின்றார்கள். மக்களின் கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடிக் கொண்டிருந்தது. கடிகையின் பிரதான வாயிலின் முன்னால் உள்ள மைதானத்தில், கடிகை மாணவர்கள் கூடியிருந்தார்கள்.

கடிகைக்குள் மந்திரி அச்சுதபட்டர், கடிகையின் தலைவர் ஜேஷ்டபதி சோமாயாஜியிடம் பேசிக்கொண்டிருந்தார்.

"அதிகாரியைத் தாக்கிய ஐந்து மாணவர்களைச் சிறைப் பிடித்துப் போகும்படி உத்தரவு. அதை நிறைவேற்றத்தான் படைவீரர்கள் வந்திருக்கிறார்கள்" என்றார், அச்சுதபட்டர்.

"அத்தனை மாணவர்களில் தாக்கியவர்கள் யாரென்று எப்படிக் கண்டுபிடிக்க இயலும்? மேலும் அதிகாரி திமிராக நடந்து மாணவர்களையும், பண்டிதர்களையும் அவமானமாகப் பேசியதால்தான், மாணவர்கள் கோபம் கொண்டனர்" என்றார், ஜேஷ்டபதி சோமயாஜி.

"தவறு செய்த மாணவர்கள் சரணடையாவிட்டால், படைவீரர்கள் கடிகைக்குள் நுழைவார்கள்" என்றார் அச்சுதபட்டர்.

"மந்திரியாகிய தாங்களே இப்படி அச்சுறுத்துவது நியாயமா?"

"குற்றவாளிகளைத் தண்டிப்பதும் மந்திரியின் கடமைதான்" என்று கோபத்தோடு சொன்னார் மந்திரி.

"மாணவர்கள் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார் சோமயாஜி.

"குற்றவாளிகளைத் தண்டிக்கத்தான் அரசு உத்தரவே தவிர மற்றவர்களை அல்ல."

"குற்றவாளி யாரென்று குறிப்பிட இயலாதபோது என்ன செய்வது?"

"செய்த குற்றத்துக்காக கடிகை, அபராதமாக இருபதினாயிரம் பொற்காசுகள் தருவதானால் மன்னிக்கலாம்" என்றார் அச்சுதபட்டர்.

"இவ்வளவு பெரிய தொகையை அபராதமாக விதித்தால் கடிகையால் தாங்க முடியாது. மந்திரி அவர்களே, நீங்கள் இருபதினாயிரம் பொற்காசுகளைப் பறிப்பதும் ஒன்றுதான், கடிகையை மூடச் சொல்வதும் ஒன்றுதான்" என்றார் சோமயாஜி கோபத்துடன்.

"கடிகையை மூடினாலும் அதுபற்றி எங்களுக்குக் கவலையில்லை. கடைசியில் உங்கள் முடிவென்ன?"

"எங்களால் அவ்வளவு காசுகள் தர இயலாது."

"இதுதான் முடிவா? நன்றாக யோசித்துச் சொல்லுங்கள், இருபதினாயிரம் பொற்காசுகள் தருவதானால் படையைத் திருப்பி அனுப்பி விடுகிறேன்."

"நான்தான் சொல்லிவிட்டேனே, இல்லையென்று" என்றார் சோமயாஜி உறுதியுடன்.

அச்சுதபட்டர் கோபத்துடன் எழுந்து வாசலுக்கு விரைந்தார். முற்றத்துப்பகுதியில் மாணவர்களின் கூட்டத்தைப்பார்த்ததும், "அதிகாரியைக் காயப்படுத்திய மாணவர்கள் சரணடையுங்கள். இல்லையென்றால் கடிகை சூறையாடப்படும்" என்றார்.

உடனே ராஜன் நம்பூதிரி முன்னால் வந்து, "நான் சரணடைகிறேன்" என்றான். மற்ற மாணவர்கள் திகைத்தனர். அதிகாரியைத் தாக்கிய மாணவர்களில் ராஜன் நம்பூதிரி இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். அவன் வலியச் சரணடைந்ததைக் கண்ட மற்ற மாணவர்களிடையே பரபரப்புத் தோன்றியது.

மற்றொரு மாணவன் முன்னால் வந்து, "நான் சரண டைகிறேன்" என்றான். பிறகு, அவனைத் தொடர்ந்து ஒவ் வொரு மாணவனாக சரணடையத் தொடங்கினர்.

அச்சுதபட்டர் திகைத்தார். கடிகை மாணவர்கள் அனைவரும் சரணடைவதாகக் கூறிக் கொண்டிருந்தது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அனைவரையும் சிறைப்பிடிக்க முடியுமா? கடிகையின் வெளியே வீதியில் மக்கள் கூட்டம் கூடியிருந்தது.

"இதென்ன கேலியா செய்கிறீர்கள்?" என்று கோபத் தில் கர்ஜித்தார், அச்சுதபட்டர்.

"மதிப்புக்குரிய மந்திரி அவர்களே, குற்றம் புரிந்த அதிகாரிக்காக எங்களைத் தண்டிக்க வந்துவிட்டீர்கள். உங்கள் அதிகாரிதான் முதலில் எங்களை அவமானமாகப் பேசினார். உங்களுடைய நேர்மையான நீதிக்குப் பணியக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"தம்பி, படைவீரர்கள் உள்ளே நுழைந்தால் என்ன நடக்கும் தெரியுமா?" என்று இரைந்தார் மந்திரி.

"தெரியும் ஐயா, இரத்த ஆறு ஓடும். மாணவர்கள் அநியாயத்தை எதிர்த்து நிற்பார்கள். கடைசியில் அநியாயம் உங்கள் தலைமையில் வெற்றியடையும்" என்றான் ராஜன் நம்பூதிரி. மற்ற மாணவர்களிடையே சிரிப்பொலி எழுந்தது.

"அரை நாழிகை நேரம் தருகிறேன். அதற்குள் அதிகாரி யைத் தாக்கிய ஐந்து மாணவர்களும் சரணடைய வேண் டும். இல்லையென்றால் பல படைவீரர்கள் கடிகைக்குள் நுழைவார்கள்" என்றார் அச்சுதபட்டர்.

"ஐந்தென்ன, நாங்கள் ஐந்நூறு மாணவர்கள் வேண்டு மானாலும் சரணடைகிறோம். எதற்காக ஐந்து மாணவர் களை மட்டும் கொடுமைக்குள்ளாக்க வேண்டும்?" என் றான் ராஜன் நம்பூதிரி.

"நான் பேசத் தயாரில்லை. அரை நாழிகை தான் காலக் கெடு" என்று கூறிவிட்டு, வாசலைத்தாண்டி, படைவீரர் களை நோக்கிச் சென்றார், அச்சுதபட்டர்.

வீதியில் கூடியிருந்த மக்கள் கூட்டத்திலும் சலசலப்புத் தோன்றியிருந்தது. படைவீரர்கள் எதற்காக வந்திருக் கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. மக்களைக் கலைந்து செல்லும்படி மந்திரி ஆணையிட்டார். ஆனால் கூட்டம் கலையவில்லை.

மந்திரி கொடுத்திருந்த அரை நாழிகைக் கெடு முடிந்தது. மந்திரி, படைவீரர்களைக் கடிகையினுள் செல்லும்படி உத்தரவிட்டார். படைவீரர் கடிகையை நெருங்கியதும், உள் முற்றத்திலிருந்த மாணவர்கள் அனைவரும் வாசலுக்கு வந்து, படிகளின் குறுக்கே அமர்ந்து விட்டார்கள். படைவீரர்கள் அவர்களைத் தாண்டிக் கொண்டுதான் செல்ல வேண்டும். வீரர்கள் கோபத்துடன் பாய்ந்தார்கள். மாணவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் ஆயுதங் தாங்கிய வீரர்களின் முன்னால் மாணவர்கள் என்ன செய்ய இயலும்? இரண்டு மாணவர்களின் தலைகள் வெட்டுண்டு படிகளில் உருண்டன.

எங்கும் பீதி சூழ்ந்து கொண்டது. அந்தச் சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த உதயசந்திரன், நிலைமையைப் புரிந்து கொண்டான். வாசலில் நுழைய முயன்று கொண்டிருந்த வீரர்களில் இருவர் மீது ஆக்ரோஷத்தோடு பாய்ந்தான். மறுகணம், இரு வீரர்களும் துடிதுடித்துக் கீழே சாய்ந்தார்கள் அதே சமயம் ஒரு குதிரை வீரன், உதயசந்திரனை அணுகி னான், உதயசந்திரனின் கை, மின்னல் வேகத்தில் குதிரையின் கழுத்தைத் தாக்கியது. குதிரை இரத்தம் கக்கியபடி கீழே சாய்ந்தது. குதிரையிலிருந்து வீரன் கீழே விழுந்து குதிரைக்கு அடியில் சிக்கிக் கொண்டான்.

அதைக் கண்டதும், மக்கள் கூட்டத்துக்குத் தெம்பு வந்துவிட்டது. கூட்டம் படைவீரர்களைத் தாக்கத் தொடங்கியது. கடிகையின் வாசல், ஒரு போர்க்களம் போல் காட்சியளித்தது. அந்தச் சமயத்தில் சாதாரண உடையில் வந்து சேர்ந்த இரணியவர்மரின் படைவீரர்கள், கூட்டத்தோடு சேர்ந்து அரண்மனை வீரர்கள் மீது பாய்ந்தார்கள். சில விநாடிகளுக்குள் அரண்மனை வீரர்கள், பின்னடைந்து ஓடத் தொடங்கினர். கூடவே மந்திரியும் குதிரையில் ஏறித் தப்பினார்.

சற்று நேரத்துக்குப்பின் அந்த இடம் வெறிச்சோடி விட்டது, ஆள் நடமாட்டமே இல்லை. வீதியிலும் கடிகையின் வாசற்படிகளிலும் எட்டு வீரர்கள் பலத்த காயத்துடன் விழுந்து கிடந்தனர். குதிரையின் சடலம் வீதியின் ஓரத்தில் கிடந்தது, கடிகையின் பிரதான வாசற்கதவை அடைத்து விட்டனர். வெட்டுண்ட இரு மாணவர்களின் சடலங்களைக் கடிகைக்குள் எடுத்துச் சென்றுவிட்டனர்.

கடிகைக்குள் எல்லாரும் பீதியினால் குழம்பிப் போயிருந்தார்கள். உதயசந்திரனும், ராஜன் நம்பூதிரியும் எல்லாருக்கும் தைரியமூட்டிக் கொண்டிருந்தனர். தாக்க வந்த படையினர் ஏன் பின் வாங்கி ஓடினர் என்பது ஒருவருக்கும் புரியவில்லை. கூட்டத்தினரிடையே சாதாரண உடையில் இரணியவர்மரின் படைவீரர்கள் இருந்தது யாருக்கும் தெரியாது. மக்கள் ஆயுதம் தாங்கி வந்து கடிகையைக் காத்தனர் என்று நம்பினர். மீண்டும் அரண்மனை வீரர்கள், தண்டிக்க வரலாம் என்ற பயமிருந்தது. கடிகைத் தலைவர், ஜேஷ்டபதி சோமயாஜி, முதன் மந்திரியைச் சந்திக்க விரைந்தார்.

* * *

முதன் மந்திரியின் மாளிகைக்குள் ஜேஷ்டபதி சோமயாஜி நுழைந்ததுமே, முதன் மந்திரி விரைந்து வந்து, சோம

யாஜியின் முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து, அவருடைய கால்களைப் பற்றிக் கொண்டார்.

"என்னை மன்னியுங்கள் சோமயாஜி. உங்களுக்குக் கொடுந் துன்பம் நேர்ந்துவிட்டது. என்னை மன்னியுங்கள்" என்றார்.

சோமயாஜி பதறிப்போய், குனிந்து முதன்மந்திரியைத் தூக்கினார். "ஓ... என் காலில் தாங்கள் விழுந்து வணங்குவதா? அபச்சாரம்" என்றார்.

முதன் மந்திரி மெய் நடுங்க, கண் கலங்கி நின்றார். "என்னை மன்னியுங்கள்" என்றார், நாத்தழுதழுக்க.

சோமயாஜியும் கண் கலங்கினார். "என் குழந்தைகள் இருவரை வெட்டிச் சாய்த்து விட்டார்களே. உங்களுடைய ஆட்சியிலா இந்தக் கொடுமை?" என்று கூறிப் பொங்கி அழுதார்.

சோமயாஜியின் தோளைப் பற்றியணைத்து ஆசனத்தில் இருத்தித் தாமும் அருகில் அமர்ந்து கொண்டார், முதன் மந்திரி.

"மந்திரி அவர்களே, இனி நான் பல்லவ நாட்டில் இருப்பது நல்லதல்ல. கடிகையை வேறு எங்காவது அமைத்துக் கொள்கிறேன்" என்றார், சோமயாஜி.

"தாங்கள் எல்லாம் தெரிந்த ஞானி. வேதங்களைக் கரை கண்டவர். தாங்களே இப்படி மனம் கலங்கிப் பேசலாமா? நடை பெற்றவை அனைத்துக்கும் நானே பழியை ஏற்றுக் கொள்கிறேன். தாங்கள் தாம் அடியேன் மீது கருணை கொண்டு மன்னிக்க வேண்டும். சிறிது சுணக்கம் ஏற்பட்டு விட்டது. இல்லையென்றால் ஒரு கேடும் நடைபெற்றிராமல் சாதாரண உடைகளில் நான் அனுப்பியிருந்த வீரர்கள், அரண்மனை வீரர்களை விரட்டியிருந்திருப்பார்கள்" என்றார், முதன் மந்திரி.

"கடிகை வாசலிலேயே இரண்டு பிள்ளைகள் வெட்டுண்டு உருண்டதை இந்தக் கண்களால் காண நேரிட்டு விட்டது, மந்திரி அவர்களே" என்று கூறி, மீண்டும் குலுங்கி அழுதார், சோமயாஜி.

"தாங்கள் என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள், நான் ஏற்கிறேன்."

"மந்திரி அவர்களே, எங்கள் கடிகையின் புகழ் உங்களுக்குத் தெரியும். சரஸ்வதி குடியிருக்கும் கோயில் படிகளில், அவளுடைய குழந்தைகளையே வெட்டி இரத்தக் கறை ஏற்படுத்தியபின், கடிகை இந்த நாட்டுக்குத் தேவையில்லை" என்றார், சோமயாஜி.

அவருடைய கைகளைப்பற்றிக் கொண்டு முதன்மந்திரி இறைஞ்சினார். "சோமயாஜி அவர்களே, ஆள்பவர்கள் தோன்றுவார்கள், மறைவார்கள். ஆனால் நாடு என்றும் நிலைத்திருக்கும். இன்றைய மகாராணியும், ராஜகுமாரனும் நாளை மறையலாம். நாட்டைக் கருதித்தாம் நாம் செயல்பட வேண்டுமே தவிர, அவ்வப்போது ஆள்பவர்களின் மீதுள்ள கோபதாபங்களைக் கருதியல்ல. தங்களுடைய மனவேதனையை நான் உணர்கிறேன். நடந்துவிட்ட சம்பவம், என் மனத்தையும் பெரிதும் பாதித்து விட்டது. தாங்கள் சாந்தியடையுங்கள். இந்த நாட்டையும் என்னையும் மன்னியுங்கள்" என்று முதன்மந்திரி இருகரங்களையும் கூப்பி வணங்கினார். கண்களில் நீர் மல்க வேண்டி நின்றார். பிறகு சொன்னார், "நான் தங்களுக்கு உறுதி கூறுகிறேன். கடிகைக்கு இனி ஒரு தீங்கும் நேராமல் பார்த்துக் கொள்கிறேன். இது உறுதி."

ஜேஷ்டபதி சோமயாஜி சற்று சாந்த மடைந்தார். பல்லவ சாம்ராஜ்யத்தின் முதன்மந்திரி பரிதாபமாக வணங்கி வேண்டியபோது, கடிகைத் தலைவர் நெகிழ்ந்து விட்டார். முதன்மந்திரி சொன்னார்: "ஒரு நாட்டின் பெருமையும்,

கலாச்சாரமும் வெறும் சோற்றுக்காக உழைக்கும் கூலி களால் அல்ல. சிந்தனையாளர்களால்தாம். அறிவாளிகளை உருவாக்கும் கடிகையின் பெருமையை உணராத அச்சுத பட்டர், என் மந்திரி சபையில் இருப்பதை எண்ணி நான் தலைகுனிகிறேன். சக்ரவர்த்தி வந்ததும் தங்களுக்கு நேர்ந்த கொடுமைகளுக்கெல்லாம் ஈடுசெய்ய வைக்கிறேன்."

"இந்தப் பல்லவ சாம்ராஜ்யமே நினைத்தாலும், கடிகைப்படிகளில் உயிர் நீத்த இரு மாணவர்களைத் திரும்ப எனக்களிக்க முடியுமா, முதன் மந்திரி அவர்களே?"

"ஈடு செய்ய முடியாத துன்பத்தைக் காலம்தான் தணிக்க முடியும். தங்கள் கடிகையில் நடந்துவிட்ட சம்ப வம், இந்தச் சாம்ராஜ்யத்துக்கே இழுக்குத்தான். இந்த இழுக்கை இந்த அரசு தேடிக்கொடுத்து விட்டது. இதற்கு எவ்வளவு பிராயச்சித்தம் செய்தாலும் தீராது" என்றார் முதன் மந்திரி.

கடிகைத் தலைவர் விடைபெற்றபோது, முதன் மந்திரி, "உதயசந்திரனை அரண்மனை வீரர்கள் தேடிக்கொண் டிருக்கிறார்கள். இரண்டு வீரர்களை தாக்கி வீழ்த்தி ஒரு குதிரையையும் கொன்றதற்காக அவனைத் தேடுகிறார்கள். இப்போது அவன் எங்கே இருக்கிறான்? அவனுடைய நண்பன் உங்கள் கடிகையில் இருப்பதாகக் கேள்விப் பட்டேன்" என்றார்.

"ஸ்ரீராஜன் நம்பூதிரி என்னும் மாணவனின் நண்பன் அவன். இப்போது அவன் எங்கள் கடிகைக்குள் தானிருக் கிறான்."

"அவனை வெளியே விடாதீர்கள். அவனை ஆபத்து சூழ்ந்திருக்கிறது. அவன் உங்கள் கடிகையிலிருப்பது வெளியே தெரியவேண்டாம்" என்றார் முதன்மந்திரி. பிறகு, "உங்கள் மாணவர்களிடம் என் வருத்தத்தை தெரிவி யுங்கள்" என்றார்.

கடிகைத் தலைவர் விடைபெற்றுச் சென்றதும் முதன் மந்திரி ஒரு காவல் வீரனை அழைத்து, "நீ சீனத்தோட்புக்குச் சென்று, டெங்லீயிடம், உதயசந்திரன் வந்தால் அவனை ஒளித்து வைக்கும்படி சொல். அவனை அரண்மனை வீரர்கள் தேடுகிறார்கள் என்று கூறு. அவனுக்கு ஆபத்து என்பதையும் தெரிவித்து, ஜாக்கிரதையாக இருக்கச் சொல்" என்று கட்டளை இட்டார். பிறகு ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்துக்குச் செல்வதற்காகப் பல்லக்கில் ஏறினார்.

* * *

அரண்மனையில் மந்திராலோசனை மண்டபத்தில் சித்திரமாயன் குறுக்கும் நெடுக்குமாக கோபத்துடன் நடந்து கொண்டிருந்தான். சற்று தள்ளியிருந்த ஆசனத்தில் அமர்ந் திருந்த மேகலா ஓரக் கண்ணால் அருகே அமர்ந்திருந்த மகா ராணி பிரேமவர்த்தினியைக் கவனித்துக் கொண்டிருந்தாள். மந்திரி அச்சுதபட்டர், கைகட்டியபடி நின்று கொண்டி ருந்தார். படைவீரர்களைத் தெருக்கூட்டம் விரட்டியடித்து விட்டது என்ற செய்தியைக் கேட்டுவிட்டு சித்திரமாயன் குமுறிக் கொண்டிருந்தான்.

"தெருக்கூட்டத்திற்குப் பயந்து திரும்பி ஓடி வந்திருக் கிறீர்களே, வெட்கமாயில்லை? அந்தக் கூட்டம் முழுவதை யும் ஒழித்துவிட்டல்லவா வந்திருக்க வேண்டும்" என்று அச்சுதபட்டரைப் பார்த்து இரைந்தான்.

"கூட்டத்தினரும் ஆயுதம் தாங்கியல்லவா தாக்கி னார்கள். பயிற்சி பெற்ற போர்வீரர்களைப் போலல்லவா சாடினார்கள்" என்றார் அச்சுதபட்டர். அவர் குரல் பயத்தி னால் நடுங்கியது. "அப்படி மக்கள் கும்பலாக வந்து தாக்கு வார்கள் என்று தெரிந்திருந்தால், இன்னும் அதிகமாக வீரர்களை அழைத்துச் சென்றிருந்திருப்பேன்" என்றார்.

அப்போது மகாராணி பிரேமவர்த்தினி குறுக்கிட்டு, "படை வீரர்களோடு கடிகைக்குப் போனதே தவறு" என்றாள்.

மேகலா உடனே குறுக்கிட்டு, "முதலில் வரி கேட்கச் சென்ற நம்முடைய அதிகாரியை அடித்து விரட்டினார்களே" என்றாள்.

மேகலா குறுக்கிட்டதை விரும்பாத மகாராணி அவள் பக்கம் திரும்பாமலேயே மந்திரியைப் பார்த்துக் கோபத்துடன், "படை வீரர்களை அழைத்துச் செல்லும்படி உங்களுக்கு நான் உத்தரவு தரவில்லையே" என்றாள்.

அச்சுதபட்டர் திகைப்புற்று நடுங்கியவராய் வாய் புதைத்தபடி, "சின்ன ராணியாரின் அனுமதி பெற்றுத்தான் சென்றேன்" என்றார்.

மகாராணிக்கு உள்ளுரக் கோபம் எழுந்தது. திரும்பி மேகலாவை முறைத்துப் பார்த்தாள். மேகலா அலட்சியமாக வேறு திசையில் பார்த்துக் கொண்டிருந்தாள். மகாராணி கோபத்தை உள்ளடக்கியவாறே மந்திரியிடம் திரும்பி, "அரண்மனையின் உத்தரவை நிறைவேற்றும்போது உங்கள் அறிவையும் உபயோகித்து, நிலைமைக்குத் தகுந்தபடி நடந்திருக்க வேண்டும். இப்படி அவமானப் பட்டுத் திரும்பியிருக்க வேண்டியதில்லை. இது எனக்கு மல்லவா அவமானம்" என்றாள்.

அவளுடைய குரலில் ஒலித்த கடுமை, மந்திரியை நடுங்க வைத்தது. தன்னிடம் கேளாமல் மேகலாவிடம் மந்திரி உத்தரவு பெற்றதை எண்ணிக் கோபம் கொண்டாள். ஆட்சிப் பொறுப்பில் மேகலா தலையிடுவது பிரேமவர்த்தினிக்கு எரிச்சல் மூட்டியிருந்தது.

மந்திரி பயந்துபோய் வாய் பொத்தியபடி, "கொஞ்சம் அவசரப்பட்டு விட்டேன். மன்னித்துக் கொள்ளவேண்டும்" என்றார். பிறகு, "அங்கிருந்து கலைந்த கூட்டம், வேறு பல இடங்களுக்கும் சென்று சேதம் விளைவித்திருக்கிறது. சிலர் ருத்ர பரமாச்சாரியின் ஆசிரமத்துக்குள் நுழைந்து,

கல்லெறிந்திருக்கிறார்கள். ஆசிரமத்து மரங்கள் பலவற்றை வெட்டி சேதப்படுத்தி விட்டார்கள்" என்றார்.

"யாரோ தூண்டிவிட்டிருப்பதால் தான் இப்படியெல்லாம் நடைபெற்று இருக்கிறது. சைவ வைணவ பிரமுகர்கள் தாம் ஆசிரமத்தைத் தாக்கத் தூண்டியிருப்பார்கள்" என்றான், சித்திரமாயன்.

"பொதுவாகவே மக்களுக்கு ஆசிரமத்தின் மீது நல்ல அபிப்பிராயம் இல்லை. சில தினங்களுக்கு முன், கைலாசநாதர் கோயில் மைதானத்தில், சிவாச்சாரியார் உபந்நியாசம் செய்தபோது, ஆசிரமத்தைத் தாக்கிப் பேசினார். வடமொழிக் கடிகையில் பண்டிதராயிருக்கும் ஸ்ரீபரந்தாமனும் தெப்பக்குளத்துக்குப் பக்கத்தில் உபந்நியாசம் செய்தபோது, ருத்திர பரமாச்சாரியைப் பழித்தாராம். இவர்களுடைய பேச்சுக்கள்தாம் மக்களைத் தூண்டியிருக்க வேண்டும்" என்றார், அச்சுதப்பட்டர்.

"பரமாச்சாரியின் கோட்பாடுகளும், ஆசிரமமும் அரண்மனையின் அபிமானத்தைப் பெற்றவை. மகாராணி எந்த மதக் கோட்பாடுகளில் நம்பிக்கை வைக்கிறார்களோ, அது தான் மக்கள் பின்பற்ற வேண்டிய கோட்பாடுகள். என்னுடைய முப்பாட்டனாருக்குப் பாட்டனாரான மகேந்திரபல்லவர், முதலில் சமண சமயத்தவராக இருந்தவர்தாமே. திருநாவுக்கரசர் தாமே அவரை சைவ சமயத்துக்கு மாற்றினார். இப்போது, மகாராணியார், யோகியின் தத்துவங்களை ஆதரிக்கிறார்கள். மக்களும் அதைப் பின்பற்றுவது தான் அவர்களுடைய கடமை. இல்லையென்றால், சைவ வைணவக் கோயில்களையும், மடங்களையும் இடிக்க உத்தரவிட வேண்டியிருக்கும்" என்றான் சித்திரமாயன், கோபத்துடன்.

மகாராணி பிரேமவர்த்தினி அவன் கூறியதை ஆமோதித்துத் தலையை அசைத்தாள். பிறகு, அவள் மந்திரியிடம்,

"ஆசிரமத்துக்குக் கேடு விளைவிப்பவர்கள் கடுந்தண்டனைக்குள்ளாவார்கள் என்று பறையறையச் சொல்லுங்கள். தீங்கு விளைவிப்பவர்களை சிறைப்பிடித்து முச்சந்தியில் கழுவேற்றுங்கள்" என்று ஆணையிட்டாள்.

"நம்முடைய வீரர்களைத் தாக்கியவர்களை நம்மவர்களால் அடையாளம் காட்ட முடியுமா?" என்று கேட்டான், சித்திரமாயன்.

"கூட்டத்தில் எப்படிக் கண்டிருக்க முடியும்? முதலில் மக்கள் பீதியடைந்து சும்மாதானிருந்தார்கள். ஆனால் திடீரென்று நம் வீரர்களில் இருவரை ஒருவன் தாக்கவே, நிலைமை மாறிவிட்டது" என்றார், மந்திரி.

"யார் அவன் அவ்வளவு துணிவுள்ளவன்?"

"வீரப் போட்டியில் ஆயுதமில்லாமல் போரிட்டானே, அவன் தான். ஒரு குதிரையைக் கையினால் அடித்தே கொன்றுவிட்டான்! அவன் தாக்கியதால்தான் மக்கள், தெம்படைந்து தாக்கத் தொடங்கினர்!"

"ஓ, அவனா...?" என்றாள். மேகலா, "குதிரையையே கையினால் வீழ்த்தி விட்டானா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம் தேவியாரே. ஒரே அடிதான் அடித்தான். குதிரை அந்த இடத்திலேயே ரத்தமாகக் கக்கி, விழுந்து விட்டது."

"எவ்வளவு திறமை!" – மேகலா வியந்தாள்.

"அவனைப் பாராட்டிக் கொண்டிருக்க இதுவா நேரம்? நம்முடைய படைக்கே அவமானத்தை ஏற்படுத்தியிருக்கிறான்" என்று மகாராணி கோபத்துடன் கூறியவாறே, அருகிலிருந்த படைத் தலைவனிடம், "அவன் எங்கிருந்தாலும் தேடிப்பிடித்துக் கொண்டுவரவேண்டும். அவனை உயிருடன் பிடிக்க முடியவில்லையென்றால், அவனுடைய

பிணத்தையாவது கொண்டுவா. போ, அவனை வேட்டையாடுங்கள்" என்றாள்.

மேகலா துணுக்குற்றாள். மனம் படபடத்தது. உதயசந்திரனின் அழகிய முகம் நினைவில் தோன்றியது. பரபரப்படைந்தாள். தன்னுடைய படுக்கையறைக்குச் சென்று கட்டிலில் சோர்ந்து படுத்தாள்.

உதயசந்திரனுக்குத் தீங்கு ஏதும் நேர்ந்து விடக் கூடாதே என்ற கவலை அவளைப் பற்றிக்கொண்டது. அவனைப் பற்றிய நினைவு உடலில் பரவசத்தை மூட்டிக் கொண்டிருந்தது. அன்று அவன் திடீரென்று விலகி ஓடியதிலிருந்து அவளுடைய மனநிலை சரியாக இல்லை. அவனைப் பற்றிய எண்ணங்களே அவளை சதா அலைக் கழித்துக் கொண்டிருந்தன.

தன்னை மறந்த நிலையில் அவனை நெருங்கியதையும், அதுநாள் வரை அவள் அனுபவித்திராத புதுமையான உணர்ச்சி அலைகளின் இனிமையை உணர்ந்ததையும் எண்ணியெண்ணி லயித்தாள். விவரிக்க இயலாத ஆனந்தலாகிரியில் முழ்கித் திளைத்ததை எண்ணியபோதெல்லாம் அவள் உடல் பரவசமடைந்தது. காதல்தான் பேரின்பத்தின் முதற்படி என்று பரமாச்சாரி சொன்னது நினைவில் வந்தது.

யோகி சொன்ன பரியங்க யோகத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே உதயசந்திரன் பிரிந்து ஓடிவிட்டானே என்ற ஏமாற்றம் மேகலாவை மிகவும் வாட்டியது. ஏக்கம் பற்றிக் கொண்டது.

பேரானந்தத்தின் குறுக்கு வழி என்றாரே ! வழியின் ஆரம்பக் கட்டத்திலேயே உணர்வுகள் இவ்வளவு வேகத்தோடு உடலையும், உள்ளத்தையும் ஆட்டிப்படைக்கிறதே ! பேரானந்த உணர்வை நெருங்கும்போது, இந்த உணர்வு

களின் சக்தி...! ஓ....! வார்த்தைகளால் வர்ணிக்கவே இயலாது போலிருக்கிறதே...

மேகலாவின் மனம் குழம்பியது. தான் உண்மை யிலேயே பேரொளியைக் காணும் தவிப்பிலா உதய சந்திரனை நாடுகிறோம் என்ற சந்தேகம் தோன்றியது. அவனுடைய கவர்ச்சியான முகமும், வெறியூட்டும் கட்ட மைந்த உடலும் தனக்குள் தோற்றுவிப்பது வெறும் காம வெறியாக அல்லவா தோன்றுகிறது என்று எண்ணினாள்.

உண்மையிலேயே அவன் மீது மாளாத காதலா கொண்டு விட்டாள்? அவனுக்காக அவள் எதையும் தியாகம் செய்யத் தயாரா? அந்த அரண்மனையையும், வருங்கால மகாராணி என்னும் பதவியையும் துறந்துவிட்டு, அவனுடன் பரியங்கயோகம் பயில அவள் தயார் தானா?

அவளுக்கு அரண்மனை வேண்டும். அதிகாரம் வேண்டும். உதயசந்திரனும் வேண்டும்...காமம் தணிய வேண்டும்...

அவளுக்குத் தேவை சுகானுபவம். அதைப் பெறு வதில் தான் என்ன தவறு? அவள் வருங்கால மகாராணி. பல்லவ சாம்ராஜ்யமே அவளுடைய அனுபவத்துக்குத் தானே. உதயசந்திரன் அவளுடைய பிரஜை. மகாராணி யின் அடிமை. அடிமையை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்...

ஆனால், அவளுக்கு ஒரு விஷயம் புரியவில்லை. உதயசந்திரன் திடீரென்று ஏன் விலகி ஓடினான்? மெய்மறந்து லயிப்பில் இருந்தவன், மேலும் தொடராமல் ஏன் விலகினான்? ராணி என்னும் அந்தஸ்து உணர்வு, அவனைப் பாதித்திருக்குமோ; பயந்திருப்பானோ?... அப்படித்தானிருக்கும். அவனுடைய பயத்தைப் போக்க வேண்டும்...ஓ! அந்த சில விநாடிகளில் அனுபவித்த சுகம்...

தன்னுடைய மெய்க்காவல் வீரனை அழைத்தாள். "உதயசந்திரன் என்னும் ஒருவனைச் சிறைபிடிக்க அரண்மனைப் படைத்தலைவனுக்குக் கட்டளை இடப்பட்டிருக்கிறது. நீ உடனே படைத்தலைவனைச் சந்தித்து, உதயசந்திரனுக்கு எவ்வித ஆபத்தும் விளைவிக்காமல் பிடித்து என்னிடம் கொண்டு வரச்சொல். அவனுக்குச் சிறு காயம் கூடப் பட்டுவிடக்கூடாது, ஜாக்கிரதை" என்று உத்தரவிட்டாள். அதன் பிறகுதான் அவள் மனம் நிம்மதியடைந்தது.

24. மயானத்தில் மனக்கொதிப்பு

யோகி ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்துப் பிரதான வாயிலை நெருங்கியதுமே தரணிகொண்ட போசர் திடுக்கிட்டார். ஆசிரமத் தோட்டத்தின் ஒரு பகுதி பாழாகிக் கிடந்தது. வடமொழிக் கடிகையிலிருந்து சிதறி ஓடிய மக்கள் கூட்டம் வழியிலிருந்த ஆசிரமத்தில் கோபத்தைத் தணித்துக் கொண்ட விதத்தைக் கண்டு முதன் மந்திரி மனம் வருந்தினார்.

முதன் மந்திரியை யோகி பரமாச்சாரி எதிர்கொண்டு வரவேற்றார். யோகியின் கைகளைப் பற்றிக்கொண்ட முதன்மந்திரி, "சுவாமி, மக்கள் கூட்டம் அறியாமையால் தங்கள் ஆசிரமத் தோட்டத்தைப் பாழ்படுத்திவிட்டது" என்றார்.

ருத்திர பரமாச்சாரி சிரித்தபடியே, "முதன் மந்திரி அவர்களே, உங்கள் பிரஜைகளின் கோபத்துக்கு இங்குதான் வடிகால் கிடைத்தது. இங்கு காணப்படும் காட்சி, அவர்களுடைய உணர்வுகளின் முத்திரைகள்" என்றார்.

"சுவாமி, இப்படி நடைபெற்றதற்கு மிகவும் வருந்துகிறேன். மன்னிக்க வேண்டும். இதைக் கேள்விப்பட்டுத்

தான் வருகிறேன். மக்கள் சார்பில் நான் தங்களிடம் மன்னிப் புக் கேட்கிறேன்."

"இதில் மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது? இதுபற்றி நான் ஏதும் குற்றம் சாட்டினாலல்லவா மன்னிப்பு பற்றிய பிரச்னையே எழுகிறது. சில நாட்களுக்கு முன் ஓர் இரவில் வீரர்களால் விரட்டப்பட்ட மக்கள், குடும்பம் குடும்பமாக இந்தத் தோப்பில் சரண் புகுந்தார்கள். இன்று, அதே காஞ்சி மக்கள்தாம் தோப்பைப் பாழ்படுத்தியிருக்கிறார்கள். மக்கள் மீது எந்தக் குறையுமில்லை. காஞ்சி மக்கள் திருப்தியின்றிக் குமைகிறார்கள் என்பதுதான் இதற்குப் பொருள். அவர் களைத் திருப்திப்படுத்த ஆட்சி தவறிவிட்டது. மக்களின் மனத்தில் ஆரோக்கியமில்லை" என்றார், யோகி.

"உண்மைதான் சுவாமி. மக்கள் அதிருப்தியோடு தானிருக்கிறார்கள். அந்தக் கோபந்தான் இங்கே தாக்கி யிருக்கிறது. மேலும், காஞ்சி மக்களுக்குத் தங்கள் மீது சந்தேகம் வேறு தோன்றியிருக்கிறது" என்றார், மந்திரி.

"என் மீது சந்தேகமா?"

"உங்களுடைய போதனைகள் மீதுதாம். உங்களுடைய கோட்பாடுகள் சமூகத்தைப் பாதிக்கும் என்று அஞ்சுகிறார் கள்."

இதைக் கேட்டு ருத்ர பரமாச்சாரி கலகலவெனச் சிரித்தார். "சமூகம் உயர்வதற்கே என்னுடைய தத்துவங்கள் தாம் ஒரே வழி. இந்தக் கோட்பாடுகள் யாரையும் போரிடச் சொல்லவில்லை. வஞ்சகமாக வாழச் சொல்லவில்லை. பேராசை பிடித்து அலையச் சொல்லவில்லை. எல்லாரை யும் இன்பமாக, சுதந்திரமாகப் பயமின்றி வாழச் சொல் கிறேன். அதற்கான வழிமுறைகளைப் போதிக்கிறேன். இது எப்படி சமூகத்தைக் கெடுக்கும்?" என்று கேட்டார். பிறகு, சொன்னார்:

"ஒருவகையில், நான் கூறும் வாழ்க்கை நெறியை சமூகம் ஏற்பது கடினந்தான். நான் சமூகத்துக்குப் போதிப்பதில்லை. சமூகத்தால் என்னுடைய நெறிகளைப் புரிந்து கொள்ள முடியாது. அவனவனுடைய சுதர்மப்படி வாழத் தூண்டும் இந்த எளிமையான வாழ்க்கை நெறியை பல கட்டுப்பாடுகளை விதித்து, மனிதனின் இயல்பான சுதந்திர உணர்வுகளை ஒடுக்கும் இன்றைய நாகரிகச் சமுதாயத்தால் புரிந்து கொள்ளமுடியாது. இது, தனிப்பட்டவனின் மனதைச் செப்பனிடும் ஒரு சாதனம். இது, ஒட்டு மொத்தமான சமுதாயத்துக்குப் புரியாது. நான் போதிப்பது ஒரு மதமோ அல்லது வழிபாடோ அல்ல. இது ஒரு தத்துவம் கூட இல்லை. இது ஒரு வாழ்க்கை நெறி. கடவுளை உணர்வதற்கு இது ஒரு இலகுவான குறுக்கு வழி. இந்தப் பாதையில் மேடுபள்ளம் கிடையாது. கல், முள் கிடையாது. ரம்மியமான மலர்த் தோட்டத்தின் வழியே செல்லும் ஒற்றையடிப் பாதையைப் போன்றது இது. பேரானந்த நிலையைத் தனிப்பட்டவன் தான் உணரமுடியுமே தவிர, சமுதாயமல்ல. ஆகையால்தான், சமுதாயத்தைப் பற்றி நான் அக்கறை கொள்வதில்லை. தனிப்பட்டவனின் மனம், ஆரோக்கியமடைந்தால், சமுதாயம், தானாக ஆரோக்கியத்தைப் பெற்றுவிடும். இது உங்கள் அரசியலுக்கும் பொருந்தும். எந்த நாடு தனிமனிதனின் அடிப்படை மன உணர்வுகளை மதிக்கவில்லையோ அந்த நாடு வெறும் சிறைச்சாலைதான்."

முதன் மந்திரி மிகுந்த அக்கறையோடு கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு, மெல்ல, "உங்கள் ஆசிரமத்தில் நடைபெறும் பயிற்சிகளில் காதல் உறவு இருப்பதாகக் கூறுகிறார்களே" என்று கூறினார்.

"நூற்றுக்கணக்கான தியான முறைகள் உண்டு. சாதகனின் மனப்போக்குக்குத் தகுந்த முறை எதுவோ அதைப்

பயிற்றுவிக்கிறேன். காதலும் அவற்றுள் ஒன்று." என்றார் யோகி. முதன் மந்திரி வியந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

யோகி சொன்னார்: "வைத்தியரின் சோதனை அறையில், நோயாளி சிகிச்சைக்காக நிர்வாணமாகப் படுத்திருந்தால், அதைப் போய் பார்த்துவிட்டு, 'ஐயோ, நிர்வாணமாயிருக்கிறார்களே' என்று ஓலமிடுவதில் அர்த்தமில்லையே. அதேபோல்தான், என்னுடைய ஆசிரமமும் ஒரு சிகிச்சை நிலையம். இங்கு மனதுக்கு வைத்தியம் நடைபெறுகிறது. என்னுடைய ஆசிரமத்திற்கு வருபவர்கள், தங்கள் மனத்தின் ஆழத்தில் தேங்கிக் கிடக்கும் அழுக்குகளையெல்லாம் வெளிப்படுத்தி சுத்தப்படுத்துவதற்காக வருகிறார்கள். மனம் என்பது பலவித ஆசைகளையும், கொடூரங்களையும் உள்ளடக்கிய ஓர் எரிமலை. உள்ளே குமுறும் உணர்வுகளை அமைதியான முறையில் ஒரு பாதுகாப்பான இடத்தில் ஆபத்தின்றி மெல்ல மெல்ல வெளிப்படுத்தாவிட்டால், அவை குபீரென்று வெடித்துச் சீறி எழுந்துவிடுகின்றன. சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வஞ்சகம், சூது போன்ற கொடுமைகள் நிகழக் காரணம் இதுதான். என்னுடைய ஆசிரமத்தில் மனிதனின் மனப் பெட்டகத்தை நாசூக்காகத் திறந்து, உள்ளிருந்து குமுறும் உணர்வுகளுக்கு அமைதியான முறையில் வடிகால் அமைத்துக் கொடுக்கிறேன். இங்கே, காதல் உறவுச் சிகிச்சையில் மன அழுக்குகளைப் போக்கிவிடப் பயில்கிறார்கள். மன அழுக்குகளும், வக்கிரங்களும் மறைந்தால்தாம் தியானம் கிட்டும். என்னுடைய ஆசிரமம் ஒரு வைத்தியக் கூடம். இங்கு எது நடந்தாலும் அதற்கும் வெளியே இயங்கும் சமுதாயத்துக்கும் தொடர்பே கிடையாது. நான் கூறும் தியான நெறியின் அடிப்படையையே புரிந்து கொள்ளாமல் இதை, காமவெறியைத் தூண்டும் கேளிக்கை என்று தவறாகப் பிரசாரம் செய்யும் மூடர்களும் உண்டு.

உண்மையை உணராத மூடர்களின் பிரசாரத்தை நம்புபவர்களும் இருக்கிறார்கள்."

"வைதீகர்கள்தாம் இதற்கு எதிர்ப்பு" என்றார், மந்திரி.

"வைதீகர்கள் எதற்குத்தான் எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை? சைவ வைதீகர்கள், வைணவத்துக்கு எதிரிகள். வைணவ வைதீகர்கள் சைவத்துக்கு எதிரிகள். அவர்கள் இரு வரும், மற்ற தத்துவங்களுக்கு எதிரிகள்" என்று கூறிச் சிரித் தார் பரமாச்சாரி. பிறகு சொன்னார்: "நான் கூறும் கோட்பாடு களும், தத்துவங்களும் புதிதல்லவே. வைதீகர்கள் போற்றும் பிரஹதாரண்யக உபநிஷதத்தில், அக்கினி காரியத்தைப் பற்றிப் பேசும்போது, இந்த யோகத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது. வடக்கே இமயமலைச் சாரலில், இருநூறு ஆண்டு களுக்கு முன்பிருந்த போதிதர்மர் என்ற ஞானி, நான் போதிக் கும் யோக சாதனை பற்றித்தான் போதித்து வந்திருக்கிறார். பௌத்த குருமார்களில் மிகச் சிறந்தவராக விளங்கிய நரோப்பா என்பவர் இதே நெறியைத்தான் தீவிரமாகப் போதித்தார். சைவர்கள் போற்றும் திருமூலரும் இந்த நெறியைப் போற்றுகிறார். ஏற்பவர்கள் ஏற்கட்டும், மூடர்கள் ஒதுங்கட்டும்."

"நாட்டில் மூடர்களின் கூட்டம் அதிகமாகும்போது, அறிவாளிகள் சங்கடப்பட வேண்டியிருக்கிறது" என்றார், மந்திரி. "மூடத்தனத்தைப் போக்க வேண்டியதும் உங்களு டைய ஆட்சியின் கடமைகளில் ஒன்றாயிற்றே" என்று கூறிச் சிரித்தார் யோகி.

"கடமையை ஆற்றுவதில் பல பிரச்சினைகள். நான் இப்போது வந்தது, உங்களுடைய உதவியை நாடித்தான். நீங்கள் கூறியபடி மக்கள், மிகுந்த அதிருப்தியோடிருக் கிறார்கள். மக்களின் நன்மைக்காக, மகாராணியிடம் நீங்கள் அறிவுரைகள் கூறவேண்டும். நீங்கள் மகாராணியின் குரு

என்ற முறையில் உங்களை வேண்டுகிறேன்" என்றார் மந்திரி.

ருத்திர பரமாச்சாரி சிரித்தார். "பல்லவ நாட்டின் முதன் மந்திரி சொல்ல முடியாததையா நான் சொல்லிவிடப் போகிறேன்?"

"சுவாமி, நான் மகாராணியின் ஊழியன்; நீங்கள் குரு. உங்கள் சொல்லை மகாராணி மீறமாட்டார்கள்" என்று கூறிய மந்திரி, மகாராணியின் வரிகள் பற்றிய ஆணைகளையும், சில முக்கிய பிரமுகர்களைச் சிறைப் பிடித்திருப்பது பற்றியும் விவரமாகக் கூறினார். வடமொழிக் கடிகையில் நடைபெற்ற சம்பவங்களையும் கூறினார்.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ருத்திர பரமாச்சாரி, "என்னைத் தேடி வருபவர்களுக்கு மட்டும் வாழ்க்கையில் திசை காட்டும் பணியைத்தான் இங்கே செய்து கொண்டிருக்கிறேன். இந்நாட்டுப் பிரச்னையில் நான் தலையிட்டுத் தீர்க்க முடியும் என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டார்.

"உங்கள் சொல்லுக்கு மகாராணி மதிப்பளிப்பார்கள். மக்கள் மீது அன்பு காட்டச் சொல்லுங்கள். படைப்பின் முழுமையிலுமே காதலைச் செலுத்தப் பயிற்றுவிக்கும் தாங்கள் மகாராணியை குறைந்தபட்சம் அவருடைய நாட்டுமக்களிடமாவது அன்பும், இரக்கமும் காட்டச் சொன்னால் போதும்" என்றார் மந்திரி.

"முயற்சி செய்து பார்க்கிறேன்."

"மிக்க நன்றி, சுவாமி. தாங்கள் இந்த உதவியைச் செய்ய முடிந்தால், இந்த நாடே தங்களுக்கு நன்றி செலுத்தும்" என்று கூறி முதன் மந்திரி விடைபெற்றார்.

* * *

லீனா, வெகுநேரம் தோட்டத்திலேயே இருந்தாள். உதயசந்திரன் அவளைவிட்டுப் பிரிந்து சென்ற பிறகும்

தோட்டத்தை விட்டுச் செல்ல அவளுக்கு மனமில்லை. உள்ளம், ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. அவளுக்குத் துணையாக மரக்கிளைகளிலிருந்த பறவை இனங்களுடன் ஏதோ பேசிக் களித்தாள். சுற்றுப்புறமும் மரம், செடி, கொடிகளும் அவளுடைய உள்ளுணர்வைப் புரிந்து கொண்டு, அவளோடு சேர்ந்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதுபோல் உணர்ந்தாள். சற்றுமுன் உதய சந்திரனுடனிருந்ததை நினைத்து நினைத்துப் பரவசமடைந்தாள். உடலின் ஒவ்வோர் அங்கத்திலும் வலி இருந்து கொண்டிருந்தாலும், அந்த வேதனையிலும் இன்பம் ஊறி உடல் முழுவதும் பரவிய விந்தையை நினைத்து லயித்தாள். போதி மரத்தடியில் கசங்கிக் கிடந்த மருக்கொழுந்து மாலையை எடுத்து மரக்கிளையில் தொங்கவிட்டாள். தோட்டம் முழுவதும் சுற்றிச் சுற்றி வந்தாள். வீட்டுக்குப் போகவே மனமின்றி, மீண்டும் போதிமரத்தடிக்கே வந்து அமர்ந்தாள். அந்த இடத்தில் பெற்ற இன்ப சுகத்தை நெஞ்சில் நிரப்பிக் கொண்டு, வேரின் மீது சாய்ந்து கிடந்தாள். புது அனுபவத்தை எண்ணியெண்ணி ரசித்தாள். பொழுது கழிந்ததே தெரியவில்லை. நண்பகலாகிவிட்டது.

டெங்லீயின் மனைவி அவளைத் தேடிக்கொண்டு வந்தாள். போதி மரத்தடியில் களைப்புற்று உறங்கிக் கொண்டிருந்த லீனாவை எழுப்பினாள். முதன் மந்திரியிடமிருந்து ஆள் வந்திருப்பதைத் தெரிவித்தாள். லீனா பரபரப்புடன் வீட்டை நோக்கி விரைந்தாள்.

வீட்டினுள் டெங்லீ கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தார். முதன் மந்திரியின் காவல் வீரன் உதய சந்திரனைப்பற்றி எச்சரித்துவிட்டுச் சென்றதைச் சொன்னார். லீனா பதறிப்போனாள்.

"கெட்டிக்காரப் பையன் தான். இலகுவில் அகப்பட்டுக் கொள்ளமாட்டான். அவன் இங்கே வந்தால் தோட்

டத்தில் ஒளிந்திருக்கும்படி செய்து விடலாம்" என்றார் டெங்லீ.

"தாத்தா, அவர் எங்கே இருக்கிறார் என்று பார்த்து வாருங்களேன்" என்றாள் லீனா.

"அவனைத் தேடிப் போவதுதான் ஆபத்து. எங்காவது யாருக்கும் தெரியாத இடத்தில் பதுங்கியிருந்தால் சரிதான்."

"காஞ்சி நகர் அவருக்குப் புதிது. எங்கே பதுங்கத் தெரியும்? அவரைத் தேடி வீரர்கள் பௌத்த கடிகைக்குப் போயிருப்பார்கள். அவர் அங்கு போவதாகத்தான் சொல்லிச் சென்றார். போகிற வழியில் சமஸ்கிருதக் கடிகையில் அவருடைய நண்பரைக் காணப்போயிருந்திருப்பார். போன இடத்தில் கலகம் ஏற்பட்டிருந்திருக்கும்" என்றாள் லீனா கவலையுடன். அவளுக்கு மனம் படபடத்தது. "தாத்தா, அவருடைய கடிகைக்குப் போனால் விவரம் தெரியும். அங்காவது விசாரிக்க முடியுமா பாருங்களேன்" என்றாள்.

டெங்லீயும் பதற்றமடைந்திருந்தார். அவனைப்பற்றிய விவரமறியத் துடித்துக் கொண்டிருந்தார். லீனாவின் யோசனைப்படி அவர் பௌத்த கடிகைக்குப் புறப்பட்ட போது, நான்கு குதிரை வீரர்கள் அங்கே வந்து உதய சந்திரனைப் பற்றி விசாரித்தார்கள்.

"எப்போதாவது அபூர்வமாக வருவான்" என்றார் டெங்லீ.

"பெரியவரே, பொய் சொல்லித் தப்பிக்கமுடியாது. இன்று காலையில் இங்கு வந்துவிட்டுத்தானே பிறகு கோட்டைக்குள் திரும்பியிருக்கிறான்" என்றான் ஒரு வீரன்.

"ஆமாம், இன்று வந்தான். இனி எப்போது வருவானோ? நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்றார் டெங்லீ. அவர் குரல் நடுங்கியது. அருகில் நின்ற லீனா,

"அவர் இங்கே அடிக்கடி வருவது கிடையாது. எதற்காக அவரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"மகாராணியின் கட்டளை. படைவீரர்களைத் தாக்கி விட்டுத் தப்பி ஓடிவிட்டான். எதற்காகத் தேடுவோம்? பிடித்துக் கழுவில் ஏற்றத்தான்" என்றான், இன்னொரு வீரன்.

லீனாவின் முகம் பீதியினால் வெளுத்துவிட்டது. வீரர்கள் நால்வரும் டெங்லீயின் வீட்டினுள் புகுந்து சோதனையிட்டனர். உதயசந்திரன் இல்லையென்று உறுதிப்படுத்திக் கொண்டபின் சென்றார்.

டெங்லீயின் வீட்டில் எல்லாரும் நடுங்கிக் கொண்டிருந்தனர். லீனாவுக்கு எப்படியாவது உதயசந்திரனைச் சந்தித்து எச்சரிக்க வேண்டும் என்ற தவிப்பு. ஒரு வேளை அவன் அவளைத் தேடி அங்கு வந்தாலும், அவனை எங்கே ஒளித்து வைப்பது? வீரர்கள் எல்லா இடங்களிலும் தேடுவார்களே. அவனை அழைத்துக் கொண்டு சீனத்துக்கே திரும்பி விட்டால் என்ன என்று எண்ணினாள். அதுதான் உசிதம்போல் அவளுக்குத் தோன்றியது.

அவனைச் சந்தித்தாலல்லவா திட்டத்தை நிறைவேற்றலாம். அவனை எங்கே தேடுவது?.....

லீனாவின் பரபரப்பு அதிகமாகியது. நிலை கொள்ளாமல் தவித்தாள். அவளுடைய யோசனையின் பேரில் டெங்லீ பௌத்த கடிகைக்குப் புறப்பட்டார்.

அதேசமயம், உதயசந்திரன் வடமொழிக் கடிகையின் மேல்மாடியிலிருந்தான். ஜேஷ்டபதி சோமயாஜி அவனைக் கடிகையை விட்டு வெளியேறக் கூடாது என்று எச்சரித்திருந்தார். அவனை அரண்மனை வீரர்கள் தேடிக்கொண்டிருந்த செய்தி கடிகை முழுவதும் பரவிவிடவே கடிகை மாணவர்களும், ஊழியர்களும் அவனை ஒளித்து வைப்பதில் தீவிரமாயிருந்தனர்.

உதயசந்திரன் பணிபுரிந்து கொண்டிருந்த பௌத்த கடிகையில்தான் பரபரப்பு அதிகமாயிருந்தது. ஒரு நாளுக்குள் பலமுறை, வீரர்கள் பௌத்த கடிகைக்குச் சென்று தேடி விட்டனர். எப்படியும் உதயசந்திரன் பௌத்த கடிகைக்கு வருவான் என்ற நம்பிக்கையில் இரண்டு வீரர்கள் கடிகையின் எதிரேயிருந்த மரத்தடியில் காத்திருந்தனர்.

பௌத்த கடிகையைச் சேர்ந்தவர்கள் பீதியடைந்திருந்தனர். அவன் அகப்பட்டு விடக்கூடாதே என்ற கவலை அனைவரையும் பற்றிக் கொண்டது. அவன் கடிகைக்கு வந்தால், அவனை இரகசியமாக இலங்கைக்கு அனுப்பி வைத்துவிட, கடிகைத் தலைவர் முடிவு செய்திருந்தார்.

* * *

யோகி ருத்திர பரமாச்சாரி மகாராணியைக் காண வந்திருக்கிறார் என்ற செய்தி கேட்டு, பிரேமவர்த்தினி திகைப்புற்றாள். வழக்கமாக, அவள்தான் அவரை அழைத்துவர இரதத்தை அனுப்பிவைப்பாள். இப்போது யோகியே வலிய அவளைக் காண வந்திருப்பதன் நோக்கமென்ன என்று சிந்தித்தவாறே, யோகியை வரவேற்க விரைந்தாள்.

முதலில் யோகி அவளிடம் தியானம் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிவிட்டுச் சொன்னார்: "மகாராணி, புயல் காற்றின் நடுவே இருந்துகொண்டு இரைச்சலைத் தடுக்க முயல்வது மதியீனம். உன்னுடைய மன அமைதி குலைவதற்குக் காரணம், ஆட்சியில் உள்ள பிரச்சினைகள்தாம். மக்கள் மகிழ்ச்சியாக இருந்தால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். இளவரசனை அடக்கிவை, பிரச்சினைகளுக்கெல்லாம் அவன் தான் காரணம். அவனுடைய தலையீட்டை தவிர்க்க வில்லையென்றால், விரைவில் பல்லவநாடு கொதித்தெழுந்துவிடும்."

இதைக்கேட்டு மகாராணி திகைப்புற்றாள். "சுவாமி, சித்திரமாயன் தான் வருங்காலச் சக்ரவர்த்தி" என்றாள்.

"வருங்காலத்தில்தானே? இப்போதில்லையே? அவனுடைய நடத்தையால் அவன் அரியணையே ஏற முடியாமல் போய்விட்டால்?"

"அப்படித் தடுக்கும் சக்தி யாருக்கும் கிடையாது. அவன்தான் பல்லவ சாம்ராஜ்யத்தின் ஒரே இளவரசன். அரியணை ஏற உரிமை உள்ளவன்."

"மன்னனின் சக்தியைவிட மக்களின் சக்தி பெரிது. சக்ரவர்த்தியாக அரியணை ஏறவேண்டிய இளவரசன், மக்களின் வெறுப்புக்கு ஆளாவது நல்லதல்ல. உலகப்புகழ் பெற்ற சமஸ்கிருத கடிகையை உன்னுடைய வீரர்கள் தாக்கியதும், கடிகை வாசலிலேயே இரு மாணவர்களின் உயிர்களைப் பறித்ததும் எவ்வளவு கொடுமை. இந்நாட்டுக்கே பெருமையளித்துக் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் ஸ்தாபனத்தை அரசாங்கம், கவனத்தோடு, பயபக்தியுடன் ஆதரிப்பதைவிட்டு, தாக்குவது எவ்வளவு மதியீனம். மற்ற நாட்டு நாகரிக மனிதர்கள், இந்நாட்டைப்பற்றி என்ன நினைப்பார்கள்? மகாராணி, இப்போது என்ன தவறு நடைபெற்றாலும், அந்தப் பழி உன் மீதுதான் விழுகிறது" என்றார், யோகி.

"கடிகைச் சம்பவம் எனக்கும் மனக்கலக்கத்தைத்தான் உண்டு பண்ணியிருக்கிறது" என்றாள், பிரேமவர்த்தினி.

"நீ மகாராணி என்பதை மறந்துவிடாதே. தருமத்தை காக்கவேண்டியது உன் கடமை. இளவரசனைக் கட்டுப்படுத்து. அவனை ஆட்சியில் தலையிட அனுமதியாதே. அவன் மனைவி மேகலாவும் ஆட்சியில் தலையிடுவதாகக் கேள்விப்படுகிறேன். அவள் தன் போக்கில் ஆணைகளை இடுகிறாளாம். கடிகைச் சம்பவத்திற்கு அவளுடைய தலையீடுதான் காரணம் என்று கேள்வி. இவற்றையெல்லாம் கட்டுப்படுத்தவில்லையென்றால், பிறகு நீதான் வருந்த

வேண்டி வரும்" என்றார், யோகி. பின்பு சொன்னார்: "இன்னொன்றும் சொல்கிறேன், தேவையானால், நாட்டின் நலனையும், உன்னுடைய நலனையும் கருதி, அவனைச் சிறைப்பிடித்து வைப்பது நல்லது. சக்கரவர்த்தி வந்ததும் அவரிடம் ஒப்படைத்துவிடு."

இதைக் கேட்டு, பிரேமவர்த்தினி திடுக்கிட்டாள். "சுவாமி, இளவரசனைச் சிறைபிடிப்பதா?" என்று பதற்றத்துடன் கேட்டாள்.

"மகாராணி, நியாயத்தைக் காக்க, தன் மகனையே சோழ மன்னன் கொன்றிருக்கிறானே. உன் நன்மையைக் கருதிச் சொன்னேன்" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார், யோகி.

ருத்திர பரமாச்சாரி சென்ற பிறகு, மகாராணி மன அமைதியின்றித் தவித்தாள். சித்திரமாயனை அடக்குவது அவளால் இயலுகிற காரியமா? இப்போது மகாராணி என்ற அதிகாரத்தில் அவனுக்கு எதிராகச் செயல்பட்டால், பிற்காலத்தில் அவன் அரியணை ஏறும்போது தன்னுடைய நிலை என்னவாகும் என்பதைப் பற்றிச் சிந்தித்தாள். சிந்திக்க சிந்திக்க மனம் குழம்பியது. என்ன செய்வதென்று புரியவில்லை.

* * *

டெங்லீயின் பல்லக்கு காஞ்சிக் கோட்டைக்குள் சென்று, பௌத்த கடிகையை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, எதிரே மக்கள் கூட்டம் திரண்டு வந்து கொண்டிருந்ததைக் கண்டதும், பல்லக்கை வீதியின் ஓரத்தில் இறக்கச் சொல்லி, பல்லக்கிலிருந்து இறங்கி, ஒதுங்கி நின்று கவனித்தார். பெரும்கூட்டம் அலைமோதியபடி வந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் நடுவே இரண்டு பாடைகள் தூக்கி வரப்பட்டன. அவ்வளவு கூட்டத்திலும்

நிசப்தம் நிலவியது. மக்கள் நடந்தபோது எற்பட்ட காலடி யோசைதான் அலையோசைபோல் எழுந்தது. பாடை களின் முன்னால் வடமொழிக் கடிகையின் தலைவர் ஜேஷ்டபதி சோமயாஜி, தலைகுனிந்தபடி நடந்து சென்று கொண்டிருந்தார். அருகில் ராஜன் நம்பூதிரி தீச்சட்டியை ஏந்தியபடிச் சென்றான். அவனுக்கருகே, தலையில் முண் டாசு கட்டிய ஒருவன் செகண்டியை அடித்துக் கொண்டு சென்றான். பாடைகளைச் சுற்றிலும் காஞ்சியில் உள்ள எல்லாக் கடிகைகளின் மாணவர்களும், பண்டிதர்களும், நிர்வாகிகளும் மௌனமாக நடந்து சென்றனர். ஊர் மக் களும் தொடர்ந்து சென்றனர். தீச்சட்டியுடன் ராஜன் நம்பூதிரியைக் கண்டதும் டெங்லீ, கூட்டத்தைக் கூர்ந்து கவனித்தார். உதயசந்திரனைத் தேடினார். காணவில்லை. அந்தக் கூட்டத்தில் அவன் இல்லையென்பதை அறிந்துமன நிம்மதியடைந்தார்.

கூட்டத்தில் சென்றவர்களிடம் பாடைகளைப் பற்றி விசாரித்தார். "வடமொழிக் கடிகையில் இரண்டு மாணவர் களை அநியாயமாக அரண்மனை வீரர்கள் கொன்று விட்டார்கள். இறுதிச் சடங்குக்காக மயானத்துக்குப் போகிறோம்" என்றான் ஒருவன்.

டெங்லீ, பல்லக்குத் தூக்கிகளிடம் பல்லக்கை மயானத் துக்குக் கொண்டு வரும்படி கூறிவிட்டு அவரும் அந்த இறுதி ஊர்வலத்துடன் சென்றார். ஊர்வலம் அரச வீதியைக் கடந்து, தேரோடும் வீதியை நெருங்கியதும் மக்கள் கூட்ட மும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. அவ்வளவு பெரிய கூட்டத்தில் நிலவிய மௌனம் காஞ்சி நகரையே அழுத்து வது போலிருந்தது. ஊர்வலம் காஞ்சி நகர் எல்லையில் ஓடிக்கொண்டிருந்த வேகவதீ ஆற்றின் கரையை அடைந்து நின்றது.

மயானத்தில் இறுதிச் சடங்கு முடிந்து, சிதைகளுக்குத் தீ

முட்டப்பட்ட பிறகு, அங்கிருந்த பெரிய ஆலமரத்தின் உயரமான வேர்மீது ராஜன் நம்பூதிரி ஏறி நின்றான்.

"காஞ்சிப் பெருமக்களே, குருமார்களே, நண்பர்களே..." என்று கூவியழைத்தான். கூட்டத்தினர் அவனை வியப்புடன் கவனித்தனர். ராஜன் நம்பூதிரி உணர்ச்சி வயப்பட்டுப் பேசத் தொடங்கினான்.

இரண்டு மாணவர்களை அநியாயமாகப் பலி கொடுத்துவிட்ட சம்பவத்தை மிக உருக்கமாக வர்ணித்தான். மக்கள் நெகிழ்ந்து கண்ணீர் விட்டனர். இரண்டாவது மந்திரி அச்சுத பட்டர் இருபதினாயிரம் பொற்காசுகள் கேட்டதைப் பற்றி ராஜன் நம்பூதிரி சொன்ன போது, கூட்டம் கோபத்தினால் கொந்தளித்தது.

"இன்று ஆளும் மகாராணியாரும், இனி ஆளப் போகும் இளவரசரும்தான் நம்மை ஆதரிக்க வேண்டியவர்கள். ஆதரித்து அணைக்க வேண்டிய கைகள், கொலை செய்து, கொடுமைப்படுத்தி விட்டன. கொடுமை நேரும்போது நாம் யாரிடம் முறையிட்டு ஆறுதல் பெற வேண்டுமோ அவர்களே நம்மைக் கொடுமைப் படுத்தும் போது, நாம் யாரிடம் போய் முறையிட முடியும்? நாமே நம்முடைய கண்ணீரில் ஆறுதலடைந்து கொள்ள வேண்டியதுதான். காஞ்சிப் பெருமக்களே, நம்மை ஆள்பவர்களின் இதயத்தில் கருணையையும், நல்லெண்ணத்தையும் உண்டு பண்ணும்படி கைலாசநாதரை வேண்டிப் பிரார்த்திப் போம். ஆள்பவர்கள் கொடிய நச்சுப் பாம்புகளாகி விட்டார்கள்..."

ராஜன் நம்பூதிரியின் பேச்சு, எல்லாரையும் உருக வைத்தது. கடைசியில், ராஜன் நம்பூதிரி சொன்னான்: "காஞ்சிப் பெருமக்களே, கிட்டத்தட்ட முன்னூற்று எழுபது ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய பல்லவச் சக்கரவர்த்தி

யின் முதாதையரான குமார விஷ்ணு பல்லவர் காலத்தில், இதே கடிகையில் மயூரசன்மன் என்ற இளைஞன் கல்வி கற்க வந்தான். அவனை அன்றைய பல்லவ ஆட்சி, அவமானப் படுத்தி, கடிகையிலிருந்து விரட்டியது. அந்த மயூரசன்மன் பல்லவ ஆட்சி மீது வன்மம் கொண்டு, வடக்கே சென்று, ஒரு படையையே திரட்டிக் கொண்டு வந்து, இந்த நாட்டை எதிர்த்தான். கடைசியில் பல்லவ மன்னர் பணிந்து, அவனையும் ஓர் அரசனாக ஏற்றுக் கொண்டார். அந்த மயூரசன்மன்தான் கதம்பக் குலத்தைத் தோற்றுவித்தவன். இன்றும் இதே கடிகையைச் சேர்ந்த இரு மாணவர்களுக்கு பல்லவ நாடு கொடுமை இழைத்திருக்கிறது. அன்று நேர்ந்த கொடுமையால் பல்லவநாடு ஒரு பகுதியை மயூரசன் மனுக்கு இழந்தது. இன்று நேர்ந்த கொடுமையால், பல்லவ நாடுக்குத் தீங்கு ஏதும் நேர்ந்துவிடக்கூடாது என்று இறை வனைப் பிரார்த்திப்போம். ஒன்றை மறந்துவிடாதீர்கள், இன்று கடிகைக்கு நேர்ந்த கொடுமையைப் போல், நாளை உங்களுக்கும் நடக்காது என்று யாராலும் உறுதி கூற முடி யாது. எல்லாவற்றையும் ஊமைகளாயிருந்து பொறுத்துக் கொண்டு, கண்ணீர் சிந்துவதைத் தவிர, உங்களுக்கு வேறு வழியில்லையா? சிந்திக்க தெரிந்தவர்கள் சிந்தியுங்கள். அறிவாளிகள் உறங்காதீர்கள். சிந்தியுங்கள்"

ராஜன் நம்பூதிரியின் பேச்சு பலருடைய சிந்தனை களைக் கிளறிவிட்டது. தாங்கள் மனிதர்கள், ஆடு மாடு களைப் போன்ற அறிவில்லாத ஜீவன்கள் அல்ல என்ற உண்மை அப்போது பலருக்குப் புரியத் தொடங்கியது. தங்களுக்குத் தோன்றியதைப் பற்றிப் பேசி விவாதித்தவாறே, கலைந்து செல்லத் தொடங்கினர்.

டெங்லீ கூட்டத்தை விலகி நடக்கத் தொடங்கிய போது, அவரருகே ஒருவன் நெருங்கி, "தாத்தா" என்று மெல்லக் கூப்பிட்டது கேட்டுத் திரும்பினார். பாடைகளின்

முன்னால், தலையில் முண்டாசு கட்டியபடி செகண்டி யடித்துக் கொண்டு வந்தவன், அவரருகில் நின்று கொண்டி ருந்தான். அவருடைய காதருகே, "லீனாவைத் தைரியமாக இருக்கச் சொல்லுங்கள்" என்றான்.

டெங்லீ வியப்புடன் அவனை உற்றுப் பார்த்தார். ஏதோ பேச வாயெடுத்தார். அவன் கண்களாலேயே சைகை காட்டிப் பேச வேண்டாம் என்று தடுத்தான். அவன் தான் உதயசந்திரன் என்பதைத் தெரிந்துகொண்டதும் அவருக்கு வியப்புத் தாளவில்லை.

"என்னைப் பற்றிப் பயப்பட வேண்டாம். விரைவில் இதுபோல் ஏதாவது வேடத்தில் வீட்டுக்கு வருவேன். தைரியமாயிருங்கள்" என்று கூறிவிட்டு, உதயசந்திரன் கூட்டத்தோடு கலந்து மறைந்துவிட்டான்.

25. அப்பர் தொடங்கிய சுதந்திரப் போராட்டம்

பிரேமவர்த்தினியின் முகத்தில் கவலை தோய்ந் திருந்தது. எதிரே அமர்ந்திருந்த சித்திரமாயன் கோபத் தோடிருந்தான். கடிகை மாணவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துவிட்டுக் கோட்டைக்குள் திரும்பிய கூட்டத்தினரில் சிலர், அரசுக்குச் சொந்தமான சில கட்டடங்களில் கல் லெறிந்து, பலரைக் காயப்படுத்தியதாகவும், வீதியில் தென் பட்ட சில வீரர்களை அடித்துக் காயப்படுத்தி, வீதியிலேயே போட்டு விட்டதாகவும் செய்தி எட்டியிருந்தது.

கூட்டத்தின் ஒரு பகுதி அச்சுதபட்டரின் மாளிகைக் குச் சென்று, மாளிகைத் தோட்டத்தை நாசப்படுத்திய தாகவும், மாளிகையின் காவலாளிகளை அடித்துக் காயப்படுத்தியதாகவும், மந்திரியின் மாளிகையின் மீது கல்லெறிந்து சேதப்படுத்தியதாகவும் ஓர் ஒற்றன் வந்து தெரிவித்தான்.

"நம்முடைய வீரர்கள் கடிகையில் அளவு மீறித்தான் நடந்திருக்கிறார்கள். அதனுடைய எதிரொலிதான் இது" என்றாள், மகாராணி.

"ஆணை மீறியவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வில்லையென்றால், பிறகு எப்படித்தான் ஆட்சி நடத்த முடியும்?" என்றான் சித்திரமாயன்.

"நம்முடைய வீரர்களால் அடக்க முடிந்ததா? மயான ஊர்வலத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய மக்கள் காவல் வீரர்களைத் துரத்தி விரட்டியிருக்கிறார்களே."

"இதற்குப் பழி வாங்கியே தீர வேண்டும். ஊர்க்காவல் படைத்தலைவர் ஜெயவர்மர், முதன்மந்திரியின் சொல்லைக் கேட்டுத் தம்முடைய படையை கலகம் செய்தவர்கள் மீது ஏவாமலிருந்துவிட்டார். அவருக்குப் பாடம் புகட்ட வேண்டும்."

"மக்களே நமக்கு எதிரிகளாக மாறும் நிலை வந்தால், ஆட்சியைப் பாதித்துவிடுமே" என்று மகாராணி பயத்துடன் கூறினாள்.

"நீங்கள் கவலைப்படாதீர்கள், சின்னம்மா. இந்த மக்கள் வெறும் செம்மறியாட்டுக் கூட்டங்கள். இவர்களைத் தூண்டிவிடுபவர்களை முதலில் ஒழித்துவிட்டால், பிறகு மக்கள் அடங்கிவிடுவார்கள்."

"மக்கள் அடங்குவதாகத் தெரியவில்லையே. மந்திரி அச்சுதபட்டரின் மாளிகையையும் அல்லவா மக்கள் தாக்கியிருக்கிறார்கள்! இந்த மக்கள், அரண்மனையைத் தாக்க வர எவ்வளவு நேரமாகும்?"

சித்திரமாயன் சிரித்தான். "சின்னம்மா, அவ்வளவு தைரியம் மக்களுக்கு கிடையாது. அரசுக்கு எதிராக மக்கள் போராட முடியுமா? இதெல்லாம் தெருச் சலசலப்புகள். இதை முளையிலேயே கிள்ளிவிடலாம். அந்த மயான

ஊர்வலத்தையே கலைத்திருக்க வேண்டும். ஜெயவர்மர் வேண்டுமென்றே சும்மாயிருந்திருக்கிறார். அவருக்கு நம்மீது அபிமானமில்லை."

"நீ கொஞ்சம் அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்து விடுகிறாய். அதனால்தான் இப்படியெல்லாம் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன" என்றாள் மகாராணி.

"என்ன அவசரப்பட்டுவிட்டேன்? அரசின் கட்டளைகளுக்குப் பணியாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்தேன். அரசை அலட்சியம் செய்பவர்களைத் தண்டிக்காமல் என்ன செய்வது?" என்று படபடத்தான் சித்திரமாயன்.

"மக்கள் மதிப்பு வைத்திருந்த ஏரிவாரியத் தலைவரையும், தோட்ட வாரியத் தலைவரையும் சிறையிலிட்டிருக்கிறாய். புகழ்பெற்ற சமஸ்கிருத கடிகையைத் தாக்கிருக்கிறாய். இரு மாணவர்கள் கொலையுண்டு போனார்கள். அச்சுதபட்டர் இருபதினாயிரம் பொற்காசுகளைக் கையூட்டாக கடிகைத் தலைவரிடம் கேட்டிருக்கிறார். இவையெல்லாம் மக்களை நம்மீது வெறுப்படையத்தானே செய்யும்" என்றாள், மகாராணி.

"என் மீது குற்றம் சாட்டுகிறீர்களா? இதற்கெல்லாம் நீங்கள் தானே சம்மதித்து ஆணைகளைப்பிறப்பித்தீர்கள்?" என்றான் சித்திரமாயன் கோபத்துடன்.

"ஐயோ, நான் உன்னைக் குற்றம் சாட்டவில்லை, சித்திரமாயா. என்னுடைய ஆணைகளை நிறைவேற்றும் போது நீ கொஞ்சம் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்று தான் சொல்கிறேன். நீ சொன்னாய் என்று தோட்ட வாரியத்துக்கும், ஏரி வாரியத்துக்கும் ராஜபரம்பரையைச் சேர்ந்த உன் நண்பர்களை நியமித்தேன். அவர்கள் லஞ்சம் பெற்றதாக நேற்று ஒற்றர் படை வீரன் தகவல் கொண்டு வந்தான். விலைவாசிகள் மிகவும் ஏறிவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. நீதான் சில வணிகர்களுக்குச் சலுகை

காட்டச் சொன்னாய். அதன் பலன் தான் விலைவாசி ஏற்றம். இதையெல்லாம் நாம் கொஞ்சம் நிதானமாக யோசித்துச் செய்திருக்க வேண்டும். இப்படியே மக்களின் அதிருப்தி கூடிக் கொண்டே போனால், நாட்டில் அமைதி எப்படி நிலவும்?"

"சின்னம்மா, நீங்கள் ரொம்ப பயந்து போயிருக்கிறீர்கள். பதவியில் இருப்பவர்களில் சிலர் ஆங்காங்கே லஞ்சம் வாங்கத்தான் செய்வார்கள். சிலரைக் கண்டிக்க வேண்டும். திறமையானவர்களை நாம், கண்டும் காணாத மாதிரி இருந்து கொள்ள வேண்டும். ஆட்சியில் கட்டுக் கோப்புத்தான் நமக்கு முக்கியம். இந்த மக்களை அடக்குவது பெரிய காரியமில்லை. நம் படைகளின் பெரும்பகுதி சக்கரவர்த்தியோடு போர்க்களம் சென்று விட்டதால், மக்களின் கூட்டம் தெம்படைந்து, கலகம் செய்கிறது. நம் மீது அபிமானம் கொண்டிருக்கும் குறுநில மன்னரான பல்லவகுடி அரையரை, படையுடன் காஞ்சியில் வந்து தங்கும்படி தூது அனுப்பியிருக்கிறேன். அரையர் வந்து விட்டால், இரணியவர்மர் அடங்கி விடுவார். ஒருவேளை, காஞ்சியை விட்டுக் கூட வெளியேறிவிடுவார். அரையரின் படை வந்து சேரட்டும்; காஞ்சியில் கலகம் செய்பவர்களை ஒரே நாளில் ஒழித்துக் கட்டுகிறேன்" என்றான், சித்திர மாயன்.

"மக்களைப் பழி வாங்குவதை நிறுத்தும்படி முதன் மந்திரி வேண்டினார். அடக்குமுறை மேன்மேலும் மக்களுக்கு வெறுப்பைத்தான் உண்டுபண்ணும் என்றார். எனக்கும் அவர் சொல்வது சரியாகத்தான்படுகிறது. கொஞ்சம் விட்டுப் பார்ப்போமே" என்றாள், மகாராணி.

"சின்னம்மா, முதன்மந்திரி, சதி செய்கிறார். அவருடைய வலையில் விழுந்து விடாதீர்கள். அவருக்கும் இரணியவர்மருக்கும், இன்னும் சில தலைவர்களுக்கும் நம் மீது அபிமானம் கிடையாது. இப்போது இரணியவர்மரின் படை

காஞ்சியில் இருக்கிறது. இந்தச் சமயத்தில், சதிகாரர்கள் நம்மீது ஏதாவது ஒரு பழியைச் சுமத்திவிட்டுத் திடீரென்று ஆட்சியைக் கைப்பற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஊர்க்காவல் படையின் தலைவர் ஜெயவர்மருக்கும் நம் மீது பொறாமை, இந்தச் சூழ்நிலையில், மக்களைத் தூண்டிவிடுபவர்களே அவர்கள்தாம் என்று எண்ணுகிறேன். மக்களின் கிளர்ச்சியை ஓங்கவிட்டால், உள்நாட்டில் கலகங்கள் பெருகும், அதைப் பயன்படுத்தி விரோதிகள், நமக்கு எதிராகச் செயல்படலாம். சக்கரவர்த்தி இல்லாத இந்தச் சந்தர்ப்பத்தை துரோகிகள் எப்படியும் பயன்படுத்தப் பார்க்கலாம். நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்றான் சித்திரமாயன்.

பிரேமவர்த்தினிக்கு அவன் சொன்னதிலும் உண்மை இருப்பதாகத் தோன்றியது. சித்திரமாயனை நம்பும் அளவுக்கு அவளால் முதன் மந்திரியையோ, அல்லது வேறு தலைவர்களையோ நம்ப முடியவில்லை. மேலும், ஆங்காங்கே மக்கள் செய்த கலகங்கள், அவள் கோபத்தையும் தூண்டியிருந்தன.

"நமக்கு யார் மீது சந்தேகம் எழுகிறதோ அவர்களையெல்லாம் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, நம் மீது அபிமானம் உள்ளவர்களை நியமித்துவிடுகிறேனே" என்றாள், மகாராணி.

"பொறுங்கள். பதவியிலிருந்து நீக்கி விட்டால் மட்டும் போதாது. பதவியிழந்தவர்கள், நம்மை எதிர்க்கச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். பதவியிலிருந்து நீக்கியதுமே அவர்களை ஒழித்து விட வேண்டும். முதலில் நம்மீது விசுவாசமுள்ளவர்கள் யார் என்பதை கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறேன். சில வாரியத் தலைவர்களும், சில குறுநில மன்னர்களும் நம் மீது அபிமானத்துடனிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் இங்கே வரவழைத்துப்

பேசியபின், நாம் நடவடிக்கை எடுக்கலாம். இப்போதே எடுத்தால், இரணியவர்மர் ஏதாவது இடைஞ்சல் செய்யலாம்."

"போர் முடிந்து சக்ரவர்த்தி விரைவில் திரும்பிவிடுவார். நாம் செய்திருக்கும் ஏற்பாடுகள் அவர் மனதுக்கு உசிதமாகப் படுமோ என்னவோ?" என்று, பயத்துடன் கேட்டாள், மகாராணி.

"சக்கரவர்த்தி இங்கே திரும்பி வரும்போது, அவரிடம் முறையிட இவர்கள் எல்லோரும் உயிரோடிருக்கமாட்டார்கள். அவர் வந்து கேட்கும்போது, 'இவர்கள் எல்லாரும் மகாராணிக்கு எதிராகச் சதி செய்தார்கள், ஒழித்துவிட்டோம்' என்று கூறிவிடலாம். சின்னம்மா, நீங்கள் என்ன சொன்னாலும் தந்தையார் நம்புவார்" என்றான், சித்திரமாயன்.

அப்போது, ஒற்றர் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன் வந்தான். உதயசந்திரன் எப்படியோ தப்பிவிட்டான் என்றும் காஞ்சியில் அவன் தென்படவில்லையென்றும் சொன்னான்.

சித்திரமாயன் கோபத்தில் இரைந்தான். "அவன் தப்பியிருக்கவே முடியாது. காஞ்சிக்குள் தான் ஒளிந்திருக்கிறான். காஞ்சி எல்லைப் பாதைகள் முழுவதிலும் எச்சரிக்கை அனுப்பியாகிவிட்டது. உடனே ஊரில் பறையறையச் சொல். உதயசந்திரனுக்குத் தங்க இடமளித்தாலோ, உணவு அளித்தாலோ மரண தண்டனை வழங்கப்படும் என்று எச்சரிக்கச் சொல்."

ஒற்றர் படை வீரன் வணங்கிவிட்டு வெளியேறினான்.

"ஒருவேளை தப்பிப் போயிருப்பான். அவனை வீணாகத் தேடுவானேன். ஓடிப் போனால் போகிறான்" என்றாள் பிரேமவர்த்தினி.

"அவன் தப்பியிருக்க முடியாது. அவனைக் கழுவேற்றியே தீரவேண்டும். போட்டி மைதானத்தில் என்னை அவமானப்படுத்தினானே" என்று கோபத்துடன் இரைந்து விட்டு சித்திரமாயன் தன் மாளிகையை நோக்கி விரைந்தான்.

சித்திரமாயனைக் கண்டதும் மேகலா, "ஓடிப்போன அந்த வீரனைப் பிடித்து விட்டார்களா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"எப்படியோ தப்பியிருக்கிறான். சீக்கிரம் அகப்பட்டு விடுவான். அவனுக்குச் சீனச்சேரியில் ஒரு காதலி இருக்கிறாள். எப்படியும் அவளைத் தேடிப் போவான். சீனச் சேரியைச் சுற்றிலும் ஒற்றர்களை நிறுத்தியிருக்கிறேன்" என்றான்.

"ஓ... காதலி இருக்கிறாளா?" – மேகலாவின் முகம் வாடியது. "அவள் என்ன சிறந்த அழகியோ? சீனப் பெண்களின் கண்கள், இடுங்கிப்போய் அழகாயிராது என்று கேள்விப் பட்டிருக்கிறேன்" என்றாள்.

"அவள் எப்படி இருப்பாளோ, இவன் அடிக்கடி அவளைச் சந்திக்கச் சீனச்சேரிக்குப் போவானாம்" என்றான், சித்திரமாயன்.

மேகலாவின் மனத்தில் சங்கடம் தோன்றியது. பொறாமை உள்ளுரக் கனியத் தொடங்கியது. உதய சந்திரனின் நினைவு அவளுடைய தவிப்பை அதிகப் படுத்தியது.

சித்திரமாயன் சென்றதும், தன்னுடைய அறைக்குள் சென்று படுக்கையில் அமர்ந்தாள். அந்தரங்க மெய்க்காப் பாளனை வரவழைத்து, உதயசந்திரனைப் பற்றி விசாரித் தாள். அவன் இன்னும் அகப்படவில்லை என்ற செய்தியை மெய்க்காப்பாளன் சொன்னான்.

"ஜாக்கிரதை. அவனுக்கு எவ்வித ஆபத்தும் நேராமல் பிடித்து இங்கே கொண்டு வர வேண்டும்" என்றாள்.

மெய்க்காப்பாளன் வணங்கிவிட்டு வெளியேறினான். மேகலாவிற்கு உடல் முழுவதும் பரபரத்தது. உதயசந்திரனுக்கு ஒரு காதலி இருக்கிறாள் என்ற செய்தி முள் மாதிரி மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. அவளை உடனே காணவேண்டும் என்ற தவிப்புக்கு ஆளானாள். நெஞ்சில் கிளர்ந்த மோக அலைகள் அவளுடைய அங்கமெல்லாம் படர்ந்து, படுத்தின. அவன் தீண்டிய இடங்கள் எல்லாம் உணர்ச்சிக் கொந்தளிப்பில் தத்தளித்தன. கண்களை மூடிய படி கற்பனையில் அவனை வலிய இழுத்தாள். மஞ்சத்தில் மெய் மறந்து கிடந்தாள்.

திடீரென்று தாதி ஒருத்தி ஓடி வந்த ஓசை கேட்டு கற்பனையிலிருந்து விடுபட்டாள். கோபம் எழுந்தது. கற்பனையில் காதல் லீலையின் உன்னதமான கட்டத்தில் லயித்திருந்ததைத் தாதி கலைத்து விட்டாளே என்ற கோபத்தில், தாதியை உறுத்துப் பார்த்தாள்.

போர்க்களத்திலிருந்து ஏதோ அவசரச் செய்தி வந்திருப்பதாகவும், தூதர்கள் மகாராணியின் அந்தப்புரத்திற்கு விரைந்திருப்பதாகவும் தாதி கூறினாள்.

மகாராணியின் அந்தப்புரத்தில் தூதர்கள் வந்திருக்கும் செய்தி கேட்டு பிரேமவர்த்தினி எழுந்து, அடுத்த அறைக்குச் சென்றாள். அங்கு இரு வீரர்கள் மிகுந்த பயத்துடனும், பரபரப்புடனும் நின்று கொண்டிருந்ததைக் கண்டு துணுக்குற்றாள். ஏதோ ஓர் அதிர்ச்சி தரக்கூடிய செய்தியைச் சொல்லப் போகிறார்கள் என்பதை யூகித்துக் கொண்டாள்.

மகாராணியைக் கண்டதும் ஒரு வீரன் வணங்கி விட்டு நாக்குழறச் செய்தியை ஒப்புவித்தான்–

போர்க்களத்தில் சக்கரவர்த்தி வீர மரணமடைந்தார் என்றும் பல்லவப் படை பின் வாங்கி, காஞ்சிக்குத் திரும்பு

கிறது என்றும் அவன் கூறியதைக் கேட்டுப் பேரதிர்ச் சிக்குள்ளாகிக் கல்லாய்ச் சமைந்துவிட்டாள் மகாராணி.

அப்போது சித்திரமாயன், அவளைக் காணப் பரபரப் புடன் ஓடிவந்தான்.

* * *

தரணிகொண்ட போசர் தம்முடைய மாளிகையின் பேட்டி அறையில் தம்மைப் பேட்டி காண வருபவர்களுக் காக அமர்ந்திருந்தார். காவல் வீரன் அவரிடம் ராஜன் நம்பூதிரியை அழைத்துவந்தான். அவனைக் கண்ட முதன் மந்திரி, அவனைக் கண் இமைக்காமல் பார்த்தார். அவனு டைய சாமுத்திரிகா லக்ஷணங்களைக் கண்டு வியந்தார். அவனுடைய பரந்த நெற்றியையும், கண்களில் வீசிய ஒளியையும், உயர்ந்த நாசியையும் கூர்ந்து கவனித்தார். மார்பில் கிடந்த முப்புரி நூலையும் கண்டார். சிறந்த கல்விமான் என்பதைப் புரிந்து கொண்டார்.

அவரை வணங்கிவிட்டு பவ்வியமாக நின்றான் ராஜன் நம்பூதிரி. அவனை அருகே இருந்த ஆசனத்தில் அமரும்படிக் கூறினார் மந்திரி. ராஜன் நம்பூதிரி கூசியபடியே நின்றான்.

"உட்கார்" என்றார், மீண்டும். ஆசனத்தில் அமர்ந்தான்.

"இளைஞனே, உன் பெயர் ஸ்ரீ ராஜன் நம்பூதிரி தானே" என்று கேட்டார் மந்திரி.

"ஆமாம்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"உன்னைப் பற்றி சோமயாஜி கூறியிருக்கிறார். முன்பே உன்னைக் காணவேண்டும் என்றுதான் நினைத் தேன். மயானத்தில் நீ ஏதோ பேசினாயாமே?"

"பேசக்கூட பல்லவ நாட்டில் சுதந்திரம் இல்லையா மந்திரி அவர்களே?" என்று வெடுக்கென்று கேட்டான், ராஜன் நம்பூதிரி.

மந்திரியின் முகத்தில் முறுவல் தோன்றியது.

"இளைஞனே, இன்னும் அந்த அளவுக்கு இந்த நாடு இழிநிலையை அடைந்துவிடவில்லை" என்றார், முதன் மந்திரி.

"அப்படியானால், ஏதோ ஓர் அளவுக்கு இழிநிலை யடைந்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டான், ராஜன் நம்பூதிரி.

மந்திரி அவனை உற்றுப் பார்த்தார். அவனுடைய சாதுர்யத்தை மனதுக்குள் மெச்சிக்கொண்டார்.

"நீ அப்படி எண்ணுகிறாயா?" என்று கேட்டார்.

ராஜன் நம்பூதிரியின் முகத்தில் ஒரு சோகப்புன்னகை தோன்றியது. "ஒரு நாட்டின் மந்திரிக்குத் தெரியாத நிலைமையையா ஒரு பிரஜை எண்ணிவிட முடியும்?" என்றான்.

"நாட்டின் நிலையை மந்திரிக்கு உணர்த்தத்தான் மயானத்தில், மக்களைப்போர்க்கோலம் பூணும்படி தூண்டிவிட்டாயோ?" என்று மந்திரி கேட்டார்.

ராஜன் நம்பூதிரி திகைத்தான். "மந்திரி அவர்களே, மயானத்தில் என் மனக் குமுறலைக் கொட்டித் தீர்த்தேன். அவ்வளவு தானே தவிர, யாரையும் நான் போர்க்கோலம் பூணச் சொல்லவில்லை. என் வார்த்தைகள் அப்படித் தூண்டி இருக்குமானால், அதற்குப் பொறுப்பாளியும் நானல்லன். என்னைப்பேசத் தூண்டிய சம்பவங்கள் தாம்" என்றான்.

"ஓ, அப்படியானால் உண்மையான குற்றவாளிகள் அந்தச் சம்பவம் நடைபெறக் காரணமாயிருந்தவர்கள்தாம் என்கிறாயா?" என்று கேட்டுச் சிரித்தார் மந்திரி.

"வேறென்ன?"

"நாட்டில் யாரோ ஒரு பிரஜைக்குத் துன்பம் நேர்ந்திருக்கிறது. அதன் பொருட்டு ஓர் அரசையே எதிர்ப்பதா?"

"மந்திரி அவர்களே, அந்த யாரோ ஒரு பிரஜை, மனித இனந்தான். இங்கு பறி போயிருப்பது மனிதனின் சுதந்திரம். ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களுக்குத் தனி மனிதனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் கிடையாது, அக்கறையும் கிடையாது."

"அரசுக்கு சமுதாயத்தைப் பற்றித்தான் அக்கறை உண்டு."

"சமுதாயம் என்பதே தனிமனிதனின் கூட்டமைப்புத் தான். தனிமனிதன், சமுதாயத்தின் ஆணிவேர்."

"நாடு, ஆட்சி என்பதெல்லாம் ஒரு தத்துவத்தின் அடிப் படையில் இயங்குபவை. அந்த இயக்கத்தின் லட்சியத்தைச் சிதையாமல் காக்க முனையும்போது, சில வேளைகளில் தனிப்பட்டவர்களை ஒழிக்க வேண்டிய கடமை அரசுக்கு ஏற்படுவதுண்டு" என்றார் மந்திரி.

"வறட்டுத் தத்துவங்களைக் காரணம் காட்டி லட்சக் கணக்கில் தம் நாட்டு பிரஜைகளையே கொன்று குவிப்பது கூட நியாயந்தான் என்று அதிகார பீடத்திலிருப்பவர்கள் எண்ணினாலும் வியப்பில்லை. இப்படிப்பட்ட கொடுமை யாளர்கள் அதிகார வெறி கொண்டு ஆட்சி பீடத்தில் இருக் கும்வரை, மனிதர்களுக்குச் சுதந்திரம் ஏது?" என்று ராஜன் நம்பூதிரி, ஆத்திரத்துடன் கூறினான். பிறகு தொடர்ந்து, "மந்திரி அவர்களே, தனிமனிதனின் உணர்வுகள்தாமே ஒரு சமுதாயத்தின் நாகரிகமும் கலாச்சாரமும். அவனுடைய சுதந்திரத்தைப் பறித்து, அடிமைப்படுத்தி நலியவைத்து விட்டால், பிறகு, இந்தச் சமுதாயத்திற்கு என்ன பெருமை? நலிந்தவர்களைக் கொண்ட சமுதாயமும் சோகை பிடித்துப் போயிருக்கும். வலுவிழந்த ஆண்மையற்ற சமூகத்தை ஆள்வது ஆட்சியாளர்களுக்குச் சுலபம். ஆனால் அதில் என்ன பெருமை? இதைவிட, ஆட்டுமந்தையை ஆள

லாமே. பல்லவ நாடே ஒரு மாபெரும் சிறைச்சாலை என்பதில் பெருமைப்படப் போகிறீர்களா?" என்றான்.

"இளைஞனே, உன் மனவேதனையை நான் உணர்கிறேன். ஆட்சியில் இப்படி ஏதாவது ஓர் அசம்பாவிதம் எப்போதாவது நேர்வதுண்டு. அதற்காக அரசையே எதிர்ப்பது தற்கொலைக்கு ஒப்பாகும். நம் கையே நம் கண்ணைக் குத்திவிட்டால், கையை வெட்டி விட முடியுமா?"

"கை புரையோடி அழுகி, வேதனை கொடுத்தால், அதை வெட்டி எறிந்து விடுவதுதானே சிறந்த மார்க்கம்" என்றான் ராஜன் நம்பூதிரி.

அவனை அன்போடு தோளில் தட்டினார் மந்திரி. "தம்பி, உன்னுடைய பேச்சு மக்களை எழுப்பி விட்டிருக்கிறது. இதனுடைய எல்லை எதுவாக இருக்கும் என்று எண்ணுகிறாய்? சிந்தித்துப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"மந்திரி அவர்களே, மக்கள் உண்மையாகவே விழித்துக் கொள்வார்களேயானால், இதனுடைய எல்லை, இந்த ஆட்சியின் முடிவுதான்."

"நீ எங்காவது கேள்விப்பட்டிருக்கிறாயா அல்லது படித்தாவது இருக்கிறாயா, இப்படி மக்களின் சக்தி, ஓர் ஆட்சியை எதிர்த்து நின்று முடிவுக்குக் கொண்டுவந்தது என்பதை?"

"ஐயா, அரசவையில், ஒரு பெண்ணின் பேச்சு, பாண்டிய மன்னனின் உயிரை, அந்த இடத்திலேயே வாங்கி விட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. இவ்வளவுக்கும் மன்னன், மக்களுக்கு எதிராகக் கூடச் செயல்படவில்லை. அந்தப் பெண்ணின் கணவனைத் திருடன் என்று தவறாக எண்ணி, மரணதண்டனை கொடுத்தான். ஒரே ஒரு உயிரை அநியாயமாகக் கொன்றதற்கு, பாண்டியனுக்கு நேர்ந்த கதி

அது! ஒரு அடலைப் பெண்ணின் பேச்சுக்கு அவ்வளவு சக்தி இருக்குமானால், ஒரு நாட்டு மக்களே ஒன்று திரண்டெழுந்தால்..."

"மக்களை திரட்ட முடியும் என்று நம்புகிறாயா?"

"முடியும், நாட்டில் எல்லாருமே கோழைகள் அல்லர். எல்லாருமே அறிவிலிகள் அல்லர். துணிவுள்ளவர்களும், சிந்தனையாளர்களும் கொஞ்சப் பேராவது இருப்பார்கள். அவர்கள் போதும். அவர்களை விழிக்க வைத்துவிட்டால் போதும் மந்திரி அவர்களே."

"இளைஞனே, உன்னுடைய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கண்டு நான் பெருமைப்படுகிறேன். உன்னுடைய சொல்லுக்குச் சக்தி இருக்கிறது. ஆனால் உன் பேச்சில் மயங்கி மக்கள் கிளர்ச்சியில் இறங்கினால் அவர்களுக்கு என்ன நன்மை கிடைத்துவிடும்? உன்னுடைய மயானப் பேச்சினால் நிகழ்ந்ததென்ன? காஞ்சி நகர் கட்டடங்களைச் சேதப்படுத்தினார்கள். அவையெல்லாம் அவர்களுடைய வரிப்பணத்தில் கட்டியவைதாம். நாட்டில் சேதப்படுத்தி நஷ்டத்தை உண்டு பண்ணினால், அதை ஈடுசெய்ய இதே மக்கள்தாமே இன்னும் வரி கொடுக்க வேண்டியிருக்கும்."

"ஒரு கொடுமையை எதிர்த்துப் போராடும்போது ஏற்படும் துயரங்களை அனுபவிக்க வேண்டியதுதான். ஒரு பெரிய துன்பத்திலிருந்து மீள சிறு துன்பத்தை ஏற்பதில் என்ன தவறு?"

"தம்பி, உன்னுடைய தத்துவங்கள் கேட்பதற்கு நன்றாக இருக்கின்றன. ஆனால், நடைமுறைக்கு உதவாதவை. திட்டம் இல்லாமல் எந்தக் காரியமும் வெற்றியடையாது. மேலும் சக்தி இல்லாதவர்களிடம் திட்டமிருந்தும் பயனில்லை. சக்தி வாய்ந்த அரசை தெருக்கிளர்ச்சிகளால் பணிய வைக்க முடியாது. மக்கள் தாம் முடிவில் பலியாவார்கள். கிளர்ச்சிக்கு நீதான் காரணம் என்று அரசு அறியுமானால், உனக்கும் ஆபத்துத்தான்" என்றார் மந்திரி.

"ஆபத்தைப் பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை" என்றான் ராஜன் நம்பூதிரி உறுதியாக.

"மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டுவது ராஜத் துரோகம் என்பது உனக்குத் தெரியுமே."

"மந்திரி அவர்களே, என்னைப் பயமுறுத்துகிறீர்களா? நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் என்று முதன் முதலில் ஒரு தனிமனிதன், அரசை எதிர்த்து சுதந்திரக் குரல் கொடுத்தது இந்தப் பல்லவ நாட்டில்தான். இன்னும் அந்த உணர்வு இங்கு கொஞ்சமாவது இருக்கும். அதை என்னால் திரட்டி, கொடுமையை எதிர்த்து நிற்க முடியும். மகாராணி, மக்களின் தர்மகர்த்தாவாக அல்லாமல், சுய நலமிக்க கொடிய சர்வாதிகாரியாகும் போது, அவளுக்குக் கீழிருந்து வதைப்படுவதைவிட, அவளை எதிர்த்து உயிரை விடுவதுமேல். இந்த முயற்சியில் என் உயிர் போவதைப் பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை" என்றான் ராஜன் நம்பூதிரி.

முதன் மந்திரி அவனை வியப்புடன் பார்த்தார். அவனுடைய கண்களில் தெரிந்த சுதந்திர வேட்கையும், பேச்சில் தொனித்த தன்னம்பிக்கையும் அவரைச் சிலிர்க்க வைத்தன. அவனுடைய தோளில் வாஞ்சையுடன் கையை வைத்து அழுத்தியவாறு, "உயிரை அசட்டுத்தனமாக இழப்பதில் பெருமை இல்லை. நிதானமாகச் செயல்பட வேண்டும். உன்னை எச்சரிக்கத்தான் இங்கே அழைத்துவரச்செய்தேன். உன்னுடைய நண்பனை வீரர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நீயும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளாதே. நாட்டில் இப்போது காணப்படும் சூழ்நிலை தற்காலிகமானதே. சக்ரவர்த்தி திரும்பி வந்தால், எல்லாம் சரியாகிவிடும். பொறுமையாக இரு. எச்சரிக்கையாகவும் இரு" என்றார் மந்திரி.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு காவல் வீரன் விரைந்து வந்து, போர்க்களத்துக்குச் சென்ற தூதன்

திரும்பி வந்திருப்பதாக அறிவித்தான். அதைக் கேட்டு முதன் மந்திரி திடுக்கிட்டார். மன்னரிடம் தூது சென்றவன் அதற் குள் எப்படித் திரும்பி வந்திருக்க முடியும் என்று சந்தேகித் தார். ராஜன் நம்பூதிரியை அனுப்பிவிட்டு, தூதனை உள்ளே அழைத்துவர உத்தரவிட்டார். உள்ளே வந்த தூதன் கொண்டு வந்த செய்தியைக் கேட்டு மந்திரி பதறிப் போனார்.

"நான் பாதிவழி சென்றபோதே எதிரில், போர்க்களத் திலிருந்து இரண்டு தூதர்கள் மன்னரின் மரணச் செய்தியைத் தாங்கி வந்துவிட்டார்கள்" என்றான் தூதன்.

"அந்தத் தூதர்கள் இதற்குள் அரண்மனையில் செய்தி யைச் சொல்லியிருப்பார்களா?" என்று மந்திரி கேட்டார்.

"நானும் அவர்களும் ஒன்றாகத்தான் கோட்டைக்குள் வந்தோம். இந்நேரம் அவர்கள் அரண்மனையை அடைந்தி ருப்பார்கள்" என்றான், தூதன்.

முதன்மந்திரி உடனே தன்னுடைய இரத்தில் இரணிய வர்மரின் மாளிகைக்கு விரைந்தார்.

26. விநாசகாலே விபரீத புத்தி

மாலையில் அந்தி மயங்கும் நேரத்தில், கோட்டை வாயிலைக் கடந்து வெளியே சென்று கொண்டிருந்த கூட்டத்தோடு ஒரு காபாலிகன், கழுத்தில் மண்டை யோட்டு மாலையை அணிந்து கொண்டு, கையில் ஒரு மண்டை ஓட்டையும் ஏந்தியவாறு சென்று கொண்டிருந் தான். கூட்டத்திலிருந்து சிலர் அவனிடம் குறும்பு பண்ணத் தொடங்கினர்.

"என்ன சாமியாரே, கையிலிருக்கும் மண்டையோட் டுக்குச் சொந்தக்காரன் யாரோ?" என்று கேட்டான் ஒருவன்.

"உன்னைப் போல் ஒரு முட்டாள்தான்" என்றான், காபாலிகன்.

அதைக் கேட்டுப் பலர் சிரித்தார்கள். இன்னொருவன் கேட்டான், "உன் மண்டையோட்டுக்கு எந்த முட்டாள் சொந்தக்காரன் ஆவானோ?"

"நீயே ஆகிக் கொள்ளேன். இப்போதே வேண்டுமானாலும் உனக்கு உரிமை ஓலை எழுதித் தந்து விடுகிறேன்" என்றான், காபாலிகன்.

"சாமியாரே, தனியாகப் போகிறீரே, உம்முடைய காபாலிகை எங்கே?" என்றான் ஒருவன்.

"அவளைத் தேடித்தான் சாமியார் போகிறார் போலிருக்கிறது" என்றான் மற்றொருவன்.

"அவளை எங்கே போய்த் தேடுவார்? இவருடைய பைரவர் தாண்டவமாடும் மயானத்திலா?" என்று கேட்டு ஒருவன் சிரித்தான்.

"அவளும் மயானத்தில் மண்டை ஓடுகளை பொறுக்கப் போயிருக்கிறாளோ என்னவோ?" என்று ஒருவன் கூறியதும் கூட்டத்திலிருந்தவர்கள் சிரித்தார்கள்.

"நீங்களும் ஒரு நாள் சுடுகாட்டில் மண்டை ஓடுகளை இழக்க வேண்டியவர்கள்தாம்" என்றான் காபாலிகன்.

"அப்போது நீர் வந்து பொறுக்கிக் கொள்ளும்" என்று ஒருவன் கூறியதும், எல்லாரும் சிரித்தார்கள்.

கோட்டையை விட்டு அகழிப் பாலத்தின் வழியே வெளிவந்த காபாலிகன், அகழியின் ஓரமாகவே நடந்து சென்றான். சீனச் சேரியில் ஓரிரண்டு வீடுகளில் பிச்சை ஏற்றுக் கொண்டு டெங்லீயின் வீட்டு வாசலில் போய் நின்ற போது, லீனா மருக்கொழுந்து செடிகளிருந்த மண் பானைகளில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். காபாலிகனைக் கண்டதும் அவனுக்குப் பிச்சை போடுவதற்காக அரிசி எடுக்க வீட்டினுள்ளே அவள் சென்றபோது, காபாலிகனும்

அவளைப் பின் தொடர்ந்து சென்றான். வீட்டுக்குள் காபாலிகன் வந்ததைக் கண்டு திகைத்த லீனா, பயந்து போய் கூச்சலிட எத்தனித்த போது, காபாலிகன், அவள் வாயைப் பொத்தி, "லீனா, இரைந்து விடாதே. நான் தான்" என்றான்.

குரலை அடையாளம் கண்டு கொண்ட லீனா, வியப்பும், பரபரப்பும் ஒருங்கே அடைந்தவளாய், காபாலிகனின் தலையிலிருந்த லிங்க மகுடத்தைத் தட்டி விட்டாள்.

"இப்படி மாலையில், இவ்வளவு வெளிச்சம் இருக்கும் போது வந்திருக்கிறீர்களே, ஆபத்தில்லையா?" என்றாள் மிகுந்த கவலையுடன்.

"இருட்டிய பிறகு வந்தால்தான் சந்தேகம் தோன்றும். எப்படி வேஷம்? அடையாளமே தெரியவில்லையல்லவா?" என்றான், உதயசந்திரன்.

"சீக்கிரம் குளியுங்கள், உடலெல்லாம் ஒரே சாம்பல். மண்டை ஓட்டைக் கழற்றுங்கள். பார்க்கவே பயமாயிருக்கிறது" என்றாள். லீனா.

அன்று இரவு பத்திரமாக அங்கு தங்கிவிட்டு மறுநாள் வெளியேறுவது என்று முடிவு செய்திருந்தான். எந்தச் சமயத்திலும் ஒற்றர்கள் அவனைத் தேடி அங்கு வரலாம் என்பதால், தோட்டத்திலுள்ள குடிசையில் அவன் தங்குவதென்றும், மறுநாள் அவனையும் லீனாவையும் பத்திரமாக மாமல்லபுரம் அழைத்துச் சென்று, சீனத்துக்குக் கப்பலேற்றி விடுவதென்றும் டெங்லீ முடிவு செய்தார். ஆனால், உதயசந்திரன் அதற்குச் சம்மதிக்கவில்லை.

இனி அவனால் பல்லவ நாட்டில் வாழ முடியாது என்பது அவனுக்குத் தெரியும். அவன் அகப்பட்டால் கழுவேற்றப்பட்டு விடுவான். அதற்காக கடல் கடந்து, மொழி தெரியாத சீன நாட்டுக்குச் செல்லவும் அவன் விரும்பவில்லை. பாண்டிய நாட்டுக்கோ அல்லது சோழ நாட்

டுக்கோ போய்விட எண்ணினான். அவன் எவ்விதம் முடிவு செய்தாலும் லீனா ஏற்கத் தயாராயிருந்தாள். அவளிடம் நிறையத் தங்கம் இருந்தது. அதைக் கொண்டு எந்த நாட்டிலும் சுகபோகமாக வாழ முடியும்.

முடிவாக இருவரும் பாண்டிய நாட்டுக்குப் போய் விடத் தீர்மானித்தார்கள். பாண்டிய நாட்டில், கொற்கைக் கடற்கரையில் ஒரு சீனக் குடியிருப்பு இருந்தது. அங்கு போய் குடியேறுவது என்று முடிவு செய்தார்கள். மறுநாட் காலையில் உதயசந்திரனும் ஒரு சீனப் பெண்ணைப் போல் வேடம் அணிந்து கொண்டு லீனாவுடன் புறப்படுவது என்றும், டெங்லீ உடன் சென்று, பாண்டிய நாட்டில் அவர் களைக் குடியமர்த்திவிட்டுத் திரும்புவதென்றும் முடிவா கியது.

அன்று இரவு, உணவுக்குப் பின், உதயசந்திரனை தோட்டத்துக் குடிசைக்கு டெங்லீ அழைத்துச் சென்றார். அவர் கையிலிருந்த சிறு விளக்கின் வெளிச்சத்தின் உதவி யால் இருவரும் தோட்டத்தினுள் நடந்தனர். அப்போது அருகாமையில் ஒரு புதருக்கு அடியில் சலசலப்புக் கேட்கவே உதயசந்திரன் திகைத்து நின்றான்.

"ஒன்றுமில்லை பயப்படாதே. இந்தத் தோட்டத்தில் வாழும் ராஜநாகம்தான். ஒன்றும் செய்யாது. லீனாவுடன் நன்கு பழகி விட்டது. அதோ..." என்றவாறு விளக்கை உயர்த்திப் பிடித்தார், டெங்லீ.

புதருக்கு அருகில் நாகம் ஊர்ந்து சென்றது விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது.

"கொடிய நாகம் கூட அன்புக்குக் கட்டுப்படுகிறது. இந்நாட்டு இளவரசன் நாகத்தை விடக் கொடியவனாயிருக் கிறான்" என்று முணுமுணுத்தபடியே கோபத்தினால் பற்களைக் கடித்தான், உதயசந்திரன்.

இருவரும் குடிசையை நோக்கி நடக்கத் தொடங்கினர். ஒரு மரத்திலிருந்து ஏதோ சலசலப்புக் கேட்கவே, உதய சந்திரன் திடுக்கிட்டு நின்றான்.

"ஒன்றுமில்லை. காற்றில் கிளைகள் ஆடுகின்றன" என்றார், டெங்லீ.

உதயசந்திரன், மரத்தை அண்ணாந்து பார்த்தான். இருளில் ஒன்றும் தெரியவில்லை. சற்று தூரம் சென்றதும் இன்னொரு மரத்திலிருந்து சலசலப்புக் கேட்கவே, "காற்றின் சலசலப்பாகத் தெரியவில்லையே. யாரோ மரத்தின் மீது, ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்குத் தாவுவது போலிருக்கிறதே" என்றான், உதயசந்திரன்.

"இரவு வேளையில் மரங்களில் அப்படித்தான் சப்தம் கேட்கும். இந்த விளக்கு வெளிச்சத்தைக் கண்டு காட்டுப் பூனையோ அல்லது குரங்கோ கிளை தாவியிருக்கும். வேறொன்றும் இல்லை" என்றார், டெங்லீ.

தோட்டத்தின் நடுவே இருந்த ஒரு குடிசைக்குள் உதயசந்திரன் சென்றதும், அது விருந்தினர்கள் தங்குவதற்கு எல்லா வசதிகளும் கொண்ட இடம் என்பதைப் புரிந்து கொண்டான்.

"இது பாதுகாப்பான இடம். இங்கே யாரும் தேடி வரமாட்டார்கள். அடர்த்தியான மரங்களினூடே இருக்கும் இந்தக் குடிசை யார் கண்களிலும் படாது. தனியாக இருப்பாயா அல்லது நானும் துணைக்கு இருக்கட்டுமா?" என்று கேட்டார், டெங்லீ.

"எனக்குப் பயமில்லை. நீங்கள் வீட்டுக்குப் போங்கள். பெண்கள் அங்கே தனியாக இருப்பார்கள்" என்றான், உதயசந்திரன்.

டெங்லீ கைவிளக்கை அந்தக் குடிசையில் வைத்து விட்டு வெளியேறினார். குடிசைக் கதவைச் சாத்திவிட்டுக்

கயிற்றுக் கட்டிலில் படுத்த உதயசந்திரனுக்கு உறக்கம் வரவில்லை. பாண்டிய நாட்டில் போய்க் குடியேறுவது பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

இலங்கையிலிருந்து அவன் தாய்நாடு திரும்பியபோது, தன்னுடைய வருங்காலத்தைப் பற்றி எவ்வளவோ கற்பனை செய்திருந்தான். இப்போது தாய்நாடு அவனை வேட்டையாடுகிறது. பாண்டிய நாடும் தமிழ் பேசும் மண் தானே. அதுவும் புகழ்பெற்ற நாடுதான். தமிழுக்குச் சங்கம் வளர்க்கும் நாடல்லவா! அங்கே சிறக்க வாழ வகை யில்லாமலா போய்விடும்? லீனாவுடன் அங்கே புது வாழ்வு தொடங்க வேண்டியதுதான்...

லீனாவின் நினைவு வந்ததும் அவனுள் உற்சாகம் தோன்றியது. குடிசைக்கு அவனை டெங்லீ அழைத்து வந்ததைவிட, லீனா அழைத்து வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். தானே கொண்டு விடுவதாக லீனா சொல்லத்தான் செய்தாள். ஆனால் கிழவர்தாம் விவரம் புரியாமல், இருட்டு வேளையில் கன்னிப்பெண் தோட்டத் துப் பக்கம் போகக்கூடாது என்று தடுத்து, அவள் கையி லிருந்த விளக்கைத் தாம் வாங்கிக் கொண்டார். பாவம், லீனாவின் முகம் ஏமாற்றத்தால் வாடிவிட்டது. அவளை உதயசந்திரன் திரும்பிப் பார்த்தபோது அவள் சிணுங்கிய படியே அவனைப் பார்த்து முகத்தை வலித்தாளே...

உதயசந்திரன் அதை நினைத்து ரசித்தபடியே படுத்துக் கிடந்தான். குடிசைக்கு வெளியே ஏதோ தொப்பென்று விழுந்த ஒலி கேட்டது, எழுந்து, சன்னல் வழியே எட்டிப் பார்த்தான். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. உள்ளு ணர்வு அவனை எச்சரித்தது. சற்று நேரம் ஓரமாக நின்ற வாறே கூர்ந்து கவனித்தான். குடிசைக்கு வெளியே ஏதோ விவரமில்லாத ஒலிகள் கேட்டன. உதயசந்திரன் எச்சரிக்கை யடைந்தான். குடிசையினுள்ளே எரிந்து கொண்டிருந்த

விளக்கை அணைத்தான். வாசற்புறத்தில், நாலைந்துபேர் நிற்பது தெரிந்தது. மெல்ல நகர்ந்து, அறையின் பின்புறச் சன்னல் வழியாகப் பார்த்தான். குடிசையின் பின்புறத்திலும் நாலைந்து பேர் நிற்பது தெரிந்தது. அவர்களிடம் ஆயுதம் இருக்கிறதா இல்லையா என்பதை இருட்டில் அனுமானிக்க முடியவில்லை. நட்சத்திரங்களின் ஒளியில் மிக மங்கலாக ஆட்களின் உருவங்கள் மட்டுமே தெரிந்தன.

தான் வசமாக அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்தான். ஒரு கணம் தன்னுடைய நிலையை எண்ணிப்பச்சாதாபமடைந்தான்.

இப்படி அகப்பட்டுக் கழுவேறிச் சாகவா தாய் நாட்டுக்குப் புறப்பட்டு வந்தேன்...? எப்படியாவது தப்பிக்க வேண்டுமே...

மெல்ல வாசற்கதவின் தாழை அகற்றினான். கதவை ஒட்டி நின்று கொண்டான். சற்று நேரத்தில் கதவு அசைந்தது தெரிந்தது. ஒருவனுடைய தலை, உள்ளே எட்டிப் பார்த்தது. பிறகு அவன், மெல்ல உள்ளே காலடி வைத்தான். மறுகணம், உதயசந்திரனின் கை, அவனுடைய கழுத்தில் ஓங்கி விழுந்தது. அடியை வாங்கியவன் தள்ளாடி குடிசைக்குள் விழுந்ததுமே உதயசந்திரன் குடிசையை விட்டு வெளியே பாய்ந்தான். அப்போது வெளியே நின்றவன், அவனுடைய தோளைப் பற்றினான். உதயசந்திரன் துள்ளி, அவனைக் காலால் உதைத்தான். உதைபட்டவன், அலறியபடியே தூரப் போய் விழுந்தான். ஆனால் உதயசந்திரனுக்குப் பின்னாலிருந்து பலர் பாய்ந்து அவனை அழுத்திப் பிடித்துக் கொண்டனர்.

"தப்ப முயற்சிக்காதே. இந்த இடத்திலேயே பிணமாகி விடுவாய்" என்று கூறியவனின் வாள், உதயசந்திரனின் நெஞ்சைத் தொட்டுக் கொண்டிருந்தது. இனி தன்னால் தப்ப

இயலாது என்பதை அறிந்ததும், உதயசந்திரன் சலனமற்று நின்றான்.

* * *

இரணியவர்மரின் மாளிகையில், காஞ்சி நகரின் பல வாரியத் தலைவர்களும், மந்திரிகளும் கூடியிருந்தனர். முதன் மந்திரி எல்லாருக்கும் மிக ரகசியமாக அழைப்பு அனுப்பி, இரணியவர்மரின் மாளிகையில் கூட்டியிருந்தார். இரண்டாவது மந்திரி அச்சுதபட்டரை அழைக்கவில்லை. கூடியிருந்தவர்கள் எல்லாருடைய முகங்களிலும் ஆழ்ந்த கவலை படர்ந்திருந்தது.

போர்க்களத்தில் சக்கரவர்த்தி இறந்துவிட்டார். இனி அரியணையில் முடி சூட வேண்டியவன் சித்திரமாயனே அதை எண்ணித்தான் பலருடைய உள்ளங்களில் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது.

"இனி இளவரசுக்குப் பட்டம் சூட்டவேண்டியதைக் கவனிக்க வேண்டியதுதானே" என்றார், முதன்மந்திரி.

யாரும் பதில் கூறாமல் மௌனமாயிருந்தனர்.

"இனி யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்றார், முதன்மந்திரி. காஞ்சிநகர் காவல் தலைவர் ஜெயவர்மர், ஏதோ கூற நினைத்து, வெளியே சொல்ல முடியாமல் நெளிந்தார்.

அரசாங்கப் பண்டாரத் தலைவர், ஸ்கந்த குமாரர், மெல்லச் சொன்னார்: – "மகாராணிதாம் இப்போது அரியணையில் இருக்கிறாரே. இளவரசர் வயதில் சிறியவர். சில நாள் மகாராணியாரே ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலென்ன?"

"எல்லாம் ஒன்றுதான்" என்றார், ஜெயவர்மர், எரிச்சலுடன்.

"சக்கரவர்த்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இப்படி ஆகிவிட்டதே" என்றார், மூன்றாவது மந்திரி.

"பல்லவடி அரையரைப்படையுடன் காஞ்சிக்கு வரும்படி இளவரசர் உத்தரவு அனுப்பியிருக்கிறார். இன்னும் சில குறுநில மன்னர்களுக்கும், கோட்டத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்" என்றார், முதன்மந்திரி.

"எதற்காக இப்போது அழைப்பு" என்று கேட்டார், ஜெயவர்மர்.

"இளவரசர் என்ன திட்டம் போடுகிறார் என்பது தெரியவில்லை. சரி, இப்போது உடனடியாக நடக்க வேண்டியதை நாம் கவனிப்போம்" என்றார், முதன் மந்திரி.

"மன்னரின் மரணச் செய்தியை மகாராணி இன்னும் நமக்குத் தெரிவிக்கவில்லையே" என்றார், நான்காவது மந்திரி, விஷ்ணு சர்மன்.

"செய்தி மாலையே வந்துவிட்டது. இதற்குள் மந்திரி சபையைக் கூட்டியிருக்க வேண்டுமே" என்று இரணியவர்மர் முதன் மந்திரியிடம் கேட்டார்.

"மகாராணி என்ன நினைத்து, செய்தியை வெளியிடச் சுணங்குகிறாரோ?" என்றார், தரணிகொண்ட போசர்.

"எப்படியும் மக்களுக்கு உண்மை தெரிய வேண்டுமே. எவ்வளவு நாட்களுக்கு மறைக்க முடியும்? போர்க்களத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கும் படை, இன்னும் சில தினங்களில் காஞ்சி நகரை வந்தடைந்துவிடும். வேண்டுமானால், செய்தியை அதுவரை மறைக்கலாம்" என்றார், விஷ்ணு சர்மன்.

சற்று நேரம் யாரும் பேசவில்லை. ஒவ்வொருவர் மனத்திலும் பல சிந்தனைகள் குழப்பிக் கொண்டிருந்தன.

"மன்னரின் மரணச் செய்தி மக்களிடையே ஏதாவது மனமாற்றத்தை ஏற்படுத்துமோ என்று மகாராணி அஞ்சுகிறாரோ என்னவோ" என்றார், ஸ்கந்த குமாரர்.

"அப்படி என்ன மாற்றந்தான் ஏற்படுகிறது என்பது தெளிவாகிவிட்டுமே" என்றார் விஷ்ணு சர்மன்.

முதன் மந்திரி, "இப்போது இங்கேயே மந்திரிசபை கூடியிருக்கிறது. இரண்டாவது மந்திரி ஒருவர்தாமே இல்லை. மன்னரின் மரணச் செய்தியை மக்களிடையே அறிவிக்க நாம் உத்தரவு அனுப்புவோம்" என்றார். பிறகு, ஜெயவர்மரை நோக்கி, "இப்போது, இருட்டுகிற சமயமாகிவிட்டது. நன்றாக இருட்டி விடுவதற்குள் காஞ்சிநகர் முழுவதிலும் பறையறைந்து, மன்னரின் மரணச் செய்தியை அறிவிக்கச் சொல்லுங்கள். மந்திரி சபையின் மணியையும் ஒலிக்கச் செய்யுங்கள். இரவில் உங்கள் காவல் படையினரை எச்சரிக்கையாக நகரைச் சுற்றிவரச் செய்யுங்கள். செய்தியை மக்கள் எப்படி ஏற்கிறார்கள் என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ளலாம்" என்றார்.

முதன் மந்திரியின் உத்தரவை மற்ற முன்று மந்திரிகளும் ஆமோதித்தார்கள். மன்னரின் மரணச் செய்தியை ஓலையில் எழுதி, தம்முடைய முத்திரையை இட்டு, ஜெயவர்மரிடம் முதன்மந்திரி கொடுத்தார்.

சற்று நேரத்தில் எல்லாரும் விடைபெற்றுச் சென்றனர். கடைசியில் முதன்மந்திரி, இரணியவர்மரிடம் விடைபெற்ற போது, "மகாராணியும், இளவரசரும் மனதில் என்ன எண்ணுகிறார்கள் என்பது தெரியவில்லை. ஏதோ நடைபெறப் போகிறது என்று என் உள்மனம் கூறுகிறது. எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டியதுதான்" என்றார்.

"அப்படி என்னதான் நடந்துவிடும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?"

"மக்கள் ஒருவேளை இளவரசர் அரியணையில் ஏறுவதை விரும்பவில்லையென்றால்?"

"ஓ...! அப்படியும் நடைபெறுமா என்ன? பாரம்பரியப்படி அரியணை ஏறவேண்டிய ஒரு இளவரசனைத் தடுத்து நிறுத்த மக்களால் முடியுமா என்ன? அப்படி எங்காவது நடந்ததாகக் கேள்விப்பட்டதுகூட இல்லையே" என்று வியப்புடன் சொன்னார் இரணியவர்மர்.

"கேள்விப்படாத விஷயங்கள் எல்லாம் நடக்க முடியாது என்று அர்த்தமா? மக்கள் சக்தி அபரிமிதமானது. இதுவரை எந்தநாட்டிலும் மக்கள் தங்கள் சக்தியை உணர்ந்து செயல்படவில்லை. இங்கு சில தினங்களாக மக்கள், ஆங்காங்கே திரண்டு தங்கள் சக்தியைக் காண்பித்திருக்கிறார்கள். அன்று, வடமொழிக் கடிகையின் மாணவனுடைய பேச்சு மக்களின் சக்தியை விழிக்க வைத்துவிட்டதே! இரண்டாவது மந்திரியின் மாளிகையைத் தாக்கும் துணிவு மக்களுக்கு வந்திருக்கிறதே! இது போதாதா?" என்றார் முதன்மந்திரி.

"என்னால் கற்பனைகூடப் பண்ணிப் பார்க்கமுடியவில்லை. அரியணைக்கு எதிராக மக்கள் செயல்பட முடியுமென்று."

"முடியும் என்று சிலர் சிந்திக்கத் தொடங்கிவிட்டால்?"

"புதுமைதான், இப்படி ஏதாவது நடைபெறலாம் என்று எதிர்பார்த்துதான், பல்லவடி அரையரைப் படையோடு வருமாறு இளவரசன் உத்தரவு அனுப்பியிருக்கிறானோ?"

"இருக்கலாம். அதற்குள் மன்னரின் மரணச் செய்தி கேட்டு எப்படிச் சிந்திக்கிறார்கள் என்று கவனிக்கலாம். மக்களுக்குச் செய்தி தெரிந்துவிட்டதை அறிந்து மகாராணியும், இளவரசரும் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதை

யும் கவனிப்போம்" என்று கூறிவிட்டு விடைபெற்ற தரணிகொண்ட போசர், அரண்மனையை நோக்கி நடந்தார்.

* * *

முதன்மந்திரி அரண்மனையை அடைந்தபோது, அவர் எதிர்பார்த்ததைப் போல் மகாராணி இல்லை. அவள் சோகமே வடிவாக, தலைவிரிகோலத்துடன் கண்ணீர் பெருக அவரை வரவேற்பாள் என்று எதிர்பார்த்துச் சென்ற வர் ஏமாந்து போனார்.

அவர் சென்ற போது, பிரேமவர்த்தினி படுக்கையறை யில் இருந்தாள். முதன் மந்திரி வந்திருக்கும் தகவல் தெரிந்த தும் அவள் வெளியே வந்தாள். சோகத்தை மிகச் சிரமப் பட்டு வரவழைத்துக் கொண்டு வந்தாள். அவளைக் கண்ட தும், முதன்மந்திரி, "மகாராணி அவர்களே, பேரிடி விழுந்து விட்டதே, இந்நாடே அநாதையாகி விட்டது, தேவியாரே" என்றார்.

பிரேமவர்த்தினி வியப்புடன், "உங்களுக்கும் செய்தி தெரியுமா? எப்போது செய்தி வந்தது. யார் செய்தி கொண்டு வந்தார்கள்?" என்று கேட்டாள். அவளிடம் காணப்பட்ட பயத்தையும் பரபரப்பையும் முதன்மந்திரி கவனித்தார்.

"சற்று முன்தான் செய்தி வந்தது. தெரிந்த உடனே தங்களைக் காண விரைந்து வந்தேன், இது யாரும் எதிர் பாராத அதிர்ச்சி" என்றார்.

"என்ன செய்வது, கடவுள் சித்தம் அப்படி" என்றாள், பிரேமவர்த்தினி. பிறகு, "இனி நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டும். பல்லவப் படை திரும்பியதும் சித்திர மாயனுக்கு மகுடம் சூட்டுவதற்கான ஏற்பாட்டைக் கவனிக்க வேண்டும். அரியாசனம் காலியாக இருக்கக் கூடாது" என்றாள்.

"மன்னரின் ஈமக் கிரியைகள் முடிந்த பிறகு, மூன்று நாட்கள் துக்கம் அனுஷ்டித்த பிறகுதான் மற்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டும். மேலும் அரியாசனம் இப்போது காலியாகவும் இல்லை. இப்போது தாங்கள்தாம் அலங்கரிக்கிறீர்களே."

"எனக்கு இந்தப் பொறுப்பு வேண்டாம். உரிமை உள்ளவன் சித்திரமாயன். பல்லவப்படை வந்ததும் அவனை அரியணையேற்றி விட வேண்டும். தாமதம் வேண்டாம்" என்று மகாராணி கூறிவிட்டு, வேறு பேச்சின்றி முதன் மந்திரிக்கு விடை கொடுத்து அனுப்பினாள்.

மகாராணி பட்டென்று பேச்சை நிறுத்திவிட்டுத் தம்மை அனுப்பி விட்டதை எண்ணி முதன்மந்திரி, உள்ளூரக் குமைந்தார். தம்முடைய மாளிகைக்குத் திரும்பிய பின், இரவு முழுவதும் உறங்காமல் மனம் உழன்று கொண்டிருந்தார்.

பல்லவ சாம்ராஜ்யம் அப்போது, பல ஆபத்துக்களை எதிர்நோக்கியிருந்தது. தெற்கு எல்லையில், பாண்டிய மன்னரால் தொந்திரவு இருந்தது. வடக்கே, சாளுக்கிய மன்னரான விக்கிரமாதித்தன், பழைய பரம்பரைப் பகையைப் புதுப்பித்துக் கொள்ள சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார். இந்தச் சூழ்நிலையில், பல்லவச் சக்ரவர்த்தி, கங்க நாட்டுப் போர்க்களத்தில் உயிர் நீத்தது பேரதிர்ச்சியாயிருந்தது. இவ்வளவு பிரச்னைகள் பல்லவ சாம்ராஜ்யத்தைச் சூழ்ந்திருந்த போது, சித்திரமாயன், தன் மக்களையே பகைத்துக் கொடுமைப்படுத்திக் கொண்டிருப்பதை எண்ணி முதன்மந்திரி, மனம் நொந்தார்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாகப் பதவி ஏற்க சித்திரமாயனுக்கு அருகதை கிடையாது என்பதை உணர்ந்து கொண்ட முதன் மந்திரி, அந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பதைப் பற்றிய சிந்தனையிலேயே இரவைக் கழித்தார்.

இதற்குள் காஞ்சி நகரில் மன்னரின் மரணச் செய்தியை ஜெயவர்மர் பரப்பியிருப்பார். காலையில் இந்தச் செய்தி மக்களிடையே என்ன மனப்பான்மையை உண்டுபண்ணும் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தார். நாட்டு மக்களைப் பற்றித் திட்டவட்டமான ஒரு முடிவுக்கும் அவரால் வரமுடியவில்லை. மக்கள் ஒரு செம்மறியாட்டுக் கூட்டம். அதைத் திறம்பட மேய்க்க வேண்டுமே என்ற கவலைதான் மிகுந்திருந்தது.

அதிகாலை நேரத்தில் கண்ணயர்ந்தார். ஆனால் சற்று நேரத்தில் அவரைத் தேடி இரணியவர்மர் வந்தார். அவர் வந்திருக்கிறார் என்று காவல்வீரன் தெரியப்படுத்தியதுமே, முதன்மந்திரி புரிந்து கொண்டார். ஏதோ ஒரு கெட்ட செய்தி வந்திருக்கிறதென்று.

"நாட்டில் அராஜகம் ஆட்சி புரியத் தொடங்கிவிட்டது. இரவோடிரவாகக் காஞ்சி நகரில் பல தலைவர்களைச் சிறைப் பிடித்துப் போய்விட்டார்கள். ஜெயவர்மரையும், வடமொழிக் கடிகைத் தலைவரையும் கூட சிறையிலடைத்து விட்டார்கள். உங்கள் மந்திரி மண்டலத்தைச் சேர்ந்த மந்திரி விஷ்ணுசர்மனையும் சிறைப்படுத்தியிருக்கிறார்கள்" என்றார், இரணியவர்மர்.

முதன்மந்திரி திகைப்பினால் சற்று நேரம் மௌனமாயிருந்தார். "விநாசகாலே விபரீத புத்தி" என்று முனகியவாறே, நீண்ட பெருமூச்சு விட்டார்.

27. பெண்மைக்கு நேர்ந்த அவமானம்

முதன் மந்திரி இரதத்தில் அரண்மனைக்குச் சென்று கொண்டிருந்தபோது, வீதிகளில் மக்களின் நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்பதைக் கவனித்தார். மக்கள் ஆங்காங்கே கும்பல் கும்பலாகக் கூடி நின்றார்கள். முதன் மந்திரியின் இரதத்தைக் கண்டதும், வழக்கம்போல் மரியாதையாக

விலகினார்களே தவிர, அவரைக் கண்டதும் எப்போதும் காண்பிக்கும் உற்சாகத்தைக் காண்பிக்கவில்லை. எல்லாருடைய முகங்களிலும் பீதியின் சாயல் படிந்திருந்ததைக் கண்டார். மக்களின் மதிப்புக்கும், அபிமானத்துக்கும் உரிய பல துறைகளைச் சேர்ந்த தலைவர்கள், இரவில் இரகசியமாகச் சிறையிலடைக்கப்பட்ட செய்திகளைக் கேட்டு மக்கள் பீதியடைந்திருந்தனர். அரச வீதியிலும் தேரோடும் பெரிய வீதிகளிலும் குதிரை வீரர்கள் மக்களைக் கூட்டம் கூட விடாதபடி விரட்டிக் கொண்டிருந்தனர்.

எல்லாவற்றையும் கவனித்தவாறே அரண்மனையை அடைந்த முதன் மந்திரிக்கு அங்கும் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. அரண்மனையில், மகாராணியின் எதிரே, மந்திரி மண்டலத்தைச் சேர்ந்த மற்ற நான்கு மந்திரிகளுள் மூன்று மந்திரிகள் அமர்ந்திருந்தனர். இரண்டாவது மந்திரி அச்சுதபட்டர் ஒருவர் தாம் உற்சாகமாயிருந்தார். மற்ற இரு மந்திரிகளும் பதற்றமடைந்திருந்தனர். கண்களில் பீதியின் சாயல் தெரிந்தது. வழக்கமாக முதன் மந்திரியைக் கண்டதும் உற்சாகமடையும் அந்த இரு மந்திரிகளும், அப்போது முதன் மந்திரியைக் கண்டதும், தலையைக் குனிந்து கொண்டனர். மகாராணியின் அருகில் இளவரசன் சித்திரமாயன் அமர்ந்திருந்தான்.

மகாராணிக்கும் இளவரசருக்கும் சம்பிரதாயமாக வணக்கம் செலுத்திவிட்டுத் தம்முடைய ஆசனத்தில் அமர்ந்தார் முதன் மந்திரி.

"மகாராணி அவர்களே, நான் கேள்விப்படுவது உண்மைதானா? மந்திரி விஷ்ணுசர்மனைச் சிறையிலிட்டிருக்கிறீர்களாமே?" என்று கேட்டார்.

உடனே சித்திரமாயன் குறுக்கிட்டு, "துரோகியை வேறு என்ன செய்வது?" என்று கேட்டான்.

முதன் மந்திரியின் கண்களில் கோபத்தின் சாயல் தென்

பட்டது. "துரோகியா....? விஷ்ணுசர்மனா துரோகி? இளவரசே, விஷ்ணுசர்மன் துரோகி என்றால், இந்நாட்டில் தேசப்பற்றுள்ளவன் எவனுமே இல்லை என்று அர்த்தம். இந்நாட்டுக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக உள்ளவர் விஷ்ணுசர்மன். அவர் செய்த துரோகம்தான் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார்.

"எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டுதான் மகாராணி கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டுமோ?" என்று கோபத்துடன் கேட்டான், சித்திரமாயன்.

"பல்லவ சாம்ராஜ்யத்தில் தர்ம நியாயம் என்று ஒன்றுண்டு. பல்லவச் சக்கரவர்த்திகள் யாரும் தர்ம நியாயம் தவறியதில்லை. எதைச் செய்தாலும், அது தர்மத்தை ஒட்டியதாக இருக்க வேண்டும் என்பதுதான் ஆட்சியின் நியதி. ஒரு மந்திரியையே அரசு தண்டிக்கிறதென்றால், அதன் காரணம் மக்களுக்குத் தெரிய வேண்டும். இல்லையென்றால், ஒரு காரணமும் இல்லாமல் அரசு அராஜகமாக ஒரு நல்லவரைப் பழிவாங்குகிறது என்று பீதியடைவார்கள்."

"தெரிய வேண்டிய சமயத்தில் மக்கள் தெரிந்து கொள்வார்கள்."

"இளவரசே, நான் கேட்பதற்கு மன்னிக்க வேண்டும். மந்திரி மண்டலத்தின் தலைவன் என்கிற முறையில், என்னுடைய சகாவான ஒரு மந்திரி சிறைப்பட்டதன் காரணத்தை நானாவது அறியலாமா?" என்று கேட்டார், முதன் மந்திரி.

அப்போது மகாராணி குறுக்கிட்டு, "முதன் மந்திரி அவர்களே, மன்னரின் மரணச் செய்தியை என்னுடைய உத்தரவின்றி மக்களுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்தார் விஷ்ணுசர்மன்" என்றாள்.

"மக்களுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டிய செய்தியைத்தானே தெரிவித்திருக்கிறார்?"

"மன்னரின் மரணச் செய்தியை உடனே சொல்லி, மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்க வேண்டாம் என்று எண்ணியிருந்தோம். கொஞ்சம் பொறுத்து வெளியிட முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், என்ன காரணத்தாலோ என்னிடம் ஆலோசனை கேட்காமல் மக்களுக்கு அறிவிக்க ஏற்பாடு நடந்திருக்கிறது" என்றாள் மகாராணி.

"மகாராணி அவர்களே, அந்த ஏற்பாடு அவர் ஒருவரைச் சேர்ந்ததல்ல. மந்திரி சபையின் கூட்டு ஏற்பாடு" என்றார், முதன் மந்திரி.

"இல்லை, மந்திரிசபையின் கூட்டு எற்பாடல்ல என்று இந்த மந்திரிகள் மறுக்கிறார்களே" என்று சித்திரமாயன் கூறி, அங்கிருந்த மற்ற முன்று மந்திரிகளையும் சுட்டிக் காட்டினான்.

முதன்மந்திரி அதிர்ந்துவிட்டார். முந்தினநாள் இரணியவர்மரின் மாளிகையில் அவருடன் கூடியிருந்த மற்ற இரு மந்திரிகளும் அப்போது தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தனர். அச்சுதபட்டரின் கண்களில் குறும்புச் சிரிப்பு தோன்றியது. முதன் மந்திரிக்குச் சூழ்நிலை புரிந்துவிட்டது. அவரோடு இணக்கமாயிருந்த இரு மந்திரிகள் இப்போது, சித்திரமாயனின் வலையில் வீழ்ந்துவிட்டனர் என்பதைத் தெரிந்து கொண்டார்.

"விஷ்ணுசர்மன் மறுக்கவில்லையா? அவரும் மறுத்திருக்கலாமே" என்றார். அவருடைய குரலில் விரக்தி தொனித்தது.

"கேட்டதற்கு எவ்வளவு திமிராகப் பதில்சொன்னாராம் தெரியுமா? மந்திரியின் கடமையை ஆற்றினேன் என்றாராம். மக்களுக்குத் தெரியக்கூடாத இரகசியம் ஒன்றுமில்லை என்றாராம். மக்களுக்கு எது, எப்போது தெரியவேண்டும் என்பதை மகாராணிதான் முடிவு செய்யவேண்டுமே தவிர, மந்திரிகள் அல்ல" என்றான் சித்திரமாயன் கோபத்துடன்.

மகராணியைப் பார்த்து முதன்மந்திரி சொன்னார்: "மகாராணி அவர்களே, ஒரு மந்திரி எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படித்தான் விஷ்ணுசர்மன் நடந்து மந்திரி பதவிக்குப் பெருமை அளித்திருக்கிறார், என்னுடைய சம்மதத்தின் பேரில்தான் மந்திரிசபை செயல்பட்டது. இதற்கு விஷ்ணுசர்மன் மட்டும் பழிவாங்கப்படுவது தர்மம் அல்ல. மேலும், என்னுடைய மந்திரி சபையிலுள்ள ஒரு மந்திரி சிறைப்பட்டிருக்கும்போது, அந்தச் சபைக்குத் தலைமை தாங்கும் அருகதை எனக்கில்லை." இவ்விதம் கூறிவிட்டு, முதன்மந்திரி தம்முடைய தலைப்பாகையையும், முத்திரை மோதிரத்தையும் கழற்றி, மகாராணியின் காலடியில் வைத்தார்.

பிரேமவர்த்தினி திகைப்புற்றவளாய் கால்களைப் பின்னுக்கிழுத்தாள். அவள் ஏதோ கூற முன் வந்தாள், அதற்குள் சித்திரமாயன் குறுக்கிட்டு, "முதன்மந்திரியின் விருப்பம் அதுதானென்றால், இந்த அரசு, அதை ஏற்றுக் கொள்கிறது. நீங்கள் இதுகாறும் இந்நாட்டுக்கு ஆற்றியுள்ள சேவைக்காக இந்த அரசு மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது" என்றான்.

மற்றவர்கள் எல்லாரும் திகைப்புடன் இருந்தார்கள். தரணிகொண்டபோசர், முகத்தில் எவ்வித உணர்வையும் காட்டிக் கொள்ளாமல், மெல்ல எழுந்து, மகாராணிக்கும் இளவரசருக்கும் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்திவிட்டு வெளியேறினார்.

அரண்மனை வாயிலை அடைந்ததும், இரதசாரதி இரதத்தை அவரருகே கொண்டு வந்து நிறுத்தினான். அவரை நிமிர்ந்து பார்த்த இரதசாரதி திடுக்கிட்டான். மந்திரியின் தலையில் வழக்கமாகக் காணப்பட்ட தலைப்பாகையைக் காணாது குழம்பினான். அவனிடம் தரணிகொண்டபோசர், "சாரதி, நான் இப்போது மந்திரி அல்ல. இந்த இரதம்,

முதன் மந்திரிப் பதவியை வகிப்பவர்களுக்குள்ளது. நான் பதவியிலிருந்து விலகிவிட்டேன், இரதத்தை மந்திரி மண்டலத்தின் மணி மண்டபத்துக்கு ஓட்டிச் சென்று ஒப்படைத்து விடு" என்றார்.

இரதசாரதி திகைத்து நின்றான். அவனுடைய கண்களில் கண்ணீர் மல்கியது. அழுகையை அடக்கியவாறு, தரணி கொண்ட போசரை வணங்கியபடி நின்றான்.

தரணிகொண்ட போசர் அரண்மனையிலிருந்து தம் முடைய மாளிகையை நோக்கி நடந்து சென்றார்.

* * *

உதயசந்திரனை இரண்டு வீரர்கள் மேகலாவின் அந்தப்புரத்துக்கு அழைத்து வந்தனர். உதயசந்திரனின் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. அவனை அந்தப் புரத் தாதிகளிடம் வீரர்கள் ஒப்படைத்தனர். தாதிகள் இருவர் அவனை மேகலாவின் அறைக்குள் அழைத்துச் சென்று, அவளுக்கு எதிரே விட்டுவிட்டு வெளியேறினர்.

அவனைக் கண்டதும் மேகலாவின் முகம் மலர்ந்தது. ஆவலோடு நோக்கினாள். உதயசந்திரன், முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"உன்னை இப்படி இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருப்பதை எண்ணிக் கோபம் கொள்கிறாயா?" என்று கேட்டபடியே மேகலா அவனை நெருங்கி வந்து அருகே நின்றாள். அவனுடைய முகத்தை மிகுந்த வேட்கையுடன் உற்று நோக்கினாள்.

"தன்னுடைய பிரஜையை ஒரு ராணி எப்படி வேண்டுமானாலும் நடத்தலாமே" என்றான் உதயசந்திரன்.

"என்னுடைய உத்தரவின் பேரில்தான் நீ பத்திரமாக

இங்கே வந்து சேர்ந்திருக்கிறாய். இல்லையென்றால், உன்னைத் தாக்கிக் குற்றுயிராக்கி இளவரசரிடம் ஒப்படைத்திருப்பார்கள்" என்றாள்.

உதயசந்திரன் மெல்லச் சிரித்தான்.

"எதை எண்ணிச் சிரிக்கிறாய்?"– சின்னராணி கேட்டாள்.

"என்னுடைய உடல் உங்களுக்குத் தேவை. வடுப்படாமல் கொண்டு வர உத்தரவிட்டிருப்பீர்கள்" என்றான் உதயசந்திரன்.

"உண்மைதான். நீ, எனக்கு முழுமையாக வேண்டும். அதனால்தான், உன்னை மிகவும் பத்திரமாக இங்கே கொண்டு வரச் செய்தேன். இல்லையென்றால், இளவரசர் உன்னைக் கழுவேற்றியிருப்பார்."

"இளவரசரிடமிருந்து எத்தனை நாட்களுக்கு நீங்கள் என்னைக் காப்பாற்றி விட முடியும்?" என்று அலட்சியமாகக் கேட்டான்.

"நான் நினைத்தால், ஆயுள் முழுவதும் உன்னைக் காப்பாற்ற முடியும்" என்று கூறிக்கொண்டே அவனுடைய தோள்களைப் பற்றினாள். அவனைக் கூர்ந்து பார்த்தாள். அவன் உடல் சிலிர்த்து அடங்கியதைக் கவனித்தாள்.

"என்னை நீ புரிந்து கொண்ட பிறகும் அன்று பதறி ஓடி விட்டாயே?" என்றாள். குரலில் இருந்த ஏக்கத்தை அவனால் உணர முடிந்தது.

"மகாராணி, தாங்கள் எங்கே, நான் எங்கே? ஏதாவது பொருத்தம் உண்டா?" என்றான் உதயசந்திரன்.

"நான் இன்னும் மகாராணியாகவில்லை" என்றாள், மேகலா.

"வருங்கால மகாராணிதானே..."

"மனம் பொருந்தி விட்டால் பிறகு, அந்தஸ்து எதற்கு? உதயசந்திரா, நீ விரும்பினால் இந்த அரண்மனையை விட்டே வெளியேறி விடுகிறேன். இந்த அதிகாரமும் அரண்மனையும் எனக்கு வேண்டாம்" என்றாள் மேகலா.

அதைக் கேட்டு உதயசந்திரன் வியப்புடன் அவளைப் பார்த்தான். அவளுடைய கண்களில் தெரிந்த இச்சை அவனைச் சங்கடப்படுத்தியது. மோகமயக்கத்தில் அவள் உளறுவதாக எண்ணினான். அவள் மீது அவனுக்குப் பச்சாதாபம் எழுந்தது.

ஒரு சாம்ராஜ்யத்தின் வருங்கால மகாராணி, உணர்ச்சிகளின் பிடியில் சிக்கி, அறிவிழந்து அந்தஸ்திழந்து எவ்வளவு பாமரத்தனமாக நடந்து கொள்கிறாள்! ஓ... இந்தக் காமவெறிக்கு விவஸ்தையே கிடையாதா...?

அவளுடைய கண்கள் அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவைப்பதை உணர்ந்து உடல் கூசினான். அவனுடைய தோள்களைப் பற்றியிருந்த அவளுடைய கைகள், மெல்ல மெல்ல அவனுடைய புஜங்களை வருடின. அப்போதுதான் அவனுடைய கைகள் பின் பக்கமாகக் கட்டப்பட்டிருந்ததை உணர்ந்தாள். கட்டுகளை அவிழ்த்து விட்டாள். கட்டப்பட்டிருந்த கயிறு கழன்று கீழே விழுந்தது. விடுபட்ட உதயசந்திரன் சலனமில்லாமல் சிலை போல் நின்று கொண்டிருந்தான்.

"என்னிடமிருந்து தப்பிக்க நினையாதே. இங்கிருந்து எங்கும் ஓடி விட முடியாது" என்றாள்.

உதயசந்திரன் மௌனமாக நின்றுகொண்டிருந்தான். அந்த அறையிலிருந்த ஹம்ஸதூளிகா மஞ்சம் அவனுடைய பார்வையில் பட்டது. அதற்கு அருகே இருந்த சாளரத்தைப் பார்த்தான்.

அந்தச் சாளரத்துக்கு மறுபக்கத்திலிருந்து, ஒருநாள், அவள் தூங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த சம்பவம் நினைவுக்கு வந்தது. அவனுடைய சிந்தனை தீவிர மடைந்தது. ஆனால், அவனை மேற்கொண்டு சிந்திக்க விடாமல் மேகலாவின் கரங்கள், அவனைச் சுற்றி வளைத்து இறுக்கின. அவன் மரமாக நின்றான். மரத்தின்மீது கொடி பற்றிப் படர்வது போல் படர்ந்தாள். தழுவினாள். அவளுடைய தவிப்பை ஒவ்வொரு அசைவிலும், அழுத்தத்திலும் உணர்ந்தான். அவன் தன்னுடைய உணர்ச்சிகளைச் சிதறவிடாமல் சாட்சி பூதனாக இருந்து கவனித்தான்.

ஒரு பெண் வலிந்து அணையும்போது ஏற்படும் உணர்வுகள், அவனைச் சுற்றிச் சூழ்ந்தன. இரு கைகளையும் தொய்வாகத் தொங்க விட்டவாறு, சலனமற்று நின்றவன், தன்னுடைய உடலை அவளுடைய ஆட்சிக்கு ஒப்படைத்தான். அவளுடைய பெருமூச்சுகளும், முனகல்களும் அந்த அறையில்கேட்டுக் கொண்டிருந்தன. அவளுடைய ஒவ்வொரு அசைவும் உணர்த்திய கொச்சையான அந்தரங்க சமிக்ஞைகளை உணர்ந்தான். உணர்ச்சிகளின் ஆக்கிரமிப்பில், ஒரு பெண்ணின் உடல் தவித்த தவிப்பை, அவனுடைய உடல் பதிவு செய்து கொண்டிருந்தது. அந்த அனுபவம் அவனுக்குப் புதுமையாக இருந்தது. அதே சமயம், கழிவிரக்கமும் தோன்றியது. ஜடமாக நின்றான்.

திடீரென அவனை உதறித் தள்ளினாள் மேகலா. வேண்டாத பொருளைத் தூர எறிவது போல் அவனை எறிந்தாள். அவன் தள்ளாடியபடி மஞ்சத்தின் மீது சாய்ந்தான். மறுகணம் எழுந்து நின்றான். என்னதான் ஒரு பெண் முயன்றாலும், ஆணுடைய மனமும் இசையவில்லை என்றால், அந்த ஆண், அவளுக்குப் பயன்படமாட்டான் என்பதை மேகலா உணர்ந்தபோது, அவள் உள்ளத்தில் தோன்றிய வன்மம், அவளுடைய கண்களில் தெரிந்தது. தோல்வி

யைத் தாங்க முடியாமல் மனம் கொதித்தாள். மூச்சு இரைத்தது. மார்பகம் விம்மித் தணிந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு பெண் உணரும் அவமானம், ஓ, ஏழேழு ஜன்மங்களுக்கும் அதை ஒரு பெண்ணால் மறக்க இயலுமா?

வலிய அவனை அணைந்த அவளுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்காமல், அவன் நடத்திய நாடகம்... எவ்வளவு கேவலமான நடத்தை...! ஒரு பிணத்தைத் தழுவியதைப் போன்ற அருவருப்பான உணர்வினால் மனம் கூசினாள். தன்மான உணர்வினால் கொதித்தாள். அவனை வெறுப்புடன் பார்த்தாள். கோபத்தினால், மூச்சு இரைத்தது. வாசலை நோக்கி கைகளைத் தட்டினாள். இரண்டு பணிப் பெண்கள் உள்ளே விரைந்து வந்தனர்.

"இவனை வாணராயனிடம் ஒப்படையுங்கள்" என்று பணிப்பெண்களுக்குக் கட்டளை இட்டுவிட்டு, அந்த அறையைவிட்டுக் கோபத்தோடு வெளியேறினாள், மேகலா.

இரண்டு பணிப்பெண்களும் கீழே கிடந்த கயிற்றை எடுத்து, உதயசந்திரனின் கைகளைக் கட்ட விரைந்தனர்.

"நான் நினைத்தாலும் இந்த அரண்மனையிலிருந்து தப்ப முடியாது. ஏன் வீணாகச் சிரமப்படுகிறீர்கள்? என்னை அழைத்துச் செல்லுங்கள், வருகிறேன்" என்றான்.

பணிப்பெண்கள் சற்று தயங்கினர். ஒருத்தி கையைத் தட்டி காவல் வீரனை அழைத்தாள். வாணராயனை உடனே அழைத்து வரும்படி அவனை ஏவினாள். காவல் வீரன் வெளியேறியதும் உதயசந்திரன் பணிப்பெண்களிடம், "நாம் அடுத்த அறைக்குப் போய் விடுவோம், வாணராயன் வரும்போது, ராணியின் படுக்கையறையில் இருக்க வேண்டாம்" என்றான்.

பணிப்பெண்கள் அவனை அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குள் சென்றதும், அந்த பெண்கள் இருவரையும் ஒரே சமயத்தில் தாக்கினான். அவனுடைய அடி இலேசாகத்தான் பிடரியில் விழுந்தது. உடனே பணிப்பெண்கள் மயங்கிச் சாய்ந்தனர். உதயசந்திரன் தென் பகுதிக்குப் பாய்ந்து சென்று, சுரங்கப் பாதையை அடைத்திருக்கும் கல்லை நகர்த்தத் தொடங்கினான். கல்லைப் புரட்டி, சுரங்கப் பாதையின் பொந்தினுள் அவன் நுழைந்தபோது, அறைவாசலில் வாணராயன் ஓடி வந்தது தெரிந்தது. சுரங்கப் பாதையின் படிகளில் இறங்கி ஓடத் தொடங்கினான். உள்ளே இருட்டாயிருந்ததால் பாதை தெரியவில்லை. உத்தேசமாகப் பழைய நினைவைக் கொண்டு விரைந்து செல்ல முயன்றான். ஆனால், உள்ளே இருந்த பெரிய தூண்களின் நினைவு வரவே, ஓடினால் அவைகளின் மீது மோத நேரிடும் என்பதை உணர்ந்து, குருடன் நடப்பது போல் கைகளை முன்னே நீட்டியபடி எச்சரிக்கையாக நடக்கத் தொடங்கினான். திரும்பிப் பார்த்தான்.

பின்னால், சுரங்கப் பாதையின் வாசலில் தீவட்டிகளின் ஒளி தெரிந்தது. தன்னை வாணராயன் தொடர்கிறான் என்பதை புரிந்துகொண்டான். அந்த ஒளி, உதயசந்திரனுக்கு ஓரளவு உதவியாயிருந்தது. மங்கிய ஒளியில் தட்டுத் தடுமாறி ஓடத் தொடங்கினான். தீவட்டிகளின் ஒளி, அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

திடீரென்று சுரங்கப் பாதை ஒரு கற்சுவரில் போய் முடிவடைந்தது. உதயசந்திரன் திகைத்தான். வேறுபாதை இருப்பதாகவும் தெரியவில்லை. தொடர்ந்து வந்தவர்களை எதிர்த்துச் சமாளிக்க முடியுமா என்று பார்த்தான். நாலைந்து பேர் அவனைத் துரத்திக் கொண்டு வந்தது தெரிந்தது. ஆயுதங்களைத் தாங்கி வந்த அத்தனை பேரையும் மிகக் குறுகலான அந்தச் சுரங்கப் பாதையில் ஒரே சமயத்தில்

எதிர்க்க இயலாது என்பதை உணர்ந்ததும் மனச் சோர்வடைந்தான்.

ஐயோ, வசமாக மாட்டிக் கொண்டோம். வாணராயனும், அவனுடைய ஆட்களும் இன்று என்னை ஒழித்து விடுவார்கள்... இன்றோடு என் கதை முடிந்தது...

திடீரென்று ஒரு நினைவு வந்தது. சுரங்கப் பாதை இரு கூராகப் பிரிந்து ஓர் இடத்தில் சேர்வது நினைவுக்கு வந்ததும் உற்சாகமடைந்தான். பரபரப்புடன் சுவரைத் தொட்டு ஆராய்ந்தான். ஒரு கல் அசைந்ததை அறிந்து வேகமாகச் செயல்பட்டான். தீவட்டிகளின் ஒளி அதிகமாகிக் கொண்டிருந்தது. சுவரில் அசைந்த கல்லைப் பெயர்த்து நகர்த்தி விட்டு, உள்ளே நுழைந்தான். மீண்டும் பாதையை அடைத்துவிட நினைத்தான், திரும்பிப் பார்த்தான். வாணராயன் முன்னே ஓடி வர, அவனைத் தொடர்ந்து நான்கு வீரர்கள் தீவட்டிகளை ஏந்தியபடி ஓடிவந்து கொண்டிருந்தனர். ஆகவே உதயசந்திரன் சுரங்கப் பொந்தை அடைக்கும் முயற்சியை விட்டுப் பாதையில் ஓடத் தொடங்கினான்.

சுரங்கப் பாதையின் மறு முனையை அடைந்து, வெளியேறும் துவாரத்தை அடைத்திருந்த கல்லைப் புரட்டித் தள்ளி விட்டு, வெளியே வந்த போது, அங்கிருந்த பெரிய சிவலிங்கத்தின் அருகே, கோயில் பூசாரி, ஒரு வாளை ஏந்தியபடி, வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான். துவாரத்திலிருந்து வெளியே வந்த உதயசந்திரனை இறுகப் பற்றிக் கொண்ட பூசாரி, "யார் நீ?" என்று கேட்டான்.

"மகாராணியிடமிருந்து வருகிறேன். அவசரம். விடு என்னை" என்றான், உதயசந்திரன்.

பூசாரி நம்பவில்லை. சந்தேகத்தோடு பார்த்தான். உதயசந்திரன் மடியிலிருந்த வெள்ளி முத்திரை மோதிரத்தை எடுத்துக் காட்டினான். பூசாரி பதற்றமடைந்தவனாய் அவனுக்கு வணக்கம் செலுத்தினான்.

"மகாராணியின் கட்டளை, நன்றாகக் கவனி. சுரங்கப் பாதையில்ஒரு பயங்கர எதிரி வந்து கொண்டிருக்கிறான். நீ இங்கேயே நின்று, சுரங்கத் துவாரத்திலிருந்து அவன் தலையை வெளியே நீட்டியதும், உன் வாளினால் ஒரே போடு போட்டு விட வேண்டும். தாமதிக்காதே. இது மகாராணியின் கட்டளை" என்றான், உதயசந்திரன்.

பூசாரி கட்டளையை நிறைவேற்ற வாளை ஓங்கியபடி சுரங்கப் பாதையின் பொந்தின் அருகே பதுங்கி நின்றான். உதயசந்திரன் அவனிடம், "ஜாக்கிரதை. அவன் தலை, பொந்தின் வழியே தெரிந்ததுமே தாமதியாமல் வாளை வீசிவிடு. அவன் வெளியே வந்துவிட்டால், உன்னைத் தீர்த்து விடுவான் " என்று கூறிவிட்டு, கோயிலை விட்டு வெளியேறி, தோட்டத்துக்குள் சென்று மறைந்தான்.

28. சோறா, சுதந்திரமா?

ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்தில் ஒதுங்கியிருந்த உள்மண்டபத்தில் பலர் கூடியிருந்தனர். அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் பல்லவ நாட்டைச் சார்ந்த பல துறைகளின் தலைவர்கள். எல்லாருக்கும் மையமாக தரணி கொண்ட போசர் அமர்ந்திருந்தார். அங்கு கூடியிருந்தவர்களில் இரணியவர்மர், குறுநில மன்னரான காடகமுத்தரையர், பல கடிகைகளைச் சேர்ந்த தலைவர்கள், வணிக சபைத் தலைவர்கள், ஆகியவர்கள் மிக முக்கியமானவர்கள். அந்தக் கூட்டத்தில் ராஜன் நம்பூதிரியும், பல கடிகைகளைச் சேர்ந்த மாணவர்கள் சிலரும் இருந்தனர்.

பல்லவச் சக்ரவர்த்தி மரணமடைந்த செய்தி வந்து ஐந்து நாட்களுக்குப் பிறகு, பராமாச்சாரியின் ஆசிரமத்தில் அந்தக் கூட்டம் இரவில் கூடியது. சூழ்நிலையைக் கவனித்தாலே, அது ஓர் இரகசியக் கூட்டம் என்பது புலனாகி விடும்.

சற்று விலகியபடி அமர்ந்திருந்தார் யோகி பரமாச்சாரி. கூட்டத்தின் நடுநாயகமாக விளங்கிய தரணிகொண்ட போசர் பேசத் தொடங்கினார்.

"முதலில் நாம் எல்லாரும் யோகி பரமாச்சாரிக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்குள்ளோரில் பலர் யோகியைச் சந்தேகத்தோடு பார்த்திருப்பீர்கள். இன்று இவருடைய ஆசிரமத்திலேயே இப்படி ஒரு கூட்டம் நடைபெறுதைக் கண்டு வியப்புற்றிருப்பீர்கள். நாட்டில் மனித சுதந்திரம் பறிக்கப்பட்டு, அராஜகம் தாண்டவமாடுவதைக் கண்ட யோகியாரின் மனம் வருந்தியது. பரமாச்சாரி போதிக்கும் நெறிகளின் அடிப்படையே சுதந்திரந்தான். சுதந்திரத்துக்கு இன்று ஆபத்து வந்திருக்கும்போது, யோகியார் நமக்கு உதவ முன் வந்திருக்கிறார். இந்த ஆசிரமந்தான் அரண்மனையின் சந்தேகம் விழமுடியாத இடம். யோகி பரமாச்சாரிக்கு உங்கள் சார்பில் நன்றி கூறுகிறேன்" என்றார், தரணிகொண்ட போசர்.

இதைக் கேட்டு ருத்ர பரமாச்சாரி சொன்னார்— "ஆனந்த மயமான வாழ்க்கைதான் படைப்பின் லட்சியம். சுதந்திரம் பறிபோய்விட்டால், அங்கு தெய்வத்துக்கு இடமில்லை. நான் மகாராணியிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லிவிட்டேன். ஆனால் மகாராணியால் சித்திரமாயனை எதிர்த்துச் செயல்பட முடியவில்லை. அவளால் தனித்து இயங்க இயலாது. பாவம், அவளுடைய நிலை, பரிதாபத்துக்குரியதுதான். இங்கே கூடியிருக்கும் நீங்கள், சுதந்திரப் போராட்டத்துக்காக இந்த ஆசிரமத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்."

கூட்டத்தில் சற்று நேரம் மௌனம் நிலவியது. எல்லாரும் தரணிகொண்ட போசரைத்தான் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவர்தாம் இரகசியமாக அந்தக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். ஐந்து நாட்களாக காஞ்சி

நகரில் மயான அமைதி குடி கொண்டிருந்தது; வீதிகளில் மக்களின் நடமாட்டம் இல்லை. எந்தச் சமயத்திலும் யாரும் சிறைப்படலாம் என்ற நிலை. சித்திரமாயனின் சந்தேகத்துக் குள்ளான பல தலைவர்கள் சிறைப்பட்டு விட்டார்கள். புதிய தலைவர்கள், பல துறைகளுக்கு மகாராணியால் நியமிக்கப்பட்டிருந்தார்கள். கோயில்களில் கூட ஜன நடமாட்டம் இல்லை. காஞ்சி நகரை பீதி கவ்வியிருந்தது. வீதிகளில் படைவீரர்களின் காலடி ஓசைதான் பிரதானமாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில் தான் ஆசிரமத்தில் அந்தக் கூட்டம் கூடியிருந்தது.

தரணிகொண்ட போசரின் பார்வை ஒரு முறை அந்த மண்டபம் முழுவதும் சுழன்றது. தொண்டையை செருமிக் கொண்டு பேசத் தொடங்கினார்.

"இப்போது காஞ்சி மாநகரில் என்றும் காணாத அமைதி நிலவுகிறது. மகாராணியின் திரிதத்துவம் பற்றி இரண்டு நாழிகைகளுக்கு ஒரு முறை தெருத் தெருவாகப் பறை யறைந்து தெரிவிக்கிறார்கள். மகாராணியின் சிந்தனையில் தோன்றிய திரிதத்துவம் நகர் முழுவதும் அறிவிக்கப்பட்டு விட்டது. பல்லவ நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு இம்மூன்றுக்கும் குறை வில்லாதபடி அரசு கவனிக்கப் போவதாக அறிவித்திருக் கிறார்கள். வறுமைப்பட்டிருக்கும் மக்கள் பலர் இதைக் கேட்டு உற்சாகமாயிருக்கிறார்கள்."

பேச்சை நிறுத்திவிட்டுக் கூட்டத்தினரை உற்றுப் பார்த்தார். பிறகு கேட்டார்: "மனிதனுக்குச் சுதந்திரம் எதற் காகத் தேவை? மகாராணி அறிவித்திருக்கும் திரிதத்துவப் படி, உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க வீடும் கிடைத்துக் கொண்டிருந்தால் போதாதா?"

பௌத்த கடிகையைச் சேர்ந்த ஒரு மாணவன் எழுந்து

நின்றான். "வயிறு ஒன்றுதான் லட்சியம் என்று எண்ணும் ஜென்மங்களுக்குப் போதும். ஆனால், நாம் எல்லாரும் மனிதர்கள்" என்றான் படபடப்புடன். அவனுடைய வார்த்தைகளில் தொனித்த ஆத்திரம் எல்லாரையும் சிலிர்க்க வைத்தது.

வடமொழிக் கடிகையைச் சேர்ந்த மாணவன் ஒருவன் எழுந்து நின்றான். "எங்கள் கடிகைத் தோட்டத்தில் ஒரு நாள் பன்றி ஒன்று பொறியில் அகப்பட்டுக் கொண்டது. பொறிக்குள் அங்குமிங்குமாக ஓடித் தப்பிச் செல்ல முயன்றது. பொறிக் கதவின் அருகே ஓடி, மூங்கில் கழியை முட்டி முறிக்க முயன்றது. பன்றியினுடைய மூக்கில் இரத்தம் கசிந்தது. அப்போதும் அது தன்னுடைய முயற்சியை விடவில்லை. உள்ளே உறுமிக்கொண்டே சுற்றிச் சுற்றி வந்தது. கதவை மோதியது. அதற்கு வேண்டிய உணவு பொறிக்குள் இருந்தது. அந்த உணவைத் தின்ன வந்ததால் தானே பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டது. அகப்பட்ட பிறகு, அந்த உணவைப் பன்றி திரும்பிக்கூடப் பார்க்க வில்லை! உணவைத் தின்றுகொண்டு பொறிக்குள்ளேயே சுகமாகத் தூங்குவோமே என்ற எண்ணம் அதற்கு வரவில்லை. பொறியிலிருந்து விடுதலை பெறவே போராடிக்கொண்டிருந்தது. சுதந்திரம் பறிபோனதும் அந்தப் பன்றி உணவைக்கூட மறந்துவிட்டது. மனிதன், பன்றியைவிடக் கேவலமானவனா?" என்று கோபத்தோடு கேட்டான். "வயிறு ஒன்றுதான் பிரதானமா?" என்றான்.

அந்தக் கேள்வி மண்டபத்திலிருந்த அனைவரின் இதயங்களிலும் புகுந்து வெறியை ஊட்டியது.

அடுத்திருந்த ராஜன் நம்பூதிரி எழுந்து, "மானமுள்ளவர்களுக்குத்தாம் சுதந்திரத்தின் தன்மையும், அருமையும் புரியும். வயிறுதான் பிரதானம் என்னும் தத்துவத்தின் அடிப்படையில் அமையும் ஆட்சியில்தான், மனித சுதந்திரத்துக்கு

இடமில்லை. நாமெல்லாரும் வெறும் சோற்றுப் பிண்டங்கள் அல்ல, நமக்கென்று நாகரிகம் உண்டு; கலாச்சாரம் உண்டு; பண்பாடு உண்டு. எல்லாமே சுதந்திரத்தின் அடிப்படையில் உருவானவை. திருநாவுக்கரசர் சோற்றை மட்டும் பெரி தென்று கருதியிருந்தால், சமணராகவே மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின் அரண்மனையில் சுகமாக வாழ்ந்திருக் கலாம். ஆனால், தனி மனிதனின் உரிமைக்காக இந்தப் பல்லவ நாட்டிலேயே போராடி வெற்றி கண்டவர். அந்தப் போராட்டம் இன்னும் ஓயவில்லை. இப்போது தொடரு கிறது. ஆட்சி எந்தத் தத்துவத்தின் அடிப்படையில் நடை பெற்றாலும் சரி, நாட்டில் தனி மனிதனின் மேம்பாட்டையும் உணர்வுகளையும் மதிக்கவில்லையென்றால் அந்த ஆட்சியை ஒழித்துக் கட்டுவது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்" என்றான்.

ராஜன் நம்பூதிரியின் பேச்சு, உணர்ச்சியைத் தூண்டி யது. எல்லாருக்குமே உள்ளத்தில் துணிவும், தெம்பும் ஏற்பட்டன. தரணி கொண்ட போசர் சொன்னார்– "இளம் இரத்தங்களின் சுதந்திர வேட்கை என்னையே இளைஞனாக மாற்றிவிடும் போலிருக்கிறது. இங்கு கூடியிருக்கும் அனை வரும் ஒரே சிந்தையில் தானிருப்பீர்கள். பல்லவச் சக்ரவர்த் திகள் யாரும் இதுவரை அதிகாரம் முழுவதையும் தாங்களே ஏற்றுக்கொண்டதில்லை. பல வாரியங்கள் மூலமும் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மூலமும் தான் அதிகாரங்களைப் பரவலாக்கி, ஆட்சி நடத்தினார்கள். மக்களின் சுதந்திரத்தின் மீது அக்கறை கொண்டிருந்தார்கள். அரசகுலத்தைச் சார்ந்தவன், வீதியில் ஒரு பெண்ணைத் தொட்டு அடித்து விட்டான் என்பதற்காக அவனுக்குத் தண்டனை வழங்கினார், சித்திரமாயனின் பாட்டனார். இன்று ஆட்சி முறையே தலைகீழாக மாறி, மக்களின் சுதந்திரம் முழுமையாகப் பறிக்கப்பட்டு விட்டது. இப் போது, பெண்களை வழிமறித்துக் கற்பழிக்கும் அளவுக்கு

கொடுமை நிகழ்கிறது. அராஜகத்தை எதிர்த்து மக்கள் போராட வேண்டிய கட்டம் வந்துவிட்டது. போருக்குச் சென்றிருந்த படை, காஞ்சியை நெருங்குவதற்குள் நாம் ஒரு முடிவை காஞ்சியில் உண்டாக்கி விட வேண்டும். எதற்கும் திட்டமும், ஒழுங்கு முறையும் வேண்டும். இந்தப் போராட்டத்துக்கு ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவுக்கு நாம் துணையாக நிற்போம். சுதந்திரத்துக்காக நாம் தியாகம் செய்யவேண்டிய தருணம் வந்துவிட்டது."

இந்த யோசனையை அனைவரும் ஏற்றனர். போராட்டக்குழுத் தலைமையை தரணிகொண்ட போசர் ஏற்றுக் கொண்டார். இரணியவர்மரும், காடக முத்தரையரும் அந்தக் குழுவில் முக்கிய பங்கு வகிக்க இசைந்தனர். கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்தது. ஒவ்வொருவராக சந்தேகத்துக்கு இடமின்றி ஆசிரமத்தைவிட்டு வெளியேறிச் சென்றனர். வழக்கமாக இரவு அந்த நேரத்தில்தான் யோகியின் போதனைகளைக் கேட்க வரும் மக்கள், ஆசிரமத்திலிருந்து கலைந்து செல்வார்கள். ஆகையால், இரகசிய கூட்டத்துக்கு வந்தவர்கள், வெளியேறிச் சென்றது யாருக்கும் சந்தேகத்தை உண்டு பண்ணவில்லை.

* * *

திருநாவுக்கரசர் மடத்தின் வெளித் திண்ணையில் இரவு உணவுக்குப் பிறகு சைவ யாத்ரீகர்கள் வம்பளந்து கொண்டிருந்தார்கள். தாடி வளர்ந்திருந்த ஒரு சந்நியாசி, வைணவர்களையும், வைணவமதத்தையும் திட்டிக்கொண்டிருந்தார். சைவத்துக்கு ஈடு எதுவும் இல்லையென்று அடித்துச் சொன்னார். ஒரு தூணில் சாய்ந்தவாறு கண்களை மூடி அமர்ந்திருந்த ஓர் இளம் சந்நியாசி விழித்து அவரைப் பார்த்து, "சுவாமிகளே, சைவமடத்துச் சோறு இரவுக்கு கிடைத்தாகி விட்டது. நன்றியைச் செலுத்துவதற்கு வைணவத்தை இங்கே ஏசி என்ன பயன்? இங்கு எல்லாருமே சைவர்கள்தாம். பேசாமல் தூங்கும். வேண்டுமானால்,

அடுத்த தெருவில் போய் விஷ்ணு கோயிலுக்கு முன்னால் நின்று ஏசிவிட்டு வரும்" என்றார்.

தாடிச் சந்நியாசி அவரை உறுத்துப் பார்த்தார். அவர் தலையில் ஜடாமகுடம் தரித்து விபூதி பூசி ருத்திராட்ச மாலைகளை தலையிலும் கழுத்திலும் அணிந்து, சிவப்பழமாகக் காட்சியளித்தார்:

"சின்னச் சுவாமிகளுக்கு எந்த ஊரோ?" என்று இளம் சந்நியாசியிடம் கேட்டார், தாடிச் சந்நியாசி.

"எல்லா ஊரும் என்னுடைய ஊர்தான், சுவாமிகளே. உறக்கம் வரவில்லையென்றால், நாவுக்கரசர் பாடல் ஏதாவது தெரிந்தால் பாடும். கேட்டுக் கொண்டே தூங்குகிறேன்; வீணாக விவாதம் பண்ணி, மற்றவர்களின் உறக்கத்தைக் கெடுக்காதீர்" என்றார், இளம் சந்நியாசி.

"ஆமாம், உறக்கத்தை இப்போதே தூங்கி அனுபவித்துக் கொள்வோம். இனிமேல் நன்றாக உறங்கக்கூட முடியாமல் போய்விடும்" என்றார், தாடி சந்நியாசி.

சற்றுத் தள்ளி படுத்திருந்த ஒரு யாத்திரிகர், தலையைத் தூக்கிப் பார்த்து "ஏன் உறங்க முடியாது?" என்று கேட்டார்.

"நாடு போகிற போக்கு சரியில்லையே. மகாராணியின் அடக்குமுறை தீவிரமாகிவிட்டது. பேசினால் கூட சிறையில் அடைத்து விடுவார்கள். முதன்மந்திரி கூட பதவி விலகிவிட்டாராம்."

"சத்திரங்களை மூடி விட மாட்டார்களே?" என்று கவலையோடு கேட்டார் படுத்திருந்த யாத்ரீகர்.

"யார் கண்டார்கள்? மகாராணிக்கு ருத்ர பரமாச்சாரி ஆசிரமத்தில்தான் அபிமானம் விழுந்திருக்கிறது. நாளை சைவக் கோயில்களையும், சத்திரங்களையும் மூடச் சொல்லி உத்தரவு பிறப்பித்தால் என்ன செய்வது?"

"அப்படி உத்தரவு வந்தால் சைவ சத்திரங்களுக்கு மட்டும்தான் வருமா? வைணவ சத்திரங்களையும் மூடச் சொல்லி உத்தரவு வரத்தானே செய்யும்."

"உமக்கு சைவ சத்திரங்கள் மூடினாலும் பரவாயில்லை, வைணவ சத்திரங்கள் மூடாமலிருந்து விடக்கூடாது. தீவிர மான சைவர்தாமய்யா நீர்" என்றார், இளம் சந்நியாசி.

"இரண்டு சத்திரங்களும் மூடினால்தான் என்ன? பரமாச்சாரியின் ஆசிரமத்தில் சோறு போட்டால் சரிதான்" என்று கூறியபடியே மீண்டும் தலையைத் தாழ்த்திப்படுத் துக் கொண்டார் யாத்ரீகர்.

"சோறு கண்ட இடம் சொர்க்கம். இன்று இரவு உமக்குச் சோறு கிடைத்தாயிற்று. இனி நாளைக் காலை தானே இது பற்றிக் கவலைப்பட வேண்டும். காஞ்சியில் சோற்றுக்குப் பஞ்சமில்லை. நிம்மதியாகத் தூங்கும்" என்றார், இளம் சந்நியாசி. பிறகு தூணருகே படுத்தார். பக்கத்திலிருந்த தாடிச் சாமியாரும் படுத்தார்.

சற்று நேரத்தில் மடத்தில் அமைதி நிலவியது. எல்லா ரையும் உறக்கம் தழுவியது. குறட்டை ஒலிகள், ஆங்காங்கே கேட்டுக் கொண்டிருந்தன. இளம் சந்நியாசி தூங்காமல் வெளியே வீசிக்கொண்டிருந்த நிலவொளியைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று அருகே படுத்திருந்த தாடிச் சாமியார், அவரைத் தொட்டதை அறிந்து திடுக்கிட்டார். அவருடைய காதருகே, தாடிச் சாமியார், "ராஜன் நம்பூதிரி உம்மைத் தேடிக் கொண்டிருக்கிறார்" என்றார்.

இளம் சந்நியாசி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். தாடிச் சாமியார் இரகசியமாகச் சொன்னார். "பயப்பட வேண்டாம், உதயசந்திரன். உம்மை மாலையிலிருந்து தொடர்ந்து வருகிறேன். உம்மைப் பத்திரமான இடத்துக்கு அழைத்துச் செல்லத்தான் வந்திருக்கிறேன். ஓசைப்படுத் தாமல் என் பின்னோடு வாரும்."

உதயசந்திரனுக்கு சந்தேகம் எழுந்தது. அரண்மனை ஒற்றனாயிருப்பானோ என்று நினைத்தான். அவனுடைய தயக்கத்தைக் கண்ட தாடிச் சந்நியாசி, "சந்தேகப்பட வேண்டாம். தரணிகொண்ட போசர் அனுப்பித்தான் தேடி வந்திருக்கிறேன். பத்திரமான இடத்துக்குத்தான் கூட்டிச் செல்கிறேன். ராஜன் நம்பூதிரியும் அங்குதானிருக்கிறார். என்னைத் தொடர்ந்து வரும்" என்று இரகசியமாகக் கூறிவிட்டு, மடத்தின் திண்ணையிலிருந்து எழுந்து வாசலுக்குச் சென்றார்.

உதயசந்திரன் சுற்றுமுற்றும் கவனித்தான். எல்லாரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். எழுந்து வாசலுக்குச் சென்றான். தாடிச் சாமியார் தெருவில் இறங்கி ஒரு மரத்தின் நிழலில் ஒதுங்கி அவனுக்காகக் காத்து நின்றார். இருவரும் மேற்குத் திசையில் நடக்கத் தொடங்கினர். நிலவு காய்ந்து கொண்டிருந்தது. மரங்களின் நிழல்களிலும், கட்டடங்களின் நிழல்களிலும் மறைந்தவாறு தாடிச் சந்நியாசி நடந்தார். உதயசந்திரன் அவரைத் தொடர்ந்து சென்றான்.

நடுநிசியாதலால், வீதிகள் வெறிச்சோடியிருந்தன. எங்காவது குதிரையின் குளம்பொலி கேட்டால், தாடிச் சந்நியாசி நிழலில் அசையாமல் நின்று உற்றுக் கவனித்தார். தேரோடும் வீதியைக் கடந்து, ஒரு சந்து வழியாக நடந்து சென்ற போது, மூன்று பேர் குதிரைகளில் எதிரே விரைந்து வந்ததைக் கண்டதும் தாடிச் சாமியார் உதயசந்திரனின் கையை இறுகிப் பற்றியபடி கட்டடத்தின் நிழலில் ஒதுங்கி நின்றார். குதிரைகள் அவர்களை நெருங்கியதும், முதலில், முன்னால் வந்த குதிரை நின்றது. அதைத் தொடர்ந்து மற்ற இரு குதிரைகளும் நின்றன. முதல் குதிரையிலிருந்தவர், தாடிச் சாமியாரிடம், "சுவாமிகளே, நள்ளிரவில் எங்கே இப்படி சீடனுடன் கிளம்பி விட்டீர்?" என்று கேட்டார்.

"என் சீடனைத் தேடி அழைத்துக்கொண்டு போகிறேன்."

"ஏன்? உம்மை விட்டு ஓடிவிட்டானா?"

"ஆமாம் ஐயா, சிவனைவிட விஷ்ணுதான் உயர்ந்தவன் என்று இவன் மனதை யாரோ கெடுத்துவிட்டார்கள். விஷ்ணு கோயிலில் படுத்திருந்தான். தேடிப் பிடித்து அழைத்துச் செல்கிறேன்."

குதிரையிலிருந்தவர் சிரித்தார். "சிவன்தான் பெரியவர் என்று ஒப்புக்கொண்டு விட்டானா உம்முடைய சீடன்?" என்று கேட்டு, உதயசந்திரனைக் கூர்ந்து பார்த்தார். உதயசந்திரன், நிழலில் இன்னும் பதுங்கித் தலையைக் குனிந்து கொண்டான்.

"விடுவேனா? சிவனுக்கு மிஞ்சிய கடவுள் ஏது? என்னவோ இவன் கெட்ட காலம், இவன் புத்தி இப்படித் திரிந்து விட்டது."

"ஜாக்கிரதையாக இரும், இல்லையென்றால் ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்துக்கு ஓடிவிடப் போகிறான். சீடன் இளைஞனாகத் தெரிகிறான். பரமாச்சாரியின் ஆசிரமத்தில் பெண்களும் உண்டு. காதல் பண்ணுவதுதான் அவருடைய மதக்கோட்பாடாம். உம்முடைய சீடனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்" என்று கூறிவிட்டு குதிரையைக் கிளப்பினார். பிறகு சட்டென்று திரும்பி, "இரவில் வீதியில் யாரும் நடமாடக்கூடாது என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது தெரியாதா உமக்கு?" என்று கேட்டார். குரலில் கடுமை தொனித்தது.

"தெரியும். ஆனால் துறவிகளுக்கும் அந்த உத்தரவு உண்டா என்ன?" என்று கேட்டார் தாடிச் சந்நியாசி.

"ஏன்? துறவிகளும் மனிதர்கள்தாமே? சீக்கிரம் சத்திரத்துக்குப் போய்ச் சேரும். இரவில் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது" என்று கூறிவிட்டு குதிரையில் விரைந்து சென்றார். மற்ற குதிரை வீரர்களும் சென்று மறைந்தனர்.

"இவர்தாம் கோட்டைத் தளபதி சுந்தரவர்மர். பார்த்தீரா காஞ்சியில் அடக்குமுறை எப்படி இருக்கிறதென்று. வீதியில் நடமாடக்கூட அனுமதி பெறவேண்டும்" என்று கூறியபடி நிழலில் ஒதுங்கியவாறு நடந்தார் தாடிச் சந்நியாசி.

உதயசந்திரனை அழைத்துக்கொண்டு சென்ற சந்நியாசி அவனை ருத்திரபரமாச்சாரியின் ஆசிரமத்துக்குள் கூட்டிச் சென்றார். உள்ளே கூடியிருந்தவர்களைக் கண்டு உதயசந்திரன் திகைப்புற்றான். ராஜன் நம்பூதிரியுடன் இலங்கை வீரர்களான தேவசோமாவும், களுபந்தாவும் இருந்ததைக் கண்டான். தாடி சந்நியாசியைக் கண்டதும், தரணி கொண்ட போசர் எழுந்து விரைந்து வந்தார். உதயசந்திரனின் வேஷத்தைக் கண்டதும் அவருக்குச் சிரிப்பு வந்தது.

"நல்ல வேளையாக வந்து சேர்ந்தாய். கடைசியில் என்னுடைய ஒற்றன் உன்னைக் கண்டுபிடித்து, பத்திரமாக கொண்டு வந்துவிட்டான். உன்னைப் பற்றித்தான் கவலையாக இருந்தது. சித்திரமாயன் உன்னைக் கொன்று விட்டானோ என்று நினைத்தோம். ராஜன் நம்பூதிரிக்கு சதா உன்னைப் பற்றிய கவலைதான்" என்றார்.

ராஜன் நம்பூதிரி பாய்ந்து வந்து உதயசந்திரனைக் கட்டியணைத்துக் கொண்டான். "உன்னை இழந்து விட்டேனோ என்று நினைத்துப் பதறிக் கொண்டிருந்தேன். இப்போதுதான் எனக்கு உயிர் வந்தது. எப்படியோ அரண்மனையிலிருந்து தப்பி வந்தாயே" என்றான்.

தேவசோமாவும், களுபந்தாவும் ஓடி வந்து உதயசந்திரனின் கரங்களைப் பற்றிக் கொண்டனர். அவர்களைக் கண்டு உதயசந்திரன் குழப்பமடைந்தான், வாய்விட்டே கேட்டு விட்டான்.

"நீங்கள் இருவரும் முதன் மந்திரியைக் கொல்லச் சதி செய்தவர்களாயிற்றே, இங்கே எப்படி வந்தீர்கள்?"

"இவர்கள்தாம் இப்போது நமக்கு உதவப்போகி றார்கள். நாளை சித்திரமாயன் மீது குற்றம் சாட்டப்படும் போது இவர்கள்தாம் கண்கண்ட சாட்சிகள். சுகததாசாவை சித்திரமாயனின் ஆட்கள் அம்பெய்து கொன்றுவிட்டதால், இவர்கள் அவனுக்கு எதிரியாக மாறிவிட்டார்கள். முதன் மந்திரியும் இவர்களை மன்னித்து, ஏற்றுக்கொண்டு விட்டார்" என்றான் ராஜன் நம்பூதிரி.

அன்று வெகுநேரம், போராட்டத்தின் தன்மை பற்றி யும், திட்டம் பற்றியும் ஆசிரமத்தில் ஆலோசனை நடை பெற்றது. எல்லாரும் கலைந்து சென்ற பிறகு ராஜன் நம்பூதிரி யும், உதயசந்திரனும் ஆசிரமத்தின் மேல்மாடி முற்றத்தில் படுத்துக் கொண்டனர். அப்போது உதயசந்திரன் தன்னு டைய அனுபவங்களைக் கூறினான்.

சோறு கிடைக்காமல் பசியால் வாடியதையும் ஒற்றர் களிடம் சிக்காமலிருக்க அவன் பட்ட கஷ்டங்களையும் சொன்னான். அரண்மனையிலிருந்து சுரங்கவாயில் வழி யாக அவன் தப்பிய பிறகு, பல வேடங்கள் தரித்துத் திரிந்தான். கடைசியில், சிவனடியார் வேடந்தான் அவனை நன்கு பாதுகாத்தது. சைவ சத்திரங்களில் உணவு கிடைத் தது.

எல்லாவற்றையும் கேட்ட ராஜன் நம்பூதிரி சொன் னான் – "இப்போது உன்னுடைய முதல் எதிரி சின்ன ராணிதான். ஒரு பெண் எதை வேண்டுமானாலும் பொறுத்து மன்னித்து விடுவாள். இந்த மாதிரியான அவ மானத்தை மன்னிக்கவே மாட்டாள். ஆயுள் முழுவதும் மறக்கவே மாட்டாள். சித்திரமாயன் உன்னை மன்னித் தாலும், சின்னராணி உன்னை மன்னிக்கவே மாட்டாள். லீனாவை எண்ணிக்கொண்டுதான் ராணியிடம் அலட்சி யமாக இருந்திருக்கிறாய்."

"லீனாவின் அருகில் இருக்கும்போது எனக்கு ஏற்படும்

உற்சாகமும், ஆனந்தமும் மகாராணியின் அருகில் இருந்த போது இல்லையே. அவள் அதிகார தோரணையில் என்னைப் பயன்படுத்த முனைகிறாள் என்ற எண்ணந்தான் தோன்றியது. என்னை அவள் ஆத்மார்த்தமாக நேசிப்ப தாகத் தெரியவில்லை. ஒரு போகப் பொருளாக என்னைப் பயன்படுத்திவிட்டு எறிந்து விடத்தான் நினைக்கிறாள்."

"பின்னே உன்னை அரியணையில், அவள் பக்கத்தில் அமரச் செய்வாள் என்று எதிர்பார்த்தாயா?" என்று சிரித் தான் ராஜன் நம்பூதிரி.

"சீச்சி, ஒரு ராணிக்கு ஆசை நாயகனாக இருப்பதை விட குடிசையில் வாழும் ஒருத்தியின் இதயத்தில் ஆட்சி செய்வது மேல்."

"காதலனாகவும் இருக்க வேண்டும்; அதே சமயம், ஆசை நாயகனாகவும் இருக்கத் தெரியவேண்டும். சந்தர்ப் பங்கள்தாம் வாழ்க்கையில் முக்கியம். நாம் வாழ்கின்ற விதத் துக்கும் வாழவேண்டிய விதத்துக்கும் சம்பந்தமே இல்லை. சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு நடைமுறைக்குத் தேவை யானதைச் செய்யாமல் கொள்கைகளையும், தத்துவங் களையும் பிடித்துக் கொண்டு, அந்த ஒழுங்கு முறையி லேயே நடக்கப் பார்ப்பவன், தன்னுடைய மேன்மைக்குப் பதிலாக அழிவையே தேடிக்கொள்வான்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"சின்னராணிக்கு நான் இசைந்திருக்க வேண்டும் என்கிறாயா?" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டான், உதயசந்திரன்.

"அதிர்ஷ்டம் எப்போதாவதுதான் தென்படும். அந்தச் சந்தர்ப்பத்தில் சமுதாய ஒழுக்க நியதிகளை ஆராய்வதில் பயனில்லை. அதிர்ஷ்ட தேவதை, ஒரு பெண். அவளை அடிமை கொள்ளவேண்டுமானால் நெறிமுறைகளை உதறி

விட்டு பலவந்தமாகத்தான் அவளை ஆட்கொள்ள வேண்டும். நின்று, யோசித்து நெறிகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவனை அவள் மதிப்பதில்லை. துணிச்சலும், வேகமும் உள்ளவனிடம்தான் அதிர்ஷ்டதேவதை தன்னை விட்டுக் கொடுப்பாள்" என்றான் ராஜன் நம்பூதிரி. பிறகு சொன்னான்– "நீ சற்று வளைந்து கொடுத்திருந்தால், இப்படி உயிருக்குப் பயந்து இங்கே வந்து ஒளிந்து கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. அரண்மனையில், சொகுசான இடத்தில் பயமின்றி இருந்திருக்கலாம். அதிர்ஷ்டத்தை உதறி விட்டாய். இப்போது உயிருக்காக ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறாய்."

"எனக்கு அந்த அதிர்ஷ்டம் வேண்டாம்."

"தனிப்பட்ட முறையில் உனக்கு அந்த அதிர்ஷ்டம் தேவையில்லாமலிருக்கலாம். இதையே இன்னொரு கோணத்தில் சிந்தித்துப் பார். சின்னராணியின் அபிமானத்தை நீ ஏற்றிருந்தால், இப்போது அரண்மனைக்குள் உன் செல்வாக்கைப் பயன்படுத்தி, எங்கள் போராட்டத்தை சுலபமாக்கியிருக்க முடியும். நாட்டின் நன்மைக்காக நீ ஏதாவது செய்திருக்க முடியும். உன் விருப்பத்தை சின்ன ராணியால் ஒதுக்க முடியாது. அப்படி ஒரு விதத்தில், இந்த நாட்டுக்கே பயன்தரக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை உதறி விட்டாய்" என்றான், ராஜன்நம்பூதிரி.

"என்னுடைய சுயதர்மத்தைப் பற்றி நீ அக்கறையே கொள்ளவில்லை போலிருக்கிறது" என்றான் உதயசந்திரன் எரிச்சலுடன்.

"ஒரு பெரிய நன்மைக்காக சுயதர்மத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுப்பதில் தவறென்ன? சுயதர்மம் என்பது, ஒரு வகையில் சுயநலத்தை ஒட்டியதுதான்."

"நான் சுயநலம் பார்க்கவில்லை. எந்தச் சமயத்திலும்

உயிரைத் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன். ஆனால், ஒரு பெண்ணின் போகப் பொருளாக என்னை ஆக்கிக் கொண்டு, என் மனசாட்சியைக் கொன்று, நான் யாருக்கும் உதவியாக இருக்கமுடியாது. உன்னோடு இந்த மாதிரித் தரையில் முடங்கிப்படுப்பதை, அரண்மனையில் மஞ்சத்தில் படுப்பதைவிட மேலாக எண்ணுகிறேன். இதில் கிடைக்கும் ஆன்ம திருப்தியை ராணியின் அரவணைப்பில் நான் காண முடியாது" என்றான், உதயசந்திரன்.

"நான் பொதுவாக வாழ்க்கையின் வெற்றிக்கான யதார்த்த நிலையைச் சொன்னேன். திருப்தி என்பது, அவரவர் மனதைப் பொறுத்தது. எப்படியோ உன்னை உயிரோடு காண முடிந்தது எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கிறது. நிலைமை எப்படி முடியுமோ தெரியவில்லை. இந்தப் போராட்டத்தில் அழிவு ஏற்பட்டாலும், நாம் இருவரும் சேர்ந்தே அழிவோம்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"எனக்கு ஒரு உதவி வேண்டுமே" என்றான் உதயசந்திரன்.

"என்ன?"

"டெங்லீயின் தோட்டத்திலிருந்து என்னைப் பிடித்துப் போனது யாருக்கும் தெரியாது. மறுநாள் காலையில் என்னைக் காணாது லீனா பதறியிருப்பாள். அங்கு யாரையாவது அனுப்பி, எனக்கு ஆபத்து இல்லை என்று தெரிவிக்க வேண்டும்."

"காலையில் இரணியவர்மரிடம் சொல்லி ஏற்பாடு செய்யலாம். இப்போது நிம்மதியாகத் தூங்கு. நீ நன்றாகத் தூங்கிப் பல நாட்களாகிவிட்டன" என்றான், ராஜன் நம்பூதிரி.

29. ஆராய்ச்சி மணி ஒலித்தது!

அரண்மனையில், மகாராணியின் முன்னிலையில், மந்திராலோசனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. புதிதாக முதன்மந்திரி பதவியை ஏற்றிருந்த அச்சுதபட்டர், மகாராணியின் அருகில் பவ்வியமாக அமர்ந்திருந்தார். சித்திரமாயன் சொன்னதற்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டிருந்தார். புதிதாகப் பதவிகளில் அமர்ந்த பல துறைகளைச் சேர்ந்த தலைவர்களும், சுந்தரவர்மரும் அங்கிருந்தனர்.

ஊர்க்காவல் படைத்தலைவர் எழுந்து, "மக்கள் அடங்கி விட்டார்கள். ஒரே நாளில் எந்தக் கலவரமும் இல்லாமல் செய்துவிட்டேன்" என்று பெருமையுடன் கூறினார்.

"பதவி விலகிய தரணி கொண்ட போசர் ஏதோ சதித் திட்டம் போடலாம் என்று நினைக்கிறேன்" என்றான், சித்திர மாயன்.

"பல் பிடுங்கப்பட்ட பாம்பு. இளவரசர் இனி அவரைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டியதில்லை. இப்போது தரணி கொண்ட போசர், தியானப் பயிற்சியில் மனதைச் செலுத்துவதாகத் தகவல் கிட்டியது. அடிக்கடி பரமாச் சாரியின் ஆசிரமத்துக்குப் போய் வருகிறார்" என்றார், அச்சுதபட்டர்.

"இளவரசர் அரியணை ஏறுவதற்கு நாள் குறித்து விடலாமே" என்றார், சுந்தரவர்மர்.

அப்போது மகாராணி சொன்னாள்: "காஞ்சியில் அமைதி நன்கு நிலவட்டும். போர்க்களம் சென்றிருந்த படை காஞ்சிக்குத் திரும்பியதும் பட்டம் சூட்டலாம்."

"இப்போது காஞ்சியில் அமைதி நிலவுகிறது. எவனும்

அரசுக்கு எதிராகப் பேசக்கூட முடியாதபடி அடக்கி விட்டேன்" என்றார், ஊர்க்காவல் தலைவர்.

"தெற்கேயும், வடக்கேயும் சிலநகரங்களில் கலவரங்கள் தோன்றியிருப்பதாய் செய்திகள் வந்திருக்கின்றன. நகரத்தலைவர்களில் சிலரை நீக்கிவிட்டுப் புதிதாக நாம் நியமித்து அனுப்பிய தலைவர்களை அந்த நகரங்களுக்குள்ளேயே வர விடாமல் மக்கள் தடுத்திருப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன" என்றாள், மகாராணி.

"மகாராணியார் அது பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். ஆரம்பத்தில் மக்கள் ஏதாவது எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். பிறகு ஓய்ந்து விடுவார்கள். பிறகு மறந்து கூட போய்விடுவார்கள். நாம் கொஞ்சம் பொறுமையாக இருந்தால் போதும். அந்தந்த நகரங்களுக்கு ஏதாவது சலுகைகள் காண்பித்து விட்டால் மக்கள் அடங்கி விடுவார்கள். சத்திரங்களில் சோறு போட்டலே போதும். மக்கள் திருப்தியடைந்துவிடுவார்கள்" என்றார், அச்சுதபட்டர். பிறகு, சொன்னார், "மகாராணியாரின் சிந்தனையில் தோன்றிய மாபெரும் தத்துவத்தை, மக்கள் புகழ்கிறார்கள். மகாராணியாரின் திரிதத்துவம், நாடு முழுவதிலும் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. ஏரிக்கரையருகே வாழும் கூலிக்காரர்களும், ஏழை மக்களும் திரிதத்துவ அறிவிப்பைக் கேட்டு மகாராணியாரைப் பார்வதியின் அவதாரம் என்றே கொண்டாடுகிறார்கள்."

"வடமொழிக் கடிகையில் இன்னும் மாணவர்கள் கோபத்துடனிருப்பதாக ஒற்றர்கள் தகவல் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்றான், சித்திரமாயன்.

"அது ஒரு பிரச்சினையே அல்ல. இளவரசர் பட்டம் சூட்டியதும், அந்தக் கடிகையையே ஒழித்து விடலாம்" என்றார், அச்சுதபட்டர்.

"காஞ்சியில் வைதீகர்களான சைவர்களும், வைணவர்களும் அதிருப்தியோடிருக்கிறார்கள். அவர்களைத் திருப்திப் படுத்திவிட்டால் நல்லது" என்றார், சுந்தரவர்மர்.

"அவர்களுக்கு என்ன குறை?" என்று மகாராணி கேட்டாள்.

"ருத்திர பரமாச்சாரிக்குச் சலுகை காட்டுவதுதான் வைதீகர்களின் அதிருப்திக்குக் காரணம்."

"இன்றே மக்களுக்கு ஓர் அறிவிப்பு விடுங்கள். காஞ்சி வைதீகப் பெருமக்களின் ஆசியை இளவரசர் வேண்டுகிறார் என்றும், முடிசூட்டு விழாவுக்குப் பிறகு, வைதீகர்களின் குறைகள் தீர்க்கப்படும் என்றும் அறிவியுங்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம். இந்த வைதீகர்களை ஒடுக்குவது பெரிய காரியமல்ல" என்றாள், மகாராணி.

"முடிசூட்டு விழாவுக்கு முன், சிறைப்பட்டிருப்பவர்கள் அனைவரையும் கழுவேற்ற வேண்டும். அவர்கள் உயிரோடிருக்கும் வரை எங்கிருந்தாவது எதிர்ப்புத் தோன்றிக் கொண்டேயிருக்கும்" என்றான் சித்திரமாயன்.

"மகாராணியார் உத்தரவு பிறப்பித்தால், இன்றே அனைவரையும் கழுவேற்றிவிடுகிறேன்" என்றார், சுந்தரவர்மர்.

"அவர்களில் சிலர், நம்மிடம் விசுவாசத்தோடிருக்க நினைக்கலாம். மன்னிப்புக் கேட்டு விடுதலையை விரும்புபவர்களை மட்டும் விடுதலை செய்துவிட்டு, மற்றவர்களை கழுவேற்றி விடலாம். இன்னும் இரண்டு நாட்களுக்குள் யார் யார் மன்னிப்புக் கேட்டு நம்மிடம் விசுவாசமாக இருக்க விரும்புகிறார்கள் என்பதை அறிந்து சொல்லுங்கள்" என்றாள், மகாராணி.

"எப்படியும் நாலைந்து தினங்களுக்குள் நம்முடைய

படை காஞ்சிக்குத் திரும்பி விடும். முடிசூட்டு விழாவை அதன்பின் வைத்துக் கொள்ளலாம். பொருத்தமான நாளை அரண்மனை ஜோஸ்யரிடம் கேட்டுத் தெரிவியுங்கள்" என்றான், சித்திரமாயன்.

மந்திராலோசனை முடிந்து எல்லாரும் வெளியேறியதும் சித்திரமாயனிடம், "தப்பி ஓடி விட்டானே உதயசந்திரன் இன்னுமா பிடிபடவில்லை?" என்று கேட்டாள், பிரேமவர்த்தினி.

"தேடிக் கொண்டிருக்கிறார்கள்" என்றான், சித்திரமாயன்.

"நீ ஏவிய ஒற்றர்கள் பிடிப்பதற்குள், மேகலாவின் மெய்காவலர்கள் அவனைப் பிடித்து இங்கே கொண்டு வந்து விட்டார்களாமே! உன்னிடம் அவனை ஒப்படைக்கும்படி மேகலா அனுப்பி வைத்தாளாம். அதற்குள் தப்பி விட்டானே! அவனுக்கு எப்படி சுரங்கப் பாதையின் இரகசியம் தெரிந்தது?" என்று வியந்து கேட்டாள் பிரேமவர்த்தினி.

"அதுதான் எனக்கும் புரியவில்லை. அவனைத் துரத்திக்கொண்டு சென்ற வாணராயனை, சுரங்கப்பாதைக் காவலாளி வெட்டிக்கொன்று, உதயசந்திரனைத் தப்பவிட்டிருக்கிறான். அரண்மனைக்குள்ளேயே நமக்கு வேண்டாதவர்கள் இருக்கிறார்கள். எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்றான், சித்திரமாயன். பிறகு சொன்னான். "வாணராயனை இழந்தது என் வலக்கரத்தை இழந்தது போலிருக்கிறது. உதயசந்திரனுக்கு சுரங்கப்பாதையை அந்தக் காவலாளிதான் காட்டியிருப்பான். அந்தக் காவலாளியை சுரங்கவாசல் சிவலிங்கத்துக்குப் பலியிட்டாகிவிட்டது."

"உதயசந்திரனை எப்படியும் பிடித்து தண்டித்தே ஆக வேண்டும்."

"விரைவில் அகப்பட்டே தீர்வான். அவனுடைய நடவடிக்கைகள் பற்றி அவனுடைய சீனக் காதலிக்குத் தெரிந்திருக்கும். அவளைச் சிறைப்படுத்தி விசாரிக்க வீரர்களை அனுப்பியிருக்கிறேன். இன்றே அவனைப் பற்றிய விவரங்களை அவளிடமிருந்து கறந்துவிடலாம்" என்றான் சித்திரமாயன்.

திடீரென்று மணியோசை அப்போது கேட்டது. இருவரும் திடுக்கிட்டனர். தர்மாசன மண்டபத்தின் ஆராய்ச்சி மணியின் ஒலி வெகுநேரம் காஞ்சி நகர் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது. மக்கள் திகைப்புடன் வீட்டு வாசல்களில் வந்து நின்று மணியோசையைக் கவனித்தனர்.

சித்திரமாயனின் மனத்தில் இனம்புரியாத பீதி சூழ்ந்தது. மகாராணி குழம்பிய மனத்தோடு மணியோசையை உற்றுக் கேட்டாள்.

பல்லவ ஆட்சியில் தர்மாசனம் மிக முக்கியமானது. இந்தக் காலத்தில் டில்லியில் உள்ள சுப்ரீம் கோர்ட் மாதிரி ஓர் அமைப்பு தர்மாசனம் என்பது. பல்லவ சாம்ராஜ்யத்தின் அரியணையில் வீற்றிருக்கும் சக்கரவர்த்திதான், தர்மாசனத்தில் வீற்றிருந்து தீர்ப்புக் கூற வேண்டும். நகரங்களில் உள்ள அறங்கூர் மன்றம் என்ற வழக்கு மன்றங்களில் கூறப்படும் தீர்ப்பை எதிர்த்து முறையிட வேண்டுமானால், தர்மாசனத்தில்தான், மன்னர் முன்னிலையில் முறையிட வேண்டும். அரச குடும்பத்தைச் சார்ந்த எந்த நபர் மீதாவது குற்றம் சாட்டி நீதி பெற வேண்டுமானாலும், தர்மாசன மன்றத்துக்குத்தான் செல்ல வேண்டும். அவ்விதம் அரச குடும்பத்தார் மீது குற்றம் சாட்டி நியாயம் கேட்க வேண்டிய பிரஜை முதலில் தர்மாசன மண்டபத்தில் தொங்கிய ஆராய்ச்சிமணியை அடிக்க வேண்டும். ஆராய்ச்சி மணி ஒலிக்கிறது என்றால், அரச குடும்பத்தைச் சேர்ந்த யார் மீதோ பெரும் பழி சுமத்தப்படுகிறது என்று பொருள்.

ஆராய்ச்சி மணி ஒலித்து, கிட்டத்தட்ட பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. அப்போது சக்ரவர்த்தி இராசசிம்மன் ஆண்டு வந்தார். இப்போது போர்க்களத்தில் மரணமடைந்த பரமேஸ்வரவர்மரின் தந்தை அவர். அதாவது சித்திரமாயனின் தந்தையைப் பெற்ற பாட்டனார், சைவநாயன்மார் அறுபத்துமூவரில் காடவர்கோன்கழற் சிங்க நாயனார் என்பவர் இவரே. காஞ்சியில் புகழ்பெற்ற கைலாசநாதர் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் நடத்தினார். அப்போது, கும்பாபிஷேகக் கூட்டத்தைக் கண் காணித்துக் கொண்டிருந்தான் சக்கரவர்த்தியின் தம்பி விக்கிரமவர்மன். கோயில் வாசலில் கூட்டம் கட்டுக்கடங் காமல் போகவே, விக்கிரமவர்மன் கூட்டத்தை ஒழுங்கு படுத்த விரைந்தான். அப்போது இடுப்பில் குழந்தையை வைத்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணை விக்கிரமனின் குதிரை இடித்துக் கீழே தள்ளிவிட்டது. கீழே விழுந்த அந்தப் பெண் ஏதோ ஏசி விடவே, கோபமடைந்த விக்கிரமவர்மன், அவளுடைய கன்னத்தில் ஓங்கி அடித்து விட்டான்.

மறுநாள், அந்தப் பெண்ணே தர்மாசன மண்டபத் துக்குப் போய் ஆராய்ச்சி மணியை அடித்தாள். வழக்கை விசாரித்த சக்கரவர்த்தி, "ஒரு பெண்ணை ஒரு ஆண் கை நீட்டிப் பொது இடத்தில் அடித்தது மாபெரும் குற்றம். அது மும் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன் செய்து விட்டான். இன்று ஒலித்த ஆராய்ச்சி மணியின் ஒலி, என் ஆட்சியில் ஏற்பட்டு விட்ட களங்கம். நீ என்ன தண்டனை விதிக்கும்படி கோரு கிறாயோ, அதை விக்கிரமவர்மனுக்கு அளிக்கிறேன்" என் றார்.

அதைக் கேட்டு அந்தப் பெண், நெகிழ்ந்து விட்டாள். "கைலாசநாதர் கோயிலுக்கு நாற்பது நாட்கள் நடந்து சென்று விக்கிரமவர்மன் தீபங்களை ஏற்ற வேண்டும். பெண்ணைத் தீண்டி அடித்த பாவத்தை அவ்விதம் கழுவிக்கொள்ளட் டும்" என்றாள்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, இப்போது தர்மாசன மண்டபத்து மணி ஒலித்ததைக் கேட்டுக் காஞ்சி நகர் பரபரப் படைந்தது. பிரேமவர்த்தினி தர்மாசனத்தில் அமர்ந்து நீதி வழங்க வேண்டும். அவளைத் தர்மாசன மண்டபத்துக்கு அழைத்துச் செல்ல முதன் மந்திரி அச்சுதபட்டர் வந்தார். மகாராணி மிகுந்த பதற்றமுற்றவளாய், அவருடன் தர்மாசன மண்டபத்துக்குச் செல்ல எழுந்தாள்.

ஜெயவாரணம் என்ற பட்டத்து யானையின் மீது மகாராணி தர்மாசன மண்டபத்துக்குச் சென்றபோது, வீதி களின் இருமருங்கிலும் மக்கள் கூடி நின்றனர். வழக்கமாக ஜெயவாரணத்தில் ஆரோகணித்து சக்கரவர்த்தியோ அல்லது மகாராணியோ வீதியில் பவனி வந்தால், மக்கள் உற்சாகமடைந்து, ஆரவாரம் செய்வார்கள். மன்னர் விஷ்ணுவின் அம்சம் என்று மக்கள் கருதி, வணங்கி நிற்பார் கள். ஜெயவாரணத்தின் கம்பீர நடையையும், மகாராணி பிரேமவர்த்தினியின் கவர்ச்சியையும் கண்டு உற்சாக மடைந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்யவேண்டிய மக்கள், அன்று மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்; வீதியில் பட்டத்து யானையின் மணியோசையும், குதிரைகளின் குளம்பொலி ஓசையும், பரிவாரங்களின் கொம்பு ஊதிய ஓசையும் தவிர, வேறு எந்த ஆரவாரமும் இல்லை. மகாராணிக்கு மக்களின் மௌனம் மனக்கலக் கத்தை அளித்தது. ஏதோ ஒரு மயான ஊர்வலம் மாதிரி உணர்ந்தாள். தூரத்தில் ஒலித்துக் கொண்டிருந்த ஆராய்ச்சி மணியின் ஒலியை நெருங்க நெருங்க, அவள் மனத்தில் விவரிக்க இயலாத சஞ்சலம் தோன்றியது.

தர்மாசன மண்டபத்தினருகே மக்கள் திரண்டிருந்தனர். மகாராணி யானையிலிருந்து இறங்கி, மண்டபத்தினுள் சென்றபோது, அங்கு ராஜன் நம்பூதிரி மணியை அடித்துக் கொண்டிருந்தான். மகாராணி மண்டபத்தினுள் சென்றதும்

மணியடிப்பதை நிறுத்தினான். எங்கும் நிசப்தம் நிலவியது. அந்தச் சூழ்நிலை மகாராணிக்கு நடுக்கத்தைக் கொடுத்தது.

தர்மாசனத்தில் அவள் அமர்ந்ததும் முதன் மந்திரி அச்சுதபட்டர் முன்னால் வந்து நின்றார். ஒரு பக்கத்தில், ராஜன் நம்பூதிரி நின்று கொண்டிருந்தான். மண்டபம் முழுவதும் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. மண்டபத்துக்கு வெளியே வீதியிலும் பெருங்கூட்டமிருந்தது. எல்லாருடைய முகங்களிலும் பயம் கலந்த ஓர் ஆர்வமிருந்தது. என்ன நடைபெறப் போகிறதோ, குற்றம் யார் மீது சுமத்தப்படுகிறதோ என்பதே புரியாமல் மக்கள் திகைப்புடனிருந்தனர்.

முதன் மந்திரி, தொண்டையைச் செறுமிக் கொண்டார். "ஆராய்ச்சி மணியை அடித்து, தர்மம் தவறாத பல்லவ சாம்ராஜ்யத்தின் நீதியைக் கோருபவர் இங்கே வரலாம்" என்றார்.

அவர் கூறியதை ஓர் அறிவிப்பாளன் உரத்தக் குரலில் திரும்பக் கூறினான்.

ராஜன் நம்பூதிரி மகாராணியின் முன்னால் போய் நின்று வணங்கினான்.

"இளைஞனே, உன்னுடைய பெயர்?"—மந்திரி கேட்டார்.

"ஸ்ரீராஜன் நம்பூதிரி."

"உன்னுடைய குறையைச் சொல்லலாம்."

ராஜன் நம்பூதிரி இரைந்து பேசினான். "மகாராணி அவர்களே, முன்று குற்றச்சாட்டுகளைத் தங்கள் முன்னால் கொண்டு வந்திருக்கிறேன். ஒன்று கற்பழிப்பு..."

இதைக் கேட்டவுடன் கூட்டத்தில் வியப்பொலிகள் எழுந்தன. கசமுசவென்று பேச்சொலி கிளம்பியது.

"மற்றொன்று, அதனால் அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட மரணம். முன்றாவது குற்றச்சாட்டு, முன்னாள் முதன் மந்திரியான தரணி கொண்ட போசரைக் கொல்லச் சதி செய்தது..."

பிரேமவர்த்தனியின் உடல் சிறிது நடுங்கியது. உள்ளூர பயம் சூழத் தொடங்கியது. கூட்டத்தில் பெரும் கூச்சல் கிளம்பியது. வியப்புக் குரல்களும் கண்டனக் குரல்களும் கலந்து ஒலித்தன. அச்சுதபட்டர் கூட்டத்தினரை அமைதியாக இருக்கும்படிக் கையை அசைத்தார். பிறகு, ராஜன் நம்பூதிரியைப் பார்த்துப் பேசத் தொடங்கினார்.

"உன்னுடைய குற்றச்சாட்டை அறங்கூர் அவையத்தில் கூறியிருக்கலாமே, ஏன் வீணாக தர்மாசன மண்டபத்து ஆராய்ச்சி மணியை அடித்தாய். அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் மீது குற்றம் சுமத்தும் சந்தர்ப்பத்தில்தான் இந்த ஆராய்ச்சி மணியை அடிக்கலாம்" என்றார்.

"விதிமுறைகளையும், நடைமுறைகளையும் தெரிந்து கொண்டுதான் மணியை அடித்தேன்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"ஓ...! இளைஞனே, கொடுமைக்கு உள்ளான பெண் உன்னைச் சேர்ந்தவளா? உனக்கு உறவா?"

"இல்லை."

"நீ சாட்டியிருக்கும் குற்றங்களுக்கும் உனக்கும் சம்பந்தமே இல்லை. சம்பந்தமில்லாத நீ, ஆராய்ச்சி மணியை அடித்தது பெருங்குற்றம்" என்று கோபத்துடன் கூறினார், அச்சுதபட்டர்.

மக்கள் திகைப்புற்றனர். பலர் எதிர்ப்புக் குரல் எழுப்பினர். கூட்டத்திலிருந்து சிலர் எழுந்து நின்று, கூச்சலிட்டனர். படைவீரர்கள் பாய்ந்து வந்து கூட்டத்தினரை அடக்கினர்.

"ஆராய்ச்சி மணி, குற்றம் சாட்டத்தானே தவிர, இன்னார்தான் குற்றம் சாட்ட வேண்டும் என்ற விதியில்லை" என்றான் ராஜன் நம்பூதிரி.

"ஒரு கொடுமை இழைக்கப்பட்டிருந்தால், அந்தக் கொடுமையால் துன்புற்றவர்கள்தாம் தர்மாசனத்தில குற்றம்சாட்டமுடியும்" என்றார், மந்திரி.

"மனிதாபிமானத்தைக் கருதி, கொடுமையை அறிந்த எவருக்கும் குற்றம் சாட்ட உரிமை உண்டு."

"கிடையாது, கொடுமைக்கு உள்ளானதாக நீ கருதுபவர்களே, அந்தச் செயலை கொடுமையாக எண்ணாது, மன்னித்து விலகியிருக்கும் போது, உனக்கு எங்கிருந்து உரிமை வந்தது?"

ராஜன் நம்பூதிரி மகாராணியைப் பார்த்து, "மகாராணி அவர்களே, நான் குற்றம் சாட்டிய கொடுமைகளை யாரும் மன்னித்து ஒதுங்கிவிடவில்லை" என்றான்.

"அப்படியானால், அவர்களே குற்றத்தை எடுத்துக் கூற இங்கே வந்திருக்கலாமே" என்றாள், பிரேமவர்த்தினி.

"மகாராணி அவர்களே, கொடுமைக்குள்ளானவர்கள் பயமின்றிக் குற்றம் சாட்டும் நிலையில் இன்று ஆட்சி இல்லை. தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை வெளியே கூறினால், மேற்கொண்டும் தங்களுக்கு கொடுமை இழைக்கப்படலாம் என்று பயந்து நடுங்கும் அளவுக்கு நாட்டில் அடக்குமுறை இருக்கிறது. சுதந்திரம் இல்லாத மக்களுக்கு ஆராய்ச்சி மணியை அடிக்கத் துணிவில்லை. ஆகவே, அவர்கள் சார்பில் நான் அடித்தேன்."

அச்சுதபட்டர் குறுக்கிட்டுக் கேட்டார், "முதன் மந்திரியைக் கொல்ல சதி நடை பெற்றதாகக் கூறினாயே, தரணி கொண்ட போசர் கூடவா குற்றத்தை எடுத்துரைக்கப் பயப்படுகிறார்?"

"பயப்படவில்லை. அலட்சியப் படுத்திவிட்டார். ஆனால், ஒரு நாட்டுப் பிரஜைக்கு நாட்டின் முதன் மந்திரி மீது அக்கறை உண்டு. முதன் மந்திரியின் உயிருக்கு ஆபத்தை உண்டு பண்ணக் கூடியவர்களை எந்தப் பிரஜையும் குற்றம் சாட்டலாம்."

"நீ கூறும் கொடுமைகளை நேரில் கண்டவர்களைக் கொண்டு வந்து நிருபிக்க முடியுமா?"

"நிருபிக்கத்தானே ஆராய்ச்சி மணியை அடித்தேன். கற்பழிப்பின் போது உடனிருந்து உதவி, அவள் மரண மடைந்தபின், அவள் உடலை அகழியில் வீசியவனையும்; முதன் மந்திரியின் கொலைச் சதியை நேரடியாகத் தெரிந்து கொண்டவர்களையும் மகாராணியாரின் முன்பு இப்போதே கொண்டு வந்து நிறுத்துகிறேன்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"இளைஞனே, உன் வாதம் செல்லாது. யாருக்காகவோ இங்கே வந்து வீணாக, தர்க்கம் செய்து கொண்டிருக்கிறாய். பாதிக்கப்பட்டவர்கள் யாரோ, அவர்கள், நேரடியாக தர்மாசனத்தின் முன் வந்து, நீதி வழங்கும்படி கேட்டால்தான், தர்மாசனத்தின் தீர்ப்புக் கிடைக்கும். உனக்கு இங்கே வந்து நிற்க உரிமை இல்லை, நீ, போகலாம்" என்றார், அச்சுத பட்டர்.

ராஜன் நம்பூதிரியின் கண்கள் கோபத்தால் சிவந்தன. அச்சுதபட்டரை உறுத்துப் பார்த்தான். பிறகு மகாராணியை நோக்கி, "மகாராணி அவர்களே, நான் பாதிக்கப்பட்டிருப்பதால்தான் நேரடியாக தர்மாசனத்தின் முன் நிற்கிறேன்" என்றான்.

"உனக்கும் இந்தச் குற்றச்சாட்டுக்கும் நேரடித் தொடர்பு கிடையாது. நீ பாதிக்கப்பட்டவன் அல்லன்" என்றார், மந்திரி.

"தொடர்பு இருக்கிறது. நேரடியான பாதிப்பு இருக்கிறது. இப்போது நான் இந்நாட்டின் பிரஜை. வடமொழிக் கடிகையின் மாணவன். என்னை ஆள்பவர் யாராயிருந்தாலும், அவருக்கும் எனக்கும் நேரடி தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. அந்தத் தொடர்பு, என்னைப்பாதிப்பதால், இங்கே நீதி கேட்க எனக்கு உரிமை இருக்கிறது."

"ஓ...நீ மகாராணியையே குற்றம் சாட்டுகிறாயா?" என்று அச்சுதபட்டர், கோபத்தோடு கேட்டார்.

"இல்லை, இந்த சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக முடி சூட்டி, என்னையும் மற்ற பிரஜைகளையும் இனி ஆளப் போகிற இளவரசர் மீது குற்றம் சாட்டுகிறேன். இளவரசர் சித்திரமாயன் குற்றவாளி" என்றான், ராஜன் நம்பூதிரி.

இதைக் கேட்டு மக்கள் கூட்டம் அதிர்ச்சியடைந்தது. கூட்டத்தில் சலசலப்புத் தோன்றியது. குற்றவாளி யார் என்பது பற்றிய செய்தி, மண்டபத்தையும் தாண்டி, வீதியை அடைந்தபோது, மக்கள் கூட்டம் கொதிப்படைந்து கூக்குரலிட்டது. சூழ்நிலையே சூடேறி தகித்தது.

அச்சுதபட்டர், மிகுந்த கோபத்துடன், ராஜன் நம்பூதிரியை எரித்து விடுபவரைப் போல் உற்றுப் பார்த்தவாறு, "சிந்தித்துத்தான் சொல்கிறாயா? இளவரசர் இந்நாட்டின் சக்ரவர்த்தியாக முடி சூடப் போகிறவர். அவசரப்பட்டு பெயரைக் குறிப்பிட்டு விட்டாய்" என்றார். குரலில் நடுக்கம் இருந்தது. "இதனுடைய விளைவை எண்ணிப்பார்த்தாயா? குற்றம் நிருபிக்கப்படவில்லையென்றால், நடுத்தெருவில் நீ கழுவேற்றப்படுவாய். உன்னுடைய உடலை காகமும், நரியும் தின்னும். சக்கரவர்த்தி மீதே பழி சொல்ல உனக்கு என்ன துணிச்சல்" என்றார்.

"மந்திரி அவர்களே, இந்தத் துணிச்சல், இந்த நாட்டுப் பிரஜை ஒவ்வொருவனுக்கும் இருக்கும் அளவுக்கு,

இந்நாட்டில் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான் இங்கே வந்து நிற்கிறேன். எனக்கு எது நேர்ந்தாலும் அக்கறை இல்லை. என்னையும், இந்தப் பிரஜைகளையும் ஆளப்போகிறவர், கொடிய குற்றவாளியாக இருக்கக்கூடாது. இந்நாட்டு மக்களின் சக்கரவர்த்தி, நேர்மையானவராக, ஒழுக்க சீலராக இருக்க வேண்டும்."

கூட்டத்தினர் ஆரவாரம் செய்தார்கள்.

"விசாரிக்க வேண்டும்" என்று பல குரல்கள், பல திசைகளிலிருந்து எழுந்தன.

மகாராணியின் உடல் நடுங்கியது. கண்களில் பயத்தின் சாயல் நன்கு தெரிந்தது. நடுங்கும் குரலில் அவள் கேட்டாள்.

"நீ சாட்டும் குற்றத்தை உன்னால் நிருபிக்க முடியுமா?"

"மகாராணி அவர்களே, இப்போதே, குற்றங்களைக் கண்ணால் கண்டவர்களைத் தங்கள் முன் கொண்டு வருகிறேன்" என்று கூறிய ராஜன் நம்பூதிரி, கூட்டத்தில் ஒரு திசையை நோக்கி, "நாகப்பா" என்று கூவினான். கூட்டத்திலிருந்து ஒருவன் எழுந்து, தலைப்பாகையைக் கழற்றி வைத்துவிட்டு, மகாராணியின் முன் வந்து வணங்கி நின்றான்.

"மகாராணி அவர்களே, கற்பழிக்கப் படுவதற்காகப் பெண்ணை வழி மறித்துக் கடத்திச் சென்றவன் இவன். பெண்ணை இளவரசனிடம் ஒப்படைத்தான். அந்தப் பெண் அவமானம் பொறுக்காமல் மண்டபத்தின் மாடியிலிருந்து தலைகீழாக விழுந்து தற்கொலை செய்த பிறகு, அவள் உடலை அகழியில் வீசியவனும் இவன்தான். இவனை விசாரியுங்கள். முழு விவரமும் கிடைக்கும்" என்றான், ராஜன் நம்பூதிரி.

நாகப்பன் நடந்த விபரங்களைக் கூறக் கூட்டத்தினரி

டையே கோபக் கூச்சல்களும், கண்டனச் சொற்களும் எழுந்தன.

நாகப்பன் பேசி முடிந்ததும், இரண்டு வீரர்கள் அவனைக் கைது செய்தனர். உடனே கூட்டத்தினர் அதை எதிர்த்துக் கூச்சலிட்டனர்.

அச்சுதபட்டர் கூட்டத்தினரைப் பார்த்து, "குற்றம் புரிய உடந்தையாக இருந்தவனும் குற்றவாளிதான். ஆகவே இவனைச் சிறைப்படுத்துவது தவறல்ல" என்றார்.

கூட்டத்தினர், "அவனைக் கொன்று விடுவார்கள், கொன்றுவிடுவார்கள்" என்று கூக்குரலிட்டனர்.

ராஜன் நம்பூதிரி, மகாராணியிடம், "மகாராணி அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்கு முன்பு நாகப்பனுக்கு எவ்விதத் தீங்கும் நேர்ந்துவிடக் கூடாது. குற்றவாளியை விட, குற்றத்துக்கு உடந்தையாக இருந்தவனுக்குக் குறைந்த தண்டனை வழங்குவதுதான் தர்மம். தீர்ப்பு வழங்கும் வரை, நாகப்பனை தினமும் அறங்கூர் மன்றத்துக்கு கொண்டு வந்து மக்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அவனைக் காவலர்கள் கொன்று விடுவார்களோ என்று மக்கள் அஞ்சுகின்றனர்" என்றான்.

மகாராணி தலையை அசைத்து, அவனுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டாள்.

அதன் பிறகு ராஜன் நம்பூதிரி கூட்டத்தை நோக்கி, "தேவசோமா..." என்று இரைந்து கூப்பிட்டான். அவன் கூட்டத்திலிருந்து எழுந்து வந்து, மகாராணிக்கு வணக்கம் செலுத்தினான்.

மகாராணியின் முன்னிலையில் அவன் கூறிய விவரங்களைக் கேட்டு மக்கள் வியப்பிலாழ்ந்தார்கள். சுகதாசாவை இளவரசரின் ஆட்கள் மறைந்திருந்து அம்பெய்து கொன்ற சம்பவத்தைக் கூறியபோது, தேவசோமா கண் கலங்கினான்.

தேவசோமா கூறி முடித்த உடன் அவனையும் சிறைப்படுத்த வீரர்கள் நெருங்கினார்கள். ராஜன் நம்பூதிரி தடுத்தான். "இவன் சதிச் செயலில் கலந்து கொண்டவன் அல்லன். இளவரசரின் அழைப்பின் பேரில் சென்றவன். சதியில் இவன் ஈடுபடவில்லை. இவன் ஒரு சாட்சியே. இவனைச் சிறைப்பிடிப்பது நியாயமில்லை" என்றான். அவன் கூறியதை மக்கள் கூட்டமும் ஆமோதித்து, கூச்சலிட்டது. மகாராணி தேவசோமாவைச் சிறைப்பிடிக்க வேண்டாம் என்று ஆணையிடவே, வீரர்களும் விலகிச் சென்றனர்.

அச்சுதபட்டர், மக்கள் கூட்டத்தை நோக்கிச் சொன்னார்: "இங்கே கூறப்பட்ட குற்றச் சாட்டுகளும், விவரங்களும் எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியாது. இனிதான் இதுபற்றி ஆராய வேண்டும். ஒரு பக்கத்துக் குற்றச் சாட்டை மட்டுமே மகாராணியார் கேட்டுள்ளார். இன்னொரு பக்கத்துப் பதிலையும் மகாராணியார் கேட்டு, தீர விசாரித்த பிறகு, தீர்ப்பு வழங்குவார்கள்."

கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. "இன்றே விசாரிக்க வேண்டும்... இளவரசரை இங்கே அழைத்து வாருங்கள்... நீதி வேண்டும்.... நியாயம் வேண்டும்..." என்று பல குரல்கள் பல திசைகளிலிருந்து ஒலிக்கத் தொடங்கின.

அச்சுதபட்டர், மக்களை நோக்கி கையை உயர்த்தி, "அமைதியாக கலைந்து செல்லுங்கள். இப்போது நாம் சக்ரவர்த்தியின் மரணச் செய்தி கேட்டு, துக்கம் அனுஷ்டிக்கிறோம். மகாராணியார் பெரும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார். இவ்வேளையில் நீங்கள் அவரை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கக் கூடாது. மகாராணியார் விரைவில் வழக்கை தீர ஆராய்ந்து, தீர்ப்பு வழங்குவார்கள். இப்போது எல்லாரும் அமைதியாகச் செல்லுங்கள்" என்றார். பிறகு,

மகாராணியை அழைத்துச் சென்று யானையின் மீது ஏற்றி விட்டு, அவர் தம்முடைய இரதத்தில் ஏறிச் சென்றார்.

தர்மாசன மண்டபத்தைச் சுற்றி நின்ற கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி வீரர்கள் கூவிக் கொண்டிருந்தனர். ஆனால் கூட்டம் கலையாமல் குமைந்து கொண்டேயிருந்தது. பலர் பலவிதமாகப் பேசி, விவாதித்துக் கொண்டிருந்தனர்.

30. காஞ்சிப் புரட்சி

ஆராய்ச்சி மணியை அடிக்க அன்று காலையில் ராஜன் நம்பூதிரி, தர்மாசன மண்டபத்துக்குப் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில், இரணியவர்மரின் படைவீரர்கள், சாதாரண உடையில் ஒவ்வொருவராக தர்மாசன மண்டபத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினர். எந்தக் காரணத்திலாவது ராஜன் நம்பூதிரிக்கு ஆபத்து விளையுமானால், அவனைக் காப்பாற்றிக் கொண்டு வந்து சேர்த்து விட வேண்டும் என்பது இரணியவர்மரின் உத்தரவு. அதே சமயம், மக்களுக்கு அரசின் படை வீரர்களால் ஏதாவது கொடுமை நேருமானாலும், கூட்டத்தோடு கூட்டமாக இருந்து, படைவீரர்களைத் தாக்கி விரட்டி, மக்களைக் காக்க வேண்டும் என்றும் இரணியவர்மர் உத்தரவிட்டிருந்தார்.

போராட்டக் குழுவினர், அன்று பெரிய போராட்டத்தை எதிர்பார்த்தனர். ராஜன் நம்பூதிரி, தர்மாசன மண்டபத்தில் குற்றச்சாட்டை அறிவிக்கும்போது, அவனைப் படைவீரர்கள் தாக்கலாம் என்றும், மக்கள் கோபம் கொண்டு கலகம் விளைவிக்கலாம் என்றும் எதிர்பார்த்துத் தான் இரணியவர்மரின் படைவீரர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். அவ்விதம் ஏதாவது கலகம் விளையுமேயானால் அரசு படைவீரர்களில் பெரும்பாலானோரைத் தாக்கி வீழ்த்திவிட்டால், அரசுக்கு நடுக்கம் ஏற்பட்டுவிடும்.

அந்தக் குழப்பத்தில், அரசு அதிகாரிகளையும், அச்சுதபட்டரையும் கூடத் தாக்கி வீழ்த்திவிட இரணியவர்மரின் வீரர்கள் தயாராயிருந்தனர்.

ராஜன் நம்பூதிரி, தர்மாசனத்துக்குச் செல்லப் புறப்பட்டபோது, உதயசந்திரனும் உடன் வருவதாகக் கூறினான். ஆனால், தரணிகொண்ட போசர் தடுத்துவிட்டார். அவன் வெளியே செல்வது ஆபத்து என்பதால், அவனை பரமாச்சாரியின் ஆசிரமத்திலேயே இருக்கும்படி கூறினார்.

ராஜன் நம்பூதிரி சென்று இரண்டு நாழிகைக்குப் பிறகு, உதயசந்திரன் ஆசிரமத்தின் மாடியிலிருந்தவாறு தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆசிரமத்தின் மத்திய கட்டடத்தில் ருத்ர பரமாச்சாரி சீடர்களுக்குத் தியானப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். ஆசிரமத்துச் சீடர்கள், வெளி உலகின் பாதிப்பு ஏதுமின்றித் தியானப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு உதயசந்திரன் வியப்படைந்தான்.

ஓ...! எவ்வளவு அமைதியாக, ஆனந்தமாக இருக்கிறார்கள்! உலகம் முழுவதுமே ஓர் ஆசிரமமாக மாறினால் பிரச்சினைகள் ஏது? துக்கம் ஏது? உலகத் துன்பங்கள் எதையுமே அண்டவிடாது, யோகம் பயின்ற சீடர்களைக் கண்டு பொறாமை கொண்டான்.

ஆசிரமத்துக்குள்ளிருக்கும் ஆனந்தமயமான உணர்வுகள் ஏன் வெளி உலகில் இல்லை? ஓ.... உலகத்தை எப்படியெல்லாம் பேராசை கொண்ட மூடர்கள் சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஆசிரமத்தில், ஒரு பகுதியில் எல்லாரும் இன்ப உணர்வுகளில் திளைத்திருக்கும்போது, அதே ஆசிரமத்தின் மற்றொரு பகுதியில் தான் மட்டும் துன்பத்தைச் சுமந்து

கொண்டிருக்கும் விதியை எண்ணிக் குமைந்தான் உதய சந்திரன்.

ஆசிரமத்தின் கட்டடத்துக்குள் பதுங்கிக் கிடந்தது அவனுக்கு மனச் சங்கடத்தை உண்டு பண்ணியது. சிவனடியாராகச் சுற்றித் திரிந்த போதிருந்த உற்சாகம் கூட அப்போது அவனிடம் இல்லை. லீனாவை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது.

அப்போது அவனுடைய பார்வை தோட்டத்துக்குள் வேகமாக வந்த இரதத்தின் மீது விழுந்தது. திடுக்கிட்டு எழுந்து மாடி விளிம்பில் போய் நின்று பார்த்தான். டெங்லீயின் இரதம் அது. பரபரப்படைந்தவனாய், கீழே இறங்கி ஓடினான். உதயசந்திரனைக் கண்டதும் டெங்லீ, அவனைக் கட்டிப் பிடித்தவாறு ஓவென்று கதறினார். அவருடைய அழுகைக் குரல் கேட்டு ஆசிரமத்தினுள்ளிருந்த தரணி கொண்ட போசரும், இரணியவர்மரும் வெளியே ஓடி வந்தனர்.

"லீனாவைப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள்" என்று கதறினார், டெங்லீ.

"ஆ...எங்கே? எதற்காக?"– உதயசந்திரன் பதறியபடிக் கேட்டான்.

"உன்னைத் தேடி வந்தார்கள். லீனாவிடம் உன்னைப் பற்றி விசாரித்தார்கள். நீ இருக்கும் இடம் தெரியாது என்று சொன்னோம். அவர்கள் நம்பவில்லை. அவளை விசாரிப்பதற்காக இழுத்துக் கொண்டு போனார்கள். நான் குறுக்கே போய் தடுத்தேன். என்னை கீழே தள்ளிவிட்டுக் குதிரையில் சென்றுவிட்டார்கள்."

"எங்கே கொண்டு போயிருக்கிறார்கள்?"

"தெரியவில்லையே. என்னை கீழே தள்ளியவன், மண்டபத்துக்குப் போங்கள் என்று கூறியது கேட்டது" என்றார், டெங்லீ.

"அகழியை அடுத்த காளிகோயில் மண்டபமாகத் தானிருக்கும். அங்குதான் சித்திரமாயன் ஒற்றர்கள் இப்போது செயல்படுகிறார்கள்" என்றார், இரணியவர்மர்.

இதைக் கேட்டதும் உதயசந்திரன் வாசலை நோக்கிப் பாய்ந்தான். அவனைத் தொடர்ந்து இரணியவர்மரும், தரணிகொண்டபோசரும் விரைந்தனர்.

"நீ அங்கே போவது ஆபத்து" என்றார், தரணி கொண்ட போசர்.

அவர் சொன்னது உதயசந்திரனின் மனத்தில் உறைக்க வில்லை. வாசலில் நின்று கொண்டிருந்த பல குதிரைகளில் ஒரு குதிரையை மரத்திலிருந்து அவிழ்த்து, அதன் மீது பாய்ந்து ஏறினான். யாரையும் எதிர்பாராமல் குதிரையில் விரைந்தான்.

இரணியவர்மர், ஆறு வீரர்களை அவன் பின்னே துணைக்கு அனுப்பிவைத்தார். அந்த வீரர்கள், உதய சந்திரனைத் தொடர்ந்து குதிரைகளில் விரைந்தனர்.

டெங்லீ, விம்மி அழுதுகொண்டிருந்தார். அவரை அணைத்தவாறு தரணிகொண்டபோசர், ஆசிரமத்துக்குள் அழைத்துச் சென்றார்.

"இவன் பத்திரமாக இங்கே இருக்கிறான். பயப்பட வேண்டாம் என்று காலையில் உங்கள் தூதன் வந்து சொன்னபோது, அவள் எவ்வளவு உற்சாகமாக இருந்தாள். ஒரு நாழிகைகூட அவளுடைய உற்சாகம் நீடிக்கவில்லையே, இழுத்துக் கொண்டு போய்விட்டார்களே. என்ன துன்பப்படுகிறாளோ?" என்று டெங்லீ, அழுதார்.

"பயப்படாதீர்கள். உதயசந்திரனோடு நம் வீரர்களும் போயிருக்கிறார்கள். அவளை மீட்டுக் கொண்டு வந்து விடுவார்கள். தைரியமாயிருங்கள்" என்று தேற்றினார், இரணியவர்மர்.

உதயசந்திரனும், வீரர்களும் காளி கோயில் மண்டபத்தை அடைந்தபோது, அங்கிருந்த நாலைந்து வீரர்கள் இவர்களைக் கண்டதும் மண்டபத்தின் பின்புறம் வழியாகக் குதிரைகளில் ஏறித் தப்பி மறைந்துவிட்டனர்.

உதயசந்திரன் பதைபதைப்புடன் மண்டபத்துக்குள் ஓடினான். உள்ளே யாருமில்லை. கருகிய முடியின் நாற்றம் வந்துகொண்டிருந்தது. மண்டபத்தின் ஒவ்வொரு பகுதியாக ஓடிச் சென்று பார்த்தான். கீழ்ப்பகுதிகளில் யாருமில்லை. மேல்மாடத்துக்குச் செல்லும் படிகளில் விரைந்து ஏறிய போது, கருகிய முடியின் நாற்றம் அதிகரித்தது. மேல்மாடத்தில், ஓர் அறைக்குள் அவன் நுழைந்த போது, ஆவென்று அலறினான். அவனுடைய அலறலைக் கேட்ட வீரர்கள், மாடிக்கு ஓடினார்கள்.

அந்த அறையில், லீனா, இரு கைகளும் கட்டப்பட்டு ஒரு கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தாள். உடலில் அசைவில்லை. தலை, தொங்கிக் கிடந்தது. முகமெல்லாம் தீக்காயங்கள், தலைமுடி எரிந்து, கருகியிருந்தது. உதயசந்திரனும், உடன் வந்த வீரர்களும் கட்டுகளை அவிழ்த்து அவளைக் கீழே இறக்கினார்கள். அவளை மடியில் போட்டுக்கொண்டு உதயசந்திரன் விம்மியழுதான்.

"லீனா, ஒரு முறை என்னைப் பாரேன்... நான் வந்து விட்டேன். லீனா, ஐயோ, என்னைப் பார்க்கவே மாட்டாயா?" அவளுடைய முகத்தோடு முகம் வைத்துக் கதறினான். அவளுடைய உடலில் அசைவில்லை. மூச்சு மட்டும் மிக மெல்லியதாக வந்து கொண்டிருந்தது. உடல் முழுவதும் தீக்காயங்களிருந்தன.

"பாவிகள், உடல் முழுவதையும் சுட்டுப் புண்ணாக்கி விட்டார்களே, எப்படித் துடித்தாயோ" என்று அழுதான்.

அவளுடைய உடல் இலேசாக அசைந்தது. "லீனா,

லீனா... நானிருக்கிறேன் பார். இதோ, என்னைப் பாரேன்" அவளுடைய முகத்தை வருடினான்.

லீனாவின் கண்கள் மெல்லத் திறந்தன. பரக்கப் பரக்க விழித்தாள். கடைசியில் பார்வை அவன் மீது நிலைத்தது. உதடுகள் விரிந்தன. ஏதோ பேச முயன்றாள். தினறினாள். அவன் கையை மெல்ல வருடினாள். அவள் முகத்தில் திடீரென்று மலர்ச்சி தோன்றியது. அவனைப் பார்த்து, புன்னகைப்பது போல் இருந்தது.

"உங்களைப் பற்றி விசாரித்தார்கள். சித்திரவதைப் பண்ணினார்கள்..." என்று முனகினாள். மேற்கொண்டு பேச முடியவில்லை. உடல், ஒரு முறை அதிர்ந்தது. பிறகு, அடங்கிவிட்டது. அவனை விழித்துப் பார்த்தபடியே உயிரை விட்டு விட்டாள்.

உதயசந்திரன் அழவில்லை. அவளையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டான். அவளுடைய கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டான்.

"இதற்கு நான் பதிவாங்குகிறேன் லீனா. உன்னை இக்கதிக்கு ஆளாக்கிய அந்த நச்சுப் பாம்பு சித்திரமாயனின் தலையை வெட்டி, உன்னுடைய மருக்கொழுந்துச் செடிக்கு உரமாகப் போடுகிறேன்" என்று சபதம் செய்தான்.

அவனுடைய சபதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த இரணியவர்மரின் வீரர்கள், அவனுடைய கண்களில் தெரிந்த உக்கிரத்தைக் கண்டு நடுங்கினர்.

லீனாவைத் தூக்கித் தோளில் சாய்த்துக்கொண்டு, உதயசந்திரன் எழுந்தான். அவனுக்கு உதவி செய்ய வீரர்கள் விரைந்தனர். உதயசந்திரன், அவர்களைத் தடுத்துவிட்டு, லீனாவைத் தோளில் சுமந்தவாறே குதிரையில் ஏறினான், தர்மாசன மண்டபத்தை நோக்கி விரைந்து செலுத்தினான்.

* * *

தர்மாசன மண்டபத்தைச் சுற்றி மக்கள் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. ராஜன் நம்பூதிரியின் குற்றச் சாட்டுகளுக்கு மகாராணி தீர்ப்புக் கூறுவாளா, மாட்டாளா, என்பதைப் பற்றிப் பலர் விவாதித்துக் கொண்டிருந்தனர். குற்றச்சாட்டுகள் உண்மையென்று நிருபணமாகிவிட்டால், பிறகு என்ன நடக்கும் என்பதைப் பற்றி பலர், பலவிதமாகச் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில், மண்டபத்தை நோக்கி, ஒரு குதிரை விரைந்து வந்ததைக் கண்டு கூட்டத்தினர் திகைத்தனர். குதிரையின் மீதிருந்த உதயசந்திரன், தோளில் லீனாவைச் சுமந்திருந்ததைக் கண்ட ராஜன் நம்பூதிரி, பதற்றத்துடன் குதிரையை நோக்கி ஓடினான்.

குதிரையிலிருந்து இறங்கிய உதயசந்திரன், லீனாவின் உயிரற்ற உடலை, தோளில் சுமந்தவாறு கூட்டத்தினிடையே நடந்து சென்றான். கூட்டம் விலகி வழிவிட்டது. தர்மாசன மண்டபத்தின் மீது ஏறி, லீனாவின் உடலை மெல்லக் கீழே இறக்கித் தரையில் கிடத்தினான். மக்கள் பதற்றத்துடன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தர்மாசன மண்டபத்தின் முன்பு லீனாவைக் கிடத்திவிட்டு நிமிர்ந்த உதயசந்திரன், கூட்டத்தை வெறிக்கப் பார்த்தான். அவனருகே ஓடிவந்த ராஜன் நம்பூதிரி, லீனாவின் உடலைப் பார்த்து விக்கித்து நின்றுவிட்டான். அந்த இடத்துக்கு விரைந்து வந்த தேவசோமாவும், களுபந்தாவும் பேச்சின்றி சிலையாக நின்றனர். கூட்டம், விவரம் புரியாமல் திகைத்தபடி, மண்டபத்தின் முன் மேடையில் நின்று கொண்டிருந்த உதயசந்திரனையும், அவன் காலடியில் தீப்புண்களால் கருகியிருந்த லீனாவின் உடலையும் மாறி, மாறிப் பார்த்துக் கொண்டிருந்தது.

கூட்டத்தைப் பார்த்து திடீரென்று உதயசந்திரன், ஆவேசத்தோடு பேசினான்:

"காஞ்சி மக்களே, ஒரு அடலைப் பெண்ணுக்கு நேர்ந்

தக் கதியைப் பாருங்கள். என்னைக் கைது செய்ய முடிய வில்லை என்பதற்காக இவளைச் சித்ரவதை செய்து கொன்று விட்டான், இந்நாட்டு இளவரசன். இரத்த வெறி கொண்ட சித்திரமாயன் ஆட்சியில், ஒரு பிரஜையாக வாழ் வதற்கு உங்களுக்கு வெட்கமாயில்லை? இதே போல், உங்கள் வீட்டுப் பெண்களுக்கும் கொடுமை நேர வெகு நேரமாகாது. இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? சீன நாட்டிலிருந்து மணமுள்ள மருக்கொழுந்துச் செடிகளை, பல்லவ நாட்டுக்குக் கொண்டு வந்து, மேம்பட வாழலாம் என்று நம்பி வந்தவளுக்கு, இந்தப் பல்லவ இளவரசன் இழைத்திருக்கும் கொடுமையைப் பாருங்கள். இவனையா இந்நாட்டின் ராஜாவாக ஏற்றுக் கொள்ளப் போகிறீர்கள்? இவன் ஒரு கொடிய ராஜநாகம். பாம்பாவது சத்தியத்திற்குக் கட்டுப்படும். பாம்பை விடக் கொடிய ராட்சசனுக்குக் கீழா நீங்கள் வாழப் போகிறீர்கள்? உங்கள் தன்மான உணர்வு செத்தொழிந்து விட்டதா? சொல்லுங்கள். இன்னுமா நீங்கள் சித்திரமாயனின் ஆட்சியை விரும்புகிறீர்கள்? இந்தக் கயவனா உங்களுக்கு சக்கரவர்த்தி...? மகேந்திரவர்மரும், நரசிம்மவர்மரும், ராச சிம்ம பல்லவரும் ஏறிய அரியா சனத்தில் இந்த ராட்சசனை ஏற்றவா போகிறீர்கள்?"

கூட்டம் கொந்தளித்தது. "இல்லை... இல்லை... சித்திர மாயன் ஆளக்கூடாது..." என்று கூட்டம் ஆர்ப்பரித்தது.

உதயசந்திரன், "இப்போதே கிளம்புங்கள், தன்மான முள்ளவர்கள், கொதித்தெழுங்கள். வாழ ஆசையுள்ள வர்கள், புறப்படுங்கள், சுதந்திரத்தை விரும்புபவர்கள், போர்க்கோலம் பூணுங்கள். சித்திரமாயனை இந்த நாட்டை விட்டு ஓட்டுங்கள். இந்தப் பெண்ணைப் போல் நீங்களும் செத்து விழுவதற்குள், சித்திரமாயனைப் பழி வாங்குங்கள். உங்கள் வீட்டுப் பெண்களின் மானத்தைக் காக்க, வாளேந் துங்கள். உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை, சுதந் திரத்துக்காகப் போராடுங்கள்" என்றான்.

அவனிடமிருந்து சொற்கள், உணர்ச்சி அலைகளாகப் பரவி, கூட்டம் முழுவதையும் ஆட்கொண்டு விட்டன. கூட்டத்திலிருந்து தேவசோமா, "புறப்படுங்கள், அரண்மனைக்கு. இதற்கு நீதி கேட்போம். பழி வாங்குவோம்" என்று கூவிக்கொண்டே, முன்னால் நடந்தான். மக்கள் கூட்டம், அவனைத் தொடர்ந்து செல்லத் தொடங்கியது. களுபந்தாவும், அவனுடன் சேர்ந்து கொண்டான். மக்கள் கூட்டம், வெறிக் கூச்சலிட்டவாறு, அரண்மனையை நோக்கிப் பாய்ந்தது.

லீனாவை நம்பூதிரியிடம் ஒப்படைத்து விட்டு உதய சந்திரன், கூட்டத்தோடு கலந்து ஓடினான். பழி உணர்ச்சி அவனைப் பூரணமாக ஆட்கொண்டிருந்தது.

பயங்கரப் புயல் நகரத்தைத் தாக்குவது போலிருந்தது, மக்கள் கூட்டத்தின் பாய்ச்சல். மக்கள் பெருவெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருந்தார்கள். கைகளில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கூச்சலிட்டபடி ஓடிய கூட்டத்தினிடையே, இரணியவர்மரின் படை வீரர்களும் சாதாரண உடைகளில் போய்க் கொண்டிருந்தார்கள்.

கூட்டம் தேரோடும் வீதியைக் கடந்து, படை வீதியை நெருங்கியதும் திடீரென்று கூட்டத்தின் ஒரு பகுதி திசை திரும்பி, சிறைச்சாலையை நோக்கிப் பாயத் தொடங்கியது. கூட்டத்தின் முன்னே சென்று கொண்டிருந்தவர்கள் "சிறைச்சாலையைத் தகர்ப்போம்" என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.

கோட்டையைப்போல் அமைந்திருந்த சிறைச்சாலையின் வாயிற்கதவு, அடைக்கப்பட்டிருந்தது. வெளியே சில வீரர்கள் காவலிருந்தனர். பெருங்கூட்டம் இரைச்சலிட்டவாறு சிறைச்சாலையை நெருங்கியதும், காவல் வீரர்கள் திகைப்புற்றனர். சிறைச்சாலையின் வாயிலில் அகழிக்குக்

குறுக்கே இருந்த மரப்பாலத்தை உயரே தூக்க முயன்றனர். ஆனால், அதற்குள் கூட்டம் பாலத்தில் புகுந்துவிட்டது, பாலம் கிடுகிடுவென ஆடியது. பாலத்தைக் கடந்து சென்றவர்கள், வாசலில் நின்ற காவலர்களைத் தாக்கி அகழியில் எறிந்தனர். பிறகு சிறைச்சாலையின் கதவை உடைக்கத் தொடங்கினர்.

அந்தச் சமயம் அரசின் படை வீரர்கள் அணிவகுத்து அங்கு வரவே மக்கள் கூட்டத்தில் குழப்பம் தோன்றத் தொடங்கியது. தேவசோமா, உரத்த குரலில், "படையை பாலத்தில் விடாதீர்கள். மறியுங்கள்" என்று கூவினான்.

கூட்டம் இரைந்து கொண்டு படையை எதிர்த்தது. சிறைச்சாலையின் வாசலில் இரத்தம், சேறாகப் பெருகியது. அகழி நீர், செந்நீராக மாறியது. காயம்பட்டு வீழ்ந்த மக்களை இரண்டு வீதிகளுக்கு அப்பாலிருந்த ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்திலும், பௌத்த விஹாரத்திலும் கொண்டு சேர்த்தனர்.

இரத்தம் சிந்தச் சிந்த, மக்களின் வெறி ஏறிக்கொண்டே இருந்தது. கூட்டத்தினிடையே இருந்த இரணியவர்மரின் வீரர்களும் தாக்கியதால் அரசுப் படைவீரர்கள் பலர் வெட்டுண்டு சாய்ந்தனர். இரண்டு நாழிகைக்குள் அரசுப் படை சிதறி ஓடத் துவங்கியது. இதற்குள் சிறைக்கதவை உடைத்து விட்டார்கள். கூட்டம் சிறைச் சாலைக்குள் சாடியது. உள் முற்றத்திலிருந்து எதிர்த்த காவலர்களை கூட்டம் பிய்த்து எறிந்து விட்டது.

சிறைச்சாலையினுள் புகுந்த கூட்டம் ஒவ்வொரு பகுதியாக நுழைந்து, கதவுகளை உடைத்து, உள்ளே அடைபட்டிருந்தவர்களை வெளியேற்றத் தொடங்கியது. உள்ளே இருந்த கைதிகள் விபரம் புரியாமல் திகைத்தனர். கைதிகளை விலங்குகளுடனேயே சிறைச்சாலையின் மேல்மாடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

சிறைச்சாலையின் மற்றொரு பகுதியில் நுழைந்தவர்கள் திடுக்கிட்டனர். ஓர் அறையில் சோர்ந்துபோய் அமர்ந்திருந்தவரைக் கண்டு பதை பதைத்தனர்.

ஓ... சமஸ்கிருத கடிகைத் தலைவர், ஜேஷ்டபதி சோமயாஜி... மகா ஞானிக்குக் கூட இந்த நிலையா...

கதவை உடைத்து, உள்ளே புகுந்து கடிகைத் தலைவரை மிக்க மரியாதையுடன் வெளியே அழைத்து வந்தனர். அந்தப் பகுதியில் இன்னும் பல அறைகளில் பல துறைகளில் தலைவர்களாகப் பணியாற்றிவர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். ஓர் அறையில் நான்காவது மந்திரியாகப் பணிபுரிந்த விஷ்ணுசர்மன் இருந்தார். அவர்கள் எல்லாரையும் மக்கள் விடுவித்து வெளியே அழைத்து சென்றனர்.

குற்றம் புரிந்து சிறைப்பட்டிருந்த கைதிகளை மேல் தளத்துக்கு அழைத்துச் சென்ற கூட்டம் கைதிகளிடம் அவர்கள் செய்த குற்றங்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டது. பிறகு, ஒவ்வொரு கைதியையும் மேல் தளத்திலிருந்து அகழியில் தள்ளியது. ஒவ்வொரு கைதியும் கைகளில் விலங்கோடு அகழியில் வீழ்ந்ததை வெளியே இருந்து வேடிக்கை பார்த்த கூட்டம், ஆரவாரம் செய்தது.

பெண்ணைக் கற்பழித்துக் கொன்ற கொடுமைக்காக உதவியாக இருந்த நாகப்பனை கீழே அகழியுள் தள்ளிய போது, "பெண்ணை அகழியிலே தூக்கிப் போட்டாயே பாவி, இப்போது நீ விழு அகழியிலே" என்று கூறித் தள்ளினர்.

அகழியில் முதலைகள், இரைகளைப் பாய்ந்து கவ்வியதைப் பார்த்துக் கூட்டம் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தது.

* * *

இதே நேரத்தில், அரண்மனையில் மகாராணி பிரேமவர்த்தினியும் சித்திரமாயனும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என்னை இக்கட்டான நிலையில் கொண்டுவந்து வைத்துவிட்டாயே. தர்மாசனத் தீர்ப்பை நான் எப்படி வழங்குவது? குற்றச்சாட்டுகளைப்பற்றி எப்படித்தான் நான் விசாரிப்பது?" என்று கேட்டாள் மகாராணி. அவளுடைய குரலில் தொனித்த வெறுப்பையும், கோபத்தையும் சித்திரமாயன் கவனித்தான்.

"நீங்கள் தர்மாசன மண்டபத்துக்குப் போனதே தவறு. தர்மாசனத்தில் இதுவரை சக்ரவர்த்திகள் தாமிருந்து தீர்ப்பு வழங்கியிருக்கிறார்களே தவிர, பெண்கள் அமர்ந்ததில்லை. இதைச் சொல்லியே நீங்கள் தீர்ப்புக்கூற மறுத்துவிடலாம்" என்றான்.

"இதை முதலிலேயே மந்திரி அச்சுதபட்டர் சொல்லியிருந்தால், மண்டபத்துக்கே போயிருந்திருக்கமாட்டேன்"

"அச்சுதபட்டர் ஒரு முட்டாள்" என்றான், சித்திரமாயன் கோபத்தோடு.

"நான் தர்மாசனத்துக்காக நீதி வழங்காவிட்டாலும் சாட்டப்பட்ட குற்றங்களுக்கு நீ, பதில் சொல்லியாக வேண்டுமே" என்றாள், மகாராணி.

சித்திரமாயன் சிரித்தான். "சின்னம்மா, எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா, மக்களின் குற்றச்சாட்டுக்கு ஒரு சக்கரவர்த்தி பதில் சொன்னாரென்று?" என்று கேட்டான்.

"மக்கள் இதுவரை குற்றம் சாட்டத் துணியவில்லை. இப்போது துணிந்து குற்றம் சாட்டும்போது..."

"குற்றம் சாட்டிய நாக்கை அறுத்தெறிய வேண்டும்" என்று கோபத்தில் இரைந்து கத்திய சித்திரமாயன், வாசலில்

நின்ற காவலாளியிடம் அடுத்த அறையில் காத்திருக்கும் அச்சுதபட்டரை அழைத்து வரும்படி உத்தரவிட்டான். அச்சுதபட்டர், பயந்தவாறு உள்ளே வந்தார்.

"தர்மாசன மண்டபத்தில் குற்றம் சாட்டினானே அவனை இந்த இரவுக்குள் இங்கே கொண்டுவர ஏற்பாடு செய்யுங்கள்" என்றான், சித்திரமாயன்.

"அவன் இரணியவர்மரின் பாதுகாப்பில் இருக்கிறான்" என்றார், அச்சுதபட்டர்.

"அப்படியானால் இரணியவர்மரையும் சேர்த்தே இங்கே பிடித்து வாருங்கள்" என்று இரைந்தான்.

"போர்க்களம் போயிருந்த நம்முடைய படை, விரைவில் வந்து சேர்ந்து விட்டால் நாம் நினைப்பது எதையும் சாதித்துவிடலாம். இப்போது நம்மிடமிருக்கும் சொற்ப வீரர்களைக் கொண்டு இரணியவர்மரை எதிர்ப்பது நல்லதல்ல" என்றார், அச்சுதபட்டர்.

சித்திரமாயன் கோபத்தில் பொறுமினான். "இரணியவர்மரை ராஜத் துரோகக் குற்றத்துக்கு கழுவேற்ற வேண்டும், படை வந்து சேர இன்னும் எத்தனை நாட்கள் ஆகும்?" – எரிச்சலோடு கேட்டான்:

"இன்றைக்கு ஐந்தாம் நாள் வந்து சேர்ந்துவிடும்."

"தர்மாசனத்தில் அமர்ந்து சக்ரவர்த்திகள் தாம் நீதி வழங்குவது சம்பிரதாயம். பெண்கள், தர்மாசனத்தில் ஏறியதில்லையே" என்றான், சித்திரமாயன்.

"அரியணையில் யார் இருக்கிறார்களோ அவர்கள் தர்மாசனத்தில் அமரவேண்டும்" என்றார், அச்சுதபட்டர்.

"இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு தர்மாசனத்தின் தீர்ப்புக் கூறப்படாவிட்டால்கூட, சக்ரவர்த்தியாக முடிசூடப் போகும் நீ, மக்கள் முன்னால் ஒரு குற்றவாளியாக காட்சி

அளிப்பது நல்லதல்லவே. ஆராய்ச்சி மணிக்குச் செவி சாய்க்க வேண்டுமே" என்றாள், மகாராணி.

"இந்த மக்கள் எல்லாவற்றையும் விரைவில் மறந்து விடுவார்கள். என்னுடைய முடிசூட்டு விழாவின்போது, சில வரிகளைக் குறைப்பதாக அறிவித்தாலே போதும், மக்கள் திருப்தியடைந்து விடுவார்கள். மக்கள் வெறும் சோற்றுப் பிண்டங்கள்தாம். சோறு போட்டாலே போதும்."

சித்திரமாயன் சொல்லி வாய் மூடுமுன், ஊர்க்காவல் படைத் தலைவர் வந்திருப்பதாக, ஒரு காவலாளி வந்து அறிவித்தான். அவரை உள்ளே அனுப்பும்படி உத்தர விட்டாள், மகாராணி.

ஊர்க்காவல் படைத் தலைவர் பரபரப்புடன் உள்ளே வந்தார். அவருடைய கண்களில் பீதி படர்ந்திருந்தது. அறை யினுள் நுழைந்த போதே பதற்றத்துடன், "சிறைச்சாலையை தாக்குகிறார்கள். மக்கள் கூட்டம், கட்டுக்கடங்கவில்லை" என்றார்.

இதைக் கேட்டதும் சித்திரமாயன் சீறியெழுந்தான். பளீரென்று, காவல் படைத் தலைவரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். "ஒரு படைக்குத் தலைவராயிருக்க வெட்க மாயில்லை?" என்று இரைந்து கத்தினான்.

காவல் படைத் தலைவர், பதறி நடுங்கியபடி நின்றார். "இன்னும் ஏன் இங்கே நிற்கிறீர்? காஞ்சி நகர் மக்கள் அனை வருமே அழிந்தாலும் கவலை இல்லை. அரசுக்கு எதிராக ஒரு துரும்பு கூட அசையக்கூடாது" என்றான், சித்திர மாயன். காவல்படைத் தலைவர், தலை குனிந்தவாறு வெளி யேறினார்.

"மக்கள், சிறைச்சாலையைத் தகர்க்கிறார்களாம், சொல்ல வந்துவிட்டார்" என்று உறுமினான், சித்திரமாயன்.

எங்கோ கடல் அலைகளின் ஓசை கேட்பது போலி ருந்தது. பிரேமவர்த்தினி உற்றுக் கேட்டாள். சமுத்திரம் போல் அலைமோதி வரும் மக்கள் கூட்டத்தின் ஒலி, அரண்மனைக் கோட்டையையும் தாண்டி, அரண் மனைக்குள் புகுந்து அவளை நடுங்க வைத்தது.

31. சித்திரமாயன் தப்பினான்

சிறைச்சாலையைத் தகர்த்து, அரசுப்படையை விரட் டிய மக்களுக்கு உற்சாகம் பெருகியது. தங்களால் படைவீரர் களையே விரட்டியடிக்க முடிந்தது என்று உணர்ந்தபோது, மக்கள் கூட்டம், தன்னுடைய சக்தியைப்புரிந்துகொண்டது. மக்களின் ஒன்று திரண்ட சக்தியின் எதிரே, மன்னன் ஒரு துரும்பு என்ற உண்மை புலப்பட்டபோது, அதுவே வெறி யாக மாறிவிட்டது. கூட்டத்தில் யாருக்குமே சிந்திக்கும் திறனில்லை, பைத்தியக்காரத்தனமான இரத்தவெறி, கூட்டத்தைத் தலைமை தாங்கிச் சென்றது.

அரசவீதியை அடைந்தபோது, மக்கள் கூட்டம், காட் டாற்று வெள்ளம் போல் பாய்ந்து கொண்டிருந்தது. அதில் ஒழுங்கில்லை, கட்டுப்பாடில்லை. என்ன செய்கிறோம் என்ற உணர்வும் இல்லை. தலைவனில்லை. ஒவ்வொரு வனும் தலைவனாயிருந்தான்.

உதயசந்திரன் தலைமையில் ஏற்கெனவே அரண்ம னையை நோக்கிச் சென்ற மக்கள், அரண்மனையை நெருங்கி விட்டார்கள் என்ற செய்தி, அரண்மனைக்கு எட்டியபோது, சித்திரமாயனின் தைரியம் மறைந்துவிட்டது. கோட்டைத் தளபதியையும், ஊர்க்காவல் படைத் தலைவரையும் மக்களைத் தடுத்து நிறுத்தும்படி ஏவினான். அரசுப்படை, அரண்மனைக்கு முன் அணிவகுத்து நின்றது.

அரண்மனைக்குள் மகாராணியின் அறையில் ஆலோ

சனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. எல்லாருடைய முகங்களிலும் கவலை குடிகொண்டிருந்தது.

லீனாவின் உடலை தர்மாசன மண்டபத்தில் கிடத்தி உதயசந்திரன் பேசிய விவரத்தை ஒற்றன் கூறியதைக் கேட்டபோது சித்திரமாயனின் முகம் பீதியினால் வெளுத்து விட்டது.

"எல்லாம் உன்னால் வந்த வினைதான்" என்று பிரேம வர்த்தினி கோபத்துடன் சித்திரமாயனை நோக்கிக் கூறினாள். அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. சித்திரமாயன் அப்போது பதில் சொல்லும் நிலையில் இல்லை.

அருகிலிருந்த மேகலா, "இப்போது என்ன வந்து விட்டது. ஒரு கோழையைப் போல் பதறுகிறீர்கள்? கையாலாகாத மக்கள் கூட்டத்தைக் கண்டு இவ்வளவு பயமா?" என்றாள் அலட்சியமாக.

அவளை நோக்கிக் கோபமாகத் திரும்பிய மகாராணி, "உன்னிடம் ஆலோசனை கேட்கவில்லை. பேசாமல் வாயை மூடிக்கொண்டிரு" என்றாள்.

"ஏன்? பல்லவ நாட்டின் நிர்வாகத்தில் எனக்கும் அக்கறை உண்டு" என்றாள் மேகலா கோபத்துடன்.

"அக்கறை கொள்ளும் உரிமை பல்லவ குலத்தவருக்குத்தான் உண்டு" என்றாள் மகாராணி.

"நான் இளவரசரின் மனைவி."

"உன்னை இந்த அரண்மனைக்குள் நுழையவிட்டதே பெரிய தவறு."

"நான்தான் பல்லவ நாட்டின் வருங்கால மகாராணி என்பதை மறந்துவிட வேண்டாம்" என்று வெடித்தாள் மேகலா.

"அருகதை இல்லாதவளுக்கு அந்தப் பதவி கிட்டுகிறது. உன்னுடைய சிறுமதியால்தான் இந்நாட்டின் ஆட்சியில் தலையிட்டு வந்தாய். உன்னால்தான் இப்போது பெருங் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. உன்னால்தான் கடிகையில் பலர் இறக்க நேரிட்டது. எல்லாம் உன்னால் வந்தவினை" என்று இரைந்து கத்தினாள், பிரேமவர்த்தினி.

மகாராணியின் கோபத்தைக் கண்டு மேகலா நடுங்கி விட்டாள். கண்கள் கலங்கின. கோபத்துடன் திரும்பி சித்திர மாயனைப் பார்த்தாள். அவன் தலை குனிந்தவாறு ஏதோ சிந்தனையிலிருந்தான். அங்கிருக்கப் பிடிக்காதவளாக எழுந்து, கோபத்துடன் விரைந்து வெளியேறினாள்.

மகாராணியின் கோபம் சித்திரமாயன் மீது திரும்பியது.

"சக்கரவர்த்தியாக முடிசூட ஆசை இருக்கிறதே தவிர, அதற்கான அருகதை உனக்கு இருக்கிறதா? இன்று மக்களையே பகைத்துக்கொண்டு பெரிய ஆபத்தை உண்டாக்கி விட்டாயே" என்றாள், மகாராணி கோபத்துடன்.

அவள் அவ்விதம் பேசி அவன் கேட்டதில்லை. அப்போது அவள் அவனைக் குற்றம் சாட்டியபோது, பதில் கூற இயலாமல் நின்றான். உள்ளூர எழுந்த கோபம், கையாலாகாத உணர்வாக மெலிந்து தேய்ந்து கொண்டிருந்தது. அவனுடைய முகம் பீதியினால் வெளுத்துவிட்டது.

மகாராணியின் உடல், பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தது. ஓ...! பேரழகியான பிரேமவர்த்தினி, அதற்குள் எப்படி உருமாறிவிட்டாள்! களை இழந்து, முகம் வெளுத்து, மகாராணி என்னும் ஸ்தானத்தின் கம்பீரம் மறைந்து, உள்ளத்தில் நிரம்பியிருந்த கர்வம் பங்கப்பட்டு, ஒரு பாமரப் பெண்ணைப் போல் பரிதாபமாக நின்றாள்.

எல்லாவற்றுக்கும் சித்திரமாயன்தான் காரணம் என்பதை நினைத்தபோது, அவன் மீது மிகுந்த கோபம் எழுந்தது.

பாவி, நீயும் கெட்டு, இந்த நாட்டையும் கெடுத்து, என்னையும் வாழவிடாமல் செய்துவிட்டாயே... அவள் மனம் பொறுமியது.

தாளமுடியாத வெறுப்பும், கோபமும் கொண்டவளாய் சித்திரமாயனைப் பார்த்தாள். அவன் நிலை குலைந்து செய்வதறியாது பரிதாபமாக நின்று கொண்டிருந்தான்.

அப்போது ஒரு காவல் வீரன் பரபரப்புடன் வந்து, மக்கள் கூட்டம் அரண்மனையை நெருங்கிவிட்டதையும், படை வீரர்களுக்கும், மக்களுக்கும் இடையே பலத்த போராட்டம், அரண்மனையின் அகழிக்கு வெளியே நடைபெறுவதாகவும் அறிவித்தான்.

உடனே அரண்மனைக்குள்ளிருந்த தன்னுடைய மெய்க்காவல் வீரர்களை அழைத்து வர உத்தரவிட்டான், சித்திரமாயன்.

* * *

உதயசந்திரன், அரண்மனையை நெருங்கியபோது, அரண்மனையை படை வீரர்கள் அணிவகுத்துக் காத்து நின்றனர். அரண்மனைக் கோட்டையைச் சுற்றி பாதுகாவலாக அமைந்திருந்த அகழியின் குறுக்கேயுள்ள பாலம், உயரே தூக்கப்பட்டிருந்தது.

மக்கள் கூட்டம், அகழியை நெருங்கியதுமே, அகழிக்கு வெளியே அணிவகுத்து நின்ற படைவீரர்கள், கூட்டத்தின் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கினர். கரை புரண்டு சீறிப் பாயும் வெள்ளம், எதிர்ப்பட்டதையெல்லாம் அள்ளிக் கொண்டு போவதுபோல், மக்கள் கூட்டம் படைவீரர்களைச் சூழ்ந்து கொண்டது.

பொலபொலவென பல உடல்களும், தலைகளும் வெட்டுண்டு, அகழிக்குள் விழுந்தன. மலையருவி பாய்ந்து, பெருந்தீயை அணைப்பதுபோல், படைவீரர்கள்

மீது குவிந்த மாபெருங் கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் அரசுப் படையினர் திணறினர். அரண்மனையின் எதிரே நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்து சாய்ந்தனர். கூட்டத்தினூடே இரணியவர்மரின் வீரர்களும் சாதாரண உடையிலிருந்தவாறு போரிட்டதால் இரு பக்கமும் உயிர்ச் சேதம் அதிகரித்துக் கொண்டிருந்தது. உதயசந்திரனும், தேவசோமாவும் மக்களை உற்சாகப்படுத்திப் போராட்டத்தைத் தீவிரப் படுத்திக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்தில் தீச் சுடரில் கற்பூரம் கரைந்தது மாதிரி, படை வீரர்கள் கரைந்து விட்டனர். அதே சமயம், சிறைச்சாலையைத் தகர்த்துவிட்டு வெறியோடு திரும்பிக் கொண்டிருந்த மக்கள் கூட்டமும் அங்கு வந்து சேர்ந்தது. வெறிக் கூச்சலிட்டவாறே அகழியில் குதித்து அரண்மனையை நோக்கி நீந்தத் தொடங்கினர். ஏற்கனவே வெட்டுண்டு அகழியில் விழுந்த உடல்களை முதலைகள் கவ்விக்கொண்டு போயிருந்ததனால், அகழியில் நீந்தியவர்களைத் தாக்க முதலைகள் இல்லை. அகழியைத் தாண்டியவர்கள், பாலத்தை உயரே தூக்கிப் பிணைந்திருந்த கயிற்றைக் கழற்றிவிட்டார்கள். பாலம், பிணைப்பிலிருந்து விடுபட்டு, பேரிரைச்சலோடு சரிந்து, அகழியின் விளிம்பில் மடாரென்று விழுந்தது. மக்கள் கைகொட்டி ஆரவாரித்தனர். சிறுகணவாய் வழியாக வெள்ளம் சீறிப் பாய்வதுபோல் மக்கள் பாலத்தின் வழியாக அரண்மனை வாயிலுக்குள் நுழைந்தனர்.

ஊளையிட்டுக் கொண்டும், உறுமிக்கொண்டும், ஏசிக் கொண்டும் அரண்மனையின் படிகளில் கூட்டம், பாய்ந்து ஏறியது. கோட்டைத் தளபதி சுந்தரவர்மரும், ஊர்க்காவல் படைத் தலைவரும் ஒரு கணம் வாசல் முகப்பில் தென் பட்டனர். மறுகணம், கூட்டத்தோடு ஐக்கியமாகி விட்டனர், கூட்டம் முன்வாசற்படிகளைக் கடந்து அப்பாற் சென்றபோது, அவ்விரு தலைவர்களின் உடல்கள் படிகளில் சிதைந்து சிதறிக் கிடந்தன.

மக்கள், அரண்மனையின் பெரிய முற்றத்தை அடைந்த போது, கோயிற் கதவு போன்ற பிருமாண்டமான வாசற்கதவு அடைத்திருந்தது. காவல் வீரர்கள், பதறி ஓடிவிட்டனர். களுபந்தாவும், வேறு சிலரும் உலக்கைகளினால் கதவை இடித்து உடைத்தனர். கதவு பிளந்து வீழ்ந்ததும், மக்கள் வெள்ளம், அரண்மனைத் தோட்டத்துக்குள் பாய்ந்தது. தோட்டத்துச் செடிகளையெல்லாம் நாசம் செய்தவாறே முன்னேறிக் கொண்டிருந்த மக்களுக்கு எதிரே, முதன்மந்திரி அச்சுதபட்டர் இரு கைகளையும் கூப்பியவாறு ஓடி வந்தார்.

"மகா ஜனங்களே, சித்திரமாயனை முடி சூட விடாதீர்கள். நாட்டைப்பாழாக்கிவிட்டான்" என்று கூவினார்.

"பிடியுங்கள் சித்திரமாயனை, விடாதீர்கள்" என்று தேவசோமா கூச்சலிட்டபடி அரண்மனைக்குள் பாய்ந்து ஓடினான். கூட்டம், அச்சுதபட்டரையும் இழுத்துக் கொண்டு, உள்ளே ஓடியது.

உதயசந்திரனும், தேவசோமாவும் அரண்மனைக்குள் சித்திரமாயனைத் தேடினார்கள். தேவசோமாவின் இருகைகளிலிருந்த இரண்டு வாட்களில் ஒன்றை உதயசந்திரன் வாங்கிக் கொண்டான். ஆளுக்கு ஒரு பக்கமாகப் பிரிந்து தேடினார்கள். எதிர்ப்பட்ட காவலாளிகள் பயந்து ஓடி ஒளிந்தார்கள்.

மக்கள் கூட்டம் அரண்மனைக்குள் சென்றபோது, அங்கு யாரும் இல்லை. ஆத்திரமடைந்த கூட்டம் ஒரு கதவுக்குப் பின்னே ஒளிந்திருந்த காவலாளியைப் பிடித்து விசாரித்தது. சித்திரமாயனும் மெய்காவல் வீரர்களும் வெளியேறி ஒரு நாழிகைக்கு மேல் ஆகிவிட்டது என்று அவன் கூறியதும், மக்களின் ஆத்திரம் முழுவதும் அச்சுதபட்டர் மீது திரும்பியது. சித்திரமாயனின் அறை முழுவதும் அச்சுதபட்டரின் இரத்தமும் சதைகளும் எலும்புகளும் சிந்திச் சிதறின.

அரண்மனைக்குள் சித்திரமாயனைக் காணாமல் ஏமாற்றமடைந்த உதயசந்திரனுக்கு அந்தப்புரச் சுரங்கப் பாதையின் நினைவு வந்தது. கூட்டத்தை விட்டு நழுவி, தோட்டத்தில் இறங்கி அந்தப்புரத்தை நோக்கி ஓடினான். கையில் வாளுடன் ஓடிவந்த உதயசந்திரனைக் கண்ட தாதியர்கள் வீறிட்டு அலறினர்.

"எங்கே சித்திரமாயன்?" உதயசந்திரன் ஆங்காரத்தோடு கேட்டான், தாதியர்கள் பயத்தில் பேசமுடியாமல் நடுங்கி நின்றனர். ஒருத்தியின் தலைமுடியைப் பற்றி உலுக்கினான்.

"இளவரசரைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று அழுதாள்.

"மகாராணி...?"

தாதி படுக்கையறையை சுட்டிக் காட்டினாள். உதயசந்திரன் உள்ளே பாய்ந்தான். அங்கு யாரும் இல்லை. சாளரத்தின் வழியாகப் பாய்ந்தான். சுரங்கப்பாதையின் துவாரத்தை அடைத்திருந்த கல், சற்று விலகி இருந்தது. உதயசந்திரன் அந்த அறைக்குள் ஓடினான், அதேவேளையில் சுரங்கப் பாதையில் இறங்கிக் கொண்டிருந்த மேகலா, உதயசந்திரனின் குரலைக் கேட்டு சற்றுத் தயங்கி நின்றாள். அந்தக் கணத்தில் அவளுடைய சிந்தையில் ஒரு திட்டம் உருவாகியது. உடனே சுரங்கப்பாதையிலிருந்து வெளிப் பட்டு விரைந்து வந்தாள். உதயசந்திரன் சுரங்கப்பாதையிருந்த அறைக்குள் வந்தபோது மேகலா அவனை நோக்கி ஓடி வந்தாள்.

"வா உதயசந்திரா, நல்ல வேளையில் வந்தாய். எல்லாரும் ஓடிப்போய்விட்டார்கள். இனி இந்தப் பல்லவ நாடு நம் கையில்தான்" என்று பரபரப்புடன் கூறினாள்.

உதயசந்திரன் ஒன்றும் புரியாமல் விழித்தான். மேகலா

மீண்டும் சொன்னாள்: "எல்லாரும் தப்பிப் பாண்டிய நாட்டிற்கு ஓடுகிறார்கள். இனி சிம்மாசனத்திற்கு நான் தான் வாரிசு. நான்தான் இந்நாட்டின் மகாராணி. புரிகிறதா உதய சந்திரா, இனி நான் தான் மகாராணி."

வாளேந்தியிருந்த அவனுடைய கையைப் பற்றிக் கொண்டாள். "நான் மகாராணியாகும்போது நீதான் மகாராஜா புரிகிறதா? நாம் இருவரும் இந்நாட்டை ஆளலாம்" என்றாள் உற்சாகத்துடன்.

உதயசந்திரன் அவளை உற்றுப் பார்த்தான். "நான் சிம்மாசனம் ஏற வரவில்லை. பழிவாங்க வந்திருக்கிறேன்" என்று உறுமினான்.

"பழிவாங்கு. இந்தப் பல்லவ பரம்பரை முழுவதையுமே பழிவாங்கு. பிறகு நாம்தாம் இந்நாட்டை ஆளப் போகிறோம்" என்றாள் மேகலா. முத்துப் பற்கள் தெரியச் சிரித்தாள்.

அவளுடைய சிரிப்பு அவனுக்கு அப்போது எரிச்சலை ஊட்டியது. அவள் கையை உதறினான்.

"எங்கே அவர்கள்? எப்படித் தப்பித்து ஓடுகிறார்கள்?" என்று இரைந்தான்.

"அதோ சுரங்கப்பாதை. போ, பழி வாங்கு" என்று சுரங்கப்பாதையைச் சுட்டிக் காட்டினாள்.

உதயசந்திரன் சுரங்கவாயிலை நோக்கிப் பாய்ந்து சென்றான்.

"போ, மகாராணியைக் கொன்றுவிட்டு வா. இனி நான் தான் இந்நாட்டின் மகாராணி. நான் தான் மகாராணி" என்றாள் மேகலா.

அவள் கூறியது அவன் காதில் விழவில்லை. ஒரு கணத்தில் சுரங்கவாயிலுக்குள் நுழைந்து மறைந்து விட்டான்.

மேகலாவின் மனம் பரபரத்துக் கொண்டிருந்தது. ஓ... பல்லவ குலத்தினர் எல்லாரும் ஓடிவிட்டனர். மகாராணியை சுரங்கப்பாதைக்குள் உதயசந்திரன் கொன்று விடுவான். இனி பல்லவ சாம்ராஜ்யத்தின் ஒரே மகாராணி நான்தான்...

தனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை எண்ணி மிகுந்த உற்சாகமடைந்தாள். அப்போது வெளியே யாரோ விரைந்து வரும் காலடி ஓசை கேட்கவே முன்பக்கத்து அறைக்கு வந்தாள். முற்றத்தில் தேவசோமா, கையில் வாளுடன் விரைந்து வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டு பீதியுற்று வாசற்கதவிற்குப் பின்னே ஓடி ஒளிந்தாள், மேகலா.

உதயசந்திரனைத் தேடி வந்த தேவசோமா, அரண்மனை அந்தப்புரத்தின் முன் அறைக்கதவின் பின்னே யாரோ ஓடி ஒளிவதைக் கண்டு ஆக்ரோஷத்துடன் பாய்ந்து வந்தான்.

"கதவிற்குப் பின்னால் யார்? வா வெளியே" என்று இரைந்தான்.

மேகலா, பீதியினால் நடுங்கியபடியே ஒளிந்து நின்றாள். பயத்தினால் அவளால் நகரக்கூட முடியவில்லை. மறுகணம் தேவசோமா கதவை இடது கையினால் படீரென்று இழுத்து அதே வேகத்தால் வலது கையிலிருந்த வாளைப் பாய்ச்சினான்.

வீல் என்று கதறியபடி மார்பிலிருந்து குருதி கொப்பளிக்க மேகலா வெளியே சரிந்து அவன் காலடியில் குப்புற விழுந்தாள்.

"சீ...ஒரு பெண்ணா?" என்று அருவருப்புடன் முனகியபடியே சுற்றும் முற்றும் பார்த்தான். பிறகு கீழே கிடந்தவளை

காலினால் மிதித்துப் புரட்டினான். "ஓ...! நீயா? இந்நாட்டின் எதிர்கால மகாராணியல்லவா!" என்று முனகினான்.

அந்தப்புரத்தில் ஆள் அரவமே இல்லை. மயான அமைதி... காலடியில் கிடந்த மேகலாவை உற்றுப் பார்த்தான். ஒரு பெண்ணைக் கொன்று விட்டோமே என்று ஆற்றாமை. அருவருப்புடன் முகத்தைச் சுளித்தான். அப்போது அரண்மனையின் மற்றொரு பகுதியில் புரட்சிக் காரர்களின் இரைச்சல் மிகுந்து கேட்கவே அந்தப்புரத்தை விட்டுத் திரும்பி அரண்மனையை நோக்கி விரைந்தான்.

சுரங்கப் பாதையினுள் நுழைந்த உதயசந்திரன், கண்களை இடுக்கிக் கொண்டு கூர்ந்து பார்த்தான். சுரங்கத்தினுள்ளே சற்று தூரத்தில் இரண்டு தீவட்டிகளின் ஒளி தெரிந்தது. தீவட்டிகளை நோக்கி விரைந்து ஓடினான்.

அவனுடைய காலடி ஓசையைக் கேட்டு, சுரங்கத்தினுள் சென்று கொண்டிருந்தவர்கள் ஓடத் துவங்கினர். உதயசந்திரன் தீவட்டிகளை இலக்கு வைத்து ஓடினான். நெருங்கியபோது, அவர்களுள் சித்திரமாயன் இல்லை என்பதையும், அவர்கள் பெண்கள் என்பதையும் அறிந்து ஏமாற்றமடைந்தான். அந்த ஏமாற்றம் கடும் கோபமாக மாறியது.

இரு தாதியர்கள் தீவட்டிகளை, ஏந்தி வழிகாட்ட மகாராணி பிரேமவர்த்தினி, விரைந்து சென்று கொண்டிருந்தாள்.

உதயசந்திரன் பாய்ந்து சென்று அவள் கையைப் பற்றினான்.

"மகாராணி, இனி தப்பிக்க முடியாது. இன்றோடு இந்நாட்டைப் பிடித்த பிசாசு, ஒழியட்டும்" என்று கூறியபடியே, கையிலிருந்த வாளை ஓங்கினான். தீவட்டிகளைப் பிடித்திருந்த தாதியர்கள் பயத்தினால் அலறினார்கள்.

உதயசந்திரன் தன் உணர்வையே இழந்து விட்டான். அவனுள் கொலை வெறி தாண்டவமாடியது. சித்திரமாயன் தப்பிவிட்டான் என்ற எண்ணம், அவனுடைய சுய அறிவையே பதலிக்கச் செய்துவிட்டது. ஒரு பெண்ணைக் கொலை செய்ய முயல்கிறோம் என்ற எண்ணம் கூட இல்லாமல், வாளேந்திய கையை ஆவேசத்தோடு ஓங்கினான்.

பயத்தோடு நிமிர்ந்து பார்த்த பிரேமவர்த்தினி, கொலை வெறியுடன் நின்றுகொண்டிருந்தவனைக் கண்டு நடுங்கினாள். ஒரு கணம் அவனுடைய முகம் நினைவில் வந்தது.

வீரப்போட்டி மைதானத்தில் பார்த்த முகம், அவன் யார் என்பதைப் புரிந்துகொண்டாள். பெயர்கூட நினைவில் வந்துவிட்டது. சட்டென்று கீழே மண்டியிட்டு ஒரு கையால் அவன் காலைப் பற்றிக் கொண்டாள். "உதயசந்திரா, எனக்கு உயிர்ப்பிச்சைக் கொடு. கொன்று விடாதே" என்று கெஞ்சி அழுதாள்.

அவனுடைய பெயரை, அவள் உச்சரித்ததைக் கேட்டதும், உதயசந்திரன் சிலிர்த்தான். அறிவு, விழிப்படையத் தொடங்கியது.

சீச்சீ. சித்திரமாயனைப் பழி வாங்கத் தேடி வந்தவன், இப்படி ஒரு பெண்ணைக் கொலை செய்ய நிற்கிறேனே...

குனிந்து அவளை உற்றுப் பார்த்தான். அவளுடைய பயம்கலந்த பார்வை, தீவட்டிகளின் ஒளியில் பரிதாபமாகத் தெரிந்தது. அவள் கண்களில் முட்டி நின்ற கண்ணீரும் பயப் பிராந்தியும் அவனை நெகிழ வைத்தன.

ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தின் மகாராணி அவன் பாதங்களைப் பற்றிக் கெஞ்சும் பரிதாபத்தை எண்ணி மனம் கூசினான். அவள் முகத்தை உற்று நோக்கினான். அவளுடைய முகம் பீதியினால் வெளிறிப் போயிருந்தது.

ஒய்யாரம் எங்கே...? கம்பீரம் எங்கே...?

அவள் மீது மிகுந்த இரக்கம் தோன்றியது.

"எழுந்திருங்கள். சித்திரமாயன் எங்கே?" –என்று கேட்டான். மண்டியிட்டிருந்த பிரேமவர்த்தினி, எழுந்து நின்றாள்.

"அவன் அப்போதே மெய்க்காவல் வீரர்களோடு தப்பி ஓடிவிட்டான்" என்றாள். அவனுடைய வலுவான பிடியில் சிக்கியிருந்த அவள் கையில் வலி தோன்றியது.

"எங்கே போகிறான்?"

"தெரியவில்லை."

"நீங்களும் அவன் கூட ஓட வேண்டியதுதானே?"

"அவன், மேற்கு வாயில் வழியாகத் தப்பிவிட்டான். நான் போவதற்குள் மக்கள் கூட்டம் அங்கேயும் வந்து விட்டது."

"ஓ... அதனால்தான் இந்த வழியோ... நீங்கள் எங்கே போவதாக எண்ணம்?"

"தெரியாது... சுரங்க வாசலின் வெளியே மெய்க் காவலர்கள் குதிரைகளுடன் எனக்காகக் காத்து நிற்கிறார் கள். அவர்கள் என்னை எங்கே கொண்டு போகிறார்களோ தெரியவில்லை" என்றாள். குரல் பயத்தினால் நடுங்கியது. கையில் வலி அதிகமாகவே, முகத்தைச் சுளித்தாள். அதைக் கண்ட உதயசந்திரன், அப்போதுதான் அவளுடைய கையை வலுவுடன் தான் பற்றியிருந்ததை உணர்ந்தான். அவள் கையை விடுவித்தான், பற்றியிருந்த இடம் கன்றிப் போயிருந்தது.

"நீங்கள் போகலாம்" என்று கூறி வழி விட்டு விலகி நின்றான் உதயசந்திரன்.

"உதயசந்திரா, இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்" என்று நாத் தழுதழுக்கக் கூறி, அவனைக் கை

கூப்பி வணங்கினாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

உதயசந்திரன் இரக்கத்தோடு பார்த்தான்.

அவளுடைய முகத்தில் சோகம் படர்ந்த புன்னகை ஒன்று தோன்றியது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். பிறகு, விரைந்து நடக்கத் தொடங்கினாள். தாதியர் இருவரும் அவளுக்கு முன்பாக நடக்கத் தொடங்கினர்.

உதயசந்திரன் ஒரு தாதியிடமிருந்து தீவட்டியை வாங்கினான். "ஒரு தீவட்டி உங்களுக்குப் போதும். மகாராணியை ஜாக்கிரதையாகக் கொண்டு சேருங்கள். சீக்கிரம் போங்கள். மக்கள் கோட்டைக்குள் தான் கலகம் செய்கிறார்கள், கோட்டைக்கு வெளியே இன்னும் பரவவில்லை. சீக்கிரம் வெளியேறிப் போங்கள்" என்று கூறிவிட்டு அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவர்கள் தூரத்தில் மறைந்ததும் கையிலிருந்த தீவட்டியை உயரத் தூக்கிப் பிடித்தபடி திரும்பி நடக்கத் தொடங்கினான். சித்திரமாயனைத் தப்பவிட்டு விட்டோமே என்ற எண்ணம் மனத்தில் பெரும் வேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

சுரங்கப்பாதையிலிருந்து வெளியேறி அந்தப்புரத்தின் முன் அறைக்கு வந்தபோது, அறையின் வாசலில் கிடந்த மேகலாவைக் கண்டு துணுக்குற்றான். தீவட்டியை வீசியெறிந்துவிட்டு அவளை நோக்கி ஓடினான். குருதி வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தவளின் அருகே மண்டியிட்டு அவளை உற்றுப் பார்த்தான். சற்று முன்பு அவள் அவனிடம் பேசியவை நினைவில் வந்தன.

"ஓ... உனக்குத்தான் எவ்வளவு பேராசை, பல்லவ நாட்டின் மகாராணியாவதில்" என்று முனகியபடி அவளையே வெறிக்கப் பார்த்தான். அவளுடைய முகத்தில்

உயிர் பிரிந்த பிறகும் ஏமாற்றத்தின் சாயல் தென்பட்டது. அவள் மீது பரிதாபம் கொண்டான்.

"அடபேதைப் பெண்ணே, எதற்கும் அருகதை வேண்டாமா? உன் ஆசை ஒரு நொடியில் பொசுங்கிவிட்டதே. மகாராணியுடன் நீயும் தப்பி ஓடியிருக்கலாமே. உன் தலைவிதி இப்படி"

அவளைப் பற்றிய கடந்த கால நினைவுகள் மனத்தில் உளைந்தன. அவன்மீது அவள் கொண்டிருந்த மோகம்; அதற்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகள்; கடைசியில் அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றம், கோபம் எல்லாம் மனத்தில் வட்டமிட்டன.

அவள் மீது மிகுந்த பரிவு தோன்றியது. இரக்கத்தோடு அவளைச் சற்றுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் நெஞ்சில் குமைந்து கொண்டிருந்த தீராத தாபங்களும், ஆசைகளும் மார்பு வழியே வழிந்து கொண்டிருந்த இரத்தத்தோடு வெளியேறிவிட்டன.

உதயசந்திரன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். அவளை மெல்லத் தூக்கி, அருகே இருந்த மஞ்சத்தில் படுக்க வைத்தான்.

32. புதிய மரபு

காஞ்சி அரண்மனையிலிருந்து சித்திரமாயனும், மகாராணியும் தப்பி ஓடிவிட்டனர் என்பதை அறிந்த மக்கள் மிகுந்த உற்சாகமடைந்தனர். பல்லவநாட்டைப் பிடித்திருந்த வியாதி விலகி விட்டதாக எண்ணி நிம்மதியடைந்தனர். ஆனால், அதேசமயம் பல்லவ சிம்மாசனம் காலியாக இருந்ததை உணர்ந்தபோது மக்கள் குழம்பினார்கள், ஒன்றேகால் நூற்றாண்டுகளுக்கு மேலாக பல்லவ சிம்மாசனத்தை அலங்கரித்த சிம்மவிஷ்ணு பல்லவருடைய சந்ததி, சித்திரமாயனுடன் முடிவடைந்துவிட்டது.

இனி சிம்மாசனத்தில் அமர யாருக்கு அருகதை?

சித்திரமாயனுக்கு ஒரு சகோதரன் இருந்திருந்தால், அவனை அரியணையில் ஏற்றியிருக்கலாம். இனி அந்த வம்சத்தில் அரசாள யாருமில்லை என்ற நிலை வந்தபோது மக்கள் மனத்தில் குழப்பம் எழுந்தது.

நகரப் பிரமுகர்களும், மற்ற தலைவர்களும், அது பற்றியே மூன்று நாட்களாக யோகி ருத்ர பரமாச்சாரியின் ஆசிரமத்தில் கூடி ஆலோசித்தனர். பரமாச்சாரியின் ஆசிரமம் போராட்டத்தின் மையமாக விளங்கத் தொடங்கியதிலிருந்து, எல்லாத் தலைவர்களும் அங்கே கூடிப் பேசத் தொடங்கினர். ஆசிரமத்தின் பெரிய தோட்டத்தில் இரதங்களும், பல்லக்குகளும் குதிரைகளும் வருவதும் போவதுமாயிருந்தன.

அவ்வளவு அமளியிலும் ஆசிரமத்தின் மத்திய கட்டடத்தில் ருத்ர பரமாச்சாரியும், சீடர்களும் எதைப்பற்றியும் கவலைப்பட்டுக் கொள்ளாமல் தங்கள் யோக சாதனையில் ஈடுபட்டிருந்தனர். சீடர்கள், யோகம் பயிலாத வேளைகளில் கலவரத்தின்போது காயமடைந்து அங்கே கொண்டு வரப்பட்டிருந்தவர்களுக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். மற்ற வேளைகளில் வெளியே தோட்டத்தில் வந்து நின்றுகொண்டு அங்கு வருவோரையும் போவோரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். 'ஐயோ பாவம் ஏன்தான் இந்த மனிதர்கள் அமைதியாக வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாமல் இப்படி பரபரப்படைந்து தவிக்கிறார்களோ' என்று எண்ணுவது போலிருந்தது சீடர்களுடைய பார்வை. வெளி உலகத்தில் நடைபெறும் சூறாவளியான இயக்கங்கள் அந்த ஆசிரமவாசிகளைப் பாதித்ததாகவே தெரியவில்லை. அந்த ஆசிரமமே பற்றி எரிந்தால் கூட விலகி நின்று, நெருப்பை வேடிக்கை பார்க்கும் மனப்பக்குவம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

ஆசிரமத்துக்குள் அமைதி நிலவிக்கொண்டிருந்த அதே வேளையில் அந்தக் கட்டடத்தை அடுத்த பகுதியில் பலர் நிம்மதி இழந்து நாட்டுப் பிரச்னைகளைச் சுமந்து தவித்துக் கொண்டிருந்தார்கள்.

மகாராணியால் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த பல துறைகளின் தலைவர்கள் தப்பி ஓடிவிட்டனர். பிடிபட்டவர்களை வெறிகொண்ட மக்கள் கொலை செய்துவிட்டனர். ஆகவே, காஞ்சி நகர் ஆள்வாரற்று அநாதையாகக் கிடந்தது. தற்காலிகமாக காஞ்சியின் பாதுகாப்புப் பொறுப்பை இரணியவர்மர் ஏற்றிருந்தார்.

கிளர்ந்தெழுந்த காஞ்சி மக்களை அமைதிப்படுத்துவது தான் பெரும்பாடாகிவிட்டது. மக்களுக்கு யார்மீதெல்லாம் வெறுப்பும் பொறாமையும் ஏற்பட்டிருந்ததோ அவர்களையெல்லாம் கொல்லத் தொடங்கிவிட்டனர். இரண்டு நாட்களுக்கு காஞ்சி நகரில் மக்கள் காட்டுமிராண்டிகளைப் போல் கொலைவெறிபிடித்து அலைந்தனர். அவர்களை அடக்கி, காஞ்சியில் அமைதியை நிலை நாட்டுவது தான் இரணியவர்மருக்குப் பெரும் பிரச்னையாக இருந்தது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு சமூக விரோதிகள் கொடுமை இழைக்கத் தொடங்கினர். அதே சமயம், சித்திரமாயனிடம் அபிமானம் கொண்டிருந்த சில பிரமுகர்களும், அரச குலத்தைச் சார்ந்தவர்களும், வணிகர்களும் மறைமுகமாகச் சமூக விரோதிகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இரணியவர்மர் முன்றே நாட்களில் எல்லாவற்றையும் ஒடுக்கினார். பிடிபட்ட சமூக விரோதிகளை முச்சந்தியில் கழுவேற்றினார். காஞ்சி நகரில் நான்காம் நாள் காலையிலிருந்து அமைதி நிலவத் தொடங்கியது.

அன்றைய ஒரே பிரச்னை பல்லவ சிம்மாசனம் காலியாகக் கிடந்ததுதான். அரியணைக்கு வம்சாவழிப்படி

தாய்மை குன்றாமல் பிறந்தவராக அமைய வேண்டுமே என்ற கவலை, தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. மக்களுக்குப் பாரம்பரியத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையும் பிடிமானமும் இருந்தது. தலைவர்கள் தங்கள் இஷ்டப்படி யாரையாவது சக்ரவர்த்தியாக ஏற்றுக்கொண்டுவிட்டால், அதை மக்கள் ஏற்க மாட்டார்கள். அரச குலத்தைச் சாராத சாதாரணக் குலத்தில் பிறந்த மேகலா, சின்னராணியாக இருந்ததையே மக்கள் விரும்பவில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக இருப்பவர், அரச குலத்தில் வேறு இரத்தக் கலப்பில்லாமல் உதித்தவராக இருக்க வேண்டும் என்பதில் மக்களுக்கு மிகுந்த அக்கறை இருந்தது.

சித்திரமாயனோடு ஒரு வமிசத்தின் தொடர்ச்சி முற்றுப் பெற்றுவிட்டது. இனி யாரை சக்கரவர்த்தியாக்குவது?

இந்தக் கேள்விதான் காஞ்சி நகரில் ஒவ்வொருவர் வாயிலிருந்தும் வந்து கொண்டிருந்தது. இதற்கு விடை கிடைக்காமல்தான் தலைவர்கள், பரமாச்சாரியின் ஆசிரமத்தில் கூடி மூன்று தினங்களாக ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் குமைந்து கொண்டிருந்தனர்.

இரணியவர்மரை சக்கரவர்த்தியாக முடிசூடும்படி தரணி கொண்ட போசரும், வேறு சில தலைவர்களும் வேண்டினர். "நீங்கள் கலப்பற்ற ராஜ வமிசத்தைச் சார்ந்தவர்கள். இறந்து போன சக்ரவர்த்தியின் தாயாதிக் கிளையைச் சேர்ந்தவர்கள். சில போர்க்களங்களில் படைக்குத் தலைமை தாங்கிச் சென்றிருக்கிறீர்கள். உங்கள் குடும்பத்தின் மீது காஞ்சி மக்கள் மிகுந்த மரியாதையும் வைத்திருக்கிறார்கள். நீங்கள் அரியணை ஏறி ஆட்சிப் பொறுப்பை ஏற்பது பொருத்தமாகவே இருக்கும்" என்றார், தரணி கொண்ட போசர்.

"நான் தாயாதிக் கிளையைச் சேர்ந்தவன் என்ற ஒரு

காரணத்துக்காகவே, மறுக்கிறேன். இப்போது நான் அரியணை ஏறினால், நான் சதிசெய்து அரியணையில் ஏறிவிட்டதாக மக்கள் நினைப்பார்கள். என்னைப்போல் அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள் பலர் இருக்கிறார்களே, அவர்களில் யாராவது முடிசூடட்டும்" – என்று கூறி, இரணியவர்மர் மறுத்துவிட்டார்.

நாட்டை ஆள வேறு பொருத்தமான நபரைத் தேர்ந்தெடுப்பதில் நகரப்பிரமுகர்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். இரணியவர்மரைத் தவிர, அரச குலத்தைச் சார்ந்த வேறு யாருமே தகுதி உள்ளவராகத் தோன்றவில்லை. அரச குடும்பத்தைச் சார்ந்த பலர், சக்ரவர்த்தியாக விருப்பம் கொண்டு நகரப் பிரமுகர்களின் அபிமானத்தைப் பெற போட்டி போட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் உதயசந்திரன் மட்டும் எதிலும் தலையிடாமல் ஆசிரமத்து மாடியில் முடங்கிக் கிடந்தான். அவனுக்கு நேர்ந்த துன்பத்தை யாரால் நிவர்த்திக்க முடியும்? லீனாவின் மருக்கொழுந்துச் செடிகளில் இரண்டைக் கொண்டு வந்து ஆசிரமத்தில் நட்டான். அந்தச் செடிகளைப் பார்த்துப் பார்த்துப் பொங்கியழுதான். சில வேளைகளில் வெறிக்கப் பார்த்தவாறு பைத்தியக்காரனைப் போல் அமர்ந்திருந்தான்.

சித்திரமாயன் தப்பி விட்டது அவனுடைய மனதை மிகவும் பாதித்திருந்தது. அவனுடைய கோபத்துக்கு வடிகால் இல்லை. கோபத்தினால் உள்ளூர வெந்து கொண்டிருந்தான். ராஜன் நம்பூதிரி அவ்வப்போது வந்து ஆறுதல் கூறினான். தேவசோமாவும், களுபந்தாவும் அவனுக்குத் துணையாக ஆசிரமத்திலேயே தங்கியிருந்தனர்.

டெங்லீ, அவனைத் தம்மோடு வந்து விடும்படி அழைத்தார். ஆனால், உதயசந்திரன் மறுத்துவிட்டான்.

மூன்று நாட்களுக்குப் பிறகு, அன்றுதான் அவன் ஆசிரமத்துக் கட்டடத்தை விட்டு வெளியே வந்தான். ஆசிரமத் தோட்டத்தின் குளுமையும் சூழ்நிலையும் தெம்பளிப்பதாயிருந்தன.

அன்று ஆசிரமத்துத் தோட்டத்தில், காஞ்சி மக்களின் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. நகரப் பிரமுகர்களும், பல துறைகளைச் சேர்ந்த தலைவர்களும், குறுநில மன்னர்களும் கைலாசநாதர் கோயிலில் கூடி சந்நிதி முன்பாக சக்ரவர்த்தியைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்ற செய்தியை அறிந்ததும் ஊர் மக்கள் திரண்டு, கைலாசநாதர் கோயிலை நோக்கிச் செல்லத் தொடங்கினர். ஆசிரமத்திலிருந்து எல்லாத் தலைவர்களும் ஒரு சேர, கைலாசநாதர் கோயிலுக்குப் புறப்படுவதைக் காண மக்கள் ஆசிரமத் தோட்டத்திலும் கூடியிருந்தனர்.

காலையில் உதயமாகி, ஏழரை நாழிகைக்குப் பிறகு, ருத்ர பரமாச்சாரியின் ஆசிரமத்தில் கூடிய தலைவர்களும், பிரமுகர்களும் தங்கள் தங்கள் வாகனங்களில் கோயிலுக்குப் புறப்பட்டார்கள். ஆசிரமத்தின் பிரதான வாயிலில் கூடி நின்ற மக்கள், ஒவ்வொரு வாகனமும் கடந்து சென்ற போது மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தார்கள். வாகனங்களில் சென்றவர்கள் யார் யார் என்று மற்றவர்களிடம் கூறி மகிழ்ந்தார்கள்.

இரணியவர்மர், தம்முடைய மகன் பல்லவமல்லனையும் இரதத்தில் அழைத்துச் சென்றார். அவருடைய இரதம், வாசலைக் கடந்தபோது, பெருத்த ஆரவாரம் எழுந்தது. சிறுவன் பல்லவமல்லன், உற்சாகத்துடன் கூட்டத்தை நோக்கி கையை ஆட்டிக்கொண்டிருந்தான்.

தரணிகொண்ட போசர் தம்முடைய இரதத்தில் ராஜன் நம்பூதிரியையும் அழைத்துக் கொண்டுப் புறப்பட்டார்.

புறப்படுவதற்கு முன்பு, ருத்ர பரமாச்சாரியைச் சந்தித்து அவரையும் உடன் வருமாறு அழைத்தார்.

"எனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லையே. சக்கரவர்த்தியாக யார் பொறுப்பேற்றாலும் எனக்கு அதுபற்றி என்ன?" என்று கூறினார், பரமாச்சாரி.

ஞானிகளுடைய போக்கை எண்ணி வியந்தவாறே இரதத்தில் ஏறப்போன தரணிகொண்ட போசர், ஒரு மரத்தடியில் உதயசந்திரன் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், சற்று தயங்கினார்.

"அவனைக் கூப்பிட வேண்டாம். வெளியே எங்கும் வர மறுத்துவிட்டான். இங்கேயே நிம்மதியாக இருக்கட்டும்" என்றான், ராஜன் நம்பூதிரி.

அவனை இரக்கத்தோடு பார்த்து வருந்தியவாறு இரதத்தில் ஏறினார், தரணிகொண்ட போசர்.

கைலாசநாதர் கோயிலுக்குள் முக்கியமானவர்கள் அனைவரும் சென்ற பிறகு, வெளிவாசற்கதவை அடைத்து விட்டார்கள். மக்கள், கோயிலுக்கு வெளியே கூடியிருந்தனர். இனி கோயிலின் வாயிற்கதவு திறக்கப்படும் போது பல்லவநாட்டுக்கு ஒரு சக்ரவர்த்தி கிடைத்திருப்பார் என்ற எண்ணத்தில் மக்கள் காத்திருந்தனர்.

கோயிலின் உள்ளே வெளிச்சுற்று மண்டபத்தில் எல்லாரும் அமர்ந்திருந்தனர். ஒரு பகுதியில் பல நகரங்களிலிருந்து வந்திருந்த நகரத் தலைவர்களிருந்தார்கள். அவர்களுக்கு முன்பாக, சில கோட்டத் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். தென்பகுதியில் வணிகசபைத் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் எல்லாருக்கும் முன் வரிசையில் சீன வணிக சபையின் தலைவரான டெங்லீ அமர்ந்திருந்தார். வடபுறத்தில் காஞ்சி நகர் கடிகைகளின் தலைவர்களிருந்தனர். அவர்களுக்கு நடுநாயகமாக சமஸ்கிருதக்

கடிகையின் தலைவர் ஜேஷ்டபதி சோமயாஜி அமர்ந்திருந்தார்.

"நான் எவ்வளவு கற்றிருந்தால்தான் என்ன, சிறைப்பட வேண்டும் என்ற விதியும் எனக்கிருந்திருக்கிறது. அது ஒரு புதுமையான அனுபவந்தான். ஒரு முறையாவது ஒருவன் சிறைச்சாலையில் அடைபட்டால்தான் சுதந்திரத்தின் தன்மையும், புரியும்" என்று அருகிலிருந்த பௌத்த கடிகையின் தலைவரிடம் கூறிக்கொண்டிருந்தனர்.

"நேற்று மாலை யோகி பரமாச்சாரியின் பேச்சை ஆசிரமத்தில் கேட்டேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'நீங்கள் இப்போது வாழ்வதே ஒரு சிறைச்சாலை தான். இன்றைய வைதீக மதத்தார்கள் பல கட்டு திட்டங்களை திணித்து, இந்தச் சமுதாயத்தையே ஒரு மாபெரும் சிறைச் சாலையாக ஆக்கிவிட்டிருக்கிறார்கள். காலம் காலமாகப் பயப்பிராந்தியுடன் அதிலிருந்து பழகிப் போனீர்கள். சுதந்திரத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாமலேயே போய் விட்டது என்றார். எவ்வளவு உண்மை அது. இன்று மத நம்பிக்கைகள் பயத்தின் அடிப்படையில் தானே ஆட்சி செலுத்துகின்றன. பயமற்ற சுதந்திர வாழ்வு என்றால் அது எவ்வளவு ரம்மியமானது, ஆனந்தமானது என்பதை அந்த ஆசிரமத்துக்குள் சென்றாலே புரிந்து கொள்ளலாம்" என்று வியந்து கூறிக்கொண்டிருந்தார் பௌத்த கடிகைத் தலைவர்.

"மகாராணி அந்த ஆசிரமத்தின் மீது அபிமானம் கொண்டிருந்ததால், மக்கள் பரமாச்சாரியின் மீது கோபம் கொண்டிருந்தனர்" என்றார் சோமயாஜி.

"ஆனால் புரட்சிக்குழு அந்த ஆசிரமத்தில்தானே செயல்பட்டது. மக்கள் போராடியபோது காயம்பட்ட மக்களை எடுத்துச் சென்று அங்கேயும் சிகிச்சையளித்திருக்கிறார்களே. இப்போது மக்களுக்கு பரமாச்சாரியின்

மீதிருந்த கோபம் தணிந்துவிட்டது" என்றார் பௌத்த கடிகைத் தலைவர்.

முன் வரிசையில் குறுநில மன்னர்கள் சிலர் அமர்ந்திருந்தனர். எல்லாருக்கும் முன்னே குறுநில மன்னர்களான இரணியவர்மரும், காடக முத்தரையரும் அமர்ந்திருந்தனர். இரணியவர்மரின் அருகே, அவருடைய கடைசி மகன் பல்லவமல்லன் அமர்ந்திருந்தான். இரணியவர்மருக்குப் பின்னால் அவருடைய மற்ற மகன்களான ஸ்ரீமல்லன், இரணமல்லன், சங்கிராமல்லன் ஆகிய மூவரும் அமர்ந்திருந்தனர். அவர்கள் மூவரும் பல்லவநாட்டின் வடக்கு, மேற்கு தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள கோட்டங்களின் தலைவர்களாகப் பணிபுரிந்து கொண்டிருந்தனர். தரணிகொண்ட போசரின் அழைப்பின் பேரில் அவர்கள் மூவரும் காஞ்சிக்கு வந்திருந்தனர்.

"பல்லவடி அரையர் தம்முடைய படையோடு புறப்பட்டு விட்டதாகச் செய்தி வந்ததே. இன்னும் வந்து சேரவில்லையே" என்றார் காடக முத்தரையர்.

"சித்திரமாயனின் அழைப்பின் பேரில் வருகிறார். எந்த சமயத்திலும் வந்து சேரலாம். சித்திரமாயன் ஓடி விட்ட செய்தி வழியிலேயே அவருக்குக் கிடைத்துத் திரும்பிப் போய்விடக் கூடாது" என்றார் இரணியவர்மர்.

கோயிலின் கண்டாமணி மூன்று முறை ஒலித்தது. தரணிகொண்ட போசர் எழுந்து நின்று பேசத் தொடங்கினார்.

"கைலாசநாதரின் அருளால் நாம் எல்லாரும் இங்கே கூடியிருக்கிறோம். பல்லவ சாம்ராஜ்யம் இப்போது சக்கரவர்த்தியின்றி அநாதையாக இருக்கிறது. இளவரசர் சித்திரமாயனும், மகாராணியும் நாட்டைவிட்டே வெளியேறி விட்டனர். மக்களின் தீர்ப்பு அது. தெய்வத்தின் செயல். மகாராணியின் அடக்குமுறை ஆட்சி கடவுளருளால்

முடிவடைந்து விட்டது. இப்போது இந்நாட்டுக்கு ஒரு சக்ரவர்த்தியைக் கொடுப்போம் என்ற நம்பிக்கையில் தான் மக்கள் நம்மை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

"இப்போது நம் நாடு ஓர் இக்கட்டான நிலையில் இருக்கிறது. தெற்கே பாண்டிய நாடு, நம்மீது கண் வைத்திருக்கிறது. சித்திரமாயனும், மகாராணியும் பாண்டிய நாட்டில் தான் அடைக்கலம் புகுந்திருப்பதாக ஒற்றர்கள் மூலம் அறிகிறோம். சித்திரமாயன் எப்படியும் பாண்டியனுடைய உதவியைப் பெற்று, இங்கே படையெடுத்து வரலாம். வடக்கே, சாளுக்கிய மன்னர் நம்நாட்டின் மீது படையெடுக்க ஆயத்தம் செய்வதாகவும் ஒற்றர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

"ஒரு தலைமுறைக்கு முன் முடிந்த பகையைத் திரும்பவும் புதுப்பிக்க சாளுக்கியன் எண்ணுகிறான் போலும். இப்போது கங்க நாட்டோடு போரிட்டு, போர்க்களத்தில் நம்முடைய சக்ரவர்த்தியை இழந்துவிட்டோம். ஓநாய்கள், மானைக் சுற்றி வளைப்பது போல், நம்முடைய எதிரிகள் நம்மீது பாய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். இதே சமயம், உள்நாட்டிலும் மக்கள் அமைதியாக இல்லை. மகாராணியின் அடக்குமுறைக் காலத்தில், சித்திரமாயனின் கொடுமைகளாலும், வரிப்பளுவினாலும் மக்கள், மனம் கசந்து போயிருக்கின்றனர். சித்திரமாயனிடம் சலுகைகள் பெற்று மேம்பாடடைய எண்ணிய பல சுயநலமிகள், இன்று காஞ்சிக்குள்ளேயே நமக்கு எதிராகச் சதி செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அபாயம் நீங்கவில்லை."

தரணிகொண்ட போசரின் பேச்சை எல்லாரும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். நாட்டின் பிரச்சினைகளை அவர் விவரித்தபோது, மலைத்தனர். ஒரே சமயத்தில் இவ்வளவு பிரச்சினைகளையும் எப்படிச் சமாளிக்க முடியும் என்ற கவலையும் எழுந்தது.

தரணி கொண்ட போசர் தொடர்ந்து பேசினார்.

"இவ்வளவு பிரச்சினைகளையும் நாம் உடனடியாகச் சமாளித்து ஆகவேண்டும். அதற்குத் தகுதி வாய்ந்த ஒரு சக்கரவர்த்தி நமக்கு இப்போது வேண்டும். கலப்பில்லாத தூய்மையான ராஜ குலத்தைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கின்றீர்கள்... அரியணையில் ஏற யார் வருகிறீர்கள்?"

இந்தக் கேள்வி மண்டபம் முழுவதும் பரவி, எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தது. அரசக் குலத்தைச் சாராதவர்கள், அங்கே கூடியிருந்த அரச குலத்தவர்களை ஆவலுடன் கவனித்தனர். அரச குலத்தவர்கள் எல்லாரும் மௌனமாயிருந்தனர். சிறுவன் பல்லவ மல்லன் எல்லாருடைய முகங்களையும் வியப்போடு உற்றுப் பார்த்தான். பிறகு மெல்லத் தன் தந்தையிடம், "அப்பா, நீங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றால் என்ன?" என்று கேட்டான்.

இரணியவர்மர், தம்முடைய வாயில் விரலை வைத்து மறைத்து, பேசக்கூடாது என்று அவனை எச்சரித்தார். பிறகு, குனிந்து அவனுடைய காதில், "சக்கரவர்த்தியாக இருப்பது மிகவும் கஷ்டம். நிம்மதியாக இருக்க முடியாது" என்றார்.

தரணிகொண்ட போசர், அரச குலத்தவர்கள் பக்கம் பார்த்து மீண்டும் வேண்டுகோளை விடுத்தார். "ராஜ குலத்தைச் சார்ந்தவர் யாராவது இந்த மாபெரும் பொறுப்பை ஏற்றுத்தான் தீரவேண்டும், மக்களின் அபிமானத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள் யாரேனும் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்."

அப்போதும் யாரும் முன்வரவில்லை. தரணி கொண்ட போசர் சொன்னார்: "உங்களில் யாரும் முன்வரவில்லை என்றால், கடவுளின் சந்நிதானத்தின் முன்பாக குடஓலை போட்டுத்தான் பார்க்க வேண்டும். கடவுள் முன்னால், ஓலையில் எவருடைய பெயர் வருகிறதோ

அவர், முடிசூடியே ஆகவேண்டும். அதைவிட, உங்களில் யாராவது மனமுவந்து ராஜ்யபாரத்தை ஏற்க முன் வருவது நல்லது."

எல்லாரும் அரச குலத்தவரை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தனர். சற்று நேரம் மௌனம் நிலவியது.

தரணி கொண்ட போசர் மீண்டும், "அரியணையில் யார் ஏறப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

அப்போது எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. திடீரென்று சிறுவன் பல்லவ மல்லன், எழுந்து நின்று, "நான் போவேன்" என்றான். அவனுடைய குரல், கணீரென்று மண்டபம் முழுவதும் ஒலித்தது. எல்லாரும் திகைத்தனர். ராஜ வம்சத்தைச் சேர்ந்த சிலருக்குத் தாங்கள் சக்ரவர்த்தியாக முடிசூட வேண்டும் என்ற ஆசை இருந்தது. அவர்களில் யாராவது எழுந்து சம்மதம் தெரிவிப்பதற்குள், சிறுவன் எழுந்து அறிவித்துவிட்டது, சிலருக்குச் சினத்தை மூட்டியது.

பல்லவ மல்லன் அறிவித்ததைக் கண்ட இரணிய வர்மர், "ஆ...!" என்ற வியப்பினால் கூவினார். அவனுடைய கையைப் பற்றி இழுத்து அமரச் செய்ய முயன்றார்.

தரணி கொண்ட போசரின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. "இரணியவர்மரே, தாங்கள் அவனைத் தடுக்க வேண்டாம். முந்தைய பிறவியில் அவன் விஷ்ணுவை மனமாரப் பூஜித்ததன் விளைவுதான் இன்று, அவனுடைய வாயில் தெய்வ வாக்காக வந்திருக்கிறது. இதை நாம் அப்படியே ஏற்றுக் கொள்வோம். கைலாசநாதர் சந்நிதியில் எழுந்த வாக்கு இது" என்றார்.

இரணியவர்மர் பரபரப்புடன் எழுந்து நின்று, "தரணி கொண்ட போசரே, இவன் சிறுவன். பன்னிரண்டு வயது தான் ஆகிறது" என்றார். அவருடைய குரலில் பதற்றம் தெரிந்தது.

அப்போது, ஜேஷ்டபதி சோமயாஜி சொன்னார்: "இங்கு வயது முக்கியமல்ல, இரணியவர்மரே. இங்கு கூடியிருக்கும் ராஜகுல மக்கள் யாருக்கும் இல்லாத துணிவும், விரைவும் இவனுக்கு இருக்கின்றன. நீங்கள் எல்லாரும் தயங்கினீர்கள், இவன் துணிந்து, 'நான் போவேன் என்றானே!' இது தெய்வவாக்குத்தான். தாங்கள் இதை மறுக்க வேண்டாம்."

இதைக் கேட்ட மற்ற தலைவர்களும், ஆமோதித்தனர், ஆரவாரம் செய்தார்கள். இரணியவர்மர் ஏதோ கூற முனைந்தார். அதற்குள் தரணிகொண்ட போசர் குறுக்கிட்டுப் பேசினார்–

"பல்லவ மல்லன், பல்லவ ராஜ குலத்தின் சந்ததியில் எவ்வித அப்பழுக்கும் இல்லாதவன், இதுவரை அரசாண்ட சிம்மவிஷ்ணு பல்லவவம்சத்தை ஸ்தாபித்த சிம்ம விஷ்ணு பல்லவச் சக்ரவர்த்தியின் தம்பியான பீம வர்ம பல்லவரின் வழியில் தோன்றியவன். இன்று ஒரு வம்சத்தின் சகாப்தம் முடிவு பெற்று, பீமவர்ம வம்சத்தின் சகாப்தம் தொடங்குகிறது.

"இரணியவர்மரே, இந்த தெய்வீக ஏற்பாட்டை தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

இரணியவர்மர் மீண்டும் ஏதோ மறுத்துக் கூற எழுந்தார். ஆனால் அதற்குள் ராஜன் நம்பூதிரி எழுந்து நின்று, உரத்த குரலில், "பல்லவ ராஜகுல திலக, பல்லவச் சக்கரவர்த்தி பல்லவ மல்லன் வாழ்க..." என்றான். உடனே அவனுடைய குரலைத் தொடர்ந்து, மண்டபமே அதிரும்படியாக எல்லோரும், "வாழ்க... வாழ்க..." என்று வாழ்த்தொலி எழுப்பி ஆசிர்வதித்தார்கள்.

கைலாசநாதர் கோவிலின் கண்டாமணி ஒலிக்கத் தொடங்கியது. மணியோசை கேட்டதும் வீதியில் கூடியிருந்த மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. சக்கரவர்த்தி

கிடைத்து விட்டார் என்பதைப் புரிந்து கொண்ட மக்கள், தங்களுக்குச் சக்ரவர்த்தியாக வருகிறவர் யார் என்பதைப் பார்க்க, கோவில் வாசலை நோக்கி முண்டியடித்துக் கொண்டு நின்றார்கள்.

தரணி கொண்ட போசர் அழைத்து வர, கழுத்தில் பெரிய மாலை அணிந்தவாறு, கோவிலின் முன் மண்டபத்துக்கு வந்த பல்லவ மல்லனைக் கண்டதும் மக்கள் திகைப்பிலாழ்ந்தார்கள்.

கம்பீர புருஷனை எதிர்பார்த்த இடத்தில், முகத்தில் பால் வடியும் அழகு மிகுந்த சிறுவன் பல்லவ மல்லனைக் கண்ட கூட்டம், வியப்படைந்து பார்த்துக் கொண்டிருந்தது. பல்லவ மல்லன் சிரித்தபடியே மக்களை நோக்கி தன்னுடைய வலது கரத்தை ஆட்டினான். மக்கள் உற்சாகமடைந்தனர். கூட்டத்திலிருந்த ஒருவன், "பல்லவ சக்ரவர்த்தி பல்லவ மல்லன் வாழ்க" என்று குரல் கொடுக்கவே கூட்டம், கைகொட்டி வாழ்த்தொலி எழுப்பியது. பல்லவ மல்லனை ஜெயவாரணம் என்ற பட்டத்து யானையில், ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

ஊர்வலம் கோட்டை வாயிலை நெருங்கியபோது, குறுநில மன்னர் பல்லவடி அரையர் தம்முடைய சிறு படையுடன் யானைமீது அமர்ந்தவாறு கோட்டைக்குள் வந்து கொண்டிருந்தார். சித்திரமாயனின் வேண்டுதலின்பேரில் சிறுபடையுடன் வந்தார். ஆனால், காஞ்சிக் கோட்டையை நெருங்கியதுமே காஞ்சியைப் பற்றிய செய்தியை அறிந்தார். பல்லவ அரியணைக்கு அரசன் யாருமில்லை என்பதை அறிந்ததுமே காஞ்சிக் கோட்டைக்குள் விரைந்தார். உள்ளூர ஓர் ஆசை. சந்தர்ப்பம் கிடைத்தால், அரியணையைக் கைப்பற்றி விடலாம் என்று எண்ணியிருந்தார். கோட்டைக்குள் அவருக்கு எதிரே வந்து கொண்டிருந்த ஊர்வலத்தைக் கண்டதும் திகைப்படைந்தார்.

சற்று தூரத்தில் ஜெயவாரணத்தின் மீது பல்லவ மல்லன் அமர்ந்தவாறு, மக்கள் சூழ வந்து கொண்டிருந்ததைக் கண்டார். சட்டென்று யானைமீதிருந்து இறங்கி, குதிரையில் ஏறிக்கொண்டார், அவருடைய படையைச் சேர்ந்த வீரனொருவன் அவரை அணுகி, ஊர்வலத்தைப் பற்றிய விவரத்தைக் கூறினான்.

பல்லவடி அரையருக்கு உள்ளூரக் கோபம் மூண்டது. பொறாமை உடலெல்லாம் தகித்தது, "இரணியவர்மரின் மகனுக்கா அரியணை" என்று பொறுமினார். அந்த வேளையில் தம்மால் ஏதும் செய்ய இயலாது என்பதை உணர்ந்து, முகத்தில் மலர்ச்சியை வலிய வரவழைத்துக் கொண்டு புதுச் சக்ரவர்த்தியை எதிர்கொண்டழைத்துச் செல்வதற்காக பல்லவ மல்லனை நோக்கி விரைந்தார்.

எதிரே அரையரைக் கண்டதும் ஊர்வலத்தை நிறுத்தினார் இரணியவர்மர். அரையர் பல்லவ மல்லனை வாழ்த்தி வணங்கிவிட்டு, இரணியவர்மரை மார்போடணைத்துக் கொண்டார். அந்தக் காட்சியைக் கண்ட தரணிகொண்ட போசர் உள்ளூரச் சிரித்தார். அருகிலிருந்த ஜெயவர்மரிடம் "பல்லவடி அரையர் நன்றாக நடிக்கத் தெரிந்திருக்கிறார்" என்றார்.

பல்லவடி அரையரின் யானை முன்னே அழைத்துச் செல்ல, பல்லவமல்லன் பட்டத்து யானை ஜெயவாரணத்தின் மீது அரண்மனையை நோக்கிப் பவனி சென்றான்.

அரண்மனையில் பட்டாபிஷேகச் சடங்குகள் நடைபெற்றன. இரண்டாம் நந்திவர்மன் என்று அபிஷேகப்பெயர் ஏற்று, பல்லவமல்லன் சிம்மாசனம் ஏறினான்.

பல்லவமல்லன் சக்கரவர்த்தியாக முடி சூடியதும், முதல் பணியாக, தனக்கு ஒரு முதன் மந்திரியை நியமிக்க வேண்டியிருந்தது. தரணிகொண்ட போசர், தமக்கு எழுபது வயதுக்கு மேலாகி விட்டதென்றும், இனி வாழ்க்கையை

அமைதியாக கழிக்கப் போவதாகவும் கூறி, பதவியை ஏற்க மறுத்துவிட்டார். அவருடைய ஆலோசனையின் பேரில், ராஜன் நம்பூதிரியைத் தனக்கு முதன் மந்திரியாக நியமித்து பல்லவ மல்லன் அரச மண்டபத்தில் அறிவித்தான்.

எதிர்பாராத அந்த அறிவிப்பைக் கேட்டு ராஜன் நம்பூதிரி திடுக்கிட்டான். பரபரப்புடன் எழுந்தான். அருகிலிருந்த தரணி கொண்ட போசர், அவன் கையைப் பற்றி, "மறுத்து விடாதே, சக்கரவர்த்தி முடிசூடிய பிறகு அறிவிக்கும் முதல் உத்தரவு இது. தெய்வவாக்காகக் கருதி ஏற்றுக் கொள். இந்தப் பதவிக்கு நீ பொருத்தமானவன்தான். உன்னுடைய கல்வி உனக்குத் துணை நிற்கும்" என்றார்.

ராஜன் நம்பூதிரியின் உடல் சிறிது நடுங்கியது. பல்லவச் சக்கரவர்த்தியை அடிபணிந்து எழுந்து நின்றான். ராஜன் நம்பூதிரிக்கு முதன் மந்திரிக்குரிய தலைப்பாகையை பல்லவ மல்லன் தன் கைப்பட அணிவித்து, முத்திரை மோதிரத்தையும் கொடுத்தபோது, தரணிகொண்ட போசர் உரத்த குரலில், "பல்லவ சாம்ராஜ்ய முதன்மந்திரி பிரும்ம ஸ்ரீராஜன் வாழ்க" என்றார். அதைத் தொடர்ந்து மண்டபத்தில் வாழ்த்தொலிகள் எழுந்தன.

33. ஈரேழாண்டுத் தவம்

பல்லவ சாம்ராஜ்யத்தின் அரியணைக்குச் சக்கரவர்த்தி கிடைத்துவிட்டார். தமிழக வரலாற்றில், பல்லவ ஆட்சியும் சோழ ஆட்சியும் மகோன்னத நிலையிலிருந்தன. சோழ மன்னர்களின் ஆட்சி தமிழ்நாட்டில் நன்கு வேருன்றத் தொடங்குவதற்கு அறுநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே தொண்ட மண்டலத்தில் பல்லவ வம்சத்தினர் ஆளத் தொடங்கினர். ஏறத்தாழ பல்லவர்களின் ஆட்சி, தமிழ்நாட்டில் அறுநூற்றைம்பது ஆண்டுகள் நடைபெற்றது. பல்லவ ஆட்சி மிக உன்னத நிலையிலிருந்த காலகட்டத்தில்

தான் இக்கதையின் சம்பவங்கள் நிகழ்ந்தன. பன்னிரண்டு வயதில் சக்ரவர்த்தியாக முடிசூடிய பல்லவமல்லன், எழுபத் தேழு வயது வரை அரசாண்டான். இந்திய வரலாற்றி லேயே–உலக வரலாற்றில் என்று கூடச் சொல்லலாம்–ஓர் அரசன் அவ்வளவு நீண்ட காலம் ஆண்டதில்லை. அவனு டைய காலத்தில் தான் பொறாமை கொண்ட அண்டை நாட்டவர்களாலும், வடக்கே இருந்த சாளுக்கியர்களாலும் மிகுந்த தொந்திரவுகள் இருந்தன. பதினெட்டுக்கும் மேற் பட்ட போர்களில் ஈடுபட்டு, பல்லவ ஆட்சியை காப் பாற்றி, பலப்படுத்த வேண்டியிருந்தது.

பல்லவ மல்லன் முடிசூடியபோது, பன்னிரண்டு வயதுச் சிறுவனாயிருந்ததால், அவன் சார்பில் ஆட்சிப் பொறுப்பை இரணியவர்மர் மேற்பார்வையிட்டார். மக்கள் அமைதி அடைந்து விட்டார்கள், மகாராணியும், சித்திர மாயனும் நாட்டை விட்டுத் தப்பி ஓடியதை எல்லாம் விரை வில் மறந்து விட்டார்கள். ஆனால் உதயசந்திரன் மட்டும் மறக்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். பாண்டிய நாட்டுக்குத் தப்பிச் சென்றவனை இனி பழிவாங்குவது முடிகிற காரியமா? சபதம் நிறைவேறவில்லையே என்ற தவிப்பு, அவனை மிகவும் வாட்டிக் கொண்டிருந்தது.

எதிலும் பிடிப்பற்று ஆசிரமத்தில் தங்கியிருந்தான். சித்திரமாயனைப் பழிவாங்கும் வெறி முள்ளைப் போல் உறுத்திக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் இரவு யாரிடமும் கூறாமல் பாண்டிய நாட்டை நோக்கிப் புறப்பட்டான். அங்கு சென்ற பிறகு தான், பாண்டிய மன்னனின் பாதுகாப்பிலிருந்த சித்திர மாயனை அணுகுவது இலகுவில் இயலாத காரியம் என்பதை உணர்ந்தான். கடைசியில் தனது முயற்சியில் தோல்வியுற்று மிகுந்த ஏமாற்றத்துடன் பல்லவ நாடு திரும்பி னான்.

பாண்டிய நாட்டிலிருந்து ஏமாற்றத்துடன் திரும்பிய உதயசந்திரனை உற்சாகப்படுத்துவதற்கு, ராஜன் நம்பூதிரி எவ்வளவோ முயன்று பார்த்தான். தன்னோடு முதன் மந்திரியின் மாளிகையில் தங்குமாறு அழைத்தான். உதயசந்திரன் மறுத்து விட்டான். ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்திலிருந்து அவருடைய போதனைகளிலும், தியானப் பயிற்சிகளிலும் ஈடுபட்டால் தன்னுடைய மனதுக்கு அமைதி கிட்டும் என்ற எண்ணத்தில் சில காலம் ஆசிரமத்திலேயே தங்கினான்.

ஆசிரமத்திலிருந்த உதயசந்திரனை, ராஜன் நம்பூதிரி அடிக்கடி சென்று பார்த்து ஆறுதல் சொன்னான். யாருடைய ஆறுதலும் அவனுடைய மனதுக்கு அமைதியைக் கொடுப்பதாயில்லை.

டெங்லீயின் வீட்டுக்கு அடிக்கடி போய், தோட்டத்தில் மருக்கொழுந்து செடிகளின் நடுவேயிருந்த லீனாவின் சமாதி அருகே பல நாழிகைகள் அவளோடு களித்திருந்த சம்பவங்களை எண்ணி எண்ணி மறுகிக் கண்ணீர் சிந்தினான்.

அவனுக்குப் பொறுப்பான ஒரு பணியைக் கொடுத்தால் கடந்த காலத்தை மறக்க முயலுவான் என்று எண்ணிய தரணிகொண்ட போசர், அவனைக் காஞ்சிக் கோட்டையின் தளபதியாக நியமிக்க ஏற்பாடு செய்தார்.

கோட்டைத் தளபதி பதவியில் கருத்தை ஊன்றினாலும், கடந்த கால நினைவுகள் உதயசந்திரனை விட்டு விலகவில்லை. சித்திரமாயனைப் பழி வாங்கும் எண்ணம், அவனை முழுமையாக ஆக்ரமித்திருந்தது. கோட்டைத் தளபதியாகப் பதவி ஏற்றதும் அவனுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டது. குதிரைப்படைத் தலைவனாக நியமிக்கப்பட்டிருந்த தேவசோமாதான் அவனுக்கு வாள் வீச்சுப் பயிற்சியளித்தான். அப்போது, உதயசந்திரன் வாளினை

வீசிய போதெல்லாம், ஒவ்வொரு வீச்சையும் சித்திர மாயனை நோக்கி வீசுவதாகக் கற்பனை செய்தான். விற் பயிற்சியின் போது எய்த அம்பெல்லாம், சித்திரமாயன் மீது பாய்ந்ததாகக் கற்பனை செய்தான். காலாட்படைத் தலைவ னாயிருந்த களுபந்தாவிடம் மற்போர் பயின்றபோது, எதிரியைத் தரையில் உருட்டிப் புரட்டிய போதெல்லாம், சித்திரமாயனை மண்ணோடு புரட்டியதாக எண்ணினான்.

அவனுடைய மனநிலை அறிந்த யோகி ருத்திர பரமாச் சாரி அவனுள் புதைந்து கிடந்த பழி உணர்வை அகற்றிவிட முயன்றார். அவருடைய போதனைகளிலும், தியானப் பயிற்சியிலும் உதயசந்திரன் ஈடுபட்டான். மனத்தில் சிறிது அமைதி கூடுவது போலிருந்தது. ஆனால், மனத்தின் ஆழத் தில் நன்கு புதைந்து விட்ட துக்கத்தை அவனால் அகற்றவே இயலவில்லை. துக்கம் மேலெழுந்த போதெல்லாம், சித்திரமாயனைப் பழி வாங்கும் உணர்வும் கொந்தளித்தது.

ஒரு நாள் யோகி பரமாச்சாரியோடு தனித்திருந்த போது, அவரிடம் தன் மனத்தில் புதைந்துகிடந்தவைகள் அனைத் தையும் வெளிப்படுத்தினான். அவனைப் பேசவிட்டு பரமாச்சாரி கேட்டுக் கொண்டிருந்தார். வயிற்றுக்குள் போயி ருந்த நஞ்சை, வாந்தியெடுக்க வைத்து வெளியேற்றுவது போல், அவன் மனதில் புதைந்துகிடந்த சம்பவங்களை வெளியேற்றிக் கொண்டிருந்தார்.

லீனாவை முதன் முதலில் கப்பலில் சந்தித்தது, அவளுக்காக கொள்ளையரோடு போரிட்டது; அவள் மீது அவன் கொண்டிருந்த காதல்; டெங்லீ வீட்டுத் தோட்டத்தில் ஒரு நாள், அவளோடு நிலைமறந்து அனுபவித்த இன்பம்; அவளை இழந்த சம்பவம்; அவன் எடுத்துக் கொண்ட சபதம், எல்லாவற்றையும் ஒரு விதலயிப்புடன் கூறினான்.

"காதல் இன்பத்தை லீனாவுடன் ஒரு முறை அனுபவித்

தாயே, அந்தச் சமயத்தில் நீ உணர்ந்ததென்ன?" என்று கேட்டார், ருத்திர பரமாச்சாரி.

"ஓ...! அந்த அனுபவத்தை எப்படி விவரிக்க முடியும் சுவாமி? அது ஒரு அனுபவம், எனக்கே உரிய அனுபவம்" என்றான், உதயசந்திரன் லயிப்புடன்.

"அதை இப்போது நினைவில் கொண்டு வந்து பார். அந்தச் சமயத்தில் நீ எப்படியெல்லாம் நடந்துகொண்டாய்; எப்படியெல்லாம் உன் உடல் தவித்தது; இயங்கியது. உணர்வுகள், எப்படி உன் உடலை ஆட்டிப்படைத்தன. நினைத்துப்பார்."

"அந்தச் சமயத்தில் உலகமே மறந்துவிட்டது. இந்த உடல் கூட இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஒரே ஆனந்த பரவசம் நாங்கள் இருவரும், எங்கெங்கோ காற்றில் மிதந்து உயர உயரப் போவது போலிருந்தது. எங்கும் ஆனந்தமயமான உணர்வுகள் நிரம்பி, அந்த உணர்வுகளுக்குள் மூழ்கி, ஒருவருக்குள் ஒருவர் ஐக்கியமாகிக் கரைந்து, கடைசியில் நானே இல்லாமல் போய்விட்டேன்!" என்றான் உதயசந்திரன். அந்த அனுபவத்தைக் கூறிய போது பரவசமடைந்தான்.

ருத்திர பரமாச்சாரியின் வதனத்தில் புன்முறுவல் தோன்றியது. "உதயசந்திரா, இந்த ஆன்மபூர்வமான ஆனந்த உணர்வைவிடவா, சித்திரமாயனை பழி வாங்கும் உணர்வு இனிமையைதருகிறது? இவ்வளவுலயிப்பும், தான் என்னும் உணர்வையே இழந்து பரவசப்படும் அற்புத நிலையும், பழிவாங்கும் வெறிக்கு இருக்கவா செய்கிறது?" என்று கேட்டார்.

"சுவாமி, பழி உணர்வு என்னுள் ஆனந்தத்தைக் கொடுக்கவில்லை. ஆனால், லீனாவை இழந்த நினைவு எழும் போதெல்லாம், என்னுடைய சபதம், என்னுள்ளே

ஆவேசத்தை எழுப்புகிறதே, நான் என்ன செய்யட்டும்?" என்று பரிதாபமாகக் கேட்டான், உதயசந்திரன்.

மிகுந்த கருணையுடன் அவனுடைய தோள்மீது கையை வைத்து வருடியபடி ருத்திரபரமாச்சாரி சொன்னார்: "லீனாவுடன் நீ பெற்ற அனுபவத்தை மீண்டும் பெற முடியுமானால், அந்த ஆனந்த நிலையிலிருந்து படிப்படியாக ஆன்மீக உணர்வில் ஏறமுடியுமே. உன்னைப் பற்றியிருக்கும் துன்பங்களிலிருந்து விடுதலையடையலாமே."

"அதெப்படி முடியும், லீனா மறைந்த பிறகு?"

"லீனா மறைந்துவிட்டாள். தோன்றியவையெல்லாம் மறைந்து கொண்டுதானிருக்கும். ஆனால் நீ அனுபவித்த காதல் உணர்வு மறைவதில்லை. மீண்டும் காதலிக்க முடியுமே."

"லீனாவைக் காதலித்த மனத்தால் இன்னொருத்தியைக் காதலிக்க முடியுமா, சுவாமி?"

"காதலுக்கு லீனா ஒரு சாதனம். காதல் உணர்வுகள் நிலையானவை. காதல் அனுபவங்களும் நிலையானவை. அவற்றைத் தரும் சாதனங்கள் தோன்றலாம், மறையலாம். ஒரு சாதனம் மறைந்துவிட்டால், அதே அனுபவத்துக்கு இன்னொரு சாதனத்தைப் பெற்றுக்கொள்வதில் என்ன தவறு? காதல் என்பது, ஒரே ஒரு பொருள் மீதோ அல்லது ஒரு நபர் மீதோ மட்டும் தோன்றும் குறுகிய உணர்வல்ல. அது, பரந்து பிரபஞ்சம் முழுவதும் வியாபிக்கும் அற்புதமான ஓர் ஆன்மீக உணர்வு. எதையும் காதலிக்க முடியும். இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் காதலிக்க முடியும். அதுவே மகாசுகம். அந்தப் பக்குவத்தைப் பெறுவதுதான் பேரானந்த நிலை" என்றார், யோகி.

"இனி எனக்குக் காதல் தோன்றும் என்ற நம்பிக்கை இல்லை."

"உன்னால் இனியும் காதலிக்க முடியும். இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே மனிதனுடைய காதலுக்காகத்தான். காதலிக்கும் தன்மையைப் பயிற்சி மூலமாகப் பெற்று விடலாம். உன்னை நீயே கவனி. ஒரு பார்வையாளனைப் போல் விலகி இருந்து உன் உணர்வுகளைக் கவனி" என்று போதித்தார் யோகி.

உதயசந்திரன் தனித்திருந்தபோது, பரமாச்சாரி சொன்னவற்றைச் சிந்தித்துப் பார்த்தான். சில நாட்களுக்கு முன், ஆசிரமத்துச் சீடர்களுக்கு அவர் போதித்தவை நினைவில் தோன்றின. அப்போது பரமாச்சாரி சொல்லியிருந்தார்:

"உன்னிடம் கோபம் தோன்றினால், கோபப்படு. கோபத்தைப் பற்றி அக்கறை கொள்ளவேண்டாம். பேராசை தோன்றுமானால் பேராசைகொள். அதைப்பற்றிக் கவலைகொள்ளவேண்டாம். காமவெறியனாக இருப்பாயானால் அப்படியே இரு. அது ஒரு குறையல்ல. எல்லாம் உன்னுடைய தன்மைகளே. எதையும் நீ வெறுத்து ஒதுக்க வேண்டியதில்லை. உன்னுடைய இயல்பான குணங்களை எதிர்த்துப் போராடாதே. ஆனால், அதே சமயம் உன்னுடைய கோபம், பேராசை, பொறாமை, காமம் ஆகிய எல்லா உணர்வுகளையும் உற்றுக் கவனி. ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள். அந்த உணர்வுகளோடு நீயும் ஒன்றிவிடாதே. ஒரு பார்வையாளனைப்போல் விலகியிருந்து கண்காணித்துக் கொண்டிரு. மெல்ல மெல்ல அந்த உணர்வுகளின் தன்மையை நீ அறிவாய். உன்னை அவை எப்படியெல்லாம் பயன்படுத்துகின்றன என்பதை அறிந்து கொள்ள முடியும். அப்போது, உனக்கே சிரிப்பு வரும். உன்னுடைய குணங்களை கவனித்து நீ சிரிக்கச் சிரிக்க, அவற்றிலிருந்து நீ விலகி, விடுதலை பெறுவதை உணர்வாய். உணர்வுகள் உன்னுடைய ஆளுகைக்குள் அடங்கிவிடும்."

மற்றொரு நாள் ஒரு சீடன், "சுவாமி என்னதான்

மனதைக் கட்டுப்படுத்தினாலும் காம உணர்விலிருந்து விடுபட முடியவில்லையே. காதலியை நாடித்தானே ஓடுகிறது" என்று கேட்டபோது யோகி சொன்னார்:

"காமசுகத்தில் திளைத்திருக்க ஆவல் கொண்டால், அந்த உணர்வை எதிர்த்துப் போராடாதே. அதில் ஈடுபடு. அதில் தவறு ஒன்றுமில்லை. உடலின் இயல்பான வேட்கைதான். அந்த அனுபவத்தைக் கூர்ந்து கவனி. அந்த வேளையில் உன்னுடைய சக்தியெல்லாம் எப்படி இயங்குகிறது என்று பார், உடலின் அசைவுகளைக் கவனி. இரு உடல்கள் எப்படியெல்லாம் தவிப்பதைத் தீர்த்துக் கொள்ளத் தவிக்கின்றன என்பதைப் பார். இருதயம் ஒழுங்கின்றித் துடிப்பதையும், உடல் முழுவதும் சூடேறித் தகிப்பதையும், மூச்சு கட்டுப்பாட்டை மீறி இரைப்பதையும் உணரலாம். எல்லா உணர்வுகளும் மெல்ல உன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்து மீறி, தாமாகச் செயல்படும் கட்டத்தை நெருங்கும். உடல் முழுவதுமே உன் ஆட்சியிலிருந்து விடுபட்டு, உணர்வுகளின் ஆதிக்கத்தில் சிக்கித் தீவிரமாக இயங்கத் தொடங்கும் நிலையை எட்டும். உணர்வு உச்சநிலையை நெருங்கும் நேரத்தில் எதுவுமே உன் கட்டுப்பாட்டில் இராது. இவை எல்லாவற்றையும் அப்போது கூர்ந்து கவனி. அந்த அனுபவத்தில் எவ்வளவோ விஷயங்கள் அடங்கியிருப்பதை உணர்வாய், எல்லாமே மிக நுணுக்கமானவை; விசித்திரமானவை. சிக்கலானவை! காம நுகர்ச்சி போன்று, வேறு எதுவுமே அவ்வளவு நுணுக்கமும், விசித்திரமும் கொண்டதல்ல. இந்த நுகர்ச்சியில்தான் உடலும் உள்ளமும் பூரணமாக இணைந்து ஈடுபடுகின்றன. மனம் இலேசாகிறது. ஆனால் இவற்றையெல்லாம் விலகியிருந்து கவனிக்கும் போது, நீ மட்டும் அதில் ஈடுபடுவதில்லை. சாட்சி பூதனாக இருந்து கவனிக்கிறாய். நடைபெற்றதெல்லாம் யாருக்கோ நேர்ந்தைப்போல் நீ மட்டும் விலகியிருந்து உன்னைக் கவனிக்கும்போது அதுவே ஒரு பேரானந்த அனுபவம்.

இதே போல் நீ கோபப்படும் போதும், ஆசைப்படும் போதும் பொறாமைப்படும்போதும், துக்கப்படும்போதும், மகிழ்ச்சியடையும்போதும், பழிவாங்க எண்ணும்போதும் உன்னிடமிருந்து விலகி, உன்னைக் கவனி. இந்தக் கவனம் நீண்டு கொண்டே போனால், அறியாமை அகன்று பேரொளியைக் காண்பாய்."

ருத்ர பரமாச்சாரி சொன்னபடி, உதயசந்திரன், தன்னுள்ளே அடங்கியிருந்த பழிவாங்கும் உணர்வைக் கவனிக்கத் தொடங்கினான். அந்த உணர்வு, அவனைப் பாடாய்ப் படுத்தியது, தூண்டியது. வெறிக் கூச்சலிட்டது. முரண்டியது. உள்ளிருந்தே அரித்தது. எல்லாவற்றையும் கவனித்தான். ஆனால் அதை மனத்தை விட்டுமட்டும் நீக்க அவனால் இயலவில்லை. முள்மாதிரி உள்ளிருந்து உறுத்திக் கொண்டிருந்தது.

ஏறத்தாழ பதினான்கு ஆண்டுகள் ஆசிரமத்திலேயே தங்கியிருந்தான் உதயசந்திரன். தன்னுடைய முழுநேரத்தையும் அரசுப் பணிக்காகச் செலவிட்டான். பல்லவ மல்லன், சக்ரவர்த்தியாக முடிசூடிய ஐந்தாவது ஆண்டில், பல்லவ சாம்ராஜ்யத்தின் தளபதியாக உதயசந்திரன் நியமிக்கப்பட்டான். உதசயந்திரனின் திறமையையும் துணிவையும் ஏற்கெனவே அறிந்திருந்த தரணி கொண்ட போசரும், இரணியவர்மரும் அவனைத் தளபதியாக்க சிபாரிசு செய்தனர். பல்லவ சாம்ராஜ்யம், முதன் மந்திரி, பிரும்ம ஸ்ரீராஜன் நம்பூதிரியின் அறிவையும், தளபதி உதயசந்திரனின் வீரத்தையும் துணையாகப் பெற்றிருந்தது.

தளபதிப் பதவி, உதயசந்திரனின் மனதுக்கு உற்சாகமூட்டியிருந்ததென்றாலும், அவனுடைய மன ஆழத்தில் பதிந்துவிட்ட லீனாவின் நினைவும், சபதமும் அவனை விட்டு நீங்குவதாயில்லை. அவனுடைய மனநிலையை அறிந்த மன்னன் பல்லவமல்லன் சொன்னான்: "தளபதியை

எண்ணும்போதுதான் மனதுக்கு வேதனையாக இருக்கிறது. அவருடைய வீரத்தையும் திறமையையும் எண்ணிப் பார்க்கும்போது அவ்வளவு பெரிய வீரர், ஒரு சிறு விஷயத்தை மனதில் போட்டுக்கொண்டு பதினான்கு ஆண்டுகளாக அமைதியின்றித் தவிப்பதுதான் விந்தையாக இருக்கிறது."

"காதலின் சக்தி மிகப் பெரிது. அவருடைய காதலி அவர் மடியில் உயிரை விட்டபோது, அவர் எடுத்த சபதம் அது. அதை நிறைவேற்றும் வரை, அந்த ஏக்கம் அவரை விட்டு மறையாது" என்றான், ராஜன் நம்பூதிரி.

"காதலுக்கு அவ்வளவு சக்தி உண்டா? ஒரு ஆண், ஒரு பெண்ணை நாடுகிறான். இது ஒரு பெரிய விஷயமா? புலவர்கள் இதைப் பெரிதாகப் புகழ்ந்து பாடுவதும், உதயசந்திரனைப் போல் பலர் இதே நிலையில் உழலுவதும் வேடிக்கைதான்" என்றான் பல்லவ மல்லன்.

"பிரபு. தங்களுக்கு காதலிக்க இதுவரை சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டது. காதலைப் பற்றித் தாங்கள் அறிவதற்கு முன்பே, தங்களுக்குத் திருமணம் ஆகி விட்டது."

"ராணியை நான் விரும்பவில்லையா? அது காதல் தானே? அவள் மீது எனக்கு அன்பு இருக்கிறதே."

"மகாராஜாவுக்கு ஒரு மகாராணி தேவை. இந்த நாட்டைப் பிற்காலத்தில் ஆள, ஒரு ராஜகுமாரனைப் பெற்றெடுப்பதும் தேவை. இந்தத் தேவைகளின் அடிப்படையில், ஒரு நாட்டு இளவரசியை கடமைக்காகத் திருமணம் செய்திருக்கிறீர்கள். மனைவி என்ற பந்தத்தினால், அன்பு பாராட்டுகிறீர்கள். மகாராணியாரைப் பற்றித் தங்களுடைய மனைவி என்ற உறவுக்கு அப்பால் தாங்கள் கற்பனை செய்ததுண்டா?" என்று கேட்டான் ராஜன் நம்பூதிரி.

பல்லவ மல்லன், யோசித்தான். ராஜன் நம்பூதிரி தொடர்ந்து கேட்டான்– "பிரபு, எப்போதாவது மகாராணி யாரை காணவேண்டுமென்று தவியாகத் தவித்திருக் கிறீர்களா? நீங்கள் மகாராணியாரை நெருங்கும்போது, எப்போதாவது தன்னை மறந்த நிலையை அடைந்திருக் கிறீர்களா? எந்தச் சமயத்திலாவது, தாங்களும் மகாராணி யாரும், உயிரே ஒன்றாக இணைவதுபோல் உணர்ந்த துண்டா?"

இந்தக் கேள்விகளை பல்லவ மல்லன் மிகுந்த வியப் புடன் கவனித்தான். பிறகு சொன்னான்: "மகாராணியை நான் சில சமயம் ஆசையோடு காண, அந்தப்புறம் போகி றேன். இன்பத்தை அனுபவிக்கிறேன். அதெல்லாம்?"

"அது வெறும் இச்சைதான். இந்த உடல், அவ்வப் போது தணித்துக்கொள்ளும் ஒருவித பசி அது, அவ்வளவு தான். ஆனால், காதல் அதற்கும் அப்பாற்பட்டது. அதில் காமம் உண்டு, வெறியும் உண்டு. ஆனால் எல்லாம் உயி ரோடு இணையும் மாபெரும் இயக்கம் என்கிறார், ருத்ர பரமாச்சாரி. காதல் வயப்பட்டு, இரு உடல்கள் சேரும் நேரத் தில், இரு உயிர்களுமே கலந்து ஒன்றாகிவிடுகின்றன, என் கிறார்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"நான் அந்தக் காதலை எப்படி அடைவது?" – பல்லவ மல்லன் ஆவலுடன் கேட்டான்.

ராஜன் நம்பூதிரி சிரித்தான். "மகாராஜா, காதல் என்பது நினைத்தவுடன் பெறக்கூடிய ஒன்றா என்ன? உள்ளத்தில் தானாகத் தோன்றும் உணர்வு அது. எந்தச் சமயத்திலும் தோன்றலாம். எந்த வயதிலும் தோன்றலாம். அதனுடைய நிலைக் களம் மனமே தவிர, உடல் அல்ல" என்றான் ராஜன் நம்பூதிரி.

"மந்திரியாருக்கு இதில் அனுபவம் உண்டோ?" என்று பல்லவ மல்லன் கேட்டான்.

"இன்னும் இல்லை பிரபு. என் காதலைத் தூண்டும் அளவுக்கு ஒரு பெண்ணும் என் எதிரே இன்னும் தென்படவில்லை."

"பின்னே காதலைப் பற்றி நுணுக்கமாகப் பேசுகிறீர்களே?"

"ருத்திர பரமாச்சாரியின் தத்துவங்களைக் கேட்டிருக்கிறேன். காதலைப் பற்றிய அவருடைய விளக்கம் மிக அற்புதமானது. தத்துவங்களைத் தெரிந்திருக்கிறேனே தவிர இன்னும் அனுபவத்தில் உணரவில்லை, பிரபு."

"மனைவியைக் காதலிக்க முடியாதா?"

"ஏன் முடியாது? ஆனால், காதலைப் பலவந்தமாக வரவழைக்க முடியாதே. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் தீவிரமான காதல் உணர்வு பல ஜென்மங்களாகத் தொடரும் ஒரு ஜென்மாந்திர உணர்வு என்று எண்ணுகிறேன். அப்படி ஒரு ஜென்மாந்திரத் தொடர்பு, வாய்க்கும் மனைவியுடனிருக்குமானால் மனைவிமீது காதல் தோன்ற முடியுமென்று எண்ணுகிறேன்" என்றான் ராஜன் நம்பூதிரி.

பல்லவமல்லன் சிந்தித்தவாறு சற்று நேரம் மௌனமாய் இருந்தான்.

"இந்த இரகசியத்தை பூரணமாக அறிய வேண்டுமானால், யோகி பரமாச்சாரியிடம் பாடம் கேட்கலாமே" என்றான் ராஜன் நம்பூதிரி.

"எனக்கு அவர் மீது நம்பிக்கை விழவில்லை. வெறும் காதல் உணர்வு மூலம் பேரின்பத்தை அடையலாம் என்கிறார்! எனக்கு அவருடைய தத்துவங்களில் ஈடுபாடில்லை. உதயசந்திரன், பதினான்கு ஆண்டுகளாக ஆசிரமத்தில் இருக்கிறாரே, என்ன கண்டார்? அவருடைய மனச்சஞ்சலம் நீங்கியபாடில்லையே" என்றான் பல்லவ மல்லன். சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு, ராஜன் நம்பூதிரி

யைப் பார்த்து, "எனக்கு ஒன்று தோன்றுகிறது. பாண்டிய மன்னனுக்கு ஒரு தூதனை அனுப்பலாமா?" என்று கேட்டான்.

"எதற்காக மகாராஜா?"

"சித்திரமாயனை பல்லவ நாட்டில் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டு, ஒரு தூதனை அனுப்புவோம். பாண்டிய மன்னன் மறுத்தால், பாண்டிய நாட்டின் மீது உதய சந்திரனை படையெடுத்துச் செல்லும்படி ஆணையிடு வோம். தளபதி, தம்முடைய சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளட்டும்."

"நல்ல யோசனைதான், பிரபு. இதற்குத் தளபதியும் உடன்படுவார்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"சரி. காதல் ஆராய்ச்சியை நாம் பிறகு வைத்துக் கொள் வோம். உடனே பாண்டிய நாட்டுக்கு ஒரு தூதனை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்" என்றான், பல்லவமல்லன்.

ஒரு நாள் மாலை. ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத் துக்கு ராஜன் நம்பூதிரி சென்றான். யோகியிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவன் சொன்னான்– "சுவாமி, இன்னும் உதயசந்திரனின் மனதை விட்டுப் பழிவாங்கும் உணர்வு மறையவில்லையே. அவனுக்காக, பாண்டிய நாட்டின் மீதே படையெடுக்கவும் சக்ரவர்த்தி தயாராக இருக்கிறார்."

"ஓ...! பழி வாங்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை மன்னர் உண்டாக்கிக் கொடுக்க நினைக்கிறாரா? அப்படியாவது பழி வாங்கட்டும். அதன் பிறகுதான், அவனுடைய உள்ளத்தில் குத்தியிருக்கும் முள் வெளிப்படும். அதுவரை, அவன் மனம் உழன்றுகொண்டுதானிருக்கும்" என்றார், ருத்திர பரமாச்சாரி.

"பழி வாங்கும் எண்ணம் கெட்டதல்லவா?" என்றான் ராஜன் நம்பூதிரி.

"கெட்டது, நல்லது என்று பிரித்து வைத்துக்கொண்டிருப்பதால்தான் மனத்தில் அழுக்குகள் படிகின்றன. கடவுளுடைய படைப்பில், கெட்டது என்பதோ நல்லது என்பதோ இல்லை. ஒரு செயலுக்கு அப்படி வர்ணத்தைக் கொடுத்துக் கொண்டு, அல்லல்படுகிறோம். கொலை, தீயசெயல் என்றால், போர்க்களத்தில் நடைபெறுகின்றனவே லட்சக் கணக்கில் கொலைகள்! செயல் ஒன்றுதான். ஆனால், இடத்துக்குத் தகுந்தபடி வர்ணம் பூசுகிறது, மனிதனின் அறியாமை. ஒரு பெண்ணைப் பலவந்தப்படுத்துவதை, ஒருத்தியின் சம்மதமின்றி வலுக்கட்டாயமாக அணைப்பதைக் கற்பழிப்பு என்று குற்றம் சாட்டுகிறோம். ஆனால், ஒவ்வொரு கணவனும், மனைவியிடம் இந்தக் குற்றத்தைத் தானே செய்து கொண்டிருக்கிறான். பலவந்தமாகப் பொருளைப் பிடுங்குவதற்கு, கொள்ளை என்று பெயரிட்டுத் தூற்றுகிறோம். அதே செயலை, அரசு புரியும்போது, அதற்கு வரி என்று பெயரிட்டு, அமைதியடைகிறோம். கொடுமை என்றோ, கருணை என்றோ இயற்கையில் எதுவுமில்லை. துச்சாதனனை பீமன் பழி வாங்கினானே; அவனுடைய ரத்தத்தைப் பாஞ்சாலி கூந்தலில் தடவிக்கொண்டாளே! துரியோதனாதிகள் அனைவரையும் பழி தீர்த்தார்களே! வாலியையும், இராவணனையும் இராமன் கொன்றானே! அத்தனையும் தீச்செயல்களா? எல்லாமே மனித உணர்வுகளோடு இசைந்த இயல்பான நடவடிக்கைகள் தாம். துச்சாதனனைப் பழி வாங்கியிராவிடில், பாஞ்சாலியால் மோட்சத்துக்குப் போயிருக்க முடியாது. உள்ளத்தில் படிந்திருந்த குரோதம் என்னும் அழுக்கு, துச்சாதனனின் இரத்தத்தால் கழுவப்பட்டு, பாஞ்சாலியின் உள்ளம் தூய்மையானதினால்தான் மோட்சத்துக்கு அவளால் செல்லமுடிந்தது. மனத்தில் ஏதாவது ஏக்கமும், அழுக்கும் இருக்கும்வரை, பேரானந்த நிலையை அடைய முடியாது. உதயசந்திரன், தன் மனத்தின் அழுக்கைத் துடைக்கட்டும்" என்றார், பரமாச்சாரி.

"சுவாமி, தங்களுடைய ஆசிரமத்தில் பதினான்கு ஆண்டுகளாக இருக்கிறான். கடந்த கால நினைவுகளை மறந்து மன அமைதி அடைவான் என்று எதிர்பார்த்தேன்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"இதற்குள் அவனுடைய மனம் அமைதி அடைந்திருக்க வேண்டும். ஆனால் சில ஆசைகள், சிலருடைய மனங்களில் மிக ஆழமாக பதிந்துவிடுகின்றன. மனத்தை விட்டு அந்த ஆசை அகல, சிலருக்கு வெகுகாலம் பிடிக்கிறது. அந்த ஆசையை அடக்குவதைவிட, விரைவில் நிறைவேற்றிக் கொண்டால், மனம் விரைவிலேயே சாந்தியடைந்துவிடும். ஈரேழு ஆண்டுகள் ஓர் ஆசையை மனத்தில் புதைத்துக் கொண்டு, தனக்குள்ளேயே போராடிக்கொண்டிருக்கிறான். இப்போது, தவம் பலிப்பதைபோல், அவனுடைய சபதம் நிறைவேறுவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. அவனவனுடைய இயல்பை மாற்ற வேண்டியதில்லை. உதயசந்திரன் ஒரு போர்வீரனுக்குள்ள இயல்புகளை உடையவன். அவனிடமிருக்கும் கோபம், வேகம், ஆத்திரம், பழிவாங்கும் வெறி எல்லாம் இயற்கையே. அவன் போக்கிலேயே போகட்டும். மனம் சாந்தியடையட்டும்" என்றார், ருத்ர பரமாச்சாரி.

34. நந்திபுர விண்ணகரம்

சித்திரை மாத பௌர்ணமி நிலவு இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. நிலவில் குளித்துக் கொண்டிருந்த காஞ்சி நகரின் வீதிகளில் குழந்தைகள் கூச்சலிட்டபடி விளையாடிக் கொண்டிருந்தனர். பெரியவர்கள் வீட்டு வாசலில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தபடி வம்பளந்து கொண்டிருந்தனர். வைகுந்த பெருமாள் கோயிலில் அர்த்தஜாம பூஜைக்கான மணி ஒலித்தது.

கோயிலின் அருகே நடந்து கொண்டிருந்த யாத்ரீகர் களைப் போல்காணப்பட்ட இருவர், மணியோசையைக் கேட்டு நின்றனர். நரைத்த தாடியுடன் இருந்த வயோதிக யாத்ரீகர், "உள்ளே போகலாமா?" என்று கேட்டார். இளந் தாடியுடன் அருகில் நின்று கொண்டிருந்தவர் தலையை ஆட்டினார். இருவரும் கோயிலுக்குள் சென்றனர்.

உள்ளே விளக்கு வெளிச்சம் அதிகமில்லை. கோயில் வறுமையால் வாடிக்கொண்டிருந்தது என்பது நன்கு புலப் பட்டது. பட்டர் பூஜையை முடித்துவிட்டுக் கர்ப்பக்கிரகத்தி லிருந்து வெளியே வந்தபோது, அங்கே நின்ற இரண்டு யாத்ரீகர்களைக் கண்டதும், மீண்டும் கர்ப்பக்கிரஹத்துக் குள் சென்று, திருவடிகளையும், நீரையும் கொண்டு வந்து ஆசீர்வதித்துப் பிரசாதங்களை வழங்கினார். பிறகு, கர்ப்பக் கிருகத்தை முடிவிட்டு, வெளியே வந்தார். வெளித் திண்ணையில் இளைப்பார அமர்ந்தார். யாத்ரீகர்களும், சற்றுத் தள்ளி திண்ணையில் அமர்ந்தனர்.

"அர்த்த ஜாமப் பூஜைக்கு எந்நாளுமே இவ்வளவு நேரம் ஆகிவிடுமா?" என்று வயோதிக யாத்ரீகர், கேட்டார்.

பட்டர் தூணில் சாய்ந்தவாறே, தீவட்டி வெளிச்சத்தில் யாத்ரீகர்களைக் கூர்ந்து பார்த்தார். அவர்கள் வெளியூரி லிருந்து வந்திருப்பவர்கள் என்று எண்ணியவராய் அலட்சி யமாக, "இந்த நேரத்திலாவது பூஜை நடக்கிறதே பெருமாள் அந்த வகையில் அதிர்ஷ்டக்காரர்தான்" என்றார்.

"ஏன் அப்படி? கோயிலுக்கு அமிர்தகணத்தார் உண்டா இல்லையா? அவர்களுடைய நிர்வாகம் நடை பெறுகிறதா இல்லையா?"

"இருக்கிறார்கள். இருந்து என்ன செய்ய முடியும்? கோயிலுக்கு மான்யங்களும், வரும்படியும் நிறைய இருந்தா லல்லவா கோயிலில் அருளிருக்கும்."

"மன்னரின் மான்யங்கள் உண்டே?" என்றார், வயோதிக யாத்ரீகர்.

"சைவக் கோயில்களுக்குத்தான் அதிகம் உண்டு. வைணவக் கோயில்களைப் பற்றி யாருக்கும் அக்கறையே இல்லை."

"ஏன், மன்னர் கவனிப்பதில்லையா?"

"ஐயா, பரம்பரையான ராஜகுலத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் பக்தி, ஆசாரம், பாரம்பரியச் சீலங்கள் எல்லாம் இருக்கும். இப்போதிருக்கும் மன்னர் குறுக்கு வழியில் சிம்மாசனம் ஏறியவர். அவருக்கு இதிலெல்லாம் அக்கறை கிடையாது" என்றார், பட்டர். குரலில் விரக்தி தொனித்தது.

இதைக் கேட்டதும் வயோதிக யாத்ரீகர், இளம் யாத்ரீகரைப் பார்த்தார். இளம் யாத்ரீகர் திகைப்படைந்தவராய்ப் பட்டரை வெறிக்கப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார்.

திடீரென்று பட்டருக்குச் சந்தேகம் தோன்றவே, "உங்களுக்கு எந்த ஊர்?" என்று பயந்தவாறு கேட்டார்.

"எங்களுக்குத் திருவேங்கடம்" என்றார் வயோதிக யாத்ரீகர்.

பட்டர் பயம் தெளிந்து நிம்மதி அடைந்தார். வயோதிக யாத்ரீகரைப் பார்த்து, "திருவேங்கடத்திலிருந்தா வருகிறீர்கள்?" என்று வியந்து கேட்டார். "மகா புண்ணியவான்கள். உங்களைக் காண்பதே பெரும் பாக்கியம். திருவேங்கடப் பெருமான் அருகிலிருக்கும் பாக்கியம் பெற்றவர்கள்" என்று புகழ்ந்தார். பிறகு பாடத் தொடங்கி விட்டார்.

"வந்தாய்; என் மனம்,
புகுந்தாய்; மன்னி நின்றாய்–
நந்தாத கொழுஞ் சுடரே!

எங்கள் நம்பீ!
சிந்தாமணியே! திருவேங்கட மேய
எந்தாம்! – இனி யான்
உனை என்றும் விடேனே"

என்று பாடி விட்டு, "ஐயா, எங்கள் நம்பி எழுந்தருளி யிருக்கும் திருவேங்கடத்தை நான் கண்டதில்லை. உங்களைக் கண்டு விட்டேன். அடியாரைக் கண்டாலே, அரங்கனைக் கண்ட மாதிரி தான். இன்று இரவு நீங்கள் இருவரும் என் இல்லத்தில் திருவமுதுண்டு செல்ல வேண்டும்" என்று வேண்டினார்.

வயோதிக யாத்ரீகர், "உங்கள் அழைப்புக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால், நாங்கள் இரவில் அமுதுண்டாகி விட்டது. மன்னிக்கவேண்டும்" என்றார். பிறகு, "மன்னரைப் பற்றி ஏதோ விவரம் கூறினீர்களே?" என்று கேட்டார்.

"ஆமாம், ஆமாம். இப்போதிருக்கும் மன்னர், வயதில் சிறியவர். பதினான்கு ஆண்டுகளுக்கு முன், இந்நாட்டை ஆள உரிமையுள்ள இளவரசன் ஒருவனிருந்தான். ஏதோ சதி செய்து அவனை விரட்டி விட்டு, இந்த அரசனை சிம்மாசனத்தில் ஏற்றிவிட்டார்கள்."

"மக்கள் அல்லவா இவரை அரியணையில் ஏற்றியதாகக் கேள்விப்பட்டோம்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அப்போதிருந்த பட்டத்து இளவரசன், கொஞ்சம் துடுக்கானவன். இப்போதிருக்கும் மன்னருடைய தகப்பனார்தாம் மந்திரியோடு சேர்ந்து சதிசெய்து, இவரைச் சிம்மாசனத்தில் ஏற்றிவிட்டார். குறுக்கு வழியில் சிம்மாசனம் கிடைத்தவருக்கு, மக்களின் நம்பிக்கைகளைப் பற்றியோ, ஆசாரங்களைப் பற்றியோ என்ன அக்கறை இருக்கப் போகிறது? திருவேங்கடத்

திலிருந்து வந்திருக்கும் உங்களைப் பார்த்த பிறகு தான் என் மனம் மகிழ்ச்சியாயிருக்கிறது" என்றார், பட்டர்.

"அரசர் இளைஞர்தானே. இனிமேல்தான் பக்குவம் வரும். கோயில் குளங்களைப் பற்றிய எண்ணங்கள் இனிமேல் தானே அவருக்கு ஏற்படும்."

"ஏற்படுமோ, ஏற்படாமலே போகுமோ, ஒரு வேளை, தீவிர சைவராக இருந்தால், பெருமாள் கோயில்களை இடிக்கக்கூட உத்தரவிட்டு விடலாம்" என்று கூறிப் பெரு மூச்சு விட்டார், பட்டர்.

"நீங்கள் அஞ்சுவதற்கு ஆதாரமே இல்லையே. இது வரை ஆண்ட மன்னர்கள் சைவக் கோயிலையோ அல்லது வைணவக் கோயிலையோ இடித்ததாகச் செய்தி இல் லையே. ஒரு வேளை, இந்த மன்னருக்கு பெருமாள் மீது பக்தி ஏற்படலாமே."

"பகவான் என்ன நினைக்கிறாரோ" என்றார், பட்டர். குரலில் அவநம்பிக்கை தொனித்தது.

"நீங்கள் இப்போது பாடினீர்களே, அது யார் பாடிய பாடல்?"

"திருமங்கை மன்னர் பாடியது. ஆலி நாட்டுக் குறுநில மன்னர். பகவத்கைங்கர்யத்தில் மூழ்கிவிட்டார்!"

"ஓ...! அவரா? நாகப்பட்டினத்து பௌத்த விஹாரத் தைக் கொள்ளையிட்டாரே, அவர்தானே?" என்று கேட்டார் வயோதிக யாத்ரீகர்.

"கொள்ளையிட்டால் என்ன? அதில் என்ன தவறு? இங்கே வைணவக் கோயில்களில், விளக்கேற்றக் கூடக் காசு இல்லாதபோது, பௌத்த விஹாரத்துக்கு அவ்வளவு செல்வம் ஏன்? புத்தருக்கு தங்கத்தில் சிலை எதற்கு? அதனால் தான், அதைப் பறித்து, வைணவக் கோயில்

களைக் கட்டினார். இந்தக் கைங்கர்யத்தில் என்ன தவறு?" என்று கோபத்துடன் கேட்டார், பட்டர். பிறகு, "நம்முடைய மன்னர்கள், நம்முடைய கோயில்களைச் சரிவரக் கவனித் திருந்தால், திருமங்கை மன்னர் ஏன் பௌத்த மடத்தை நாடப் போகிறார்? எல்லாம் நம்முடைய மன்னர்களின் குற்றம் தான்" என்று படபடத்தார்.

"என்ன இருந்தாலும், கொள்ளையடித்திருக்க வேண் டாம். பகவத் கைங்கர்யத்துக்குக் காசு தேவைப்பட்டால் ஆலி நாட்டுக் குடி மக்களிடம் வரிப்பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டியதுதானே."

"ஓ... நீங்கள் பகவத் கைங்கர்யத்துக்கு நாட்டு மக்களைக் கொள்ளையடிக்கச் சொல்கிறீர்கள்! வரி என்னும் பெயரால் மக்கள் அனைவரையும் கொள்ளையடிக்க வேண்டுமா? வைணவக் கோயில்களுக்காக ஏழைச் சைவர்களும் வரி கொடுக்க வேண்டுமா? மக்கள் எல்லாரை யும் கொள்ளையடிப்பதைவிட, கொழுத்த செல்வம் பெருகி யுள்ள ஒரு இடத்தில் செல்வங்களை திருமங்கை மன்னர் பறித்தது மேல்தான்" என்றார், பட்டர்.

இதைக் கேட்டு இளம் யாத்ரீகர் சிரித்தார். அவரை பட்டர் சுட்டிக் காட்டி, "இவர் பேசாமல் அமர்ந்திருக்கிறாரே" என்றார்.

"நீங்கள் இருவரும் பேசுவதைக் கேட்டு ரசித்துக் கொண்டிருக்கிறேனே" என்றார், இளம் யாத்ரீகர். பிறகு, "திருமங்கை மன்னர் காஞ்சிக்கு வந்திருக்கிறாரா?" என்று கேட்டார்.

"அந்த மகான் வந்து வழிபடும் நிலையிலா இந்தக் கோயில் இருக்கிறது? ஏதோ முந்திய சக்கரவர்த்தி இந்தக் கோயிலைக் கட்டினார். எங்கள் துரதிர்ஷ்டம், அவர் போர்க் களத்தில் இறந்துவிட்டார். மனுநீதிப்படி அரசாண்டார்.

அவர் இருந்திருந்தால், இந்தக் கோயிலை இன்னும் பெரிதாக்கி நலமுறச் செய்திருப்பார். அந்தச் சக்கரவர்த்தி விட்டுப் போன பணியைச் சிறக்கவைக்க, இப்போதிருக்கும் மன்னருக்கு எங்கே அக்கறை இருக்கப் போகிறது" என்றார் பட்டர் அலுப்புடன்.

"கவலைப் படாதீர்கள். காலம் வரும். பெருமாளை இன்னும் பக்தியோடு வேண்டுங்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும். திருமங்கை மன்னரே இந்தப் பரமேச்சுர விண்ணகரத்தைத் தேடி வந்து பாடும் காலம் வரும்" என்று கூறியபடியே எழுந்தார், இளம் யாத்ரீகர். எழுந்து நின்ற வாறே, "திருமங்கை மன்னர், பல்லவ நாட்டுக் கோயில் களைப் பற்றிப் பாடவில்லையோ?" என்று கேட்டார்.

"ஏன் இல்லை? மாமல்லபுரத்து ஜலசயனத்தையும், தலசயனத்தையும் நெக்குருகிப் பாடியிருக்கிறாரே! அது மட்டுமா? பெருமாளையும் பாடி, அவர் உறைந்திருக்கும் ஊரையும் புகழ்ந்து பாடியிருக்கிறார். அந்த மகானை ஈர்க்க வைக்கும் கோயில் காஞ்சியில்தானில்லை" என்று ஒரு ஏக்கப் பெருமூச்சு விட்டார் பட்டர்.

"பல்லவ நாட்டில் எந்த ஊரைப் புகழ்ந்திருக்கிறார்?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டார் இளம் யாத்ரீகர்.

"தெற்கே உள்ள நந்திபுரத்தை" என்று கூறிவிட்டு, பாடல்களில் சில வரிகளைப் பாடினார் பட்டர்.

"கொம்பு குதிகொண்டு
குயில் கூவ, மயில் ஆலும்,
எழில் ஆர் புறவு சேர்
நம்பி உறைகின்ற நகர்
நந்திபுர விண்ணகரம்!...
பொங்கு புனல் உந்துமணி
கங்குல் இருள் சீறும்
ஒளி எங்கும் உளதால்,

நங்கள் பெருமான் உறையும்
நந்திபுர விண்ணகரம் !...
மண்ணில் இதுபோல் நகர்
இல்லை என வானவர்கள்
தாம் மலர்கள் தூய்,
நண்ணி உறைகின்ற நகர்
நந்திபுர விண்ணகரம்."

பாடிவிட்டுச் சொன்னார்: "திருமங்கை மன்னரின் மனதைக் கவர்ந்த அந்த அழகான நகரில் அமைந்திருக்கும் பெருமாள் கோயிலில் கைங்கர்யம் செய்கிறவருக்குத்தான், என் மகள் கோதையை மணமுடித்துக் கொடுத்திருக்கிறேன்" அவருடைய குரலில் பெருமிதம் தோன்றியது.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், நந்திபுரத்தைக் காண வேண்டும் போலிருக்கிறதே" என்றார் வயோதிக யாத்ரீகர்.

"தவறாமல் போய்ப் பாருங்கள். அங்கு சென்றால், 'அடியவர்கள் கொடுவினைகள் முழுது அகலுமே' என்று திருமங்கை மன்னர் திருவாய் மலர்ந்திருக்கிறார்"

இரு யாத்ரீகர்களும் அங்கிருந்து புறப்பட்டு, கைலாசநாதர் கோயில் வழியாக நடக்கத் தொடங்கினர். இரவு வெகு நேரம் ஆகிவிட்டதால், வீதியில் மக்கள் நடமாட்டமில்லை. இளம் யாத்ரீகர், தணிந்த குரலில், "மந்திரியாரே ஊரில் சிலருக்கு என்ன அபிப்பிராயம் இருக்கிறது பார்த்தீர்களா ?" என்று கேட்டார். குரலில் மிகுந்த வேதனை தொனித்தது.

"இந்த எண்ணத்தை மாற்றியாக வேண்டும், மகாராஜா" என்றார், வயோதிக யாத்ரீகர்.

"இதே எண்ணம் நிலைத்து வருங்காலத்திலும் இப்படியே தான் பேசும்படியாகிவிடும். உண்மையில் நடந்தவைகளை மக்கள் நன்கு புரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும்" என்றார், இளம் யாத்ரீகர் கவலையுடன்.

"தாங்கள் முடி சூடியபோது நிகழ்ந்தவைகளை ஒரு பொது இடத்தில் கற்களில் செதுக்கி விடவேண்டும். ஒன்று செய்யலாம், மகாராஜா. இந்த வைகுந்தப் பெருமாள் கோயிலை பெரிதாகக் கட்டிக் கோயில் சுவரில் தாங்கள் முடி சூடிய வரலாற்றை விவரமாகச் சிற்பங்களில் செதுக்கி அவற்றின் அடியில் எழுத்துக்களால் விளக்கமும் பொறித்து விடலாம்."

"நல்ல யோசனை தான். இன்று ஒரு முக்கிய விஷயத்தைத் தெரிய முடிந்தது" என்று கூறிப் பெருமூச்சு விட்டான் இளம் யாத்ரீகராக இருந்த பல்லவமல்லன். பிறகு, "சித்திரமாயனே சிம்மாசனம் ஏறியிருந்தால், என்ன ஆகியிருக்கும்?" என்று கேட்டான்.

வயோதிக யாத்ரீகராகத் தோற்றமளித்த ராஜன் நம்பூதிரி சொன்னான்: "அவர் ஏறியிருந்தாலும், கடைசியில், தாங்கள் தாம் சக்ரவர்த்தியாக முடி சூடியிருப்பீர்கள்,"

"அதெப்படி முடியும், அவன் அரியணை ஏறிய பிறகு?" என்றான், பல்லவமல்லன்.

"சித்திரமாயன் முடி சூடியிருந்தால், சில தினங்களுக்குள்ளேயே உதயசந்திரன் தன் சபதத்தை நிறைவேற்றியிருப்பான். சித்திரமாயன் தப்பி ஓடி, பாண்டிய மன்னரின் பாதுகாப்பில் இருப்பதால்தான், உதயசந்திரனால் ஒன்றும் செய்ய இயலவில்லை" என்றான் ராஜன் நம்பூதிரி.

"விரைவிலேயே தளபதியின் சபதம் நிறைவேறுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்து விடவேண்டியதுதான். பாண்டியநாடு சென்ற தூதன் இன்னும் திரும்பவில்லையே" என்றான், பல்லவமல்லன். பிறகு சொன்னான்: "பூசாரி பேசியதிலிருந்து, வைணவர்கள் என்மீது அபிமானம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை."

"அதுபற்றித் தாங்கள் கலங்க வேண்டியதில்லை. இந்த

வைகுந்தப் பெருமாள் கோயிலைப் பெரிதாக்கி நலமுறச் செய்து, திருமங்கை மன்னரையும் வரவேற்று, சிறப்பித்து விட்டால், எல்லாம் சரியாகிவிடும்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"அந்தப் பூசாரி சொன்னதிலிருந்து நந்திபுரத்துக்கு ஒருமுறை போய் வரலாம் என்று நினைக்கிறேன்" என்றான், பல்லவமல்லன்.

"மகாராஜா, அந்த நகர் குறுநில மன்னர் பல்லவடி அரையரின் ஆளுகையில் இருக்கிறது. அண்மையில் தளபதியின் யோசனையின் பேரில், அந்நகரமும், கோட்டையும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கோட்டையைப் பலப்படுத்துவதில் அரையர் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. அவருக்குத் தங்கள்மீது அபிமானம் கிடையாது. சித்திர மாயனிடம் அன்பு கொண்டவர்."

"என்னுடைய அதிகாரத்துக்குட்பட்ட ஒரு குறுநில மன்னரிடம் நமக்கு என்ன பயம்? அவரால் ஏதாவது ஆபத்து விளையும் என்று அஞ்சுகிறீர்களா?"

"எதற்கும் நாம் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டியதுதான். தாங்கள் அங்கு போவதாயிருந்தால், ஒரு சிறு படையுடனாவது செல்லவேண்டும்" என்றான், ராஜன் நம்பூதிரி.

இருவரும் பேசிக்கொண்டே ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்தைக் கடந்து சென்றபோது, பல்லவமல்லன், "இந்த ஆசிரமத்துக்கு எதிர்ப்பு அதிகரித்திருக்கிறதே!" என்றான்.

"அதுபற்றி நாம் அக்கறை கொள்ளவேண்டாம், மகாராஜா. எல்லா மக்களுடைய நம்பிக்கைகளையும் ஆதரிக்கவேண்டியதுதான் நம்முடைய கடமை. ஒரு சாராரின் நம்பிக்கைக்கு எதிராக மற்றவர்கள் போர்க்கொடி உயர்த்துவது மதியீனம், இதற்கு நாம் இடம் கொடுத்துவிடக் கூடாது."

"ஏற்கனவே உள்ள சமூக விதிமுறைகளுக்கும், ஆசாரங்களுக்கும் எதிராக ஒரு இயக்கம் செயல்படும்போது..."

"அந்த இயக்கத்தாருக்கு ஒரு தத்துவத்தின் மீதோ, ஒரு நெறியின் மீதோ நம்பிக்கை கொள்ள உரிமை உண்டு. அவர்களுடைய நம்பிக்கைகளும், ஆசாரங்களும் எல்லோருக்கும் இசைந்தவையாயிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களுடைய நடவடிக்கை, மற்ற சமுதாயத்தாருக்குத் தொந்திரவையோ, ஆபத்தையோ விளைவிக்கு மானால் தான் அதைப்பற்றி அரசு, அக்கறை கொள்ளவேண்டும். எங்கோ ஓர் ஆசிரமத்துக்குள், பரமாச்சாரியின் போதனைகளை நம்புபவர்கள், அவருடைய தியானப்பயிற்சி முறைகளைப் பயிலுவதை மற்றவர்கள் எதிர்ப்பதில் பொருளில்லை. ஒரு பொது இடத்தில், அவர்கள் பயில்கிறார்கள் என்றால், அதைத் தடுக்கவேண்டியது அரசின் கடமை. ஆனால், ஒரு தனி இடத்தில், ஒரு சாரார் அமைதியான முறையில், தாங்கள் நம்புவதைக் கடைப்பிடிப்பதைத் தடுப்பது அநீதியாகும்" என்றான், ராஜன் நம்பூதிரி.

"ஆனால் ஆசிரமத்துக்குள் நடைபெறும் நடவடிக்கைகள், சமூகப்பழக்க வழக்கங்களுக்கும், விதிமுறைகளுக்கும் மாறாக இருந்தால்?"

"ஆசிரமத்துக்குள்தானே நடைபெறுகின்றன. பொது இடத்தில் அல்லவே? அதற்காகத்தானே, யோகியின் சீடர்கள் ஆசிரமத்துக்கு உள்ளே பயிற்சியைப் பெறுகிறார்கள். அங்குள்ள நடவடிக்கைகள் அதில் ஈடுபடும் சாதகர்களை மட்டுமே சார்ந்தவை. அவற்றுக்கும் சமூகத்துக்கும் தொடர்பில்லை. நிர்வாணமாயிருப்பது, சமூக ஒழுக்க விதிமுறைகளுக்குப் புறம்பானது. ஆனால், படுக்கையறையிலேயோ அல்லது குளியலறையிலேயோ ஒருவன் நிர்வாணமாயிருப்பதைத் தவறு என்று குறை கூறமுடியுமா? அதே போலத்தான், ஒரு ஆசிரமத்துக்குள் நடைபெறு

வதும். மேலும், ருத்திர பரமாச்சாரி, தம்முடைய நெறிமுறைகளை வெளியே பிரசாரமாகக்கூடச் செய்வதில்லை. இந்தச் சமூகத்தோடு அவர் தொடர்பு கொள்வதுகூட இல்லை. ஆசிரமத்துக்குள்ளேயே, ஒரு சமூகம் உருவாகி, இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஆசிரமத்துக்கு, இமயமலைச் சாரலிலிருந்தும், குமரி முனையிலிருந்தும் பலர் வந்து, தியானம் பயின்று, சித்தி அடைந்திருக்கிறார்கள். கர்ம யோகம், ராஜயோகம், பக்தியோகம் என்று கடவுளை உணர அமைந்துள்ள சில வழிகளைப்போல், பரமாச்சாரியின் குண்டலினி யோக முறையும் ஒரு வழி. அந்த வழி ஒரு சாராருக்கு அருவருப்பாயிருக்கிறதென்றால், அது அவர்களின் அறியாமையே தவிர வேறல்ல. அறியாமைக்கு அரசு ஆதரவு கொடுக்கக் கூடாது" என்று ராஜன் நம்பூதிரி, அழுத்தமாகக் கூறினான்.

"மந்திரியாருக்குப் பரமாச்சாரியின் யோகமுறையில் ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது போலிருக்கிறது" என்று கூறிச் சிரித்தான் பல்லவமல்லன்.

"இன்னும் இல்லை, மகாராஜா. எனக்கு இப்போது அதற்கு நேரமும் இல்லை. யோகியின் தத்துவங்களும், யோக முறைகளும் இன்றையச் சமூகக் கண்ணோட்டத்தில், ஒரு காமக்களியாட்டமாகத் தென்படலாம். ஆனால், அதில் ஈடுபடுபவர்கள், சமூகத்தின் மத்தியில், மற்றவர்களைவிட மன விகாரங்களற்றவர்களாகத்தானிருக்கிறார்கள். நாம் தாம் சில வக்கிரங்களை மனத்தின் உள்ளேயே பூட்டி வைத்து, மனத்தை அழுக்காக்கி, இழிநிலையில் வைத்திருக்கிறோம். இன்று சமூகத்தில் திரிபவர்கள்தாம் இரட்டை வாழ்வு வாழ்கிறார்கள். தினமும் திருட்டுத்தனமான ஒழுக்கச் சீர்கேடுகளைக் காண்கிறோம். இந்தப் போலித்தனமான வாழ்க்கையைத்தான் ருத்திர பரமாச்சாரி கண்டிக்கிறார்" என்றான் ராஜன் நம்பூதிரி. பிறகு, "ஒரு சாராரின் விருப்பத்

துக்காக, மற்றொரு சாராரின் நம்பிக்கைகளை ஒடுக்குவது அநீதியாகும். அரசு விலகியிருந்து கவனிக்க வேண்டுமே தவிர, அந்த மாச்சரியங்களுக்குள் மூழ்கிவிடக் கூடாது" என்றான்.

இருவரும் அரண்மனையை அடைந்தபோது, காவல் வீரன் ஒருவன் விரைந்து வந்து, "பாண்டியநாடு சென்ற தூதன் திரும்பி வந்திருக்கிறான். சக்கரவர்த்தியின் தரிசனத்துக்காகக் காத்திருக்கிறான்" என்று அறிவித்தான்.

தூதனை உள்ளே அழைத்து வருமாறு உத்தரவிட்டு, அரண்மனைக்குள் சென்ற பல்லவ மல்லன், "மந்திரியாரே, உங்களுடைய நண்பர் தளபதியின் சபதம் நிறைவேறும் கட்டம் நெருங்கி விட்டது என்று எண்ணுகிறேன்" என்றான்.

சற்று நேரத்தில் தூதன் உள்ளே வந்தான். சக்கரவர்த்தியிடம் பாண்டிய மன்னனின் ஓலையைக் கொடுத்தான். பல்லவமல்லன் ஓலையை ராஜன் நம்பூதிரியிடம் கொடுத்து, "நீங்கள் படியுங்கள்" என்றான்.

ராஜன் நம்பூதிரி ஓலையைப் பிரித்து, பல்லவ மல்லன் கேட்கும்படியாக உரக்கப் படித்தான்.

"பல்லவமன்னருக்கு நாம் அறிவிப்பது இதுவே. சித்திரமாயனுக்கு உரிமையுள்ள சிம்மாசனத்தில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். என்னிடம் அடைக்கலமாயிருக்கும் அவரைப் பல்லவ நாட்டில் ஒப்படைக்க வேண்டும் என்று தூதனுப்பினீர்கள். சித்திரமாயன் கட்டாயம் பல்லவ நாட்டுக்கு வரத்தான் போகிறார். அவர் வரும்போது பல்லவ நாட்டு அரியணை காலியாக இருக்கும். மாறவர்ம இராச சிம்மபாண்டியன்"

இதைக்கேட்டு பல்லவ மல்லன் சிரித்தான். "ஓ... அவர் வருவாரோ? வரும்போது, அரியணை காலியாக இருக்குமோ? ஓஹோ...ஹோ..." என்று உரக்கச் சிரித்தான். பிறகு, ராஜன் நம்பூதிரியிடம், "மந்திரியாரே, நம்முடைய தளபதி

யின் சபதம் நிறைவேறும் கட்டம் நெருங்கிவிட்டது. சீனத்து மங்கையின் மருக்கொழுந்துக்கு சீக்கிரமே நல்ல உரம் கிடைக்கப் போகிறது... அவர் வருவாராம்; வரும் போது, பல்லவ அரியணை காலியாக இருக்குமாம்" என்று பற்களைக் கடித்தான். "நாளைக் காலை தளபதியாருடன் நீங்கள் அரசமண்டபத்துக்கு வாருங்கள்" என்று கூறிவிட்டு, அந்தப்புரத்தை நோக்கி நடந்தான்.

பிரும்மஸ்ரீ ராஜன் நரைத்த பொய்த் தாடியையும், தலை மயிரையும் கழற்றாமல், வேஷத்துடனேயே தன்னுடைய மாளிகைக்குச் செல்ல இரதத்தில் ஏறினான்.

மறுநாள் காலையில் உதயசந்திரன் அரண்மனைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது, பாண்டிய நாட்டுக்குச் சென்று திரும்பிய தூதன் அவனைக் காண வந்தான். பாண்டிய மன்னரின் பதிலைக் கூறிவிட்டு, "தளபதி அவர்களுக்கு ஓர் ஓலை இருக்கிறது" என்று கூறியபடியே, இடையில் செருகியிருந்த ஓலையை எடுத்து நீட்டினான்.

உதயசந்திரன் வியப்புடன் ஓலையை வாங்கியபடியே, "எனக்கு ஓலையா? யாரிடமிருந்து?" என்று வியந்து கேட்டவாறு, ஓலையைப் பிரித்துப் பார்த்தான். முதலில் ஓலையைப் பிரித்துப் படிக்காமல் கடைசியிலிருந்த முத்திரையைக் கவனித்தான். திகைப்பும் வியப்பும் அடைந்தவனாய் தூதனை நிமிர்ந்து பார்த்தான்.

"மகாராணியைக் கண்டாயா? எப்படிச் சந்தித்தாய்?" பரபரப்புடன் வினவினான்.

"ஆமாம், தளபதியாரே. இந்த ஓலையை நேரில் என்னிடம் கொடுத்தார்கள்" என்றான் தூதன்.

தூதன் சொன்னதைக் கவனிக்காமலேயே ஓலையைப் படிக்கத் தொடங்கிவிட்டான், உதயசந்திரன்—

"பல்லவ தளபதி உதயசந்திரனுக்கு என் உயிரைக் காப்பாற்றி அனுப்பி வைத்தது நினைவிலிருக்கும். என்னை அப்

போதே நீ கொன்றிருந்திருக்கலாம். இப்போது பாண்டிய நாட்டில் சிறைப்பட்டிருப்பதைப் போல்தான் உணர்கிறேன். இங்கே அரண்மனையும், ஏவலாட்களும் பாண்டிய மன்னரின் விருந்தோம்பலும் என் மனத்திற்குச் சாந்தியளிக்கவில்லை. சித்திரமாயனுக்காக பல்லவப் படையோடு நீ, இங்கே வருவாய். அப்போது, என்னையும் பல்லவ நாட்டுக்குக் கொண்டு சென்று, ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்தில் சேர்ப்பித்து விடு. நான் கேட்கும் ஒரே உதவி இது தான். வாழ்க்கையில் மிகுந்த ஏமாற்றத்துக்குள்ளாகி விட்ட எனக்கு, இனி பரமாச்சாரியின் ஆசிரமந்தான் மன அமைதியைத் தரும். மனச் சாந்திக்காகத் தவிக்கிறேன். இதை யாவது நீ தருவாய் என்று எண்ணுகிறேன்– பிரேம வர்த்தினி."–

ஓலையைப் படித்ததும் உதயசந்திரனின் நினைவு கடந்த காலத்தை நோக்கித் தாவியது. பிரேமவர்த்தினி மீது மிகுந்த இரக்கம் தோன்றியது. எதிரே நின்று கொண்டிருந்த தூதனிடம், "மகாராணியை எப்படிச் சந்தித்தாய்?" என்று ஆவலுடன் கேட்டான்.

"நான் ஊர் திரும்புவதற்கு முந்தின நாள் இரவு, மகாராணியாரின் அந்தரங்க மெய்க்காப்பாளன் என்னை இரகசியமாகச் சந்தித்து, அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்றான். இந்த ஓலையைத் தங்களிடம் இரகசியமாகச் சேர்ப்பிக்கும் படி மகாராணியார் கொடுத்தார்கள்" என்றான், தூதன்.

தூதனை அனுப்பிவிட்டு, அரண்மனைக்கு விரைந்தான் உதயசந்திரன். அவனைக் கண்டதுமே பல்லவ மல்லன், "தளபதியாரே, உங்களுக்கு மகிழ்ச்சி தரும் சேதி வந்திருக்கிறது" என்று கூறியவாறு, பாண்டிய மன்னரின் ஓலையை அவனிடம் கொடுத்தான்.

ஓலையைப் படித்துவிட்டு உதயசந்திரன் தலை நிமிர்ந்தபோது, பல்லவ மல்லன், "சித்திரமாயன் இங்கே வருவானாம். பாண்டிய மன்னருக்கு என்ன திமிர். அவனு

டைய முழு உடலும் இங்கே வர வேண்டிய அவசிய மில்லையே. உங்களுடைய காதலியின் செடிக்கு அவனு டைய தலைமட்டும் போதுமே" என்று கூறிச் சிரித்தான்.

"சக்கரவர்த்தி ஆணையிட்டால், இப்போதே ஆயத் தம் செய்கிறேன்" என்றான் உதயசந்திரன்.

"தளபதியாரே, விரைவில் பாண்டிய நாட்டுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். நான் ஏற்கெனவே நந்திபுரத்துக்குப் போக எண்ணியிருந்தேன். அந்த ஊர் பாண்டிய நாட்டுக்கு அருகே இருப்பதால், நமக்கும் வசதியாகிவிட்டது. நான் முதலில் நந்திபுரம் போகி றேன். நீங்கள் படையுடன் விரைவில் வந்து சேருங்கள். நந்திபுரத்திலிருந்து நாம் இருவரும் சேர்ந்தே பாண்டிய நாட்டுக்குச் செல்லலாம்" என்றான், பல்லவ மல்லன்.

அப்போது ராஜன் நம்பூதிரி குறுக்கிட்டு, "நந்திபுரத்துக் கோட்டையில் சக்கரவர்த்தி இளைப்பாறலாமே. உதய சந்திரன் பாண்டியனையும், சித்திரமாயனையும் வெற்றி கொண்டு திரும்பும்போது, சக்கரவர்த்தி சேர்ந்து காஞ்சிக்குத் திரும்பி விடலாமே" என்றான்.

பல்லவ மல்லன் சிரித்தான். "ஏன்? தளபதியின் சபதத்தை அவரேதான் நிறைவேற்ற வேண்டுமா என்ன, நானும் உதவக்கூடாதா?" என்றான்.

"பாண்டிய நாட்டைப் பணிய வைக்கத் தளபதி ஒருவரே போதுமே, தாங்கள் சிரமப்பட வேண்டாமே என்ற எண்ணத்தில் கூறினேன்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"நானும் பாண்டிய நாடு போகப் போகிறேன். நான் போய்ச்சேரும்போது, பாண்டியநாட்டுச் சிம்மாசனம் காலி யாக இருக்கவேண்டும்" என்று கோபம் தொனிக்கக் கூறி னான், பல்லவ மல்லன். பிறகு, "நந்திபுரத்துக்கு நான் செல்வ தற்கான ஏற்பாடுகளைக் கவனியுங்கள். இன்றே பல்லவடி அரையருக்குச் சேதியனுப்புங்கள்" என்றான்.

"பல்லவடி அரையர் விஷயத்தில் சற்று எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். அவரைப் பூரணமாக நம்ப வேண்டாம்" என்றான் ராஜன் நம்பூதிரி.

"மந்திரியாரே, ஒரு குறுநில மன்னரைப் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை. அவரால் ஏதாவது தீங்கு நேருமென்று சிறிது சந்தேகம் தோன்றினாலும், திரும்பும்போது, அவரைத் தேர்க்காலில் கட்டி, காஞ்சிக்குக் கொண்டு வந்துவிடலாம்" என்றான், பல்லவ மல்லன். பிறகு, "பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கும் விஷயம் இரகசியமாகவே இருக்கட்டும். நான் யாத்திரை போவது போல் முதலில் நந்திபுரத்துக்குப் போய்ச் சேர்கிறேன். நீங்கள் விரைவில் மற்ற ஆயத்தங்களைச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டான்.

35. வெற்றி

கும்பகோணத்திலிருந்து தெற்கே மூன்று மைல் தூரத் தில் நாதன் கோயில் என்று ஓர் ஊர் இருக்கிறது. இதற்கு பழைய காலத்தில் நந்திபுரம் என்று பெயர். இந்த ஊரை நந்தி வர்மன் அழகுபடுத்தினான். திருமங்கை ஆழ்வார், நந்தி மணி செய்த நகர், நந்திபுர விண்ணகரம் என்று பாடியுள்ளார். இந்த ஊர் பலத்த கோட்டைப் பாதுகாவலுடன் அக்காலத்தில் விளங்கியது. இது பல்லவ நாட்டின் தென்திசைக் கோட்டை யாகவும் அக்காலத்தில் விளங்கியது.

பல்லவ சக்ரவர்த்தி பல்லவ மல்லனின் வரவால், நந்தி புரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. சக்கரவர்த்தி, தங்கள் ஊருக்கு வந்ததை எண்ணி, மக்கள் பெருமையில் பூரித்துப் போயிருந்தனர். அந்தப் பகுதியின் குறுநில மன்னரான பல்லவடி அரையர், பல்லவ சக்ரவர்த்தியை எதிர்கொண்ட ழைத்து, நந்திபுரத்துக்கு இட்டுச் சென்றார்.

திருமங்கை மன்னரின் கவனத்தைக் கவர்ந்த அந்த

ஊரைக் காணவும், அங்கு எழுந்தருளியுள்ள பெருமாளை தரிசிக்கவும் பல்லவ சக்கரவர்த்தி, யாத்திரை வந்திருப் பதாகக் கேள்விப்பட்டு, அருகிலுள்ள கிராமங்களிலிருந்தும் மக்கள், சக்கரவர்த்தியைக் காணத் திரண்டு வந்தவண்ண மிருந்தனர்.

சக்கரவர்த்தி, தமது சிறு படையுடன் நந்திபுரத்தில் சில நாட்கள் தங்கி ஓய்வெடுப்பார் என்ற செய்தியை அறிந்ததும் மக்கள் மிகுந்த உற்சாகமடைந்தனர். மன்னரை எதிர் கொண்டு வரவேற்ற பல்லவடி அரையர், சக்கரவர்த்தியுடன் நந்திபுரத்திலேயே தங்கியிருந்தார்.

சக்கரவர்த்தி நந்திபுரத்துக்கு வந்த பத்தாம் நாள் இரவு, காவல் வீரன் ஒருவன் பல்லவமல்லனிடம் விரைந்துவந்து, ஓர் ஓலையைக் கொடுத்து, "யாரோ ஒருவன் இந்த ஓலையைச் சக்கரவர்த்தியிடம் சேர்ப்பிக்கும்படி கொடுத்து விட்டு ஓடி மறைந்துவிட்டான்" என்று அறிவித்தான்.

ஓலையைப் பிரித்துப் பார்த்த பல்லவமல்லன், திடுக் கிட்டான். உள்ளூரப் பயம் தோன்றியது. கோபமும் கொந்த ளித்தது. அந்தக் காவல் வீரனிடம், பல்லவடி அரையரை அழைத்து வருமாறு உத்தரவிட்டுவிட்டு மீண்டும் ஓலை யைப் படித்தான்.

"பல்லவர் சக்கரவர்த்தியே, வசமாக அகப்பட்டுக் கொண்டுவிட்டீர்கள். பல்லவடி அரையர் சதி செய்து பாண்டியனை நந்திபுரத்துக்கு அழைத்திருக்கிறார். பாண்டிய மன்னருக்கு உதவியாக சேர, சோழ மன்னர்களின் படை களும் தயாராகிவிட்டன. அமாவாசையன்று பெரும்படை நகரை நெருங்கும்போது நீங்கள், பல்லவடி அரையரால் சிறை பிடிக்கப்பட்டிருப்பீர்கள். இதிலிருந்து தப்ப வேண்டு மானால், பல்லவடி அரையரை வெளியேற்றி விட்டுக் கோட்டைக்குள் பதுங்கிக் கொள்ளுங்கள். பல்லவ சேனாதி பதி உதயசந்திரனுக்கும் சேதி அனுப்பியிருக்கிறேன். அவர்

வந்துதான் உங்களை மீட்க முடியும். பல்லவ தளபதி படையுடன் வரும்வரை, நந்திபுரக்கோட்டையை விட்டு வெளியேற வேண்டாம்."

ஓலை எழுதியனுப்பியவர் யார் என்று தெரியவில்லை. பல்லவ மல்லன் குழம்பினான், பொறிக்குள் வசமாக அகப்பட்டுக் கொண்டதாக எண்ணிக் குமுறினான். அன்றே நந்திபுரத்தைவிட்டு காஞ்சிக்கு விரைந்தாலும், இனி பயனில்லை. ஓலையில் குறிப்பிட்டிருந்த அமாவாசை கழிந்து மூன்று நாட்களாகிவிட்டன. பாண்டியர் படை அநேகமாகப் பல்லவப் பிரதேசத்தை நெருங்கியிருக்கும். பல்லவ மல்லன் இனி காஞ்சிக்குப் புறப்பட்டால், பாண்டியர் படை துரத்தி வந்து பிடித்துவிடும்.

பல்லவ மல்லனைப் பயமும், கோபமும் ஒரே சமயத்தில் அலைக்கழித்தன. செய்வதறியாது திகைத்தான். தன்னுடன் வந்திருந்த படைத் தலைவனைக் கூப்பிட்டனுப்பி, ஆலோசனை செய்தான். தன்னுடன் வந்திருக்கும் சிறு படை கோட்டையைப் பாதுகாக்கப் போதுமானது என்பதை அறிந்து, சிறிது ஆறுதலடைந்தான்.

படைத் தலைவனோடு பல்லவமல்லன் உரையாடிக் கொண்டிருந்தபோது, பல்லவடி அரையர் வந்தார்.

"சக்கரவர்த்தி அழைத்தீர்களாம்" என்று கூறியவாறே, பல்லவமல்லனை வணங்கி நின்றார். அவருக்கு ஆசன மளித்து அமரச் சொன்னான், பல்லவ மல்லன்.

"பல்லவடி அரையரை சில நாட்களுக்கு என்னுடைய விருந்தாளியாக ஏற்றுக்கொள்ள எண்ணுகிறேன்" என்றான்.

பல்லவடி அரையர் புரியாமல் குழம்பினார். "சக்கரவர்த்தியை இங்கு விருந்தாளியாக ஏற்றிருப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வேளையில், தாங்கள் என்னை விருந்தாளியாக...?" என்று புரியாமல் வினவினார் அரையர்.

பல்லவமல்லன் சிரித்துக் கொண்டே, "விருந்தோம் பலில் தாங்கள் கைதேர்ந்தவர்கள். பல விருந்தினர்களை இங்கே வரவேற்க வேண்டியிருக்கும். என்னுடைய விருந் தோம்பல் எப்படி இருக்கும் என்பதைத் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்றான்.

"தங்களுடைய உத்தரவின் பேரில், இந்நகரம் அழகு படுத்தப்பட்டு, கோட்டையும் பலப்படுத்தப்பட்ட பிறகு, தாங்கள் இப்போதுதான் முதன்முறையாக இங்கே வருகை தந்திருக்கிறீர்கள். தாங்கள் இங்கிருக்கும் வரை அடியே னுடைய விருந்தினராக இருப்பதுதான் முறை. நான் தங்க ளுடைய விருந்தாளியாக இருப்பது..."

"என்னை உங்கள் விருந்தாளியாக ஏற்றிருக்கும்போது இன்னும் சில விருந்தாளிகளுக்கும் அழைப்பு அனுப்பியிருக் கிறீர்கள் போலிருக்கிறது!" என்று பல்லவ மல்லன் சிரித்துக் கொண்டே கேட்டான். சிரிப்பில் தொனித்த கேலியை அரை யர் உணர்ந்து மனம் குழம்பினார்.

"சக்கரவர்த்தி சொல்வது புரியவில்லையே" என்றார்.

"பாண்டிய மன்னரும், சித்திரமாயனும் இங்கே விருந்தி னராக வரப்போகிறார்கள் போலிருக்கிறது" என்றான், பல்லவமல்லன்.

இதைக்கேட்டதும் பல்லவடி அரையர் பதறிப்போய் ஆசனத்திலிருந்து எழ முயன்றார், ஆனால் அதே சமயம், அவருக்குப் பின்னாலிருந்து இரண்டு கைகள், அவருடைய தோளைப்பற்றி அழுத்தி மீண்டும் அமரவைத்தன. மிரண்டு போய்த் திரும்பினார். பின்னால் ஆயுதம் தாங்கிய இரண்டு வீரர்கள் நின்றுகொண்டிருந்தனர். அரையரின் கால்கள் வெடவெடவென நடுங்கின.

"சக்கரவர்த்தி சொல்வது புரியவில்லையே" என்று வாய் குழறியபடிக் கூறினார்.

"இதைப் படித்தால் புரியும்" என்று கூறியபடி பல்லவ மல்லன் ஓலையை அவரிடம் நீட்டினான். நடுங்கிய கரங்களால் பல்லவடி அரையர் ஓலையை வாங்கிப் பார்த்தார். படித்தபோது, அவருடைய உடல் நடுங்கத் தொடங்கியது.

"மகாப்பிரபு, அவ்வளவும் பொய்...பொய்..." என்று கூவிக்கொண்டே, பல்லவமல்லனின் கால்களில் நெடுஞ் சாண் கிடையாக விழுந்தார்.

"அரையரே, இந்த ஓலை பொய்யாக இருக்க வேண்டும் என்று தான் விரும்புகிறேன். இது பொய்தான் என்று நிருபணமாகும் வரை, நீங்கள் என் விருந்தாளி யாகவே இருங்கள்" என்று கூறிய பல்லவ மல்லன் வீரர் களைப் பார்த்தான். மறுகணம், வீரர்கள் பல்லவடி அரை யரை விலங்கிட்டு அழைத்துச் சென்றனர்.

பல்லவமல்லன் அப்போதே உதயசந்திரனுக்கு ஒரு தூதனை அனுப்பினான். நந்திபுரக் கோட்டைக் காவலைப் பலப்படுத்தினான். கோட்டைக் கதவை அடைத்துவிடவும், அகழிப்பாலத்தை உயரே தூக்கிவிடவும் உத்தரவிட்டான். நந்திபுரத்தில் உறையும் பெருமாளை நினைந்து பிரார்த்தித் தான்.

* * *

காஞ்சியில் மக்கள் பரபரப்படைந்திருந்தனர். படை யெடுப்புக்கான ஆயத்தங்கள் நடைபெற்றதை அறிந்த மக்கள், எந்த நாட்டின் மீது போர் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் குழம்பினார்கள். இன்னும் நான்கு தினங்களில் படை புறப்படுவதாயிருந்தது. அந்தச் சமயத் தில்தான், உதயசந்திரனைத் தேடி ஒரு தூதன் வந்தான்.

அப்போது, உதயசந்திரனும் முதன்மந்திரி பிரும்மஸ்ரீ ராஜன் நம்பூதிரியும் போர்ப்படையை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

தூதன் கொடுத்த ஓலையைப் படித்த உதயசந்திரன் திடுக்கிட்டான். ஓலையை ராஜன் நம்பூதிரியிடம் கொடுத்தான். ராஜன் நம்பூதிரி ஓலையைப் படித்துப் பார்த்தான்.

"தளபதி உதயசந்திரனுக்கு–பாண்டிய மன்னர், சேர, சோழப் படைகளின் உதவியையும் பெற்று, பெரும் படையுடன் நந்திபுரத்துக்கு அமாவாசையன்று புறப்படுகிறார். பல்லவடி அரையரின் சதி. பல்லவ சக்கரவர்த்திக்கும் செய்தியனுப்பி, கோட்டைக்குள் பதுங்கிக் கொள்ளும்படி கூறியிருக்கிறேன். நீ உடனே புறப்பட்டால், சக்கரவர்த்தியைக் காப்பாற்றலாம். இல்லையேல், சித்திரமாயன் பல்லவ சிம்மாசனம் ஏறுவது உறுதி. படையுடன் சித்திரமாயனும் வருகிறான். என்னுடைய முந்திய ஓலை கிடைத்திருக்கும்."

"ஓ...! மகாராணிதானே...?" என்று முனகியபடியே ராஜன் நம்பூதிரி நிமிர்ந்து உதயசந்திரனைப் பார்த்தான்.

உதயசந்திரன் ஆமோதித்துத் தலையை அசைத்தான்.

"நான் இன்றே புறப்படுகிறேன். மூன்று நாட்களில் நந்திபுரத்தை அடைந்து விடுவேன். சித்திரமாயன் எப்படியும் இங்கே வந்து சேர்வான். ஒன்று, அவனுடைய தலைமட்டும் வரும்; இல்லையென்றால், அவனே உயிருடன் இங்கு வந்து சேர்வான். இதில் ஏதாவது ஒன்று நிச்சயம்" என்றான்.

"நிச்சயம் நீ அவனுடைய தலையுடன் திரும்புவாய்" – ராஜன் நம்பூதிரி மிக்க நம்பிக்கையுடன் சொன்னான்.

* * *

நந்திபுரத்தை நெருங்கிய பாண்டிய மன்னனும், சித்திரமாயனும் ஏமாற்றமடைந்தனர். தாங்கள் வரும்போது, பல்லவமல்லனைப் பல்லவடி அரையர் சிறைப்படுத்தி விட்டுத் தங்களை எதிர்கொண்டு வரவேற்பார் என்று நம்பி வந்தவர்கள் கோட்டை வாயில் அடைபட்டிருந்ததையும், கோட்டை பலத்த காவலுடன் இருந்ததையும் கண்டு திகைத்தனர்.

தடையின்றி இலகுவில் நந்திபுரத்துக்குள் புகுந்து பல்லவ மல்லனைப் பிடித்துக் கொன்றுவிடலாம் என்று ஆசையுடன் வந்த சித்திரமாயன் மிகுந்த ஏமாற்றத்துக் குள்ளானான். பாண்டியப்படை கோட்டையை முற்றுகை யிட்டது. கோட்டையைத் தாக்கித் தகர்க்க முடியவில்லை. பல்லவ மல்லனின் வீரர்கள் கோட்டை மதில்களிலிருந்து பாண்டிய வீரர்களை தீவிரமாக எதிர்த்தார்கள்.

நந்திபுரக்கோட்டை முற்றுகையிடப் பட்டிருந்ததால், கோட்டைக்குள் உணவுப் பொருட்கள் எதுவும் வெளியே இருந்து செல்லமுடியாது. ஆகவே சில தினங்களில் கோட் டைக்குள் இருக்கும் மக்களும், பல்லவ மல்லனும் பசி யினால் துடித்துப் போய் கோட்டையைத் திறந்து வந்து சரணடைந்துதான் ஆகவேண்டும் என்ற நம்பிக்கையி லிருந்தான் பாண்டிய மன்னன்.

ஆனால், முற்றுகையிட்ட இரண்டாம் நாள் நண் பகலில் உதயசந்திரன் பல்லவப் படையுடன் வந்து விட்டான். பல்லவப் படை பாண்டியனின் படையைச் சூழ்ந்து கொண்டது. பாண்டியன் பேரதிர்ச்சிக்குள்ளானான். பல்லவப் படை அங்கு எப்படி வந்தது என்று அவனுக்குப் புரியவில்லை. பல்லவடி அரையர் இரட்டை வேடம் போட்டுத் தன்னை ஏமாற்றிவிட்டதாக எண்ணினான்.

பல்லவப் படை சூழ்ந்ததும், பாண்டியப் படையில் குழப்பம் ஏற்பட்டது. பாண்டியப் படை தப்பி ஓட முடியாதபடி ஒரு பக்கம் நந்திபுரத்துக் கோட்டை மறித்துக் கொண்டிருந்தது; மறுபக்கம், பல்லவப் படை மறித்துக் கொண்டது.

சற்று நேரத்தில், நந்திபுரக் கோட்டையின் வெளியே இரத்த ஆறு ஓடத் தொடங்கிவிட்டது. உதயசந்திரனின் தலைமையில் பல்லவப் படை மிகத் திறமையுடன் தாக்கி யது. குதிரைப் படையின் தலைவனான தேவசோமா களத்

தில் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தான். நூற்றுக் கணக்கான தலைகள் அவனுடைய வாள் வீச்சினால் மண்ணில் உருண்டன. களுபந்தாவின் தலைமையில் செயல்பட்ட படைவீரர்கள் எதிரிகளின் தலைகளைப் பந்தாடினார்கள். பாண்டியனுடைய படையும் துணைக்கு வந்திருந்த சேர, சோழப் படைகளும், மழைநீரில் உப்புக் குவியல் கரைவதுபோல் கரையத் தொடங்கின.

உதயசந்திரன் ஒரு மேடான இடத்தில் குதிரையி லிருந்தவாறு போர்க் களத்தைக் கவனித்துக் கொண்டி ருந்தான். அவனுடைய கண்கள் சித்திரமாயனைத் தேடிக் கொண்டிருந்தன.

போர்க்களத்தில் சித்திரமாயனை முதலில் அடை யாளம் கண்டுகொண்ட தேவசோமா விரைந்து உதயசந்திர னிடம் சென்றான்.

"தேடிவந்த இரை இங்கேதான் இருக்கிறது" என்று கூறி மேல் திசையில் சுட்டிக் காட்டினான்.

அத்திசையில் சற்று தூரத்தில் சித்திரமாயன், குதிரையி லிருந்தவாறு, தீவிரமாகப் போரிட்டுக் கொண்டிருந்த பாண்டியப் படையின் ஒரு பிரிவைக் கண்காணித்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் உதயசந்திரன் தன் குதிரையை அத்திசையில் திருப்பினான்.

"நானும் வருகிறேன்" என்றான் தேவசோமா.

"வேண்டாம். நீ இங்கிருந்தே கவனித்துக் கொண்டிரு. இப்போது நான் போவது என் சொந்தக் கடமையை முன்னிட்டு, நானேதான் அதை நிறைவேற்ற வேண்டும்" என்று கூறியபடியே வாளை உருவிக்கொண்டு, குதிரையை வேகமாகக் களத்துக்குள் செலுத்தினான் உதயசந்திரன்.

அவன் போர்க்களத்தில் இறங்கியதைக் கண்ட பல்லவப் படை உற்சாகமடைந்தது. பாண்டியப் படை பீதி

யடைந்தது. சித்திரமாயனை நெருங்கியதும், உதயசந்திரன், "சித்திரமாயா! உன்னைத்தான் தேடிவருகிறேன். என்னை அடையாளம் தெரிகிறதா?" என்று உரத்த குரலில் கேட்டான்.

உதயசந்திரனைக் கண்டதும், ஒருகணம் சித்திரமாயனின் கண்களில் பீதி தென்பட்டது. உடனே சமாளித்துக் கொண்டான்.

"ஓ...! நீயா? அந்தச் சீனத்துக்காரியின் காதலன். உனக்கு என்னை யாரென்று நினைவிருக்கிறதா?" என்று அலட்சியமாகக் கேட்டான்.

"மறந்துவிடவில்லை."

"என்னவென்று?"

"சித்திரமாயனென்று."

"பெயர் சொல்லி அழைக்கும் அளவிற்குத் திமிரா உனக்கு? நீ கூலிக்குப்பணிபுரியும் சேவகன். பல்லவநாட்டு ராஜா நான். மறந்துவிட்டாயோ?"

"நீ ராஜாவல்ல. ஒரு கொடிய ராஜநாகம். நாகமாவது சத்தியத்திற்குக் கட்டுப்படும். நீ, அதைவிடக் கொடிய பிறவி."

"ஆ நீசனே..."—சித்திரமாயன் ஆக்ரோஷத்துடன் வாளை ஓங்கியபடியே உக்கிரத்தோடு உதயசந்திரன் மீது பாய்ந்தான். அவனுடைய வீச்சிலிருந்து விலகிய உதயசந்திரன் பயங்கரமாகச் சிரித்தான்.

"சித்திரமாயா, வீரப் போட்டியில் உன்னை அழைத்தேனே நினைவிருக்கிறதா? இப்போதும் உன்னோடு போரிட எனக்கு ஆயுதம் தேவையில்லை. ஆனால் உன் தலையை அறுத்து எடுக்கத்தான் இந்த வாள். உன்னை வீழ்த்த என் கையே போதும்" என்று கூறியபடியே, இடது கையில் வாளை ஏந்தியபடி, குதிரையிலிருந்து கீழே குதித்தான்.

தரையில் நின்ற உதயசந்திரன் மீது தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான், சித்திரமாயன். மின்னல் வேகத்தில் விலகி ஒதுங்கிய உதயசந்திரன், அதே வேகத்தில் தன்னைக் கடந்த குதிரையின் பிட்டத்தில் உதைத்தான். சித்திரமாயனின் குதிரை தடுமாறியபடி முன்னங்கால்களை மடக்கி முன்பக்கமாகச் சரிந்து விழுந்தது. சித்திரமாயன் குதிரையிலிருந்து கீழே குதித்து விட்டான். மிகுந்த ஆக்ரோஷத்துடன், ஓங்கிய வாளுடன் உதயசந்திரன் மீது பாய்ந்தான். உதயசந்திரன் எம்பிக் குதித்து, காலினால் சித்திரமாயனின் தலையைத் தாக்கினான். சித்திரமாயன் வீறிட்டலறியவாறு, தலையைக் கையால் பற்றிக் கொண்டு, சுருண்டு விழுந்தான். மறுகணம், அல்லிமலர் இதழ்போல் ஒளிர்ந்த உதயசந்திரனின் வாள், சித்திரமாயனின் தலையை வெட்டி வீழ்த்தியது. வெட்டுண்டு தரையில் கிடந்த உடல் ஒரு பாம்பைப் போல் நெளிந்தது.

தரையில் உருண்ட தலையை, வாளின் நுனியில் செறுகித் தூக்கியபடி அதை உற்றுப் பார்த்தான். சித்திரமாயனின் கண்கள் திறந்திருந்தன.

ஓ... ! அப்போது அந்தத் தோற்றம் கொடூரமாயிருந்தது.

ராஜநாகத்தின் நினைவு வந்தது.

"பல்லவ நாட்டு நச்சுப் பாம்பே, உன் தலை லீனாவின் மருக்கொழுந்திற்கு நல்ல உரம்" என்று கூறியபடியே உதயசந்திரன் உரக்கச் சிரித்தான். பிறகு, தன்னுடைய குதிரையில் ஏறினான்.

பாண்டியப்படை அக்காட்சியைக் கண்டு பீதியினால் அலறியபடி ஓடத் தொடங்கியது. சித்திரமாயனின் தலையை வாள் நுனியில் தூக்கிப் பிடித்தவாறு உதயசந்திரன் குதிரையில் சென்றதைப் போர்க்களத்தில் அனைவரும் கண்டனர். கோட்டை மதில் மீதிருந்தவாறு போரைக் கவனித்துக் கொண்டிருந்த பல்லவ மல்லனும் அந்தக்

காட்சியைக் கண்டு மெய்சிலிர்த்தான். உதயசந்திரன் மீது தோன்றிய நன்றிப் பெருக்கால் நெகிழ்ந்தான்.

பல்லவப்படை உற்சாகமடைந்து ஆரவாரித்தது. சூரியன் அஸ்தமனமாகி இரண்டு நாழிகைக்குள் பாண்டியப் படை, தோற்றுப் பின் வாங்கி, ஓடத் தொடங்கிவிட்டது. பல்லவப் படையின் வெற்றி முழக்கத்தை கேட்ட பல்லவ மல்லன் கோட்டைக் கதவைத் திறக்க உத்தரவிட்டான்.

கோட்டைக் கதவு திறக்கப்பட்டவுடன், பல்லவ மல்லன் வெளியே பாய்ந்து வந்து, உதயசந்திரனை மார்புறத் தழுவிக் கொண்டான்.

"சக்கரவர்த்திக்கு என்னுடைய காணிக்கை" என்று, கூறிய உதயசந்திரன், அருகில் நின்ற தேவசோமா தூக்கிப் பிடித்திருந்த வாளினை வாங்கினான். அதன் நுனியில் செருகியிருந்த சித்திரமாயனின் தலையை பல்லவ மல்லனின் காலடியில் வைத்தான்.

இரவு பல்லவப் பாசறையை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தான் உதயசந்திரன். அப்போது, பாண்டியனைத் துரத்திச் சென்ற பல்லவப் படையின் ஒரு பகுதி திரும்பிக் கொண்டிருந்தது. அதன் தலைவன், உதயசந்திரனை நெருங்கிச் சென்று, "பாண்டியப்படை நிம்பவனத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது" என்றான். பிறகு, "பாண்டியர்களைச் சேர்ந்த ஒரே ஒருவர் மட்டும் பின்தங்கிச் சரணடைந்திருக்கிறார்" என்றான்.

"பாதுகாவல் தலைவனிடம் ஒப்படைத்து விடு" என்றான், உதயசந்திரன்.

"தளபதி அவர்களே, தங்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்று சொல்லிச் சரணடைந்தார். அவர் ஒரு பெண்."

இதைக் கேட்டதும் உதயசந்திரன் வியப்புற்றான். படைத்தலைவனின் பின்னாலிருந்த இரு வீரர்கள் அழைத்து

வர, வெண்பட்டுடுத்தி வந்த பெண்ணைத் தீவட்டி ஒளியில் கண்ட உதயசந்திரன், மிகுந்த வியப்பினால் பேச முடியாமல் ஒரு கணம் நின்றான். பிறகு விரைந்து சென்று, "மகாராணியாரே...!" என்றழைத்தான். மேற்கொண்டு பேச முடியாமல், அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

வெண்பட்டுடுத்தி, நெற்றியில் திருநீறணிந்தவாறு தோற்றமளித்த பிரேமவர்த்தினியைக் கண்டு பிரமித்துப் போனான். முன்னம் ஒருநாள், போட்டி அரங்கத்தின் மேடையில் அவன் கண்ட அவளுடைய தோற்றம் நினைவில் தோன்றியது.

ஓ...! எவ்வளவு மாற்றம்! உளனையும், உள்ளத்தையும் ஒடுங்கச் செய்த அந்தக் கம்பீரம் எங்கே...? இப்போது இந்த முகத்தில் எவ்வளவு சாந்தி! கண்களில்தான் என்ன தெளிவு! கண்டு, வியந்தபடி நின்றான்

"உதயசந்திரா, உன்னுடைய வீரர்கள் என்னைச் சிறைப்படுத்தி அழைத்து வந்திருக்கிறார்கள்" என்றாள், பிரேமவர்த்தினி. அவளுடைய இதழ்களில் முறுவல் தோன்றியது.

"மகாராணி, மன்னிக்க வேண்டும். தங்களை அறியாததால் சிறைப்படுத்தி அழைத்து வந்திருக்கிறார்கள். இவர்கள் உங்களுடைய வீரர்கள். நீங்கள் பாண்டியப் படையுடன் வந்திருப்பது தெரிந்திருந்தால், முதலில் உங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வீரர்களை அனுப்பியிருந்திருப்பேன்" என்றான், உதயசந்திரன்.

"பாண்டியப்படை பல்லவ மல்லனை இங்கேயே கொன்றுவிட்டு, நேரே காஞ்சிக்குள் நுழைவதாகத்தான் ஏற்பாடு. காஞ்சியில், சித்திரமாயன் முடிசூடப் போவதாக நம்பியதால், என்னையும் உடன் அழைத்து வந்தான். எனக்குத் தெரியும், நீ வருவாய் என்று" என்றாள் பிரேமவர்த்தினி.

"மகாராணியின் எண்ணம் எப்படியும் நிறைவேறுகிறது" என்றான், உதயசந்திரன்.

"நான் இன்னும் மகாராணியல்லவே" என்றாள், பிரேமவர்த்தினி.

"தாங்கள் என்றும் மகாராணிதான்" என்று கூறி, கைகூப்பி வணங்கினான்.

உதயசந்திரன் அவளை மகாராணி என்றழைத்ததைக் கேட்டதுமே, சுற்றி நின்ற வீரர்கள் பரபரப்படைந்தனர். மிக்க மரியாதையுடன், அவளை விட்டு விலகி நின்றனர்.

மறுநாட் காலையில், உதயசந்திரன் காஞ்சிக்குப் புறப்படத் தயாரானான். பல்லவப் படையின் பெரும் பகுதி பாண்டியனைத் துரத்திக்கொண்டு செல்லவேண்டும் என்றும், தேவசோமாவும், களுபந்தாவும் படையை நடத்திச் செல்லவேண்டும் என்றும், உதயசந்திரன் ஒரு சிறு படையுடன் காஞ்சிக்குத் திரும்புவதென்றும், விரைவிலேயே உதயசந்திரன், பல்லவப் படையுடன் திரும்பி வந்து சேர்ந்து கொள்வதென்றும் முடிவாகியது. பாண்டியப் படையை பாண்டிய நாடு வரை துரத்திச் சென்று ஒடுக்கிவிட்டுப் பல்லவப்படை திரும்பும்வரை பல்லவ மல்லன், ஒரு சிறு படையுடன் நந்திபுரத்திலேயே தங்குவது என்றும் முடிவாயிற்று.

நந்திபுரத்துப் பெருமாள் கோயிலின் முன்பு எல்லாரும் கூடியிருந்தார்கள். உதயசந்திரனோடு போவதற்காக ஒரு சிறு படை அணிவகுத்து நின்றது. ஒரு ரதத்தின் உச்சியில் சித்திரமாயனின் தலை ஒரு ஈட்டியில் செருகப்பட்டுக் கட்டப்பட்டிருந்தது. அதே ரதத்தின் சக்கரத்தில் பல்லவடி அரையர் கட்டப்பட்டிருந்தார்.

ஐயோ பாவம், இரதம் காஞ்சியை நோக்கிப் பயணமாகும்போது, சக்கரத்தோடு அவருடைய உடல், மேலும் கீழுமாக சுழலும். காஞ்சிக்கு ரதம் போய்ச் சேரும்போது, அவரது உயிரற்ற சடலந்தான் சக்கரத்திலிருக்கும்.

பெருமாள் கோயிலின் மணியோசை கேட்கத் தொடங்கியது. பூஜை முடிந்து, பிரசாதங்கள் வினியோகமான பிறகு, உதயசந்திரன் விடைபெற சக்கரவர்த்தியை நெருங்கினான்.

"சக்கரவர்த்தியிடம் ஓர் வேண்டுகோள். காஞ்சிக்கு என்னோடு ஒருவரை அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்" என்று வேண்டி நின்றான்.

"ஏன்? அவர் காஞ்சிக்கு வரக்கூடாதவரா?" என்று கேட்டார், பல்லவமன்னன்.

"நான் அழைத்துச் செல்பவர், பழைய பல்லவ மகாராணியார்தாம்."

"ஆ...!"—வியந்து கூவினான், பல்லவ மன்னன். சற்று சிந்தித்தான். பிறகு, "தளபதியாரே..." என்று ஏதோ கேட்க முனைந்தான். அதற்குள் உதயசந்திரன் குறுக்கிட்டுச் சொன்னான்:

"நேற்று பாண்டிய படையிலிருந்து பிரிந்து வலிய வந்து, நம்மிடையே சேர்ந்திருக்கிறார்கள்."

"ஓ...! மகாராணியும் பாண்டியப்படையோடு வந்தார்களா? தளபதியாரே, இதில் பாண்டியனின் சூழ்ச்சி ஏதாவது இருக்கலாம்" என்றான், பல்லவமன்னன் சந்தேகத்துடன்.

"சக்கரவர்த்தி அவர்களே, ஒரு இரகசியத்தைக் கூற இப்போதுதான் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த வெற்றிக்குக் காரணமே மகாராணி அவர்கள்தாம். தங்களுக்கும் எனக்கும் பாண்டியப் படையெடுப்பைப் பற்றி முன்கூட்டியே எச்சரித்துத் தூது அனுப்பினார்கள்."

"ஆ..! அப்படியா..."—பல்லவ மன்னனால் வியப்பை அடக்க முடியவில்லை.

"மகாராணியார் இந்த உதவியைச் செய்திருக்கவில்லையென்றால், பல்லவ நாட்டு வரலாறே இதற்குள் மாறியிருக்கும்" என்றான், உதயசந்திரன்.

பல்லவ மன்னன் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டவனாய், உதயசந்திரனின் கைகளைப் பற்றிக்கொண்டு, "தளபதி யாரே, மகாராணியை இப்போதே நான் காண வேண்டும். என் நன்றியைத் தெரிவிக்க வேண்டும்" என்றான்.

சிறிது நேரத்தில் ஓர் அலங்காரப் பல்லக்கு அங்கு வந்து இறங்கியது. அதிலிருந்து பிரேமவர்த்தினி இறங்கி, பல்லவ மன்னனை நோக்கி வந்தாள். பல்லவ மன்னன் மிகுந்த ஆர்வத்துடனும், வியப்புடனும் அவளைப் பார்த்தான்.

"பல்லவநாட்டுக்கு நான் வர, சக்கரவர்த்தியின் அனுமதி வேண்டி வந்திருக்கிறேன்" என்றாள் பிரேம வர்த்தினி.

பல்லவமன்னன் இரு கரங்களையும் கூப்பி வணங்கிய படி, "தாயே, உங்கள் நாட்டுக்கு வருவதற்கு அனுமதி எதற்கு?" என்றான்.

பிரேமவர்த்தினியின் கண்கள் கலங்கின. பல்லவ மன்னனை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னை ஆசீர்வதியுங்கள், தாயே" என்று கூறித் தலைதாழ்த்தி வணங்கி நின்றான் பல்லவமன்னன்.

பிரேமவர்த்தினி இருகரங்களையும் உயர்த்தி, அவன் தலைமீது கைவைத்து ஆசீர்வதித்தாள். அப்போது அவள் கண்களிலிருந்து இரு துளி கண்ணீர் பல்லவமன்னனின் சிரசில் விழுந்து தெறித்தன.

"தாயே, காஞ்சியில் எந்த அரண்மனை வேண்டுமோ அதில் தாங்கள் தங்கலாம்" என்றான், பல்லவமன்னன்.

பிரேமவர்த்தினியின் உதடுகளில் புன்முறுவல் தோன் றியது. "எனக்கு அரண்மனை தேவையில்லை. ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்தில்தான் தங்கப் போகிறேன். என் மனதுக்கு அங்குதான் சாந்தி கிட்டும்" என்றாள்.

பல்லவமன்னன் பல்லக்கு வரை சென்று பிரேம வர்த்தினியை வழியனுப்பி வைத்தான்.

உதயசந்திரன் விடைபெற்றபோது, "தளபதியாரே, தங்கள் சபதம் நிறைவேறிவிட்டது. மருக்கொழுந்துக்கு உரமிட்டுவிட்டு, விரைவில் திரும்பிவாருங்கள். உங்களுக்கு இன்னும் நிறையப் பணி இருக்கிறது" என்றான், பல்லவ மன்னன்.

இதைக் கேட்டு உதயசந்திரன் உள்ளூரத் துணுக்குற்றான். பாண்டியப் படையெடுப்புக்குப் பிறகு, காஞ்சியில் ருத்திர பரமாச்சாரியின் ஆசிரமத்தில் தியான முறைகளைப் பயின்று, மனதுக்கு அமைதியைத் தேடலாம் என்று எண்ணியிருந்த உதயசந்திரன், "இன்னும் நிறையப் பணி இருக்கிறது" என்று பல்லவமல்லன் கூறியதைக் கேட்டுச் சிறிது சோர்வடைந்தான்.

பாவம், உதயசந்திரன். இன்னும் பதினெட்டுப் போர்க்களங்களில் பல ஆண்டுகளுக்கு, பல்லவமல்லனுக்காகத் திரியவேண்டியிருக்கும் என்பதை அப்போது அவன் அறியவில்லை.

அதுமட்டுமா?

அவனுடைய அயராத வீரமும், திறமையும்தான் பல்லவ ஆட்சியைஸ்திரப்படுத்தப் போகின்றன என்பதையோ, தமிழக வரலாற்றில் அவனுக்கு ஒரு முக்கியப் பங்கு உண்டு என்பதையோ, பல்லவப் பட்டயங்களில் அவனுடைய பெயர் பொறிக்கப்பட்டு, புகழடையப் போகிறது என்பதையோ அவன் அப்போது அறியவில்லை.

அவனுடைய எண்ணமெல்லாம், மருக்கொழுந்து மங்கையாக, கப்பலில் அவனோடு வந்து அவனை ஆட்கொண்டலீனாவைப் பற்றித்தாம்.

அவளுடைய நினைவிலேயே, காஞ்சியை நோக்கிப் பயணமானான்.

முற்றும்

குறிப்பு : 1

காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயில் சுவரில் வரிசைக் கிரமமாகச் சிற்பங்கள் செதுக்கப்பட்டு, அவற்றின் கீழ் விளக்கமும் பொறிக்கப்பட்டுள்ளது. அவை, 13 பகுதி களாக உள்ளன. அவற்றில் சில பகுதிகள், துரதிஷ்டவசமாக, மிகவும் சிதைந்து போய்விட்டன. ஒரு நாடகத்தைப் போல் காட்சியளிக்கும் அந்தச் சிற்பங்களும், அவற்றின் விளக்கங் களும் கூறும் செய்தி:

பரமேஸ்வரபோத்தரையர், சுவர்க்கவாசியாகிவிட்ட தாலும், பல்லவராஜ்யம் பெருங்குழப்பத்தில் இருப்பதாலும் கடிகையாரும், முலப்பிரகிருதியாரும், அமைச்சரும், இரணியவர்ம மகாராசனை அணுகி, ராஜ்ய பாரத்தை ஏற்க வேண்டினர். இரணியவர்மர், தம்முடைய மைந்தர் நால்வரி டமும் யார் அரியணை ஏற விரும்புகிறீர் என்று கேட்டார். முதல் மூன்று மைந்தர்கள் மறுத்துவிட்டனர். பன்னிரண்டு வயதுடைய கடைசி மகனான பல்லவமல்லன் எழுந்து, "நான் போவேன்" என்று, வணங்கி நின்றான். இரணியவர்மர் மகிழ்ந்தாலும் வயதில் சிறியவன் என்பதால், அவனை அனுப்ப மறுத்தார். தரணிகொண்ட போசர், "அவன் முன்பு மகா விஷ்ணுவை வணங்கியதால், சக்கரவர்த்தியாகிறான்; ஆகவே, மறுக்க வேண்டாம்" என்றார். பிறகு, பல்லவ மல்லன், முடிசூடப் புறப்பட்டான். பல்லவடி அரையர், அவனைச் சேனையுடன் எதிர்கொண்டு, யானை மீதமர்த்தி அழைத்து வந்தார். நகரத்தார்களும், காடக முத்தரையரும் எதிர்கொண்டு சென்று, அரண்மனைக்கு அழைத்து வந்து, நந்திவர்மன் என்னும் அபிஷேகப்பெயர் சூட்டி, மகுடா பிஷேகம் செய்தனர்.....

குறிப்பு : 2

பல்லவ மல்லன், தன்னுடைய 21ஆம் ஆட்சி ஆண்டில் வெளியிட்ட உதயேந்திரப் பட்டயத்தில், உதய சந்திரனின் வீரச் செயலைப் பற்றிப் பொறித்திருந்த செய்தி:

'வில்வலம் என்னும் நகருக்கு அதிபதியும், வேகவதி ஆற்றின் தலைவனுமான, பூசான் வமிசத்தைச் சேர்ந்த உதய சந்திரன்' என்று இந்தப் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பட்டயம், மேலும் குறிப்பிடும் செய்தி:

தமிழ் அரசர்களால் நந்திபுரக் கோட்டையில் பல்லவ மல்லன் முற்றுகையிடப்பட்ட செய்தியை அறிந்த உதய சந்திரன், அதைத் தாளாமல், விரைந்து சென்று, அல்லிமலர் இதழ் போல் மின்னிய தன்னுடைய வாளால், பல்லவ அரசன் சித்திரமாயனை வெட்டி வீழ்த்திவிட்டு, எதிரிப் படைகளையும் நிம்பவனம், சூதவனம், சங்கிரகிராமம் முதலிய மற்ற இடங்களையும் வென்று, பல்லவ ராஜ்யம் முழுவதையும் பல்லவனிடம் ஒப்படைத்தான்.....

சில கடிதங்கள்

அந்த மணக்கும் முகம்...

மருக்கொழுந்து மலரைப் பார்க்கும்போதெல்லாம் சீனத்துப் பேரழகி லீனாவின் மணக்கும் முகமே கண்முன் நிற்கிறது. இந்தச் சரித்திரக் காவியத்தில் பிடிக்காதது, "முற்றும்" என்று வந்ததுதான்.

— எஸ்.கமால் பாட்சா, இரவாஞ்சேரி.

எதையும் காதலிக்கலாம்...

நல்லபெருமாளின் மருக்கொழுந்து மங்கையில் வரும் ஞானி ருத்திர பரமாச்சாரியின் போதனைகள் அனைத்தும் வாழ்க்கையில் கற்றுக்கொள்ளக்கூடியனவே. அதிலும் 23.12.84 அன்றைய புத்தகத்தில் நாயகன் உதயசந்திரனின் காதல் தோல்விக்கு "லீனாவைக் காதலித்த மனத்தால் இன்னொருத்தியைக் காதலிக்க முடியுமா?" என்பதற்கு அவர் தந்துள்ள பதில்:

"காதலுக்கு பெண்கள் ஒரு சாதனம். காதல் உணர்வுகள் நிலையானவை. காதல் அனுபவங்களும் நிலையானவை. அவற்றைத் தரும் சாதனங்கள் தோன்றலாம், மறையலாம். ஒரு சாதனம் மறைந்துவிட்டால், அதே அனுபவத்துக்கு இன்னொரு சாதனத்தைப் பெற்றுக்கொள்வதில் என்ன தவறு? காதல் என்பது ஒரே ஒரு பொருள் மீதோ அல்லது ஒரு நபர் மீதோ மட்டும் தோன்றும் குறுகிய உணர்வல்ல. அது பரந்து, பிரபஞ்சம் முழுவதும் வியாபிக்கும் அற்புதமான ஓர் ஆன்மீக உணர்வு. எதையும் காதலிக்க முடியும். இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் காதலிக்க முடியும்.

அதுவே மகாசுகம். அந்தப் பக்குவத்தைப் பெறுவதுதான் பேரானந்த நிலை என்றும், இந்தப் பிரபஞ்சம் முழுவதும் மனிதனுடைய காதலுக்குத்தான்" என்றும் யோகி இளைஞர்களுக்குக் கூறியுள்ள கருத்து நிலையாக நிலைத் திருக்கக்கூடியது.

— தைல. நடராஜன், தென்னம நாடு.

மற்றபடி நன்று

ர.சு.நல்லபெருமாள் அவர்களுக்கு எனது பாராட்டுகள். "மருக்கொழுந்து மங்கை" மிகவும் நன்று. ஆனால், ருத்திர பரமாச்சாரியின் போதனையில் 'சிற்றின்பத்தின் முலமாக

பேரின்பத்தை அடைய முடியும்' (இறை இன்பத்தை) என்கிறார். அதன் பின் விளைவை யார் ஏற்றுக் கொள்வது? ஆண் தப்பித்துக்கொள்வான். பெண்...? மற்றபடி எல்லாக் கருத்துக்களும் நன்று.

– டி. சத்தியசீலன், பெரிய மேளபாளையம்.

ஒரு சபாஷ் உதயம்

மந்திரி என்கிற மமதை தலைக்கு ஏறி பகட்டான நடிப்பைக் காட்டி நாட்டுப் பிரஜைகளை அவமதித்து வந்த சித்திரமாயனின் தலையைக் கொய்து தன் காதலிக்காக அர்ப்பணித்த உதய சந்திரனுக்கு ஒரு சபாஷ்.

– ம. சையத்காதர், சென்னை – 1.

மந்திரி என்ன ஆனார்?

ஆசிரியர் ஒரு செய்தியைத் தெளிவுபடுத்தாமல் விட்டு விட்டார். மந்திரி ராஜன் நம்பூதிரியின் நிலை என்ன?

– எஸ். கோகுல், ஆறுமுகநேரி.

ப்ளீஸ்... மறுபிறவியிலாவது...


மருக்கொழுந்து மங்கை
மனதிற்குப் பிடித்த நங்கை.
முடிவு கொஞ்சம் கசப்பு
உதய நிலவை (சந்திரன்)
சீனத்து லீனாவோடு
மறுபிறவியிலாவது இணைத்து வையுங்கள்

– இரத்தின மனோகரன், நெய்வேலி–1.

இலக்கிய ஓவியம்

சம்பவங்களையும், வரலாற்றுப் பாத்திரங்களையும் நயம் குன்றாமல், மெருகேற்றி மனதில் பதியும் வண்ணம் அற்புதமாக எழுதிய ஆசிரியருக்குப் பாராட்டுக்கள். வரலாற்று நாயகர்களை கண்முன்னே நடமாடவிட்ட ஓவியர் ம.செ. அவர்களுக்கும் ஸ்பெஷல் பாராட்டு!

– ஆர் அரி கோபி, குடியாத்தம்.


ர.சு. நல்லபெருமாள்
மருக்கொழுந்து மங்கை
திருவரங்க புத்தக நிலையம்

